7 ... 1982





குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முகலிவாக்கத்தில் குழந்தைகள் நலக் காப்பகக் கட்டடத்தை மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் 12.7.82ல் திறந்து வைத்தார்.



இலவச மதியச் சத்துணவுத் திட்டத்தின் உயர் மட்டக் குழுவின் முதல் கூட்டம் 17.7.82ல் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.



# உள்ளத்தாலும் எண்ணத்தாலும் ஒற்றுமையை உருவாக்கிடுவோம்!

## மேதகு குடியரசுத் தலைவர் திரு ஜெயில் சிங்

நமது மாபெரும் குடியரசின் ஏழாவது குடியரசுத் தலைவராக, என்னைத் தேர்ந்தெடுத்து மகத்தான சிறப்புச் செய்திருப்பது என்னை மிகவும் நெகிழச் செய்கிறது.

குடியரசுத் தலைவரின் கடமைகள் புனிதமும் நுட்பமும் கடுமையும் நெருக்கடியும் நிறைந்தவை. இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு மிக உயர்ந்த உள்ளமும், உன்னதமான எண்ணமும் இருந்தால் மட்டும் போதாது; இறைவனின் அருளும் நாட்டு மக்களின் அன்பும் தேவை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். இந்தப் பதவியில் எனக்கு முன்னால் இருந்தவர்கள் காட்டிய மதிப்பு வாய்ந்த மரபுகளைக் கட்டிக் காக்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்வேன் என்பதை உறுதியுடன் கூறிக்கொள்கிறேன்.

இன்று நாம் நமது தேசிய வாழ்க்கையில் சிறந்த ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்காமல் போனால் நாம் போற்றி வரும் அரசியல்,

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆடி 16

மலர்: 13 இதழ்: 3

1—8—1982

சமூக, அமைப்புகளுக்குப் பேராபத்து ஏற்படுவ தோடு, நமது இலட்சியங்களின் அடிப்படையே தகர்ந்துவிட நேரும் என்பதை உணர்ந்து செயல்படுவதுதான் இப்பொழுது நமக்கு மிக மிகத் தேவையான கடமையாகும். சமுதாயத் தில் பலவீனமாக உள்ளவர்கள்-வளங் குன்றி யவர்கள் - தாழ்த்தப்பட்டவர்கள் இவர்களு டைய சமூக, பொருளாதார விடுதலைக்கு நல்லதொரு சூழ்நிலையைத் தோற்றுவிக்க- உறுதிபூண்டு நம்மை அக்கடமையில் மீண்டும் அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். பல்வேறு மாநிலங்களையும், சாதி—மொழிகளையும் சார்ந்த மக்களிடையே உள்ளத்தாலும் எண் ணத்தாலும் ஒற்றுமையை உருவாக்க, நாம் முனைந்து செயலாற்ற வேண்டும். வேற்றுமை யில் ஒற்றுமை காண்பதே இந்திய வாழ்க்கை யின் அடிப்படையாகவும், இந்திய கலாச்சாரத் தின் ஆன்மாவாகவும் விளங்குகிறது.

இன்றைய இன்னல்களையும் வேதனை களையும் பொருட்படுத்தாமல் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நாம் ஆற்ற வேண்டிய பொறுப்பினை தன்னலம் கருதாது உண்மை யோடு நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

நாடு, கடந்த 2 ஆண்டுக் காலத்தில், முன்னேற்றப் பாதையில் நடைபோட்டு வரு கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால், அந்த வெற்றிகளை நாம் இப்போது வேகப்படுத்த வும் ஒருமுகப்படுத்தவும் வேண்டும். நமது ஆற்றலை ஆக்கப்பணிகளுக்கு - உத்வேகத் துடன் பயன்படுத்தி-ஒவ்வொரு துறையிலும் சிறந்த சாதனையை நிலைநாட்ட அவசர உணர்வுடன் பணியாற்ற வேண்டும். நவீன தொழில் நுட்பத்தின் நடுவில், பழம்பெருமை பூத்த நமது மாபெரும் இந்திய கலாச்சார மரபுகளை உன்னதமான முறையில் நம் நாட்டு ஞானிகளும், பெரியோர்களும், தலை வர்களும் அரசியல் விற்பன்னர்களும் நமக்கு உருவாக்கித் தந்து விட்டுப் போயிருக்கிறார் கள். இந்த மகத்தான கருவூலத்தை, நம் மிடையே நிலவும் வகுப்பு வேற்றுமை - அரசியல் அழுக்காறு, - பிளவுமனப்பான்மை பிரிவினை மற்றும் வன்முறைப் போக்குகள் ஆகியவை பலவீனப் படுத்திவிடும். இந்தச் சூழ்நிலையில்தான் நாம் எங்கிருந்தாலும் நமது கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வு களோடும், உறுதியோடும், ஊக்கத்தோடும் இடையறாது நிறைவேற்றி வரக் கடமைப்பட் டிருக்கிறோம்.

நமது நாடு நிலையானதொரு குடியாட்சி யைப் பெற்று விளங்குகிறது. கடின உழைப் பும் திறமை பலவும் பெற்றவர்கள் நம் மக்கள் விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுநர்கள் தீரமிகு வீரர்கள், பாடுபடும் பாட்டாளிகள், உழவர் பெருமக்கள் - ஆகியோர் நிறைந்தது நமது நாடு. இயற்கை வளத்தையும் ஆள் பலத்தையும் சிறந்த முறையில் நாம் பயன் படுத்திக் கொள்வதை ஒட்டியே நமது நாட் டின் வளர்ச்சியும் முன்னேற்றமும் அமைய முடியும்.

நம்மைச் சுற்றிலும் வன்முறை பயங்கர வாதம் உயிருக்கும் உடமைக்கும் உலைவைக் கும் போக்கு ஆகியவற்றைக் காண்கின்றோம். மனித குலம் அழியாமல் இருக்க வேண்டுமென் றால், மக்களின் தேவைகளை நிறைவேற்றி அச்சத்தையும் அவநம்பிக்கையையும் அகற்றி

முன் பக்க அட்டையில்

மேட்டூர் அணை

பின் பக்க அட்டையில்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முஸ்லீம் மாணவிக்குப் படிப்புதவிப் பணம் வழங்குதல்



பகுத்தறிவும் மனிதாபிமானமும் நிறைந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

படை பலத்தையும் வன்முறையையும் நம்புவதும் அணு ஆயுதங்களைக் குவித்து வைப்பதும் மனித குலத்தை அழிவில் கொண்டுபோய் விட்டுவிடும். அந்தப் போரில் வெற்றி பெற்றவர்-தோல்வியுற்றவர் என்று யாரும் இருக்க முடியாது. அனைவருக்கும் அழிவே ஏற்படும். உலகில் அமைதியும் ஒற்று மையும் ஓங்க நாம் விரும்புகிறோம். நமது அண்டை நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சி கள் நமக்குக் கவலை தருகின்றன. நாம், அனைவரிடமும் நண்பர்களாக இருக்க விரும்பு கிறோம். அண்டை நாடுகளுடன் ஒற்றுமை யோடும் நட்போடும் வாழ விரும்புகிறோம். சர்வதேச அரங்கில் எல்லாத் தகராறுகளை யும் அமைதியாகத் தீர்த்துக் கொள்ளவும் நீதியான-நிலையானதொரு பொருளாதார அமைப்பை உருவாக்கவும் இந்தியா எப் பொழுதும் பாடுபட்டு வந்திருக்கிறது.

நமது அரசியல் சட்டத்தைத் தந்தவர் களால் உருவாக்கப்பட்ட மிக உன்னதமான இந்தப் பதவியின் கண்ணியம் பெருமை ஆகிய வற்றாலும் அரசியல் சட்டத்தாலும் எனக்கு அளிக்கப்பட்டுள்ளது இக்கடமைப் பொறுப்பு. நான் இதனை அச்சமின்றியும் விருப்பு, வெறுப்பு இல்லாமலும் நாட்டின் சேவகன் என்ற முறையில் நல்விதமாய் நிறைவேற்றி வருவேன். அப்படி நான் என் கடமைகளை நிறைவேற்றுவதற்கு எதிர்காலத்தில், பொது வாழ்விலும் அரசியலிலும் உள்ள என் நண்பர் களும் நாட்டு மக்களும் தங்களது மனப்பூர்வ மான ஒத்துழைப்பினை நல்கிட வேண்டுமென நான் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

**25.7.82ல் பதவி ஏற்று ஆற்றிய உரை.**



# சத்துணவுத் திட்டம் சமுதாயப்புரட்சித் திட்டம்

## — மாண்புமிகு முதல்வர்

இன்றைய தினம நடைபெற்றுக்கொண்டி ருக்கிற இந்த நிகழ்ச்சி வெறும் விளம்பரத்திற் காகவோ அல்லது நாங்கள் எத்தகைய திட் டங்களையெல்லாம் அறிமுகப்படுத்துகிறோம் பார்த்தீர்களா என்று சொல்லி மக்களுடைய தேவைகளைப் புரிந்து கொள்ளாமல், அவர் களுக்கு என்னென்ன அவசியத் தேவை இருக் கின்றனவோ அவைகளை அலட்சியப்படுத்தி விட்டு, அவர்களைத் திசை திருப்பி விடு வதற்காகவோ இந்த நிகழ்ச்சி நடைபெற வில்லை, நடத்தப்படவில்லை என்பதை முத லிலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அவ்வப்போது நான் பொதுக்கூட்டங் களிலே பேசும்போதும், எங்கள் கட்சிக்காக வாக்குகளைக் கேட்கும் போதும் கூட, முன் னாலே உட்கார்ந்திருக்கிற குழந்தையைப் பார்த்து நான் பலமுறை பேசிய அந்தக்கருத் துக்களிலே ஒன்றை மட்டும் நான் குறிப்பிட இங்கே விரும்புகின்றேன். நாளைய தினம் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப் புக்கு சொந்தக்காரர்களான இந்தக் குழந்தை கள் இத்தகைய கூட்டத்திற்கு வரக்கூடாது. தாய் தந்தையர்கள் அனுப்பக் கூடாது என்று நான் பேசியதை இன்றைய தினம் மீண்டும் நான் வற்புறுத்திக் கொள்கின்றேன். அரசியல் பொதுக்கூட்டங்களுக்கு இந்தக்குழந்தைகளை எல்லாம் குறைந்தது 15 வயதிற்கு கீழே உள்ள குழந்தைகளை அந்த அரசியல் கூட்டங்களுக்கு அனுப்பக் கூடாது என்று நான் பல முறை சொல்லியிருக்கிறேன். வாக்குகள் கேட்கும் போதும் என்னைப் பார்த்து விசிலடிக்கும் குழந்தைகள், என்னைப் பார்த்துக்கைதட்டி என்னை அரவணைத்துக் கொள்ள ஓடி வரு கின்ற குழந்தைகள் இது என் தமையன், இது என் தம்பி, இது என் தங்கை அல்லது என் தமக்கை, என் தாய் என்றே வைத்துக் கொள் ளுங்கள், அந்த வயிற்றிலே பிறந்த குழந்தை களைப் போல ஓடோடி வந்து அவர்கள் உற் சாகத்தோடுபேசுகின்ற அந்தக்குழந்தைகளைக் கூட நான் குறிப்பிட்டுச் சொல்ல நினைக்கின் றேன். நான் பேசுவதாக இருந்தாலும் எங்கள் கட்சிக்காரர் பேசுவதாக இருந்தாலும் கூட, அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கு அந்தக் குழந்தைகளை, இன்றைய நாட்டின் சூழ்நிலை யில் நீங்கள் அனுப்பாதீர்கள். காரணம் அவர் கள் திணிக்கின்ற, வேறுபடுத்துகின்ற கருத் துக்களை அந்தப் பசுமையான உள்ளத்தில் பதிய வைத்துவிடக் கூடாது என்பது தான் 25 ஆண்டுகளாக நான் அரசியலில் முழுமை யாக முயன்று நேரடியாகப் பங்கு கொள்ள



முயன்ற பிறகு பேசிய பேச்சுக்களின் கடைசியாக வந்த கருத்துக்கள் என்பது மட்டும் இன்று வரை விடவில்லை என்றும் இன்னமும் திரும்ப அதையே சொல்வேன் என்றும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்த குழந்தைகள் உணவுக்கு வகையில்லை என்பது மட்டுமல்ல, உணர்வுக்கும் கூட-அந்த நல்ல உணர்வுக்கும் கூட இந்த நாட்டுக்குத் தேவையான சமத்துவ உணர்வுகளுக்குக் கூட சொந்தக்காரர்கள் அல்லாத நிலைமையில் அந்தக் குழந்தைகள் வளர்க்கப்படுவார்களேயானால் எதிர்காலத்தில் இந்த நாட்டின் நிலைமை என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



இன்னொன்றை நான் பல முறை சொல்லியிருக்கிறேன். நான் 'எப்போதும் சொல்வதுண்டு. என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே என்று நான் குறிப்பிடுவது உண்டு.' நான் காரணங்களைப் பேசும் போது, ஏதேனும் கடிதம் குறிப்பிட்டு எழுதப்படும்போது இந்த வார்த்தைகளை நான் பயன்படுத்துவதுண்டு. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு விதவைத் தாய்மார்களுக்காக என்னென்ன செய்தோம் என்கின்ற பட்டியலை இப்போது நான் சொல்லிக் கொண்டிருக்க விரும்பவில்லை. ஆனால் இந்த நபர்களை நியமிக்கின்ற வகையில் தான் முன்னுரிமை, அதிலும் விதவைகளுக்குத் தான் முன்னுரிமை. அதிலும் உள்ளூர்க்காரர்களுக்கு முன்னுரிமை, என்கின்ற வகையில் பெண்களுக்கு என்று ஏறத்தாழ 40,000 பேர்களுக்கு மேல் அங்கே வேலை வாய்ப்பை ஏற்படுத்தித்தந்திருக்கிறோம் என்பதை-அது மட்டுமல்லாமல் 36,000 பள்ளிக்கூடங்களில் வேலை செய்கின்றவர்களுக்கு அங்கேயும் அந்த வாய்ப்பை 36,000 பேர்களுக்கு ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் ஏறத்தாழ 76,000 பேர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்றால் அந்த 76,000 குடும்பங்கள் தொழில்களைப் பெற்று அதுவும் தாய்மார்கள் அந்தப் பணியைப் பெற்று நிம்மதியாக வாழக்கூடிய-முழு நிம்மதியாக என்று சொல்ல மாட்டேன். முழுமையாக வேலை வாய்ப்பு கிடைக்கின்ற நிலைமை வந்து, போதிய வருமானம் கிடைக்கும் என்றும் சொல்ல மாட்டேன், இன்னொருவரிடம் சென்று கை ஏந்துகின்ற நிலைமை இல்லாமல் அவர்கள் வாழக்கூடியநிலைமைக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்படுகிறது, என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

குழந்தையிலேயே ஒழுங்காக, ஒழுக்கமாக, சுத்தமாக, சீர்மையாகத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அவர்களுக்கு உபதேசம் செய்யாமல் நடைமுறைப் பழக்கவழக்கங்கள் அவர்களுக்கு வந்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்க வேண்டுமென்பது எங்கள் ஆசை. பசியையும் போக்க வேண்டும், பண்பையும் வளர்க்க வேண்டும். கழிப்பிடங்களுக்கு அவர்கள் போய் வருகின்ற நிலைமைக்குப் பிறகு அந்தக் கழிவுப்பொருள்களிலிருந்து எரிபொருள் உற்பத்தி செய்ய வேண்டும். அதை 'கோபர்கே' என்று அழைக்கப்படுகிற அந்த எரிபொருளைக் கொண்டு சமையல்வேலைக்கு அதைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். பொருள் வாங்கும் செலவைக் குறைத்து அது போலவே அதிலிருந்து கழிவுப்பொருட்கள் இருக்கின்ற மற்ற கீழ்ப்பகுதியை எருவாக்கிக் கொள்ள வேண்டும். இது கஷ்டமல்ல. நாட்டில் நடக்காததும் அல்ல. நாம் செய்யாததும் அல்ல. வயல்புறங்களில் சென்றால் வயல்புறங்களில் சென்று நாம் காணாதது அல்ல. ஆகவே, விஞ்ஞான ரீதியாக அறிவியல் ரீதியான ,அனுபவ பூர்வமாகப் பயன்படுத்தும் வகையில் குழந்தைகளுக்கு அப்போதிலிருந்தே அவர்களுக்கு என்ன செய்கிறோம் என்பது தெரியாமலேயே நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.



இந்த மாபெரும் பொறுப்பை இந்தக் காப்பகத்தை நடத்த இருக்கின்றவர்கள் சுமக்க இருக்கின்றார்கள். அவர்களுக்கு மக்கள் உதவி செய்ய வேண்டும். பாதுகாப்புக்கொடுத்தாக வேண்டும்.

கட்சியைத் தயவு செய்து தள்ளி வையுங்கள். 60 லட்சம் ஏழைக் குழந்தைகளுடைய வயிற்றைப் பாருங்கள். அவர்கள் வாழ்வைப் பாருங்கள். ராமச்சந்திரனைப் பார்க்காதீர்கள். அவர் எந்தக் கட்சி என்று பார்க்காதீர்கள். எதிர்க்கட்சியா? எதிரிக்கட்சியா என்று தயவு செய்து கவனிக்காதீர்கள். தமிழகம், தமிழ்மக்கள், அதில் இருக்கின்ற வறுமைக் கோட்டிற்குக்கீழேயுள்ள – வேலையில்லாமல் இருக்கின்ற-ஒரு வேளை உணவுகூட நிம்மதியாகக் கொடுக்க முடியாமல் இருக்கின்ற அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள தாய்மார்கள், கண்ணீர் வடிக்கிறார்களே, அதைத் துடைக்கின்றோம் என்கிற நிலைமையில் ஒத்துழைக்க முன்வாருங்கள் என்று நான் சொல்லிக் கொள்வேன்.

குழந்தைகளுக்குச் சொந்தக்காரர்கள் வேலைக்குப் போவார்களேயானால் என் குழந்தை இப்போது என்ன செய்து கொண்டிருக்கும் உணவுக்கு என்ற அந்த நினைப்பே இல்லாமல் அங்கே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. அதுவும் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்தான். அந்தக் குழந்தையும் ஒரு காலத்தில் இந்த நாட்டின் முதலமைச்சராக வரலாம். ஏன்? குடியரசுத் தலைவராகவே வரலாம். அப்படிப்பட்ட குழந்தைகள் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள். அவர்கள் கொடுக்கின்ற வரிப்பணம், நாம் கொடுக்கின்ற வரிப்பணம் அவர்களுக்கு உணவாகப் போகிறது. ஆகவே அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அங்கே சாப்பிடுகிறவர்கள் என்கின்ற எண்ணத்தோடு-உரிமையோடு-நிம்மதியோடு இருக்கின்ற நிலைமையை உருவாக்க முயலுகின்றோம்.

இந்த நல்ல காரியத்துக்கு யாரும் எதிர்ப்பு சொல்ல முடியாது. நியாயமும் இல்லை. காரணமும் இல்லை. ஆகவே, இது வரை எதிர்ப்புக் கருத்துக்கள் அதிகமாகச் சொல்லப்படவில்லை. நடக்குமா என்றுதான் சந்தேகப்படுகிறார்களே தவிர இது நடக்கக் கூடாதது, வேண்டாதது என்று யாரும் சொல்லவில்லை. ஆகவே, நடத்த முடியும் என்பதைத் திட்டமிட்டுக் காண்பித்து விட்டோம். இது நடக்கிறது. நடந்து கொண்டு போகிறது. இன்னும் விரிவடைய-எங்களுடைய வசதியைப் பொறுத்து விரிவடைய, நிதி வசதியைப் பொறுத்து, மக்கள் தருகின்ற ஆதரவைப் பொறுத்து, இது பின்னால் விரிவடையும் என்பதை இப்போது சொல்லி இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் ஆதரவு தருகின்ற நிலைமையில் குழந்தைகளை அழைத்து இங்கே என்னென்னவோ விளையாட்டுகளைக் காண்பித்து இருக்கிறீர்கள்.

சர்க்கஸ் விளையாட்டுகள் அத்தனையும் இங்கே காண்பித்து விட்டார்கள். இந்த வெய்யிலில் நான் பார்த்து அதிசயித்தேன். கை தட்டவும் மறந்து பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு உயரம்? 1 அடி 2 அடி உயரம். அவர்கள் அங்கே கவாத்துப் பழகுகின்றதைப் பார்க்கின்றபோது உடற்பயிற்சி செய்கின்றதைப் பார்க்கின்ற போது, சிலம்பு விளையாட்டுக்களைச் செய்கின்றதைப்பார்க்கின்ற போது, நான் உண்மையிலேயே பெருமைப்படுகின்றேன். இந்த உணவையும் கொடுத்து, பண்பையும் கொடுத்து குழந்தையிலிருந்து அவர்களுக்கு உடற்பயிற்சியையும் கற்றுக் கொடுத்தோமானால் எதிர்கால சந்ததிகள் எந்த நாட்டு விளையாட்டுக்காரர்களோடும் போட்டி போடக் கூடிய அளவுக்கு அவர்கள் வளர முடியும். அறிவியலிலே அவ்வாறு போட்டி போட வேண்டுமென்றாலும் அங்கே போட்டி போட அந்தத் திறமையைப் பெற முடியும் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லி, அங்கே தூரத்திலே கை ஆட்டுகிறவர்களுக்கு என் நன்றியைச் சொல்லி இந்த வாய்ப்பைத் தந்ததற்கு நான் நன்றி கூறி இந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்க என் தாய் எனக்கு இந்த நீண்ட ஆயுளைத் தந்ததற்காக எனது அன்னையை நான் வணங்கி– இது வெற்றி பெறவேண்டும் இது மக்களுக்கு நல்லதாக அமைய வேண்டும் என்று கூறி இதைத் தொடங்கி வைக்கின்றேன். எல்லோர்க்கும் நன்றி. வாழ்க அண்ணா நாமம். வணக்கம்.

**(திருச்சி மாவட்டம், பாப்பாக்குறிச்சியில் 1-7-82ல், இலவசச் சத்துணவுத் திட்டத்தைத் துவக்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து...)**

# அமுதசுரபித் திட்டம்

**தலைமைச் செயலர் திரு. கா. திரவியம்**



"வருக வருக இதயக்கனியே" என்று அழைத்திட உள்ளூரத்துடித்தாலும் அதிகார அமைப்பில் உள்ளதால் அவ்வாறு அழைத்திடமுடியாமல் எட்ட அமர்ந்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களே, பெரியோர்களே, என் குழந்தைச் செல்வங்களே! இன்று ஏழைக் குழந்தைகளுக்குதமிழ்நாடு இலவசச் சத்துணவு வழங்கும் திட்டத்தைத் துவக்க, திருச்சியிலே நடக்கிற இந்த நிகழ்ச்சி தமிழகத்திலேயே ஒரு திருப்பு முனையாகும். மணிமேகலை அமுதசுரபியை வைத்து அரும்பசியைப் போக்கினதாகக் காப்பியத்தில் நாம் கண்டிருக்கின்றோம். வள்ளலார் மூட்டிய தீ அடுப்பிலே என்றுமே தணியாத வள்ளல் தன்மையுடன் தமிழ்நாட்டு மக்களின் பசியைப்போக்கியதாகக் கேட்டிருக்கிறோம். கல்விக் கண்ணைத் திறந்த கர்மவீரர் காமராஜர் அவர்கள் தமிழகத்தில் செய்த சாதனைகளை வைத்து, இன்றுகல்விக் கண்ணைப் பரப்புவதற்கும் குழந்தைகளுக்கு அமுது ஊட்டுவதற்கும் இந்த மாபெரும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் அன்பு, மற்றவர்கள் எல்லாம் பசியால் விழுங்கப்பட்டுள்ளார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். பசியால் விழுங்கப்பட்டவரோ என்னவோ நம் முதல்வர் அவர்கள், அன்புப் பசியால் விழுங்கப்பட்டவர்கள். இவர் இந்தத் திட்டத்தைத் துவக்கிவைக்க வந்திருப்பது நமக்குப் பெருமை சேர்க்கிறது.

இங்கு வந்திருக்கும் பெரியோர்களுக்கு மட்டும் ஓர் வேண்டுகோள். உங்கள் குடும்பங்களில் எந்த நல்ல நிகழ்ச்சி நடந்தாலும் உங்கள் ஊரில் உள்ள உணவு மையக் கூடத்தில் ஒருவேளை உணவு குழந்தைகளுக்குப் போட்டு அதன் மூலம் இந்தத் தினத்தையும் மங்களகரமான நிகழ்ச்சியாக நீங்கள் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்து கொள்ளுங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு அரசியல் திட்டம் மட்டுமல்ல. இந்த 'அமுதசுரபித் திட்டம்' வெற்றி பெறுமாறு நடத்த வேண்டுமென்றால் பொதுமக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தில் பங்குகொள்ள வேண்டும். இந்தத் திட்டத்திற்குப் பொறுப்பேற்றுள்ள பணியாளர்கள், ஆசிரியர்கள் அத்தனை பேரும் ஒரு புனித உணர்வுடன், ஒரு பயபக்தியுடன் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றி பெற வேண்டுமென்று என் தோழர்களைக்கேட்டுக் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்தத் திட்டத்தைத் துவக்கி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[திருச்சி மாவட்டம், பாப்பாக்குறிச்சியில் இலவசச் சத்துணவுத் திட்டத் துவக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.]



# ஏழைக்குழந்தைகளுக்கு இலவச உணவு

## மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன்

"நீரின்றி அமையா யாக்கைக்கெல்லாம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்பது சங்க காலப் புலவர் பெருமகனாரின் பொய்யா மொழியாகும்.

நீர்ப்பசை இல்லாமல் உலகில் உயிரினம் எதுவுமே வாழ முடியாது. உயிரினத்தின் உயிர் நலம் காக்கவேண்டுமானால், உடல் நலம் பேணப்படவேண்டும். உடல் அழிந்தால், உயிரும் அழியும். எனவே, உயிரை வளர்க்க, உடலை வளர்க்க வேண்டும். உடல் ஊட்டத்திற்கும், உடல் வளர்ச்சிக்கும் உண்டி, அதாவது உணவு தேவை. வளம் பெற்ற ஒருவர் வறுமை உற்ற ஒருவருக்கு, உணவு கொடுத்தார் என்றால், அவர் வறுமையுற்றாருக்கு உயிரையே கொடுத்தார் என்று பொருள். இதைத்தான் சங்க காலப் புலவர் பெருமகனார், ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்று சிறப்பித்துச் சொல்லுகிறார்.

இன்றைய தமிழகத்தில், வறுமையிலும் ஏழ்மையிலும் - இல்லாமையிலும் - போதாமையிலும் கிடந்து உழலும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த, இரண்டு வயதிற்கும் பத்து வயதிற்கும் உட்பட்ட சிறுவர், சிறுமியர்க்கு, ஒரு வேளை உணவையாவது, இலவச உணவாக- ஊட்டச் சத்துள்ள உணவாக— மதிய உணவாக வழங்குவதன் மூலம், அவர்களுக்கு எதிர் காலத்தில் செம்மையான உடர் வாழ்க்கையை— அளிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், பெருமுயற்சியோடும், விடா முயற்சியோடும் கொண்டு வந்துள்ள திட்டந்தான், "புதிய மதிய இலவச சத்துணவுத்திட்டமாகும்."

1982 சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம், தமிழகம் முழுவதும் சுமார் 60 இலட்சம் சிறுவர் சிறுமியர் பலன் பெற்று வருகின்றனர். ஒரு ஆண்டின் 365 நாட்களிலும் இந்தப் பயனை அவர்கள் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2 வயதிலிருந்து 5 வயதுவரையிலுள்ள குழந்தைகளுக்கு 'குழந்தைகள் காப்பகங்கள்' மூலம் மதிய உணவு வழங்கப்படுகிறது. 19,844, 'குழந்தைகள் காப்பகங்கள்' மூலம் 23 இலட்சம் குழந்தைகள் சத்துள்ள மதிய உணவைப் பெறுகின்றனர். 6 வயது முதல் 10 வயது முடிய உள்ள இளம் மாணவ—மாணவியர்க்குப் பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்படுகிறது. சிற்றூர்ப்புறங்களிலுள்ள 31,372 துவக்கப் பள்ளிகளில், சுமார் 37 இலட்சம் சிறுவர்-சிறுமியர், சத்துள்ள மதிய உணவைப் பெறுகின்றனர்.

ஊரக வளர்ச்சி, நகர வளர்ச்சி, வாழ்க்கை மேம்பாட்டுக்கான. நல்வாழ்வுத் திட்டங்கள், தன்னிறைவுத் திட்டங்கள், கல்வி மேம்பாடு, மருத்துவ வசதி, தொழில் வளர்ச்சி, உற்பத்திப் பெருக்கம், வேளாண்மை விரிவாக்கம், மொழி ஆக்கம், கவின்கலைகள் வளர்ச்சி போன்றவற்றில் முனைந்து பாடுபட்டு வரும் தமிழக அரசு மதிய சத்துணவுத் திட்டத்தின் இன்றியமையாத சிறப்பு—பயன், ஆக்கம், ஏற்றம் ஆகியவை கருதி எப்பாடுபட்டேனும் ரூ.100 கோடி அளவுக்கு ஒதுக்கீடு செய்து, இந்தத் திட்டத்தை, வெற்றிகரமாக ஆக்க வேண்டும் என்பதில், முனைப்புள்ளத்தோடு செயல்பட்டு வருகிறது.

வளரும் தமிழகம்

தமிழக அரசானது, வளர்ச்சித் திட்டங்கள்—ஆக்கத்திட்டங்கள்—சமூக நல்வாழ்வுத் திட்டங்கள் பலவற்றை முறைப்படி நிறைவேற்றிவருவதோடு பல்வேறு அறப்பணித் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது அவைகளில் தலைசிறந்த அறப்பணித்திட்டமாகத்தான், இந்தப்புதிய மதிய சத்துணவுத் திட்டம் திகழ்கிறது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், புதிய திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்பு, சுமார் 19 இலட்சம் மாணவ— மாணவியர் பலன் பெற்றார்கள். இப்பொழுது புதிய திட்டத்தின் மூலம் 60 இலட்சம் குழந்தைகள் பலன் பெறுகிறார்கள். முன்பு 200 நாட்களுக்கு மட்டுமே மதிய உணவு அளிக்கப்பட்டது. இப்பொழுது 365 நாட்களுக்கும் அளிக்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்பு 15 காசு பெறுமானமுள்ள உணவு வழங்கப்பட்டது. இப்பொழுது 45 காசு மற்றும் 50காசு பெறுமானமுள்ள ஊட்டச்சத்துள்ள உணவு வழங்கப்படுகின்றது.

காப்பகங்களில் சுமார் 53,000 பேர்கள் உதவியாளர்களாகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். பள்ளிகளில் சுமார் 62,000 பேர்கள் புதிதாக உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். நியமிக்கப்பட்டுள்ள பெண்களில் ஆதரவற்று விளங்கும் விதவையர்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

குழந்தை ஒவ்வொன்றிற்கும் ரூ. 4 பெறுமானமுள்ள தட்டு ஒன்றும், குவளை ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன.

சிற்றூர்ப்புறங்களில் உணவுக் கூடங்கள் ஒவ்வொன்றும் ரூ. 38,000 செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

11 வயதிலிருந்து 14 வயது வரையிலுள்ள மாணவ—மாணவியர் சுமார் 1 இலட்சத்து 21 ஆயிரம் பேர்களுக்கு, ஆண்டுக்கு 200 நாட்களில், 50 காசு பெறுமான மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் உள்ள 4,700 துவக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ—மாணவியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் 200 நாட்களுக்கு மதிய உணவு பெற்று வருகின்றனர். சிற்றூர்ப்புறங்களைப்போல நகர்ப்புறங்களில் உள்ள சுமார் 15 இலட்சம் ஏழைக்குழந்தைகளுக்கும் இலவச மதிய சத்துணவைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளிலிருந்து வழங்குவதற்கான திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பரிந்துரையின் பேரில். தமிழக அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

நல்ல சிந்தனைகளிலிருந்துதான், நல்ல செயல்கள் தோன்ற முடியும் என்பது சான்றோர் வாக்கு. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் நல்ல சிந்தனையிலிருந்துதான், இந்த நல்ல திட்டமும் தோற்றம் பெற்றுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டத்தின் நல்லநோக்கத்தையும், அதன் மூலம் எதிர்பார்க்கும் பலனையும் நல்லவர்கள், நாட்டின் நலனிலே அக்கறை கொண்டவர்கள், நானிலம் புகழும் நல்லறிஞர்கள், குவலயம் போற்றும் கல்விச் சான்றோர்கள், ஆக்க உணர்வு படைத்த அரசியல் தலைவர்கள், நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த ஏழை எளிய மக்கள், அன்புள்ளங்கொண்ட தாய்மார்கள் போன்ற சீரிய தரப்பினர் பலரும் போற்றிப் பாராட்டி வாழ்த்தி, வரவேற்றிருப்பது, தமிழக அரசினர்க்கு மனநிறைவையும், மனமகிழ்வையும் அளிக்கின்றது. இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் மாண்புமிகு திரு பிரணாப் முகர்ஜி அவர்களும், இந்தியத் தலைமை அமைச்சர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும், இந்தத் திட்டத்தை வரவேற்றுப் பாராட்டியிருப்பதோடு, இந்தத் திட்டம் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து கொள்ள ஆவல் கொண்டுள்ளார்கள் என்ற செய்தி, எல்லோர்க்கும் பெருமிதம் அளிக்கின்றது.



திட்டத்தின் நோக்கம் நல்ல நோக்கம், திட்டத்தை நிறைவேற்ற ரூ. 100 கோடிக்கு மேல் செலவு செய்யப்படுகிறது; பணமும் பண்டங்களும் ஏராளமாகவும், தாராளமாகவும் வழங்கப்படுகின்றன; வாய்ப்புக்களும், வசதிகளும் பரவலாகவும் முறையாகவும் செய்யப்படுகின்றன என்றாலும், இலவச மதிய சத்துணவு, அன்றாடம், 60 இலட்சம் குழந்தைகளுக்கும் குற்றங்குறைகள் இன்றி போய்ச் சேருவதிலேயேதான், இந்தத் திட்டத்தின் முழு வெற்றியும் அடங்கி இருக்கின்றது. இந்தப்பணி எல்லா இடங்களிலும் செவ்வனே நிறைவேற, ஆங்காங்கு பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கின்ற அதிகாரிகள்— அலுவலர்கள், மேற்பார்வையிட வேண்டிய

காப்பகக் காப்பாளர்கள் —பள்ளி ஆசிரிய — ஆசிரியைப் பெருமக்கள், நலக்குழு உறுப்பினர்கள், சமையல்கூட உதவியாளர்கள் ஆகியோரின் குழு ஒத்துழைப்பு குற்றங்களற்ற முறையில் வேண்டப்படுகிறது. ஒவ்வொரு இடத்திலும் உள்ள பொது நலம் பேணுவோர், பொது நலத் தொண்டர்கள். ஊர்ப் பெரியவர்கள், கற்றறிந்த நல்லவர்கள், சமூகத் தொண்டில் தியாகவுணர்வோடு ஈடுபடக்கூடிய பல்வேறு கட்சிகளையும் சார்ந்த தொண்டர்கள், அறநிறுவனங்களைச் சேர்ந்த தொண்டுள்ளம் படைத்தோர் முன்வந்து ஒவ்வொரு [illegible]ரும் ஒவ்வொருவர் என்று முறைப்பட[illegible] அமைத்துக்கொண்டு, ஒரு மணிநேரம் மட்டும் செலவழித்து, அன்றாடம் வருகை தந்துள்ள குழந்தைகள் எவ்வளவு? மதிய உணவு உண்ட குழந்தைகள் எவ்வளவு? என்ற கணக்கை மட்டும் கண்காணிப்பு ஏட்டில் எழுதிக் கையொப்பமிட்டு, வைத்து, மேற்பார்வையிட்டுச் செல்வார்களேயானால் பணமோ, பண்டமோ விரயமாகவோ, குறையவோ, காணாமற் போகவோ வழி ஏற்படாது.

ஒவ்வொரு இடத்திலும் இப்படிக் குறைந்தது முப்பது 'நல்ல தொண்டர்கள் கிடைப்பார்களேயானால் ஒவ்வொருவரும் திங்களுக்கு ஒரு நாள், ஒரு மணிநேரம் பொறுப்பு ஏற்றுக் கொண்டால் போதுமானது. மக்களின் வரிப்பணத்தால் நிறைவேற்றப்படும் திட்டத்தைக் கண்காணிக்கவும், சீர்படுத்தவும், சிறப்புதவி புரியவும், குழந்தைகளின் அன்புத்தாய் தந்தையராய் விளங்கவும், நல்லவர்கள் ஊருக்கு ஊர், இடத்திற்கு இடம், பள்ளிக்குப் பள்ளி, காப்பகத்திற்குக் காப்பகம் முன்வருவார்களேயானால், திட்டம், நூற்றுக்கு நூறு வெற்றி பெறும் என்பது திண்ணம். இந்த வேண்டுகோளைத் தான் தமிழக அரசின் சார்பாகத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குப் பணிவன்போடு விழைந்து விடுகின்றேன்.

திட்டத்தைச் சிறப்புற நிறைவேற்ற தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில், சமையற்கூடங்கள் கட்டித்தர, நிலக்கொடை வழங்க, நிதிக்கொடை வழங்க, உணவு செய்யும் பாண்டங்கள் கொடுக்க, காய்கறிகள் வழங்க முன்வரவேண்டும் என்று ஆங்காங்குள்ள அறநெறிச் செல்வர்களையும், அற நிறுவனங்களையும், பெருநிலக்கிழார்களையும், பெருந் தொழிலதிபர்களையும், வாணிகப் பெருங்குடி மக்களையும், வள்ளல் பெருமக்களையும், பொது மக்களையும் வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை-எளிய இளஞ்சிறார்களின் கொடிய பசிப்பிணியைத் தீர்த்து, வலிய உடல் வளர்ச்சியையும், உள்ள வளர்ச்சியையும் தரும் இந்தப் புதிய இலவச சத்துணவுத் திட்டம் என்றென்றும் வாழ்க! எல்லா வகையிலும் வெல்க—என்று கூறிடுவதில் பெருமை கொள்கிறேன், பெருமிதம் அடைகிறேன்.

18.7.'82 அன்று வானொலியில் ஆற்றிய உரை.


அடுத்த இதழில்...

மாண்புமிகு கல்வி அமைச்சர்

திரு. செ. அரங்கநாயகம்

அவர்கள்

எழுதும்

பயணக் கட்டுரை





புகழ்பெற்ற நாவலாசிரியர்

லக்ஷ்மி

எழுதும்

'பார்வதி பொழுத்தினாள்'


## படமும் செய்தியும்





தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின், சிந்தாதிரிப் பேட்டைக் கிளைத் திறப்பு விழாவில் (27-7-82) மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி.பொன்னையன் அவர்களிடம், வங்கியின் தனி அலுவலர் திரு. இரெ. ஆறுமுகம் அவர்கள், வங்கி ஊழியர்கள் சார்பில் முதல்வரின் மதிய இலவச சத்துணவுத் திட்டத்திற்கு 26,000 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.



சென்னையில் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் வீடியோ மையத் திறப்பு விழாவில் (28-7-82) மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்களும், மாண்புமிகு தமிழக செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களும் கலந்து கொண்டனர்.



சென்னை இராயபுரம் பகுதியில் மக்கள் குறைகேட்கும் நாள் (16-7-82) அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் நேரில் அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

ரம்சான் திருநாளையொட்டி சென்னை முஸ்லீம் பெண்கள் சேவா சங்கத்தினர், ஏழை விதவைப் பெண்களுக்கு உதவி வழங்கும் விழாவை, சென்னை ராஜாஜி மண்டபத்தில் 18.7.82 அன்று நடத்தினர்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் கலந்து கொண்டு ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரம், துணிகள், பண உதவி அளித்தார்கள்.

விழாவுக்கு, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி. கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். எத்திராஜ் கல்லூரி துணை முதல்வர் நூர்ஜஹான் அப்துல்காதர், சங்க கவுரவச் செயலாளர் உபயதுல்லா ஆகியோர் பேசினர். 500 பெண்களுக்குச் சேலை, ரவிக்கை, மேலாடையும் 15 ரூபாய் உதவிப் பணமும் வழங்கப்பட்டன. 10 ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. முஸ்லிம் சமுதாய மாணவிகள் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் முதலிடம் பெற்ற 3 பேருக்குத் தலா 250 ரூபாய் வழங்கப்பட்டது. இந்த உதவிகளை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

# பெருநாளில் ஒரு திருப்பணி

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''யாருடைய கரத்தால் இந்த இனிய விழா நடைபெற வேண்டும் என்று தாய்மார்கள் நினைத்தார்களோ, அதே கரத்தால் இன்றைக்கு இந்த விழா சிரோடும் சிறப்போடும் நடந்துள்ளது. தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்கின்ற தலைவர் புரட்சித் தலைவர்கள் அவர்கள். தைத் திங்களிலும் தீபாவளித் திருநாளிலும் ஏழை-எளியவர்களுக்கு இலவசமாக உணவும் உடையும் ஆண்டுதோறும் வழங்கி வருகிறார். நமது முதல்வர் அவர்கள். கண்ணை இமை காப்பது போல புரட்சித் தலைவர் இன்றைக்கு மக்கள் நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்து வருகிறார். தாய்க்குலம் மீது நபிகள் நாயகம் எப்படிப் பாசத்துடன் இருந்தாரோ அதே போல, நமது புரட்சித் தலைவர் அவர்களும் தாய்க்குலத்து மீது பாசம் வைத்து இதுபோன்ற நற்காரியங்களைச் செய்து வருகிறார்கள். தமிழகம் முழுவதும் இன்றைக்கு 63 இலட்சம் ஏழை-எளிய மாணவர்களுக்குச் சத்துணவு அளித்து நாட்டு மக்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கிறார்கள். இந்தச் சத்துணவுத் திட்டம் செம்மையாகச் செயல்பட மக்கள் ஆதரவு தர வேண்டும்.''

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

## உருவ வழிபாடற்ற முறை

''இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நபிகள் (ஸல்) அவர்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் கிருஷ்ணசாமி அவர்கள் கூறினார்கள்.

உருவ வழிபாடற்ற ஒரு முறையைக் கடைப்பிடிக்கும் இஸ்லாமிய சமுதாயம் எந்த அளவு ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்காதவர்கள் இருக்க முடியாது. இந்தச் சமுதாயத்திலிருப்பவர்களுக்கு என்னென்ன கடமைகள்



ஏழை முஸ்லீம் விதவைப் பெண்களுக்கு மாண்புமிகு முதல்வர் ஆடைகள் வழங்குதல்

-திருக்குரானில் சொல்லப்பட்டிருக்கிறதை- ஒன்றிரண்டை நான் குறிப்பிடுவது எனக்கு நினைவுபடுத்திக்கொள்வதாக அமையும். மறந்தவர்களுக்கும் நினைவுபடுத்துவதாக அமையும் என நான் கருதுகிறேன்.

''ஒவ்வொருவரும் தனது சொத்தில் மொத்தத்தில் என்று நான் அடைமொழியாகச் சேர்த்துக் கொள்கிறேன். இரண்டரை சதவிகிதத்தை ஏழை, எளியவர்களுக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்பது ஒரு சித்தாந்தமாகக் கூறப்பட்டிருக்கிறது.

**தொகுப்பு: ஜி. ஆனந்தன்**

## நாங்கள் பாராட்டக் காரணம்

''நோன்பிருப்பதை வெறும் நோன்பு என்று மட்டும் எடுத்துக்கொள்ளாமல் அவர் உண்ணாமலிருக்கும் பகல் நேர உணவு-அந்த வேளை உணவு இன்னொருவருக்குப் பயன்படப்போகிறது என்கிற சித்தாந்தத்தை நாம் மறந்துவிடக்கூடாது. நாங்கள் இஸ்லாமிய சமுதாயத்தைப் பாராட்டக் காரணம் ஏழை பணக்காரன் என்பது இயற்கையாக ஆண்டவன் சிருஷ்டியில் இல்லை. அவரவர் வாய்ப்புதான். சந்தர்ப்பம்தான். அவரவர் செய்கின்ற துணிச்சலான காரியத்தினால் தான் அந்த இடத்தை எய்துகிறான். அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். சட்டப்படி ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். ஒரு இஸ்லாமியனாக இருப்பானானால் அதைச் செய்தாக வேண்டும் என்றிருப்பதை எண்ணி எண்ணிப் பாராட்ட வேண்டும்.

''அந்தக் கொள்கையைச் சொன்னவர்களுக்கு—கடைப்பிடிப்பவர்களுக்கு, கடைப்பிடித்து வருபவர்களுக்குத் தலைகுனிந்து கைகூப்பி வணக்கம் தெரிவிக்க விரும்புகிறோம். இங்கே ஏழைகளுக்குத் துணிகள் கொடுக்க இருக்கிறார்கள். மானத்தை மறைக்க இலவசமாகத் துணிகள் கொடுக்க இருக்கிறார்கள்.

## யார் தயவுமின்றி வாழும் நிலை

''என்றைக்கு அவரவர்களால் வாங்க முடிகிறதோ அன்றுதான் இந்தியா சுதந்திரம் பெற்றதற்கு அடையாளமே தவிர, இன்னொருவருடைய கையை எதிர்பார்த்து வாழும் வரையில் இந்தியா பரிபூரண சுதந்திரம் அடைந்ததாக யாருமே சொல்ல மாட்டார்கள்.

''அமரர் காந்தி சொன்னதில்லை, நேரு சொன்னதில்லை, இந்திராகாந்தி அம்மையாரும் சொன்னதில்லை, லால்பகதூர் சாஸ்திரி சொன்னதில்லை, அபுல்கலாம் ஆசாத் சொன்னதில்லை, மூதறிஞர் ராஜாஜி சொன்னதில்லை, அய்யா அவர்கள் சொன்னதில்லை, அமரர் அண்ணா சொன்னதில்லை. இதை நான் எதற்காகக் குறிப்பிடுகிறேனென்றால், இந்த வாய்ப்பை நாம் பெற்றாக வேண்டும்.

''எந்த ஒரு வீட்டிலும் எந்த ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த நம்பிக்கைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் சமத்துவத்தோடு, சரி நிகராக வாழ்க்கையிலே ஒரு மனிதன் அவசியத் தேவைகளை யாவது பிறருடைய தயவில்லாமல் பெற்று வாழ்கின்ற நிலைமையை உருவாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தக் கடமையை இன்னும் யாரும் முழுமையாகச் செய்துவிடவில்லை என்பதை இங்கே சுட்டிக் காட்டுகின்றேன்.

## மக்கள் பணத்திலிருந்து மக்களுக்கே

''இங்கே மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது, 63 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் காரியத்தை முதலமைச்சர் செய்வார் என்று சொன்னார். யாருடைய பண[illegible] தனிப்பட்ட பணமல்ல. மக்களுடைய பணம், மக்களுடைய வரிப் பணத்திலிருந்து, மக்களுக்குச் செலவு செய்கின்ற பணம் இதை உண்டு வளருகின்றவர்கள் எந்த ஒருதனி மனிதனுக்கும் கட்டுப்பட்டவர்களல்ல—கட்டுப்பட வேண்டியவர்களல்ல. அவர்கள் நன்றிக்கடன் செலுத்த எந்தத் தனிப்பட்ட மனிதனையும் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

''இந்தப் பணம் தமிழக மக்களுடைய பணம் என்றால் தமிழக மக்கள்-தமிழ் நாட்டின் சொத்து. எனவே, தமிழ்நாட்டிற்குத்தான் இந்தக் குழந்தை வளர்ந்து எதிர்காலத்தில் நன்றி காண்பிக்க வேண்டுமே தவிர, யாருக்கும் அடிமையாகக் கைகட்டி நன்றி காட்டவேண்டிய அவசியமில்லை. நாங்கள் ஒரு குழு அமைத்திருப்பது உங்களுக்குத் தெரியும். அதில் ஒரு செய்தி வந்திருக்கிறது.

## ஒரு வேளைச் சாப்பாட்டிற்காக...

''12, 13 வயதுச் சிறுவர்கள் சில வீட்டில் வேலை செய்கிறார்கள். எதற்கு வேலை செய்கிறார்கள் என்றால் சம்பளத்திற்காக அல்ல. ஒரு வேளைச் சாப்பாட்டிற்காக, தாய் தந்தையர்கள் வேலைக்குப் போகும் போது ஒரு வேளை உணவுக்காக வேறு வீடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

''இந்த வயதில் ஒரு வேளை உணவுக்காக வேலை செய்து கொண்டு எங்களுக்கு எங்கே சாப்பாடு என்று கேட்கிறார்களாம். 'இல்லை' உங்களுக்கு இல்லை. குழந்தைகளுக்குத்தான் என்று சொன்னால் 'நீங்கள் எம். ஜி. ஆரிடம் சொல்லுவதில்லை. எம். ஜி. ஆரிடம் சொல்லுங்கள், எங்களுக்கும் சாப்பாடு கிடைக்கும்' என்கிறார்களாம்.

''இதை நான் குறிப்பிடக் காரணம். மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை பெரியது. ஆனால் அரசுக்கு இருக்கும் சக்தி மிகமிகச் சிறியது.

## பிரித்துப் பார்க்க முடியாது!

''ஒரு கொள்கையை எடுத்து நிறைவேற்றும்போது திட்டங்களைப் பிரித்துப் பார்க்க முடியாது. முஸ்லிம் சமுதாயக் குழந்தைகள் பகலில் உண்ணக்கூடாது என்று சொன்னால், அவர்களுக்காக மாற்றி [illegible] வேண்டியிருந்தது. மாலை 7 மணிக்கு [illegible] அவர்களுக்குச் சமைத்துக் [illegible]

ம1

## பெண் கல்வி

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும் போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும் சந்ததிகள் வாழ்க்கை சீர் பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

—பேரறிஞர் அண்ணா

என்று உத்தரவிட்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

"அதற்காக அந்தத் தாய்மார்கள்-சமையல் செய்பவர்கள் 3 மணி நேரம் அதிகமாக இருந்து அந்தக் குழந்தைகளுக்கு உணவு ஊட்டி விட்டு செல்ல வேண்டி இருக்கிறது. அதற்காக அவர்கள் ஓவர்டைம் கேட்கவில்லை; கேட்க மாட்டார்கள்.

"ஆனால், இப்போது எங்கு பார்த்தாலும் ஒரு நாட்டிற்குத் தொண்டு செய்பவர்கள், வேலை செய்யும்போது பல பிரச்னைகளில் ஏலம் போடுகிறார்கள். தன்னுடைய கடமையை ஏலம் போடுகிறார்கள். தன்னுடைய நாட்டிற்குச் செய்ய வேண்டிய தியாக உணர்வை விலை பேசுகிறார்கள்.

**அரசு சரிபாதி உதவி!**

"அவைகளையெல்லாம் நீக்க வேண்டுமானால் படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். சாதாரண மக்களுக்கு அல்ல, அப்படிப்பட்ட பணியிலிருப்பவர்களுக்குக் கூட எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுருக்கிறீர்கள். **இன்றைக்கு 500 தாய்மார்களுக்குத் துணிகளை இந்த அமைப்பு வழங்க இருக்கிறது. 100 ஆண்டுக் காலம் பணி செய்யும் அமைப்பு இதனைச் செய்கிறது என்றால், இதிலும் பாதிப் பங்கு சுமார் 20-லிருந்து 30 ஆயிரம் ரூபாயைத் தமிழக அரசு ஏற்றுக் கொடுக்கிறது.**

"கொடுக்கிறது என்றால் இந்தத் தாய்மார்களுக்கு மாதம் 15 ரூபாய் தருகிறது என்றார்கள். அந்தப் பணத்துடன் அரசு முதியோர்களுக்குத் தரும் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுங்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னேன். உடனே மற்றவர்கள்,"சங்கத்திலிருப்பவர்களுக்கு 50 ரூபாய்; எங்களுக்கு 35 ரூபாய் 25 ரூபாய்தானா" என்று போட்டிக்கு வந்துவிடக் கூடாது.

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

"சில சந்தர்ப்பங்களில் சிலருக்கு ஒரு ரூபாய், 2 ரூபாய்கூட கிடைக்கலாம். இருக்கின்ற சூழ்நிலையை வைத்து, நமக்கிருக்கிற சக்தியை வைத்து வாழ்க்கையை எப்படி நடத்திக் கொள்ள வேண்டுமோ அப்படி நடத்திச் செல்லக்கடமைப்பட்டிருக்கிறோம்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று அமரர் அண்ணா எங்களுக்குச் சொன்னதன் விளைவாகத்தான் இன்றைய தினம் முஸ்லிம் பெரியவர்களைச் சந்திக்கும்போது நெஞ்சாரத் தழுவ முடிகிறது. அது ஒரு மதத்தினுடைய கோட்பாடு-நம்பிக்கையாக இருந்தாலும் அது எங்களுக்கும் பொருந்துகிறது. ஏனென்றால் எங்களுக்கு "ஒன்றே குலம் தான் ஒருவனே தேவன்தான்".

**சத்துணவு நகரத்திற்கும் விரிவுபடுத்தப்படும்**

"எங்கெங்கே அன்பைக் காணுகிறோமோ, பண்பைக் காணுகிறோமோ அங்கெல்லாம் இறைவனைக் காணுகின்றோம். ஆகவேதான் ஒரு மனிதன் வேறுபட்ட உணர்ச்சிக்கு-காழ்ப்புணர்ச்சிக்கு ஆளாக இடமில்லாமல் இருக்க வேண்டுமென்றால் உணவு பிரச்சினை இருக்கக் கூடாது. இருக்க வீடில்லை என்ற பிரச்சினை இருக்கக் கூடாது, செய்ய தொழில் இல்லை என்ற பிரச்சினை இருக்கக் கூடாது.

**"அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 லிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குழந்தைகளுக்கும் இந்த உணவுத் திட்டத்தை நகரத்திற்கும் விஸ்தரிப்பது என்று திட்டமிட்டிருக்கிறோம்.** நாம் ஆரம்பித்திருக்கிற திட்டம் ஆங்காங்கே செயல்படும் அனுபவத்தை வைத்து நகரங்களிலும் செயல்படுத்த இருக்கிறோம்.

"இந்தத் திட்டம் எவ்வளவு மகத்தான திட்டம் என்பதைச் சொல்லும்போது, மகத்தான என்று சொல்வது பெருமை சேர்க்கக் கூடியது என்று நான் சொல்லவில்லை. இது ஒரு சுமையான-மிகப் பெரிய சுமையான திட்டம் என்பதைச் சொல்லுகிறேன்.

"இதற்கு நிதி சேர்த்தாக வேண்டும். நிதி வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு நிதி வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு எண்ணிக்கை அதிகரிக்கும். எவ்வளவுதான் நாம் குடும்பக் கட்டுப்பாடு செய்தாலும் எண்ணிக்கை அதிகரிக்கும்,

"இவைகளைத் தனிப்பட்ட அரசு நிறைவேற்றிட முடியாது. 63 இலட்சம் குழந்தைகள் என்று சொல்லுகின்றோம், ஒரு பகுதியில் 13 இலட்சம் பேர் என திட்டமிட்டோம். ஆனால் இப்போது 18 இலட்சம் பேர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"சில இடங்களில் தாய்மார்கள், ஏழைக் குழந்தைகளையும் அனுப்பிவிட்டு பெரியவர்களும் வந்து உட்கார்ந்து விடுகிறார்கள். இதையும் கவனிக்க வேண்டும். குழந்தைகளுக்கு உணவு கொடுப்பது என்பது எளிதான காரியம் அல்ல. ஏழை - பணக்காரன் என்ற எல்லைக்கு அப்பாற்பட்டு, சாதி மதத்திற்கு அப்பாற்பட்டு காரியத்தைச் செய்தால் மற்ற மாநிலமும் சத்துணவுத் திட்டத்தினைப் பின்பற்றும்.

**ஆந்திரக் கல்வி அமைச்சர் பாராட்டு**

"ஆந்திர மாநிலக் கல்வி அமைச்சர் சொந்த காரியமாக தர்மபுரிக்கு வந்தார். மாவட்ட ஆட்சித் தலைவரோடு திடீரென மதிய உணவுத் திட்டம் செயல்படும் இடங்களைச் சென்று பார்வையிட்டார்.

"சமையல் செய்த சாதத்தை உண்டு பார்த்து, "சாப்பாடு நன்றாக இருக்கிறது: குழந்தைகள் சாதி மத வித்தியாசம் இன்றி உணவு உட்கொள்வதைப் பார்த்துவிட்டு ஆந்திராவிலும் இதைக் கொண்டு வருவோம். இதுதான் முதல் வேலை!" எனச் சொல்லியிருக்கிறார்.

"இதில் பெருமையைவிட, தேவையும் சூழ்நிலை உருவாவதும் நமக்குத் தேவை. அந்தத் தேவை உருவாகிறது. இதை வெற்றிகரமாகச் செய்ய நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

"ஏழை விதவை முஸ்லீம் மக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விழாவாக இருந்தாலும், தேசிய ஒருமைப்பாட்டிற்கு மேலும் பெருமை சேர்க்கும் விழாவாக சாதி-மத-இன வேறுபாடின்றி அமைத்துத்தரப்பட்ட இனிய விழாவாக இது இருந்தது என்று கூறினால் அது மிகையாகாது.



## பால் தேவை நிறைவேற பாங்கான திட்டம்!

சென்னை அரும்பாக்கம், சாந்தி காலனி, அண்ணா நகர் ஆகிய இடங்களில் புதிய பால் வழங்கு தானியங்கி நிலையங்கள் (Automatic Vending Machine Units) அமைக்கப்பட்டுள்ளன.

இதன் தொடக்க விழா ஜூலைத் திங்கள் 17-ஆம் நாள் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமக் குடியிருப்புப் பகுதியில் நடந்தது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி இணையத்தின் நிர்வாக இயக்குர் திரு. ஏ. எம். சுவாமிநாதன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் பொது மேலாளர் திரு ஆர். கோபாலன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், இணையத்தின் இணையிலாப் பணிகளை எடுத்துக் கூறினார்.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை-பால்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், பால் வழங்கு த்தானியங்கி நிலையங்களைத் துவக்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

"சென்னை நகரில் 100 தானியங்கி பால் வழங்கு நிலையம் அமைப்போம் என்று கூறினோம். அதன்படி ஓராண்டுக் காலத்தில் 25 நிலையங்கள் அமைத்துள்ளோம். இன்னும் 2 ஆண்டுகளில் மேலும் 75 நிலையங்கள் அமைப்போம். இப்போது 40 இடங்களில்தான் ஐஸ் கிரீம் விற்கப்படுகிறது. மேலும் 800 இடங்களில் ஐஸ் கிரீம் விற்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

"பால் விநியோகத்தில் கலப்படம், குறித்த நேரத்தில் கிடைப்பதில்லை என்று பல குறைபாடுகள் உள்ளன. இவற்றைப் போக்க நுகர்வோர் சங்கங்களின் மூலம் பால் விநியோகம் நடைபெற்று வருகிறது. இப்போது 9 இடங்களில் அவ்வாறு பால் விநியோகிக்கப்படுகிறது. இன்னும் 7 இடங்களில் நுகர்வோர் சங்கங்கள் மூலம் பால் விநியோகிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

"நகரின் 50 சதவீத பால் தேவையை இந்த நிறுவனம் பூர்த்தி செய்து வருகிறது. நியூசிலாந்து நாட்டில் 15000 பேர் பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்கள். ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பாலும், பால் பொருள்களும் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. நம் நாட்டில் 3 இலட்சம் விவசாயிகள் பால் உற்பத்தியில் ஈடுபட்டு உள்ளனர். இன்னும் மூன்றாண்டில் பால் உற்பத்தியாளர்கள் எண்ணிக்கையை 10 இலட்சமாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.

விழாவில் அமெரிக்கவாழ் தமிழர் டாக்டர் ரகுநாத் அவர்கள் கலந்துகொண்டு, தமிழக அரசின் பணிகளை வெகுவாகப் பாராட்டிப் பேசியது அனைவரையும் கவர்ந்தது. விழாவுக்கு ஆடவர், மகளிர், குழந்தைகள் திரளாக வந்திருந்தனர். தங்கள் பகுதியில் பால் வழங்கு தானியங்கு நிலையம் அமைந்ததை எண்ணி மகிழ்ந்தனர்.

—பி. வி. ஜி.

# அமோக விளைச்சலுக்கு







## உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்





உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001






சமச்சீர் உரமிட
விஜய்

HTM-MFL-2526


# குடிப்பதை விடுவது குடும்பத்தைக் காக்கும்

மு. முத்துக்காளத்தி

வாழ்நாளைச் சுருக்க, மனிதனின் கழுத்துக்குக் கயிறு போடும் இரண்டு எமதூதர்கள் இருக்கிறார்கள். ஒன்று குடி, இன்னொன்று பிடி. அதாவது, மதுவும் புகையும்; இதில் மது பட்டாக்கத்தி பயில்வான். பூகம்பம் போன்றது. விரைந்து அழிப்பது. புகை ஜேப்படி திருடன் மாதிரி. கொஞ்சம் கொஞ்சமாக ஆளைக் குளத்தில் மூழ்கவைத்து சாகடிப்பதுபோல. இரண்டுமே தீமை பயப்பன. தீயென அஞ்சத்தக்கன.

திருவள்ளுவர் காலத்திலிருந்தே மதுவை வெறுத்துப் பேசாத சான்றோர்கள் இல்லை; அறிஞர்கள், அறவோர்கள் இல்லை. தேசத் தந்தை காந்தியடிகள், மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் குடியின் கொடுமைகளை விளக்கியிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு மதுவில் மயக்கம் ஏற்படும். ஆனால் அண்ணாவோ தமக்கு ''மதுவிலக்கில் மயக்கம்'' இருப்பதாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட பெரியோர்கள், பேரறிவாளர்கள் சொல்லியும் திருந்தாத மக்களை என்னென்பது! அண்மையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மது விலக்குக் கொள்கை தம் ஊனோடும் உயிரோடும் கலந்து விட்ட ... கொள்கையென்றும், அதற்காகக் கையெழுத்துப் போடும் பொழுதெல்லாம் கண்ணீர் விடுவதாகவும் கல்லும் கரையும் வண்ணம் எடுத்துரைத்தார்கள். இக்கனிவுரையாவது கள்ள மது குடிப்போரை மெல்ல வழிப்படுத்துமா?

ஆரம்பத்தில் மனிதன் மதுவைக் குடிக்கிறான். போகப் போக மது, மனிதனைக் குடித்து விடுகிறது. அவனை மட்டுமின்றி, அவனது குடும்பத்தையும் குடித்து விடுகிறது. பீர், விஸ்கி, பிராந்தி, ஜின், ரம், ஒயின், சாராயம், பட்டை, நாட்டுச் சாராயம் எல்லாமே மனித கண்ணியத்துக்கு அப்பாற்பட்டவைதான். உடல் நலனுக்கு ஊறு விளைப்பவை. விஷத்தன்மை வாய்ந்தவை. விலக்கவேண்டியவை.

படித்தவர்கள், பணக்காரர்கள், பதவியில் இருப்பவர்கள் பார்ட்டிகளில் குடிக்கிறார்கள். குப்பனும், சுப்பனும் குடிசைகளில் குடிக்கிறார்கள். வசதி படைத்தவர்கள் உயர்ந்த ரகங்களையும், வசதி குறைந்தவர்கள் மட்ட ரகங்களையும் வாங்கி 'மடக் மடக்'என்று குடிக்கிறார்கள். இரு சாராருமே சந்தோஷத்துடன் கொஞ்சம் கொஞ்சமாகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

நாம் சாப்பிடும் எந்த உணவும் உடம்பில் ஜீரணமாக நேரம் பிடிக்கும். மது அப்படியல்ல. சாப்பிட்ட 15 நிமிடங்களுக்கெல்லாம் அது வயிற்றிலிருந்தும் சிறு குடலிலிருந்தும் கிரகிக்கப்பட்டு, இரத்த ஓட்டத்தில் சேர்க்கப்படுகிறது. வெறும் வயிற்றில் சாப்பிடும் பொழுது இந்த வேகம் இன்னும் அதிகமாகிறது. உச்சி முதல் உள்ளங்கால் வரை எல்லாப் பகுதிகளிலும் இந்தக் "கில்லர்'' பாய்கிறது. இதை ''கிக்'' என்று மகிழ்ந்து மனிதர்கள் மரணப் பிடியில் சிக்கிக்கொள்கிறார்கள்.

கொஞ்சமாகச் சாப்பிட்டால் கேடில்லை என்பது உண்மைதான். ஆனால் அந்தக் கொஞ்சத்தோடு இந்த நஞ்சு நின்று விடுவதில்லை. ஆரம்பத்தில் கொஞ்சம் சாப்பிட்டதும் போதையேறும். போகப் போக அதிகம் சாப்பிட்டால்தான் போதை வரும். பேதை மனம் தெளியும்போது காலம் கடந்துவிடும். காலன் நெருங்கி விடுவான்.

### குடியால் வரும் கேடுகள்:

மனிதன் அருந்தும் சாராயத்தில் 95 சதவிகிதம் உடம்புக்குள் எரிக்கப்பட்டு விடுகிறது. மீதி சிறுநீரிலும், வியர்வையிலும், வெளியிடுகிற மூச்சிலும் வெளியேறிவிடுகிறது. ஒருவன் குடித்திருக்கிறானா இல்லையா என்பதைப் பார்க்க அவனை





தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத் தக்கது ஒன்று உண்டென்றால், அது குடி என்ற சாபக்கேடுதான்.

குடிப்பழக்கத்திற்கு இரையான ஒரு நாட்டுக்கு அழிவைத் தவிர வேறொன்றும் கிடையாது.

அபினி மற்றும் போதையளிக்கும் பொருள்கள், மனிதனின் உள்ளத்தை முடமாக்கி, மிருகங்களுக்கும் கீழ்த்தரமான நிலைக்கு அவனைக் கொண்டு வருகின்றன.



மதுவிலக்கை மகாத்மா காந்தியடிகள் ஒரு கொள்கையாக அல்ல, வாழ்க்கை முறையாகவே வலியுறுத்தினார். குடிகாரர்கள் தங்களை அழித்துக் கொள்வதுடன் தங்களைச்சார்ந்துள்ள மக்களையும் அழித்துவிடுகிறார்கள். சமுதாயத்தின் ஒழுக்கமும் சீரழிவுக்குள்ளாகிறது. மது விலக்கால் சமுதாயம் அடையும் நன்மைகள்தான், பிற எவற்றையும்விட முக்கியமானவை. உடல்நல மிக்க மக்களைக் கொண்ட நாடுதான் முன்னேற முடியும்.

மூச்சு விடச்சொன்னால் போதும். வாடையைக் கொண்டு கண்டு பிடித்துவிடலாம். சாராயத்தில் 80 சதவிகிதம் கல்லீரலில் எரிக்கப்படுகிறது. மீதி 20 சதவிகிதம் சிறுநீரகத்தில் எரிக்கப்படுகிறது. ஒரு மணிக்கு 5 மில்லியிலிருந்து 10 மில்லி வரை எரிக்கப்படுகிறது. இதற்குமேல் முடிவதில்லை. ஓடுதல், தாண்டுதல், குதித்தல் போன்ற உடல் நடவடிக்கைகளை வேகப்படுத்தினாலும் கூட மற்ற உணவுப் பொருட்களைப் போல் மதுவை இதற்குமேல் எரிக்க முடியாது. மதுவில் கார்போஹைட்ரேட் (carbohydrate) தவிர வேறு ஒன்றும் கிடையாது. சாதாரணமாக கார்போஹைட்ரேட் ஒரு கிராமுக்கு 4 கலோரி கொடுக்கும். புரதம் அவ்வாறே 4 கொடுக்கும். கொழுப்பு 9 தரும். சாராயம் 7 தருகிறது. சாராயத்தை கிளைக்கோஜனாகவோ (glycogen) கொழுப்பாகவோ (fat) மாற்றி உடம்புக்குள் சேர்த்து வைக்கமுடியாது. சாராயம் ஜீரணிக்கும் பிரச்சினையே கிடையாது. குடித்தவுடனே அது உடலுக்குச் சக்தியாகப் பயன்படக்கூடியது. கொஞ்சமாகக் குடித்தால் உடலில் கொழுப்பு, கார்போஹைட்ரேட்டுக்குப்பதில் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தக் கார்போஹைட்ரேட் கலோரி மதிப்பு தவிர, சாராயத்தில் வேறு எந்தவிதமான சத்துகளோ வைட்டமின்களோ கிடையாது. இப்படியிருக்க அதை ஏன் குடிக்கவேண்டும்?

குடி ஆரம்பத்தில் பசியைத் தூண்டிவிடும். உற்சாகத்தைக் கொடுப்பதுபோல் தோன்றும். நாளாவட்டத்தில் சதை போட்டு விடும். நீண்டநாள் குடித்துக் கொண்டே வந்தால் உடம்பு உருக்குலைந்துவிடும். வயிற்றுப் போக்கு உண்டாகும். பசியெடுக்காது. உணவிலிருந்து வைட்டமின் சத்துகளை உடலால் கிரகிக்க முடியாது.

குடித்தவுடன் மனம் குதூகலிக்கும். கட்டுப்பாடுகளைக் கடந்து களிப்பில் துள்ளும். மேலும் மேலும் குடிக்கும் பொழுது அது மனித உணர்வுகளைக் கீழ்த்தரமாக்கி, ஆளை நரம்புத் தளர்ச்சியில் தள்ளும். இரண்டு பேருக்கு முன்னால் நாலு வார்த்தை பேசக் கூச்சப்படும் ஒரு நபருக்குக் கொஞ்சம் மது கொடுத்துப்பாருங்கள். நம்முடைய நாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை அலசியெடுத்து விடுவான். அரிய யோசனைகள் அவனது 'கூர்ந்த மதியிலிருந்து' அலை அலையாக வரும். உளறிக் கொட்டுவான். நிதானம் தவறிப் பேசுவான். மானம், மரியாதை இழப்பான். மதுவின் தீமைகள் அளவற்றவை. இதயம், கல்லீரல், இரத்த ஓட்டம் எல்லாமே மதுவினால் பாதிக்கப்படுகின்றன. காம சுகத்தில் சாராயம் 'கிக்' கொடுக்கும் என்று சிலர் நினைக்கிறார்கள். கொஞ்சமாக இருக்கும் பொழுது அப்படியொரு உற்சாகம் வருவது உண்மையே! ஆனால் அளவோடு நில்லாதது தான் மதுவின் ஆற்றலே; அதிக மது ஆண்மைக் குறைவை உண்டாக்கிவிடும்.

சாராயம் எரிக்கப்பட வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ் ஒரு கிரியா ஊக்கியாகப் (catalyst) பயன்படுகிறது. அத்துடன் அது கல்லீரலையும் பாதுகாக்கிறது. குடி அதிகமாகும்பொழுது மேற்கொண்டு வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ் தேவைப்படுகிறது. அது கிடைக்காததால் கோளாறுகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடருகின்றன. குடிப்பதை விட்டுவிடுவதே புத்திசாலித்தனம்; குடும்பத்தைக் காக்கும் உன்னத வழி!



# கிராமங்கள் தோறும் அடிப்படை வசதிகள்


எச். பி. என். ஷெட்டி,
(இ.ஆ.ப.)
ஆணையர்:—அரசுச் செயலா
ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை.


"சுத்தம் சுகம் தரும்" என்ற பழமொழி என்றோ கூறப்பட்டது. எனினும் இவ்வுலகம் உள்ளவரைக்கும் இப்பழமொழிக்கும் மதிப்புண்டு. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று கூறும்போது, நோயற்ற வாழ்வை நாம் பெற என்ன செய்ய வேண்டுமென எண்ண வேண்டியது அவசியம்.

இயற்கைச் சூழலில் ஓடுகின்ற ஆறுகளையும், தென்றலால் அசைகின்ற மரம் செடி கொடிகளையும் கொண்டிருந்தும் பல கிராமங்கள் தொற்று நோய்களுக்குக் காரணமான நோய்க் கிருமிகளின் இருப்பிடங்களாக இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் திறந்த வெளிகளையும், புதர்களின் மறைவுகளையும், ஆறு மற்றும் கால்வாய்க் கரைகளையும், கழிப்பிடங்களாக மக்கள் பயன்படுத்தி வந்த வழக்கம் தலையாய காரணமாகும்.

மாதர்க்கு அணிகலனாகிய நாணத்தின் காரணமாக, இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்குக் கூட விடியாத காலைப் பொழுதிற்கும், இருள் கூடும் மாலைப் பொழுதிற்கும்-காத்திருக்க வேண்டிய கட்டாயம் உண்டு. அந்தக் கட்டாயத்தினால் மானத்திற்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம்.

எனவே தன்னிறைவுத்திட்டம் நிறைவேற்றப்படுகின்ற பொழுதே — பெண்களுக்கான தனிக்கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்தை அரசு நிறைவேற்றி வந்தது. இத்திட்டம், கிராம மகளிர்க்குப் பெரிதும் பயனுள்ளதாக இருந்தது. எனினும், தக்க கழிப்பிடங்கள் இன்மையால்- ஆண்களாலும், சிறுவர்களாலும் கிராமப்புறச் சுகாதாரச் சூழ்நிலை சோதனைகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. இதனை அறிந்த தமிழ்நாடு திட்டக் குழு, ஆண்களுக்கான கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்தையும் மேற்கொள்ளுமாறு ஆலோசனை நல்கியது.

எனவே, மாநிலத் திட்டக் குழுவின் இந்த யோசனையை ஏற்றுக்கொண்ட தமிழ்நாடு அரசு, ஆண்களுக்கான கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்திற்குத் தற்போது அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ 16,000 வருவாய் கிராமங்களிலும், ஒரு கிராமத்திற்கு ஒரு கழிப்பிடம் என்ற விகிதத்தில் கழிப்பிடங்கள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் 8000 கழிப்பிடங்கள் 1982-83ஆம் ஆண்டும் - எஞ்சியவை 1983-84-ஆம் ஆண்டிலும் கட்டப்படும்.

ஆறு கழிப்பறைகள் கொண்டதாக அமையும் இக்கழிப்பிடங்களில், நான்கு அறைகள் பெண்களுக்காகவும். இரு கழிப்பறைகள் ஆண்களுக்காகவும் ஒதுக்கப்படும். இயலுகின்ற இடங்களில் எல்லாம் குழாய் வழியே நீர் வழங்கப்படும். அத்தகைய தண்ணீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு, தண்ணீர் எப்போதும் வழங்கப்படும். இக்கழிப்பிடங்கள் ஆதிதிராவிடர்கள் குடியிருக்கும் பகுதிக்கு அருகாமையில் அவர்கள் பயன்படுத்தத் தக்க வகையில் அமைக்கப்படும். மேலும், மின் வசதி கிடைப்பின், இக்கழிப்பிடங்களில் மின் விளக்குகளும் அமைக்கப்படும். இவைகளைப் பராமரிக்கப் பணியாளர்களும் அமர்த்தப்படுவர்.

ஒரு கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ. 14,100 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள 16,000 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படப் போவதால், இதற்கென ஏறத்தாழ ரூ. 22.56 கோடி தேவைப்படுகிறது.

கிராம மக்கள் நல்வாழ்விற்காக-அடுத்தடுத்துப் பல திட்டங்களை அறிமுகப்படுத்தி வரும் நமது முதலமைச்சர் அறிவித்த தன்னிறைவுத் திட்டத்தின் விரிவாக்கமே இத்திட்டம்!



ஆடுகள், உழவுமாடுகள், வண்டிகள், கயிறு திரிக்கும் கருவிகள், பாய்பின்ன, கரும்பு பிழிய தொழிற்கூடங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகளுக்காக 1039 பேருக்குக் கடனும், மானியமும் வாங்கித் தரப்பட்டிருக்கின்றன.

சின்னத்தடாகம் என்னுமிடத்தில் 100 ஆதிதிராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவர்களை செங்கல் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுத்தும் முகத்தான், சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டு ரூ. 8,68,000 செலவில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலை உருவாக்கப்பட்டு வருகிறது. சூலூர் என்னுமிடத்தில் 100 ஆதிதிராவிடப் பெண்கள் பயன் பெறும் வகையில் ரூ. 5.45 இலட்சம் செலவில் பாலித்தீன் பைகள் தயாரிக்கின்ற தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதைப் போலவே 525 மலை வாழுநர் குடும்பங்கள் பில்லூர் பகுதிகளில் பயனடையும் விதத்தில் 6 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு, கறவை மாடுகள் மானிய விலையில் வாங்கித் தரப்பட்டு வருகின்றன.

'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிடர் வங்கிகளில் கடன் வாங்கித் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற வகையில் ரூ. 17 இலட்சம் வங்கிகளுக்கு முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் பொருளாதார மேம்பாட்டிற்குப் பல்வேறு பணிகள் பாங்ுற ஆற்றப்பட்டு வருகின்றன. சமுதாயத்தில், பொருளாதார வளர்ச்சி மிகவும் பங்கு வகிப்பதை உணர்ந்து, உழைக்கின்ற கரங்களில், உண்மையான ஊதியம் கிடைக்க, வழிவகை காணப்பட்டு வருகிறது.

தமிழக அரசு 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு ரூ. 66 இலட்சம் வாரி வழங்கியுள்ளது. ஓராண்டில் 8,000 ஆதி திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பெரிதும் பயன்பெற்றதோடு ஆண்டு வருமானம் ரூ. 5,000 பெறுகின்ற பக்குவத்தைப் பெற்றிருக்கிறார்கள். இத்திட்டம் இம் மாவட்டத்தில் ஆண்டுதோறும் வலிவோடும், பொலிவோடும் செயல்படுவதன் மூலம் மலர்ச்சியும், பொருளாதார உயர்வும் பெருகும் என்பதில் ஐயமில்லை!

# தமிழ்நாடு செய்தித்தாள் காகிதத் தயாரிப்பு நிறுவனம்

நம் நாட்டில் குறிப்பாக பத்திரிகைக் காகிதம் பொதுவாக எழுது காகிதம் மிகவும் பற்றாக் குறையாக இருப்பது யாவரும் அறிந்ததே. பொதுமக்களிடையே ஒரு பாலமாகத் திகழும் செய்தித் தாள்களின் முக்கிய பங்கும், கல்வித் தேவைகளைப் பரப்புவதில் காகிதத்தின் முக்கிய தேவையும் குறிப்பிடத் தேவையில்லை. இப்பொருள்கள் போதிய அளவிற்குக் கிடைக்கப் பெறாமையால் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் சொல்லிலடங்கா.

காகித உற்பத்தியாளர்கள், அடிப்படை மூலப்பொருள்களுக்கு மரக்கூழையே பெரிதும் நம்பியிருந்ததே பத்திரிகைக் காகிதம், எழுது காகிதம் ஆகியவை பற்றாக்குறை ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாகும். ஆதாயம் தரத்தக்க வகையில் இத்தொழிலில் முதலீடு செய்தற்கு இத்தொழிலைத் தேர்ந்தெடுத்ததற்காக மட்டுமல்லாது வழக்கமாக காகித உற்பத்திக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தும் மரக்கூழைப் பயன்படுத்தாது இதன் உற்பத்திக்கு கரும்புச் சக்கையைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதற்கும் தமிழக அரசு பாராட்டுக்குரியது. மரக்கூழை மூலப் பொருளாகப் பயன்படுத்திக் காகித உற்பத்தி செய்பவர்கள் காலப் போக்கில் அம்முறையை அறவே விடுத்து, ஆதாயமளிக்கும் இம்முறையை அதாவது கரும்புச் சக்கையை மூலப்பொருளாகப் பயன்படுத்துவதைப் பின்பற்றுவ்ரென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது கரும்புச் சக்கை பத்திரிகைக் காகிதம், எழுது காகிதம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை. அது பெருமளவில் கழிவுப் பொருளாகவே ஒதுக்கப்படுகின்றது. செய்தித்தாள் தயாரிப்பில் கரும்புச் சக்கையைப் பயன்படுத்துவதற்குப் பின்பற்றப்படவிருக்கும் தொழில் நுட்ப உத்தி, நல்ல தரமுள்ள, சிக்கனச் செலவிலான காகிதத்தை உற்பத்தி செய்யும் மிகச் சிறந்த உத்தியெனக் கூறப்பட்டுள்ளது.

மிகவும் பற்றாக்குறையாக உள்ள பத்திரிகைக் காகிதம், எழுது காகிதம் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிலைத் தெரிந்தெடுத்து சிக்கன வகையில் தனித்தியங்க வல்லதாயும், மூலப் பொருள்கள் தங்குதடையின்றி கிடைக்கக் கூடியதாயும், அமையப் பெற்ற தொழில்நுட்ப உத்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள புகலூரில் செய்தித்தாள் காகிதம், எழுது காகிதம் தயாரிப்பதற்கான ஆலை ஒன்றைஅமைத்திட தமிழக அரசு கருதியது. அரசு துணிகர முயற்சியாக ரூ. 30 கோடி மூதலீடு செய்ய முன் வந்துள்ளது. உலக வங்கியிடமிருந்து ரூ. 80 கோடி உதவித் தொகை பெற்றுத் தந்துள்ளது. உலக வங்கியின வல்லுநர்கள், நாட்டில் பத்திரிகைக், காகிதம், எழுது காகிதத்திற்குள்ள பற்றாக்குறையைப் போக்க இது ஒரு நல்ல திட்டமாகுமென்றும் இதில் போடும் முதலீட்டிற்கு நல்ல வரவு கிட்டுமெனவும் கூறியுள்ளனர்.

இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 180 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. கடன் வசதிக்காக நாட்டிலுள்ள பெரிய நிதி நிறுவனங்கள், வணிக வங்கிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. நிதி ஏற்கெனவே வரத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை அமைத்து நிர்வகிப்பதற்கு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் கூட்டுத்துறை நிறுவனமான தமிழ்நாடு செய்தித்தாள் - காகித ஆலை நிறுவப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை, துணைத் தொழில்கள் வளர பல வாய்ப்புகளை நல்கும். இதனால் வேலை வாய்ப்பு கணிசமான அளவிற்குப் பெருகும். மேலும், இத்தொழிற்சாலை அமைந்துள்ள பின்தங்கிய பகுதியான புகலூர் மேம்பாடடைய இது பெரிதும் உதவியாக இருக்கும்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகிதம் - காகித நிறுவனம், ஆண்டுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், ஆண்டுக்கு



டன் அச்சு-எழுது காகித ற்பத்தி செய்யும் திற ரு. 50 கோடி பங்கு மூலதனத்துடன் தற்போது ரூ 70 கோடிக்கு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம், புகலூரில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ரூ. 180 கோடியாகும்.

இத்திட்டத்திற்கு, தமிழக அரசு இதுவரை ரூ. 31.50 கோடி பங்கு மூலதனமாகக் கொடுத்துள்ளது. அரசு நிறுவனங்கள் ரூ. 20 இலட்சமும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ரூபாய் 23.52 கோடியும் அளித்துள்ளன. கரும்புச் சக்கையிலிருந்து செய்தித்தாள் காகிதம் தயாரிப்பதற்கு இத் தொழிற்சாலை பின்பற்றவிருக்கும் தொழில்நுட்ப உத்திக்கு திட்ட ஆணைக்குழு ஒப்புதல் தெரிவித்துள்ளது. இந்திய அரசு, அனுமதிக் கடிதத்திற்கான செயல்திறன் கால அளவை 31-6-1982 வரை நீட்டித்துள்ளது. இந்த அனுமதிக் கடிதத்தை தொழில் உரிமமாக மாற்ற நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது. இந்திய அரசு, தொழில் அமைச்சகத்தில் தொழில் வளர்ச்சித் துறையில் தொழில் அனுமதி பெறுவதற்காகத் தலைமைச் செயலகத்திலிருந்து FC & CG விண்ணப்பத்திற்கும் நிறுவனம் இசைவு பெற்றுள்ளது.

உலக வங்கி, இத்திட்டத்திற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மூலமாக ரூ. 80 கோடி கடன் உதவி (100 மில்லியன் டாலர்) வழங்கவும் ஒப்புக்கொண்டுள்ளது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து, பங்குத் தொகையாக ரூ. 31 கோடியும், ரூ. 101.5 கோடிக்குமேற்படாமல் தவணைக் கடனும் பெறுவதற்கும் இந்திய தொழில் நிதியுதவிக் கழகத்திடமிருந்து ரூ. 6 கோடி தவணைக் கடனும் இந்திய தொழில் கடனுதவி முதலீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 6 கோடி தவணைக் கடனும் பெற இந்நிறுவனம், பொதுவான கடன் ஒப்பந்தமும் நேரடி பங்குத் தொகை அளிக்கும் ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளது.

காகிதக் கூழ் தயாரிக்கும் இயந்திரம் வழங்குவதற்காகவும் அமெரிக்காவிலுள்ள பெல்லாயிட் ஜோன்ஸ் டிவிஷன்ஸ், லண்டனிலுள்ள ரீட் இன்டர்நேஷனல் கன்சல்டன்ட்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் உடனுழைப்புடன் அடிப்படைப்பொறியியல் மற்றும் ஏனைய எல்லாப் பணிகளையும் மேற்கொள்ள இந்நிறுவனம், இலண்டனிலுள்ள திருவாளர்கள் பெல்லாயிட் வால்ம்ஸ்லே நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. திருவாளர்கள் பெல்லாயிஸ் வால்ம்ஸ்லே, ரீட் இன்டர்நேஷனல் கன்சல்டன்ஸ் நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கிணங்க, ரொக்கத் தொகை சுமார் ரூ. 18.48 கோடி செலுத்தப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்குப் பல்வேறு திட்ட ஆலோசனை நல்கிடவும், தொழில் நுட்ப உதவி நல்குவதற்கும் திருவாளர்கள் சேசசாயி பேப்பர் - போர்டு நிறுவனத்துடன் இந்நிறுவனம் ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டுள்ளது.

வன மீன் துறை, தமிழ்நாடு வனக்கழகத்திடமிருந்து கம்பெனிக்கு யூகலிப்டஸ் உயர் வகை மரம் 70,000 டன் ஒதுக்கியுள்ளது. இத்தொழிற் பிரிவின் முக்கிய மூலப் பொருளான. கரும்புச் சக்கையை வழங்குவதற்கு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்துடன் ஒப்பந்தங்கள் செய்து. கொண்டுள்ளன.

1983-84-ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்நாடு மின் வாரியத்தால் 110 கிலோ வாட்டில் 30,000 கிலோ வோல்ட் மின் சக்தியை புகலூரிலுள்ள தொழில் சாலைக்கு வழங்க இந்நிறுவனம் அவசியமான ஏற்பாடுகளைச் செய்து அரசிடமிருந்து ஆணை பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு காவிரியாற்றிலிருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் காலன் நீர் பெறவும் அரசு அனுமதித்துள்ளது. கரூர் வட்டத்தில் புகலூர், திருக்காட்டுத்துறை கிராமங்களில் 678.63 ஏக்கர் புன்செய் நிலத்தையும் இங்குள்ள 31.01 ஏக்கர் அரசுப் புறம் போக்கு நிலத்தையும் இந்த ஆலையின் வசம் எடுத்துக் கொள்ள அரசு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திற்கு சர்க்கரை ஆலைகள் விற்கும் கரும்புச் சக்கைக்கும் மேற்படி நிறுவனம் இச்சர்க்கரை ஆலைகளுக்கு விற்கும் நீராவிக்கும் விற்பனை வரியிலிருந்து அரசு விலக்களித்துள்ளது. அரசு தலைமை மின்சார ஆய்வாளரின் ஒப்புதலுக்கு உட்பட்டு 17.5 மெ. வா. திறன் கொண்ட சுழல் மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவ இந்நிறுவனத்திற்குத் தமிழ்நாடு மின் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சக்திக்கு உற்பத்தி வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

75 சதவீதம் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி செய்தித்தாள், அச்சு, எழுதுதாள் தயாரிப்பதற்கான திட்டம் எதுவும் அத்திட்டத்திற்கு இறக்குமதி செய்யப்படும் எல்லா சாதனங்களுக்கும் 30 சதவீதம் குறைந்த சுங்கத்தீர்வை விதிக்கப்படுவதற்குத் தகுதியுடையதாகும் என்று மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் வருவாய்த் துறையிலிருந்து இந்நிறுவனத்திற்குக் கடிதம் வந்துள்ளது. நம் திட்டம் இந்தக் குறைந்த இறக்குமதித் தீர்வையைப் பெறத் தகுதியுடையதாகிறது.

இந்நிறுவனம் இந்திய நிலக்கரி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன்படி 1983 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 48,000 டன் நிலக்கரியை முதற்கண் வழங்கும். மொத்தத்தில் 190000 டன் நிலக்கரியை அந்நிறுவனம் வழங்கும். 1983 ஜூன் திங்களிலிருந்து ஆண்டுக்கு 150000 டன் நிலக்கரி வழங்குவதற்கு சிங்கரேனி நிலக்கரிச் சுரங்க நிறுவனம் இந்நிறுவனத்திற்கு உறுதியளித்துள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் 1983-ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுக்கு 60000 டன் சாதாரண கரித்தூள் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளது. ஆகவே இத்திட்டத்திற்குத் தேவைப்படும் எரிபொருளுக்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆலை 3 ஆண்டுகளுக்குள் நிறுவி, செயல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



தமிழைத் தக்க முறையில் பயன்படுத்தும் பணியில் அரசுத் துறையினர் மட்டுமல்ல வேறுபல துறைகளைச் சேர்ந்தவர்களும் மும்முரமாக ஈடுபட்டிருப்பது தமிழுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

பேரறிஞர் [illegible]

# நினைவில் நிற்கும் திருபுவனம்

கூடின உழைப்பு, கலைத்திறன் ஆகியவற்றின் வெளிப்பாடாய், பரம்பரையான அழகும், பயனும் நிறைந்த கைத்தறித் துணிகளின் நிலைக்களனாய் திகழும் திருபுவனம் கைத்தறி பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் வெள்ளி விழாவினைப் பெருமிதத்துடன் கொண்டாடுகிறது. இச்சங்கம் கடந்த 25 ஆண்டுகளாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டுவரும் இச் சங்கத்தைச் சேர்ந்த திரு எம். ஆர். சுந்தரராமன் தனது இளமைக் காலத்தை திரும்பிப் பார்க்கிறார். கைத்தறி உதவி ஆளாக மாதம் ஐந்து ரூபாய் கூலிவாங்கிய அந்த நாட்கள் அவருக்கு நினைவில் வருகின்றன. இன்றைக்கு ,தான் நெய்கின்ற சேலைகளின் ரகங்களை ஒட்டி மாதம் 300 முதல் 500 ரூபாய் வரை அவர் சம்பாதிக்கிறார். திரு.டி. என். குமாரசுவாமி ,திரு எல். எஸ். சேஷய்யர், திரு எம்.எல். ஐயன்சுவாமி ஆகியோரின் அனுபவம் இதுதான். இது அவர்களுடைய பரம்பரைத்தொழில். ஒரு தனித்தறியில் ஒருவர் மூன்று ஆறு 'கெஜ' சேலைகளை நெய்ய முடிந்தால், மாதம் 300 ரூபாய் சம்பாதிக்க முடியும். மூன்று பெரியவர்கள் கொண்ட ஒரு குடும்பத்தில் இரண்டு தறி இருந்தால் கூட, ஒழுங்காக வேலை கிடைத்தால் மாதம் 600 ரூபாய் சம்பாதிக்கமுடியும்.

மாதத்தில் எப்பொழுதும் வேலை என்பது 1955-ம் ஆண்டு திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டதிலிருந்து உறுதியாகிவிட்டது. தஞ்சை மாவட்டம் திருபுவனம் நகரில் வாழும் 15,000 மக்களில் பெரும்பாலோர் பரம்பரையாக நெசவுத் தொழில் செய்யும் சௌராஷ்டிரா சமூகத்தைச்சேர்ந்தவர்கள் .திருபுவனம் கைத்தறி நெசவாளர்களின் திறனை வெளிநாடுகள் கூட பாராட்டியுள்ளன. இவர்களின் கலைத்திறன் மிக்க டிசைன்களை பட்டுச் சேலைகளின் தரத்தை பிரிட்டிஷ் அரசி எலிபெத், ரஷ்ய அதிபர் பிரஷ்னேவ் ஆகியோர் பாராட்டியுள்ளனர். இன்றைய தினம் இந்தக் கூட்டுறவு சங்கத்தில் 877 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இந்த சங்கத்தின்கீழ் 790 தறிகள் உள்ளன. 500 ரூபாய் முதல் 6000 ரூபாய் விலையுள்ள சேலைகளை இவர்கள் நெய்கிறார்கள். இந்த பட்டுச்சேலைகளும் பிற நாட்டு துணிகளும் 75 சதவிகிதம் அங்கேயே விற்பனையாகி விடுகின்றன. எஞ்சியவை தமிழ்நாட்டில் பரவலாக அமைக்கப்பட்டுள்ள எட்டுக்கிளை விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தச்சங்கத்தின் சேலைகள் மற்றும் துணிகளில் 96 சதவிகிதம் நுகர்வோர்க்கு நேரிடையாக விற்கப்படுகின்றன.



சங்கத்தின் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து ஒழுங்காக வேலை கிடைக்க உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. மாதம் 300 முதல் 500 ரூபாய் வரை அவர்கள் சம்பாதிக்கிறார்கள். இது தனியார் அளிக்கும் சம்பளத்தைவிட 30 சதவிகிதம் அதிகமாகும். சங்கத்தின் லாபத்தில் 40 சதவிகிதம் போனஸாக வழங்கப்படுகிறது. 1980-81ம் ஆண்டில் ஒவ்வொரு உறுப்பினரின் ஊதியத்திலும் ஒரு ரூபாய்க்கு 21•5 பைசா வீதம் போனஸ் வழங்கப்பட்டது. குடும்பத்தில் ஏற்படும் எதிர்பாராத செலவுகளைச் சமாளிப்பதற்காக கடன் உதவியும் அளிக்கப்படுகிறது.

உறுப்பினர்களின் அன்றாட பணிகளில் உதவி செய்ய சங்கம் பெரிதும் அக்கறை காட்டி வருகிறது. குடும்பத்தில் திருமணம் நடந்தால் சேலைவாங்குவற்கு 300 ரூபாய் கடனுதவி அளிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் சேமிப்பு தொகையிலிருந்து 75 சதவிகிதத்தை பெற்றுக்கொண்டு அதை 24 சம அளவிலான தவணைகள் மூலம் திருப்பிச்செலுத்தலாம். உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு 5-வது வகுப்பு வரை சீருடைகள் அளிக்கப்படுகின்றன. 6-வது வகுப்பிலிருந்து கல்லூரி கல்வி முடியும் வரை வருடந்தோறும் உதவித்தொகைகள் அளிக்கப்படுகின்றன. குடும்பநல திட்டத்தை ஏற்றுக்கொண்டு கருத்தடை செய்துகொள்வோருக்கு 50 ரூபாய் வரை உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

லண்டனில் நடந்த இந்தியா விழாவின்போது திருபுவனம் சங்கத்தின் கைத்தறிப்பட்டுச்சேலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அதன் வண்ணத்திறன் பிரிட்டிஷ் மக்களின் கண்ணைக் கவர்ந்தது.

ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி போன்ற உயர் லட்சியங்களை நோக்கமாகக்கொண்டு சேவைபுரிவதில் திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்சங்கம் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டும் ஓர் அமைப்பாகத் திகழ்கிறது. தங்களுடைய வளமான பொருளாதாரத்தின் பின்பலமாக திகழும் இந்தச்சங்கத்தைப்பற்றி திருபுவனம் நெசவாளர் சமுதாயம் நியாயமாகவே பெருமைப்பட்டுக்கொள்ளலாம்.

# கோவை மாவட்டத்தில் ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டுப் பணிகள்

கே. மலைச்சாமி, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கோயம்புத்தூர்.

"பிறப்பால் அனைவரும் ஒன்றே' என மதங்களும், தத்துவங்களும் உணர்த்தி நிற்கின்றன. அறிவால் ஆற்றலால் ஒரு மனிதனின் உயர்வு கணக்கிடப்படும் எனப்பாண்டியன் நெடுஞ்செழியன் தனது புறநானூற்று வரிகளால் புகன்றான். 'சாதிகள் இரண்டொழிய வேறில்லை' என ஆத்தி சூடியில் ஔவையும், 'சாதிகள் இல்லையடி பாப்பா' என பாரதியும், சாதி வேறுபாடு எனும் சாக்காட்டை வேரறுக்க வேண்டுமென பாரதிதாசனும் பாடிக்காட்டினர்.

இறைவனின் குழந்தை ஆதி திராவிடர் என்று அண்ணல் காந்தியடிகளும், சாதி வேறுபாட்டில் எழுந்துவிட்ட பிரிவினை எண்ணத்தை ஒழிப்பதற்கு, ஆதி திராவிடர் நம் சகோதரர் என்று தந்தை பெரியாரும், தீண்டாமையை ஒழித்து அனைவரும் ஒன்றே என்று காட்டிட் கலப்புத் திருமணமே பொருந்தும் எனப் பேரறிஞர் அண்ணாவும் எடுத்துச் சொல்லி நாட்டில் கடமையாற்றினர். சட்ட வடிவில் பாதுகாப்பும், சுதந்திரமும் ஆதிதிராவிடர்களுக்கு வழங்குவதற்கு டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பெரிதும் பாடுபட்டுப் பெற்றுத் தந்தார்.

அறிவாலும், ஆற்றலாலும், செல்வ மேம்பாட்டாலும் ஆதி திராவிடர்களின் வாழ்வில் மேன்மையையும், சமுதாயத்தில் மதிப்பையும் உருவாக்கித் தருவதற்குத் தமிழக அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏராளமான துவக்கப் பள்ளிகளும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளும், உறைவிடப் பள்ளிகளும், தங்கிப் படிப்பதற்கு உணவு விடுதிகளும் உருவாக்கித் தரப்பட்டதோடு, கல்லூரிகளிலும் படிப்பதற்கு ஏற்ற வசதிகளும், வாய்ப்புகளும் மிகுதியாக உருவாக்கித் தரப்பட்டுள்ளன.

கலை, இலக்கியம், அறிவியல், வரலாறு, பூகோளம், வாணியல், பொறியியல், மருத்துவ இயல், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல்துறைப் பணி போன்ற பல்வேறு கல்விகளைப் பெறுவதற்குத் தகுந்தவாய்ப்பும், வசதியும், பெருக்கித் தரப்பட்டு உள்ளன. சுகாதார வசதி, வீட்டு வசதி, சாலை வசதி, போக்கு வரத்து வசதி, குடிநீர் வசதி, வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு வசதிகள் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு உருவாக்கித் தரப்பட்டு வருகின்றன.

தீண்டாமையை ஒழிக்கவும், கலப்புமணத்தை வரவேற்கவும், பல சிறப்புத் திட்டங்கள் பாங்குற நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன, ஆதி திராவிடர் என்போர் தாழ்த்தப்பட்டவர் அல்ல, அவர்கள் ஆண்டவனின் குழந்தைகள் என்ற உயர்வுக்குச் சொந்தக்காரர்களென, தலை நிமிர்ந்து தரணியில் பறைசாற்ற வேண்டுமென்று தமிழக முதல்வர் நாட்டிற்கு எடுத்துரைத்து, பல்வேறு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றித் தந்திட வழிவகை செய்துள்ளார். அறிவும் ஆற்றலும் பெற்று, உழைப்புச் சக்தியை தன் கையிலே வைத்துக் கொண்டு இருக்கிற கிராமப் புறத்திலிருக்கும் ஆதி திராவிடப் பெருமக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வகையான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் 60,354 குடும்பத்தைச் சார்ந்த 4,60,000 ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்களும், 4,000 குடும்பங்களைச் சார்ந்த 25,000 மலைவாழுநர்களும் வாழ்வதைக் கணக்கில் கொண்டு வேளாண்மை, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, கறவை மாடுகள் வளர்ப்பு, பட்டுவளர்ப்பு, நூற்புமையங்கள், கல் உடைக்கும் தொழில், பாய், கூடை பின்னும் தொழில், சிறு தொழில்கள் ஆகியவற்றிற்கான சாத்தியக் கூறுகள் முழுமையாக ஆராயப்பட்டு, அன்றாட வருவாயைப் பெருக்குவதற்கு, 'தாட்கோ' என்ற நிறுவனம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்லார்புரம் என்ற கிராமத்தில் 96 நிலமற்ற ஏழை ஆதி திராவிடக் குடும்பங்கள் பயனடையும் விதத்தில் 145 ஏக்கர் நிலப் பரப்பு அவர்களுக்கு உடைமை ஆக்கப்பட்டு அந்த நிலங்களுக்கு ரூ. 9.56 இலட்சம் செலவில் நீர்ப் பாசன வசதி உருவாக்கித் தரப் பட்டிருக்கிறது. இதைப் போலவே பெத்திக்குட்டை என்னும் கிராமத்தில் 146 ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த குடும்பத்தினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகிற வகையில் அவர்களுக்கு 276 ஏக்கர் நிலம் உடைமையாக்கப்பட்டதோடு ரூ. 15 இலட்சம் செலவில் நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட்டு இருக்கிறது. இது தவிர அவர்களுக்கு வீடுகள், சாலை வசதிகள், குடிநீர் வசதிகளும் உருவாக்கித் தரப்பட்டு உள்ளன. மேலும் வருமானத்தைப் பெருக்கித் தரும் வகையில் பட்டு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பால்வளப் பெருக்கம் ஆகிய திட்டங்களின் மூலம் அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டு, கடனும் மானியமும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏறத்தாழ ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் கூட்டுறவு துறையின் மூலம் 4691 குடும்பங்களும், வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 252 குடும்பங்களும், தனி நபர் பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 1039 குடும்பங்களும், சுய வேலைவாய்ப்புப் பயிற்சி திட்டத்தின் கீழ் 2030 குடும்பங்களும் ஓராண்டில் பயன் பெற்றிருக்கின்றன.

பால் வளப் பெருக்கத்தில் பங்கு கொள்ளும் வகையில் 268 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 4691 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அவர்களுக்குக் கறவை மாடுகள் மானிய விலையில் வாங்கித்தரப்பட்டுஇருக்கின்றன. இவர்களுக்காகவே 21 பால் உற்பத்தியாளர்கூட்டுறவுச்சங்கங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஓரளவு வருவாயைப் பெற்றுத் திகழ்கிறார்கள்.



# வேகமாய் வளரும் வில்லிவாக்கம் அரும்பாக்கம்!







ஓலைக் குடிசையில் ஒண்டிக் கிடந்தவர்கள்—

காற்று, மழை என்று கஷ்டப்பட்டவர்கள்—

சுகாதார வசதியின்றிச் சோம்பிக் கிடந்தவர்கள்—

இவர்களுக்கெல்லாம் விடிவு காலம் பிறந்திருக்கிறது!

ஆம். சிங்காரச் சென்னைக்குச் செழிப்பூட்டும் வகையிலே, அரசு பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றுள் ஒன்று, ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவது என்பது நமக்குத் தெரியும்.

சுகாதாரமும், நல்ல காற்றோட்டமும், அமைதியான சூழ்நிலையும் உள்ள நகர்ப்பகுதி மற்றும் புறநகர்ப் பகுதிகளிலே- அல்லல்படுகின்ற ஏழை எளியவர்களுக்கு, அடுக்கு மாடி வீடுகளைக் கட்டி, துயர் துடைக்கின்ற துரிதப் பணிகளிலே தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவை பெரும் பணியாற்றி வருவதை நாம் பார்க்கின்றோம்.

**வாழ்க்கைத் தரம் மேம்பட....**

அடித்தளத்து மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட, அரசு எடுத்து வரும் அசுர வேகப் பணியினை நேரில் காணும் நல் வாய்ப்பு அண்மையில் ஏற்பட்டது.

—பி. வி. கிரி



மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களுடன் நிருபர்கள்

ஜூலை 5ந் தேதி அன்று பத்திரிகை நிருபர்கள் குழுவினர் வில்லிவாக்கம், அரும்பாக்கம் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களுடன் பார்வையிட்டார்கள்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வேலூர் நாராயணன், தலைமைப் பொறியாளர் திருமதி மே. ஜார்ஜ், மேற்பார்வைப் பொறியாளர்கள் திரு எஸ். குமரேசன், திரு டி. ஜெகதீசன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைமை வடிவமைப்பாளர் திரு பிரகாசம் ஆகியோர் இந்தத் திட்டங்கள் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினார்கள்.

சென்னை நகர, ஏழை எளியவர்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது என்றும், இந்தத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் வீட்டுமனைகளில் 75 சதவிகிதம் மிகவும் ஏழைகளுக்கு வழங்கப்படுகிறது என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

வீட்டு மனைகள் ஏழைகளுக்கு மிகவும் குறைந்த விலையில் தரப்படுகிறது. இதனால் ஏற்படும் இழப்பு மற்றப் பிரிவினருக்குத் தரப்படும் மனைகளின் விலைகளிலிருந்து ஈடுகட்டப்படுகிறது என்ற கருத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

## வில்லிவாக்கத்தில்...

வில்லிவாக்கம் பகுதியில் முதலாவது கட்ட திட்டத்தின் கீழ் 3750 மனைகள் மேம்பாடு செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கத் தற்போது தயாராக உள்ளன.

இந்த மேம்பாடு செய்யப்பட்ட மனைகளில் பல வகைகள் உள்ளன. மாதம் 150 ரூபாய் முதல் 350 ரூபாய் வருமானம் உள்ள ஏழை எளியவர்களுக்கு 429 அல்லது 500 சதுர அடி மனையில் குளியலறை, கழிப்பறை மற்றும் பாதி அளவு கட்டப்பட்ட அறைகள் கட்டப்பட்டு வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு வீட்டு மனைப் பகுதிக்கும் தனித்தனியான குடிநீர்க் குழாய் இணைப்பு வசதி, கழிவுநீர் வெளியேற்ற வசதி ஆகியவை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வில்லிவாக்கம் முதல் கட்டத் திட்டப் பணி 55.29 ஹெக்டர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

## பல்வேறு வசதிகள்

இந்தப் பகுதியில் நல்ல சாலைகள், தெரு விளக்குகள், பள்ளிகள், மருத்துவமனை வசதிகள் ஆகியவற்றுடன் சிறு தொழிற்சாலைகளை நடத்த இட வசதியும் செய்து தரப்படுகின்றன. இங்கு சிறு தொழில்களை நடத்த முன் வருபவர்கள், இந்தக் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் மக்கள் மொத்த வேலை வாய்ப்பில் 10 சதவிகிதத்துக்காவது சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இடங்கள் தரப்படுகின்றன. குடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அங்காடி வசதியும் இங்கு செய்யப்படவுள்ளது.

இந்தக் குடியிருப்புவளாகத்தில் ஓர் அழகிய உயர்நிலைப் பள்ளி கட்டப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். 3 ஏக்கர் நிலத்தில், 8 ஆயிரம் சதுர அடியில் கட்டப்பட்டுள்ள இந்தப் பள்ளியின் மதிப்பு ரூ. 5½ இலட்சம். இது தவிர இரண்டு துவக்கப் பள்ளிகளும் இங்கு உள்ளன.

வில்லிவாக்கம் பகுதியில் கட்டப்பட்டுள்ள — கட்டப்படுவதற்குத் தயாராக உள்ள நிலங்கள் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம். அதன்படி வீடு-வீட்டுக்கான மனை ஏ.பி.சி.டி.இ.எப். என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள், குறைந்த வருமானமுள்ள அடித்தளத்து மக்களுக்கானவையும் அடங்கும்.

வில்லிவாக்கம் பகுதிக் குடியிருப்பு ஒன்றில் மாண்புமிகு அமைச்சரும், வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வேலூர் நாராயணன் அவர்களும்...





வில்லிவாக்கத்தில் 'சி' பிரிவு வீடுகள்

## வீடு பெறுவது எப்படி?

பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை எளியவர்கள் சொந்தத்தில் வீடு பெறுவது எப்படி?

அவர்களுக்காக 20 ஆண்டுத் தவணையில் 3 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவை :

(1) மாதம் ரூ. 30 விதம் செலுத்தி ரூ. 3030 மதிப்புள்ள வீட்டைப பெறுதல்.

(2) மாதம் ரூ. 80 விதம் செலுத்தி ரூ. 8080 மதிப்புள்ள வீட்டைப் பெறுதல்.

(3) மாதம் ரூ. 150 விதம் செலுத்தி ரூ. 15,152 மதிப்புள்ள வீட்டைப் பெறுதல்.

வீட்டில் குடியிருந்து கொண்டே மாதந்தோறும் எளிய தவணை மூலம் பணம் செலுத்தி வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்ளும் அருமையான திட்டமாகும் இது. சாதாரணமாக. இந்தத் தவணைத் தொகை வெளியில் செலுத்தும் வீட்டு வாடகையைவிடக் குறைவானது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

## குடியிருப்பு சொந்தமாகும்!

இந்தக் குடியிருப்புகள் ஏழை எளியவர்களுக்கு மிகக் குறைந்த மாதத் தவணைகள் மூலம் சொந்தமாக்கப்படுகின்றன. மொத்தத் தவணையின் அளவு 25 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை உள்ளன. இந்த மாதத் தவணைகளை 20 ஆண்டுகளில் செலுத்தினால் அவர்களுக்கு அந்தக் குடியிருப்பு சொந்தமாகி விடும். தவிர, மேம்படுத்தப்பட்ட வீட்டுமனை பெறும் ஏழை எளியவர்கள், தங்கள் விருப்பம் போல் வீடுகளைக் கட்டிக் கொள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் குறைந்த வட்டியில் 3000 ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது. வீட்டு வசதி நிதி நிறுவனக் கடனும் இதே அளவுக்கு அவர்களால் பெறமுடியும்.

குறைந்த வருமானம் உள்ள ஏழை எளியவர்களுக்காக, ஏ.பி.சி. என்று மூன்றுவகையான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 'சி' பிரிவு வீடு சற்று வசதியானதாக உள்ளது. மொத்தம் 223 வீடுகள் உள்ளன. 500 சதுர அடி நிலத்தில், 300 சதுர அடி பரப்பளவில் இந்த வீடு கட்டப்பட்டிருக்கிறது. மீதியுள்ள இடத்தில் குடி வருபவர்களே விருப்பம் போல் கட்டிக் கொள்ளலாம். மாதம் ரூ. 150 தவணையில், 20 ஆண்டுகளாகச் செலுத்தினால், இந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடும். இந்த வீட்டை, அமைச்சர் அவர்களோடு நாமும் சுற்றிப் பார்க்கிறோம். குடிநீர், தெரு விளக்கு, பள்ளி, மருத்துவமனை இப்படி எல்லா வசதிகளும் நிறைந்த இடத்தில் உள்ள இந்த வீட்டுக்குக் குடிவருபவர்கள் கொடுத்து வைத்தவர்கள்!

அழகிய உயர்நிலைப் பள்ளி



கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஒரு தோற்றம்





கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பார்வையிடுகிறார்கள்

## பிற பகுதிகளிலும்...

ஏழை எளியவர்களுக்கு இவ்வாறு குடியிருப்பு வசதி செய்து தருவதற்கு உலக வங்கி நிதி உதவியைப் பெற்று, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் உதவியோடு இந்த வீட்டுமனை மற்றும் சேவைத் திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் குடியிருப்பு மனைகள் பெற்றவர்கள் செலுத்தும் மாதத் தவணைத் தொகைகள், ஒரு சுழலும் நிதியாகச் சேமிக்கப்பட்டு அந்த நிதியைக் கொண்டு இதுபோன்ற திட்டங்களைச் சென்னை நகரில் மற்ற பகுதிகளிலும் நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குடியிருப்புகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது, அமைச்சர் அவாகள், பக்கத்தில் உள்ள ஒரு தொழிற்கூடத்துக்குள் செல்கிறார். அது, மோட்டார் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை. அரசுத் தொழிற்பேட்டையான அந்த இடத்தில் பல்வேறு தொழிற்கூடங்கள் உள்ளன. அமைச்சர் அவர்கள் தொழில் சம்பந்தமாக அங்குள்ள தொழிலாளர்களிடம் விசாரிக்கிறார்.

## முகப்பேர், நெற்குன்றத்தில்...

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டத்தில் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் 12537 குடும்பங்களுக்கு வீட்டுவசதி 15 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இது முடிந்தவுடன், இரண்டாவது கட்டப் பணிகள் முகப்பேர், நெற்குன்றம் ஆகிய இடங்களில் நிறைவேற்றப்படும். இந்தப் பணி 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்படும்.

குடியிருப்புக்குச் சற்றுத் தொலைவில், மிகப் பெரிய ஏரி ஒன்று தென்படுகிறது. அந்த இடத்தைப் போய்ப் டார்வையிடுகிறோம்.

மிகப் பிரமாண்டமான அளவில், ரூ. 32 இலட்சம் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அங்கே அமைக்கப்பட்டு வருகிறது.

வில்லிவாக்கம் திட்டத்தின் கீழ் உள்ள குடியிருப்புப் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, ஓட்டேரி நல்லாவுடன் சேர்த்து வெளியேற்ற அமைக்கப்பட்டு வரும் திட்டமே இது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றிக் கூறுகையில்:

''இந்தக் கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் பணியின்போது கிடைக்கும் வாயுவை, எரிசக்திப் பொருளாகப் பயன்படுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்படும்'' என்றார்.

**வில்லிவாக்கத்தில் உருவாகிவரும் மருந்தகம்**





அழகிய குடியிருப்புகளின் ஒரு தோற்றம்

அவர் நிருபர்களிடம் மேலும் சில தகவல்களைத் தெரிவித்தார்:

"சென்னை நகரைப் பொறுத்தவரை குடிசைப் பகுதிகள் நகரின் அழகைக்கெடுக்கின்றன. அத்துடன் அசுத்தங்களை ஏற்படுத்தி சுகாதாரக் கேடுகளையும் உண்டாக்குகின்றன. எங்கள் ஆட்சியில், சென்னையில் இருந்து அப்புறப்படுத்தும் குடிசைவாசிகளைக் கொண்டே புதிய நகரம் அமைக்க முடிவு செய்தோம். அதன்படி அவர்களை அப்புறப்படுத்தும் முன்பே வெவ்வேறு திட்டங்களின் மூலம் முன்கூட்டியே வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம்.

''நாட்டுப்புற நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்துக்கும் குறைவாக உள்ள மக்கள் தொகை உள்ள நகரங்களை மேம்படுத்தும் திட்டம் ஒன்றை மத்திய அரசு உதவியுடன், தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 23 நகரங்கள் மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தாலும், விரைவில் 30 நகரங்கள் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கும் செலவுத் தொகையில் பாதியை மத்திய அரசம், மீதியை மாநில அரசும் ஏற்கவிருக்கிறது.

தற்போது சென்னையிலும் சில குறிப்பிட்ட மாவட்டத் தலை நகரங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிசை மாற்றுத் திட்டம், தாலுகா நகரங்களுக்கும் விரைவில் விரிவுபடுத்தப்படும், இது குறித்து அரசு தற்போது தீவிரமாகச் சிந்தித்து வருகிறது. இந்தக் குடிசை மாற்றுத் திட்டங்கள் அப்பகுதிகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

''சென்னையை ஒட்டியுள்ள கிராமப்புறப் பகுதிகளில், ஒரு சில இடங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் வசதி இல்லாத ஏழைகளுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். குடிநீர், மின்சார வசதி, கடைகள், சிறு தொழிற்கூடம், பள்ளி, மருத்துவமனை ஆகிய வசதிகளும் இந்தப் பகுதிகளில் செய்யப்படும். இந்த வீடுகள் குறைந்த விலையில், சுலபமான தவணைகளில் குடிசைவாசிகளுக்கு வழங்கப்படும்.

''சென்னை நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வீட்டு மனை மற்றும் சேவைத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுவருவதைப் பார்வையிட்டு அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா போன்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்தவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.''

## அரும்பாக்கத்தில்...

வில்லிவாக்கத்திலிருந்து நேரே அரும்பாக்கத்துக்குச் செல்கிறோம்.

அழகிய குடியிருப்புகள் நம்மைக் கவர்கின்றன.

சாலை. தெரு விளக்கு, குடிதண்ணீர். பள்ளி, கடைகள், மருத்துவமனைகள். சமூகக் கூடம், பேருந்து இப்படி நல்ல பல வசதிகளுக்கிடையே, இந்தக் குடியிருப்புகள் காட்சியளிக்கின்றன. 34.2 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இத்திட்டத்தின் மதிப்பீடு 184.24 இலட்சமாகும்.

இங்கும் ஏ, பி, சி, டி, இ. எப். என்னும் ஆறு வகையான வீடுகள், வீட்டுக்கான மனைகள் உள்ளன. குறைந்த வருமானம் உள்ள ஏழை மக்களுக்கான வீடுகளும் இவற்றுள் அடங்கும்.

ஒரு தெருவில் குடியிருப்புகளுக்கு மத்தியில் குடிசை ஒன்று தென்பட்டது. அதைக் கண்ணுற்ற அமைச்சர் அவர்கள், குடிசைகளால் சுகாதாரக் கேடு ஏற்படும் என்றும், அது நகரின் அழகைக் கெடுக்கும் என்றும் கூறி குடிசையை அகற்றிவிடும்படி கூறினார்.

அடுத்து, இன்னொரு வீட்டுக்குப் போனார். நிருபர்களும் அவரைப் பின்தொடர்ந்தனர். அவ்வீட்டுப் பெண்மணியிடம் குடும்பநல அவசியம்பற்றி எடுத்துக் கூறினார். சாலைப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் கடைகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படியும் உடன் வந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பிறகு அமைச்சர் அவர்கள் மக்களிடம் பேசும்போது, "வீட்டைப் போல வீதியையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் இடம். நகரின் அழகைக் கெடுக்கின்ற வகையில் எந்தச் செயலையும் செய்ய வேண்டாம். எல்லாவற்றுக்கும் மேலாக நீங்கள் சிறு குடும்ப நெறியைப் பின்பற்ற வேண்டும். அளவாகப் பெற்று வளமாக வாழ வேண்டும்!'' என்று கேட்டுக் கொண்டார்.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்துகின்ற வகையிலே, அவர்களுக்கு ஏற்ற குடியிருப்புகளைக் கொண்ட வில்லிவாக்கம், அரும்பாக்கம் பகுதிகள் வேகமாய் வளர்ந்து வருகிறதென்றால், அது முற்றிலும் உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை!

கட்டப் பட்டுள்ள கழிவறை, குளியலறைகள்





# தென்னை வளர்ப்பு அனுபவம்

அ. அருணாசலம்
வெடியரசம்பாளையம்
பள்ளிப் பாளையம் வட்டாரம்

பள்ளிப்பாளையம் வட்டாரத்தை சார்ந்த வெடியரசம் பாளையம் கிராமத்தில் உள்ள எனது வீட்டு சுற்றுப்புறத்தில் 18 தென்னை மரங்கள் சுமார் 10 வருடங்களாக மகசூல் ஏதும் தராமல் வளர்ச்சி குன்றி காணப்பட்டு வந்தன. இதைக் கண்டு மனம் வருந்தி, இம்மரங்களை பலன் தரச்செய்வதற்கு ஏதேனும் தொழில் நுட்பமான முறைகளை கையாளுவதால் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என அறிந்து கொள்ள நான் பள்ளிப்பாளையம் விவசாயப் பிரிவு அலுவலர்களை நாடினேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க, விவசாய அலுவலர் கல்வை உர ஆய்வாளர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோர்கள் கடந்த 1980 ஆகஸ்டு முதல் வாரத்தில் எனது தென்னை மரங்களை பார்வையிட்டு உரம் இடவேண்டிய அவசியத்தை விளக்கிக் கூறினார்கள். அத்துடன் தென்னை மரங்களில் கருந்தலை வண்டுகள் தாக்கியுள்ளது எனவும், இதற்கும் பாதுகாப்பு முறைகள் கையாள வேண்டும் எனவும் கூறினார்கள். மேலும் பணிகளை உடனிருந்து செய்து தருவதாகவும் கூறினார்கள். அவர்களின் ஆலோசனைகளின்படி தென்னை மரம் ஒன்றுக்கு $\frac{1}{2}$ கிலோ யூரியா ஒரு கிலோ சூப்பர் பாஸ்பேட் ஒரு கிலோ பொட்டாஷ் மற்றும் மைக்ரோ நியுட்டிரியண்ட் மிக்சர் $\frac{1}{2}$ கிலோ என்ற விகிதத்தில் வருடத்திற்கு இருமுறையாக உரம் இடவேண்டும் என்ற கருத்தினைத் தெரிந்து கொண்டேன். முதற்கட்டமாக உரம் வைத்தல் பணி 1980 ஆகஸ்டு 22ஆம் தேதியன்று வேளாண் துறை அலுவலர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. தென்னை மரத்தின் அடிப்பாகத்தில் தண்டிலிருந்து 3 அடி தள்ளி $\frac{1}{2}$ வட்டத்தில் ஒரு அடி அகலம் ஒரு ஆழம் என்ற அளவில் குழிகள் வெட்டப்பட்டு, குழிகளில் பசுந்தழைகளை $\frac{1}{2}$ அடிஉயரத்திற்கு ஒரு லேயராகப் பரவலாக இட்டு அதன் மேல் $\frac{1}{2}$ கிலோ யூரியா ஒரு கிலோ சூப்பர் பாஸ்பேட் ஒரு கிலோ பொட்டாசு ஆகியவற்றையும் பரவலாகப் போட்டு பிறகு $\frac{1}{2}$ கிலோ மைக்ரோ நியுட்டியண்ட் மிக்சர் இட்டு மண்ணை அணைத்து, குழியை மூடி நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. இவ்வாறு 18 மரங்களுக்கு உரம் வைத்தல் பணியினையும் செவ்வனே செய்து முடித்து, கருந்தலை வண்டு உபாதையிலிருந்து மரங்களைப்பாதுகாப்பு செய்திட கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மரத்தின் அடிபாகத்திலிருந்து 3 அடி உயரத்தில் $\frac{1}{2}$ அங்குலம் ஆக உபயோகப்படுத்தி மேலிருந்து உட்புறம் சாய்வாக ஆறு அங்குலம் ஆழத்தில் துவாரம் போடப்பட்டது. இந்த துவாரத்தில் கண்ணாடிக் குழல் செலுத்தி அதன் வழியாக ஒரு மரத்திற்கு 4 மில்லி என்ற அளவில் மானாக்ரோட்டாஃபாஸ் மருந்து ஊசி மூலம்(சிரின்ஜ்)செலுத்தினார்கள்.

அந்த துவாரத்தை உடனடியாக சாணி உபயோகப்படுத்தி அடைத்து விட்டார்கள். ஒரு வாரம் கழித்து அந்த துவாரங்களை சிமெண்ட் பிளாஸ்டர் செய்து அடைத்து விட்டார்கள். அவர்கள் கூறியபடி உரமிட்டு ஒரு வாரங் காலத்திற்குத் தினசரி ஒரு வேளை தண்ணீர் பாய்ச்சப் பட்டது.

பிறகு வாரத்தில் இருமுறை தண்ணீர் பாய்ச்சி வந்தேன். இவ்வாறு உரமிட்டு பாதுகாப்பு செய்தலுக்கு எனக்கு ஏற்பட்ட செலவினம், மரம் ஒன்றுக்கு ரூபாய் 5 ஆகிவிட்டது. இவ்வாறு உரமிட்டுப் பாதுகாப்பு செய்த பிறகு சரியாக 4 மாதங்கள் முடிவுற்றவுடன், தென்னை மரங்களில் புதிதாகப் பாளைகள் உருவாகி உள்ளது கண்டு மனம் நெகிழ்ந்தேன். இதிலிருந்து பூக்கள் லேசாக கீழே விழுவதையும் கண்டேன். இத்தகவலை காலம் தாழ்த்தாமல் விவசாயப்பிரிவு அலுவலர்களிடம் கூறினேன். அவர்கள் என்னிடம் 100 மில்லி பிளானபிக்ஸ் மருந்து வாங்கி வரும்படி கூறினார்கள். அதன்படி மருந்து வாங்கி தகவல் தெரிவித்தேன்.

ஒரு மரத்திற்கு 22 $\frac{1}{2}$ லிட்டர் தண்ணீரில் 5 மில்லி பிளானபிக்ஸ் மருந்து வீதம் கலந்து தென்னை மரத்தின் மேற் பகுதியில் பாளைகளின் மீதும் தென்னைக் குரும்பைகள், பூக்கள் ஆகியவைகளின் மீதும் நன்கு நனையும் வண்ணம் காலை நேரத்தில் மருந்து தெளிக்க வட்டார வேளாண் துறை அலுவலர்கள் உடனிருந்து உதவினார்கள். இந்த மருந்து தெளித்த பின் பூக்கள் உதிர்வது நின்று விட்டது. மரத்தில் சராசரியாக 30-40 காய்கள் வரையிலும் மகசூல் கிடைத்துள்ளது. மேலும் வட்டார வேளாண் துறை அலுவலர்களின் ஆலோசனையின்படி நான் ஏற்கனவே உரமிட்டது போல் 2-வது முறையாக மரம் ஒன்றுக்கு $\frac{1}{2}$ கிலோ யூரியா 1 கிலோ சூப்பர் பாஸ்பெட் 1 கிலோ பொட்டாஷ்ஆகியவைகளை

மரத்தின் மறு அரை வட்டப் பகுதியில் குழி வெட்டி உரம் வைத்து பிறகு $\frac{1}{2}$ கிலோ மைக்ரோ நியுட்ரியண்ட் மிக்சரை வைத்து மண் போட்டு குழியை மூடி தண்ணீர் பாய்ச்சப் பட்டது. இதில் மொத்தம் மரம் ஒன்றுக்கு ஒரு ஆண்டில் செலவினம் ரூபாய் 10 மட்டுமே. ஆனால் இதுவரையிலும் மலட்டு தன்மையிலிருந்து வந்த எனது தென்னை மரங்கள் சராசரி யாக குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு 30 காய்கள் மகசூல் தந்த வண்ணம் இப்போது காணப்படுகிறது என்ற எனது சொந்த அனுபவத்தை நான் கூறுகிறேன். வேளாண் துறையினரால் பரிந்துரை செய்யப்படும் முறைகளை செவ்வனே கடைப்பிடித்தால் நற்பலன் கிடைப்பது உறுதி.

## அனுபவம் புதுமை

# வரலட்சுமி பருத்தி



வி. மாரியப்பன்
காளிப்பட்டி தெரு,
வைகுந்தம் அஞ்சல்,
சேலம் மாவட்டம்.

நான் 1980-ஆம் ஆண்டு செப்டம்பரில் வரலட்சுமி பருத்தி பயிரிட எண்ணினேன். பலரும் என்னை புதுசு புதிசா வரலட்சுமி போடுவதாகத்தெரிகிறது என்றனர். இத்தோடு விவசாயத்தை அறவே விட்டு விடுவான் எனவும் கேலியாகப் பேசினர். அப்போது ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்ட வேளாண்மை அலுவலர் திரு எல். சோமசுந்தரத்தை அணுகிய போது வரலட்சுமி தாராளமாகப் பயிரிடலாம். ஆனால் தான் கூறிய முறைப்படி உரம், மருந்து, கட்டுக்கோப்பு முறைகளை கையாள வேண்டும். எனவும் கூறினார். நான் எம்.சி ஐ.சி.யில் மாதம் ரூ. 1,000- வரை சம்பளம் பெற்று வருகிறேன். நான் விவசாயத்தை பக்க தொழிலாக கொண்டு வரலட்சுமி $1\frac{3}{4}$ ஏக்கரில் பயிரிட்டேன். நான் வேளாண்மை அலுவலர் கூறிய அறிவுரைப்படி என்.பி.கே. 16:16:16 அளவில் டி.ஏ.பி., பொட்டாஷ் அடியுரமாக இட்டு $3\frac{1}{2}$' 2' விதை ஊன்றினேன். பருத்தி நுண்ணூட்ட சத்து $7\frac{1}{2}$ கிலோ, விதை நட்ட அன்றே மணலில் கலந்து போட்டேன். செடிகள் முளைத்த போது அனைவரும் நெருக்கமாக உள்ளது என்றே கூறினர். இலாகா பரிந்துரை 4' 2' என இருந்தால் $3\frac{1}{2}$'2' என்பது நெருக்கமாக தோன்றியது. பரவாயில்லை அடுத்த வருடம் 4' 2' சரியாக இடைவெளி விட்டு நடலாம் என எண்ணினேன். விதை முளைக்காத இடங்களில் பாலிதீன் பைகளில் போட்ட செடியை வைத்து நிரப்பினேன். செடிகள் அசுவணி தத்துப்பூச்சி தாக்குதல் அடைந்த போது இலாகா பரிந்துரைப்படி ரோகார் 300 மில்லி லிட்டர் ஏக்கருக்கு தெளித்தேன். 45-வது நாள் மம்மட்டி களை எடுத்த போது 16 கிலோ தழைச் சத்து யூரியா மேலுரமாக இட்டேன். செடிகள் பார்க்க எதிர்பார்த்த அளவுக்கு மேல் பூவும் சப்பையுமாக இருந்தது. காய்ப்புழு தாக்குதல் இருந்த பொழுது பரிந்துரையின்படி கொட்டிய பூ, சப்பைகளை பொறுக்கி குழியில் போட்டு புதைத்து எண்டோசல்பான் 600 மில்லி லிட்டர் தெளித்தேன். 10 நாட்களுக்கு ஒரு முறை காய்ப்புழுவை கட்டுப்படுத்த நுவக்கிரான், ஜோலோன் மாற்றி மாற்றி தெளித்தேன். 85-வது நாள் நுனியை கிள்ளி விட்டேன். காய்கள் பருமனாக டி.ஏ.பி.3 சத பரிந்துரை செய்ததால் .2 தடவை நன்றாக தெளித்த வடிகட்டிய கரைசலை 90-வது, 110வது நாளில் தெளித்தேன். காய்கள் நன்றாக முற்றி இருந்தது கண்கூடாக தெரியவந்தது. 115-வது நாள் வெடிப்பிற்கு வந்த பொழுது, தொட்டியிலிருந்து பருத்தியை மட்டும் தனியாக பிரித்து எடுத்து சுத்தம் செய்து மணல் மீது பரப்பி வைத்தோம். மார்ச்சு மாதம் 20-ம் நாள் பருத்தி வெடிப்பு முடிந்து விட்டது. $1\frac{3}{4}$ ஏக்கரில் ஏறக்குறைய 24 குவிண்டால் பருத்தி விளைச்சல் பெற்றேன். அப்போது வரலட்சுமி மார்க்கட் மிக்கு இல்லாததால் ஒழுங்கு முறை விற்பனைக்கூட மாவட்ட தனி அலுவலர் முயற்சியால் நல்ல விலைக்கும் விற்பனை செய்தேன். கேலி பேசிய பலரும் பரவாயில்லை. புது விவசாயத்திலும் அற்புதமான மகசூல் என்றனர். எனக்கு நிகர லாபம் ரூ. 12,000 - கிடைத்தது. அதே போல் இந்த 1981 வருடத்திலும் செப்டம்பர் வரலட்சுமி $2\frac{1}{2}$ ஏக்கர் ஊன்றி தற்போது மிக நன்றாக இருக்கிறது. அதிக மகசூல் வருகிறது.



மாணவர் பக்கம்

# விண்வெளியில் ஒரு வகுப்பறை

மாணவர்களே சொந்தமாகச் செயற்கைக் கோள் ஒன்றினை இயக்குகின்றனர் என்றால் வியப்பாக இருக்கிறதா?

பேரார்வத்துடனும் துடிப்புடனும் பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர் பதினைந்து பேர் முழு மூச்சுடன் இத்திட்டத்தில் இறங்கியுள்ளனர்.

அவர்கள், அமெரிக்காவின் மலைப் பாங்கான மேற்குப் பகுதியிலே அமைந்திருக்கும் கொலராடோ பல்கலைக் கழகத்து மாணவராவர். அமெரிக்கச் செயற்கைக் கோள் ஒன்று முழுக்க அவர்களுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. மேல் வாயுமண்டலத்தில் இருக்கும் 'ஓஸோன்' அடுக்கினைப் பற்றிய புதிய விஞ்ஞான விவரங்களை இந்தச் செயற்கைக் கோள் பூமிக்கு அனுப்பி வைக்கிறது.

மாணவர்கள் கம்ப்யூட்டர் (கணக்குப் பொறி) துணை கொண்டு உருவாக்கப் பெற்ற கட்டளைகளை இக்கோளுக்கு வழங்குகின்றனர்; கோள் அனுப்பி வைக்கும் விஞ்ஞானத் தகவல்களைப் பல்கலைக் கழகத்து ஆசிரியர்களும், பட்டம் பெற்ற மாணவர்களும் ஆராய்கின்றனர்.

பட்டப்படிப்புப் படிக்கும் இம் மாணவர்களில் பெரும்பாலோர், தமது முக்கிய பாடமாகப் பொறியியல் அல்லது பெளதிகத்தினை



எடுத்துக் கொண்டவர்களாவர்; ஆயினும் ஒரு சில கலைத்துறை மாணவர்களும் உள்ளனர்.

வானியல், பெளதிகம் முக்கிய மான பாடமாக எடுத்துள்ள 22 வயது இளைஞன் ரீஸ் மாரிஸன் கூறுவதாவது :

"நாங்கள் என்ன செய்கிறோம், என்ன கற்கிறோம் என்பதனைக் கொண்டு பார்க்கையில் இந்தத் திட்டம் மிகமிகப் புதுமையானது; வழக்கத்தில் இல்லாதது; அடுத்த ஆண்டிலே நான் பட்டம் பெற்று விடுவேன். அப்பொழுதும்கூட பட்டம் பெற்ற நான் மாணவர் குழுவில் ஒருவனாகவே இங்கு தங்கி விண்வெளிப் பணிகளில் ஈடுபட எனக்குக் கொள்ளை ஆசை".

"விண்வெளியில் ஒரு வகுப்பு அறை" என்று இத்திட்டதிற்கு நாங்கள் பெயர் சூட்டியுள்ளோம்' என்கிறார் செயற்கைக் கோள் பணி மேலாளர்.

ஆய்வுக்கூடத்தினை மாரிஸன், பிற பட்டப்படிப்பு மாணவர்கள் ஆகியோர் முறைவைத்து (ஷிஃப்ட்) 24 மணி நேரம் இடையறாமல் இயக்குகின்றனர். கோளின் எல்லா நிலைகளையும் இவர்களே கட்டளையிட்டுக் கட்டுப்படுத்துகின்றனர்.

"இதுவரை கிடைத்த தகவலின்படி ஓஸோன் "சுற்றி வருகிறது' முன்னர் கிடைத்த மாதிரிகளின்படி மிஸோஸ்ஃபியர் ஒரு நிலையில் இருக்கிறதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இப்பொழுது கிடைத்திருக்கும் தகவல் மிகவும்





புதியது மட்டுமல்ல, பரபரப்பூட்டுவதுமாகும்.

1974-ஆம் ஆண்டில் நாஸா (அமெரிக்க விண்வெளி நிலையம்) இத்திட்டத்தினை உருவாக்கியது. விண்வெளியில் சிறிய, செலவுக் குறைவான, ஆய்வுகளை நடத்த சில வழிகளைக் காண முயலுவதாக அது அறிவித்தது. இக் கோரிக்கைக்குச் செவி சாய்த்தது கொலராடோ பல்கலைக் கழகம்.

தற்போது மேற்கொள்ளப் பட்டிருக்கும் திட்டத்தின் பெயர் 'ஸோலர் மிஸோஸ்ஃபியர் எக்ஸ்புளோரர்', 'ஊளச்சதை ஏதுமில்லாத' செலவு மிகமிகக்குறைவான ஆய்வுத்திட்டம் இதுவாகும்.

ஒரு கோடியே 70 இலட்சம் டாலர் செலவில் இந்தச் செயற்கைக் கோளுக்கு வடிவம் அமைத்துக் கட்டி முடிக்கவும் தகவல்களை ஆராயவும் முன்வந்தது கொலராடோ பல்கலைக் கழகம்.

திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு உதவி, பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு மணி நேர உழைப்புக்கு 5 டாலர் வீதம் வழங்கப் பெற்றது. செலவை மிக்க குறைவாக்குவதற்கு இவர்கள் கைகொடுத்தனர்.



# மாணவரின் மணியான கண்டுபிடிப்பு!

சென்னை மாநிலக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பி.ஏ., (அரசியல்) பயிலும் கலாநிதி என்ற கண் பார்வையற்ற மாணவர், தானாக-குறித்த காலத்தில்-மின் சாதனங்களை இயக்கும் கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்தக் கருவியின் பயன் என்ன ?

இதனால் தேவைப்படும் நேரத்தில், யாரும் இல்லாத நேரத்தில், மின் விளக்கைப் போடவும் அல்லது எரிந்து கொண்டிருக்கும் விளக்கை நிறுத்தவும் முடியும்!

அதுமட்டுமல்ல, இந்த நவீனக் கருவி தொலைக்காட்சி, ஒலிப்பதிவுக் கருவி, இசைத் தட்டுக் கருவி, வானொலி, மின்விசிறி ஆகியவற்றைச் சரியான நேரத்தில் இயக்குவதற்கோ அல்லது இயங்கிக் கொண்டிருக்கும் இக்கருவிகளைக் குறித்த காலத்தில் நிறுத்தவோ பயன்படும்.

இவை தவிர, வீடுகளில் உள்ள மாவரைக்கும் இயந்திரம், மின்சாரச் சமையல் கருவி, குளிர்சாதனக் கருவிகள், 1.5 குதிரைச்சக்தி ஒட்டத்திற்கு உட்பட்ட நீரிறைக்கும் இயந்திரம் ஆகிய கருவிகளையும் நாம் விரும்பும் நேரத்திற்கு, வசதிக்கேற்ப இயக்கவும் அல்லது இயங்கிக் கொண்டிருக்கும் இவற்றை நிறுத்தவும் இதன் மூலம் முடியும்.

இக்கருவி வேலை செய்வதற்கு, அவரவர் இல்லங்களில் உள்ள மேசைக் கடிகாரமே போதுமானது.

இந்த நவீனக் கருவியைக் கண்டுபிடித்த கலாநிதி அவர்களின் தந்தையார் ஒரு கொத்தனார். பெயர் திரு பெ. அண்ணாமலை ரெட்டியார்.

1967-ஆம் ஆண்டு, பாளையங்கோட்டையில் உள்ள பார்வையற்றோர் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்து 8-ஆம் வகுப்பு வரை இவர் படித்தார்.

இவர் உயர்நிலைக் கல்வியைப் பாளையங்கோட்டை தூய யோவான் உயர்நிலைப் பள்ளியில் முடித்தார். பிறகு சென்னை, லயோலா கல்லூரியில் பயின்றார். இவரது சகோதரி சென்னை எழும்பூரில் உள்ள மகப்பேறு மருத்துவமனையில், செவிலியராகப் பணியாற்றி வருகிறார்.

இவருக்குப் படிப்பதற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது ஒரு ஒலிப்பதிவுக் கருவி.

"ஏன் இது, தானாக அல்லது நாம் விரும்புகின்ற நேரத்திற்கு இயக்கக் கூடாது?' என்று எழுந்த கேள்வியின் விளைவுதான், இவர் இதைக் கண்டுபிடிப்பதற்கு அடிப்படைக் காரணம் என்று கூறுகிறார் இவர். இவர் இப்பணியில் 9 மாதக் காலம் இரவும், பகலும் பாடுபட்டாராம். இந்தக் கருவிக்கு இவர் வைத்திருக்கும் பெயர் என்ன தெரியுமா? "கென் ஆட்டோமெட்" (Kan-Automat) என்பதாகும்.

## ஒரு ஜாடியின் விலை ரூ. 2000!

மிகவும் எளிமையாகத் தோற்றமளிக்கும் பீங்கான் பாத்திரத்தின் விலை ஆயிரம் ரூபாய்!

நுணுக்கமான முறையில் வடிவமைக்கப்பட்ட ஜாடியின் விலை ரூ. 2000. நம்ப முடியவில்லை அல்லவா? ஆயினும், பத்ராவதியைச் சேர்ந்த கைவினைஞர்கள் இதைச் சாதித்துக் காட்டியுள்ளனர்.

பம்பாய் ஜகாங்கீர் கலை அரங்கில் ஏழு நாட்கள் நடைபெற்ற பீங்கான் கலைப் பொருட்கள் கண்காட்சிக்கு மாபெரும் ஆதரவு இருந்தது. காட்சியில் வைக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் விற்றுப் போயின. சில, அதிக விலைக்கும் விற்பனை செய்யப்பட்டன.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பீங்கான் பாத்திரங்கள் உள்ளூர் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை. கிராமப்புற பானை வனைதலைப் பிரதிபலிக்கும் இப்பாண்டங்கள், அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன.





## விளையும் பயிர்

பள்ளிப் பருவத்திலேயே பல துறைகளிலும் மாணவமணிகள் சிறந்து விளங்குவதைப் பார்க்கின்றோம்.

அந்த வகையில், தாராபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில், 'அலுவலகச் செயலரியல்' இரண்டாமாண்டு பயிலும் மாணவன் சி. பாரதி, சகலகலா வல்லவனாகத் திகழ்கிறார்.

பள்ளியில் நடந்த இலக்கியப் போட்டிகள் பலவற்றில் இம்மாணவன் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளார்.

கவிதை, கட்டுரை, பேச்சு, நாடகம் முதலானவற்றில் இம்மாணவன் பங்கு கொண்டு, சான்றிதழ்கள், பரிசுகள் பெற்றுள்ளார்.

"எதிர்காலத்தில் ஒரு கவிஞனாக வரவேண்டும் என்பதே என் ஆசை!" என்று இம்மாணவன் கூறுகிறார். அவரை நாமும் வாழ்த்துவோம்!

## சென்னை தொலைக்காட்சியில் கல்வி நிகழ்ச்சி

சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் கல்வி ஒளிபரப்பு நிகழ்ச்சியை மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு கே. ராசாராம் அவர்கள் 9.7.82 அன்று பகல் 11.45 மணிக்கு குத்து விளக்கு ஏற்றித் துவக்கி வைத்தார்.

கல்வி நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் மாணவர்கள் காண அதிக வாய்ப்பு அளிப்பதற்குக் கல்வி ஒளிபரப்பு நிகழ்ச்சிகளுக்கு தனியான சேவை மத்திய அரசு ஒதுக்கவேண்டுமென்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் குறிப்பிட்டார்.

நவீன தொழில் நுட்பத்தினால் ஏற்பட்டுள்ள விஞ்ஞான சாதனைகளை, தொலைக்காட்சிக் கல்வி நிகழ்ச்சிகளில் காட்டலாமென்று அவர் யோசனை கூறினார்.

ஆரம்பப் பள்ளிகளுக்கான ஆங்கில பாடங்களை நடப்பு ஆண்டில் அறிமுகப்படுத்தவிருக்கிறது என்று சென்னை தொலைக் காட்சி நிலையத் துணை இயக்குநர் திரு கே. குன்னி கிருஷ்ணன் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சிகளைக் காணும் சிறந்த பள்ளிக்குப் பரிசு அளிக்கத் தயாராக இருப்பதாகப் பள்ளி கல்வி இயக்குநர் டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியம் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார். எஸ்.எஸ்.எல்,சி. தேர்வுகளுக்கு அளிக்கப்படும் மாதிரி வினாத்தாள்களைப் போல +2-க்கும் அளிக்கவேண்டுமென்று அவர் கூறினார். இந்த யோசனையைத் தொலைக்காட்சி நிலையத்தினர் உடனடியாக ஏற்றுக் கொண்டனர்.

## மலர்களின் மருத்துவப் பயன்கள்

**கொன்றைப்பூ:** இம் மலரினால் மலக்கிருமிகள், குடலைப் பற்றிய நோய்கள் தீரும்.

குடிநீரிலிட்டு உட்கொள்ள மலக்கிருமிகள், குடலைப் பற்றிய நோய்கள் தீரும். பூவை தேனில் ஊறவைத்து அருந்த, மலச்சிக்கல் தீரும். இதைப் பாலுடன் காய்ச்சி அருந்த உடற்கு நல்ல ஊட்டத்தைத் தரும்.

**தாழம்பூ:** இம் மலரை நீரில் ஊறவைத்துக் குடிக்க, உடம்பிலுள்ள வெப்பத்தைத் தணிக்கும்; இம்மலர் அம்மை நோய்க்குச் சிறந்த தடுப்பு மருந்தாகும். இதன் செய்கை குங்குமப் பூவின் செய்கையை ஒத்தே இருக்கும். இம் மலரிலிருந்து எடுக்கும் எண்ணெயைத் தலைவலி, உடல்வலி முதலியவைகளுக்குத் தடவலாம்.

**குருக்கத்திப்பூ:** இம் மலர் தலையில் உண்டாகும் நோய்கள், நீர்வேட்கை, வெப்பம் நஞ்சுகள் ஆகியவற்றை நீக்கும். இம் மலரைக் குடிநீர் செய்து அருந்தலாம்.

## எழுதுங்கள்!

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். இந்தப் பகுதிக்கு நீங்கள் குட்டிக்கதை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். அவை சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பள்ளியில் சிறந்து விளங்கும் மாணவன் / மாணவி பற்றிய குறிப்பும், புகைப் படத்துடன்-ஆசிரியரின் சான்றுடன் அனுப்பி வைக்கலாம். மாணவர்க்குப் பயனுள்ளவை இப்பகுதியில் வெளியிடப்படும். எழுதும்போது தங்கள் பள்ளி முகவரியைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.



# ஏழை பங்காளருக்கு இனிய விழா!





எளிமையின் சின்னம்!
எதற்கும் அஞ்சாதவர்!
சிறந்த தீர்க்கதரிசி!
சத்தியத்திலே நம்பிக்கை உள்ளவர்!

—என்றெல்லாம் புகழ்மாலை சூடிய பெரு விழா—பெருந்தலைவர் காமராசரின் 80வது பிறந்த நாள் விழா, சென்னை கலைவாணர் அரங்கில், ஜூலைத் திங்கள் 15ஆம் நாள், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மிகச் சிறப்பாக நடந்தது.

அன்று காலை, நாயன இசையுடன் விழா துவங்கியது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
பி. வி. கிரி
ஜி. ஆனந்தன்

### நெஞ்சத்தில் வாழ்கிறார்

மேதகு தமிழக ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்து விழாவினைத் தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார் :

''காமராசர் இப்போது உயிரோடு இல்லையென்றாலும்,







பெருந்தலைவர் காமராசர் அவர்களின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியை மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிடுகிறார்.

அவர் நம்முடைய நினைவிலும் நெஞ்சத்திலும் வாழ்ந்துகொண்டு தான் இருக்கிறார். அவர் வாழ்வின் தொடக்க காலத்திலிருந்து எளிமையாகவும், நேர்மையாகவும் வாழ்ந்து வந்தார் என்பதை நான் தமிழகத்தின் ஆளுநராக வருவதற்கு முன்னரே அறிவேன்.

''காங்கிரஸ் இயக்கத்திலேயே காமராசர் மிகவும் முக்கியமான ஒருவராகக் கருதப்பட்டார். மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டி அவர்களுடன் நெருங்கிப் பழகிக் குறைகளைப் போக்கினார்''.



திரு க. இராசாராம்

### எளிமையின் சின்னம்

பிறகு நடந்த கருத்தரங்கிற்கு மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் திரு க.இராசாராம் அவர்கள் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் தெரிவித்ததாவது:

''காமராசர் சின்னஞ்சிறுவயது முதற்கொண்டே சாதி ஒழிப்புத் தன்மையிலும், எல்லாருக்கும் ஒரே சீரான வாழ்க்கை அமைய வேண்டும் என்ற தன்மையிலும் தம்முடைய உள்ளத்தைப் பறிகொடுத்தவர். வைக்கம் சத்தியாக்கிரகத்தில் தந்தை பெரியாருடன் கலந்துகொண்டார்.

''பல்வேறு கால கட்டங்களில், மகாத்மா காந்தியடிகளுடன் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் காமராசர் ஈடுபாடு கொண்டார். பதவியை என்றும் அவர் பெரிதாக மதித்ததே இல்லை. பதவியை ஒரு மேல் துண்டுபோலவே அவர் மதித்தார்.

''காமராசர் எளிமையின் சின்னமாகத் திகழ்ந்தார். காமராசர் போன்ற எளிமையான தலைவரை அரசியல் உலகில் காண்பது கடினமானது.''

### கருத்து மழை பொழிந்தது!

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் அருமை பெருமைகளை விளக்கிடும்வண்ணம் கருத்தரங்கு அமைந்திருந்தது.



திரு லியாகத் அலிகான்

திரு லியாகத் அலிகான் அவர்கள் 'செயலாற்றும் திறன்'', என்னும் தலைப்பில் பேசுகையில், ''காமராசர் சிறந்த தீர்க்கதரிசி. செயலாற்றும் திறன் உள்ளவர். இந்திய நாட்டு ஒருமைப்பாட்டுக்குப் பாடுபட்டவர்'' என்றார்.



திரு கவி. கா. மு. ஷெரீப்

திரு கவி கா.மு. ஷெரீப் அவர்கள் 'நாட்டுப்பற்று' என்னும் தலைப்பில் பேசும்போது, ''தமிழ் மாநிலம்தனியாக அமையக்காரணமாக இருந்தவர். அவர் காலத்தில்தான் முதன் முதலில் 'தமிழ்க் கலைக் களஞ்சியம்' தொடங்கப் பட்டது. தமிழுக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றியவர்'' என்று குறிப்பிட்டார்.



திரு கு. இராஜவேலு

திரு கு. இராஜவேலு அவர்கள் 'அரசியல் தொண்டு' என்னும் தலைப்பில் உரையாற்றுகையில் சொன்னார்:

''நெப்போலியனைப் போல, காமராசருடைய நினைவாற்றல் போற்றத்தக்கது. அவர் தெளிவான அரசியல் கொள்கையுடையவர். அஞ்சாமை மிக்கவர். உலகத் தலைவர்களோடு ஒன்றாக வைத்து எண்ணத்தக்கவர். ஜனநாயகத்திலே அழுத்தமான பற்றுள்ளவர். சத்தியத்திலே ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர்.''



திரு திருக்குறளார் வீ. முனிசாமி

### தூய வாழ்க்கை வாழ்ந்தவர்!

திரு திருக்குறளார் வீ.முனிசாமி அவர்கள் 'எளிமை இயல்பு' என்னும் தலைப்பில் கருத்து தெரிவிக்கையில், ''காமராசர் தூய வாழ்க்கை வாழ்ந்தவர். அவர் வாழ்க்கையைப் பின்பற்றி நடப்பதுதான், அவருக்கு நாம் செய்கின்ற நன்றியாகும். தமிழக அரசு, தலைவர்களுக்கெல்லாம் விழா எடுத்து வருவதைப் பாராட்டுகிறேன். இம்மாதிரியான விழாக்கள், எதிர்காலச் சந்ததியினர்க்குப் பெரிதும் பயன்படும்'' என்றார்.

காலை நிகழ்ச்சியின் துவக்கத்தில், மொழிபெயர்ப்புத்துறை இயக்குநர் டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றி நவின்றார்.

மாலை 4 மணியளவில், சீர்காழி திரு சிவசிதம்பரம் குழுவினரின் இசை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

இசை நிகழ்ச்சி-சீர்காழி திரு சிவசிதம்பரம் குழுவினர்.



### சிறப்புக் கூட்டம்

அன்று மாலை 6 மணியளவில் சிறப்புக் கூட்டம் நடந்தது.

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத்தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது உரையில்:—

''காமராசர் தலை சிறந்த தேசத் தொண்டர். அவரது தொண்டு மகத்தானது. அவரது சீரிய பணி காரணமாகவும், செயல் திறன் காரணமாகவும் அவர் நாட்டு மக்களின் நன் மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்தார். அவரை அனைத்துத் தரப்பட்ட மக்களும் பாராட்டத் தவறவில்லை. தன் வாழ்நாள் முழுவதும் காமராசர் இலட்சியத்திற்காக வாழ்ந்து வந்தவர். புதிய பாரதத்தைப் படைக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தார். பதவிப்பித்து இல்லாத காமராசர், தமிழகத்திற்கு நல்ல பல திட்டங்களைத் தந்து, மறைந்தும் நம்மிடையே மறையாதவராய் விளங்குகிறார்.



டாக்டர் ம. பொ. சிவஞானம்

''மாண்புமிகு முதல்வர் கொண்டு வந்துள்ள சத்துணவுத் திட்டம், அகில இந்தியத் திட்டமாக வரவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். முதல்வர் கொண்டு வந்துள்ள திட்டம் என்றென்றைக்கும் சிரஞ்சீவித்திட்டமாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.'' என்றார்.



திரு நெ. து. சுந்தரவடிவேலு

### கண் கொடுத்தவர்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு.நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தமது உரையில், குறிப்பிட்டதாவது:

''இலவசக்கல்வித்திட்டத்தைக் கொண்டு வந்த பெருமை காமராசரைச் சாரும். கல்விக்குக் கண் கொடுத்தவர் காமராசர் என்று சொன்னால் அது மிகையாகாது. காமராசர் முதல்வராக இருந்த காலத்தில் காஞ்சிபுரத்திலும் மதிய உணவுத் திட்டத்தின் துவக்க விழா நடைபெற்றது. அப்போது அமரர் அண்ணா எம்.எல்.ஏ.யாக இருந்து வந்தார். அமரர் அண்ணா அவர்கள் இலவச மதிய உணவுத் திட்டத்திற்கு அவர் வாங்கிய எம்.எல்.ஏக்கான ஊதியமான 150 ரூபாயில் மாதா மாதம் ஏழைக் குழந்தைகளுக்காக இலவச மதிய உணவுத் திட்டத்திற்காக ஐம்பது ரூபாய் வழங்கினார். காமராசர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தை அமரர் அண்ணா பாராட்



திருமதி சுலோசனா சம்பத்

டினார். இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்காகச் சத்துணவுத் திட்டத்தைத் தமிழகத்தில் முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்ததை நல்ல மனம் படைத்தோர் அனைவரும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள்''.

**சமுதாய மறுமலர்ச்சி**

திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் பேசும்போது ''காமராசர் ஆட்சிக் காலத்தில் சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கான ஆக்கப் பணிகள் அனைத்தையும் செய்து காட்டினார். பிற்பட்டவர்கள் – தாழ்த்தப்பட்டவர்களின் தூதுவராக இருந்து, தமிழகத்திற்குச் சேவை செய்தார். காமராசரின் சேவை அகில இந்தியாவுக்கே தேவைப்பட்டது. பிறகு காமராசர் உலகப் புகழ்பெற்ற தலைவரானார்'' என்று குறிப்பிட்டார்.



திரு சி. சுப்பிரமணியம்

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், ''தமிழக முதலமைச்சர் காமராசர் இந்தியாவிலுள்ள தலைசிறந்த முதல் அமைச்சராக விளங்குகிறார் என்று அமெரிக்காவிலிருந்து வந்த அறிஞர் ஒருவர் நேருவிடமும், என்னிடம் சொன்னார். காமராசர் தனக்கென வாழாமல் நாட்டுமக்களுக்காகவே வாழ்ந்து வழிகாட்டிய உத்தமத் தலைவர். காமராசர் தலைமைப் பொறுப்பு ஏற்ற போதும், பதவி இல்லாத போதும் மக்களின் நலனில்தான் அவரது எண்ணம் இருந்து வந்தது. அவர் காட்டிய வழியில் நாட்டிற்கும் நம்மால் ஆன சேவையைச் செய்ய முடியுமா? என்பதைப் பார்க்கவேண்டும். காமராசர் ஆட்சிக்காலம் ஒரு பொற்காலமாகும். ஏழ்மையாகப் பிறந்து ஏழ்மையாகவே வாழ்நாள் முழுவதையும் கழித்தவர். காமராசர் விழாவை எடுக்க காரணமாக இருந்து தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்



திரு ஓ.வி. அளகேசன்

களுக்கு எனது நன்றி'' என்று குறிப்பிட்டார்.

**மகத்தான தொண்டு!**

முன்னாள் மத்திய அமைச்சர் ஓ.வி. அளகேசன் அவர்கள் பேசுகையில், ''தலைவர் காமராசருக்கு விழா எடுக்க முன்வந்த தமிழக அரசை முதலில் பாராட்டுகிறேன். நன்றி சொல்லிக் கொள்கிறேன். காமராசர் விழாவை ஆண்டுதோறும் நடத்த வேண்டும். இதனைப் பிறரும் கடைப்பிடிக்க வேண்டும். நேருஜி முதல் சாதாரணத்தொண்டர்கள் வரை காமராசரின் சேவையைப்



திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

பாராட்டியுள்ளனர். காமராசர் தொண்டு மகத்தானது. காமராசரின் வழியைப் பின்பற்ற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்—

''காமராசர் விழாவை, நமது இனியத்தலைவர் புரட்சித்தலைவர் அவர்களின் சீரிய தலைமையிலுள்ள அரசு விழாவாக எடுத்

## சாதி முறை கூடாது!

சாதியை நான் வெறுக்கிறேன். சாதி மீது எனக்கு நல்ல அபிப்பிராயமே கிடையாது.

சென்ற பல நூற்றாண்டுகளாக, சாதி முறையானது இந்தியாவின் சாபக்கேடாகவே இருந்து வந்திருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

சாதிப் பாகுபாடு இந்தியாவின் சக்தியைச் சீரழித்தது. பலவீனப்படுத்தியது. பாரத



தத்தை அது தாழ்மைப் ப்டு குழியில் தள்ளி மீளவொட்டாமல் அழுத்தியது.

நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டதன் மூலகாரணமே, நம்மிடையேயிருந்த சாதிப் பிளவுகள்தான். நம்முடைய ஐக்கிய பாவத்தை அழித்தது சாதியுணர்வுதான். நம்முடைய சகோதரர்களிலேயே ஒரு பகுதியினரை இழிவுபடுத்தும் துர்நோக்கத்தை விளைவித்தது சாதி முறைதான்.

கடந்த காலத்தில் சாதி முறையினால் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கக் கூடுமா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இன்றைய உலகத்தில் சாதிமுறைதான் நம்முடைய படுமோசமான பலவீனம் என்பதென்னவோ மறுக்க முடியாத உண்மை.

இந்தச் சாதிமுறை நம்மிடையே நீடித்திருக்கும் வரை, நமக்கு விடிவு காலமே இல்லை. நமது குறிக்கோளை நாம் ஒரு நாளும் அடைய முடியாது.

--பண்டித ஜவகர்லால் நேரு



மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் காமராசர் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கிறார்.

திருப்பதை நாடு பாராட்டுகிறது. நாமும் பாராட்டுகிறோம். காமராசர் ஜனநாயகத்திற்கு வழிகாட்டியாக இருந்தார். இந்தியாவுக்கு சீன அபாயம் தலைதூக்கிய போது, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் காமராசர் அவர்களிடம் அப்போது 75 ஆயிரம் ரூபாயை வழங்கினார். பெருந்தலைவரின் புகழ்பட்டுவிடக்கூடாது என்பதற்காக நமது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், திருமலைப் பிள்ளை சாலையிலுள்ள காமராசர் இல்லத்தை நினைவு இல்லமாக ஆக்கி, அவருக்கு மேலும் பெருமை சேர்த்தார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்திற்குக் காமராசர் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டியுள்ளார்கள். காமராசர் புகழ் இன்றைக்கு உலகம் உள்ளவரை இருக்கும் என்பதில் ஐயமில்லை.''

பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது:

''நம்மால் என்றும் போற்றிப் பாராட்டப்பட்ட- தகுதி பெற்ற- யாராலும் மறந்துவிட முடியாத பெருந்தலைவர் திரு. காமராசர். எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் நாட்டிற்குச் செய்த நற்காரியத்தை மறக்கக் கூடாது.

**தாய்ப்பாசம்**

''காமராசர் தன் தாயின் மீது வைத்து இருந்த பக்தி, பாசம், மரியாதையை மிகத் தெளிவாக கூறிய என்.வி.நடராசன் ஒரு சம்பவத்தைக் கூறினார். நோய்வாய்ப்பட்டு இருந்த தன் தாயாரைப் பார்க்கச் சென்ற திரு காமராசர் நான் இருந்து என்ன செய்ய முடியும்? நான் நாட்டுப் பணியாற்றப் போகவேண்டும் என்று கூறிவிட்டுச் சென்றார் என்று தெரிவித்தார். நான் அப்



போது கூறினேன். தன் தாயை விட, பல சமூகநீதிகளால் நோய்வாய்ப்பட்டிருக்கும் பல தாய்மார்களுக்கு வாழ்வளிக்கச் சென்று இருக்கிறார்.

" அண்ணா இப்போது இல்லை. இனி அவர் தலைமை ஏற்று வழி காட்ட முடியாது. ஆனால் சிறந்த தத்துவங்களை-சித்தாந்தங்களைத் தந்துவிட்டுப் போயிருக்கிறார். அவைகள் இந்த நாட்டுக்கு வழி காட்டியாக இருக்கின்றன.

" மக்கள் நல்வாழ்வில் காமராசர் அதிக அக்கறை வைத்திருந்தார். முதல்வர் பதவியைக்கூட காமராசர் ராஜினாமா செய்வேன் என்று அறிவித்த போது, ராஜினாமா செய்ய வேண்டாம் . என்று சொன்ன என்னிடம், பதவி பெரிதல்ல நாடு தான் பெரியது என்று கூறினார்.

**சத்துணவு திட்டம் வெற்றி பெற..**

''காமராசர் ஆட்சிக் காலத்தில் 17 லட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு வழங்கப்பட்டது. அவர் முழு திருப்தி அடைந்திருப்பாரா என்றால் இல்லை. பள்ளியில் படித்த மூன்றில் ஒரு பங்கினருக்குத்தான் உணவு அளிக்க முடிந்தது. அந்த திட்டத்தில் அரசு 10 காசும் தர வேண்டியிருந்தது. பல யூனியன்கள் வருமானமின்றி இருந்தது. அது எப்படி உணவுக்குக் காசு கொடுக்க முடியும்? அந்தத் திட்டத்தில் ஆசிரியர்கள் சென்று உணவுப்பொருள் களைத் திரட்டி சமைத்துப் போடவேண்டியதிருந்தது. அதில் தவறு இருந்தது. இதைத் திருத்த முயன்றோம்.

''இன்று 63 லட்சம் குழந்தைகளுக்குச்சத்துணவு அளிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறோம். ஒரு பகுதியில் 13 இலட்சம் என்று கணக்கிடப்பட்டு இருந்தது. இப்போது அது 18 இலட்சமாகி இருக்கிறது. இந்த மாத முடிவில் தான் 63 லட்சம் ஒரு கோடியாக இருக்குமா, மாணவர்கள் 90 இலட்சமாக இருக்குமா என்று தெரியும். சத்துணவுத் திட்டம் வெற்றி பெற பொதுமக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

"மதிய சத்துணவுத் திட்டம் என வாழ்க்கை அனுபவத்தையொட்டி ஏற்பட்டது.

**இளைஞர்களே முன் வருக!**

''திட்டங்களை நிறைவேற்றுவதற்குள் காலம் போய்விடும் என்பதால் தான் பெருந்தலைவர் காமராசர் ''சிகப்பு நாடா'' முறையைத்தூக்கி எறிந்தார். பொறுப்புகளை எண்ணும்போதெல்லாம் பெரியவர்களை நினைத்துக் கொள்ளவேண்டும். முதியோருக்கு 20 ரூபாய் உதவித் தொகையைப் பெருந்தலைவர் காமராசர்அறிமுகப்படுத்தினார். நாங்கள் வந்து 25 ரூபாய் ஆக்கினோம்.

"தவறுகளைச் சொல்லுங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். 'வேடிக்கை மனோபாவத்தைத் தூக்கி எறியுங்கள். பொறுப்பிலிருப்பவர்கள் குறிப்பாக, இளைஞர்கள் முன் வந்தால்தான் வெற்றி பெற முடியும்.''

**மாலை நிகழ்ச்சியில் துவக்கத்தில் பாரதி நூற்றாண்டு விழாத் தனி அலுவலர் திரு. சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செய்தி-மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் அவர்கள் நன்றி நவின்றார்.**



# கோழி வளர்ப்பில் குவியும் செல்வம்!

தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனம் 1 .7.73ஆம் நாளன்று தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பினைமேம்படுத்தும்பொருட்டும், வணிக முறையில் அதனை விரிவாக்கும் பொருட்டும், ஓர் அரசுத் துறை நிறுவனமாகத் தொடங்கப்பட்டது.

**நோக்கங்கள்**

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன:—

கோழி, கோழியிலிருந்து பெறப்படும் முட்டை, இறைச்சி மற்றும் இதர துணைப் பொருட்கள், கோழித் தீவனம் ஆகியவற்றின் உற்பத்தி, முறைப்படுத்தல், சேமித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

கோழி வளர்ப்புத் தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் உதவிகள் அளித்தல்.

கோழி வளர்ப்பு, அதன் துணைப்பொருட்கள் தீவனம், தேவைப்படும் சாதனங்கள் ஆகியவற்றை உருவாக்கி, கோழி வளர்ப்புத் துறையில் உற்பத்தி, விற்பனை, வாகனவசதி, விநியோகம், ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய பணிகளுக்கு உதவுதல்.

**நடவடிக்கைகள்**

இந்நிறுவனம் தற்போது நான்கு கலவை நிலையங்களில் கோழித் தீவனம் உற்பத்தி செய்கிறது.

வீரிய இன முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் மற்றும் இறைச்சிக் (ப்ராய்லர்) கோழிக் குஞ்சுகளை இதன் இரண்டு குஞ்சுப் பொரிப்பகங்களில் உற்பத்தி செய்கிறது.

வளர்ப்புப் பண்ணைகள் மற்றும் விரிவாக்க மையங்களை அமைத்து முட்டையிடும் கோழிகளையும் இறைச்சிக் கோழிகளையும் வளர்க்கிறது.

கோழித் தீவனம், முட்டைகள், இறைச்சி ஆகியவைகளை



தன் விற்பனைக் கூடங்கள் மூலமாகவிற்பனை செய்து வருகிறது.

இந்நிறுவனத்தின் பணிகள் செயல்களின் தன்மைக்கேற்ப, கீழ்க்கண்டவாறு தொகுத்தளிக்கப்படுகின்றன:

**கோழித் தீவனக் கலவை நிலையங்கள்**

1. நந்தனம் (சென்னை)
2. கொட்டப்பட்டு (திருச்சி)
3. கப்பலூர் (மதுரை)
4. திருப்பூர்(கோவை)

இந்நான்கு தீவனக் கலவை நிலையங்களும் தொழில் மற்றும் விவசாயத் துறையில் கிடைக்கும் துணைப் பொருட்களைக் கொண்டு ஊட்டமுள்ள கோழித் தீவனம் உற்பத்தி செய்கின்றன. தீவனத்திற்காக மூலப் பொருட்களையும், கலவை செய்த தீவனத்தையும், சென்னையில் உள்ள இந்நிறுவனத்தின் பகுத்துணர் ஆய்வகத்தில் கடுமையான சோதனைக்கு உட்படுத்துவதன் வாயிலாக உயர்ந்த தரமுள்ள தீவனத்தை உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் தீவனம், இந்திய தர நிறுவனத்தின் (ISI) முத்திரை வழங்கப் பெற்ற சிறப்பினைக் கொண்டது.



டாப்கோ உருவாக்கிப் பின்பற்றும் விலைக் கொள்கை. கோழித் தீவனம் நியாய விலையில் கிடைக்க வகை செய்கிறது.

அரசுத் துறையில் செயல்பட்டு வரும் சிறப்புக் கால்நடை வளர்ப்புத்திட்டம் மற்றும் பல வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றாலும், சில தனிப்பட்ட விவசாயிகளின் முயற்சியாலும் அதிக அளவில் கோழிப் பண்ணைகள் தொடங்கப்படுவதால் டாப்கோ தீவனத்திற்கான தேவை நாளும் பெருகி வருகின்றது. சென்னை நந்தனத்தில் நிறுவப்பட்டுள்ள பெரிய கலவை இயந்திரமும் மற்ற மாவட்டங்களில் அமைந்துள்ள மூன்று சிறிய இயந்திரமும் மற்ற மாவட்டங்களில் அமைந்துள்ள மூன்று சிறிய கலவை நிலையங்களும் பெருகிவரும் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன.

**விற்பனை மையங்கள்**

இந்நிறுவனம் தன்னுடைய கீழ்க்கண்ட விற்பனை மையங்கள் மற்றும் அவற்றோடு இணைந்த விற்பனை நிலையங்கள் மூலமாக (பத்து விற்பனை நிலையம், சிற்றுண்டிச்சாலை உட்பட) முட்டை, தரமான கோழி இறைச்சி ஆகியவற்றை விற்பனை செய்து வருகிறது.

சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்ட விவசாயிகளிடமிருந்து 30.9.81 வரை முட்டை ஒன்று 33 காசு வீதம் கொள்முதல் செய்யப்பட்டது. 1.10.81 முதல் ஒரு முட்டை 36 காசு வீதம் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு உடனடி விற்பனை வாய்ப்பு கிடைப்பதோடு டாப்கோவின் முட்டை விநியோகப் பணியும் தடையின்றித் தொடர்கிறது. இத்திட்டம் தற்போது செங்கல்பட்டு, வட ஆர்க்காடு,சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் (சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ்) செயல்படுத்தப்படுகிறது. இம்மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் உற்பத்தியாகும் பொருட்களை டாப்கோ விற்பனை செய்கிறது.

**முட்டை மற்றும் இறைச்சி விற்பனை**

டாப்கோவின் விற்பனை மையங்கள் நிறுவப்படாத இடங்களில் உள்ள பொது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்ட விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வரும் ஆண்டில் விற்பனை நிலையங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள விற்பனை நிலையங்களை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**அரசூர் (கோவை மாவட்டம்) குஞ்சு பொரிப்பகம்**

வீரிய இனக் குஞ்சுகளை உற்பத்தி செய்வது டாப்கோவின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். அரசூரில் உள்ள குஞ்சு பொரிப்பகம் வியாபார நோக்குடைய வீரிய இனக் குஞ்சுகளை அரசுத்துறையில் உற்பத்தி செய்வதில் முதன்மையாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் வீரிய இனக் குஞ்சுகளின் அறிமுகம் கோழி வளர்ப்பினை வியாபார நோக்குடைய ஒன்றாக மாற்றியுள்ளது. குறிப்பாக சேலம், ஈரோடு, செங்கல்பட்டு, மதுரை மற்றும் திருச்சியில் கோழி வளர்ப்பு வணிகத் தன்மையுடையதாக அமைந்துள்ளது. விவசாயிகள், அரசு நிறைவேற்றி வரும் சிறப்புக் கால்நடை மேம்பாட்டுத் திட்டம், சத்துணவு வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் துணை கொண்டு வியாபார நோக்குடன் கோழிப் பண்ணைகளை நடத்தி தங்கள் பொருளாதார நிலையினை உயர்த்திக் கொள்வதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அரசூரில் உள்ள குஞ்சு பொரிப்பகம் 'பாப்காப்' ரகத் தாயினக் கோழிகளையும் 'காப்' இன இறைச்சிக் கோழிகளையும் வளர்த்து வருகிறது. இப் புதிய ரகம் கோழி வளர்ப்போரால் பெரிதும் விரும்பப்படுவதால் இதற்கான தேவை நாளும் வளர்ந்து வருகிறது.

**கப்பலூர் (மதுரை மாவட்டம்) குஞ்சு பொரிப்பகத்தை வணிக மயமாக்குதல்:**

கப்பலூரில் உள்ள குஞ்சு பொரிப்பகம் 1978-79 வரை தூய இனக் குஞ்சுகளையே உற்பத்தி செய்து வந்தது. குறைந்த உற்பத்தித் திறன் கொண்ட தூய இனக்கோழிகளின் தேவை பொது மக்களிடையே மிகக் குறைந்த அளவு இருந்தமையே மேற்கூறப்பட்ட ஆண்டுகளில் இக்குஞ்சு பொரிப்பகம் நட்டத்தில் இயங்கி வரக் காரணமாக அமைந்திருந்தது. வணிக நோக்குடையதாகவும் நட்டத்தில் இயங்காமல் இருக்கவும், வீரிய இனக் கோழிக் குஞ்சுகளைப் பொதுமக்களுக்கு அளிக்கவும் இப்பொரிப்பகத்தை வணிக நோக்குடையதாக மாற்றி அமைக்கத் திட்டமிடப்பட்டது.

**வளர்ப்புப் பண்ணை மற்றும் விரிவாக்க மையங்கள்**

இந்நிறுவனத்தின் கீழ் இயங்கும் வளர்ப்புப் பண்ணை மற்றும் விரிவாக்க மையங்கள் முட்டையிடும் கோழிகளையும், இறைச்சியினக் கோழிகளையும் வளர்த்து பொதுமக்களுக்கும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும், உதாரணமாக, சத்துணவுத் திட்டம். சிறப்புக் கால்நடைத் திட்டம் ஆகியவற்றிற்கும் வழங்கி வருகிறது.

இவ்வளர்ப்புப் பண்ணைகள் கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ளன:

1. கொட்டப்பட்டு (திருச்சி மாவட்டம்)
2. தி கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்)
3. பெருந்துரை (கோயம்புத்தூர் மாவட்டம்)
4. சேஷன்சாவடி (சேலம் மாவட்டம்)
5. செங்கல்பட்டு (செங்கல்பட்டு மாவட்டம்)

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தொடங்கவிருக்கும் பல்வேறு விரிவாக்கத் திட்டங்களுக்குத் தேவையான முட்டை கோழிக் குஞ்சுகள் வழங்குவதற்காக, வளர்ப்புப் பண்ணைகளின் வளர்ப்புத்திறனை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**டாப்கோ நிறைவேற்றும் திட்டப் பணிகள் சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டம் (கோழிப் பெருக்கம்)**

சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் குறிக்கோள் (கோழி பெருக்கம்). கால்நடை வாயிலாகப் பெறப்படும் புரதச்சத்து மிக்க உணவு வகைகளை முட்டை, கோழி இறைச்சி ஆகியவற்றைப் பெருக்குவதாகும். இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கிராம மக்களுக்கு உற்பத்தி திறனோடு கூடிய வேலை வாய்ப்பினை அளிப்பதோடு, விவசாயத் தொழிலாளர்கள், நடுத்தர மற்றும் சிறு விவசாயிகள் பெருமளவில் மேற்கொள்ளும் வகையில் பல சிறப்பம்சங்களைக் கொண்டதாகும்.

மேற்கூறிய குறிக்கோள்களை அடையும் முகத்தான் இத்திட்டத்தை செங்கல்பட்டு, வடஆர்க்காடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்நிறுவனம் நிறைவேற்றி வருகிறது.

1976-77ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் 100 கோழிகள்

கொண்ட 6,000 கோழிப் பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது. 1976-77ல் தொடங்கப்பட வேண்டிய இத்திட்டம் 1977-78ல், தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அமைந்த கோழிப்பண்ணைகளுக்கு வணிக வங்கிகள் நிதியுதவி அளிக்கத் தயங்கியதன் விளைவாக 1977-78ல் இத்திட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை. பெரும் முயற்சிக்குப் பின்னரே இத்திட்டம் வங்கிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1978-79 முதல் வளர்ச்சிக்கான ஆரம்ப வளர்ச்சி காண ஆரம்பித்தது.

கோழி வளர்ப்புத் துறையில் மொத்த வளர்ச்சியைப் புதியகண்ணோட்டத்தோடு அணுகி, தற்போது கீழே கண்டவாறு, புதுத் திட்டமொன்று தீட்டப்பட்டுள்ளது:

100 கோழிகள் கொண்ட 1,200 பண்ணைகளை, செங்கல்பட்டு, மதுரை, வட ஆர்க்காடு மற்றும் சேலத்தில் இவ்வாண்டில் தொடங்குதல்.

முதன் முறையாகத் தொடங்கும் பண்ணைகளுக்கு மான்ய விலையில் ஒரு கிலோ தீவனம் ரூ.1.30 விலையில் அளித்தல். தொடர்ந்து வரும் பண்ணைகளுக்கு 1 கிலோ தீவனம் ரூ. 1.40 விலையில் அளித்தல்.

மான்ய விலைக்கும் விற்பனை விலைக்கும் உள்ள வித்தியாசத்தை டாப்கோ சிறப்புக் கால்நடை வளர்ப்புத் (கோழி வளர்ப்பு) திட்டத்தின் கீழ் மான்யமாக பெறுதல்.

இப்புதிய திட்ட அறிக்கை 17.11.81 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில், மத்திய அரசின் பிரதிநிதியோடு விவாதிக்கப்பட்டது. இதற்கிடையே மத்திய அரசு அதிகாரிகளோடு நடைபெற்ற விவாதங்களிலிருந்து, டாப்கோவிற்கு தீவன மான்யத் தொகை இனி கொள்கை அளவில் கொடுக்கப்பட மாட்டாது என அறியப்படுகிறது. இந்நிலையில், தீவனவிலை வித்தியாசத்தினால் ஏற்படும் செலவை டாப்கோ ஏற்பதே ஒரே வழி என்றபோதும், டாப்கோவின் பொருளாதார நிலை இச்செலவை ஏற்றுக்கொள்ள இடம் தரவில்லை. இந்நிறுவனத்தின் நிர்வாகக் குழுமம் அரசு போதிய மான்யத் தொகை அளிக்க முன் வரும்வரை மேற்கொண்டு புதிய கோழிப்பண்ணைகளைத் தொடங்க வேண்டாம் என அறிவுரை வழங்கியுள்ளது.

## இந்திய இஞ்சி

**உ**லகத்திலேயே தரமுள்ள இஞ்சி உற்பத்தி செய்யப்படுவது இந்தியாவில் மட்டுமே. இந்திய இஞ்சி ரகத்தின் மணமும், தரமும் இதர எந்த நாடுகளையும் விட உயர்வானது என்று கருதப்படுகின்றது.

பல நூற்றாண்டுக் காலமாக இந்தியாவில இஞ்சி பயிரிடப்படுவது இதற்கு ஒரு காரணம் என்று கூறலாம். எல்லா நாடுகளிலும் இந்திய இஞ்சிக்கு வரவேற்பு உள்ளது. மருந்துகள் தயாரிப்பில் இஞ்சியின் பங்கு, நாம் அனைவரும் நன்கறிந்த ஒன்றாகும். இந்தியா இருபது நாடுகளுக்கு இஞ்சியை ஏற்றுமதி செய்து வருகின்றது. 1970-71-ல் இஞ்சி ஏற்றுமதி மதிப்பு ரூ. 26 மில்லியன்

டாப்கோ தற்போதுள்ள திட்டங்களையும் மற்றும் விரிவாக்கத் திட்டங்களையும் இவ்வாண்டு திறம்படச் செயல்படுத்த ரூ. 48 இலட்சங்களை நிதி உதவியாகக் கோரியுள்ளது. தீவன விலை வித்தியாசத்தை டாப்கோவிற்கு மான்யமாக வழங்குவது பற்றிய முடிவான கருத்து இன்னும் வரப்பெறாததால் நடப்பாண்டில் மேலும் புதிய பண்ணைகள் இன்னும் நிறுவப்படவில்லை.

### 1981-82ஆம் ஆண்டின் திட்டங்கள்

1981-82ஆம் ஆண்டு முந்தைய ஆண்டுகளில் நிறுவப்பட்டு, தொடர்ந்து வரும் 1000 கோழிப் பண்ணைகளில் உள்ள கழிக்கப்பட்ட கோழிகளுக்குப் பதிலாகப் புதிய கோழிக் குஞ்சுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### டாப்கோவினால் திட்டமிடப்பட்டு, கிராமப்புற ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் :

ஒவ்வொன்றும் 100 இறைச்சிக் கோழிகளைக் கொண்ட 158 கோழிப் பண்ணைகளை மாவட்டங்களில் உருவாக்கத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 100 பண்ணைகளும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 58பண்ணைகளும், 1981-82ஆம் ஆண்டு தொடங்கப்பட உள்ளன. இத்திட்டம் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளால் நடைமுறைப் படுத்த உள்ளது.

டாப்கோ, கோழிப்பண்ணைகள் அமைக்க தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி, கோழிக் குஞ்சுகள், கோழித் தீவனம் ஆகியவற்றை அளித்து, அவற்றோடு விற்பனைக்குத் தேவையான உதவிகளையும் செய்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பண்ணையும் 100கோழிகளைக் கொண்ட பத்து தொடர் பிரிவுகளை வளர்த்து ஆண்டிற்கு 1,000 இறைச்சிக் கோழிகளை டாப்கோவிற்கு இறைச்சி விற்பனைக்காக வழங்கி வரும். இத்திட்டத்தில் ஈடுபடும் சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், விசாயத் தொழிலாளர்கள் அனைவரும் மாதம் ரூ.1101 அதிக வருமானம் பெறுவர். இந்த வருமான உயர்வு அவர்கள் வாழ்க்கைத் தரத்தை நிச்சயம் உயர்த்தும்.

### உருவாகும் புதிய திட்டங்கள்

### உலக வங்கி உதவியுடன் கோழி வளர்ப்புத் திட்டம்

உலக வங்கியின் உதவியோடு முட்டை கோழி மற்றும் இறைச்சிக் கோழிப் பண்ணைகள் நிறுவி கோழி வளர்ப்பினை மேம்படுத்தும் திட்டமொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை அருகே 27.91 இலட்சம் செலவில் ஒரு வாத்துப் பண்ணையமைக்கும் டாப்கோவின் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

### சிறப்புச் சாதனைகள்

தமிழக அரசு, கோழி வளர்ப்பிற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு உயிருள்ள கோழிகள் விற்பனைக்கு ஏப்ரல் 1979ல் இருந்து விற்பனை வரி மற்றும் அதன் மீது விதிக்கும் உபரிக்கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளித்துள்ளது. தீவன விற்பனைக்கும் இது போன்று விலக்கு அளிப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

கோழிப் பண்ணைகள் பயன்படுத்தும் மின்சாரத்திற்குக் குறைந்த மின் கட்டணச்சலுகை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

சிறப்புக் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணைகளுக்குக் காப்புறுதி வழங்கும் பணி தொடர்ந்து செயல் பட்டு வருகிறது.




**த**மிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களில் சிறுதொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு மேம்பட்டிருக்கிறது என்பதை நேரில் கண்டறிய அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் சுற்றுலாவில் நாமும் பங்கேற்றோம்.

சேலம், வட ஆர்க்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்தது இந்தப் பயன்மிகு சுற்றுலா. அந்த மாவட்டங்களிலெல்லாம் சிறுதொழில் வளர்ச்சி பெற்றுவரும் சிறப்பு நம்மை வியப்படையச் செய்வதாக இருந்தது.

ஒரு நாட்டின் வளர்ச்சி அவ்வந்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பொருத்தே அமைகிறது என்பர் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர். அந்த [illegible]

[illegible] டுக் கெந்த நாடு ஈடு' என நம்மை நெஞ்சு நிமிர்த்தி கேட்கவைக்கும் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

பெரிய தொழில்கள் பெற்றிடும் ஏற்றத்தைச் சார்ந்தே சிறிய தொழில்களின் சிறப்பும் அமையும். இதற்கோர் எடுத்துக்காட்டு சேலம் மாவட்டம்.

**—இல. இராசேந்திரன்**

சேலம் உருக்காலை அங்கே அமைந்தாலும் அமைந்தது, மாவட்டம் முழுவதும் சிறு தொழில்கள் செழித்தோங்கி வளரத்தொடங்கிவிட்டன. சேலம் மாவட்டமக்களெல்லாம் சிற்றெறும்புகளாகி விட்டிருக்கிறார்கள் ஓயாத உழைப்பில்... சுறுசுறுப் [illegible]

[illegible] சேலம் மாவட்டச்சிறுதொழில் [illegible] நாம் [illegible]

கொள்கிறோம். மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு. பால்ராஜ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கிருஷ்ணன் இருவரும் முதலாவதாக நம்மைக் கயிறு திரிக்கும் தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லுகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் சிறப்புற்று வரும் சிறுதொழில்களில் முக்கியத்துவம் வாய்ந்தது கயிறு திரிக்கும் தொழில் என்பது குறிப்பிடத்தக்கது.

மாமாங்கம் என்ற பகுதியில் நாம் சென்ற அந்தக் கயிறு திரிக்கும் தொழிற்சாலையில், அத்தொழில் பிரிவுக்கான மாவட்ட ஆய்வாளர் திரு. தனபால் நம்மை வரவேற்று அத்தொழில் பற்றிய விவரங்களை விளக்குகிறார்.

சேலம் மாவட்டத்தில் கயிறு திரிக்கும் யூனிட்டுகள் 798 உள்ளன. அத்தனையிலும்1811 கயிறு திரிக்கும் சர்க்காக்கள் உள்ளன. ஆண்டு முழுவதும் நடக்கும் இத்தொழில் ஏற்றம்பெற 15 ஆயிரம் டன் மூலப்பொருள் தேவைப்படுகிறது. இந்தத் தேவைக்கேற்ப சேலம் மாவட்டத்தில் ஏழாயிரம் ஏகரில் வளம்பெற்று வான்தொட வளர்ந்திருக்கிறது தென்னை.

மாவட்டம் முழுவதிலுமுள்ள அத்தனைக் கயிறு திரிக்கும் தொழிற்சாலைகளிலும் 5,400 பேர் ஆண்களும் பெண்களுமாகப் பணிபுரிகிறார்கள்.

''ஒரு கயிறு திரிக்கும் சர்க்காவில் மூன்றுபேர் வேலை பார்க்க வேண்டியிருக்கும். அவர்கள் மூவருக்கும் ஒரு நாள் ஊதியம் பதினைந்து ரூபாயிலிருந்து இருபது ரூபாய் வரை கிட்டும்'' என்றார் திரு. தனபால்.

கயிறு திரிக்கும் பொறிகளில் சிறுவர் சிறுமியரெல்லாம் வேலை பார்க்கவே-"இதென்ன குடும்பம் குடும்பமாக வேலை பார்க்கிறாகளே; கொத்தடிமைத் தொழில் போலவா இது?" என்றார் ஒரு பத்திரிகையாளர்.

"நிச்சயமாக இல்லை. நாங்கள் யாரையும் குடும்பத்தோடு வந்து பணிபுரிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதில்லை; முழு ஊதியமும் தம் குடும்பத்திற்கே சேரவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் கொண்டுவந்து இத் [illegible]

காலை ஐந்து மணிக்கெல்லாம் தொடங்கும் ஒவ்வொருவரின் பணியும் மாலை மூன்று மணிக்கெல்லாம் முடிவடைந்து விடுகிறது.

இப்பகுதியில், கூட்டுறவு முறையில் இயங்கும் கயிறுதிரிக்கும் சொஸைடிகள் 9 உள்ளன. 120 பேர் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவர்களுக்கு ரூ. 30 தரப்படுகிறது.

ஆண்டொன்றுக்குச் சுமார் 13 ஆயிரம் டன் கயிறு வட இந்தியாவுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிற அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ள கயிறுதிரிக்கும் சிறு தொழிலுக்கு சேலம் மாவட்டத்திற்கு மட்டும் தமிழக அரசின் பங்கு மூலதனம் பத்தாயிரம் ரூபாயாகும்.

திரு முருகேசன் என்பவருக்குச் சொந்தமான அந்தக் கயிறுதிரிக்கும் தொழிற்சாலையினின்று புறப்பட்டு, கருப்பூரில் உள்ள 'சிவராஜ் கயிறு தொழிற்சாலைக்கு' நாம் போய்ச் சேருகிறோம்.

இத் தொழிலுக்கு மூலப் பொருள் தயாராகும் இடம் அது!

அங்கே தேங்காய் மட்டைகளை ஊறவைத்து, மின்பொறியில் கொடுத்து சக்கையாக்கி நார் நாராக்கும் பணியில் இளைஞர்களும் இளம்பெண்களுமாக 30 பேர் ஈடுபட்டுள்ளனர். ஊதிய விகிதம் அங்குள்ள அளவே இங்கும். ஆனால் ஒரு வேறுபாடு. பெரியவர்களுக்கு மட்டும் ஏழு ரூபாய். சிறுதொழில் தானே? வரவுக்கேற்ற செலவு; உழைப்புக்கேற்ற ஊதியம்.

பொங்கலன்று மட்டும் ஒவ்வொருவருக்கும் எவர்சில்வர் டம்ளர், தட்டு போன்ற பரிசுப் பொருட்கள் தரப்படுவதுண்டாம். அங்கே, கூந்தலெல்லாம் தேங்காய் நாராக நின்ற ஒரு அம்மையார் இதை மகிழ்வோடு தெரிவித்தார்.

**"விரைவிலேயே நம்முடைய அரசால் இத்தொழிலின் ஏற்றத்திற்காக மாஸ்டர் பிளான் செய்யப்படவிருக்கிறது. அதற்குப்பிறகு கயிறு தொடர்பான இப்படிப்பட்ட தொழில்கள் எல்லாமே கூட்டுறவு சொஸைடியின் கீழ் கொண்டுவரப்பட்டு விடும்" எனக் கூறினார் திரு தனபால்.**

## நட்டு தொழிற்சாலை

அடுத்து நமது பயணம் கே. கே. இன்டஸ்ட்ரீஸ்ஸில் போய் முடிகிறது.

இரும்புக் கம்பிகள் தாயரித்தல், நட்டு, ஸ்க்ரு போன்றவற்றைப் பல ரகங்களில் உருவாக்கல் ஆகியவற்றிற்குச் சிறந்த பெயர்பெற்ற நிறுவனம் இது என்றார்கள்.

'ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா' தந்த கடனில் துவக்கப்பட்ட இத்தொழிற்சாலையின் ஊழியர்களெல்லாம் தங்கள் தொழிலில் உற்சாகத்தோடு ஈடுபட்டிருந்தார்கள்.

"தொழில் லாபகரமாக நடக்கிறதா?" என்று அவ்வமைப்பின் ஒரு பங்குதாரரான திரு. சக்ரபாணியைக் கேட்கிறோம்.

"நல்லாவே நடக்குது. ஆனா.. ஒரே ஒரு குறைங்க. எங்க வேகத்துக்குத் தகுந்தாப்பல மூலப் பொருள் கிடைக்கலே. மேலே எழுதியிருக்கோம்; சீக்கிரமா கெடச்சிரும்கிற நம்பிக்கை இருக்கு!" என்கிறார் அவர்.

"நம்பினோர் கெடுவதில்லை" என்று சொல்லி அவரையும் நம்மோடு சேர்ந்து சிரிக்கவைக்கிறார் ஒரு செய்தியாளர்.

## மின் விளக்குகள்

'பத்மா மினியேச்சர் லாம்ப்ஸ் என்ற தொழிலகத்திற்குச் செல்கிறோம்.

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்றவற்றிற்கான சிறு பல்புகள் செய்யும்தொழிற்சாலை இது. ஏராளமான பெண்களே இங்கு பணிபுரிகிறார்கள்.

மேற்பார்வையிடும் பணியில் மட்டுமே ஆண்கள்.

இட்டலித் தட்டு போன்ற எந்திர அமைப்பில் பல்பின் கீழ்ப் பாகம் மட்டும் சுற்றிச் சுற்றி வருவது, இரண்டு பெண்கள் அதில் நொடிப்பொழுதில் மெல்லிய மின் கம்பிகளை இணைப்பது, பற்றவைப்பது, குளிரச் செய்வது, உருவான முழு பல்பை உடனுக்குடன் எடுத்து வைப்பது. சோதித்துப் பார்ப்பது போன்ற 'பல்பு' சம்பந்தப்பட்ட பல்வேறு பணிகளில் கவனம் சிதறாமல் ஈடுபடுவது போன்ற அந்த வேலை நுணுக்கங்களைப் பார்க்கும்போது -இதற்கேற்ற பொறுமை ஆண்களுக்கிருக்காது என்பதே பெண்களே அதிகம் இங்கு சேர்க்கப்பட்டிருப்பதன் நோக்கமாக இருக்கும் என்பதை நமக்குத் தெளிவாக்குகிறது.

## ஜவ்வரிசித் தொழிற்கூடம்





சிறிய மின்சார 'பல்புகள்' தயாராகின்றன

'பத்மா மினியேச்சர் லாம்ப்ஸ்' நிர்வாகப் பங்குதாரரின் அனுமதியோடு அங்கு பணியாற்றும் செல்வி ஓமனாவைப் பேட்டி காண்கிறோம் நாம்.

"சேர்ந்த புதுசுல எனக்கு நூறு ரூவா தான் சம்பளம். இப்ப- மூணு வருசத்துக்கப்பறம் மூந்நூறு ரூபா வாங்கறேன். புதுசா சேர்றவங்களுக்கு இப்பவும் நூறு ரூவா தான். ஏன்னா.. வேலை கத்துக்கிற புதுசானதால வேஸ்டேஜ் நெறயா இருக்கும்பாருங்க; அதாலதான். தீபாவளிக்கு எங்களுக்கெல்லாம் ஒரு மாச போனஸ் தராங்க..."

—இப்படி நாம் கேட்டகேள்விகளுக்கெல்லாம் 'பட்பட்'டென்று பதிலை வெடித்தார் செல்வி ஓமனா.

**"அரசு உதவிகள் தாமதமில்லாமல் கிடைச்சதே எங்கள் தொழிற்சாலை வளர்ச்சிக்கு முக்கியக் காரணம்" என்று முகமெல்லாம் சிரிப்பாகச் சொன்னார் திரு. ஆர். எஸ். இராமநாதன் - அவ்வமைப்பின் நிர்வாகப் பங்குதாரர்.**

## மாக்னசைட்

சேலத்திலிருந்து ஏழாவது கிலோ மீட்டரில் 'மாக்னசைட்' தாதுப் பொருள் வெட்டியெடுக்கப்படும் மலை வெளிக்கு நாம் அழைத்துச் செல்லப்படுகிறோம்.

தமிழ்நாடு அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஒருகோடி ரூபாய் வருமானம் அளிக்கும் சேலம் மாக்னசைட் லிமிடெட் நிறுவனம் 1978ஆம் ஆண்டில் தமிழக அரசால் துவக்கப்பட்டதாகும்.

இப்போது இந்த நிறுவனம் பத்தாயிரம் டன் மாக்னசைட் தாதுப் பொருளைத் தோண்டியெடுத்து வருகிறது.

வெட்டுவைத்து மலைப்பாறைகளைப் பிளந்து - அல்லது குடைந்து வெள்ளை வெளேரென்றிருக்கும் மாக்னசைட் தாது எடுக்கப்படுகிறது. ஏர்க்காடு மலைப்பகுதியை ஒட்டியுள்ள இப்பகுதியில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலையிலும், சுற்றுப் புறத்திலும் புகைமூட்டமும், புழுதிப்படலமும் ஏற்பட்டது நாங்கள் சென்றபோது.

"இதனால் தொழிலாளர்கள் உடல் நலம்பாதிக்கப்படாதா" என்று கேட்டார் ஒரு செய்தியாளர்.

"நிச்சயம் பாதிக்கப்படாது. ஏனென்றால், ஒரு மணிநேரத்துக்கு ஒரு முறை தண்ணீர்வண்டி மூலம் வண்டிப்பாதை முழுதும் நீர் தெளிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால் சுவாசத்தில் புழுதிசேர வாய்ப்பில்லை. தவிரவும் இங்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ வசதி எப்போதும் உண்டு" என்றார் நிர்வாகப் பிரிவு உயர் அதிகாரி திரு. எம். சண்முகம்.

**இத் தொழில் தனியார் வசமிருந்தபோது ரூ 300 மட்டுமே சம்பளமாகப் பெற்ற ஒரு தொழிலாளர் இப்போது ரூ 500 பெறுகிறார். 20 சதவித போனஸ் தரப்படுகிறது. அங்கே இன்னொரு அதிசயம்! அங்கு வைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கான சிற்றுண்டி விடுதியில் தேநீர் 10 காசு; சாப்பாடு ஒரு ரூபாய்; உப்புமா 20 காசு.**

600 ஏக்கர் நிலப்பரப்பில் நடைபெற்று வரும் இந்தப் பணியில் மொத்தத்தில் 2,700 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்னும் 80 ஆண்டுக் காலத்திற்குத் தோண்டியெடுக்கத்தக்க மாக்னசைட் தாது இப்பகுதியில் இருப்பதாக நமக்குத் தெரிவிக்கப்பட்டது.

நிர்வாக இயக்குநர் திரு சுப்பிரமணியத்தை நாம் சந்திக்க இயலாவிட்டாலும் அவருடைய கவனிப்பை அங்கே ஒவ்வொரு பகுதியிலும் நம்மால் உணர முடிந்தது.

"மாக்னசைட் தாது, நவீன வகை ஓடு செய்வதற்காகவும், தரைப்பூச்சுக்காகவும் மேல்விதான மினுமினுப்புக்காகவும் மட்டுமில்லாமல் கால்நடைகளின் உணவுப் பொருளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது" என்று திரு. எம்.சண்முகம் சொன்னது நம்மை வியக்கச் செய்தது.

இதற்காக ஏறத்தாழ [illegible] டன் மாக்னசைட் தாது [illegible] லாந்து நாட்டுக்கு [illegible] செய்யப்படுகிறதாம்.

"தனியார் நிர்வாகத்தின் [illegible]

ததை விட எல்லாவகையிலும் இப்போது நாங்கள் அரசு நிர்வாகத்தில் மிகவும் திருப்தியாகவும் நிம்மதியாகவும் இருக்கிறோம்'' என்று அங்கே பணிபுரிவோர் ஒட்டுமொத்தமாகச் சொன்னார்கள்.

இந்தப் பணியின் ஏற்றம் கருதி அரசு திட்டமிட்டுள்ள 80 கோடி ரூபாய் மும்முனைத் திட்டமொன்று இன்னும் இரண்டாண்டுக் காலத்தில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

## ஜவ்வரிசித் தொழில்

அன்னதானப் பட்டியில் உள்ள மீனாட்சி ஜவ்வரிசி, குழல் அப்பளம் செய்யும் தொழிற்கூடத்திற்குச் செல்கிறோம். மாவட்டத் தொழில் மைய மேலாளர் பாலகிருஷ்ணன் நமக்கு அந்தச் சிறு தொழில் வளர்ச்சி பற்றி விவரிக்கிறார்.

தமிழ்நாடு முழுவதும் இப்படி ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் 700 இருக்கின்றன. அதில் சேலம் மாவட்டத்தில் மட்டும் சுமார் 500 யூனிட்டுகள் உள்ளன. இதற்கு அந்த மாவட்டத் தட்பவெப்ப நிலை பெரிதும் வசதியாக இருப்பதே முக்கியக் காரணம்.

முன்பெல்லாம் ஜவ்வரிசிக்கு விலை நிர்ணயம் செய்வதென்பது குறிப்பிட்ட ஏழெட்டுப் பேர் கையில்தான் இருந்தது. 1981 நவம்பரில் இதற்காக அரசு மூலம் ஒரு சொஸைடி அமைக்கப்பட்ட பின்னாலேதான் இந்த நிலை மாறியது. இந்த சொஸைடியில் இப்போது 100 பேர் உறுப்பினர்கள்.

அப்போதெல்லாம் 90 கிலோ கிராம் எடையுள்ள ஜவ்வரிசி மூட்டையொன்று இருநூறு முந்நூறு ரூபாய்க்குத்தான் போய்க்கொண்டிருந்தது. இப்போது சொஸைடி உருவானபிறகு அதே மூட்டையின் விலை 360 ரூபாய்க்கு விலை போகிறது. வியாபாரிகளுக்கு இதன் மூலம் நல்ல லாபம் கிட்டும்.

குழல் அப்பளம் (லேடீஸ் ஃபிங்கர்) செய்யும் தொழிலில் இப்பகுதியில் ஆர்வத்தோடு அதிகம் பேர் பங்கு கொள்கிறார்கள்.

இந்தத் தொழிற்சாலையின் ஒவ்வொரு யூனிட்டிலும் ஐம்பதிலிருந்து அறுபது பேர் வரை பணியாற்றுகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். அதிலும் குறிப்பாக 80 சதவீதத்திற்கு மேலானோர் பெண்களாகவே இருக்கின்றனர்.

இந்தத் தொழிலுக்காகத் தென்னார்க்காடு, புதுவை, திருச்சி போன்ற பல்வேறு மாவட்டங்களிடமிருந்து சேலம் மாவட்டத்திற்கு மரவல்லிக் கிழங்கு வருகிறது.

ஒரு கூடை மரவள்ளிக்கிழங்கின் தோலைச் சீவிச் சுத்தம்பண்ண 40 காசு எனக் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இத்தொழிற்கூடத்தில். ''நாள் ஒன்றுக்குப் பத்துப் பதினோரு கூடைக் கிழங்கை எங்களால் சீவ முடிகிறது.'' என்றார் அங்கே கிழங்கு



கயிறு திரிக்கும் தொழிற்சாலை

மலையின் மையத்தின் அமர்ந்திருந்த ஒரு பெரியவர்.

குழல் அப்பளம் செய்யும் பிரிவில் ஒரு கிலோவுக்கு 25 காசு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒருவரால், ஒரு நாளைக்கு 100 கிலோ வரை செய்யமுடியும் என்கிறார்கள்.

ஜவ்வரிசியை வறுக்கும் பிரிவில் பணியாற்றிய செல்வி, ராணி என்பவரை விசாரித்தபோது ''போனஸ்செல்லாம் எங்களுக்கு உண்டு'' என்று சொன்னதோடு ''எங்கள்ல யாருக்காச்சும் கல்யாணம்னா இந்தக் கம்பெனிக்காரங்க அம்பது நூறுன்னுமொய் எழுதுவாங்களே'' என்று உற்சாகத்தோடு தெரிவித்தார்.

**தருமபுரி, தென்னார்க்காடு, கோவை போன்ற இடங்களிலும் இப்படிப்பட்ட ஜவ்வரிசித் தொழிற்கூடங்கள் உண்டு என்றாலும் சேலம் மாவட்டத் தொழிற்கூடங்களிலேதான் ஆண்டுதோறும் 6000 மூட்டைகள் ஜவ்வரிசி மாவும் தயாரிக்கப்படுகிறது.**

**இங்கே தயாராகும் ஜவ்வரிசி பெரும்பாலும் கல்கத்தாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.**

இப்படிப்பட்ட ஆலைகள் ஆண்டொன்றுக்கு 2.5 லட்சம் டன் எடையுள்ள ஜவ்வரிசியும் மாவும் தயாரிக்கின்றன. இவற்றின் மதிப்பு ஐம்பதுகோடி ரூபாயாகும்.

இந்த விவரங்களைச் சேகரித்துக்கொண்டு நாம் அங்கிருந்து புறப்பட்டு, பனம்பட்டியிலுள்ள 'அன்னை சேகா' பாக்டரிக்குச் செல்கிறோம். கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. அங்கமுத்து மூலம் நமக்கு இச் சிறுதொழில் தொடர்பான வேறுசில விவரங்கள் கிடைக்கின்றன.



அரசு மாக்னசைட் தொழிற்சாலை

ஜவ்வரிசி தயாரிக்கும் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களின் பங்கீட்டுத் தொகை ரூ. 8 லட்சத்து 30 ஆயிரம்.

தமிழக அரசு, இத்தொழில் வளர்ச்சி கருதி 11 சதவீத வட்டியில் பத்து லட்சம் ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளது.

இது தவிர, சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ. 50 லட்சமும், பஞ்சாப் நேஷனல் பாங்க் ரூ. 50 இலட்சமும் கடனாக வழங்கியுள்ளன.

''இத்தொழிலானது இன்னும் வளர வேண்டுமானால், எங்களுக்குத் தேவைப்படும் கருவிகள் உபகரணங்கள் ஆகியவற்றைக் குறைந்தவிலையில் அளிக்கவேண்டும். இது பற்றி அரசுக்கு நாங்கள் எழுதிக்கேட்டிருக்கிறோம்'' என்றார் திரு ஏ. அங்கமுத்து.

## தீப்பெட்டி தயாரிப்பு

சேலம் மாவட்டத்திலே மட்டும் பல்வேறு வகைச்சிறுதொழில்களுக்குமான கூட்டுறவுச் சங்கங்கள் 52 இருக்கின்றன.

சேலம் மாவட்டத் தொழில் மையத்தின் திட்டப்படி, பொள்ளாச்சியில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கிராமப்புறத்தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி தந்து 200 தொழில் நுணுக்கவல்லுநர்களும், 800 தொழிலாளர்களும் உருவாக்கப்பட்டுள்ளனர்.

சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மாவட்டத் தொழில் மையத்தின் கூட்டுறவோடு வாழப்பாடி, ஆத்தூர், தலைவாசல், கங்காவெள்ளி போன்ற பத்து இடங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒவ்வொரு தொழிற் கூடத்திற்கும் ரூ. 26 ஆயிரம் வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளது.

மாவட்டத் தொழில் மையத்தின் இம் முயற்சிகாரணமாக மாவட்ட கிராமப்புற வளர்ச்சிக் கழகமும் இந்தத் தொழில்களுக்கென ரூ. 6 லட்சம் வழங்கியுள்ளது.

இப்போது இம் மாவட்டத்திலே மட்டும் 200 சிறிய தீப்பெட்டித் தொழிற்கூடங்கள் தீக்குச்சிகளைத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன.

## சேலம் உருக்காலை

சிறு தொழில்களுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பவை பெருந்தொழில்களே எனக் கட்டுரைத் துவக்கத்தில் கூறினோம். அந்த வகையில்...

சேலத்துக்குப் புகழ்சேர்க்கும் உருக்காலைக்குச் சென்றோம்.

1970ல் முடிவு செய்யப்பட்டு, 1977ல் விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 1981ஆம் ஆண்டு செப்டம்பர் 13ஆம் நாளன்று செயல்படத் தொடங்கியதுதான் சேலம் உருக்காலை. 13.3.1982ல், இந்த ஆண்டு உற்பத்தித் திறன் ஆண்டாகக் கொண்டாடப்படுவதன் அடிப்படையில் இந்த ஆலை முறைப்படி நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

மாக்னசைட் வெட்டப்படுகிறது



இந்திய அரசுக்குச் சொந்த மான 'ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட்' நிறுவனத் தின் ஒரு பிரிவாக இயங்கும் சேலம் உருக்காலையின் நிர்வாக இயக்குநர் திருஏ.ஏ.ராஜு, பெரு மகிழ்வோடு பத்திரிகையாளர் களைச் சந்தித்து உரையாடினார்.

அப்போது அவர் தெரிவித்த சில விவரங்கள் வருமாறு:

1981-82க்கான முதல் நிதி ஆண்டில் இந்த ஆலை 3.214டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் சுருள்களை யும் தகடுகளையும் தயாரித்துள் ளது. நடப்பு ஆண்டின் இலக்கான கான 11 ஆயிரம் டன்னில் கடந்த மூன்று மாதங்களில் உற்பத்தி 1500 டன்களாகும்.

கடந்த மூன்று மாதங்களில் உற்பத்தி ஆகியுள்ள 1500 டன் னில் 700 டன் விற்பனைச் சந் தைக்குச் சென்றுள்ளது.

**சேலம் உருட்டாலையில் தயா ராகும் பொருட்களுக்கு வெளிச் சந்தையில் மிக நல்ல மதிப்பிருக் கிறது.**

### மாவட்ட ஆட்சித் தலைவர்

சேலம் மாவட்டத்தின் சிறப் பான தொழில் வளர்ச்சிகளை யெல்லாம் நேரில் கண்டறிந்து விட்டுப் பயணத்தை முடிக்கி றோம்; இன்னுமுள்ள ஏராளமான தொழிற்கூடங்களைச் சென்று பார்க்க நமக்கு நேரமில்லை.

சேலம் மாவட்ட சிறுதொழில் அதிபர்கள் கழகம் தரும் வர வேற்பு விழாவில் பங்கேற்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரும் அதில் கலந்து கொள்கிறார்.

சிறுதொழில் அதிபர்கள் கழகப் பொதுச் செயலாளர் திரு.என். ராமசாமி தொடக்க உரையாற்று கிறார்:

—இவ்வாறு அவருடைய உரை அமைகிறது.

அடுத்து, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு, வரத ராஜலு உரையாற்றுகிறார்:

''பெரிய தொழில்களை நடத் துவது சுலபம்; சிறு தொழில் களை நடத்துவது சிரமம் என் பதை நானும் உணர்கிறேன். அதில் சில நடைமுறைச் சிக்கல் கள் உள்ளன என்றெல்லாம் இங்கே கூறியுள்ளார்கள். அது பற்றியெல்லாம் விரிவாக என் னைச் சந்தித்து எடுத்துரைப்பார் களானால் தொழில் வளர்ச்சி கருதி, அவர்களது கருத்துக்களை அரசுக்கு எடுத்துச் சொல்லி உதவ நான் தயாராக இருக்கிறேன். இந்த மாவட்ட மக்கள் கடுமை யான உழைப்புக்குச் சொந்தக் காரர்கள் என்பதை நான் அறி வேன். இந்த மாவட்டம் தொழில் துறையில் ஏற்றம் பெற என்ன வெல்லாம் செய்யவேண்டும் என்பது பற்றிய உங்கள் அனை வரின் நல்ல ஆலோசனைகளை யெல்லாம் வரவேற்கிறேன்'.

—இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் உரை நிகழ்த்தி னார்.

இறுதியாக மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி நன்றி கூற விழா முடிகிறது.

இத்துடன், நமது சேலம் மாவட்டத் தொழில் வளம் காணும் பயணம் முற்றுப் பெறு கிறது.



## சேலத்திற்குப் பெருமை சேர்க்கும் உருட்டாலை

தற்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பக்கு வப்படுத்தப்பட்ட இரும்புச் சுருள்கள் இங்கே தயாரிக்கப் படும் தகடுகளுக்காக இந்த ஆலை யில் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலை மாறி ஆலையின் தேவையான மூலப் பொருட்களை உள்நாட்டிலிருந்தே பெறவும், அதன் மூலம் உற்பத்திச் செல வைக் குறைக்கவும் இரண்டுகட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட விருக்கின்றன.

குறைந்த விலையில் சிறந்த ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகளை உற்பத்தி செய்வதே இந்த உருட் டாலையின் நோக்கம். அந்த வகை யில் இங்கே தயாராகும் தகடுகள், வெளிநாட்டில் தயாராகும் மிகச் சிறந்த ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகளுக்கு ஒப்பானவை.

''சேலம் உருக்காலை இன்னும் வளர்ச்சி பெற்றால் இம்மாவட்ட சிறு தொழில்கள் இன்னும் நல்லபடி வளம் பெறும். சிறு தொழில் வளர்ச்சிக்கு முக்கிய மான 'மார்க்கெட்டிங்' நிலை அதிகரிக்கப்பட்டாக வேண்டும். இன்னும் எப்படிப்பட்ட தொழில் களையெல்லாம் இந்த மாவட்டத் தில் உருவாக்கி வளர்க்கலாம் என்பதுபற்றி மத்திய தொழி லமைச்சரிடமும், மாநிலத் தொழிலமைச்சரிடமும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். சிறு தொழிலுக்குள்ள கட்டுப்பாடு களை சற்றேதளர்த்த வேண்டு கிறோம். இந்த மாவட் டத்தைப் பின்தங்கிய மாவட்ட மாக மாநில அரசும் மத்திய அரசும் அறிவித்து, தொழில் வளத்தைப் பெருக்க எங்களை ஊக்குவிக்க வேண்டும்.''

## ஆந்திர மாநில அமைச்சரின் மனந் திறந்த பாராட்டு

**மா**ண்புமிகு ஆந்திர மாநில கல்வி அமைச்சர் திரு. எஸ். ஆழ்வார்தாஸ் அவர்கள் 10–7–82 அன்று தருமபுரி வந்திருந்தார். தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்தைக் கண்டறிய எந்தவித முன்னறிவிப்புமின்றி, ஒசூர் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்றார். அங்கு, குதிரைப் பாளையம், சின்னப்பெல்லக்கவுண்டப்பள்ளி, நாகொண்டப்பள்ளி, எஸ்.முதுகணப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெறும் சத்துணவுத் திட்டங் களைப் பார்வையிட்டார். சமைக்கப்பட்ட சத்துணவுகளைச் சுவை பார்த்தார். 'இத்திட்டம் மிகவும் பாராட்டத்தக்கது' என்று கூறினார்.






டாக்டர் மு. மோகனசுந்தரம்,
மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்.

**எ**ள் முளைத்து வருங்காலத்தி லிருந்து அறுவடையாகும் வரை தாக்கும் பூச்சிகளுள், எள் கொண்டைப்புழு, **ஆண்டிகாஸ்ட்ரா கெட்டலானாலிஸ்** மிகவும் முக்கியமானதாகும். இப்புழுவின் தாய்ப் பூச்சி மஞ்சள் நிறத்தில், சுமார் 1 செ. மீ. நீளமுடைய அந்துப் பூச்சியாகும். இப்பூச்சி கள் எள் முளைத்து வருங்காலத்தி லிருந்து செடிகளில் மீது செடிக்கு ஓரிரு முட்டைகள் வீதம் பரவலாக தம்முட்டை களை இடுகின்றன. இம் முட்டைகள் மூன்று நாட்களில் பொரித்து முதலில் வெளிர் மஞ்சள் நிறமான புழுக்களாகவும் வளர்ந்த பின் பச்சை நிறப்புழுக்களாக வும் மாறுகின்றன. இவை எள்ளின் நுனி பாகத்தில் வளரும் பகுதியில் அமர்ந்து, அங்கு உள்ள இலைகளையும், வளரும் பகுதியையும் தம் வாய்ப்பகுதியில் சுரக் கும் ஒரு வகை மெல்லிய பட்டு நூலால் இணைத்து கொண்டை போல் ஆக்கி அதனுள் அமர்ந்து மொட்டு, பூ, பிஞ்சு மற்றும் இலைகளை அரித்து உண்டு வளர் கின்றன. புழுப்பருவம் நான்கு முறை தோல் உரித்து வளர்ந்து 15 நாட்களில் கொண்டையின் ஊடே கூட்டுப்புழுவாக மாறுகிறது. கூட்டுப்புழுப் பருவம் சுமார் 5 நாட்கள் கடந்த பின், இவை தாய்ப் பூச்சிகளாக மாறி வெளிவந்து, பறந்து, இனச்சேர்க்கைக்குப் பின் மீண்டும் செடி களின் மீது முட்டையிடத் துவங்குகின் றன. இக் கொண்டைப் புழுவின் தாக்கு தலால் செடியின் வளர்ச்சியும், மொட்டு, பூ, பிஞ்சு மற்றும் காய்களை அரித்து உண் பதால் மகசூலில் மிகுந்த நஷ்டம் உண்டா கிறது.



**கட்டுப்படுத்தும் முறைகள் :**

1. பயிரில் கொண்டைப்புழுவின் தாக்குதல் தென்பட்டால், ஏக்கருக்கு 300 மில்லி வீதம் எண்டோசல்பான், அல்லது போசலோன் அல்லது எக்காலக்ஸ் மருந்தை தெளிப்பானுக்குத் தக்கவாறு தண்ணீர் கலந்து தெளிக்கவும்.

2. மானாவாரிப் பயிராக இருப்பின் காலை வேளையில் பனிப்பதத்தில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதம் தூளைத் தூவவும்.

**வேளாண் பல்கலைக்கழகத் தகவல் தொடர்பு நிலையம் இத்தகவலைத் தெரி விக்கின்றது.**





# உத்தம மருமகள்

ஓர் ஊரில் ஒரு பெரிய டணக்காரர் இருந்தார். அவருக்கு நான்கு குமாரர்கள். அந்த நான்கு பேரும் நன்கு படித்து, அறிவும் அனுபவமும் பெற்றவர்கள் ஆனார்கள். அவர்களுக்கு ஏற்ற வயதானபோது ஏற்ற பெண்களைப் பார்த்துக் கல்யாணம் செய்துவைக்கப் பிரியப்பட்டார் தந்தை. அதற்காகப் பெண் பார்த்தார். அப்பொழுது பிள்ளைகள் அவரைப் பார்த்துச் சொன்னார்கள், ''அப்பா! எங்களுக்கு வயது, அறிவு, அனுபவம் எல்லாமே இருக்கின்றன. எங்களுக்கு ஏற்ற துணையை நாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும். அதனால் எங்களது மனைவிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை எங்களுக்கே அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு ''சரி'' என்று இணங்கினார் தந்தை.

நான்கு பேரும் தூரதேசங்களுக்குப் போய், திருமணம் செய்துகொண்டு திரும்பினார்கள். தந்தை மகிழ்ச்சியோடு மகன்களை வரவேற்றார். மருமகள்கள் அவரது காலில் விழுந்து ஆசி கூறும்படி வேண்டினர். அவர்களை அன்போடு வாழ்த்தினார். மருமகள்களுக்கு தனது அன்புப் பரிசாக ஆளுக்கு 5 நெல் கொடுத்தார். அதைப் பார்த்ததும் பிள்ளைகளுக்குப் பற்றியெரிந்தது. ''அப்பாவுக்கு என்ன புத்தி பேதலித்து விட்டதா? எவ்வளவு சிறந்த மனைவிமார்களை, தூரதேசங்களுக்குப்போய் தேர்ந்தெடுத்து வந்திருக்கிறோம்? அவர்களுக்குப் பரிசளிக்க நெல்லைத் தவிர வேறொன்றும் இவருக்கு அகப்படவில்லையா?'' என்று ஆத்திரப்பட்டனர்.

முதல் மருமகள் அந்த 5 நெல்லை வாங்கிக் கொண்டதும், ''இந்தக் கிழவனுக்கு வந்த திமிரைப் பார் எங்கள் வீட்டுக் குப்பையில் இறைந்து கிடக்கும் இந்த தானியங்கள். ஏழைகள் வந்து பொறுக்கிக் கொண்டு போவார்கள். இதையா எனக்கு கல்யாணப்பரிசாகக் கொடுப்பது?'' என்று வேதனைப்பட்டு அந்த நெல்லைக் குப்பையில் அப்பொழுதே எறிந்துவிட்டாள்.

**காளத்திநாதன்**

இரண்டாவது மருமகள், அதைப் பிரசாதமாகக் கருதி, வாயில் போட்டு மென்று தின்று விட்டாள்.

மூன்றாவது மருமகள் எறியவும் இல்லை, தின்னவும் இல்லை. ''என் மாமனார் எனக்கு அன்பாகக் கொடுத்தது. அது எதுவாக இருந்தால் என்ன? இந்த 5 நெல்லைப் பெட்டியில் வைத்துப் புனிதமாகக் காத்து வருவேன்'' என்று பத்திரப்படுத்தி வைத்தாள்.

நான்காவது மருமகள் அந்த ஐந்து நெல்லைத் தோட்டத்தில் விதைத்துப் பயிர்செய்தாள். அந்த அறுவடையை மீண்டும் விதைத்தாள். தொடர்ந்து இப்படிச் செய்துவந்தாள்.

ஐந்தாண்டு சென்றது. ஒரு நாள் பெரியவர் திடீரென்று தன்னுடைய நான்கு மகன்களையும், நான்கு மருமகள்களையும் அழைத்தார். மருமகள்களைப் பார்த்து, ''எனக்கு வயதாகி விட்டது. என் மனைவி எனக்கு முன்னால் போய்விட்டாள். அதனால் வீட்டு நிர்வாகத்தை இனி உங்களிடம் ஒப்படைக்கப் போகிறேன். யாருக்கு என்ன பொறுப்பு ஒப்படைப்பது என்பதைத் தீர்மானிக்கத்தான் உங்களைக் கூப்பிட்டேன்'' என்றார். ''இப்பொழுதாவது இந்தக் கிழவனுக்குப் புத்தி வந்ததே?'' என்று உள்ளுக்குள் சந்தோஷம் கொண்டார்கள் பிள்ளைகள்.

''ஐந்துவருஷத்துக்குமுன்னால் உங்களிடம் நான் கொடுத்த 5 நெல்லைக்கொண்டு வாருங்கள்'' என்றார் பெரியவர்.

முதல் மருமகளுக்குக் கோபம் தாளவில்லை. சமயம் வந்தது என்று பொரிந்து தள்ளினாள். ''எங்கள் வீட்டில் குப்பையில் நெல் இறைந்து கிடக்கும், ஏழைகள் எத்தனையோ பேர் பொறுக்கிக்கொண்டு போவார்கள். அதில் 5 நெல் எம்மாத்திரம்? நான் அப்பொழுதே அதைக் குப்பையில் போட்டு விட்டேன்...'' என்றாள்.

பெரியவர் சாந்தமாக, ''உனக்கும் குப்பைக்கும் தொடர்பு இருக்கிறது. அம்மா! நீ இந்த வீட்டிலும் குப்பை கூளங்களைப் பெருக்கிக் கொட்டும் காரியத்தைக் கவனித்துக்கொள்'' என்றார்.

இரண்டாவது மருமகள், ''மாமா நீங்கள் கொடுத்த அந்த 5 நெல்லை நான் பிரசாதமாக நினைத்து வாயில் போட்டு, கொரித்து தின்று விட்டேன்...'' என்றாள்.

''உனக்கும் சாப்பாட்டுக்கும் தொடர்பு இருக்கிறது அம்மா. நீ இந்த வீட்டில் இனிமேல் சமையல் பொறுப்பைக் கவனித்துக் கொள்'' என்றார் மாமனார்.

மூன்றாவது மருமகள், ''நீங்கள் கொடுத்த 5 நெல்லை நான் புனிதபரிசாகப் போற்றி, ஒரு தங்கப் பேழையில் போட்டுப் பாதுகாத்து வைத்திருக்கிறேன்'' என்று 5 நெல்லைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

''பாதுகாத்து வைப்பதில் நீ கெட்டிக்காரியாக இருப்பதால் இந்த வீட்டின் பொக்கிஷம் உன் பொறுப்பில் இருக்கட்டும்'' என்றார் மாமனார்.

நான்காவது மருமகள், ''நீங்கள் கொடுத்த 5 நெல்லை நான் தோட்டத்தில் பயிரிட்டேன். அறுவடையானதும் மீண்டும் பயிரிட்டேன். இப்பொழுது 5 மூட்டை நெல் இருக்கிறது. அதைக்கொண்டு வந்து காட்ட ஒரு வண்டி கொடுங்கள்'' என்றாள்.

''ஒன்றைப் பத்தாக்கும் உத்தமியே! உன்னிடம் இந்த வீட்டின் முழுநிர்வாகத்தையும் ஒப்படைத்தேன்...'' என்றார் மாமனார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676

Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

1-8-1982 75 காசு



55

16-8-1982 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆடி 31





திருச்சி-சமயபுரம் கோவில் அருகில் உள்ள சத்துணவுத் திட்ட மையத்தில் (28.7.82) மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் எந்தவித முன்அறிவிப்புமின்றி சோதனை நடத்திய காட்சி.



29.7.82 அன்று மதுரையில், இலவசச் சத்துணவுத் திட்டத்தைப் பாராட்டி அதற்காக நிதி ரூ.40 ஆயிரத்தை கொடுப்பதற்கான ஒப்புதல் கடிதத்தை, பழனி வட்டம் சத்திரப்பட்டி திரு கா. சுப்பண்ணா அவர்கள் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களிடம் கொடுத்தார். (திரு கா.சுப்பண்ணா அவர்களுக்கு அண்மையில் நடந்த இந்திய விமானப்படை நடத்திய லாட்டரியில் ரு 50 இலட்சம் பரிசு விழுந்தது குறிப்பிடத்தக்கதாகும்) இவர் ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியர், ஆவார்.



மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர் அவர்களை 4.8.82 அன்று சென்னையில் தேசிய மானவர் படை தலைமை இயக்குநர் திரு. மொரீந்தர் சிங் சந்தித்தார்.



# இந்நாள் திருநாள்

இன்று ஆகஸ்டு பதினைந்தாம் நாள்-ஆங்கில நாட்டின் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்று, சுதந்தரக் கொடியினைப் பெருமிதத்துடன் ஏற்றிடும் நன்னாள்-தன்னரசு பெற்ற நாள்-உரிமைப் போரிலே வெற்றி கண்ட நாள் என்று பாராட்டுவர்; பாராட்டுகின்றனர்.

இந்நாள் நாட்டின் நிலையை நாம் அறிந்திடல் வேண்டும். சுதந்தரத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியுடன், விழிப்புணர்ச்சியும் இழைந்திடவேண்டும். அப்போதுதான், எதற்காகச் சுதந்தரம் பெற்றளித்தனரோ, பெரியோர்கள், அந்த நல்ல நிலையினை நாடு பெற்றிடும்; சுதந்தரத்தின் கனிச்சுவை கிடைத்திடும்.

களிப்படைய மட்டுமல்ல, நண்பர்களே, இது கணக்குப் பார்க்கும் நாளுமாகும். 'நாம் சுதந்தரம் பெற்ற பிறகு, நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன, இனி என்ன தரவேண்டும், எவ்வளவு தரவேண்டும், என்ற கணக்குப் பார்த்திடும் நாள்.

முதல் ஆகஸ்டு பதினைந்து, கணக்குத் தீர்த்த நாள்-ஏகாதிபத்தியத்துக்கும் நமக்கும் இருந்து வந்த கணக்கைத் தீர்த்த நாள், புதுக் கணக்குப் போட்ட நாள். இன்றைய ஆகஸ்ட் பதினைந்து கணக்குப் பார்க்கும் நாள்—சுதந்தரம் பெற்ற பிறகு, நமது சொல்லும் செயலும் எந்த முறையில் எந்த அளவுக்கு நமக்குச் சுக வாழ்வு பெற்றளித்தது எனக் கணக்குப் பார்க்கும் நாள்.

**பேரறிஞர் அண்ணா**

*[15.8.1967-ல் வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து]*

# சூளுரை ஏற்போம்!

* ஒருநாட்டின் வரலாற்றில் சுதந்தரதினம் என்பது பெருமிதத்துடன் குறிக்க வேண்டிய திருநாளாகும். இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரையில் எண்ணற்றோரின் தியாகங்களுக்குப் பிறகு விடுதலைக் கனியை நாம் பெற்று சுவைத்து, மகிழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

* மாற்றங்களின்றி முன்னேற்றமில்லை. முன்னேற்றமில்லையேல் வரலாறு இல்லை. மாறுதல் என்பது சிறப்பாக அமையும்போதுதான், அதுவே முன்னேற்றத்திற்கான சீரான பாதையினையும் அமைத்துக் கொடுத்துவிடுகிறது. சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை, எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

அண்ணா அவர்களின் அணுகு முறையைத்தான் தமிழக அரசு கடைப்பிடித்துச் செயல்பட்டு வருகிறது. பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் காண விரும்பிய சமத்துவச் சமுதாயத்தைக் காண்பதில் ஏற்படுகின்ற தடை எதுவானாலும் அதை அப்புறப்படுத்திச் செயல்படத் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

காந்தியடிகளின் புத்திமதியைச் சுதந்திரத் தின நாளில் நினைவு படுத்துவது பயனுடையதாக இருக்குமென்று கருதுகிறேன்.

நமக்கு வழிகாட்டிச் சென்றுள்ள பெரி



யோர்களின் கருத்தை மனத்தில் கொண்டு ஏற்றத்தாழ்வற்ற, சாதிபேதமற்ற சமுதாயத்தை நிறுவ நாம் அனைவரும் இந் நன்னாளில் சூளுரை மேற்கொள்வோமாக!

**மாண்புமிகு முதல்வர்**

*[15.8.79 அன்று தொலைக் காட்சியிலும் வானொலியிலும் ஆற்றிய உரையிலிருந்து]*

**தமிழரசு**

மலர்: 13 இதழ்: 4

16—8—1982

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆடி 31

# அன்னை வெற்றி கொள்கவே!



சிறந்து நின்ற சிந்தை யோடு
தேய நூறு வென்றிவள்
மறந்த விர்ந்தந் நாடர் வந்து
வாழி சொன்ன போழ்தினும்
இறந்து மாண்பு தீர மிக்க
ஏழ்மை கொண்ட போழ்தினும்
அறந்த விர்க்கி லாது நிற்கும்
அன்னை வெற்றி கொள்கவே!

நூறு கோடி நூல்கள் செய்து
நூறு தேய வாணர்கள்
தேறு நுண்மை கொள்ள விங்கு
தேடி வந்த நாளினும்,
மாறு கொண்டு கல்வி தேய
வண்மை தீர்ந்த நாளினும்
ஈறு நிற்கு முண்மை யொன்றி
றைஞ்சி நிற்பள் வாழ்கவே!

வில்லர் வாழ்வு குன்றி யோய
வீர வாளு மாயவே
வெல்லு ஞானம் விஞ்சி யோர்செய்
மெய்ம்மை நூல்கள் தேயவும்
சொல்லு மிவ்வ னைத்தும் வேறு
சூழ நன்மை யுந்தர
வல்ல நூல்கெ டாது காப்பள்
வாழி யன்னை வாழியே!

தேவ ருண்ணு நன்ம ருந்து
சேர்ந்த கும்ப மென்னவும்
மேவு வார்க டற்க ணுள்ள
வெள்ள நீரை யொப்பவும்
பாவ நெஞ்சி னோர் நிதம்
பறித்தல் செய்வ ராயினும்
ஓவி லாத செல்வ மின்னும்
ஓங்கு மன்னை வாழ்கவே!

இதந்த ருந்தொழில்கள் செய்தி
ரும்பு விக்கு நல்கினள்
பதந் தாற் குரிய வாய
பன்ம தங்கள் காட்டினள்
விதம் பெறும்ப னாட்டி னர்க்கு
வேறொ ருண்மை தோற்றவே
சுதந்த் ரத்தி லாசை யின்று
தோற்றி னாள்மன் வாழ்கவே!

மகாகவி பாரதியார்





# மின் உற்பத்தியில் தன்னிறைவு காண...


மாண்புமிகு மின்துறை அமைச்சர்

திரு. எஸ். இராமச்சந்திரன்


"வருமுன்னர்க் காவா தான்
வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்றார் வள்ளுவர். தீமை வருமுன் காக்க வில்லையெனில் தீப்பிடித்த வைக்கோற்போர் போல அழிவு ஏற்படும். பிடித்த தீயை அணைப் பதைவிட, தீப்பிடிக்காத வீடுகள் மேலல்லவா? அது போல, தேவை வருத்து முன் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இது, மின்சக்தியில் மிகவும் பொருந்தும்.

புனல் மின் திட்டம்,
அனல் மின் திட்டம்,
அணு மின் திட்டம்.

எனும் மூன்று வகையில் மின் உற்பத்தி செய்யப்படுவது உலக நாடுகள் ஏற்றுள்ள முறை. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கன்று. இதர வகைத் திட்டங்கள் இருக்கின்றனவெனினும் அவைகள் பெரும்பாலும் • ஆய்வு அடிப்படையிலேயே. ஆகவே, நம் தேவையை நிறைவேற்ற நாம் நம்ப வேண்டியவை மேற்கூறியவைகளே.

இந்தியக் கூட்டமைப்பில் மின் உற்பத்தி திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு, மத்திய மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பே யாகும். மின் உற்பத்தித் திட்டங்கள் செவ்வனே நிறைவேற, செயல்பட இரு அரசுகளும் கைகோத்துக் கொண்டு பணியாற்ற வேண்டும். இருப்பினும், பெரும் பங்கு மத்திய அரசினுடையதே.

சான்றாக, அணுமின் உற்பத்தித் திட்டங்களைத்தீட்டுவதும் நிறைவேற்றுவதும் இயக்குவதும் முழுக்கமுழுக்க மத்திய அரசின் கடமை.

அனல் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அனுமதி அளிப்பதும்நிலக்கரியை ஒதுக்குவதும், தருவதும், புகை வண்டிகள் மூலம் கொண்டு வருவதும், துறைமுகங்களில் ஏற்றி இறக்கி கடல்வழி கப்பல் மூலமாகக் கொண்டு வருவதும், அனல்மின் நிலைய இயந்திரங்களைத் தருவதும், அளவைக் கருவிகளை உற்பத்தி செய்வதும் ஆகிய பல்வகைக் கடமைகளையும் தனது பல்வேறு துறைகள் மூலமும் பொது நிறுவனங்கள் மூலமும் தொடர்ந்து அளித்து, உதவிடும் கடமை, மத்திய அரசினுடையதே!

புனல் மின் திட்டங்களை அனுமதிப்பதும் உற்பத்தி இயந்திரங்களை வெளி நாடுகளிலிருந்து கொண்டு வர ஏற்பாடு செய்வதும் மத்திய அரசே. மின் உற்பத்தித் திட்டங்களைத் தீட்டுவதும், நிதி ஒதுக்குவதும், குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றுவதும் மாநில அரசுகளின் கடமையாகும்.

ஆகவே, மாநிலங்கள் மின் உற்பத்தியில் தன்னிறைவை எய்தினால் அப் பெருமையில் மத்திய அரசுக்கும் பங்குண்டு. பற்றாக்குறை

இருப்பின், இருஅரசுகளுக்குமே பொறுப்புண்டு.

மாநில அரசுகளே பெரும்பாலும்பொறுப்பேற்று நிறைவேற்றும் புனல் மின் திட்டங்களைப் பொறுத்த வரை, தமிழகம் ஏற்கனவே செய்து முடித்தவை பல. அவற்றின் மூலம் 1359 மெகாவாட் உற்பத்தித் திறன் எய்தியுள்ளது. நிறைவேற்றப்படவேண்டியவை இன்னுஞ் சிலவே. சேர்வலாறு நீர் மின் திட்டம், கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம், குந்தா ஐந்தாவது கூடுதல் பிரிவு நீர் மின் திட்டம் என 160 மெகா-வாட் தரும் மூன்று திட்டங்கள் செயல் முறையில் உள்ளன. மின் உச்ச தேவையைச் சரிகட்ட 400 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட காடம்பாறை நீரேற்று மின் திட்டமும் செயல் முறையில் உள்ளது. இவை தவிர, கேரள மாநிலத்துடன் பேசி முடிக்கப் பெற வேண்டிய 150 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பாண்டியாறு - புன்னம்பழா 60 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட திட்டம் சோழத்திப்புழா திட்டம், கர்நாடக மாநிலத் துடன் கலந்து முடிவெடுக்கப்பட வேண்டிய 800 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒகனேக்கல் திட்டம் ஆகியவை எதிர்காலத் திட்டங்கள். மாநிலங்களுக்கிடையே ஆன நதி நீர்ப் பங்கீடுகள் குறித்த தீர்வை இவை எதிர் நோக்கியுள்ளன. சிறு சிறு புனல் மின் திட்டங்களை நிறைய உருவாக்கவேண்டுமென்ற முயற்சியில் 196 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பலத்திட்டங்கள் திட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, புனல் மின் திட்டத்திற்கான வாய்ப்புகளை தமிழகம் முழுவதும் பயன்படுத்தி வருகிறது.

இந் நிலையில், மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து நிறைவேற்றி , இயக்க வேண்டிய அளவில் மின் அனல் திட்டங்களை நாம் பெரிதும் சார்ந்துள்ளோம். 1970-75ல் முதன் முதலில் நிறைவேற்றப்பட்ட 450 மெகாவாட் எண்ணூர் அனல் மின் நிலையம் நொண்டிக் குழந்தையாகவே இருந்து வருகிறது. அடிப்படைக் கோளாறுகளை இது கொண்டுள்ளதால், எதிர்பார்த்த அளவு மின் உற்பத்தி கிட்டவில்லை. இருப்பினும், இவ்வரசு பொறுப்பேற்றவுடன், மைய அரசுடனும், அதன் நிறுவனங்களுடனும் செக்கோஸ்லோவாக்கியாவின் வெளிநாட்டு நிபுணர்களுடனும் கலந்தாலோசித்து சுமார் 35 கோடி ரூபாய் செலவில் மேம்பாட்டுத் திட்டத்தை தீட்டி, செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக, சுமார் 60 கோடி யூனிட்டுகள் அடுத்த ஆண்டு முதல் கூடுதலாக கிடைக்கும்.

630 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றிய பெருமை இவ்வரசுக்கு உண்டு. இன்று தமிழகத்தின் மின் தேவையை தோள் கொடுத்துத் தாங்குவது தூத்துக்குடி அனல் மின் திட்டமே. இதற்குத் தேவைப்படும் நிலக்கரியை தொடர்ந்து தரவும், கருவிகளும் இயந்திரங்களும் பழுதுற்றால் காலத்தே சரிசெய்தும் உதவ இந்திய அரசு தனது நிறுவனங்கள் மூலம் ஒத்துழைத்திட வேண்கிடுறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடெங்கும் சுமார் 20 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி கூடுதலாகும் நேரத்தில் வெறும் 230 மெகாவாட் மட்டுமே கூடுதல் திறன் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது எனும் நிலையை மத்திய அரசுக்கு நான் சுட்டிக் காட்டிய நேரத்தில், மேலும் அனல் மின் உற்பத்தி திட்டங்களை அனுப்புமாறு மத்திய மின்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கொப்ப, மத்திய அரசின் ஆலோசனையின் பேரில், மேட்டூரில் தற்பொழுது நிறைவேற்றி வரும் 420 மெகாவாட் அல்லாமல், கூடுதலாக 420 மெகாவாட் திறன் கொண்ட திட்டமும், தூத்துக்குடியில் கூடுதலாக 710 மெகாவாட் திறன் கொண்ட திட்டமும், வட சென்னையில் 1050 மெகாவாட் திறன் கொண்ட திட்டமும் மத்திய அரசின் அனுமதிக்காக 1981 டிசம்பரில் அனுப்பப்பட்டன. இதில் மேட்டூர் அனல் மின் திட்ட விரிவாக்கம் மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்கு உரியதாகும். இதர இரண்டு திட்டங்களும் மத்திய அரசின் பல்வேறான பரிசீலனையில் உள்ளன. விரைவில் அனுமதி கிடைக்குமென எதிர்பார்க்கிறோம். இவற்றின் மூலம் 2600 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் திட்டங்கள் வருகிற ஐந்தாண்டுகளில் உருவாகும்.

அணு மின் துறையில் 470 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட கல்பாக்கம் அணு மின் நிலையம் இந்திய அரசின் செயல்முறையில் உள்ளது. இவ்வாண்டு இத் திட்டத்தில் 235 மெகாவாட் திறன் கொண்ட ஒரு இயந்திரம் இயங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதை விரைவில் முடிக்க இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தென்னக மாநிலங்களில் மிகவும் பற்றாக்குறை உள்ள மாநிலம் தமிழ்நாடுதான். மின்வெட்டு என்பது தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு தொடர்கதையாகவே உள்ளது. கடந்த ஆண்டு மின் உச்சத் தேவையில் மின் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், 2100 மெகாவாட்டை எட்டியது. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தால், 2400மெகாவாட்டை எட்டியிருக்கும். 633 மெகாவாட் கொண்ட நீர் மின் உற்பத்தித் திறன் கோடைக் காலத்தில் கிடைப்பதில்லை. ஆகவே, இவ்வுச்சத் தேவையை வருங்காலத்தில் சமாளிப்பதென்றால், இப்போதுள்ள மின் உற்பத்தித் திறனை இன்னும் ஐந்து ஆண்டுகளில் இரு மடங்கு ஆக்குவதன் மூலமே இயலும்.

பல இலட்சம் டன் நிலக்கரியை பல்லாயிரம் மைல்களுக்கு ஏற்றிச் சென்று, அனல் மின் திட்டங்களைநிறுவுவதைவிட, தமிழகம் போன்ற மாநிலத்தில் அணு மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவுவதே சாலப் பொருத்தம். இதைக் கருதியே, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தமிழகத்தில் ஆயிரம் மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட இரண்டு அணு மின் நிலையங்கள் வேண்டுமென்பதை அண்மையில் தூத்துக்குடியில் நடந்த நிகழ்ச்சியில் வற்புறுத்தியுள்ளார்கள். இந்திய அரசு அணு மின் திட்டங்களை நிறுவும் பொழுது இதைக் கருத்திற்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின் உற்பத்தித் திட்டங்களில் பெரும் பங்கை வகிக்க வேண்டியது மாநில அரசுகள் தான் என்றாலும், அண்மைக் காலமாக மத்திய அரசு பெருமளவுக்கு மின் உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தேசிய நீர் மின் உற்பத்தி நிறுவனத்தின் மூலம் புனல்மின் உற்பத்தித் திட்டங்களையும் தேசீய அனல் மின் நிறுவனத்தின் மூலம் அனல் மின் உற்பத்தித் திட்டங்களையும், நாடெங்கும் நிறைவேற்றி வருகிறது. இந்திய அரசே மேற்கொள்ளும் புனல் மின் உற்பத்தித் திட்டம் எதுவும் தென்னகத்தில் இல்லை. ஆகவே, ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசு முன்வந்துள்ளது. தமிழகம் இதை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், கர்நாடகம் ஏற்கவில்லை. நீர் மின் உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் பிடிக்கும். அதற்குள் காவிரிப் பிரச்சினையில் தீர்வு ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. ஆகவே, 800 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இத் திட்டத்தை இந்திய அரசு நிறைவேற்றிட கர்நாடகம் ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அரசு தேசீய அனல் மின் உற்பத்தி நிறுவனத்தின் மூலம் அனல் மின் உற்பத்தித் திட்டங்களை நிலக்கரிச் சுரங்கங்களிலேயே அமைத்து வருகின்றது. சுரங்கத்திலிருந்து பற்றாக்குறை மாநிலங்கள் நிலக்கரியை வெகு தூரத்திற்குக் கொண்டுபோய் அனல் மின் திட்டத்தை நிறைவேற்றுவதை விட, சுரங்கத்துக்கு அருகேயே மின் உற்பத்தியைச் செய்து, அத்தகைய பற்றாக்குறை மாநிலங்களுக்குத் தரலாம் என்பதுதான் இதனுடைய நோக்கம். இம் முறை வரவேற்கத் தக்கது. எனினும், உற்பத்தித் திறனைப் பங்கீடு செய்வதில் அவ்வட்டாரத்திலுள்ள மாநிலங்களின் பற்றாக்குறையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வேறொரு விசித்திரமான முறையை 1978-ல் மத்திய அரசு உருவாக்கியுள்ளது. மாநிலங்களுக்கு மத்திய அரசு தரும் திட்ட உதவி அடிப்படையிலும், மாநிலங்கள் கடந்த காலத்தில் பயன்படுத்திய 'மின் அளவையும் வைத்து மின்சாரம் பங்கீடு செய்யப்படுகிறது. இதன்படி, தமிழகத்தை எடுத்துக் கொண்டால் 1969ல் உருவாக்கப்பட்ட மத்திய திட்ட நிதி உதவி முறையிலும் பாதிக்கப்பட்டது. 1971 முதல் 76ஆம் ஆண்டு வரை கடும் மின் பற்றாக்குறையாலும் அவதிப்பட்டது. ஆகவே, இரண்டையும் கணக்கில் கொள்ளும்போது, பற்றாக்குறை தீர்வதற்குப் பதிலாக, தமிழகத்தின் பற்றாக்குறை அதிகரிக்கிறது. அதே நேரத்தில், உபரி மாநிலங்கள், மத்திய அரசு தரும் மின்சாரத்தையும் பெற்று மேலும் உபரி மாநிலங்கள் ஆகின்றன. இத்த ஏற்றத்தாழ்வைப் போக்க, மத்திய அரசு, உற்பத்தி செய்யும் மின்சாரத்தை அப்பகுதி மாநிலங்களுக்கிடையே நிலவும் பற்றாக்குறையைக் கணக்கிற்கொண்டு பங்கீடு செய்வதே சாலப் பொருந்தும். இக்கருத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் வற்புறுத்தி இந்தியப் பிரதமருக்கு ஏற்கெனவே கடிதம் எழுதியுள்ளார். இது குறித்துப் பிரதமரை நேரில் சந்தித்துப் பேசுவதாகவும் உள்ளார்.

---

தமிழ் நாட்டிலுள்ள 25,526 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு எல்லாமே 1979 ஆம் ஆண்டு மார்ச் இறுதி வாக்கில் மின் வசதி அளிக்கப்பட்டு விட்டன. புதிதாகத் தோன்றியுள்ள 341 குடியிருப்புகளுக்கும்கூட 1982-ஆம் ஆண்டு ஏப்ரல் வாக்கில் மின்வசதி அளிக்கப்பட்டு விட்டது.

---

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு மத்திய அரசின் நிறுவனமென்றும் ஆகவே இதில் உற்பத்தி ஆகும் மின்சாரமும் எல்லா மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டியது தான் நியாயமானது என்றும், இதில் உற்பத்தி ஆகும் மின்சாரம் முழுவதையும் தமிழகமே கேட்பது குறுகிய மனோபாவம் என்றும் விவரம் தெரிந்தவர்கள் கூட எழுதுவதும் பேசுவதும் வாடிக்கையாக உள்ளது. இவை பற்றிய சில உண்மைகளை உணர்வார்களேயாயின், இத்தகைய கருத்துக்கு இடமிராது. பற்றாக்குறையைப் போக்க தமிழகம் அனல் மின் திட்டங்கள் தீட்டியபோதெல்லாம் நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டின் முழு உற்பத்தியையும் தமிழகத்தின் கணக்கில் கொண்டே, மத்திய அரசு திட்டங்களை அனுமதித்தது. இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு, உற்பத்தி ஆகும் மின்சாரம் முழுவதையும் தமிழகமே வாங்கிக்கொள்ளவேண்டுமென்ற உறுதியையும் மத்திய அரசு பெற்றது. கல்பாக்கத்தின் உற்பத்தி, நெய்வேலி அனல் மின் உற்பத்தி முழுவதும் தமிழகத்திற்கெனும் அடிப்படையிலேயே, ரூ 126 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வரும் காடம்பாறை நீரேற்று மின் திட்டம் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. நெய்வேலி மின் உற்பத்தி முழுவதும் தமிழகத்திற்கில்லையென்றால் இத்திட்டம் வீண் செலவாகிவிடும். 1971-ல் நாடாளுமன்றத்தில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களும்'நெய்வேலி' மின்சாரம் முழுதும் தமிழகத்திற்குக் கிடைக்குமென அறிவித்துள்ளார். நெய்வேலியின் மூலம் மேலும் 630 மெகாவாட் கிடைக்குமென்று 10 ஆண்டுகளுக்கு மேலாக நம்பி இருந்துவிட்டு, இப்பொழுது 176 மெகாவாட்தான் கிடைக்கும் என்றால், இடருறுவது தமிழகம்தான். இதை முன்பே தெரிவித்திருந்தால் கூட, தமிழகம் வேறு திட்டங்களை இதற்குள் நிறைவேற்றியிருக்க முடியும். 1978-ல் முற்றிலும் வேறான அடிப்படையில் இயங்கும் தேசீய அனல் மின் உற்பத்தி நிறுவனத்தின் பங்கீட்டு முறையை நெய்வேலிக்கும் கொண்டு வருவது பொருந்தாது. பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு முதல்வரவர்கள் கடித மூலம் ஏற்கனெவே எழுதியதோடல்லாமல், விரைவில் நேரில் சந்தித்து விளக்குவதாகவும் திட்டமிட்டுள்ளார்.

ஒவ்வொரு மாநிலமும் மின் உற்பத்தியில் தன்னிறைவை எய்துவதுன் மூலமே இந்தியா தன்னிறைவை எய்த முடியும். கடும் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கும் தமிழகத்திற்கு மேற்கூறிய வகைகளால் இந்திய அரசும் தமிழக அரசும் இணைந்து செயல்பட்டால், மின் பற்றாக்குறை எனும் சொல் இன்னும் ஐந்தாண்டுகளில் தமிழகத்தின் அகராதியில் இருக்காது.

**(1.8.82ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரை)**

---

முழு அளவை எட்டியுள்ள கேரளா, அரியானாவுக்கு அடுத்தபடியாக, தமிழ்நாடுதான் ஊரக மின்மயமாக்கத்தில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது. தமிழ் நாட்டில்தான், நாட்டிலேயே இதுவரை அதிக அளவு எண்ணிக்கையிலான 9.5 இலட்சம் விசையேற்றங்கள் மின் இணைப்புப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டில் மின்விநியோகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 2.6 இலட்சம் கி.மீ. அளவுள்ள தாழ்வழுத்தக் கம்பித் தொடர்கள் நாட்டிலேயே மிக நீளமானதாகும்.




# கல்விப்பயணமே!

மாண்புமிகு கல்வி அமைச்சர்

**திரு. செ. அரங்கநாயகம்**

சீனாவிற்குச் சென்று வந்தவர்களைப் பார்த்து அவர்களுடைய அனுபவத்தை அறிய விரும்புவது எல்லோரிடத்திலும் இயல்பாக இருக்கின்ற ஒரு ஆர்வம். அதுபோலவே தாம் பார்த்ததை எல்லோரிடமும் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் போய் வந்தவர்களுக்கும் அதிகம் இருக்கும். அதனை வெளியிட இது எனக்கு நல்லதொரு வாய்ப்பு.

**மக்களுக்கு எடுத்துச் சொல்ல**

நான் ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய பல இடங்களுக்குச் சென்று வந்தேன். இந்தப் பயணத்திற்குக் காரணம் சீனா விடுத்த அழைப்புத்தான். புரட்சித் தலைவரின் அனுமதியைப் பெற்று, பிறகு மத்திய அரசின் அனுமதியைப் பெற்று மற்ற நாடுகளையும் பார்த்து வரலாம் என்ற ஆர்வத்தில்தான் இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்.

சைனா ஒரு கம்யூனிஸ்ட் நாடு. ஜப்பான் ஒரு ஜனநாயக நாடு. தாய்லாந்து ஒரு குடியரசு நாடுதான். ஆனால் அரசர் இருக்கிறார். சிங்கப்பூர் ஒரு நகரவை நாடாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தியா இன்று சுமார் 68 கோடி மக்கள் கொண்ட ஒரு மிகப் பெரிய ஜனநாயக நாடாக விளங்குகிறது சீனாவின் அழைப்பை ஏற்று இப்பெரிய நாட்டிலிருந்து சீனாவிற்கும் பிற நாடுகளுக்கும் நான் சென்று வந்தேன். பல்வேறு அரசியல் அமைப்புகள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு நான் அங்கு செல்லவில்லை. கல்வி அமைச்சர் என்ற முறையில் கல்வித் துறையில் உள்ள ஆர்வத்தின் காரணமாக, அங்குள்ள கல்வி நிலையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், அவற்றைப் பற்றி மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என்ற நோக்கத்துடனும்தான் நான் சென்றேன். அதைப்போலவே ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்ற நமக்குத தெரியாத சில சிறப்பான, அதே நேரத்தில் மோசமான நிகழ்ச்சிகளையும் தெரிந்து வர முடியும்.

நான் சென்ற இடங்களிலெல்லாம் நான் கேட்ட இடத்திற்கெல்லாம் அழைத்துச் சென்றார்கள். கம்யூனுக்குப் போக வேண்டும் என்று சொன்னோம். அங்கே அழைத்துச் சென்றார்கள். அவர்களிடத்தில் சில கேள்விகளைக் கேட்க வேண்டும் என்றுசொன்னோம். அதற்கும் அனுமதித்தார்கள். அவர்களிடத்திலே அங்கே இருந்த நிலைமைகளைப் பற்றி எல்லாம் கேட்டோம். பல்வேறு இடங்களுக்கும் போய் வர உரிமை வாய்ப்புக்களையும் கொடுத்தார்கள். அந்த நாடுகளிலே காணக்கூடிய குறைபாடுகளை எல்லாம் தெரிந்து கொண்டு வந்து உங்களிடத்திலே கூறவேண்டும் என்ற நோக்கமல்ல. 100க்கு 60 பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற ஒரு நாட்டில் மக்களுக்காக என்னென்ன காரியங்களை நாம் செய்ய வேண்டும், அந்நாட்டு மக்களின் அனுபவங்கள் எந்த வகையிலே நமக்குப் பயன்படும் என்பதைத் தெரிந்து கொள்ள நான் சென்றேனே தவிர, அவர்கள் எந்த நோக்கத்தில் என்னை அழைத்திருந்தாலும் அல்லது எந்த நோக்கத்தில் என்னை இங்கிருந்து அனுப்பியிருந்தாலும் நான் சென்று பார்த்ததும், அறிந்ததும் எல்லாம் இந்த ஒரு பெரிய வளையத்திற்குள்தான்.

**வளர்ந்து வரும் தென் கொரியா**

நான் பல்வேறு இடங்களுக்குச் சென்றேன், குறிப்பாக, தென்கொரியாவைப் பற்றிக் கூற வேண்டும் என்றால், 1971-ஆம் ஆண்டு வரையில் வடகொரியா, தென் கொரியா என்ற சண்டையில் தங்களுடைய முழு முயற்சியையும், நேரத்தையும் உழைப்பையும் செலவு செய்து, பெரிய ஏழ்மையிலே போராடிக் கொண்டிருந்த நாடு இது. ஆனால் இன்று, 1982-ஆம் ஆண்டிலே நமக்கு சிமெண்ட் போதவில்லை என்றதும் அதை நமக்காக இறக்குமதி செய்கின்ற நாடு தென்கொரியா தான். இந்திய சர்க்கார் கப்பல் வாங்க வேண்டும் என்று நினைத்தவுடன், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை சுமார் 68 கோடி மக்களைக் கொண்ட மிகப் பெரிய பாரத நாடு-1979 வரை வட கொரியாவுடன் போராடிப் போராடி, பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி பின் நிமிர்ந்து வளர்ந்துவரும் தென்கொரியாவிடம் கப்பலுக்காக ஆர்டர் கேட்டிருக்கிறது. நான் அறிந்த வரையில் கப்பல்துறையில் மிகப் பெரிய நாடு ஜப்பான் நாடாகும். நாங்கள் சென்றபோது இத்துறையிலே முதலிடம் வகிப்பது தென்கொரியா எனச் சொன்னார்கள். ஆகவே, நான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவதெல்லாம் 1971 வரை நம்மைவிட மோசமான நிலையிலே இருந்த தென்கொரியா நாடு 1982-இல் ஜப்பானையும் மீறி எப்படி முன்னேற முடிந்தது என்பதுதான்.



சிங்கப்பூர் வந்தபோது அங்கு 80 மாடிக் கட்டடம் ஒன்று உருவாகிக் கொண்டிருந்ததைக் கண்டேன். 'எ சிட்டி இன் எ சிட்டி' (A City in a City) என்று வியக்கிறார்கள். இந்தக் கட்டடத்தைக் கட்டுகிற காண்டிராக்டை யார் எடுத்திருக்கிறார்கள் என்று கேட்டபோது தென்கொரியா என்று சொன்னார்கள். சிங்கப்பூரில் நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஐந்து லட்சம்பேர் இருக்கிறார்கள். அண்ணா யூனிவர்சிடி இருக்கிறது. இன்ஜினியரிங் கல்லூரி இருக்கிறது. இவ்வளவு தொழிலாளர்களும் இருக்கும் நம்மால் எடுக்க முடியாத ஒரு காண்ட்ராக்டை, நமக்குப் பக்கத்திலே வந்து, தென்கொரியாவிலிருந்து வந்து எடுத்துக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பாங்காக்கில் யுனெஸ்கோ அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். சோல் என்று உச்சரிக்கப்படும் சியோல் என்ற நகரம் தான் கொரியாவின் தலைநகரம். யுனெஸ்கோ சார்பில் ஒரு 'ப்ராஜெக்டை' ஜப்பானில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு 'குளோபல் டெண்டர்' கேட்டிருந்தார்கள். அதற்கு ஜப்பானும், தென்கொரியாவும், மற்ற நாட்டினரும் டெண்டர் கொடுத்திருந்தார்கள். ஜப்பான் நாடு தங்களுக்குத்தான் கிடைக்கும் என்றிருந்தார்கள். ஆனால் அது தென்கொரியாவிற்குத்தான் போயிற்று. ஆகவே ஜப்பானிலே தென்கொரியாவைச் சேர்ந்தவர்கள் தான் கட்டடம் கட்டுகிறார்கள். 40 மாடிக் கட்டடம் கட்டுவதென்பது அவர்களுக்கு ஒரு மிகச் சுலபமான காரியம். மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் அதைக் கட்டி விடுகிறார்கள். பூமிக்கு அடியிலே 'சப்வே' போடுவதும் அவர்களுக்கு மிகச் சாதாரணமான காரியம். இதுபோன்ற தொழில்களில் அவர்கள் மிகப் பெரியவர்களாக இருக்கிறார்கள். அப்படி ஒரு நாடு வளர்ந்து கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய தனி நபர் வருமானம் உயர்ந்து கொண்டிருக்கிறது. அங்கிருக்கின்ற அத்தனைப் பேருக்கும் வேலைவாய்ப்பு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இன்றைக்கு உலகம் பூராவிலும் ஒரு பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கின்றது. வீடுகள், கட்டடங்களுடைய விலை இறங்கிக் கொண்டு இருக்கிறது.

சென்ற இடத்தில் ஒரு சட்டை வாங்க வேண்டும் என்று வாங்கினால் அதிலே 'மேட் இன் சோல்' அல்லது 'மேட் இன் சௌத் கொரியா' என்று போட்டிருக்கும். ஹாங்காங், தாய்லாந்திற்கு இத்துணிகளை விற்கிறார்கள். தாய்லாந்தில் இந்தத் துணிதான் விற்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு வகையான முன்னேற்றத்தை-எல்லோரும் பார்த்து வியக்கத்தக்க அளவில் ஒருநாடு பெற்று வருகிறது. அதை நான் எப்படிப் பார்க்காமல் இருப்பது! அதனால் சைனாவின் அழைப்பை ஏற்று அந்த நாட்டிற்குப் போய் வர வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அங்கு நான் சென்று வந்தேன்.

சியோல் நகரத்திலிருந்து நேராக பீகிங்கிற்கு விமானம் கிடையாது. தென் கொரியாவிற்கும் வடகொரியா என்ற கம்யூனிஸ்ட் நாட்டிற்கும் விரோதம் இருந்து கொண்டிருந்த காரணத்தால், தென்கொரியாவிற்கும் சைனாவிற்கும் அரசியல் ரீதியான உறவு எதுவும்



கிடையாது. ஆகையால் விமானம் அங்கிருந்து போவதில்லை. சோலில் இருந்து பீகிங் போக வேண்டும் என்றால் டோக்கியோ போய்த்தான் போக வேண்டும். இந்த முறையில் டோக்கியோ போவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அந்நாட்டு மக்களைக் கண்டு வியந்து போனேன்.

**ஜப்பானியரின் கடின உழைப்பு**

ஜப்பானின் வளர்ச்சி மேலை நாடுகளைப் பிரமிக்க வைக்கும் அளவுக்கு அமைந்து இருப்பதை எல்லோரும் அறிவார்கள். உலகம் பூராவும் பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கிறது. கட்டடங்கள் விலை இறங்கிக் கொண்டிருக்றது என்று கூறினேன். ஹாங்காங் போயிருந்த போது பம்பாயைச் சேர்ந்த சிலர் கட்டடங்களை வாங்கியிருந்தார்கள். 10 மாடி 20 மாடிக் கட்டடங்கள், விலையைக் கேட்டால் 5 கோடி, 10 கோம என்று சொன்னார்கள். விலை இறங்கிக் கொண்டிருக்கின்றது. அதனால் தான் கட்டடம் வாங்குகிறோம் என்றும் கூறினார்கள். சில நாட்களுக்கு முன்னதாக 'இந்தியா டுடே' என்ற டத்திரிகையைப் பார்த்தபோது பம்பாயில் கட்டடங்கள் விலை வீழ்ச்சியடைந்திருக்கிறது என்று ஒரு 'கிராபிக்' போட்டிருந்தார்கள். பிரிட்டனில் தொழிற்சாலைகளை வாடகைக்கு விடுகிறோம் என்று விளம்பரங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அமெரிக்கா பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாக மிகப் பெரியகட்டடங்களை அழிக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில் நான் கண்ட கீழை நாடுகளில், நான்கைந்து நாடுகளிலும் அந்தப் பொருளாதார மந்தம் அவ்வளவு மோசமாக இருக்கவில்லை. அவர்கள் வேகமாகவளரா விட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஜப்பானியர்கள் கடின உழைப்பு, அவர்களுக்குள்ளே இருக்கின்ற சீரான உறவு முறை இவற்றின் காரணமாக அவர்களுடைய வருமானம் வளர்ந்து கொண்டே இருக்கிறது என்று பத்திரிகையிலும் போட்டிருக்கிறார்கள். ஜப்பானிலே இருக்கின்ற கம்பெனிகள் தொடர்ந்து லாபத்தை ஈட்டி வருவதைப் பார்த்து ஜப்பான் நாட்டு நிர்வாகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அங்கு நிறையபேர் வருகிறார்கள். 'ஜப்பான் ஸ்டைல் ஆப் மேனேஜ்மென்ட்' என்று பல புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எம்.பி.ஏ. கோர்ஸில் படிப்பவர் பலரும் மேலைநாட்டு முறையைப் பற்றித்தான் படிக்கிறார்கள். ஆனால் மேலை நாட்டு முறை தோற்றுவிட்டது. ஜப்பான் நாட்டு நிர்வாக முறை வென்று விட்டது என்று சொல்லிக் கொள்கின்ற இந்த நாட்டுக்குத்தான் மேலை நாடுகளிலிருந்துபலர் வருகிறார்கள். ஆராய்ச்சியும் செய்கின்றனர். இதில் மகிழ்ச்சிக்குரிய செய்தி நம் 'பாரதிதாசன்' யுனிவர்சிட்டி எம்.பி.ஏ, 'ஜப்பான் ஸ்டைல் ஆப் மேனேஜ்மென்ட்' என்ற முறையை ஒட்டி கோர்ஸ் அமைத்திருப்பதேயாகும். இது இந்தியாவிலும் நாம் உணர்ந்து விழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

**போராட்டம் உண்டு; ஆனால் உற்பத்தி குறையாது**

ஜப்பானில் அவர்கள் எப்படி முன்னேறுகிறார்கள் தெரியுமா? பம்பாயில் ஏழு மாத காலமாக வேலை நிறுத்தம். அத்தனைக் கஷ்டங்களிலும் தொழிலாளர்கள் கோரிக்கை எழுப்புகிறார்கள். அது நியாயமான கோரிக்கையாக இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு வேலை நிறுத்தம் நடக்கும்போதும் பேச்சு வார்த்தை நடத்தி அந்தக் கோரிக்கை வெற்றி பெற வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தொழில் ஸ்தாபனத்திற்கு இடைஞ்சல் வரக்கூடாது. தொழிலே சிதைந்து விட்டால், போராட்டத்திற்கு வேலையும் இருக்காது. போராட்டம் தொழிலைச் சாகடிக்கக் கூடிய நிலை வந்து விடக் கூடாது. 7 மாத காலம் போராட்டம் நடக்கிறது; நமக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அங்கு போராட்டம் எல்லாம் நடந்தாலும்கூட, உற்பத்தி குறையக்கூடிய காரியங்களில் அவர்கள் ஈடுபடுவதில்லை. எல்லா சக்திகளும் நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக பயன்படுகின்றனவே தவிர, அதன் முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் வகையிலே கிடையாது. முயற்சியும், உழைப்பும், நேரமும் பாழ்படுவதில்லை என்பதைத்தான் பார்க்கிறோம். நாட்டினுடைய பெருமையும் எல்லோருடைய உழைப்பும் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுகின்றன.

சைனாவில் நாம் சொல்வதைப் போல ஒரு பெரிய இரும்புத்திரை போட்டு யாரும் எதையும் பார்க்கமுடியாத அளவுக்கு ஒரு நிலையில் அவர்கள் வைத்திருக்கவில்லை. ஓரளவிற்கு அவர்கள் முன்னால் இருந்த சில கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருக்கிறார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)



## சரித்திரத்தில் இடம் பெற்ற முதல்வர்

சீத்துணவா என்னவெனக் குழந்தை கேட்க
தாய்கண்ணில் நீர்பெருக்கும் துயரம் நீக்கி

எத்திசையும் போற்றுவண்ணம் அண்ணா கண்ட
இதயக்கனி ஏழையரின் இதயத் தையே

குத்தகையாய்ப் பெற்றிட்ட தலைவர் வாரிக்
கொடுத்தேகை சிவந்தவள்ளல் பிள்ளை கட்கு

சத்துணவுத் திட்டத்தை வழங்கி என்றும்
சரித்திரத்தில் இடம்பெற்ற முதல்வர் வாழ்க !

புதுகை மதிநண்பன்





## சத்துணவால் வரும் புத்துணர்வு

சீத்துணவுத் திட்டம் ஆம்ஆம்
சமுதாய மாற்றம் காண !

புத்துணர்வு புதிய மார்க்கம்
புதுப்பார்வை இளமைக் கல்வி

அத்துணையும் அமையப் பெற்ற
அரும்புகளின் ராஜ பாதை

வித்துக்கள் மரங்கள் ஆகும்
வியப்புக்குறி ஒன்றே தோன்றும்.

— தமிழ்த்தாசன்



கம்பன் அடிப்பொடி திரு சா. கணேசன் அவர்கள் 28.7.82 அன்று கோவையில் இயற்கை எய்தினார். அவரது உடல் 29.7.82 அன்று காரைக்குடியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. மாண்புமிகு செய்தி- அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அரசு சார்பில் இறுதி மரியாதை செலுத்தினார்.

29.7.'82 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களை, இராஜஸ்தான் மாநில மாண்புமிகு துணை கல்வி அமைச்சர் திரு பி. டி. கல்லா அவர்கள் சந்தித்தார்.



சென்னை தண்டையார்ப்பேட்டைப் பகுதியில் தீவிபத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களும் குடிசைமாற்று வாரியத் தலைவர் திருமதி. சுலோசனா சம்பத் அவர்களும் 3.8.82 அன்று நிதிஉதவி, அரிசி, துணிகள் ஆகியவற்றை வழங்கினார்கள்.





சென்னை மாநகராட்சி நடத்தும் அஞ்சநேயநகர் தெலுங்கு உயர்நிலைப் பள்ளியை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் 30.7.82 அன்று திறந்து வைத்தார்.

# படமும் செய்தியும்

'ஹஜ் கையேடு' என்ற நூலினை 31.7.82 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கா. ராசா முகமது அவர்கள் வெளியிட்டார்.



மத்திய அரசு தகவல் ஒலிபரப்பு அமைச்சகச் செயலாளர் திரு எஸ். பி. லால் அவர்கள் 29.7.'82 அன்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு கா. திரவியம் அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.








## தூத்துக்குடி அனல் மின் நிலையம்

# வளர்ச்சிக்கு ஒரு சின்னம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்களில் மிகப் பெரியது தூத்துக்குடி அனல் மின் திட்டமாகும். ரூ. 267 கோடிக்கு அதிகமான செலவில் உருவாகியுள்ள இந்த அனல் மின் நிலையம், 630 மெ.வா. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறனுடையதாகும்.

சென்னைக்குத் தெற்கே 600 கி.மீ. தொலைவில் கடலோரப் பகுதியில், அமைந்துள்ள தூத்துக்குடி அனல்மின் நிலையம், தொழில்நுட்ப அமைப்பில், அண்மைக்கால நவீன கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப, சிலவற்றைக் கொண்டுள்ளது.

1976ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் களப்பணிகள் துவக்கப்பட்டு, இதன் 210 மெ.வா. திறனுடைய மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களும் முறையே 1979ஆம் ஆண்டு ஜூலையிலும், 1981-ஆம் ஆண்டு ஜனவரியிலும், 1982ஆம் ஆண்டு ஏப்ரலிலும் இயக்கி வைக்கப் பெற்றன.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் இரண்டாவது கட்ட நிறைவுவிழா (29.7.82) திருவள்ளுவர் ஆண்டு 2013 ஆடித்திங்கள் 13ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில், இந்திய அரசுத் திட்டக்குழு உறுப்பினர் திரு முகமது ஃபசல் அவர்கள் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது இயந்திரத்தை இயக்கி வைத்தார்கள்.

விழாவுக்கு வருகை தந்திருந்த அனைவரையும் மின்வாரியத் தலைவர் திரு பெ. முராரி ஐ.ஏ.எஸ். வரவேற்றார்.

அடுத்து, வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.என். இராசேந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தூத்துக்குடியின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது தூத்துக்குடி அனல் மின்நிலையம். உடலுக்கு உயிர் எவ்வளவு முக்கியமோ அது




**மாமுலன்**





போன்று நாட்டு வளர்ச்சிக்கு மின்சாரம் முக்கியமானதாகும். நம்முடைய தொழில் வளர்ச்சி மின்சாரத்தை ஒட்டியே அமைந்துள்ளது. இனிமேல் சென்னை மாநகரத்தைப் போல கோவை மாவட்டத்தின் பகுதியைப் போல தூத்துக்குடிப் பகுதிகளிலும் விரைவில் தொழிற்கூடங்கள் பெருகும்.

"தூத்துக்குடிப் பகுதியைச் சேர்ந்த வணிகர்களும் வசதி படைத்தோரும் பரம்பரையாகச் செய்துவரும் தொழில்களையே நம்பியிராமல் புதிய தொழில்களைத் தொடங்க வேண்டும். இதனால் தொழிற்கூடங்கள் நிரம்பிய பகுதியாகத் தூத்துக்குடிப் பகுதி வளரும். தூத்துக்குடி அனல் மின் திட்டத்தினால் தூத்துக்குடிப் பகுதி பெரும் நன்மைகளைப் பெறுவது உறுதி.

தூத்துக்குடி அனல்மின்நிலைய நகர்க் குடியிருப்பு இரண்டாம் பகுதியைத் திறந்து வைத்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.ச.இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"பொறுப்பு ஏற்றது முதல் நமது முதலமைச்சர் அவர்கள் மின் உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைவதற்குத் தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

"மண்டல வாரியாக மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்று கூறப்பட்டாலும் ஒவ்வொரு மாநிலமும் மின் உற்பத்தியில் தன்னிறைவுபெறுவதன் மூலம் இந்தியா முழுவதும் மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும். ஆகவே, மண்டல அளவில் பார்க்காமல், மாநில அடிப்படையில் மின் உற்பத்தி திட்டங்களை ஆராய்ந்து மத்திய அரசு அனுமதி வழங்கவேண்டும்.

"தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் புனல் மின் நிலையங்களுக்கு உரிய வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்தியுள்ளோம். இனி, நம் தேவைக்கு அனல் மின் நிலையங்களை அமைப்பதில் கவனம் செலுத்தியுள்ளோம்.

"வரும் ஐந்தாண்டுக் காலத்தில் இன்னும் மூவாயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்தால்தான், அந்த நேரத்தில் தேவைப்படும் தமிழ்நாட்டின் மின் தேவையை நிறைவு செய்ய இயலும்.

"நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை வெட்டுவதன் மூலம் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி உற்பத்தியாக இருக்கும் 1,340 மெ.வா. மின்விசை முழுவதும் தமிழ்நாட்டுக்குத் தேவைப்படும். அங்கு இரண்டாவது சுரங்க வேலை தொடங்குவதற்கு முன்பே, அங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை வாங்கிக் கொள்வீர்களா என்று உத்தரவாதம் கேட்டார்கள். அரசு சார்பில் உத்தரவாதம் அளித்துள்ளோம்.

# புதிய முறையில் மின் உற்பத்தி

இன்று உலக முழுவதிலுமே மின் சக்தி பற்றாக் குறையை நிறைவு செய்ய வேண்டிய நெருக்கடியின் காரணமாக எந்தப் புதிய வகை உற்பத்தி வாய்ப்புகளேனும் கிடைக்காதா என பெருமளவில் விடா முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இந்த நிலையில் தமிழ்நாடு அரசும், இந்தப் புதிய முயற்சியில் அந்த நாடுகளுக்கு இணையாக ஆர்வங் காட்டுவதில் வியப்பேதும் இல்லை. இம்முறையில் மாக்கடல் வெப்பவிசை மாற்றமும், சூரிய விசை மாற்றமும் உயிரின கழிவின் விசைமாற்றம், உயிரின கழிவுப் பொருள் வாயுவின் விசைமாற்றம் ஆகிய சில, மாநில மின் வாரியம் கருத்தாய் செய்து வரும் மாற்று மின் உற்பத்தி வாய்ப்புகளாகும். இஃதன்றி மாநிலத்தில் குறுநீர் மின் நிலையங்கள் (Micro Hydel Station) அமைப்பதற்கு அநேக வாய்ப்புகள் உள்ளன. இதனை மாநில மின்வாரியம் சீரிய முறையில் ஆய்வு செய்து கொண்டுள்ளது. இதுவரை இத்தகைய 50 குறு மின்நிலையங்களுக்கான இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு இவ்வகையில் மொத்தம் 195.35 மெகாவாட்/815.60 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவில் மின்சார உற்பத்தி செய்ய வாய்ப்புகள் கண்டறியப் பட்டுள்ளன. பைகாரா அணை (2 மெ. வா) வைகை அணை (6 மெ. வா) கீழ்பவானி அணை (8 மெ. வா) ஆகிய இடங்களில் இக்குறு மின் நிலையங்களுக்கான திட்டங்கள் ஏற்கனவே திட்டக்குழுவின் அனுமதி பெற்றுவிட்டன. இவற்றை செயலாக்குவதற்கு தமிழ்நாடு மின் வாரியம் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

மாற்று மின் விசை மூலங்களைப் பயனுக்குக் கொண்டு வருவதிலும் தமிழ்நாடு மின் வாரியம் சிறிய முயற்சி ஒன்றினைச் செய்துள்ளது. சென்னைக்கு அருகிலுள்ள உத்தண்டி என்ற கிராமத்தின் அருகேஉள்ள வயற்களத்தில் ஊரக மின்மயமாக்க நிறுவனத்தின் (REC) உதவியுடன் சூரிய மின்விசை உதவியால் இயங்கும் 300 வாட் வெளிப்பாடு தரும் போட்டோ வோல்டாயிக் இறைவை ஒன்றினை நிறுவிஉள்ளது. இப்புதிய முயற்சியின் நல்ல வெற்றியினை தொடர்ந்து இன்னும் இது போன்ற பல இறைவைகளை வரும் பத்தாண்டிற்குள்ளாக

ஆகவே, நெய்வேலியில் உற்பத்தியாக இருக்கும் மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டுக்குத் தரப்படவேண்டும். நமது தேவைக்குப் போக மீதியை மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கலாம்."

மின்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையின் இறுதியில், தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்ட காலத்தில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் போனசாக அளிக்கப்படும் என்றும், மின்சார வாரியத்தில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவது போல அகவிலைப்படி அளிக்கப்படும்என்றும் அறிவித்தார்.



அவர்கள் தூத்துக்குடி அனல் மின் நிலைய மூன்றாவது இயந்திரத்தை இயக்கி வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''கல்பாக்கம் அணு மின்நிலையம் நடப்பு ஆண்டு முடிவிற்குள் இயங்கத்தொடங்கிவிடும்.

''தேசிய மின் அமைப்பு கிரிட் ஏற்படுத்த வேண்டும் என்பது தான் மத்திய அரசின் திட்டவட்டமான கொள்கை. ஆனால், இது குறித்து போதுமான பயன் இது வரை கிடைக்கவில்லை. எனினும் எல்லா மாநில மின்வாரியங்களின் ஒத்துழைப்புடன் மனநிறைவு அளிக்கும் வகையில் தேசிய மின் அமைப்பு 'கிரிட்' அமைக்கப்படும்.




தூத்துக்குடி அனல்மின்நிலைய மலரை வெளியிட்ட மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

''நல்ல சிந்தனையில் இருந்து தான் நல்ல செயல் பிறக்க முடியும். நமது முதலமைச்சர் அவர்களின் நல்ல சிந்தனையின் விளைவாகவே நல்ல செயல்கள் தொடங்கப்படுகின்றன.

''ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மின்சாரத்தின் வளர்ச்சி முக்கியமானது, சோவியத் புரட்சிக்குப் பிறகு ''சோவியத் நாட்டுக்கு உடனடியான தேவை மின்சாரம்! மின்சாரம்!! மின்சாரம்!!!'' என்றார் லெனின்.

''இது மின்சாரக் காலம். மின் உற்பத்தியின் அளவு நம் வளர்ச்சியைக் காட்டும். மின் உற்பத்தியில் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகம் வளர்ச்சி-முன்னேற்றம் அடைந்துள்ளது. மின் உற்பத்தி பெருகியுள்ள பொழுதே தொழில் வளர்ச்சி குன்றியுள்ளது என்று சிலர் புகார் கூறுவது பொருந்தாக் கூற்றாகும். நம்முடைய தேவையும் மின்உற்பத்தியும் பெருகியிருப்பது நம் வளர்ச்சியைக் காட்டும்.''

இந்திய அரசு திட்டக்குழு உறுப்பினர் திரு. மூகமது ஃபசல்

"தமிழ்நாட்டின் மின்உற்பத்திக்கான திட்டங்களுக்குத் திட்டக்குழு எல்லா வகையான உதவிகளையும் தொடர்ந்து அளிக்கும். தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு நான் ஏதேனும் உதவி செய்திருந்தால் என்னுடைய நாட்டுக்குச் செய்யும் கடமையே தவிர வேறல்ல. இந்தியாவில் ஒரு பகுதி தானே தமிழ்நாடு!

"தமிழ்நாட்டில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு மின்சாரத்தின் உபயோகம் நபர் ஒருவருக்கு 60 யூனிட்டாக இருந்தது. ஆனால் இப்பொழுது நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரம் 181 யூனிட்டாக உயர்ந்துள்ளது. மின்சக்தி உற்பத்தியும் பயனும் உயர்ந்துள்ளது. அனைத்து இந்திய சராசரி, நபருக்கு 131 யூனிட்டாகவே உள்ளது.

"நம் நாட்டின் மின்சார உற்பத்தித் திறன் இப்பொழுது 31,000 மெகாவாட்டுகள் ஆகும். 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மின் உற்பத்தியை மேலும் 19,666 மெகாவாட்டுகள் அளவுக்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

"நம் நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களின் செயல்பாடுகள் மனநிறைவு அளிக்கக் கூடியதாக அமையவில்லை. அந்நிலையங்களில் குறைபாடு கொண்டதாக உள்ள சாதனங்களை மாற்றி அமைத்து, தரமான சாதனங்கள் பொருத்தப்படவேண்டும். இதுபோன்ற ஏனைய வளர்ச்சிப் பணிகளைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அனல் மின் நிலையங்களுக்கு நிபுணர் குழுக்கள் சென்று சோதனையிட்டுக் குறைபாடுகளைத் தீர்க்க யோசனை கூறும். ஆனால் மின் நிலையங்களுக்கு நிலக்கரி வழங்குவதை விரைவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்."



# மின்சார வளர்ச்சிக்கு முதன்மை

ஒரு நாட்டின் வளர்ச்சியில் மின்சார வளர்ச்சியின் பங்கை நன்கு உணர்ந்து, தமிழ்நாட்டின் மின்சார நிலைமையை பற்றாக்குறையிலிருந்து மாற்றியமைத்து தன்னிறைவு நிலைக்குக் கொண்டு வரவேண்டிய இன்றியமையாத் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, தமிழகத்தின் மின்சார வளர்ச்சிக்கென சிறப்பிடம் தந்து செயலாற்றி வருகிறது. தமிழ்நாட்டின் மொத்த செலவினத்தில் 35 சதவீதத்தை மின்சாரச் செலவினத்திற்கென ஒதுக்கியுள்ளதே அதற்குப் போதிய சான்றாகும்.

அதுமட்டுமல்லாமல், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் மின்சார வளர்ச்சிக்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 1,023 கோடி மின்சாரத்திற்கு செலவிட வகை செய்யப்பட்டுளளது. அதில் ரூ. 572.30 கோடி மின் உற்பத்தித் திட்டத்திற்கும், ரூ. 325 கோடி மின்சார வழிச் செலுத்துதல் மற்றும் வழங்கல் (Transmission and Distribution) பணிகளுக்கும் ரூ. 115 கோடி ஊரக மின் மயமாக்கல் பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் ஆண்டுச் செலவாக ரூ. 220 கோடி மின்சாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் உற்பத்தி, வழிச் செலுத்துதல், வழங்கல் மறறும் ஊரக மின் மயமாக்கம் பணிகளுக்கென முறையே ரூ. 117.25 கோடியும் ரூ. 77.21 கோடியும், ரூ. 24.54 கோடியும் பகுக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் தமிழ்நாட்டின் மின்சார வளர்ச்சிக்கு எத்தகைய முதன்மை அளிக்கப்படுகிறதுஎன்பதை எடுத்துக் காட்டும்.

பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கடந்து வந்து இன்று தமிழகத்தின் மொத்த மின்னமைப்புத் திறன் 2,929 மெகாவாட்டாக உயர்ந்து நிற்கிறது. அதில் 18 நீர் மின் நிலையங்களின் மூலம் 1,369 மெகாவாட்டும், மைய அரசின் பொறுப்பில் உள்ள 600 மெகாவாட் திறன் கொண்ட நெய்வேலி அனல்மின் நிலையத்தை உள்ளிட்டு மொத்தம் நான்கு அனல் மின் நிலையங்களின் மூலம் 1,560 மெகாவாட்டும் அடங்கும். தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் இயக்கி வைக்கப்படும் 210 மெகாவாட்திறன் கொண்ட மின்னணி மேற்கண்ட மொத்த மின்னமைப்புத் திறனை மேலும் கூட்டுகிறது.

இவ்விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

''ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே இன்னொரு மாநிலத்திலிருந்து மின்சாரம் வாங்குவதைத் தவிர்த்திடும் வகையில் மின்சார உற்பத்தியை நாம் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்று கூறினேன். அந்த வகையில் நம்முடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மின் உற்பத்தியைப் பெருக்கும் இப்பணியில் ஈடுபட்டு, பாடுபட்டு வரும் அனைவரையும் பாராட்டுகிறேன்.

''கேரள மாநில அரசு, தமிழ்நாட்டுக்கு வழங்கும் மின்சாரத்திற்கு, முன்பு 28 காசுகளாக விலை நிர்ணயித்திருந்ததை இப்பொழுது 48 காசாக உயர்த்திக் கேட்கிறது. கேரளத்தில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழகத்தையும், கருநாடகத்தையும் தங்கள் மின்விசையை விற்பதற்கான வாணிபச் சந்தையாகக்

கருதி. வியாபாரம்பேசுகிறார்கள் இது இந்தியா ஒரே நாடு என்று பேசும், ஒருமைப்பாட்டுப் பேச்சுக்கு அர்த்தமேயில்லை என்பதைக் காட்டுகிறது.

''நாம் இங்கே நெல்லை அதிகமாக உற்பத்தி செய்கிறோம். மத்திய அரசு அதில் ஒரு பகுதியை நம்மிடமிருந்து பெற்று கேரள மாநிலத்திற்குக் கொடுக்கிறது. அப்படி கேரளத்திற்குக் கொடுக்கும அரிசியை விற்கிற உரிமை தமிழ்நாட்டிடம் இருந்தால், அது மின்சாரத்திற்கு ஏற்றிக் கொடுக்கும் விலைக்கு நிகராக நம்முடைய அரிசிக்கும் நாம் விலை கேட்டுப் பெறமுடியும்.

''நமக்கும் கருநாடக மாநிலத்திற்கும் காவிரி நீர் பிரச்சினை தொடர்ந்து இருந்துவந்தபோதிலும், நம்முடைய வேண்டுகோளை ஏற்று கருநாடக முதல்வர் 12 டி.எம்.சி. தண்ணீர் கொடுத்து உதவியிருக்கிறார். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

''நம்முடைய ஆறுகளை தேசிய உடைமையாக்குவதுதான் இப்பிரச்சினைகளைத் தீர்க்க ஒரே வழியாகும். ஆட்சிக்கு வந்தவுடன் நதிகளை தேசிய உடைமையாக்க வேண்டும் என்று சொன்னேன். நான் அரசியல் தெரியாமல் பேசுவதாகச் சொன்னார்கள். ஆனால், நதிகளை தேசியமயமாக்குவதுதான் பிரச்சினையைத் தீர்க்கும் என்று இப்பொழுது நம்புகிறார்கள்.

''நம்முடைய மாநிலத்தின் மின்சாரத் தேவைகளுக்குப் புனல் மின் நிலையங்களையும், அனல் மின் நிலையங்களையும் மட்டும் நம்பியிருந்தால் முடியாது. தமிழ்நாட்டுக்குப் புதிய அணுமின் நிலையங்கள் தேவை. இதற்குத் திட்டக்குழுவும் மத்திய அரசும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.''

இறுதியாக மின்வாரியத் தொழில்நுட்ப உறுப்பினர் திரு.எல்.ஆர். சப்தரிஷி நன்றி நவின்றார்.

இவ்விழாவினை முன்னிட்டு தூத்துக்குடி அனல் மின்நிலையத் திட்டப்பகுதி முழுவதும்கொண்டிருந்த அலங்கார விழாக்கோலம் தூத்துக்குடிப் பகுதி வருங்காலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஒளியூட்டும் என்பதை உறுதிப்படுத்தியது.

### தன்னிறைவுத் திட்டம்

கிராமப் பகுதிகளை முன்னேறச் செய்ய ஒருங்கிணைந்த முன்னோடிப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம், அரசினரின் கவனத்தைச் சில காலமாகவே ஈர்த்து வருகிறது. குடிநீர், கல்வி, மருத்துவ வசதிகள் போன்றவை இதில் அடங்கும். இதில் மின்சார வாரியத்தின் பங்கானது நிலத்தளவிலான நீர்த் தொட்டிகளுக்கும், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கும் தேவைப்படும் விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு வழங்கும் பணியே. 1980-81ல் முதல் கட்டமாக 69 வட்டாரங்களில் இத்தகைய தன்னிறைவுத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.

புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு இதனுடைய பயன் சென்றடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துருவில் உருவாக்கப்பட்ட ஒரு ஒப்புயர்வற்ற உன்னதமான திட்டமாகும். தானே முன்னின்று முழு உற்சாகத்தோடு இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்ற முதலமைச்சரின் உள்ளக் கிளர்ச்சியானது இத்திட்டத்தை முழு உற்சாகத்தோடு செயல்படுத்த நமக்கு ஊக்கத்தை அளிக்கிறது முதல் கட்டப் பணிகளின் வளர்ச்சியால் ஏற்பட்ட ஊக்கத்தின் காரணமாக இத்திட்டம் மேலும்150 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களுக்கு இரண்டாவது கட்டமாக விரிவாக்கப்பட்டது.

1980-81லும், 1981-82லும் முறையே 1120, 636 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கும் நிலத்தளவிலான நீர்த் தொட்டிகளுக்கும், மின்சார வாரியம் மின்னிணைப்பு வழங்கியுள்ளது.




அடுத்த இதழ்

தமிழரசு

(1-9-1982)

தமிழ்த்தென்றல்

திரு. வி. க.

நூற்றாண்டுச்

சிறப்பிதழ்


# காலணித் தொழிலாளருக்கு இலவசப்பணிக்கூடம்

அந்த ஏழைத் தொழிலாளர்களின் முகத்தில் உற்சாகம் காணப்படுகின்றது.

காற்றிலும், மழையிலும், வெய்யிலிலும் தொல்லைக்கு ஆளான அவர்களுக்கு விடிவு காலம் பிறந்திருக்கிறது.

அதை எண்ணி எண்ணி அவர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்திருக்கின்றனர்!

ஆம், ஆதிதிராவிடர் நலத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில், காலணித் தொழிலாளர்களுக்குப் பணிக்கூடம் வழங்கு விழா, ஜூலைத் திங்கள் 22ஆம் நாள், குறளகத்தின் முன்னே அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலில் நடந்தது.



காலணித் தொழிலாளர்களுக்குப் பணிக்கூடம் வழங்கிய நிகழ்ச்சியில் - மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு எஸ். என். இராசேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் ஆகியோர்.

ஒரு பக்கம், காலணித் தொழிலாளர்களுக்கான பத்து 'பணிக் கூடங்கள்' (Bunks) வரிசையாக வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

தமிழ்நாட்டில் பரவலாக உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த காலணித் தொழில் செய்பவர்களில், வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் வாழ்வு முன்னேற வழிவகைகள் செய்து கொடுக்க, தமிழ்நாடு அரசு, சமூக நலத்துறை மூலம் ரூ.35.00 இலட்சம் மானியமாக வழங்க ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தினை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் அமல்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த நல்ல திட்டத்தின் மூலம், தாழ்த்தப்பட்ட வகுப்பினைச்சார்ந்த காலணித்தொழில் புரிபவர்கள் 500 பேர் ஒவ்வொருவரும் ரூ.5000 மதிப்புள்ள பணிக்கூடம் (பெட்டிக்கடை) - ஒன்றையும், ரூ.1500 மதிப்புள்ள தையல் இயந்திரம் ஒன்றையும், ரூ 500 மானியமும் பெறுவர்.

இந்தப் பணிக்கூடங்கள் மாவட்டந்தோறும் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரம் மற்றும் காஞ்சிபுரம் 50, வேலூர், 25, தர்மபுரி 25, கடலூர் 25, தஞ்சாவூர் 30, திருச்சி 30, புதுக்கோட்டை 15, கோவை 30, பெரியார் 25, சேலம் 25, ஊட்டி 20, மதுரை 40, பரமக்குடி 25, திருநெல்வேலி 25, நாகர்கோவில் 10 ஆக மொத்தம் 400 பணிக்கூடங்கள். மீதமுள்ள 100 பணிக்கூடங்களையும் மேற்கண்ட மாவட்டங்களில் தேவைக்கேற்ப வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காலணித் தொழிலாளர்களுக்குக் கை கொடுக்கும் அந்தக் கவின் மிகு விழாவில் - கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் திரு இரா. பூர்ணலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள்பேசுகையில் அடித்தளத்தில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு-வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களை மேலே உயர்த்த வேண்டும் என்ற நோக்கில், புரட்சித் தலைவர் அவர்கள் இம்மாதிரியான நல்ல பல திட்டங்களைச் செயல் படுத்தி வருகின்றார்!' என்றார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் தலைமை வகித்துப் பேசினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

"தமிழக அரசியல் வரலாற்றிலேயே - இம்மாதிரி காலணித் தொழிலாளர்களுக்குப் பணிக்கூடம் வழங்கும் திட்டம் செயல்படுவது இதுவே முதல் தடவையாகும். ஏழை எளியவர்கள் மேம்பட, அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட இதுபோன்ற திட்டங்கள் செயல் வடிவம் பெறுகின்றன. திட்டங்கள் வெற்றி பெற பொதுமக்களுடைய ஒத்துழைப்பு மிகவும் தேவை''.

மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்கள், முதல் கட்டமாக சென்னையில் பத்து காலணிப் பணிக்கூடங்கள் வழங்கிப் பேசுகையில்-தெரிவித்தார்.

''கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் இந்த ஆண்டு 4 இலட்சத்து 62 ஆயிரம் பேருக்குச் சுய வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதில் 2 இலட்சம் பேர் ஆதிதிராவிடர்கள். இவர்களுக்காக இந்த வாரியத்துக்கு அரசு கொடுத்தது ஒரு கோடியே 97 இலட்சம் ரூபாய். ஆதிதிராவிடர்களுக்கு நேப்பாளத்தறி 8 இடங்களில் ரூ. 7 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுத்துள்ளோம். ஒவ்வொரு இடத்திலும் தலா 50 பேர் வேலை செய்கிறார்கள்.

''தமிழ்நாடெங்கும் புதிதாக 150 கிராமிய நூற்பு நிலையங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. அதில் 50 ஆதிதிராவிடர் ஏழை விதவைப் பெண்களுக்கென்று உருவாக்க அரசு முன் வந்துள்ளது. கிராமப்புற மக்களுக்குச் சாண எரிவாயு அமைத்துக் கொடுப்பதற்கும் வாரியம் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது."

கதர் கிராமத் தொழில் வாரியத்தில் சிறப்பாகப் பணியாற்றிய அலுவலர்களுக்கு விழாவில் பரிசுகளும் வழங்கப்பட்டன.

விழாவில், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் துணைத் தலைவர் திரு பட்டுக்கோட்டை பாப்பையன், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு ஆ. ர. கருப்பண்ணன் இ. ஆ. ப., தொழில்துறை ஆணையாளர் திரு. எம். ஏ. கே. தய்யப், இ. ஆ. ப. வாரிய உறுப்பினர் சைதை ஆ. தமிழ்ச்செல்வன், இணை இயக்குநர் திரு. கொ. துரைராஜ் ஆகியோர் வாரியப் பணிகளை விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

அன்றைய விழா, அடித்தளத்து மக்களுக்கு அரசு ஆற்றி வருகின்ற அரும்பணிகளை எடுத்துக் காட்டுகின்ற இனிய விழாவாக இருந்தது என்றால், அது மிகையாகாது.

— பி. வி. ஜி.

# திருச்சி மாவட்டத்தில் இருபது அம்சத் திட்டப் பணிகள்

புதிய இருபதம்சத் திட்டத்தின் கீழ், திருச்சி மாவட்டப் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நலிந்த பிரிவினரில் குறிப்பாக ஆதி திராவிட வகுப்பினர், பழங்குடியினர் பயன் பெறும் வகையில் திருச்சி மாவட்டத்தின் பணிகள் உள்ளன. குடிசைப் பகுதியில் வீட்டுமனைகள் வழங்குவதோடு, பொருளாதார அடிப்படையில் 31,500 நலிந்த குடும்பங்களுக்கு உதவிட திட்டமிடப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களுக்குப் பயன்படு மளவில், குடிநீர் வசதி செய்திடவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சையில் 1982-83 ஆம் ஆண்டுக்கான இலக்கு 29,950 ஆகும். கடந்த ஜூன் திங்கள் இறுதிவரை 2,303 ஆண் பெண்களுக்குக் குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

தொலைதூர கிராமம் ஒன்று உட்பட திருச்சி மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமங்களும் மின் ஒளி பெற்றுள்ளன. இவ்வாண்டில் 3,700 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கத் திட்டமிட்டுள்ளது. 1982-83-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 39,264 குடும்பத்தினர் பயன் அடைவர்.

தேசிய கிராமப்புறத் திட்டத்தின் கீழ் தகுதி பெற்ற ஏழை எளியவர்களுக்கு 8,18,703 மனித நாட்கள் வேலைவாய்ப்பு அளிக்கப்படும். சாண எரிவாயு ஆலைகள் 780 அமைக்கப்படவுள்ளன. மாவட்டமெங்கும் ஒரு கோடி மரங்கள் நடப்பெறும். மாவட்டத்தினால் நடத்தப்பெறும் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களினால் பயன்பெறுவோரில் ஆதிதிராவிட மக்கள் 28 சதவீதம், பெண்கள் 30 சதவீதம்.

பருப்பு வகைகள் 285 மெட்ரிக் டன்னும், எண்ணெய் வித்துக்கள் 498 மெட்ரிக் டன்னும் இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்படும்.

ஒன்றிலிருந்து மூன்றாம் வகுப்புவரை பயிலும் 2.62 இலட்சம் ஏழை மாணவர்களுக்கு இலவச சிலேட்டு, நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படும். ஆறிலிருந்து பத்து வரை படிக்கும் ஆதிதிராவிட வகுப்பு பழங்குடி மாணவர்களுக்கும் இலவசப் புத்தகங்கள் வழங்கப்படும்.

பொது விநியோகத் திட்டத்தில் தனியார் தலையீடு அறவே நீக்கப்படுகின்றது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுகள் நியாய விலைக் கடைகளை நடத்துகின்றன. புதிய இருபதம்சத் திட்டத்தின் இலக்குகளை எட்ட மாவட்டம் உறுதி பூண்டுள்ளது. அடிப்படை நிலையிலிருந்து இத்திட்டங்களைச் சிறந்த முறையில் அமல் நடத்துவதற்காக வட்ட அளவில் திட்டங்கள் வரையப்பட்டு கண்காணிப்பு அமைப்புகளும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.



# கோவை பருத்தி

கோவைப் பிராந்தியத்திற்கு ஏற்ற பயிர் சுழற்சி மற்றும் ஊடுபயிர் சாகுபடி முறைகளைக் கண்டறியும் பொருட்டு செய்த ஆய்வில் சோளம்+பாசிப்பயறு—பருத்தி—வெங்காயம் — முள்ளங்கி—உளுந்து என நான்கு பயிர்கள் பயிரிடுவது மிகவும் இலாபகரமானது எனத் தெரிய வந்துள்ளது. இதைத் தொடர்ந்து மூன்று பயிர்களைக் கொண்ட பயிர் சுழற்சியான ராகி — பருத்தி+வெங்காயம்— சோளம்+அவரை அதிக வருவாய் தரவல்லது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வு வேளாண் பல்கலைக்கழக உழவியல் துறையில் நடத்தப்பட்டது.

நான்கு பயிர்களைக் கொண்ட பயிர் சுழற்சியான சோளம்+பாசிப்பயறு— பருத்தி+வெங்காயம்—முள்ளங்கி—உளுந்து பயிர்கள் மிக அதிக நிகர இலாபமான ரூ. 13,000-யை ஒரு எக்டர் நிலத்திலிருந்து ஒரு ஆண்டில் கொடுத்துள்ளன. இதைத் தொடர்ந்து மூன்று பயிர்களைக்கொண்ட பயிர் சுழற்சியாக ராகி — பருத்தி+வெங்காயம் —சோளம்+அவரை ஒரு ஆண்டில் ஒரு எக்டரிலிருந்து ரூ. 7,000 நிகர வருவாய் தந்துள்ளது.

எனவே, காய்கறிகள் விற்பனை செய்யத்தக்க வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் நான்கு பயிர்கள் கொண்ட சுழற்சி மிக அதிக வருவாய் தரவல்லது. காய்கறிகள் விற்பனைக்குத்தக்க வாய்ப்புகள் இல்லாத இதர பகுதிகளுக்கு மூன்று பயிர் சுழற்சி ஏற்றது.

மேலும் பயிரிடப்பட்ட பயிர்களின் கழிவுப்பொருள்களை அந்நிலத்திலேயே போட்டுச்சாகுபடி செய்வதாலும், பயறு வகைகளைக் கலப்புப்பயிராக பயிரிடுவதாலும் பயிர்களுக்கு வேண்டிய இரசாயன உரத்தில் 25 சதத்தை மீதப்படுத்த முடியும் என்பது மேற்கண்ட ஆய்விலிருந்து தெளிவாகியுள்ளது. இந்தத் தகவலைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தகவல் தொடர்பு நிலையம் தெரிவிக்கின்றது.

**ஆதாரம்:** டி. என். ஏ. யு ரிசர்ச் ஹைலைட்ஸ்



# அரிசி நெல் வகைகள்

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட நெல்வகைகளைப் பரிசோதனை செய்து பார்த்ததில் ஒரு சில இரகங்கள் முக்கிய சில பூச்சிகளை எதிர்த்து வளரும். ஆற்றலை இயற்கையாகப் பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நெல் வகைகள் பலதரப்பட்ட வயதைக் கொண்டவையாக இருந்தன. இவ்வாராய்ச்சியினைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சியியல் துறையைச் சேர்ந்த திரு ஏ. முகம்மது ஹனீபா மேற்கொண்டு கீழ்க்கண்ட ஆய்வு முடிவுகளைத் தெரிவித்துள்ளார்.

**தண்டு துளைப்பான்:**

ஏ.டி.டி 16, டி.கே.எம்.5, ஏ.டி.டி 6, ஜி.இ.பி 24, பி.டி.பி 10, ரத்னா, ஏ.ஆர்.சி. 5949, 6044, கோ 19, ஏ.ஆர்.சி6150, கோ. 10, ஐ.இ.டி 2615 ஆகியவை தண்டு துளைப்பான் தாக்குதலை ஓரளவு அல்லது நன்முறையில் எதிர்த்து வளரும் ஆற்றல் பெற்றவையெனக் கண்டறியப்பட்டது:

**இலை சுருட்டுப் புழு:**

ஐஏஆர்ஐ 6658, டபிள்யூ 1268, ஆர்பி 79-117014. கெம்காபூர் (மத்திய மாநிலம்), தட்டன் சம்பா (தென் ஆர்க்காடு), இருமூடன் (மைசூர்), பொட்டமோடன் (மலபார்), விராலிசம்பா (மதுரை), துங்குவாம்பை (சைனா) வெள்ளைக் குறுவை, சோனா, (பஞ்சாப்), சுலோ (கியூ), செகியாங்ஸ்டேசன் யூனிவர்சிடி எண். 3 (சைனா), கோ 10, டிகேஎம். 8 ஜிஇபி 24 மற்றும் டிகேஎம். 6 முதலியன இலைச் சுருட்டுப் புழுவினை எதிர்த்து வளரும் தன்மை பெற்றவையெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**புகையான்:**

புகையானை எதிர்த்து வளரும் தன்மையினை ஐஇடி 4247 மற்றும் ஐஇடி 5796 ஆகிய நெல் இரகங்களைப் பெற்றிருப்பதாக மேற்கண்ட ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டது.

மேற்கண்ட தகவலை வேளாண் பல்கலைக்கழக தகவல் தொடர்பு நிலையம் தெரிவிக்கின்றது.

**ஆதாரம்:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.



# தென்னையின் எதிரிகள்!

*தென்னை மரத்தை என்னென்ன பூச்சிகள் சேதப்படுத்துகிறது?*

தற்போது தென்னையிலே செந்தலைவண்டு அல்லது சிவப்புக்கூன் வண்டு, கருந்தலை வண்டு சேதம் ஏற்படுத்துகின்றது.

*சிவப்புக்கூன் வண்டின் தாக்குதல் எங்கெங்கு காணப்படுகின்றது?*

திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி, கோவை இன்னும் மற்ற தென்னை பயிரிடப்படும் மாவட்டங்களிலே காணப்படுகின்றது.

*சிவப்புக் கூன்வண்டு எப்படியிருக்கும்?*

இது சிவப்பு கலந்த பழுப்பு நிறத்திலே இருக்கும். ஆறு கரும்புள்ளிகள் தெரியும். வாய் தும்பிக்கைபோல் நீண்டிருக்கும்.

*சிவப்புக் கூன்வண்டின் சேதம் எப்படி ஏற்படுத்தும்?*

இந்த கூன்வண்டு, மரத்திலே சின்ன துவாரங்கள் செய்து வட்ட வடிவமாக முட்டைகளை இடும். முட்டையிலிருந்து வெளிவர'கிரப் புழுக்கள்' மஞ்சள் நிறமாக இருக்கும். தலை மட்டும் சிவப்பாக இருக்கும்.

இந்த புழுக்கள் இளமரங்களைத் துளைத்து மிருதுவான திசுக்களைத் தின்னும். பொதுவாக 5 வருடத்திற்கு மேற்பட்ட மரங்களிலே குருத்து பாகத்திலே இருக்கும் மரப்பட்டையிலே உள்ள துவாரங்களிலே புழுக்கள் கடித்து, வெளியே தள்ளிய சக்கைகள் இருக்கும். துவாரங்களிலிருந்து பசை போன்ற திரவம் வெளிவரும். சேதம் அதிகமானால், மரம் பட்டுப்போகும்.

*தற்பொழுது செந்தலை வண்டின் சேதம் எங்கே முக்கியமாக காணப்படுகின்றது?*

கோவை மாவட்டத்திலே குண்டடம், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, பெரியநாயக்கன் பாளையம் இன்னும் மற்ற பகுதியிலும் பரவி வருகின்றது.

*சிவப்பு கூன்வண்டுகளின் சேதத்தை எப்படித் தடுப்பது?*

தாக்கப்பட்ட மரங்களை வெட்டி எரித்துவிட வேண்டும். ஒருசில பகுதியிலே சேதம் ஏற்பட்டால், அந்த பகுதியிலே இருக்கிற புழு, கூட்டுப்புழு, வண்டுகளை எடுத்துவிட்டு தார் அல்லது சுண்ணாம்பு பூசலாம். இந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்த, மரத்திலே துவாரம் செய்து ''பாஸ்டாக்ஸின்'' என்கிற மாத்திரையை மரத்துக்கு 1 வீதம் உள்ளேபோட்டு சிமெண்டு அல்லது களிமண்ணால் பூசலாம். (அல்லது) மாத்திரை போடவில்லை என்றாலும், மரத்தின் உள்ளே ஊசி மூலம் கட்டுப்படுத்தலாம். 1 லிட்டர் தண்ணீரிலே செவின் 50%, 2 கிராமோடே, லெபாசிட் 1 மில்லி கலந்து, கலந்த கலவையை ஊசி மூலம் செலுத்திக் கட்டுப்படுத்தலாம்.

*என்ன முக்கியப் பூச்சி தென்னையைத் தாக்குகிறது?*

கருந்தலைப்புழு உடல் வெள்ளையாகவும், தலை மட்டும் கருப்பாகவும் இருக்கும்.

*கருந்தலைப்புழு எப்படி சேதப்படுத்தும்?*

முதலில் இலையிலேயிருக்கிற பச்சையத்தை சுரண்டிச் சாப்பிடும். இதனால் பசுமை இல்லாமல், காய்ந்து தீய்ந்து போனது போல தெரியும். மரமே எரிந்த மாதிரி தெரியும். மகசூலும் குறையும். மட்டைகள் கீற்று பின்ன பயன்படாது. அடுப்பெரிக்கத்தான் உதவும்.

*கருந்தலைப்புழு எந்தெந்த மாவட்டங்களிலே இருக்கிறது?*

சேலம், வடஆர்க்காடு, மதுரை மாவட்டங்களிலே அதிகமாக சேதப்படுத்துகின்றது.

*கருந்தலைப்புழுவைக் கட்டுப்படுத்துகிற முறையைச் சொல்லுங்கள் ?*

புழுதாக்கிய மட்டைகளை வெட்டி எரிக்க வேண்டும். இதனால் ஓலைகளுக்குள்ளே இருக்கிற புழு, கூட்டுப்புழு எல்லாம் இறந்து விடும். சேதம் பரவாமல் தடுக்கப்படும்.



5 வயதுக்குட்பட்ட மரங்கள் உயரம் குறைவாக இருக்கும். 1 லிட்டர் தண்ணீரிலே 2 கிராம செவின் 50 சதவிகித மருந்தை தெளித்துக் கட்டுப்படுத்தலாம். ஊசிமூலம் மருந்து செலுத்தி புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.



*மனிதர்களுக்கு ஊசி போடுகிற மாதிரி மரத்திற்கும் ஊசி போட முடியுமா?*

முடியும். 5 வயசுக்கு மேற்பட்ட மரத்தில், முதலில் முற்றிய காய்களை பறித்துவிட வேண்டும். மரத்தில் தரையிலிருந்து 3 அடி உயரத்தில் ஆகர் அல்லது உளியிலே 1 செ.மீ. சுற்றளவுக்கு 2 அங்குலம் முதல் 6 அங்குலம் வரை ஆழம் செய்யவேண்டும். அந்த துவாரத்தில் ஊசிமூலம் நுவக்ரான் மருந்தை மரத்திற்கு 4 முதல் 5 மில்லி வரை, உள்ளே செலுத்த வேண்டும். அடுத்து துவாரத்தை களிமண்ணும் பைடலானும் கலந்து மூட வேண்டும். அடுத்து 45 நாள் கழித்துதான் காய் பறிக்க வேண்டும். மருந்து செலுத்தியதன் பலன் 1 மாதம் கழித்துத் தெரியும். புதியதாக வரும் மட்டையில் பூச்சி அடிக்காது. மருந்தின் சக்தி, மூன்று மாதம் வரை இருக்கும்.

*மரத்தில் போடும் ஊசி, உச்சியில் இருக்கும் பூச்சியை எப்படி சாகடிப்பது?*

வேரில் போடும் ஊசிமருந்து, தண்ணீரோடு மரம் மருந்தையும் உறிஞ்சி, ஓலை, பாளை, காய் இவைகளில் நச்சுத்தன்மையை உண்டாக்கும். இதனால் புழுக்கள் செத்து விடும்.

*வேறு ஏதாவது பூச்சியைக் கட்டுப்படுத்த முறையிருக்கிறதா?*

இருக்கு. புழு, கூட்டுப்புழுக்களை உண்ணக்கூடிய ஒட்டுண்ணிகளை வளர்த்து, ஒரு மரத்திற்கு 15 முதல் 20 வரை, 15 நாட்கள் இடைவெளியிலே விட்டு கட்டுப்படுத்தலாம். இதை விட ஊசிமூலம் மருந்து செலுத்துகிற முறை சுலபம், மரத்திற்கு ஒரு ரூபாய்தான் செலவாகும்.

தகவல்:

ஜி. பாலசுப்பிரமணியன்,
உதவிப் பேராசிரியர், பூச்சிஇயல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-3.

## புதிய மீன்பிடி துறைமுகங்கள்

கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டத்தில் ரூ. 234 இலட்சம் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் ரூ. 77 இலட்சம் செலவிலும் மீன்பிடி துறைமுகங்கள் கட்டுவதற்கு 1982ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் அரசு ஒப்புதல் வழங்கியது. மேற்கண்ட துறைமுகப் பணிகளின் கட்டுமானப் பணியை உடனடியாகத் தொடங்கி, குறிப்பிட்டகாலத்திற்குள் முடிப்பதற்காகக் கண்காணிப்புப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர்கள் தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக அலுவலர்கள் அடங்கிய சிறப்புப் பொறியியற் பிரிவு ஒன்றை அரசு அமைத்துள்ளது. மேற்கண்ட கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் நாகர்கோயிலில் இருக்கும். சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகக் கட்டுமானப் பணிகளை நாகர்கோவிலிலிருந்து அதன் நிர்வாகப் பொறியாளர் கவனிப்பார். வாலிநோக்கம் மீன்பிடி துறைமுகக் கட்டுமானப் பணிகளைக் கீழக்கரையிலிருந்து அதன் நிர்வாகப் பொறியாளர் கவனிப்பார். உட்கோட்ட அலுவலர்கள் பணி இடங்களில் இருந்து செயலாற்றுவார்கள்.

# சேலத்தில் தன்னிறைவுத் திட்டம்

தன்னிறைவுத் திட்டம் தமிழகத்தில் மூன்று கட்டமாகச் செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் முதல் கட்டத்தில் ஐந்து வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டச் செயல்பாடு 1980-81ல் முடிவடைந்தது.

சேலம் மாவட்டத்தில் 1981-82ம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் 2-ஆம் கட்டமாக 16 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு ரூ. 331.93 லட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியது. ஊராட்சி ஒன்றியங்கள் இத்திட்டத்திற்காக அவைகளின் நிதியிலிருந்து ரூ.107.81 இலட்சம் பங்குத்தொகையாக அளித்ததனால் மொத்தம் ரூ. 439.74 இலட்சம் தொகையில் இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப் பட்டது. அத்திட்டத்தில் இணைப்புச் சாலைகள் அமைத்தல், சிறுபாலங்கள் கட்டுதல், கிராமிய மருந்தகங்கள், மகப்பேறு நிலையங்கள் மற்றும் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற 1,412 பணிகளை எடுத்துச் செய்யப் பட்டன.

இந்த திட்டத்தை மிகச் சிறந்த முறையில் செயலாக்கி. மேற்கொண்ட எல்லாப் பணிகளையும் சிறப்பாகவும், முனைப்பாகவும், செய்து முடிந்தமைக்கு அயோத்தியா பட்டணம் ஊராட்சி ஒன்றியம் முதலாவதாகவும், சங்ககிரி ஊராட்சி ஒன்றியம் இரண்டாவதாகவும், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம் மூன்றாவதாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. அந்த ஊராட்சி ஒன்றியங்களில் செய்யப்பட்ட தன்னிறைவுத் திட்டப் பணிகள் மிகவும் போற்றற்குரியன.



# நெசவாளர் வீடு கட்டும் திட்டத்திற்கு அதிகப்படியான கடனுதவி

கூட்டுறவு இயக்கத்தைச் சார்ந்துள்ள நெசவாளர்களின் நலனுக்காக, தமிழ்நாடு அரசு அமல் நடத்தி வரும் நல்வாழ்வுத் திட்டங்களுள் ஒன்று நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டமாகும். இதுவரை வீடு ஒன்றின் உச்ச மதிப்பீடு (நிலம் உட்பட) ரூ. 8,000/- ஆக இருந்தது. இதில் ரூ. 5.600/-ஐ அதிகப்பட்சக் கடனாக ''ஹட்கோ'' நிறுவனத்தின் மூலமும் ரூ. 1,000/- தமிழ்நாடு அரசிடமிருந்து மான்யமாகவும் வழங்கப்பட்டு வந்தது. வீட்டின் மொத்த மதிப்பீட்டில் மீதித் தொகையான ரூ. 1,400/- ஐ இத்திட்டத்தில் பயனடைபவர்கள் ஏற்றுக் கொள்ளும் நிலை இருந்தது. கடந்த 8-6-1982 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்திந்திய கைத்தறி மற்றும் கைத்தறித்தொழில் குழுவின் கூட்டத்தில் தமிழக கைத்தறி அமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்கள், வீடு கட்டுவதற்கான மூலப் பொருள்களின் விலை ஏற்றத்தின் காரணத்தை முன்னிட்டு, நெசவாளர் வீடுகட்டும் திட்டத்தின் கீழ், வரையறுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 8,000/-லிருந்து ரூ. 12,000/- ஆக உயர்த்தப்பட வேண்டுமென்று "ஹட்கோ" நிறுவனத்திடம் கேட்டுக் கொள்ளலாம் என ஆலோசனை கூறினார். இதன் தொடர்பாக "ஹட்கோ" நிறுவனம் 1-7-82 முதல் நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் மதிப்பீட்டுத் தொகையை ரூ. 12,000/ ஆக உயர்த்தியுள்ளது.



# தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்

தமிழகத்தில் பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவும் பொருட்டு இந்திய நிறுமச் சட்டம் 1956-ன்படி, '' தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் '' 1974-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு செயல்படத் தொடங்கியது. இக்கழகம் கீழ்கண்ட இடங்களில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கான உரிமங்களைபெற்றிருந்தது.

தஞ்சாவூர் தாலுகா
பெரம்பலூர் தாலுகா
சங்கரன்கோவில் தாலுகா
திருக்கோவிலூர் தாலுகா
சிவகெங்கை தாலுகா

தஞ்சாவூரில் ஒன்றும், பெரம்பலூரில் ஒன்றுமாக இரு சர்க்கரை ஆலைகளை இக்கழகம் நிறுவியுள்ளது. தஞ்சாவூர் ஆலை அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை என்றும், பெரம்பலூர் ஆலை-ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை என்றும் பெயரிடப்பட்டுள்ளது. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும், ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் அறைவையைத் தொடங்கின. இனிமேல் புதியதாக நிறுவவிருக்கும் சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட வேண்டும் என்ற அரசின் மாறுபட்ட கொள்கைக் கிணங்க உளுந்தூர்ப்பேட்டை தாலுகாவிலுள்ள பெரிய செவலை கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள சர்க்கரை ஆலை கூட்டுறவுத் துறையில் நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. மீதமுள்ள இரு உரிமங்களையும் செயல்படுத்துவதற்குச் சரிவர நடவடிக்கை எடுக்காத காரணத்தால் சங்கரன் கோவில் மற்றும் சிவகெங்கை ஆகிய இடங்களில் சர்க்கரை ஆலை நிறுவ வழங்கிய இரு உரிமங்களையும் மத்திய அரசு ரத்து செய்து விட்டது. போதிய அளவு கரும்பும் தண்ணீரும் கிடைக்காததுதான் மேற்படி இடங்களில் சர்க்கரை ஆலைகள் நிறுவ முடியாமைக்கு காரணமாகும்.







தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் உளுந்தூர்ப்பேட்டை கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிர்மாணிக்கும் பொறுப்பை ஏற்று குறிப்பிட்ட கால கெடுவான 1980-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் நிர்மாணித்து மேற்படி ஆலை தனது அறவையை 16.10.80 அன்று துவங்கியது. நிதி நிறுவனங்களான இந்திய தொழில் அபிவிருத்தி வங்கி, இந்திய தொழில் நிதிக் கழகம் மற்றும் இந்திய தொழில் கடன் முதலீட்டுக் கழகம் ஆகியவைகள் உரிய நேரத்தில் மேற்படி ஆலைக்கு கடன் வசதி அளிக்க முன் வராத காரணத்தால் தமிழ்நாடு அரசு ரூ. 515 இலட்சங்கள் வழிவகை முன் பணமாக கொடுத்து ஆலையை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க உதவி செய்தது.

செங்கை மாவட்டம் திருத்தணி வட்டத்தில் நாள் ஒன்றுக்கு 1250 டன் கரும்பு அறவை செய்யும் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவவதற்கு மத்திய அரசு 1982-ஆம் ஆண்டு மார்ச் மாதம் உரிமம் வழங்கியுள்ளது. மேற்படி ஆலையை நிர்மாணிக்கும் பொறுப்பை மாநில அரசு தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திடம் அளித்துள்ளது. குறிப்பிட்ட கால கெடுக்குள் முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுத்துறையில் இயங்கி வருகின்ற அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம்' தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எறையூர், திருச்சி மாவட்டம் ஆகியவற்றின் 1980-81 (1.10.80-30.9.81) ஆண்டிற்கான செயல்திறன் விவரங்கள் பின் வருமாறு:

கூடுதலாக கிடைக்கும் கரும்பு சக்கையைக் கொண்டு நாளொன்றுக்கு 15 டன் உற்பத்தி திறன் கொண்ட சிறிய காகித ஆலை ஒன்றை மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அருகில் நிறுவ இக்கழகம் பணிக்கப்பட்டுள்ளது. அரசின் பங்கு மூலதனமாக ரூ, 30 இலட்சம் 1979-80 ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆலை அமைக்கும் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றது. மேற்படி ஆலையை நிர்மாணிக்க உதவும் பணியில் ஆலோசனைகள் கூறும் பணிக்காக கோயம்புத்தூர் மாவட்டம் மடத்துக்குளத்திலுள்ள மெசர்ஸ் வெங்கடேசா கன்சல்டென்ட் என்பவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் சர்க்கரை ஆலைகளுக்கு வேண்டிய கரும்பு அறவைக்கு பயன்படும் உருளைகளை சீர் அமைக்கவும், உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்யவும் தொழிற் பட்டறை ஒன்று நிறுவ உத்தேசித்துள்ளது. இதற்கான இடத்தை சென்னை பெருநகர் அபிவிருத்திக் கழகம் மறைமலை நகரில் சுமார் 5.50 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள இடத்தை ஒதுக்கியுள்ளது.



அரசின் பங்குத் தொகையான ரூ. 20.00 இலட்சம் வழங்குமாறு தமிழ்நாடு அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதி வழங்கப்பட்டவுடன் மேற்கொண்டு வேலைகள் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

இம்மாநிலத்தில் எங்கெல்லாம் கரும்பு பயிரிடப்பட வாய்ப்புள்ளதோ அம்மாதிரியான சில இடங்களில் சிறிய சர்க்கரை ஆலை அமைப்பதில் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் தீவிரப் பங்கு ஏற்றுள்ளது.

# பயனுள்ள நுண்ணுயிர்கள்



பயிருக்கு இடப்படும் பாஸ்பரஸ் இரசாயன உரங்களில் பெரும்பகுதி மண்ணில் முடக்கப்பட்டு மிகச்சிறிய அளவான 10 சதம் முதல் 30 சதம் அளவே உடனடியாகக் கிடைக்கும். இக்குறையை நிவர்த்திக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நுண்ணுயிரியல் துறையினர் முயன்று மகத்தான வெற்றியும் கண்டுள்ளனர்.

ராகி, கம்பு, மக்காச்சோளம், சோளம் மற்றும் கோதுமை ஆகிய பயிர்களின் வேர் மண்டலத்தில் பெருகி வளரும் ஒருவகை பாக்டீரியாக்கள் நன்மை பயப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக கம்புப் பயிரின் வேர் மண்டலத்தில் இயற்கையில் காணப்படும் பாக்டீரியாக்கள் டிரை-கால்சியம் பாஸ்பேட்டாக எளிதில் கரையாத வடிவிலுள்ள





பாஸ்பரஸ் சத்தைக் கரைத்து பயிர்கள் கிரகித்துக்கொள்ளும் வகையில் உதவுகின்றன என்பது நமக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியினை அளிக்கும் செய்தியாகும்.

பிடி. 3 என்ற எண் கொடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட வகை பாக்டீரியா, டிரைகால்சியம் பாஸ்பேட்டிலிருந்து 82.8 சதம் பாஸ்பரஸ் சத்தை பிரித்தெடுத்து பயிர்கள் கிரகிக்கும் வகையில் அளிக்கின்றன.

இவ்வகை பாக்டீரியாக்களையும், மற்ற ரைசோபியம் பாக்கட் போன்று விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் நாள் வெகு தொலைவில் இல்லை எனத் தோன்றுகிறது. இத்தகவலைத் தெரிவிப்பது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தகவல் தொடர்பு நிலையம்.

# கல்வெட்டு ஆய்வு

நமது இந்தியத் திருநாட்டின் தொன்மை வரலாறு எழுதுவதற்குக் கல்வெட்டு என்ற ஒரு வரலாற்றுக் கருவூலம் இருப்பதையே வெளிநாட்டார்தான் நமக்குப் புலப்படுத்தினர். 1837-ஆம் ஆண்டு முதன் முதலில் ஜேம்ஸ் பிரின்சப் என்னும் வெளிநாட்டார் இந்தியாவில் உள்ள கல்வெட்டுக்களை எல்லாம் திரட்டிப் பார்த்து அறிந்தோமென்றால், இந்தியாவின் பழமையான வரலாற்றை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம் என்ற கருத்தை வெளியிட்டார். இந்தியாவில் தொல்லியல் ஆய்வு சிறப்பாக அமைவதற்குக் காரணமாக இருந்தவரும் அவரே ஆவார். அவரது கருத்து வெளியானதற்குப் பிறகு 'ஆசியாவின் ஆராய்ச்சிகள் (Asiatic Researches) ஆசியக் குழுவின் 'இதழ், ('Journal of the Asiatic Society) இந்தியாவின் பழமை (Indian Antiquery) ஆகிய நூல்களில் இந்தியாவில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் பற்றி சில கட்டுரைகள் வெளிவர ஆரம்பித்தன.

இந்திய அரசால் 1861-ல் நியமிக்கப்பட்ட தொல்லியல் ஆய்வாளர் (Archaeological Surveyor) என்னும் அலுவலர் இந்தியாவில் காணப் பெறும் கல்வெட்டுக்களையெல்லாம் படியெடுப்பதற்கும், இவற்றைப் படித்து நூல் வடிவில் வெளிக் கொணர்வதற்கும் ஏற்பாடுகள் செய்தார். அவ்வாறு படியெடுக்கப்பட்டு, படிக்கப் பெற்ற கல்வெட்டுக்களில் மௌரியப் பேரரசன் அசோகன் காலத்தவைகளை எல்லாம் ஒன்று திரட்டி, 'அசோகன் காலத்தியக் கல்வெட்டுக்கள் என்று ஒரு தனித் தொகுதியை 1871 முதல் 1885 வரை இந்திய அரசு தொல்லியல் துறையின் டைரக்டர் ஜெனரலாக இருந்த அலெக்சாண்டர் கன்னிங்காம் என்பவர் வெளியிட்டார். அதே போன்று இந்திய அரசாங்கத்தின் முதல் கல்வெட்டாய்வாளராக விளங்கிய ஜே. எப்ஃபிளீட் (1883-86) என்பாரும் குப்தர் காலத்திய கல்வெட்டுக்கள் அனைத்தையும் தொகுத்து ஒரு தனித் தொகுதியாக வெளிக் கொணர்ந்தார்.

சென்னை அரசாங்கத்தின் முதல் கல்வெட்டாய்வாளராக விளங்கிய இ. ஹீல்ட்ஷ் (1886-1903) என்பார் தென்னிந்தியக் கல்வெட்டுக்களின் முதல் தொகுப்பை 1903-ல் வெளியிட்டார். இதற்கும் ஒரு ஆண்டுக்கு முன்பாக அலெக்சாண்டர் கன்னிகஹாமை அடுத்து டைரக்டர் ஜெனரலாக பதவியேற்ற ஜே. பர்ஜஸ் என்பார் எபிகிராபியா இண்டிகா (Epigraphia Indica) என்னும் இதழைக் கல்வெட்டுக்கள் பற்றி மட்டும் வெளியிடுவதற்காகவே தொடங்கினார். இதுவரை முப்பத்தெட்டுத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

சென்னை அரசாங்கத்தின் கல்வெட்டிலாகாவினர் படியெடுத்த கல்வெட்டுக்களின் முக்கிய குறிப்பை 'தென்னிந்தியக் கல்வெட்டு அறிக்கை' (Annual Report of South Ird an Epigraphy) என்ற அறிக்கையினை 1887 முதல் வெளிவர ஆரம்பித்தன. நாளடைவில் 1945-46-லிருந்து இந்தியக் கல்வெட்டுக்களின் ஆண்டறிக்கை என்றபெயரில் வெளி வருகிறது. இதுவரை 1967-68 ஆண்டறிக்கை வரை வெளி வந்துள்ளது.

நடன. காசிநாதன்
துணை இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத் துறை

கல்வெட்டுக்களைப் படியெடுக்கத் தொடங்கி அரை நூற்றாண்டு

முதலாம் இராஜராஜன் காலத்திய கல்வெட்டு, தஞ்சை பெருவுடையார் கோயில், தஞ்சை.(கி.பி. 11-ஆம் நூற்றாண்டு)





விக்ரம சோழன் கல்வெட்டு(கி.பி.12-ஆம் நூற்றாண்டு)

ஆவதற்குள் சுமார் 25,000 கல்வெட்டுக்களையும் சுமார் 500 செப்புப் பட்டயங்களையும் கண்டுபிடிக்க முடிந்தது. அவைகளைமுறையாகப்படிக்கவும் அது பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதவும் தொடங்கியவுடன் பல தனித்தனிக் கல்வெட்டுத் தொகுதிகள் வெளிவரத் தொடங்கின. எப்ஃ. கீல்ஹார்ன் அவர்களால், தயாரிக்கப் பெற்ற 'வட இந்தியாவின் கல்வெட்டுகள்' (Inscription of North India) என்ற தொகுப்பு குறிப்பிடத்தக்கதாகும். இத்தொகுப்பு எபிகிராபியா இண்டிகாவின் ஐந்தாம் தொகுதியில் பிற்சேர்க்கையாக வெளி வந்தது.

பிராமி எழுத்திலும் கரோஷ்டி எழுத்திலும் எழுதப்பட்டிருந்த இந்தியக் கல்வெட்டுக்களைப் படித்த பெருமை பிரின்சப், லேஸன், நோரிஸ், கன்னிங்ஹாம், ஜி. பூலர், செனர்ட், கீல்ஹார்ன் ஹூல்ட்ஷ், ரைஸ், எபிபட், பளீட். ஆகிய வெளிநாட்டார்களையும், பகவன்லால் இந்திரஜித், ஆர். எல். மித்ரா, ஆர். ஜி. பண்டார்க்கர், வி. வெங்கையா, எச். கிருஷ்ணசாஸ்திரி, என். ஜி. மஜும்தார், கோபிநாதராவ், கே வி. சுப்பிரமண்ய அய்யர் ஆகிய இந்திய நாட்டினரையும் சாரும்.

இந்திய மொழிகளில் வெளி வந்த சில மாத இதழ்களிலும் கல்வெட்டுக்கள் தொடர்பான கட்டுரைகளை இந்திய நாட்டைச் சேர்ந்த கல்வெட்டறிஞர்கள் எழுதலாயினர். தமிழ் நாட்டில் செந்தமிழ், 'தமிழ்ப் பொழில்' போன்ற இதழ்களில் தமிழ் அறிஞர்கள் மு. இராகவையங்கார், ஆர். இராகவையங்கார், நா. மு. வேங்கடசாமி நாட்டார், சதாசிவ பண்டாரத்தார், மயிலை சீனி. வேங்கடசாமி, சுந்தரேச வாண்டையார் போன்றோரும் கல்வெட்டுக்கள் பற்றிய கல்வெட்டுக்களை எழுதினர்.

கர்நாடக மாநிலத்திலிருந்து எபிகிராபியா கர்நாடிகா (Epigraphia Carnatica) என்ற தொகுதியும், ஜேர்னல் ஆப் மிதிகல் சொஸைட்டி (Journal of Mythic Society) என்ற இதழும் கல்வெட்டு பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்தாங்கிவெளிவந்தன. கேரள மாநிலத்தில் உள்ள கல்வெட்டுக்களையெல்லாம் திரட்டித் தொகுத்து திருவிதாங்கூர் தொல்லியல் வெளியீடுகள் (Travancore Archaeological Series) என்பதை மூலம் வெளியிடப்பட்டன. தமிழ்நாட்டில் உள்ள புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள கல்வெட்டுக்கள் மட்டும் தொகுக்கப் பெற்று 'புதுக்கோட்டை ஸ்டேட்டின் கல்வெட்டுக்கள் (Thirumalai Tiruppathi Devastanam Inscriptions) என்ற பெயரில் ஒரு தொகுதி வெளிவந்தது.

ஆந்திராவில் உள்ள திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் திருப்பதியில் உள்ள கல்வெட்டுக்களை எல்லாம் தொகுத்துத் 'திருமலை திருப்பதி தேவஸ்தானக் கல்வெட்டுக்கள்' (Inscriptions of Pudukkottai State) என்ற பெயரில் ஐந்து தொகுதிகளை வெளியிட்டுள்ளனர். அக்கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை தமிழ்க் கல்வெட்டுக்களே ஆகும்.

தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதிகள் இதுவரையில் ஒன்று முதல் பதினான்கு வரை தொடர்ந்தும், பின்னர் பதினேழு, பத்தொன்பது, இருபத்து மூன்று ஆகிய தொகுதிகளும் வெளிவந்துள்ளன. முதல் தொகுதி மகாபலிபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள பல்லவர்களின் கல்வெட்டுக்களை உள்ளடக்கியும், இரண்டாம் தொகுதி தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்களை உள்ளடக்கியும், மூன்றாம் தொகுதி சில பல்லவர், சோழர் செப்புப் பட்டயங்களை உள்ளடக்கியும் வெளிவரப்பட்டுள்ளன. நான்காம் தொகுதியிலிருந்து எட்டாம் தொகுதி வரை 1887 முதல் 1903 வரை தமிழகத்தில் படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களைத் தாங்கி இருக்கின்றன. ஒன்பது, பத்து, பதினொன்றாம் தொகுதிகள் ஆந்திர, கர்நாடகப் பகுதிகளில் படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக் கொண்டுள்ளன. பன்னிரண்டாம் தொகுதி பல்லவர் காலக் கல்வெட்டுக்களையும், பதின்மூன்றாம் தொகுதி சோழ மன்னர்களில் இராஜகேசரி என்று மட்டும் குறிக்கப்படுபவர்களின் கல்வெட்டுக்களையும், பதினான்காம் தொகுதி முற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டுக்களையும், பதினேழாம் தொகுதி தமிழகத்தில் 1904-ம் ஆண்டில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களையும், பத்தொன்பதாம் தொகுதி சோழ மன்னர்களில் பரகேசரி என்று மட்டுமே காணப்பெறும் கல்வெட்டுக்களையும் இருபத்து மூன்றாம்தொகுதி தமிழகத்தில் 1905-லிருந்து படியெடுக்கப்பட்ட சில கல்வெட்டுக்களையும் தாங்கி வெளி வந்திருக்கின்றன.

எபிகிராபியா இண்டிகா ஒன்று முதல் முப்பத்தொன்பது வரை தொடர்ந்து வெளி வந்துள்ளன. இத்தொகுதிகளில் இந்தியாவில் காணப்பெறும் முக்கிய சில கல்வெட்டுக்களை வரலாற்றிஞர்களும், கல்வெட்டறிஞர்களும் ஆராய்ச்சிகளைக் கொண்டு ஆய்ந்து கட்டுரை எழுதி உள்ளார்கள். இத்தொகுதிகளைப் போன்றே ஜேர்னல் ஆப் மித்திக் சொசைட்டி (Journal of Mythic Society) தொகுதிகளிலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதப்பட்டு இருக்கின்றன. வரலாற்றாய்வாளர்களுக்கு இக்கட்டுரைகள் மிக மிக இன்றியமையாதவைகளாகும்.

1887 முதல் 1938 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் எந்தெந்த மாவட்டத்தில், எந்தெந்த ஊரில் தமிழகத்தில் படியெடுக்கப்பட்டன என்ற விவரம் அடங்கிய 'படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களின் வரிசை (List of Inscriptions Copied என்ற ஒரு தொகுதியும், அக்கல்வெட்டுக்கள் எந்தெந்தக் குல மன்னர்களைச் சார்ந்தவை, அவைகளில் காணப்பெறும் சில முக்கிய செய்திகள் ஆகியவை உள்ளடக்கிப் 'பகுதித் தொகுப்பு' (Subject Index) ஒன்றும் வெளிக் கொணரப்பட்டுள்ளன. இத்தொகுதிகள் கல்வெட்டுக்களைப் பற்றி ஆய்வு செய்வோருக்குப் பெரிதும் உதவுபவைகளாகும். இதைப் போன்றே சென்னை மாகாணக் கல்வெட்டுக்களின் வரிசை (A Topographical list of the Inscription of Madras presidency என்ற பெயரில் மூன்று தொகுதிகள் சென்னை அரசாங்கத்தால் வெளிக் கொணரப்பட்டன. இவை 1887 முதல் 1915 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களின் தொகுப்பாகும். இதில் ஒவ்வொரு கல்வெட்டினைப் பற்றியும் அது எந்த மன்னன் காலத்தியது. அதில் குறிக்கப்பட்டுள்ள முக்கிய குறிப்பு ஆகியவை தரப்பட்டுள்ளன.



சோழர் காலச் செப்புப்பட்டயம்.

தமிழகத்தில் இருந்த மேல்நாட்டதிகாரிகளான சிவல், மெக்கன்சி போன்றோர் தனிப்பட்ட முறையில் சில கல்வெட்டுக்களை நேரிடையாகப் படித்துக் குறிப்பெடுத்தும்; மேலும் பலரை அணுகி அவர்களிடமிருந்து பெறப்பட்ட செய்திகளைச் சேகரித்தும் நூல்கள் வெளியிட்டுள்ளனர். 'தென்னிந்திய வரலாற்றுக் கல்வெட்டுக்கள்' (The Historical Inscriptions of Southern India என்னும் பெயரில் ஒரு தொகுதி ஸ்ரீ சிவெல்லும், 'மெக்கன்சி கையெழுத்துப்பிரதிகள்(Meckenzie Manuscripts) என்ற பெயரில் சில தொகுதிகளை மெக்கன்சியும் வெளியிட்டனர்.

சென்னை அரசாங்கத்துக்கீழ்த் திசை ஓலைச்சுவடி நூலகத்திலும், தஞ்சாவூர் சரசுவதிமஹால் நூல் நிலையத்திலும் இருந்த கையெழுத்துப் பிரதிகளில் காணப்பட்ட கல்வெட்டுக்களின் வாசகங்களைத் தொகுத்து அவற்றுக்கு உரிய விளக்கக் குறிப்புக்களைச் சேர்த்து சென்னை அரசு ''தென்னிந்திய கோயிற் சாசனங்கள்'' (South Indian Temple Inscriptions) என்ற பெயரில் மூன்று தொகுதிகளை வெளிக் கொணர்ந்துள்ளது. இத்தொகுதிகளின் மூன்றாம் தொகுதியின் இரண்டாம் பகுதியில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கல்வெட்டுக்கள் ஆகராதி ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், எழுத்துக்களின் வளர்ச்சி பற்றியும் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் இருந்த தமிழ் வரலாற்றுக் கழகம் என்ற குழு பல்லவர் காலச் செப்புப் பட்டயங்களையெல்லாம் ஒன்று சேர்த்து 'பல்லவர் செப்புப் பட்டயங்கள்' என்று ஒரு தொகுதியும், பாண்டியர் காலச் செப்புப் பட்டயங்களை ஒன்று சேர்த்து 'பாண்டியர் செப்புப் பட்டயங்கள்' என்றும் இரு தொகுதிகளை வெளியிட்டுள்ளது. இத்தொகுதிகள் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயனுடையதாக உள்ளன. 'பாண்டியர் செப்பேடுகள்' என்ற தொகுதியில் ஆய் மன்னர்களின் செப்பேடுகளான நான்கு செப்பேடுகளும் சேர்த்து வெளியிடப் பெற்றுள்ளன. இவைகளைப் போன்றே சோழர் காலச் செப்பேடுகளை உள்ளடக்கிய ஒரு தொகுதியை வெளியிட வேண்டும் என்ற ஒரு கருத்தைத் தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கொண்டுள்ளது.

சென்னை அருங்காட்சியகம் 'இந்தியச் சாசனவியலும் தென்னிந்திய எழுத்துக்களும்' என்ற நூலைப்பதிப்பித்துள்ளது. அதில் இந்திய நாட்டில் காணப்பெறும் முக்கியமான எழுத்துக்களின் வளர்ச்சி அட்டவணைகள் சேர்க்கப்பட்டு கல்வெட்டுக்கள் பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது.

தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை தமிழகத்தில்

காணப்பெறும் கல்வெட்டுக்கள் அனைத்தையும் படியெடுத்து நூலாக வெளியிடப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் விரைந்து செயல்பட்டு—

1. சென்னை மாநகர் கல்வெட்டுக்கள்.
2. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள்.
3. கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் 1 முதல் 5 தொகுதி வரை.
4. செங்கம் நடுகற்கள்.
5. தருமபுரி மாவட்டக் கல்வெட்டுக்கள். (2 தொகுதிகள்)
6. தருமபுரி மாவட்ட நடுகற்கள்.
7. நன்னிலம் வட்டக் கல்வெட்டுகள். (3 தொகுதிகள்)
8. கும்பகோணம் வட்டக் கல்வெட்டுகள்).
9. திருத்துறைப்பூண்டி வட்டக் கல்வெட்டுகள்.

என்று பல கல்வெட்டுத்தொகுதிகளை பதிப்பித்துள்ளது. இக் கல்வெட்டுக்கள் தமிழகத்தின் பண்டைய வரலாறு பற்றி ஆய்வு செய்வார்க்கு மிகவும் உதவிரகமாக உள்ளன. அதுமட்டுமல்லாமல் 'தமிழகம்' (Damilica) என்று ஒரு ஆண்டு இதழையும்; 'கல்வெட்டு' என்று ஒருகாலாண்டு இதழையும் வெளியிட்டு வருகிறது. இவ்விதழ்களில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் புதிய கல்வெட்டுக்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டு வருகின்றன.

மேலும், கல்வெட்டுக்களைப் பற்றி பாமர மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் மாவட்டத்துக்கு மாவட்டம் கல்வெட்டுக் கருத்தரங்குகளையும் கல்வெட்டுக் காட்சிகளையும் நடத்தி வருகிறது. கல்வெட்டுக் கருத்தரங்குகளில் படிக்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூல்கள் வெளியிட்டுள்ளது. சென்னையில் நடைபெற்ற கல்வெட்டுக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரைகளைத் தொகுத்து கல்வெட்டுக் கருத்தரங்கு (Seminar on Inscriptions) என்ற பெயரில் ஒரு நூலைக் கொண்டு வந்துள்ளது. அதே போன்று நடுகல் கருத்தரங்கு ஒன்று நடத்தி 'நடுகல் கருத்தரங்கு' (Seminar on Hero-Stones) என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள ஆசிரியப் பெருமக்களுக்கு ஆண்டுதோறும் மே திங்களில் கல்வெட்டுப்பயிற்சி வகுப்பு நடத்துகிறது. முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து ஒரு ஆண்டு டிப்ளமோ வகுப்பை அமைத்துக் கல்வெட்டில் பயிற்சி தருகிறது.

இந்தியக் கல்வெட்டுக் கருத்தரங்கு (Indian Epigraphical Congress) என்று ஒரு கருத்தரங்கு ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இதில் இந்தியாவில் அவ்வவ்வாண்டு கிடைக்கும்புதிய கல்வெட்டுக்கள் பற்றிக் கட்டுரைகள் படிக்கப்படுகின்றன. பின்னர் அவைகள் நூல்களாகத் தொகுக்கப்பட்டு ஆராய்ச்சியாளர்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு பல ஆய்வுக் கட்டுரைகள் பலவித சஞ்சிகைகளில் வெளிவர ஆரம்பித்தன. சென்னையில் 'கொங்கு' என்ற மாத இதழிலும், தமிழக வரலாற்றுப் பேரவையினரால் வெளியிடப்பட்ட ஆண்டிதழான தென்னிந்தியாவைப் பற்றியநூல் (South Indian Studies) தமிழக ஆராய்ச்சிப் பேரவை வெளியிட்ட 'ஆய்வுக்கொத்து' போன்றவற்றில் ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதப்பட்டிருக்கின்றன. கொங்கு இதழில் கல்வெட்டுச் சொற்கள் சிலவற்றுக்குப் பொருளும் தரப்பட்டிருக்கின்றன.

தனிப்பட்டவரான மார்ரே இராஜப் என்பவரின் கல்வி நிறுவனம், தமிழகக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் சொற்களுக்கு உரிய பொருளைத் தொகுத்துத் தரும் பெரும் பணியில் பல ஆண்டுகளாக ஈடுபட்டுச் செய்து வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்துத் தொல்லியல் துறை 'தென்னிந்தியப் பழமை எழுத்தியல்' (South Indian Palaeography) என்ற பெயரில் ஒரு நூலையும், மெக்கன்சி அவர்களால் சேகரிக்கப்பட்ட கையெழுத்துப்பிரதிகளில்காணப் பெற்ற கல்வெட்டுக்களைத் தொகுத்து ஒரு நூலையும் வெளியிட்டுள்ளது. மேலும், தமிழகத்துக் கல்வெட்டுக்களை மாவட்ட அடிப்படையில் பிரித்து, பொருட் குறிப்பு எழுதி வெளியாகும் பணியிலும் ஈடுபட்டுள்ளன.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவி பெற்று, பல்லவர் காலக் கல்வெட்டுக்கள் அனைத்தையும் திரட்டி விளக்கக் குறிப்புக்களோடு வெளியிடும் பணியில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையின் முன்னாள் பேராசிரியர் டி. வி. மகாலிங்கன் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தியாவின் மிகப் பழமையான எழுத்தான ஹரப்பன் எழுத்தைப் பற்றி பல நாட்டு அறிஞர்களும் ஆய்வு செய்து அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றனர். குறிப்பாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐராவதம் மகாதேவன் அவர்கள் ஹரப்பன் எழுத்தைப் பற்றி ஆய்ந்து ஹரப்பன் எழுத்துக்களைத் தொகுத்து ஒரு நூல் வெளியிட்டுள்ளார். அது ஹரப்பன் எழுத்துக்களின் தொகுதி (Concordance of Harappan Scripts) என்ற பெயரில் வெளி வந்துள்ளது. ஹரப்பன் எழுத்தைப் பற்றி ஆய்வு செய்வோர்க்கு அடிப்படை நூலாக அது அமைந்துள்ளது.

ஜப்பானிலுள்ள டோக்கியோ பல்கலைக் கழகத்தின் தென் ஆசிய வரலாற்றுத் துறை சோழர் காலக் கல்வெட்டுக்களில் காணப் பெறும் பெயர்களை எல்லாம் திரட்டி 'சோழர் காலக் கல்வெட்டுக்களில் பெயர்கள்' (A Concordance of the Names in the Chola Inscriptions) என்ற பெயரில் மூன்று தொகுதிகளை வெளிக் கொணர்ந்துள்ளது மேலும் சோழர்களின் தமிழ்க் கல்வெட்டுக்கள் வரிசை (A List of the Tamil Inscriptions of the Chola Dynasty) என்ற ஒரு நூலையும் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்காவிலுள்ள ஜாப்னா தொல்லியல் குழுவினரால் 'எபிகிராபியா தமிலிகா' (Epigraphica Tamilica) என்ற ஒரு சஞ்சிகை வெளியிடப்படுகிறது. இதில் ஸ்ரீலங்காவிலுள்ள தமிழ்க் வெட்டுக்கள் ஆய்வுக்கண்ணோட்டத்துடன் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலுள்ள இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் இன்னமும் பல ஆயிரம் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட வேண்டிய நிலையிலும் சில கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட வேண்டிய நிலையிலும் உள்ளன. சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ்நாடு அரசு ஒரு மிகப் பெரிய கல்வெட்டை இராமநாதபுரம் மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டுபிடித்துள்ளது. இக் கல்வெட்டு இற்றைக்குச் சுமார் 1,700 அல்லது 1600 ஆண்டுகட்கு முற்பட்டது ஆகும். 1861-ஆம் ஆண்டில் கல்வெட்டாய்வு தொடங்கப் பெற்று இதுவரையில் சுமார் எழுபத்தையாயிரம் கல்வெட்டுக்களைப் படியெடுத்திருந்த போதிலும், பூலாங்குறிச்சி கல்வெட்டு போன்று, இன்னும் சில ஆயிரம் கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப் படாமலேயே இந்தியாவில் உள்ளன. கல்வெட்டு ஆய்வில் பெரும் ஆர்வம்கொண்டு செயல்பட்டு வரும் இந்திய அரசும் மாநில அரசுகளும் அவைகளை விரைவில் கண்டு பிடித்து, ஆராய்ச்சியாளர்களின் பார்வையில் வைப்பதற்காக ஆர்வத்துடன் செயல்பட்டு வருகின்றன.

# கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

நிலவுடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட்டங்களில் 1.7.1979 முதல் நடைபெற்றுக் கொண்டு உள்ளது. இதுகாறும் பொள்ளாச்சி வட்டத்தில் 53 வருவாய் கிராமங்களிலும், உடுமலைப்பேட்டை வட்டத்தில் 41 வருவாய் கிராமங்களிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பொள்ளாச்சி வட்டத்தில் 7.755 பட்டாக்களும், உடுமலை வட்டத்தில் 9.370 பட்டாக்களும் வழங்கப்பட்டு உள்ளன. நடப்பு ஆண்டில் பொள்ளாச்சி வட்டத்தில் 36 கிராமங்களிலும், உடுமலை வட்டத்தில் 25 கிராமங்களிலும் மாதம்தோறும் நிறைவேற்ற திட்டம் வகுக்கப்பட்டுச் செயல் படுத்தப்படுகிறது.

இத்திட்டப்பணிகளை வேகமாக நிறைவேற்றுவதற்குப் பொள்ளாச்சி வட்டத்தில் புதிதாக ஒரு பிரிவும், உடுமலை வட்டத்தில் புதிதாக ஒரு பிரிவும், பல்லடம் வட்டத்தில் புதிதாக இரண்டு பிரிவுகளும், உருவாக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலம் நான்கு வட்டாட்சியர்கள், நான்கு ஆய்வாளர்கள் எட்டு துணை ஆய்வாளர்கள், 40 உதவி சர்வே ஆய்வாளர்கள், 240 களச் சர்வேயர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.



## அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வகங்கள்

கோவை மாவட்டத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டுகின்ற பணி தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ. 2.56 இலட்சம் செலவிலும் ஐயங்காளிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ. 2.56 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

## உடல் ஊனமுற்ற பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்கள் இலவசம்



உடல் ஊனமுற்ற குழந்தைகள் 1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்புவரை கல்வி கற்போருக்குத் தலா ரூ. 25/- வீதம் பாடப் புத்தகங்கள் நோட்டுப்புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கப்படும். இதற்காகக் கோவை மாவட்டத்திற்கு ரூ. 16,000-ம் ஒதுக்கீடு செய்யப் பட்டு இருக்கிறது.

## பிற்பட்ட வகுப்பினருக்குப் பல்வேறு பணிகள்

பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த சலவைத் தொழிலாளி 225 பேருக்கும் சவரத் தொழிலாளி 200 பேருக்கும், போயர்கள் 40 பேருக்கும், தொழில் கருவிகள் வாங்கித்தரப் பட்டுள்ளது. நடப்பாண்டில் கோயில்பாளையம், மடத்துக்குளம், பூலவாடி, பொங்களூர், சுல்தான்பேட் ஆகிய இடங்களில் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்காகப் புதிதாகத் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட இருக்கின்றன.



# உழவர் பெருமக்களுக்கு..

நெல்லில் துங்ரோ வைரஸ் நோயை எதிர்த்து வளரும் ஐ. ஆர். 59 என்ற ரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பயறு விதைகளை ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணோடு கலந்து வைத்தால், ஓராண்டு காலத்திற்கு எந்தவிதப் பூச்சித்தாக்குதலுமின்றி சேமித்து வைக்கமுடியும்.

தைல மரத்திற்கு நாற்றுவிடும்போது 3.5 கிராம் வரை விதையளவை எடுத்து விதைத்தால், நல்ல வளமான நாற்றுக்களைப் பெறமுடியும்

எலுமிச்சையில் 0.5 சதம் துத்தநாகம் அல்லது மங்கனீசு நுண்ணூட்டங்களை தெளித்தால், அதிக மகசூல் பெறமுடியும்.

மாமரத்தைப் பூக்கும்படி செய்ய 0.5 சத யூரியாக் கலவையைத் தெளித்துப் பலன் பெறலாம்.



விளக்குப்பொறி வைத்தால், நிலக்கடலையைத் தாக்கும் கரும்பூச்சிகளை எளிதில கவர்த்து ஒழிக்கமுடியும்.

சாணக்கரைசலுக்குப் பதிலாக சமையல் சோடா உப்பைப் பயன்படுத்தி மஞ்சளை நல்ல முறையில் பதப்படுத்தலாம்.

மேற்கண்ட புதிய யுக்திகளைக் கடைபிடித்து உழவர் பெருமக்களே அதிக லாபம் பெறுங்கள்!

வெளியீடு ; தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.



# வங்கி இல்லாப் பகுதியில் வாழ வேண்டாம்!

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி.

'வங்கி இல்லாப் பகுதியில் வாழ வேண்டாம்' என்பதைப் புதுமொழியாகக் கொள்ளலாம் என்றார் ஒருவர்.

ஆம். அது உண்மையாகவே பட்டது. இன்று நகரின் எல்லாப் பகுதிகளிலும் ஏறக்குறைய வங்கிக் கிளைகள் உள்ளன.

'சேமித்தால் சேமமுற வாழலாம்' என்னும் நல்ல பழக்கம், சிறுவயது முதற்கொண்டே வழக்கத்துக்கு வரவேண்டும் என்பதற்காக, பொதுவாக எல்லா வங்கிகளிலும் சிறுவர்க்கான சேமிப்புத் திட்டங்கள் உள்ளன.

பணம் போடுவதற்கு மட்டும் வங்கி பயன்படாமல், பல்வேறு சமுதாய நலப் பணிகளுக்கும் அது பக்க பலமாக இருந்து வருவதை நாம் பார்க்கிறோம்.

வேளாண்மை முதல், வேலையின்றித் தவிக்கும் பட்டதாரிகள் வரை வங்கி கடன் உதவி தந்து, அவர்கள் கவலையின்றி வாழ வழி கோலுகிறது.

இவ்வாறு பணம் போடவும், கடன் பெறவும், யாரும் நெடுந்தூரம் போய் வர வேண்டியநிலை இல்லாமல், இன்று அவரவர் வசிக்கும் பகுதிகளிலேயே வங்கிக் கிளைகள் உள்ளன. ஏன், மக்களை அன்றாடம் சந்திக்கிற வகையிலே 'நடமாடும் வங்கிகள்' கூட இப்போது இயங்கி வருகின்றனவே!



## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக் கிளை

இந்த வகையில், சென்னை நகரில், ஒரே நாளில், இரண்டு புதிய வங்கிக் கிளைகள் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி. மற்றொன்று, சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி.

ஜூலைத் திங்கள் 27ஆம் நாள் இரு வங்கிகளும், இருவேறு பகுதிகளில் துவக்கி வைக்கப்பட்டன. சென்னை சிந்தாதிரிப்பேட்டைப் பகுதியில், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் 28வது கிளைத் திறப்புவிழா நடந்தது.

வங்கியின் தனி அலுவலர் திரு. இரெ. ஆறுமுகம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், 'தமிழக அரசு செயல்படுத்தி வரும் முற்போக்குத் திட்டங்களுக்கெல்லாம் இந்த வங்கி உதவி வருகிறது' என்றார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு கே. சந்திரசூடன் இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், வங்கியின் பல்வேறு பணிகளை எடுத்துக் கூறி, கிளை நல்ல முறையில் வளர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு சட்டம் - கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள், அதிக அளவில் கணக்கு வைத்துள்ள— எல்லா வகையிலும் சிறந்து விளங்குகிற மூன்று வங்கிகளுக்குச் சுழற்கேடயங்களை வழங்கினார். அவை; சாந்தோம், தங்கசாலை, செனாய் நகர்க் கிளைகள் ஆகும்.

நலிந்த பிரிவினர்க்குத் தையல் இயந்திரமும், சுயவேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளவர்க்கு மின் இஸ்திரிப் பெட்டியும், மற்றும் நகைக் கடன்களையும் அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

வங்கி ஊழியர்கள் சார்பில் முதல்வர் அவர்களின், மதிய சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 26,000க்கான காசோலையை வங்கியின் தனி அலுவலர் திரு. இரெ. ஆறுமுகம் அவர்கள் அமைச்சரவர்களிடம் வழங்கினார்.

பிறகு, மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் வங்கிக் கிளையைத் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில்—

''கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு உதவும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதனை அனைவரும் உணர்ந்து, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முன் வரவேண்டும். அப்போது தான் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க

—பி. வி. கிரி



சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின், ஆதம்பாக்கம் கிளையை மாண்புமிகு சட்டம்-கூட்டுறவு அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் துவக்கி வைத்தார்.

இயலும். இந்த வகையில், கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படா விட்டால், அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் சிறு விவசாயிகள் தான்.

''கூட்டுறவு இயக்கத்தை-வலுப்படுத்தவிவசாயிகள்கோழிப் பண்ணை, ஆடு வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்த்தல், பால் பண்ணை போன்ற தொழில்களில் சடுபட முன் வர வேண்டும்.

''மத்தியக் கூட்டுறவு வங்கி, குறுகியக் காலக் கடனாகவும், மத்தியக் காலக் கடனாகவும் ரூ. 175 கோடி வழங்கியுள்ளது. இதில் ரூ. 95 கோடியை விவசாயிகள், தாமாகவே முன் வந்து கட்டியிருக்கிறார்கள்.''

## சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கிக்கிளை

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் 19வது கிளை, சென்னை ஆதம்பாக்கம் தலைமைச் செயலகக் குடியிருப்பில் துவக்கி வைக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. கே. சந்திரசூடன் இ.ஆ.ப. அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், ஏழை எளியவர்களுக்கு கடனுதவி வழங்குவதில் இந்த வங்கி சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்றும், முதல் நடமாடும் வங்கியின் மூலம் இது மக்களுக்குச் சேவை செய்து வருகிறது என்றும் கூறினார்.

நலிந்தோர்க்குச் சிறுதொழில் கடன்களை, கூடுதல் பதிவாளர் திரு எல்.கே. திரிபாதி இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார். நுகர்வோர்க்கான கடனை நிதித்துறை கூட்டுச் செயலர் திரு.பி.நடேசன் இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு சட்டம் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில், காலஞ்சென்ற பழம்பெரும் கூட்டுறவாளர் திரு தெய்வசிகாமணி முதலியார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். பிறகு வங்கிக் கிளையைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''நலிவுற்ற நிலையிலுள்ள மக்களுக்கு உதவவும், வட்டிக்கடை வைத்திருப்போரின் பிடியிலிருந்து அவர்களை மீட்பதற்கும், நலிவுற்ற பிரிவினருக்கு 150 கோடி ரூபாய்க்கு நகைக்கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கடன் பல்வேறு அமைப்புகளின் மூலம் மக்களுக்கு அளிக்கப்படும்.

"ஏழைகளையும், நலிவுற்ற பிரிவினைச் சேர்ந்தவர்களையும் மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

''சென்னையில் சைக்கிள் ரிக்ஷாக்களைப் படிப்படியாக நீக்கி, இயந்திரம் பொருத்தப்பட்ட ரிக்ஷாக்களைக் கொண்டு வரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இயந்திரம் பொருத்தப்பட்ட இவ்வகையான சைக்கிள் ரிக்ஷாக்களை வாங்குவதற்கு ஐந்தாயிரம் ரூபாய் வரையில் செலவாகும்.

இதில் ஆயிரத்து இருநூற்றைம்பது ரூபாய் வரையில் மானியமாகவும், மீதியுள்ள தொகை குறைந்தளவு வட்டியுடன் கடனாகவும் அளிக்கப்படும். சைக்கிள் ரிக்ஷாக்களைக் கொண்டு பிழைப்பவர்களுக்குத் தான் இத்தகைய வசதிகள் செய்து கொடுக்கப்படவிருக்கின்றன. முதல் கட்டமாக சென்னையில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் ஆயிரம் பேருக்கு இந்த உதவி வழங்கப்படும்.

''சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 70 பட்டதாரிகளுக்கு உதவி செய்யப்பட்டு, அதற்காக ஏழு இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது.''

இந்தச் சீர்மிகு விழாவில், துவக்கப்பட்ட கிளைக்கு வாழ்த்து தெரிவித்தும், மத்திய வங்கியின் பயனுள்ள பணிகள் குறித்தும் துணைப்பதிவாளர் திரு. ஆர். சண்முகம், இணைப் பதிவாளர் திரு எஸ்.டி. வைத்தியலிங்கம், கூடுதல் பதிவாளர் திரு பி. இராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு இரெ. ஆறுமுகம், தலைமையாசிரியர் திரு. டி. ராமு ஆகியோர் பேசினார்கள்.

கிளை துவக்கத்திலேயே, ஒரு இலட்ச ரூபாய் வரை வைப்புத் தொகை வைக்கப்பட்டிருக்கிறது என்ற இனிய செய்தியும் விழாவில் தெரிவிக்கப்பட்டது.

> மனிதருக்குள் பேதத்தையும்,
> அச்சத்தையும்மூட்டிவிடக்கூடிய
> வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடும
> சுதந்திரத்தின் பரம விரோதி
>
> — பேரறிஞர் அண்ணா

துவக்கத்தில் வங்கியின் தனி அலுவலர் திரு பெ. கன்னியப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் செயலாளர் திரு.பெ. தங்கராசு அவர்கள் நன்றி நவின்றார்.

அன்று, இருவேறு பகுதிகளில் நடந்த இரு வங்கிக் கிளைகளின் துவக்க விழாக்கள், சேமிப்பின் அவசியத்தை உணர்த்துவதாகவும், சுயவேலைவாய்ப்பில் ஈடுபட-சொந்தக் காலில் நிற்க ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாகவும் அமைந்தது என்றால், அது முற்றிலும் உண்மை!



# ...ராட்சி ஒன்றியங்களில் பாரதி விழா!

**வி. சுபாஷ்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் வண்ணம் தமிழ்நாடெங்கும் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் பாரதியார் நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்ததற்கிணங்க ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் விழா சிறப்புற நடைபெற்று வருகின்றது.

ஜூன் திங்கள் வரை கடந்த ஆறு மாதங்களில் தமிழ்நாட்டிலுள்ள 151 ஊராட்சி ஒன்றியங்களிலும், 24 நகராட்சிகளிலும் விழா சிறப்புற நடத்தப்பட்டுள்ளது. புதிதாகக் கட்டப்பட்ட 157 பள்ளி. மருத்துவமனைக் கட்டடங்களுக்கு மகாகவி பாரதியார் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## திருநெல்வேலி மாவட்டம்

**களக்காடு ஊராட்சி ஒன்றியம்:**

15.5.82 அன்று பாரதி நூற்றாண்டுவிழா நடத்தப்பட்டது. விழாவில் வழக்காடுமன்றம், பாரதி பற்றிய சொற்பொழிவுகள் நடைபெற்றன. பத்மனேரியில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டடத்திற்குப் பாரதிபெயர் சூட்டப்பட்டது. பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

**ஸ்ரீ வைகுண்டம் ஊராட்சி ஒன்றியம்:**

இவ்வூராட்சி ஒன்றியத்தில் 25.5.82 அன்று விழா செவ்வனே நடத்தப்பட்டது. புதுக்குடிக் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடத்திற்கு 'பாரதி நூற்றாண்டு நினைவுக்கட்டடம்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

**மேலநீலித நல்லூர் ஊராட்சி ஒன்றியம்:**

5.6.82 அன்று பெரியகோடிலான் குளத்தில் நடைபெற்றது. அரிசன விழாவினையொட்டி காலனிக் குடியிருப்பு வீடுகள் 20 கட்ட முடிவு மேற்கொள்ளப்பட்டது. வெள்ளகுளம், பன்னிருத்து, கீழநீலிதநல்லூர் கிராமங்களில் கட்டி முடிக்கப்பெற்ற கட்டடங்களுக்குப் பாரதியார் பெயர் சூட்டப்பெற்றது. மாணவ மாணவியருக்குப் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

## சேலம் மாவட்டம்

**நாமக்கல் நகராட்சி:**

13.6.82 அன்று நாமக்கல் நகராட்சியின் சார்பில் மகாகவி பாரதியார் நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடுதிட்டக்குழு துணைத் தலைவர் திரு.மா. முத்துசாமி அவர்கள கலந்து கொண்டு உரையாற்றினார்.

**வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம் :**

இந்த ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் நைனாம்பட்டியில் 14.6.82 அன்று விழா நடத்தப்பெற்றது. ஆட்டையாம்பட்டி, ஆட்டையாம்பட்டி கிழக்கு, நைனாம்பட்டி ஆகிய இடங்களில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கூடங்களுக்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. விழாவில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்டாக்டர்கா.காளிமுத்து அவர்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கோவை மாவட்டம்

**பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம்:**

1.5.82 அன்று விழா சீரிய முறையில் நடைபெற்றது. ரூ. 65,000 செலவில் கட்டி முடிக்கப்பட்ட பொங்கலூர் பள்ளிக் கட்டடத்திற்கு மகாகவி பாரதியார் பெயர் சூட்டப்பெற்றது.

**உடுமலை நகராட்சி ஒன்றியம் :**

இந்நகராட்சியில் 17.5.82 அன்று விழா நடைபெற்றது. ரூ. 70,000 செலவில் கட்டி முடிக்கப்பட்ட நகராட்சிக் கூடுதல் பள்ளிக் கட்டடத்திற்குப் பாரதி பெயரிடப்பட்டது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ப. குழந்தைவேலு அவர்கள், விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

## தென்னார்க்காடு மாவட்டம்

**கோலியனூர் ஊராட்சி ஒன்றியம்:**

இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 26.5.82 அன்று விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திண்டிவனம் பாராளுமன்ற உறுப்பினர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் பாரதி படத்தைத் திறந்து வைத்தார். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளோடு விழா இனிதே முடிவுற்றது.

**செஞ்சி ஊராட்சி ஒன்றியம் :**

26.6.82 அன்று விழாச் சிறப்பாக நடத்தப்பட்டது. மாணவ-மாணவியருக்காகக் கட்டுரை, பேச்சு, இசைப் போட்டிகள் நடத்தப்பட்டன. கிராமிய விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. விழாவில் 20 மகளிர்க்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. செஞ்சி பெண்கள் பள்ளி மாணவிகளால் 'பாஞ்சாலி சபதம்' கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

## பெரியார் மாவட்டம்

**கோபிச்செட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியம் :**

21.5.82ல் விழா செவ்வனே கொண்டாடப்பட்டது. ரூபாய் 72,000- மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளிக்குப் பாரதியார் நூற்றாண்டு நினைவுக்கட்ட

டம் எனப் பெயர் சூட்டப்பட்டது. உடல்ஊனமுற்றோர்களுக்கு விளையாட்டுப்போட்டி நடத்தப்பட்டுப் பரிசு வழங்கப்பட்டது. விதவைகளின் புதல்விகளுக்குத் திருமணம்செய்ய அரசு மானியம் ரூ. 1000 வீதம் வழங்கப்பட்டது. தையல் இயந்திரங்கள் ஏழைப் பெண்களுக்கும், விதவைகளுக்கும் வழங்கப்பட்டன. பள்ளிக்குழந்தைகளுக்கு ஒரு மரம் வீதம் நடமரச்செடிகள் வழங்கப்பட்டன.

**பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம்**

தொட்டம்பாளையத்தில் 31.5.82 அன்று விழாச் சிறப்புற நடைபெற்றது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொட்டம்பாளையம் கூடுதல் பள்ளிக்கட்டடத்திற்குப் பாரதி பெயர் சூட்டப்பட்டது. உடல் ஊனமுற்றோர்க்குவிளையாட்டுப் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளிச் சிறுவர்களின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது.

## வடார்க்காடு மாவட்டம்

**அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம்:**

14.5.82 அன்று விழா சிறப்புற நடத்தப்பட்டது. விழாவில் பட்டிமன்றம், சிறப்புச் சொற்பொழிவு ஆகியவை நடைபெற்றன. விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். பள்ளியாங்குப்பம் பள்ளிக்கட்டடம், வளர்புரம் அரிசனக்காலனி, பள்ளிக் கட்டடம், வளர்புரம் ஊரக மருந்தகம் ஆகிய கட்டடங்களுக்கு மகாகவி பாரதியார் பெயர் சூட்டப்பட்டது.

**திமிரி ஊராட்சி ஒன்றியம்:**

21.5.82 வாழப்பந்தல் கிராமத்தில் சீரிய முறையில் விழா கொண்டாடப்பட்டது. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். வாழைப்பந்தல், மேல்புதுப்பாக்கம், வாழப்பந்தல் கிராம மருந்தகக் கட்டடம் ஆகியவற்றிற்கு அமரகவி பாரதியாரின் பெயர் சூட்டப்பெற்றது. மாணவ-மாணவியர்களுக்குப் பேச்சு, பாட்டு, கட்டுரைப் போட்டி நடத்தப்பெற்று பாரதிப் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.



## தஞ்சாவூர் மாவட்டம்

**பாபநாசம் ஊராட்சி ஒன்றியம் :**

2.6.82 அன்று பாரதி விழா நடத்தப்பட்டது. மாணவ-மாணவியருக்கு போட்டிகள் நடத்தப்பட்டு புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. துவக்கப்பள்ளிக்கட்டடத்திற்குத் தேசியக் கவி பாரதியாரின் பெயர் சூட்டப்பட்டது.

**வலங்கைமான் ஊராட்சி ஒன்றியம் :**

22.6.82 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். விழாவில் பட்டிமன்றமும், சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. விதவைத் திருமணம் செய்து கொண்ட தம்பதியருக்கு ரூ.5000 சிறுசேமிப்புப்பத்திரமும், விதவை பெண்களின் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்களும், ஏழைப் பெண்களுக்கு இலவசத் தையல் இயந்திரங்களும்வழங்கப்பட்டன. சலவை மற்றும் முடிதிருத்துவோர்க்கு இலவச தொழில் கருவிகள் வழங்கப்பட்டன. கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள்வழங்கப்பட்டன.

## இராமநாதபுரம் மாவட்டம்

**கன்னங்குடி ஊராட்சி ஒன்றியம்:**

28.6.82 அன்று சிறப்பாக நடைபெற்றது. மாணவ-மாணவியருக்குக் கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி நடத்தப்பட்டன. பாரதியாரின் பாஞ்சாலி சபதம் நாடகமும் பட்டிமன்றமும் நடைபெற்றன.

**தேவக்கோட்டை நகராட்சி:**

13.6.82 அன்று பாரதி நூற்றாண்டு விழா நடத்தப்பெற்றது. விழாவினையொட்டி நடத்தப்பட்ட ஊர்வலத்தில் அழகுமிகு ஊர்தியும், 3,000 மாணவ-மாணவியரும் கலந்து கொண்டனர். விழாவில் 'இனியொருவிதி செய்வோம்' என்னும் தலைப்பில் கவியரங்கமும், அனைத்துக் கட்சி தலைவர்கள், நகரப்பிரமுகர்கள், சிறப்புரையும், தமிழ்ப் புலவர்கள் கலந்து கொண்ட பட்டிமன்றமும் நடைபெற்றன.

## மதுரை மாவட்டம்

**மேலூர் ஊராட்சி ஒன்றியம்:**

29.5.82 அன்று மேலூர் வடக்கு நாவினிப்பட்டியில் பாரதி விழா நடைபெற்றது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து உணவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட துணைச் சுகாதார நிலையத்திற்குப் பாரதிபெயர் சூட்டப்பட்டது. உடல் ஊனமுற்றோர்க்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

**வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம்:**

31.5.82 அன்று விழா கொண்டாடப்பட்டது. ராஜகோபாலபுரம் தொடக்கப்பள்ளிக்கு மகாகவி பாரதியார் பெயரிடப்பட்டது. பேச்சுப்போட்டி, பாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்:**

இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 26.6.82 அன்று பாரதி நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் நகரப் பிரமுகர்களும், தமிழறிஞர்களும் அரசு அலுவலர்களும் கலந்து கொண்டு பாரதியார் சீரிய கருத்துக்களை எடுத்துரைத்தனர். விழாவில் நல்வாழ்வுத் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

## கன்னியாகுமரி மாவட்டம்

**தக்கலை ஊராட்சி ஒன்றியம்:**

4.5.82. அன்று விழா நடத்தப்பட்டது. பாரதி பற்றிய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டன. அறிஞர் பெருமக்களும், அரசு அலுவலர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளுடன் விழா இனிது முடிவுற்றது.






# மகிழ்ந்தேன்.... வியந்தேன்!

தமிழரசு இரண்டாண்டுத் தொகுப்பு மலரைப் படித்து மகிழ்ந்தேன்... வியந்தேன். இலவசச் சத்துணவுத் திட்டம் பற்றிய மாண்புமிகு முதல்வரின் உரைத் தொகுப்பை இலவச இணைப்பாகத் தந்தது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.

—**ஆர். ராஜேந்திரன்**
கருவலூர், கோவை.

**அரிய செய்திகள்**

'தமிழரசு' இரண்டாண்டுத் தொகுப்பு மலரில் பயன்தரத்தக்க பல அரிய செய்திகள் உள்ளன. குறிப்பாக, ஆசிரியர் சமுதாயத்துக்கு அரசு நல்கிய உதவிகளைப் பற்றிய கட்டுரை எங்களுக்குப் பயனுள்ளாக இருந்தது.

—**ஆர்.ஜி. துரைராஜலு,**
கீழப்பழுவூர்.

**வண்ண முகப்பு**

இரண்டாண்டுப் பணிகள் தொகுப்பு மலரின் வண்ண முகப்பு என்னை வெகுவாகக் கவர்ந்தது.

—**வி.பி. செல்வராஜ்,**
கும்பகோணம்.

**ஆக்கப்பணிகள்**

இரண்டாண்டுப் பணிகளின் தொகுப்பு மலரைக்கண்டேன். அரசின் ஆக்கப்பணிகளை அது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

—**வெ. சுப்பிரமணியன்,**
போரூர், சென்னை-104

**அருமை**

''தமிழரசு'' 1.7.'82 இதழைக் கண்டேன். முகப்பில் தமிழக முதல்வரின் படம் மிகவும் அருமை!

—**தி. இராமசாமி,**
பூவிருந்தவல்லி, சென்னை-56

**நிறைந்த செய்திகள்**

குறைந்த விலையில், நிறைந்த செய்திகளையும் தகவல்களை யும் தந்து என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டது தமிழரசு மலர்!

—**எம். செல்வராஜ்,**
திருவள்ளூர்.

**அரும்பெரும் பணிகள்**

தமிழக அரசு கடந்த ஈராண்டுகளில் செய்துள்ள அரும்பெரும் பணிகளைப் புரிந்து கொள்ள இம்மலர் வழிவகுக்கிறது.

—**ராஜி,**
சென்னை-83.

**பயனுள்ள கட்டுரை**

மலரில், 'கிராமப்புறங்களில் பேருந்து வசதி' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரை பயனுள்ளதாக அமைந்துள்ளது.

—**செல்லப்பன்,**
அம்மாப்பேட்டை, சேலம்-3

**நல்வாய்ப்பு**

பல்வேறு துறைகளின் ஆக்கப்பணிகளை, ஒரு சேரப் பார்க்கின்ற நல்வாய்ப்பு கிடைத்தது எங்களுக்கு-தமிழரசு மலர் மூலமாக!

—**டி. சுவாமிநாதன்,**
பேரணாம்பட்டு

**முக்கிய செய்திகள்:**

ஜூலைத்16 இதழில் அட்டைப் படத்தில் குடியரசுத் தலைவர் திரு. ஜெயில்சிங், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். ஆகியவர்களின் படம் கண்ணைக் கவரும் வண்ணம் உள்ளது. ''பாலர்க்குப் பண்பட்ட கல்வி'' கட்டுரையில் முக்கியச் செய்திகள் தொகுத்திருக்கிறீர்கள்.

— **ராஜு**
சென்னை-17

**மருத்துவக் கட்டுரைகள்:**

''சமுதாயப் பல் மருத்துவத் தொண்டு'' சிறுவர் முதல் பெரியோர் வரை படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய கட்டுரை ஆகும். இதுபோன்ற மருத்துவக் கட்டுரைகள் தொடர்ந்து வெளியிடவும்.

தியாகச்சுடர் காமராஜ்பற்றிய கட்டுரை படித்தேன். நெஞ்சம் நெகிழ்ந்தது.

—**டி. வசந்தா**
கீழப்பழுவூர்.

**மாணவர் பக்கம்**

ஒவ்வொரு இதழிலும் அறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள் அருமையாக இருக்கின்றன.

முதல்வரும்-புதிய குடியரசுத் தலைவரும் இணைந்த இரு வண்ண அட்டைப்படம் அருமை. ''மாணவர் பக்கம்'' சிந்தையைக் கவரும்படி சிறப்பாக வருகிறது. தமிழக அரசின் சிறப்பான திட்டப் பணிகளை விளக்குகிறது தமிழரசு!

—**ச. புகழேந்தி**
திருவையாறு.

**வெண்பாப் போட்டி**

முன்பெல்லாம் 'தமிழரசில்' வெண்பாப் போட்டி வந்தது. அதைப்போல் மீண்டும் தொடர்ந்தால் தமிழ் நெஞ்சங்கள் களிப்படையும்.

—**நாகை மனோகரன்**
செங்கல்பட்டு.

தமிழரசில் தமிழ்க் கவிதைகள் தவறாமல் இடம்பெறவேண்டும்.

—**ஆ. மாரியப்பன்**
புதுக்கோட்டை-1.



# மக்களின் குறை கேட்கும் நாள்!

சீர்த்திமிகு சென்னை மாநகராட்சி பற்றிய சில விஷயங்கள் நாம் அறிந்து கொள்ளத்தக்கவைகளாகும்.

சென்னை மாநகராட்சி 150 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் மக்கட்தொகை 35 இலட்சம். நாள்தோறும் வந்து செல்வோர் எண்ணிக்கை மட்டும் 10 இலட்சமாகும்.

வட்டந்தோறும் சென்று, அவ்வப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து — விளக்கின்மை குப்பை சேரல் போன்ற சாதாரண குறைபாடுகள் உடனே நீக்கப்படுவதற்கும். சாலை வசதியின்மை, பள்ளி வசதியின்மை போன்ற குறைகளை நீக்க அவ்வத்துறைகள் விரைவில் நடவடிக்கைகள் மேறுகொள்வதற்குமான நல்வாய்ப்புகளை உருவாக்கி வருகிறார் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு.

## ஓராண்டு நிகழ்ச்சிகள்

இந்த ஓராண்டில் மட்டும்— சென்னை மாநகரின் 12 வட்டங்களில் மக்கள் குறைகேட்கும்நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டுவிட்டது.

கடந்த பிப்ரவரி மாதத்தில்— 119வது வட்டத்தில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 53 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. 6-வது வட்டம் காசிமேடு பகுதியில் நடைபெற்ற மக்கள் குறைகேட்கும் நாளன்று 48 மனுக்கள் ஏற்கப்பட்டன. 87-வது வட்ட நிகழ்ச்சியில் 43 விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டன. 41-வது வட்டத்தில் 89 கோரிக்கை மனுக்கள் கொடுக்கப்பட்டன. 140-வது வட்டத்தில் 75 விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டன. 63-வது வட்டத்தில் 18 மனுக்கள் ஏற்கப்பட்டன. 32-வது வட்டத்தில் 73 கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டன.

மார்ச்சு மாதத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு பங்கேற்ற மக்கள் குறைகேட்கும் நாள் நிகழ்ச்சி 141-வது வட்டத்திலிருந்து 145வது வட்டம்வரை இணைத்து நடத்தப்பட்டபோது 315 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதலாவது. வட்டத்திலிருந்து 5-வது வட்டம் வரை இணைத்துப் பார்வையிடப்பட்டபோது 53 கோரிக்கை மனுக்களும், 121-வது வட்டம் முதல் 125-வது வட்டம் வரை சேர்ந்தாற்போல் ஒரே நாளில் கவனிக்கப்பட்டபோது 91 மனுக்களும் அளிக்கப்பட்டன.

மே மாதத்தில் 15 யூனிட்டுகள், 71 முதல் 75 வரையான வட்டங்களில் மக்கள் குறைகள் கேட்டறியப்பட்டபோது 42 மனுக்கள் பெறப்பட்டன.

ஜூலை மாதத்தில் 111 முதல் 115 வரையிலான வட்டங்கள் இணைத்துப் பார்வையிடப்பட்டபோது 79 கோரிக்கை மனுக்கள் அளிக்கப்பட்டன.

## குறைகள் நீக்கம்

ஆக மொத்தத்தில் இவ்வாறு 12 வட்டங்களில் நடத்தப்பட்ட மக்கள் குறைகேட்கும் நாளில், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரிடம் தரப்பட்ட கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை மட்டும் 979 ஆகும். ஆனால், அம்மனுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த குறைபாடுகளின் எண்ணிக்கையோ ஏறத்தாழ இரண்டாயிரம்.

''அவற்றில் முக்கால்வாசி குறைகள் நிவர்த்திக்கப்பட்டுவிட்டன; மீதமுள்ளவற்றை மிகவிரைவில் செம்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.'' என்றார் மாநகராட்சி மக்கள் தொடர்பு அதிகாரி திரு. நி. வே. பாலு.

16-7-82 அன்று, வடசென்னை பகுதியிலுள்ள 5-வது வட்டத்தில் மக்கள் குறை கேட்கப்பட்டது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால்.

13-வது கட்டமாக நடத்தப்பெற்ற இந்த மக்கள் குறைகேட்கும் நாள் நிகழ்ச்சியில் மாநகராட்சி தனி அலுவலர் திரு டி. டி. சுந்தர்ராஜ் இ.ஆ.ப. ஆணையர் திரு. எஸ். ஆர்.கருப்பண்ணன், இ. ஆ. ப. முதலான பல்வேறு துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான ஆண்களும், பெண்களும் தங்கள் கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சரிடம் தெரிவிக்கத் திரண்டிருந்த அக்கூட்டம், ராயபுரம் ராபின்சன் பூங்கா விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

## அதிகாரிகள் பேச்சு

வரவேற்புரையாற்றிய தனி அலுவலர் அவர்கள் ''இப்பகுதியில் உள்ள 31 சாலைகள் விரைவிலேயே 13 இலட்சம் ரூபாய் செலவில் செப்பனிடப்படவிருக்கின்றன'' என்று குறிப்பிட்டார்.

மாநகராட்சி ஆணையர் அவர்கள் உரையாற்றுகையில்- ''மாநகராட்சி அதிகாரிகள் மூலமாகவும், மெட்ரோ அதிகாரிகள் மூலமாகவும் நடத்தப்படும் குறைகேட்கும் இந்நாளை, மக்கள் எல்லாம் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்றார்.

இதன் பின்னர்—

கூடியிருந்த மக்களெல்லாம் தங்கள் குறைகளை வரிசையுற நின்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனுக்கள் மூலம் அளித்தனர். ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்து, அவற்றில் இல்லாத விவரங்கள் பற்றி அவரவரிடமே கேட்டறிந்து, குறிப்பிட்ட அதிகாரியிடம் அங்கேயே தந்து கவனித்திட ஏற்பாடு செய்தார் மாண்புமிகு அமைச்சர்.

## அமைச்சர் உரை

அதற்குப் பின்னாலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இன்றைய தினம் இங்கே 115 மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் மக்கள் 400 குறைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். எங்களுக்கு அதிகமாக வரிபோட்டு விட்டீர்களே என்ற குறை யாராலும் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்தே சென்னை மாநகராட்சியின் நிர்வாகச் சிறப்பினை நாம் அறியலாம்.

''இப்பகுதியில் தண்ணீர்ப் பிரச்னை இருப்பதாகவும், சில இடங்களில் குடிநீரில் சாக்கடைத் தண்ணீர் கலந்து விடுவதாகவும் இரண்டொரு மனுக்களில் கூறப்பட்டுள்ளன. இதுபற்றி உடனேயே தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்தப் பகுதியில் உள்ள மாநகராட்சிப்பள்ளியின் இறுதி வகுப்பில் படித்த 86 பேரில் 6 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். கல்வி அதிகாரி மூலம் இது குறித்தும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

''111 முதல் 118 வட்டங்கள் அடங்கிய இப்பகுதியில் 81-82ல் மட்டும் பல்வேறு பணிகளுக்காக ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டதாகக் கணக்கு வைத்திருக்கிறார்கள். கணக்கு முக்கியமல்ல; நீக்கப்பட வேண்டிய குறைகளின் கணக்குத் தீர்க்கப்பட வேண்டும்; அதுதான் முக்கியம்.



மாநகராட்சி மக்கள் குறைகேட்கும் நாளில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

## தன்னிறைவுத் திட்டம்

''ராபின்சன் பூங்காவையொட்டி விரைவில் ஒரு ஸ்டேடியம் கட்டப்படும்.

''இவ்வாறான பல்வேறுகுறைகளையும் நீக்க, மாநகராட்சிகள் அளவிலும் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வர மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டு வருகிறார்கள் ''.

—இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இறுதியாக-கோரிக்கைமனுக்கள் பற்றி அவ்வத் துறையின் அதிகாரிகள் ஆக்கப்பூர்வமான தங்கள் பதில்களை மக்கள் முன் தெரிவித்தனர்.

**இல. இராசேந்திரன்**

## தமிழகம் கேரளத்திற்கு வழங்கும் பேருந்துக் கூடுகள்

கேரள மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் சென்னையில், தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, கேரள அரசுப் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு கே. கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் உயர்மட்ட அலுவலர்கட்கும், தமிழகப் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாக இயக்குநர்களுக்கும் இடையில் (13—7—1982) பேச்சுவார்த்தை நடந்தது. இதன் பயனாக, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 20 பேருந்துக் கூடுகளையும், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் 20 பேருந்துக் கூடுகளையும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்10 பேருந்துக் கூடுகளையும் கேரள மாநில சாலைப் போக்குவரத்துக் கழகத்திற்கென மாதா மாதம் கட்டிக்கொடுக்கும். சாதாரண பேருந்திற்கு ரூ. 90,000 நடுத்தர சொகுசுப் பேருந்திற்கு ரூ. 1,40,000 . சொகுசுப் பேருந்திற்கு ரூ. 1,92,000 செலவாகும்.

# Today's Rs. 7,448-
# Gets you Rs. 20,000-*

## YES – IT'S POSSIBLE

Canara Bank's new PLATINUM JUBILEE CASH CERTIFICATE SCHEME multiplies your money to nearly three times its value.

**Make time work at building you a fortune. Invest in Canara Bank's PLATINUM JUBILEE CASH CERTIFICATES, and get back almost thrice the money you deposit in TEN years.**

**Choose from several cash certificates with different maturity values ranging from Rs 100/- onwards. And, remember, sooner you decide and invest, sooner will be your encashment.**

*Our other Special Deposit Schemes are:*

* VIDYA NIDHI DEPOSIT
* BALAKSHEMA DEPOSIT
* KAMADHENU DEPOSIT
* NIRANTARA DEPOSIT

*"For further details please contact our nearest Branch"*

* Subject to revision as per the Reserve Bank of India Regulations*

**CANARA BANK**

(A Nationalised Bank)

HO: Bangalore-560002.

**Over 1350 branches all over India**




# கொல்லிமலைப் பகுதியில் துள்ளிவரும் புதுவாழ்வு

தமிழ்நாடு அரசின் சார்பில் 'வல்வில் ஓரி' விழா இந்த ஆண்டும் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டது. கொல்லிமலைப் பகுதிகள் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தன. எத்திசை நோக்கினும் 'ஓரி'யின் சிறப்புகளை விளக்கிடும் வகையில் பதாகைகளும் சுவரொட்டிகளும் காணப்பட்டன. நகரம் எழிற்கோலம் பூண்டு, விழாக் கோலமாக விளங்கியது. சேலம் மாவட்டம் கொல்லிமலைப் பகுதியைச் சேர்ந்த ''செம்மேடு'' கிராமத்தில் கடந்த 2.8.82, 3.8.82 ஆகிய இருநாட்களில் விழாக் கொண்டாடப்பட்டது. ஒரு மாநாடு நடப்பது போன்று சிறப்பு இருந்தது. செம்மேடு வல்வில் ஓரி திடலில் முதல் நாள் (2.8.82) காலையில் சேந்தமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் சீருடை அணிந்த ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் வல்வில் ஓரி சிலைக்கு வீர வணக்கம் செலுத்னார்கள். மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர் திரு. க.இராசாராம் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்றார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா கோலாகலமாகத் தொடங்கியது. சேலம் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு. பால்ராஜ் வரவேற்புரையாற்றினார். சேலம் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ப. செல்வம் ,இ.ஆ.ப. தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில், ''மலைவாழ் மக்களாகிய உங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் உள்ள அரசு, மேம்பாட்டிற்கான பல முனைப்புத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

விழாவினைத் துவக்கி வைத்தும், கண்காட்சியைத் திறந்து வைத்தும் பேசிய மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் பேசுகையில், ''இப்பகுதி மக்கள் இன்னமும் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதிலும் கவனம் எடுத்துக் கொள்ளவில்லை. அக்கறை காட்டவில்லை. 100க்கு 13 சதவிகிதம் குழந்தைகள் தான் கல்வியில் அறிவுடையவர்களாக இருப்பதாக இங்குள்ள புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அப்படிப்பட்ட நிலைமையினை இனி மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் சீரிய தலைமையிலான அரசு பல்வேறு பயனுள்ள மேம்பாட்டுத் திட்டங்களை உங்களுக்காக உருவாக்கி வருகிறது.

''தமிழக அரசைப் பொறுத்தவரையில் உங்களுக்காகப் பல்வேறு விதமான கடன்களை

நிகழ்ச்சித்தொகுப்பு **ஜி. ஆனந்தன்**

யும் மானியங்களையும் அளித்து வருகிறது. இந்த வசதிகளை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். கொல்லிமலையிலுள்ள 16 நாடு களையும் இணைப்பதற்கும், புதிய சாலை களைப் போடுவதற்கும், தடுப்புச்சுவர்கள் கட்டுவதற்கும், சிறுபாலங்கள் அமைப்பதற் கும், புதிதாகப் பள்ளிகள் கட்டுவதற்கும், குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்காகவும் பலகோடி ரூபாய் ஒதுக்கி அரசு உதவி செய்து வருகிறது.

**மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் மலைவாழ் பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்கினார்.**



''மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த சத்துணவுத் திட்டத்திற்காக இங்கே உள்ள மலைவாழ் மக்களில் 100 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. பழமையை மட்டுமே பேசிக் கலையும் விழாவாக இந்த வல்வில் ஓரி விழாவை அரசு கருதவில்லை. மற்ற மக்களைப் போல மலைவாழ் மக்களும் அனைத்து முன்னேற்றங்களையும் அடைய வேண்டும் என்ற உயர் நோக்குடன் இவ்வரசு காரியமாற்றி விழா எடுத்து வருகிறது. எந்த அரசும் மலைவாழ் மக்களுக்குச் செய்யாத உதவிகளை, மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய தலைமையிலான அரசு இன்று செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.''

காலையில் நடைபெற்ற வல்வில் ஓரி விழாவில் சேந்தமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.சிவப்பிரகாசம், மாவட்டக் கல்வி அலுவலர், திரு. குலசேகரன், நாமக்கல் கோட்டாட்சித் தலைவர் திரு. ராமன், சேலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயராமன், சேலம் திரு சாக்ரடீஸ் ஆகியோர் உரையாற்றினார்கள். நாமக்கல் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. ஜெய செல்வராயன் நன்றி கூறினார்.



கண்காட்சியை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க.இராசாராம் அவர்கள் திறந்து வைத்தார்.

ஆரம்பத்தில் கொல்லிமலையில் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளால் அமைக்கப்பட்ட கண்காட்சியை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாலையில் நடைபெற்ற கவியரங்க விழாவில் 'வல்வில் ஓரியின் வளர் புகழ்' பற்றிக் கவிஞர் திரு. நாமக்கல் நாதன், கவிஞர் திரு. செந்தமிழ்மாறன், கவிஞர் திரு. செ. ஆடலரசு ஆகியோர் பங்கேற்றுக் கவிமழை பொழிந்தனர்.

## இரண்டாம் நாள் நிகழ்ச்சி

இரண்டாம் நாள் (3.8.82) காலை நிகழ்ச்சி புதிய பொலிவுடன் களைகட்டியது. அதிர்வேட்டு முழக்கத்துடன் விழா ஆரம்பமானது. விழாவிற்குச் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா .வரதராஜுலு இ.ஆ.ப. தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில்,''மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள சத்துணவுத் திட்டமும் இப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2 வயது முதல் 10 வயதுள்ள குழந்தைகள் உடல் வளமும் மனவளமும் பெறவேண்டும் என்ற உயர் நோக்குடன் இந்தச் சத்துணவுத் திட்டம் முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டதாகும். மக்கள் ஆதரவு இருந்தால்தான் அரசு தீட்டும் எந்தத் திட்டமும் வெற்றி பெற முடியும். சத்துணவு போன்ற நல்ல திட்டங்களுக்கு மக்கள் தாராளமான முறையில் நன்கொடைகள் வழங்கலாம்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில், பங்கேற்ற சேலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.ஆறுமுகம் பேசுகையில், ''தமிழக அரசு மறைந்த தலைவர்களுக்கும் பாரதியார், பாரதிதாசன் உள்ளிட்ட பல்வேறு அறிஞர் பெருமக்களுக்கும் விழா எடுத்து சிறப்பித்து வருகிறது. அந்த வரிசையில் ஓரிக்கு விழா எடுப்பது மிகவும் சாலப்பொருந்தமானது. இறந்தும் இறவாப் புகழ் அடைந்துள்ள கடையெழு வள்ளல்களில் ஒருவரான ஓரிக்கு விழா எடுப்பது போல் மற்ற வள்ளல்களுக்கும் அரசு விழா எடுத்து அவர்களைச் சிறப்பிக்க வேண்டும்'' என்று குறிப்பட்டார்.

நாமக்கல் சட்ட மன்ற உறுப்பினர் திரு. இரா.அருணாசலம் அவர்கள் பேசுகையில், ''முதல்வர் புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் சீரிய தலைமையில் ஆன அரசு வந்த பிறகுதான் கொல்லிமலை மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.'' என்றார்.

தோட்டக்கலைத் துணை இயக்குநர் திரு. ராமன் பேசுகையில், ''பேரறிஞர் அண்ணா வழியில் ஆட்சி செய்யும் இந்த அரசு ஆதிவாசிகளுக்கு நல்ல பல திட்டங்களைச்செயல்படுத்துகிறது'' என்றார்.

சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவப்பிரகாசம் பேசுகையில்,''இப்பகுதி வாழ்மக்கள் நல் வாழ்வில் இந்த அரசு அதிக அக்கறை எடுத்து வருகிறது. புதிய புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பொருளாதார மேம்பாட்டை உயர்த்துவதற்காக ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தினையும், தன்னிறைவுத் திட்டத்தையும், சத்துணவுத் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தி வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் விழாவில் பங்கு பெற்று, ''கால்நடை மருத்துவமனை அலுவலர்கள் குடியிருப்புக் கட்டிடத்திற்கும், ''கொல்லிமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலர்கள் குடியிருப்புக் கட்டிடத்திற்கும்'' காவல் நிலையக் கட்டிடத்திற்கும் கால்கோள் நாட்டினார்.

பல்வேறு நல உதவிகளும், பல்வேறு வீர விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கினார். அவர் தம் உரையில் கூறிய கருத்துக்கள்:

''மாபெரும் வள்ளலாகவும் வீரனாகவும் மகத்தான சரித்திரம் படைத்து வாழ்ந்த-அரசாண்ட அந்தமாவீரன் ஓரியின் விழா இது.



''கடையெழு வள்ளல்களில் ஒருவரான ஓரிக்கு கொல்லிமலைப் பகுதியிலும், மற்றொரு வள்ளலான பாரிக்கு முகவை மாவட்டத்திலும் இப்போது விழாக்கள் எடுக்கப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இப்படிப்பட்ட கடையெழு வள்ளல்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பெருந் திறமை வாய்ந்தவர்களாகவும், அவர்கள் தங்கள் இதயத்தில் ஈரமும் கொண்டவர்களாகவும் வள்ளல்தன்மை மிக்கவர்களாகவும், வீரமிக்கவர்களாகவும் வாழ்ந்திருக்கிறார்கள்.

''சாதாரண இடங்களில் வாழும் மக்களுக்கும் மலைப்பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கும் எத்தனையோ வழிகளில் வித்தியாசங்கள், வேறுபாடுகள் இருக்கின்றன. ஓரி வனவிலங்குகளை எதிர்த்து வாழ்ந்து வந்திருக்கிறார் என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. அம்பு எய்வதில் கம்ப இராமாயணத்தில் இராமனும் மகாபாரதத்தில் அர்ச்சுனனும் தீரர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். இராமன் விட்ட பாணம் (அம்பு) ஏழு மரங்களை துளைத்துச் சென்றதாகப் புராண வரலாறு கூறுகிறது. அவர்களது வீரதீரச் செயல்களைக் குறிப்பிடுவதுபோல், வல்வில் ஓரியை, இலக்கியத்தில் அவனின் வீரத்தைப் புகழ்ந்துள்ளார்கள். வில் ஆற்றல் மிக்க ஓரி எய்த அம்பு யானை, புலி, மான், பன்றி, உடும்பு ஆகிய ஐந்து விலங்குகளையும் மாய்த்ததாக வரலாறு கூறுகிறது. இப்படி இலக்கியத்தில் இருந்ததா அல்லது கற்பனைதானா என்று எதுவாக இருந்தாலும் அத்தனை சிறப்புகளுக்கும் உரிய வீர மன்னனாக வாழ்ந்தவன் தான் ஓரி மன்னன்என்பதை நமக்கு உணர்த்துகிறது. கொல்லி மலைப்பகுதி மக்கள் 4000 அடி உயரத்திலுள்ள மலைப் பிரதேசத்தில் வாழ்கிறார்கள்.

''மலைவாழ் மக்களுக்காக இந்த அரசு வந்த பிறகுதான் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல் படுத்தி வருகிறது. 50 இலட்ச ரூபாய் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. கொல்லிமலைப் பகுதியை மேம்பாடு செய்ய மத்திய அரசின் ஒத்துழைப்புடன் மாநில அரசு 7 கோடி ரூபாய்க்கான திட்டங்களை நிறைவேற்ற

**மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் ஆதிவாசியைச் சேர்ந்த ஏழை ஒருவருக்கு நிலப்பட்டா வழங்கினார்.**



இருக்கிறது. இந்த மக்கள் நல்வாழ்வில் யாருக்குமில்லாத அக்கறை புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையிலுள்ள அரசுக்கு மட்டும் இருந்துவருகிறது. 25 ஆயிரம் மக்கள் தொகையுள்ள இந்தப் பகுதிமக்களுக்கு எல்லாம் இன்றைக்குப் புதுவாழ்வு பிறந்திருக்கிறது. கொல்லிமலை போன்ற மலைப்பகுதிகளில் அடிப்படை வசதிகளைக் கூடப் பெற முடியாமல் வாழ்ந்து வருகிறீர்கள். 2 கோடி ரூபாய் செலவில் சாலை போடும் திட்டத்தையும் 61 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பேருந்துச் சாலை, தொடர் சாலை அமைப்பதற்கும் அரசு முனைப்புடன் கடந்த ஆண்டு முதல் காரியங்கள் ஆற்றி வருகிறது.

''மத்திய அரசின் துணையுடனும் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தன்னிறைவுத் திட்டத்திற்காக $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கொல்லிமலைப் பகுதிக்கு மட்டும் ஒதுக்கியிருக்கிறது. நமது அரசும் மத்திய அரசும் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக $50\frac{1}{2}$ இலட்சம் ரூபாயை ஒதுக்கிச் செயல்படுத்த இருக்கின்றன. இந்த ஆண்டில் தான் கொல்லிமலைப் பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்வதற்கென ரூ. 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வெளியிலுள்ள நகரத்துடன் தொடர்பு கொள்ள முடியாத அளவிற்கு இந்த மலைப் பகுதிக்கு வரும் பாதையில் 70 கொண்டை ஊசி வளைவுகள் இருக்கின்றன. இந்த வளைவுகளை நெடுஞ்சாலைத் துறை மூலமாகக் குறைப்பதற்கு, 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்டச் சுற்றுலாத் தலமாக இந்தக் கொல்லிமலையைத் தமிழ்நாடு சுற்றுலாக் கழகம் இணைத்துள்ளது. அறப்பளீசுவரர் ஆலயம் இந்தப்பகுதியில் சிறப்புடையதாகத் திகழ்கிறது.

''இந்தப் பகுதியிலுள்ள தமிழ்நாடு அரசாங்க அதிகாரிகள் தியாக உணர்வுடன் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும். அதுதான் இந்த மலைவாழ் மக்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு. நாமெல்லாம் பெற்றுக் கொண்டிருக்கிற அத்தகைய வசதிகளை-நமக்கெல்லாம் பெருமை சேர்த்த இந்தத் தொகுதி மக்களுக்காக உடல் உழைப்பை நல்கியாவது திட்டங்களை நிறைவேற்ற அனைத்துத் தரப்பட்ட அதிகாரிகளும் ஒன்றுபட்டுச் செயல்படும்படி கேட்டுக் கொள்கிறேன்.''

மாலையில் பட்டி மன்றம் நடைபெற்றது. ஓரியின் புகழ் பாரெல்லாம் பரவக்காரணம் அவனது ''வீரச்செறிவா? கொடைச்சிறப்பா?'' என்ற தலைப்பில் புலவர் திரு.சு.அண்ணாமலை, புலவர்.பழ.மகாலிங்கம், புலவர். ஆர். பார்வதி அம்மையார், புலவர் க.திருநாவுக்கரசு, புலவர். கு.ப.பூங்குன்றன். புலவர். அன்னம்மாள் ஆகியோர் பங்குகொண்டு சிறப்பித்தனர். பின்னர் கலை நிகழ்ச்சியும், இரவு தமிழ்த்திரைப்படமும் நடைபெற்றன.

சேலம் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.பால்ராஜ் நன்றி கூறினார்.

**இருள்சூழ்ந்து கிடந்த மலை வாழ் மக்களின் வாழ்வில் புதிய ஒளிவிளக்கு ஏற்றப்பட்டு விட்டது என்ற வகையில் ''வல்வில் ஓரி விழா'' அமைந்திருந்தது என்றால் அது மிகையாகாது.**

# பார்வதி வாழ்த்தினாள்

லக்ஷ்மி



முடக்கன்சாலை நிறுத்தத்தில் பஸ்ஸிலிருந்து சீதா இறங்கினாள். பக்கத்து டவுனிலிருந்து அவள் வாங்கி வந்த பாரதியார் கவிதைகள் என்ற புத்தகங்களும், எதிர்வீட்டுப் பாட்டி பார்வதிக்கு வாங்கி வந்த இருமல் மருந்தும் கொண்ட துணிப்பையைத் தூக்கிப் பிடித்தபடி மெல்ல நடந்தாள். முடக்கன் சாலையில் நீண்டகாலமாக உயர்ந்து-பரந்து-விரிந்து-விழுதுகளைப் பாய்ச்சி வேறூன்றிக் கொண்டு நிற்கும் அந்தப் பெரிய ஆலமரம் அவளை எப்பொழுதும் வியப்பில் ஆழ்த்துவது வழக்கம். மீனின் கருவை விட சிறிய விதையினின்று தோன்றிய மரம் - ''அண்ணல் யானை அண் தேர்ப் புரவி ஆட் பெரும் படையோடு மன்னர்க்கிருக்க நிழலாகும்மே!'' பள்ளிக்கூடத்தில் எப்பொழுதோ படித்ததை—என்ன நினைத்தபடி அவள் சாலையினின்று ஊருக்குள் செல்லும் பாதைப் பக்கம் திரும்பியபோது மலைத்துப்போய்நின்றுவிட்டாள் அன்று மன்னர்களது படைகளுக்கு நிழல் தந்து உதவிய மரம் இன்று சாலையைச் செப்பனிடும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகளுக்குத் தங்கி இளப்பார இடம் தந்துவிட்டிருந்தது. மரத்தடியில் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாகப் பலர் உட்கார்ந்து அந்த அந்தி நேரத்தில் உணவருந்திக் கொண்டிருந்தனர்.

அன்று மன்னர்களுக்கு நிழல் தந்தது இம்மரம் - இன்று உழைப்பாளிகளான இந்நாட்டு மன்னர்களுக்கு இடம் தந்து உதவுகிறது. மரம் தன் பணியைச் செவ்வனே செய்கிறது - மனிதர்களான நாம் என்ன செய்கிறோம். எண்ணிய—படி அவள் அந்தப் பச்சை சேலைக்காரியை உன்னிப்பாகப் பார்த்தாள். அத்தனைப் பேர்களையும் தாண்டி ஏனோ அவள் மீது ஈர்ப்பு? பகல் பொழுது பஸ்ஸிற்காக சீதா காத்திருந்த போதே பார்த்தாள். அந்தப் பச்சை சேலைக்காரி தலைமீது ஒரு பெரிய இரும்புச் சட்டியில் கருங்கல் ஜல்லி கற்கள் குவியலைச் சுமந்து கொண்டு,, கவலை கப்பி முகத்துடன்..., தூரையும் கற்களையும் கலவை செய்ய பெருத்த ஓசையுடன் உருண்டு கொண்டிருந்த அந்த அசுர யந்திரத்தருகே சென்று கொட்டி விட்டுவந்தாள். மீண்டும் ஒரு பெரும் சுமையைத் தூக்கிச் சென்று வந்தாள். பஸ்ஸுக்காக காத்திருந்த அந்தச் சிறு பொழுதில் பச்சை சேலைக்காரி.. பத்து தடவை யாவது பெரும் சுமையாக ஜல்லி கல்லைத் தூக்கிப் போயிருப்பாள்.

நிழலோடு வீட்டில் தங்கி ஒரு குடும்பத் தலைவியாகக் குழந்களைப் பத்திரமாகப் பாது காத்து வளர்க்க வேண்டிய ஒரு தாய்.. இப்படிச் சுமை தூக்க வந்திருந்தால் காரணம் இல்லாமலிருக்குமா.. வழி நெடுகிலும் அவளைப் பற்றிச் சிந்தித்துக் கொண் சீதா மரத்தடியில் ஒரு ஒதுக்குப்புறமாக மூன்றுகல் கூட்டிய அடுப்பிலே சமைத்த சோற்றைக் கிண்டிக்கொண்டிருந்தவளிடம் நெருங்கினாள். பச்சை சேலைக்காரி, அடுப்பிலே வெந்து கொண்டிருந்த சோற்றை அவசரமாக ஒரு அலுமினியப் பாத்திரத்தில் கவிழ்த்து, அதன் மீது புளித் தண்ணி போன்றதொரு திரவத்தை ஊற்றி.. அகப்பையில் சுழற்றிக் கிளறிவிட்டு.. வயல் பக்கம் திரும்பி, ''ஏ ராசாத்தி - கந்தா..வளர்மதி.. எல்லாம் ஓடியாங்கோ! சோறு துண்ண நேரமாச்சி'' ஓங்கிக் குரல் கொடுத்தாள். கூடை ஒன்றில் கிள்ளி வைத்திருந்த ஆல இலைகளைத் தரையில் பரப்பி தயாராக்கிவிட்டு நிமிர்ந்தாள்.

''என்னம்மா பாக்கிறீங்க... நீங்களும் உட்காருங்க.. எங்களோட ஒருவாய் சாப்பிடுவீங்க.'' வெற்றிலைகாவியில் பளிச்சிட்ட பற்கள் தெரிய சிரித்தாள்.

இரண்டு வயது-மூன்று வயது - நான்கு வயதுக்குள் படிகள் போல மூன்று குழந்தைகள்.. அரையில் மட்டும் கந்தல் உடையுடன் மூக்கில் ஒழுகிய சளியும், பரட்டைத் தலையும், முழங்கால் வரை புழுதியுமாக ஓடிவந்தனர். இலைக்கு முன் உட்கார்ந்த குழந்தைகளுக்கு ஆளுக்கு இரண்டு கரண்டியளவு சோற்றை அளந்து வட்டித்தாள் தாய்.



''இவ்வளவுதானா நீ குழந்தைகளுக்குக் கொடுக்கிற சாப்பாடு?'' திகைப்புடன் கேட்டாள் சீதா.. அவள் பல ஆண்டுகள் ஒரு மருத்துவமனையில் நர்ஸாகப் பணி புரிந்துவிட்டு.. ஓய்வடைந்து விட்டிருக்கிறவள். ஒழிந்த நேரம் ஊருக்கு உபகாரியாக இருக்க நினைக்கும் சேவை மனம் படைத்தவள். ''என் ஊட்டுக்காரர் மாமியார் - மாமனார்.. இந்தக் குழந்தைகள்-நான்.. இத்தனைப் பேரும் சாப்பிடனும். துணிமணி வாங்கக் கொஞ்சம் காசு ஒதுக்கி வைக்கனும். கிடைக்கிற கூலியிலே அரிசி வாங்கி... சோறாக்கி ..புளித்தண்ணியிலே காஞ்ச மிளகாய் ரெண்டைப் போட்டு.. ஒரு பிடிச்ச பிடிச்ச பிடி கீரையைக் கிள்ளி போட்டு குழம்பாக்கிப் படைக்கிறேன். இதுக்குமேலே எங்களுக்குக் கட்டுபடியாகாது. அதுவும் பொழுது அமரும் முன்னாடி ஒரு வேளை சோறு எங்க எல்லாருக்கும் கிடைக்குது - இது பத்தாதா?'' சிரித்தாள் அந்த ஏழைத்தாய்!

''காலையிலிருந்துகுழந்தைகள் பட்டினியாவா இருக்காங்க?''

''ஒருவேளை சோறு தரனே அது பத்தாதா?''

''உன் பேர் என்ன... எந்த ஊர் நீ'' அவசரமாகக் கேட்டாள் சீதா.

''இந்தவரதம்பட்டிதான் எங்க ஊர்.. என் பேர் பாஞ்சாலி.. ஏம்மா கேட்கறே?''

''அட நீ நம்ப ஊர்க்காரி.. இங்கே வந்து வேலை செய்யறே.. குழந்தைகளை யார் பாத்துக்கிறா?''

''ரோடு வேலை கிடைச்சுது-உடக்கூடாதுன்னுகுடும்பத்தோட, இங்கேயே வந்துட்டோம். ரெண்டு மாசமா ஆலமரத்தடியிலேதான் எல்லோரும் படுத்துத் தூங்கறோம் - குழந்தைங்க வயக்காட்டிலே பொழுதனிக்கும் விளையாடிக்கிட்டிருப்பாங்க..''

''நம்ப ஊர்லே சத்து உணவுத் திட்டத்தை ஆரம்பிச்சிருக்காங்களே அது பத்தி உனக்கு ஒண்ணுங் தெரியாதுன்னா சொல்றே?''

''ரோடு வேலையை கதின்னு கிடக்கிறோம் - எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது.. அதனாலே இது பத்தி ஒண்ணுமே தெரியாதும்மா..''

''தெரிஞ்சவங்க சொன்னா கேட்டுப்பியா?.. வேலை செய்யற போது குழந்தைகளைக் கவனிக்க முடியாம வயக்காட்டிலே விளையாட அனுப்பிவிடறே... அதோபார்.. ராசாத்தி காலில் சிராய்ப்பு காயம்.. குழந்தைகளுக்கு ஒரே முட்டுசளி - தலை சிவி - எத்தனை நாளாச்சு. உன்னாலே முடியாத காரியத்தை நம்ப ஊரில் அரசு ஆரம்பிச்சு வச்சிருக்கிற கிராமநல நிலையத்திலே செய்வாங்க. இந்த மூனு பேரையும் அதுலே சேர்த்துடு. செய்வியா?''..சீதா கொஞ்சம் கடுமையாகவே அதட்டிக் கேட்டாள்.

''அங்கே சேர்த்தா அதுகளை அங்கே யார் கவனிப்பா?''

''நல்ல கேள்வி..அங்கே குழந்தைகளை இந்த வயதில் கருத்தாக கவனித்து பராமரிக்க பால சேவிகா பயிற்சி பெற்ற பெண்கள் அரசால் அமர்த்தப்பட்டிருக்காங்க. குழந்தைகளைக் குளிப்பாட்டி சீருடை கொடுத்து-சுத்தமாக வைத்து கதை சொல்லி.. பாட்டு-படிப்பு கத்துக்க உதவு வாங்க..சுமார் நூறு குழந்தைகள் போல அதில் சேர்த்துக்கிறாங்க..ஆயாக்கள் வேறே வேலை பார்ப்பதால் குழந்தைகள் கீழே விழுந்து காயம் செய்துக்காம காப்பாத்த முடிகிறது''



''கதை சொல்லி, பாட்டுக் கத்துக் கொடுத்தா 'போதுமா அம்மா?''

''ரொம்ப அவசரப்படாதே - முழுவதும் கேளு. இந்தக் காப்பகங்களில் குழந்தைகளுக்கு நல்ல சத்தான உணவுகளைச் சாப்பிடத் தராங்க. குழந்தைகளுக்கு கொடுக்கிற சாப்பாடு.. அவர்கள வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கிறதா என்று பரிசீலனை செய்து பார்த்து.. வைத்தியர்கள் பரிந்துரை வழங்கிய பின்னர்தான் இந்தத்திட்டம் அமலாகியிருக்கு''

''அப்படி என்ன சாப்பாடு தராங்களாம்?''

''கேட்டா நாமும் குழந்தையாகிவிடக்கூடாதான்னு உனக்கு ஆசையாகிவிடும். பாசிபருப்புப் பொங்கல்-தக்காளி சாதம்-தட்டப் பயறு சாதம்-பல கீரை பொரியல்-எலுமிச்சை சாதம்-அப்பாளி, முள்ளங்கி கீரைப் பொரியல். கோதுமை உப்புமா, தண்டு கீரைப் பொரியல். இப்படின்னு பல தினுசு சுமார் இருபத்தெட்டு வகை சாப்பாடு-குழந்தைகளுக்கு அலுப்புத் தட்டாம மாத்தி மாத்தி கொடுக்கிறாங்க. சாப்பாடு தட்டுகளை அலம்பி வச்சுகிட்டு சுத்தபத்தமா இருக்கு நாலு குழந்தைகள் சேர்ந்து விளையாட -நல்ல பழக்கங்கள் ஏற்பட வேற இதனால் வாய்ப்பு ஏற்படுது. வருஷ முழுவதும் குழந்தைகளுக்கு இந்தச் சாப்பாடு கிடைக்கும். காலை ஒன்பது மணிக்கு காப்பகத்திலே குழந்தைகளை விட்டுட்டு -நீ சாயங்காலம் வேலையிலிருந்து வரும்போது அவங்களைக் கூட்டிக்கிட்டுப் போகலாம்.''

''அங்கே கொண்டு சேர்க்க யாரும்மா எனக்கு உதவுவாங்க?''

''நான் உதவி செய்யறேன்.. வரதம்பட்டி வடக்குத்தெருவுக்கு வந்து மூனாவது வீட்டு வாசலில் நின்றபடி.. நர்ஸம்மான்னு குரல் கொடு! நான் ஓடிவந்துஉதவறேன்.''

''நாளைக்கே வரேம்மா.. என் குழந்தைகள் நல்லாபடிச்சுக்கிட்டு அதைக் கேட்டுகிட்டு வயிறார சாப்பிட்டுகிட்டு இருக்காங்க என்கிற நினைப்பே எனக்குப் பெரிய தெம்பு கொடுக்கும் -இன்னும் பத்து சுமை கல்லுகளை அலட்சியமா தூக்கிப்பேன் அம்மா.. நிம்மதியா உழைப்பேன் அம்மா. இந்த உதவிக்காக உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன் அம்மா. தழுதழுத்தாள் பாஞ்சாலி.

''என்னைக் கும்பிடாதே.. இந்தத் திட்டத்துக்குக் காரணமாக இருக்கும் அந்த நல்லவரை நன்றியோட நினைச்சுக்கோ. அது போதும்..'' மகிழ்ச்சியுடன் சீதா.. மண்பாதை மீது வளைந்து நடந்து ஊர்வந்து சேர்ந்தாள்.

அவள் வீட்டு வாயிலில் எழும்பியிருந்த சிறு பந்தலில் கிடந்த பெஞ்சி மீது அவள் வரவுக்காக வடிவேலுவும் -ரத்னமும் காத்திருந்தனர். அவளைக் கண்டதும் எதிர்வீட்டுப் பாட்டி பார்வதி இருமிக் கொண்டே வந்துசேர்ந்து கொண்டாள்.

''இந்தாங்க பாட்டி உங்க மருந்து.. சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு சின்ன தேக்கரண்டியளவு மூணுவேளை.. மூணுநாள் சாப்பிடுங்க. இருமல் மருந்தும் சில்லரையும் -பில்லும் வச்சிருக்கேன் எடுத்துக்கோங்க.'' பையிலிருந்து அவைகளை எடுத்து பெஞ்சின் மீது வைத்தாள்.

''வடிவேலய்யா.. நீங்களும் வாத்யார் அம்மா ரத்னாவும் வாங்கிவரச் சொன்ன பாரதியார் கவிதைகள் ஆறு புத்தகங்கள்.. விலைப் பட்டியலும் -மீதி சில்லரையும் பத்திரமா இருக்கு எடுத்துக்கோங்க..'' அவைகளையும் எடுத்து பெஞ்சியின்மீது வைத்தாள்.

''ரொம்ப உற்சாகமாகக் காணப்படுகிறீங்களே, நர்ஸம்மா என்ன சங்கதி?'' சிரித்தார் வடிவேலு. அவர் ஓய்வடைந்த தபால்காரர். இப்போது ஊருக்கு உபகாரி.

''ஒரு நல்ல காரியத்தைச் செய்ய போறோமேன்னு நினைச்சா மகிழ்ச்சி ஏற்படாதா.'' புன்னகையுடன். பாஞ்சாலியின் குழந்தைகளைப் பற்றி விவரமாகச் சொன்னாள் சீதா.

''என்ன அதிசயம்? நாங்க ரெண்டு பேரும் இதே போல ஒரு நல்ல காரியங்களைச் செய்ய ஒப்புக்கொண்டு வந்திருக்கிறோம்.''

''அதென்ன நாம மூணுபேரும் ஒரே மாதிரியாகச் சிந்திஞ்சிருக்கோம்.'' வியந்தார் வடிவேலு.

''பலருடைய நல்லெண்ணத்தைத் தூண்டிவிடக் காரணமா அமைஞ்சிருக்கே இந்த முத்தான சத்துணவுத் திட்டம்.. மக்களிடையே எத்தனைப் பரபரப்பை ஏற்படுத்திவிட்டிருக்கு? பத்திரிகைகள் பத்தி பத்தியா எழுதியிருக்கே..'' என்றாள் பள்ளி ஆசிரியர் வேலையினின்று ஓய்வடைந்துவிட்டு ஊருக்கு நன்மை செய்ய முன்வந்துள்ள வாத்யார் அம்மாள் ரத்னா.

''அப்படி என்னம்மா நீ இன்னிக்குச் சாதிச்சுட்டே..?'' கிழவி பார்வதி குறும்புத்தனமாக ரத்னாவைக் கேட்டாள்.

''அடுத்த தெருவிலிருக்கிற என் பெரியம்மாவைப் பார்க்க நான் காலையில் புறப்பட்டேன். வெறுங்கையோடவா போறுதுன்னுட்டு கடைத் தெரு மூலை பெட்டிக்கடையிலே ஒரு சீப்பு வாழைப் பழம் வாங்க நின்னேன். அப்பத்தான் கடைக்காரர் கடையைத் திறந்தார். ஒரு சின்னப் பையன் வயசு ஏழு அல்லது எட்டுக்குள்ளாரத்தான் இருக்கும். ஓடியாடி பலகைகளை அடுக்கி வச்சு-பன், பிஸ்கட் பாட்டில்களை வரிசையா வச்சு சீர்படுத்திக்கிட்டிருந்தான். பிறகு ஒரு குலை வாழைப் பழத்தை தூக்கி கடை முகப்பிலே கட்டித்தொங்கவிட்டான். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு -குலையிலிருந்து ஒரு பழத்தைப் பிச்சு அவசரமா உரிச்சு லபக் லபக்னு விண்டு வாயில் போட்டு முழுங்கினான். -இதைக் கடைக்காரர் பார்த்துவிட்டார். அவ்வளவுதான்'' திருட்டு நாயே! கடை திறந்து வியாபாரமாகறத்துக்குள்ளே உனக்கு முதல்போணியாடான்னுட்டு ஓங்கி அவன் கன்னத்திலே ஒரு அறை விட்டாரே பார்க்கணுமே.. அம்மான்னு அந்தப்பையன் அலறியதைக் கேட்டு என் சமனியெல்லாம் பதறிப் போச்சு.. நெஞ்சிலே யாரோ நெருப்பை அள்ளிக் கொட்டினது போல வேதனையாகிவிட்டது.

''இந்தாங்க ஐயா இந்தப் பையன் சாப்பிட்ட பழத்துக்கு நான் காசு கொடுத்துடறேன்னு கடைக்காரரை சமாதானப்படுத்தினேன். அழுதுகிட்டிருந்த பையனையப்பால் அழைச்சிக்குட்டுப் போய் கேட்டேன். ''கடைக்காரர் உத்தரவு இல்லாம அவர் கடை பழத்தை எடுத்து நீ சாப்பிட்டியே நியாயமா-அப்படி செய்யறதை திருட்டுன்னு சொல்வாங்க.. உனக்குத் தெரியாதான்னு கொஞ்சம் அதட்டினேன்.

'' ரொம்ப பசி - ராத்திரி ஆத்தா போட்ட சோறு பத்தலை ..எங்கப்பா செத்து ரெண்டு மாசமாகுது.. அம்மா வீடு கூட்டி சம்பாதிக்கிறாங்க.. எனக்குக் கீழே அஞ்சுவயசிலேயும் -மூணு வயசிலேயும் இரண்டு பெண் குழந்தைங்க இருக்காங்க. நான் வேலை செய்யாட்டி எல்லாரும் பட்டினியாக இருக்கணும். அதனாலே நாலாவது வகுப்போட நான் நின்னுக்கிட்டு வேலைக்கு வந்துட்டேன்.' என்று கூறியபடியே தேம்பி அழுதான். என் மனம் பாகாய் கரைஞ்சுபோச்சு.. தாங்க முடியாத பசியினால் அந்தக் குற்றத்தைச் செய்து விட்டான் பையன் பாவம்.. என்ற அனுதாபத்திலே பேசினேன்.. ''இதோ பார் தம்பி. உன் பெயர் என்ன சரவணனா? சரிசரவணா! நீ நாளைக்காலை உங்கம்மாவையழைச்சுக்கிட்டு, வடக்குத் தெரு --ஏழாம் எண் வீட்டுக்கு வந்து வாத்யாரம்மான்னு குரல் கொடு நான் வெளியே ஓடிவந்து உதவறேன்..உன் தங்கச்சிகளை நம்ப ஊரில் துவங்கி இருக்கும் காப்பகத்திலே சேர்த்துடறேன்.. விதவையான உங்கம்மாவுக்கு அதிலே ஒரு ஆயா வேலை வாங்கித்தறேன்..உன்னைப் பள்ளிக்கூடத்திலே சேர்க்க ஏற்பாடு செய்துடறேன்... குழந்தைகள் அனைவருக்கும் நல்ல சத்துணவு வயிறு நிறைய சாப்பிட கிடைக்கும். அம்மாவுக்கும் வேலையும் முன்னுக்கு வரமுடியும்.. என்ன சொல்றே.. என்றேன். நம்பமாட்டிங்க அந்தப் பையன் திடீர்னு என் காலில் விழுந்து கும்பிட்டான். எழுந்திரு தம்பி..இந்தக் கும்பிடுக்கு உரியவர் உங்களையெல்லாம் பத்தி நினைக்கிற ஒரு உத்தமர்னு சொன்னேன். அவன் முகத்திலே படர்ந்த மகிழ்ச்சி என்னால் விவரிக்கவே முடியாது. கட்டாயம் வரேன் அம்மா. என்று ஒப்புக்கொண்டிருக்கிறான் ஒரு குடும்பத்திற்கு இந்தத் திட்டத்தின் மூலம் உதவப்போகிறோமே என்கிற மகிழ்ச்சி எனக்கு.

''ஏய்யா வேலுசாமி! நீங்க என்ன செய்தீங்களாம்! இத்தனை ஆனந்தப் பட்டுக்கிறீங்க.. இருமலுக்கிடையே அந்தப் பொல்லாத கிழவி பார்வதி அவரை மடக்கினாள்.

''நாங்க மூணுபேருமே இன்னிக்கு நல்லவர்களான உங்க முகத்திலே முழிச்சிருக்கோம் போலிருக்கு. அதனாலே நல்ல காரியங்களைச் செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். .நான் மளிகைச் சாமான் வாங்க.. நம்ப கடைத்தெருவுக்கு சித்த முன்னே போயிருந்தேன். வேண்டியதை வாங்கி முடிச்சுகிட்டு வீட்டுக்கு கிளம்ப திரும்பினேன் ஒரு லாரி வந்து கடை வாசலில் நின்னுச்சு. திருச்சியிலிருந்து அரிசி-பருப்பு-இதுகளை கடைக்காரர் தருவிச்சிருக்கார் போலிருக்கு. கடை ஆட்கள் ஓடிச்சென்று லாரியிலிருந்த மூட்டைகளை இறக்கி ஆளுக்கு ஒண்ணா முதுகிலே தூக்கிட்டு உள்ளே கொண்டுவைக்க தொடங்கினாங்க.. பனிரெண்டு வயசு இருக்கும் ஒரு பையன்-கையும் காலும் குச்சியாட்டம்மா மார்பு எலும்பு எண்ணிக்கிறாப்பல மெலிசா இருந்தான். அவன் முதுகிலே ஒரு பெரிய அரிசி மூட்டையைத் தூக்கி ஒரு ஆள் வச்சான்..'டே! கணேசா உள்ளே கொண்டு சீக்கிரம் வச்சுட்டுவா-மசமசன்னு நிக்காதே கூப்பாடு போட்டார் அந்த ஆள். பையனாலே அந்தச் சுமையைத் தாங்க முடியலே..அப்படியே முதுகு ஒடிஞ்சிடும்போல உடம்பை வளைச்சுக்கிட்டு மூச்சு வாங்க அவன் அதைத் தூக்கிட்டு போனதைப் பார்த்த எனக்கு ரொம்ப அதிர்ச்சியா இருந்திச்சு.. ஆத்திரமாகவும் வந்தது. மூட்டையை உள்ளார வச்சுட்டு அந்தப்பையன் வெளியே வந்தப்போ அவனை கைதட்டிக் கூப்பிட்டேன்.



''தம்பி கணேசா! பள்ளிக்கூடத்திலே படிக்கிற வயசிலே , ஏன் இந்த முரட்டுவேலைக்கு வந்திருக்கேன்னு?' கவலையோட கேட்டேன்.

''அப்பா, அம்மா ரெண்டு பேரும் செத்துட்டாங்க -சித்தப்பாகிட்டே வளர்றேன்...தண்டச் சோறு திங்காதே-ரெண்டு காசு சம்பாதின்னு அவங்க எப்ன் படிப்பை நிறுத்தி இங்கே அனுப்பிச்சாங்க.. எட்டாவது வரை படிச்சிருக்கேன்'' தேம்பினான் பையன்.

''உங்க வீட்டு முகவரியைச் சொல்லு-நான் வடக்குத் தெரு பதினைந்தாவது எண்ணில் இருக்கேன். நானே நாளைக்கு உங்க வீட்டுக்கு வந்து உன் சித்தப்பாவைப் பார்த்து பேசி உன்னை மறுபடி பள்ளிக் கூடத்திலே சேர்க்க ஏற்பாடு பண்றேன். நீ படிச்சு முடிக்கிறவரை-பதினாலு வயது ஆகும்வரை உனக்கு அங்கே வருஷம் பூராவும் சத்தான உணவு தினமும் வயிறு நிறையப் போடுவாங்க.. படிப்பும் கிடைக்கும் - பசியும் ஆறும்.. பிளஸ் டூ முடிச்சிட்டு தொழில் கல்வி கத்துக்கிட்டு நல்லா முன்னுக்கு வருவே..உங்க சித்தப்பா ஒத்துக்காட்டா பஞ்சாயத்தைக் கூட்டி அவரை ஒப்புக்கவைக்க எனக்கு நாட்டாண்மைக்காரரை நல்லாவேதெரியும். பயப்படாதே தம்பி-நான் கட்டாயம் உன் வீட்டுக்கு வரேன்னு சொல்லிவிட்டு வந்திருக்கேன். அந்த மகிழ்ச்சி தான் என் குரலில் உற்சாகமாக ஒலிக்கிறது'' வேலுசாமி சிரித்தார்.

''பரவாயில்லை! மூணுபேரும் நல்ல வேலை செய்திருக்கீங்க... இந்தத் திட்டத்தைப் பத்தி வாய் ஓயாது சிலநாளா பலர் பேசறதைக் கேட்கிறேன். ஆனால் ஒரு சந்தேகம்...''

''என்ன சந்தேகம் பாட்டி..?''

''தேன் எடுக்கறவன் புறங்கையை நக்காமே இருப்பானா? இந்தத் திட்டத்தை செயல்படுத்த அனுமதிக்கப்பட்ட இடங்களில் உள்ளவங்க சுத்தமான மனதோட நடந்துப்பாங்கன்னு நம்புறீங்களா..?''

''ஒரு நல்லகாரியத்தை எடுத்துச் சொன்னதுவே முட்டுக்கட்டை போடுறீங்க.. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறவர்.. இதை எப்படிப் பாதுகாக்கிறது எங்கிறதைப் பத்தியும் தீவிரமாகச் சிந்தித்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருக்கார். சந்

உங்க மனதிலிருந்து எடுத்து எறியுங்கோ பாட்டி.. நீங்க இப்போ உங்க வீட்டுக்குப் போறீங்க.- உங்க மருமகள் ஒரு குவளை மோர் தாகத்துக்கு உங்களுக்கு எடுத்து கொடுக்கிறாங்க -அந்த மோரில் விஷம் கலந்திருக்கா மருமகள், உங்களைக் கொல்ல முயற்சி பண்றாளான்னா நீங்க நினைச்சு குடிக்கிறீங்க? மகராசி தந்தாள்-தாகம் தீரும் என்கிற நம்பிக்கையிலே குடிக்கிறீங்க- நாம எல்லாரும் ஒருவர்மேல் ஒருவர் கொண்டிருக்கிற நம்பிக்கையால் தான் உலகத்திலே வாழ முடிகிறது. .இந்தத் திட்டத்தைத் தீட்டியவர்களுக்கு..மக்கள் மீது அபார நம்பிக்கை இருக்கு. அந்த மாபெரும் சக்தியே ..இந்தத் திட்டத்துக்கு ஒரு பெருத்த பாதுகாப்பு-புரிஞ்சுதா..''

''ஆமாம் தம்பி! குழந்தைகள் சோற்றிலே நாம கைவைக்க- அதைப்போல பாவம் வேறே இல்லை..எந்தக் கோயிலுக்குப் போனாலும் அதைப் பிறகு உதற முடியாது.

''நம்ப ஊர் விழாவிலே தேர் வரும்போது புண்ணியம்னுபோய் சித்த வடத்தைப் பிடிச்சு முடிஞ்ச மட்டும் இழுத்துட்டு வருவீர்களே-அதுபோல.. இந்தத் திட்டம் என்கிற தேரை இழுக்க எங்களோட சேர்ந்து நீங்களும் வடம் பிடிக்கிறீங்களா பாட்டி?''

''நான் என்ன செய்யமுடியும் வேலுசாமி?''

''புகையிலையை வாங்கி வெத்தலையை மென்னு கண்ட இடத்திலே எச்சில் துப்பறதை நிறுத்தி திட்டு புகையிலைவாங்கற காசை ஒரு உண்டியிலே போட்டுசேர்த்து வையுங்கோ. பத்து பதினைஞ்சு ரூபாயா சேர்ந்த பிறகு அதை வாத்யார் அம்மாகிட்டே கொடுத்து, இந்தத் திட்டத்துக்குன்னு ஆரம்பிச்சிருக்கிற நிதிக்கு உங்கள் நன்கொடையாக அனுப்பச் சொல்லுங்க. புண்ணியத்துக்குப் புண்ணியம் உங்களை வந்து சேரும்-புகையிலை போடா நிறுத்தினால் .வாயில் புற்றுநோய் வராது.. உங்களைக் காத்துக்க முடியும்.''

''சரி தம்பி. இந்த வெருவே கூடி இந்தத் திட்டத்துக்கு ஆளுக்கேதாச்சும் உதவராப்பல நான் வீடு வீடா போய் பேசறேன் அப்பா. பாரதி விழாகொண்டாடப் போவதாகச் சொன்னியே அப்பக்கூட இதைப் பத்தி மக்களிடையே பேசலாமே?''.

''ஆமாம் பாட்டி அடுத்த வாரம். நம்ப ஊரில் பள்ளிக்கூடத்திலே பாரதி நூற்றாண்டு விழா கொண்டாட ஏற்பாடு- பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசு கொடுக்கத்தான் பாரதி கவிதைகள் என்கிறபுத்தகங்களை நர்ஸம்மா வாங்கிட்டு வந்திருக்காங்க'' என்று கூறியபடி வடிவேலு ஒரு புத்தகத்தை எடுத்துத் திறந்தார். பிரமிப்புடன் மற்றவர்களைப் பார்த்தார்.''என்ன அதிசயம். இந்தத் திட்டத்திற்காகவே இந்தப் பாடலை எழுதி வைத்திருக்கிறாரே! வாசிக்கிறேன் கேளுங்கள்.

''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் !
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் !
எதுவுமற்றவர் வாய்ச் சொல்லருளீர் !
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!
மதுரத்தேமொழி மாதர்களெல்லாம்
வாணிபூசைக்குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகையாலும்
இப்பெரும்தொழில் நாட்டுவம் வாரீர் .!''

பாட்டி, பணம் இருக்கிறவங்க உணவுக்கூடம் கட்ட முன்வாருங்கள். வசதி குறைவானவங்க கொஞ்சம் பணமாவது இந்தத் திட்டத்துக்கு உதவுங்க.. உடம்பிலே பலம் உள்ளவர்கள் இந்தத் திட்டத்தைச் செவ்வனே செயல்பட உழைப்பைத் தாருங்கள்- உங்களைப் போல வயசானவங்க வாய்ச் சொல்லால் ..நாலு திசைகளிலும் இதைப் பற்றிப் பேசிப் பரப்புங்கள்என்ற பொருள்பட.. எப்போவோ..நமக்காக பாடி வச்சிருக்கார் பாரதி..இது அதிசயமல்லவா .? கவிஞர்கள் — கலைஞர்கள் — ஓவியர்கள் — புலவர்கள் எல்லோரும் உண்மை உணர்வுடன் செயல்பட்டால் தீர்க்கதரிசிகளாகி விடுகின்றனர். .புரியுதா பாட்டி!''

''புரியுது..இந்த முத்தான திட்டத்தை நடத்திக் கொடுக்க முன்வந்த மகராசன் நல்லா இருக்கணும்னு நான் மனம் நிறைஞ்சி வாழ்த்தறேன். வயதில் மிக்க தாய் நான் நல்லா வாழ்த்தறேன். என்றபடி பார்வதி பாட்டி கை கூப்பி வணங்கி... ஆண்டவன் அருளைவேண்டி..வாழ்த்தினாள்!

## தமிழ்நாட்டில் முதல் மின் உற்பத்தி

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களில் அமைக்கப்பட்ட சிறு மின் உற்பத்தி அணிகள், கட்டேரியில் அமைக்கப்பட்ட சிறு புனல் மின் உற்பத்தி அணி ஆகியவற்றின் வாயிலாகத் தமிழ்நாட்டில் மின் வளர்ச்சிக்கு வித்திடப்பட்டது எனலாம்.

சென்னை மின் வழங்கு நிறுவனமே மின் உற்பத்திக்கெனவும் மின் விநியோகத்திற்கெனவும் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட முதல் அரசுத்துறை அமைப்பாகும். இரண்டாவது உதகை நகராட்சியாகும். இதைத் தொடர்ந்து 1910-ஆம் ஆண்டு மின் விநியோகச் சட்டத்தின்கீழ் சில சிறிய கம்பெனிகளுக்கும் நகராட்சிகளுக்கும் மின் விநியோக உரிமம் (முடிவில்லாத கால அளவுக்கு வளர்ந்து வந்துள்ளது) வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மாநிலத்தில் புனல் மின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கான முயற்சிகள் 1924-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. 1925-ஆம் ஆண்டில் மின் வளர்ச்சிக்கான கொள்கைகள் அறிவிக்கப்பட்டன. முதல் புனல் மின் உற்பத்தித் திட்டமான பைகாரா திட்டத்தின் பணிகள் 1927-ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட போது, மின் துறைக்கெனத் தனித் துறையும் உருவாக்கப்பட்டது. இதுவே மின் துறையின் திட்டமிட்ட வளர்ச்சிக்கான கால்கோளாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






தமிழரசு
9 - 1982 75 காசு





## அரசியலில் புயல்

## அருந்தமிழில் தென்றல்

தமிழ்நாட்டிலே நல்ல தமிழிலே மேடையில் பேச முடியும் என்பதை முதன் முதல் பேசிக்காட்டியவர் திரு.வி.க. அழகிய தமிழிலே அரசியலைப் பற்றியும் எழுதமுடியும் என்பதை முதலாவதாக எழுதிக் காட்டியவர் நம் திரு.வி.க. அரசியலில் புயலாகவும் தமிழில் தென்றலாகவும் இருப்பவர் நம் திரு.வி.க. நூல்களிலே நுண்ணிய உரையைத் தீட்டியவர் நம் திரு.வி.க. எதிர்கால உலகத்துக்காகச் சிறந்த ஏடுகளைத் தயாரிப்பவர் நம் திரு.வி.க.

**—பேரறிஞர் அண்ணா**

(1949-ஆம் ஆண்டில் ஆற்றிய உரையில்)

### பேரறிஞர் அண்ணாவிற்குத் திரு.வி.க.வின் வாழ்த்து

*''அண்ணா துரையென்னும் அண்ணல், தமிழ்நாட்டு*
*வண்ணான் அழுக்கெடுப்பில்: வாய்மொழியில் - பண்ணாவான்;*
*சிற்பன்எழுத் தோவியத்தில்; செவ்வரசு; நாவாயின்*
*அற்புதஞ்சூழ் மாலுமிஎன் றாடு''*






**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — ஆவணி 16

மலர்: 13 இதழ்: 5

1—9—1982

# சமத்துவச் சமுதாய மலர்ச்சியே விடுதலைத் திருநாளின் வெற்றி

என்னை வாழ வைக்கும் தெய்வங்களான தாய்மார்களே!

எனக்கு ஆசி கூறி வழிநடத்தும் வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

எனது ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

இன்று இந்திய சுதந்தரத்தின் 36 வது பிறந்த நாள்.

சுதந்தரம் மனித உடலுக்கு என்பதோடு மனித மனத்திற்கு முதலிடம் என்றே கொள்ள வேண்டும். மனித மனத்தை ஒழுங்கு, ஒழுக்கம், சமுதாய ஒற்றுமை முதலிய அடிப்படைப் பண்புகள் தான் வழிநடத்திச் செல்ல வேண்டும். அதைச் செயலாக்க என் போன்றோர் வாய்ப்புப் பெறும்போது நமக்கு முன்பிருந்து தியாக வேள்வியில் தங்களைத் தீர்த்துக் கொண்டு நமது நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகத் தியாகம் செய்த மகாத்மா காந்தியடிகள் அமரர்களான நேரு, சாஸ்திரி, காமராஜர், பெரியார், அண்ணா போன்றோரின் செயல், கருத்து, அறவழிப்பாதை இவைகளைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்தியக் குடியரசில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஜனநாயக முறையில் சிந்திக்க, பேச, எழுத ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இது ஏற்கப்பட்ட ஒன்று ஆகும். அதேபோல ஒவ்வொரு மாநிலத்தவரும் தங்கள் தாய் மொழியில் சிந்திக்க, பேசி, எழுதி, கல்வி கற்க உரிமையுண்டு. அந்த சுதந்தரத்தைப் பறிப்பது ஜனநாயக வழியில் அமையப்பட்டிருக்கின்ற குடியரசு சட்ட விதிகளுக்கு முரணாகும்.

விடுதலைத் திருநாளைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் ' நாம் சுதந்தரம் பெற்ற பிறகு நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன? எவ்வளவு? இனி என்ன தர வேண்டும்? எவ்வளவு தர வேண்டும்? என்று கணக்குப் பார்த்திடும் நாள்' என்று குறிப்பிட்டார்கள். அப்படி கணக்குப் பார்க்கும்போது, கடந்த 35 ஆண்டுகளை வீணே கழித்து விட்டோம் என்று சொல்வது நியாயமான மதிப்பீடு ஆகாது. அதே போன்று எல்லாவற்றையும் செய்து விட்டோம் என்று நிம்மதி பெறுவதற்கும் இடம் இல்லை. அரசியல் சுதந்தரம் பெற்றவுடன் நமது குறிக்கோள் நிறைவடைந்துவிடவில்லை. அத்துறையில் பெற்ற சுதந்தரம் பொருளாதாரச் சுதந்தரம் ஆக மலர்ந்து சமுதாயத்தில் சமத்துவ உரிமை பெற்ற மக்கள் எல்லாத்துறைகளிலும் பரவி, பரிணமித்து, அடித்தளத்து மக்களில் ஒவ்வொருவருக்கும் அதன் முழுப்பலனும் கிட்டுவதற்கு வாய்ப்பும் வசதியும் செய்யப்படும்போது தான் சுதந்தரத்திற்குப் பொருளும் பொலிவும் ஏற்படும்.

''இந்தியா கிராமங்களில்தான் வாழ்கின்றது'' என்று அண்ணல் காந்தியடிகள் கூறினார். அதன் அடிப்படையில்தான் கிராமப்புறத் தன்னிறைவுத் திட்டத்தை அண்ணா தி. மு. க. அரசு செயலாக்க முன்வந்தது. 1980-'81 ஆம் ஆண்டில் முதன் முறையாகச் செயலாற்றப்பட்ட இந்தத் திட்டம் இந்த நிதி ஆண்டோடு தமிழகத்தில் எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்றப்படும். ஏறத்தாழ 225 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் வாயிலாக இந்த ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ 30 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு இணைப்புச் சாலையும், மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆதி திராவிட குடியிருப்புகளில் இருந்து இடுகாடுகளுக்குச் செல்லும் சாலைகளும் 1,100 க்கும் மேற்பட்ட தாய்சேய் நல விடுதிகளும் 450 க்கும் மேற்பட்ட ஊரக மருந்தகங்களும், 5000க்கும் மேற்பட்ட பள்ளிக் கட்டடங்களும் புதிதாக அமைக்கப்பட்டு விடும். இவ்வாறு கிராமப்புற மக்களின் வாழ்க்கை வளம்பெற ஒருங்கிணைந்த அடிப்படையில், அடிப்படைத் தேவைகளை உருவாக்கித் தரும் இந்த முயற்சியின் பயனாக, கிராம மக்களின் வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல் பிறந்துள்ளது என்பதை நாட்டு மக்களின் நலனில் நாட்டம் கொண்ட நல்லோர் முழு மனதுடன் ஏற்றுக் கொள்வார்கள். இந்தத் தன்னிறைவுத்திட்டம் இந்த ஆண்டு முதல் நகரியங்களுக்கும் நகராட்சிகளுக்கும், விரிவுபடுத்தப்பட இருக்கிறது.

கிராமப்புறங்களில் வறுமையை எதிர்த்து நடக்கும் தாக்குதலில் ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டம், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்விரு திட்டங்களுக்கும் சேர்த்து இந்த ஆண்டு 60 கோடி ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளது. சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினர் தலை நிமிர்ந்து பொருளாதார வளர்ச்சி பெற்று வாழச் செய்யும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்த அரசு மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. சென்ற ஆண்டு 75 கோடி ரூபாய் செலவில் 'சிறப்புக் கூறு திட்டம்' செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு ஒரு லட்சத்து அறுபத்து ஆறாயிரம் ஆதிதிராவிட குடும்பங்கள் பயன் அடையும் வகையில் பெரிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களின் நிலை உயர ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுள்ள அதே நேரத்தில் தீண்டாமையை ஒட்டிய சட்ட விரோதச்செயல்களைத் தடுப்பதற்குகொண்டுவரப்பட்டுள்ள சட்டத்தைசெயலாற்ற தமிழக அரசு காவல் துறையில் தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை விசாரித்து நீதி வழங்க சிறப்பு நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீதி மன்றங்கள் தனித்தன்மையோடு விருப்பு வெறுப்பிற்கு இடம் கொடாது கட்சி மத சாதி கண்ணோட்டமின்றி சுதந்திரமாக இயங்க வேண்டும். கி.பி. இரண்டாயிரம் ஆண்டில் நானிலத்து மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற தேசிய குறிக்கோளை ஒட்டி தமிழகத்தின் தொடக்க சுகாதார நிலையங்களைப் பலப்படுத்தவும் எண்ணிக்கையைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராமக் குழந்தைகளின் பல்நலப் பாதுகாப்புக்காக முறையாகத் தயாரிக்கப்பட்ட பற்பொடியை இலவசமாக வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு மாதங்களில் இப்பற்பொடி சத்துணவு கூடங்களில் உணவு அருந்தும் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

உடல் நலனைப் பாதுகாக்க நகரங்களுக்கும் பட்டணத்திற்கும்தான் வரவேண்டும் என்ற நிலை மாறி இப்போது தொடக்க சுகாதார நிலையங்களின் மூலமாக கிராம மட்டத்திலும் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் மூலமாக தாலுகா மருத்துவ மனைகளிலும் கிராமப்புற மக்களுக்கு உடல் நல பாதுகாப்பு வழங்க முனைப்புடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையையும் உடல் நலனையும் உயர்த்த உருவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது போலவே, கல்வி அறிவைப் பரப்பவும் உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 6 முதல் 11 வயது தொகுதிச் சிறுவர் சிறுமியருள் பள்ளிகளுள் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை 94.76 விழுக்காடாக 1981-82-ல் உயர்ந்தது. இப்போது சிறப்பாகச் செயல்பட்டுவரும் சத்துணவுத் திட்டத்தின் காரணமாக, மேலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த இரண்டு மாதங்களில் மட்டும், இத்திட்டத்தின்நேரடிப் பயனாக 1 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் புதிதாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். தொடக்கப் பள்ளிகளில் பயிலும் சிறுவர் சிறுமியரின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்ற, 20அம்சத் திட்டத்தின் 16-வது அம்சத்தை மிகப் பெருமளவில் நிறைவேற்றுவதற்குத் தமிழ் நாட்டின் சத்துணவுத் திட்டம் ஓர் அருட்கொடையாக அமைந்துள்ளது.



இதேபோல வேளாண்மைத் துறையிலும் நெசவாளர், தொழிலாளர் நலிவடைந்தோர் நலனிலும் இந்த அரசு அதிக அக்கறை கொண்டு பல அரிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டு ஜூலை முதல் நாள் முதல் 120 கோடி ரூபாய்க்கும் மேலான செலவில்

## மாண்புமிகு முதல்வர்

செயல்படுத்தப்பட்டு வரும் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் பொது மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நம்பித்தான் நிறைவேற்றுகிறோம். இத்திட்டத்தினால் இன்று ஏறத்தாழ 58 இலட்சம் குழந்தைகள் பலனடைகின்றனர். இவர்களில் 17 லட்சத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் ஆதிதிராவிடக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். சுமார் ஒரு லட்சம் தாய்மார்களுக்கு, குறிப்பாக விதவைத்தாய்மார்கட்கு இத்திட்டத்தில் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. சாதி சமயமற்ற சமுதாயம் அமைந்திட இத்திட்டம் வழி வகுக்கிறது. மக்களின் பேராதரவின் துணை கொண்டு இது போன்று இன்னும் பல முற்போக்குத் திட்டங்களை செயல்படுத்திட ஒரு அரசு முனையும்போது அதற்கு ஏற்ற அமைதிச் சூழ்நிலை நாட்டில் நிலவ வேண்டும் இந்நிலையில் வறுமையிலும், அறியாமையிலும், வேலையில்லாக் கொடுமையிலும், பசியிலும், சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிற கோடிக் கணக்கான மக்களைக் கவனிக்க முடியாதவாறு, அரசுக்கும், சமுதாயத்திற்கும், தொல்லை கொடுப்போர்தான் இன்று சமுதாயத்தின் பகைவர்கள்.

இன்று நாட்டின் ஒரு சில பகுதிகளில், சற்றும் எதிர்பாராத வன்முறைச் சம்பவங்களை உருவாக்கச் சில சமூக விரோத சக்திகள் முயல்கின்றன. இவைகளைத் தடுக்கவும், மக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாக்கவும், அரசின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. என்றாலும், இத்தகைய வன்முறைச் சம்பவங்களுக்கு வேர் எது என்பதைப் பார்க்கும்பொழுது, பொது நலத்தில் அக்கறையற்ற தன்மையும், வதந்திகளுக்கு முக்கிய இடம் தருவதும், திட்டமிட்டு பொய்ச் செய்திகளை உலவ விடுவதும், அதாவது வதந்திகளைப் பரவ விடுவதும் ஆன ஒரு நிலவரம்தான், வன்முறைச் சம்பவங்களுக்குத் தூண்டுதல்களாக அமைந்து விடுகின்றன' கோரிக்கைகளை எழுப்பவும், குறைகளைச் சுட்டிக்காட்டவும், முறையான அமைப்புகளும், மன்றங்களும், இருக்கும் போது, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள, வன்முறையைத் தூண்டிவிடுவது நமது சமுதாய முன்னேற்றப் பயணத்தைத் தடுத்து

# புதிய தமிழகத்தை உருவாக்குவோம்

நிறுத்தும் தடைக்கல் என்பதை உணர வேண்டும். வன்முறையின் தீய விளைவுகளிலிருந்தும், கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம், மறியல் போன்ற செயல்களினால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்படுகின்ற சேதங்களிலிருந்தும், நாட்டைப் பாதுகாக்கிற கடமையைக் காவல் துறையினரும் அரசும் கைவிட்டு விட முடியாது.

வதந்திகள் ஒரு நாட்டின் மிகக் கொடிய தொத்து நோயாகும். வதந்தி பீதியை உருவாக்கும். நோயற்ற மனித மனத்தில் பீதி குடிபுகுமாயின், அது, அவனை மட்டுமல்ல; அவனது நாட்டையே அழித்துவிடும். எல்லா நோய்க்கும் மருந்து உண்டு வதந்தி— அதனால் பீதி—இந்த நோய்க்கு மருந்தே கிடையாது. எனவே இதை முதலில் ஒழிக்க ஒவ்வொரு மனிதனும் தன்னம்பிக்கை பெற்றாக வேண்டும்.

''தீமையோடு ஒத்துழைக்க மறுப்பதும், நன்மையோடு ஒத்துழைப்பதும் ஒருநாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது'' என்றார் மகாத்மா காந்தியடிகள். அதே பாதையில், அரசின் சமுதாய முன்னேற்ற முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தர மக்கள் முன் வர வேண்டும். அது மட்டும் போதாது; நமது மக்களின் உள்ளங்களில் நச்சு விதைகளைப் பரப்பிட முயலும், தீய சக்திகளுடன் ஒத்துழைக்க மாட்டோம் என்கிற முடிவினையும் மக்கள் மேற்கொள்ள வேண்டும். நம்மில் நலிந்தோரை—வறுமை வாய்ப்பட்ட மக்களை நமது உடன் பிறப்புக்களாகக் கருதுவதைவிட சிறந்த மதக் கோட்பாடு, சிறந்த பண்பாடு, வேறு இருக்க முடியாது. அந்தப் பண்பாட்டை நமது உள்ளங்களில் வளர்த்துக் கொண்டால் சமத்துவம் தானாக மலர்ந்துவிடும். நமது நாட்டில் பிறந்த எந்த மனிதனும் வாழ்வதற்கு வாய்ப்பின்றித் திண்டாடும் அவல நிலைக்கு முடிவு கட்ட இந்த முப்பத்து ஆறாவது சுதந்திர—விடுதலைத் திருநாளில் உறுதி ஏற்போம்.

'மனிதனையே கடவுளாக நேசிக்கும் ஆனந்தத்தைப் பற்றி எண்ணிப் பாருங்கள்' என்றார் விவேகானந்தர்.

'ஈசன் இங்கு எனக்கு உடன் பிறந்தார்' என்றார் மகாகவி பாரதியார்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா.

இந்த மாபெரும் பணியில் நம்நாட்டை அனைத்துத் துறைகளிலும் மேம்படுத்தும் பணியில் நம்மை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள உறுதி ஏற்போம்.

நாம் ஆற்றும் கடமைகளில் இருந்துதான் உரிமைகள் பிறக்கின்றன. உரிமையைக் கேட்பதுதான் கடமை என்று எண்ணுதல் கூடாது. கடமையைச் செய்தால் உரிமை நம்மைத் தேடி வரும் என்கிற மகாத்மாவின் மணிவாசகத்தை, மனத்தில் இருத்தி அவரவர் மேற்கொண்ட பணிகளை, குறையின்றி விரைவாகச் செய்து முடிப்போம். பெற்ற சுதந்திரத்தின் பயன்களை, அனைத்து மக்களும் அனுபவிக்க, வறுமையும், அச்சம், நோயும், இல்லாமையும், பேதங்களும் அற்ற புதிய சமுதாயத்தை அமைத்திட மக்கள் அத்தனை பேரும், கடமை உணர்வுடன் பாடுபட உறுதி ஏற்போம்.

கட்டுப்பாடுடன், ஒழுங்குடன், கடமைப் பற்றுடன், நமக்குள்ள பணிகளை ஆற்றி, சமுதாயத்தின் பயணத்தில், தடை ஏற்படுத்த நினைப்போரை ஒதுக்கி—புதிய இந்தியாவை, புதிய தமிழகத்தை உருவாக்க, நம் உழைப்பை நாட்டின் பொது நலனுக்கு ஒன்றுபட்டு காணிக்கையாக்கிட உங்கள் அனைவரையும் அன்புடன் இருகரம் கூப்பி அழைக்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க.

*(விடுதலைத் திருநாளையொட்டி மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தொலைக் காட்சி_வானொலி ஆகியவற்றில் ஆற்றிய சிறப்புரை 15—8—1982.)*



1918-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாள் சனிக்கிழமை சென்னைத் தொழிலாளர் சங்கம் திரு. வி. கலியாணசுந்தரனாரின் அருமையான முயற்சியினால் தோற்றுவிக்கப் பட்டது. '' தியோசாபிகல் சங்க அறிஞரான வாடியா முதலியோர் எனக்குத் தோழராயினர். வாடியாவும் யானும் சேர்ந்து தொழிலாளர் இயக்கத்தைத் தோற்றுவித்துப் பணி செய்யலானோம் ''.

**—திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்பு**



## பொதுநலத் தொண்டர்

இதழாசிரியராகவும் நூலாசிரியராகவும் சொற்பொழிவாளராகவும் சீர்திருத்தத் தலைவராகவும் சிறந்த பொதுநலத் தொண்டாற்றியவர் திரு.வி.க.

**—தேவநேயப்பாவாணர்**



அண்ணா அவர்கள் சொன்னார்கள், வீடு நன்றாக இருந்தால், வளமாக இருந்தால், நாடு வளமாக இருக்கும் என்று. அது போல் தமிழகம் நன்றாக இருந்தால், பல மாநிலங்கள் அதைப் பின்பற்றலாம். அது போல் பல மாநிலங்கள் சீரும் சிறப்புமாக இருக்குமேயானால் இந்திய நாடு வளமோடு வாழ முடியும்.

நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விரும்புவதை யாரும் தவறாகக் கருத மாட்டார்கள். என்று நம்புகிறேன். இது அரசியல் பிரச்சினை அல்ல, சமுதாயப் பிரச்சினை. எப்படி பின்தங்கிய மக்கள் என்று குறிப்பிடுகின்றோமோ, அது போல் பின்தங்கிய மாநிலங்கள் என்று எதுவுமே இருக்கக் கூடாது என்பதை அண்ணாவின் அறவழியில் நின்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சட்டத்தால் மட்டும் யாரையும் ஒன்றுபடுத்தி விட முடியாது. மனத்தால் உள்ளத்தால், உணர்வால் அவர்கள் ஒன்றுபட்டாக வேண்டும். அப்படி ஒன்றுபட வேண்டிய நிலைமையைப் பொருளாதாரத்தில், சமுதாய அமைப்பில் நாம் சமத்துவத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிக்காண்பித்தாக வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இன்றைய தினம் குழந்தைகளுக்கு உணவளிக்கிறோம் என்றால் அந்த உணவை உண்ணுகின்ற குழந்தைகள், எந்த ஜாதி என்று பாராமல், எந்த மதம் என்று பாராமல் வயிற்றுக்குப் பசி என்ற நிலையில் வயிற்றை நிரப்பிக் கொள்ள எதையோ சாப்பிடாமல் ஊட்டச்சத்து நிறைந்த உணவை உண்டு களிப்போடு, தெம்போடு கல்வியைக் கற்கின்ற நிலைமை சமத்துவத்தில் வர வேண்டும். என்று நாம் விரும்பினால், நான் வேதனையோடு சொல்கிறேன்- தாழ்த்தப்பட்ட மக்களிலேயே ஒரு சிறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல மாட்டேன், அதற்குத் தலைவராக இருக்கின்ற ஒரு சில தலைவர்கள் எங்களுக்குத் தனியாக உணவு சமையல் கூடம் தேவை என்று கேட்கிறார்கள் என்றால் சமத்துவம் எங்கே எப்படி வர முடியும்.

எங்கள் சேரிக்காக எங்கள் பகுதிக்காக, எங்கள் ஜாதி மக்களுக்காக ஒரு கூடம் உணவு உண்பதற்காக ஓர் இடம் வேண்டும் என்று கேட்கிறார்கள் என்றால், நாம் ஒற்றுமைப்படுத்த முயல்கிறோம், அவர்கள் உயர்வடைய



# நமது கடமை

**— மாண்புமிகு முதல்வர்**

வேண்டும், அவர்கள் தகுதியைப் பெற்றாக வேண்டும், அவர்களும் இந்நாட்டு மக்கள் தான். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களே தவிர, தாழ்ந்தவர்கள் அல்ல என்று நாம் வற்புறுத்திக் கூறும் போது, அவர்களாகவே எங்களுக்கு இடம் ஒதுக்குங்கள் என்று கேட்டால் நாம் யாரை வற்புறுத்திக் கேட்கப்போகின்றோம்?

சில நேரங்களில் பேசுகிறார்கள் பத்திரிகைகளில் செய்தி வருகின்றது. இந்துக்களுக்கும் அரிஜனங்களுக்கும் அங்கே போராட்டம், அப்படி என்றால் அரிசனங்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையா? அவர்கள் தனி மதம், தனி ஜாதியைச் சேர்ந்தவர்களா? இப்படி எழுதுகின்ற நிலைமையை அடியோடு களைந்து நாம் எல்லோரும் ஓர் குலம் என்பதை அண்ணா வழியில் சொல்லியாக வேண்டும், நிறைவேற்றியாக வேண்டும் என்பதை இங்கே நான் அறைகூவலாக அத்தனை மக்களின் உள்ளத்திலும் பதியும் வகையில் முன் வைக்க விரும்புகிறேன்.



நாம் போராட்டத்தில் இறங்கியாக வேண்டும்-முதலில் மனப் போராட்டம். நாம் உயர்ந்தவர்கள் - மற்றவர்கள் தாழ்ந்தவர்களா என்பதைப் பற்றிச் சிந்தித்து இல்லை - அறிவு தெளிந்த நாள் முதல் எழுதப்படிக்கக்கற்று கொள்வோமேயானால் - அவன் உழைக்கும் தகுதி பெற்றவன் என்றால் இந்த நாட்டில் வாழ சமஉரிமை பெற்றவன் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்ற அளவில், இந்நாடு வளம் பெற்று வாழ்ந்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்திடும் நிலை பெற்றிட வேண்டும். எந்தப் பிரச்சினை வந்தாலும் சரி, எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் சரி-அமரர் அண்ணாவின் கொள்கைகளை இந்த அரசு எப்படியும் நிறைவேற்றித் தீரும் என்பதை இந்த சுதந்தர நாளில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றே குலம். ஒருவனே தேவன் என்ற அடிப்படைக் கொள்கையில் நாம் ஒன்றுபட்டு வாழ்ந்தாக வேண்டும். எல்லோரும் சொல்கிறார்கள், ''யாதும் ஊரே யாவரும கேளிர்'' என்று, எல்லோரும் நமக்குச் சொந்தம் எல்லா ஊரும் நமது ஊர்தான் என்று சொல்லி விட்டு நம்முடைய வீட்டுக்குப் பக்கத்தில் இருப்பவர்களை நம்மவர் என்று ஏற்றுக் கொள்ள நாம் தயங்கினால் இந்த வார்த்தைக்கு என்ன பொருள் என்பதையே நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் போய் விடுகிறது.

இந்த நேரத்தில் ஒன்றை குறிப்பிடுவேன். இந்தியத் துணைக்கண்டம் வளமோடு வாழ வேண்டுமென்றால் ஒவ்வொரு மாநிலமும் வளம் பெற்றாக வேண்டும். வருகிற செப்டம்பர் 15ந்தேதி, அமரர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் மற்ற பகுதிகளுக்கு அங்கே வாழ்கின்ற வறுமையில் வாடுகின்ற குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இந்த உணவுத் திட்டத்தை விரிவாக்க நாம் திட்டமிட்டு இருக்கின்றோம்.

ஆங்காங்கு உள்ள மதத் தலைவர்களுக்கும், கருத்துவேறுபாடு கொண்ட மற்ற தலைவர்களுக்கும் இந்த சுதந்தர நாளில் விடுக்கின்ற முதல் வேண்டுகோள் இந்தத் திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழையுங்கள் என்பதுதான். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பது தான் உங்களின் கொள்கை. அதனை நிறைவேற்றுவதற்கு அதற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கு, எல்லோரும் அமர்ந்து உண்டு, வளர்ந்து வாழ்ந்து இந்த நாட்டுக்குத் தொண்டு செய்கின்ற உணர்வை அந்தப் பசுமையான உள்ளத்தில் களங்கமற்ற வெள்ளை உள்ளத்தில் பதிய வைக்கின்ற முயற்சியை தயவு செய்து தடுப்பதற்குரிய காரியத்தில் யாரும் இறங்க வேண்டாம். அதற்குப் பதிலாக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று எல்லோரையும் கைகூப்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.



**சென்னைக் கோட்டையில் விடுதலைத் திருநாளன்று (15.8.82) நாட்டுக் கொடியை ஏற்றி வைத்த மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரையிலிருந்து...**



# தமிழ் முனிவர் திரு.வி.க

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர்

**டாக்டர் சிலம்புச்செல்வர்**

**சென்**னை தொண்டைமண்டல உயர்நிலைப் பள்ளியில் சமரச சன்மார்க்க சங்கத்தாரின் வள்ளலார் விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த விழாவில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பங்கேற்று உரையாற்றினார். அந்நாளில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் வல்லத்தரசு அவர்களும் அந்த விழாவில் கலந்து கொண்டிருந்தார். அவர் திரு.வி.க. அவர்களுடன் முரண்பட்டு அதே மேடையில் பேசினார். அதை மறுத்துத் திரு.வி.க பேசினார். அப்போது கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. அந்த விழாவில் கலந்துகொண்ட நான் திடீரென்று மேடைமீது ஏறி திரு வி.க. அவர்களை ஆதரித்துப்பேசி அமைதியை நிலைநாட்டினேன். அது 1932 அல்லது 1934ஆக இருக்கலாம். அதுதான் திரு.வி.க. அவர்களை நான் முதன் முறையாகச் சந்தித்த நிகழ்ச்சி.

அதற்குப் பின்னர் அவருடைய நூல்களின் மூலம் தான் அவர்பால் எனக்கு அதிகபற்றும் பக்தியும் ஏற்பட்டன, திருநாவுக்கரசு நாயனாரைக் குறித்து 'அப்பர் ஒரு சத்தியாகிரகி' என்று அவர் எழுதிய நூல் என்னை மிகவும் கவர்ந்தது. அதனால் 1941ல் பிறந்த என் தலைமகனுக்கு திருநாவுக்கரசு என்று பெயரிட்டேன்.

நான் அரசியலில் 1927ஆம் ஆண்டில் தான் நேரடியாகப் பங்கு பெற்றேன். அதற்கு முன்பே திரு வி க. அவர்கள் காங்கிரசிலிருந்து விலகிவிட்டார். அதனால் அரசியல் ரீதியாக சுற்றுலாவிலோ பிரச்சாரத்திலோ அவருடன் சேர்ந்து பணியாற்றும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் சமய சம்பந்தமான கூட்டங்களில்-குறிப்பாக சமரச சுத்த சன்மார்க்க மேடைகளில் அவருடன் சேர்ந்து உரையாற்றி அவரது பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறேன்.

அரசியலில் சேர்ந்து பணிபுரியாவிட்டாலும் அவர் எழுதிய 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூல்தான் என்னைக் காந்தியவாதி ஆக்கியது. காந்திய நெறிக்கு அதைப் போன்று விளக்கம் தரும் நூல் வேறொன்றும் தமிழில் இன்று வரை வெளிவந்தது இல்லை.

எல்லாவற்றையும விட அவரது ஒழுக்கம் தான் எனது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அவரைச் சந்தித்துப் பேசிய போதெல்லாம்பழங்கால முனிவர் ஒருவரைச் சந்தித்துப் பேசுகின்றோம் என்ற உணர்வே எனக்கு ஏற்படும்.

அவர், அரசியலிலிருந்து விலகிய பின்னரும் தம் வாழ்க்கையின் கடைசிநாள்வரை, தொழிற்சங்கத் தலைவராக இருந்து வந்தார். பாட்டாளி வர்க்கத்துக்கு ஆற்றும் பணியை அவர் கைவிடவே இல்லை.

1942ல், பக்கிங்ஹாம் - கர்நாடிக் மில் தொழிலாளர்கள் பல வார காலம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது திரு வி. க. வுடன் சேர்ந்து பெரம்பூரில் தொழிலாளர் கூட்டங்களில் நானும் பேசியிருக்கிறேன்.

தமிழும் தேசியமும் பிணைந்திருக்க வேண்டும் என்ற சித்தாந்தத்திற்கு அவர்தான் முன்னோடியாக விளங்கினார், மொழிப் பற்று இல்லாத நாட்டுப் பற்றும், நாட்டுப் பற்று இல்லாத மொழிப் பற்றும் அவருக்குப் புறம்பானவை.

எங்கும், எதிலும் தமிழர் வாழ்க்கையில், தமிழ் தான் முதலிடம் பெறவேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் காங்கிரசில் இருந்த காலத்தில் அந்த மகா சபையின் தமிழ்நாட்டுக் கிளையைத் தமிழ்வழிப் படுத்த அவர் பெரிதும் முயன்றார்.

நாடு விடுதலை பெறவிருந்த தருணத்திலே மொழிவழி தமிழ் மாநிலம் காணவும், தமிழக வடக்கு, தெற்கு எல்லைகளை மீட்கவும், தலைநகரான சென்னையைக் காக்கவும்ஆங்கில ஆதிக்கத்தைஅகற்றவும் நான்தமிழரசுக் கழகத்தைத் துவக்கினேன் என்றால் அது திரு வி க அவர்களின் தூண்டுதலால் தான். 21.11.46ல் அமைப்புக் கூட்டம் நடைபெற்ற





## தமிழக அரசு வழங்கும் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. விருது

தமிழ்த் தென்றல் என்றும் தமிழ்ப் பெரியார் என்றும் அழைக்கப் பெற்ற திரு.வி.க. அவர்களிடம் பேரன்பு கொண்டிருந்தார் பேரறிஞர் அண்ணா. அன்னாரது கொள்கையைப் பொன்னேபோல் போற்றிச் செயலாற்றி வரும் தமிழக அரசு ஒரே நேரத்தில் அண்ணா அவர்களையும், திரு.வி.க அவர்களையும் நினைத்துப் பார்க்கும் வகையில் சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு தமிழ்த் தென்றல் திரு.வி.க விருது வழங்கும் திட்டத்தை 1979-ல் அறிமுகப்படுத்தியது. ஆண்டுதோறும் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15-ல் இந்த விருது வழங்கப்படுகிறது. ரூ 10 ஆயிரம் தொகை கொண்டது இந்த விருது.

1979-ல் புகழ்பெற்ற எழுத்தாளர் மறைந்த ஜெகசிற்பியன் அவர்களுக்கும், 1980-ல் புகழ் பெற்ற எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணன் அவர்களுக்கும் 1981-ல் பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் அவர்களுக்கும் தமிழ்த்தென்றல் திரு.வி.க விருதினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

1981-ல் மதுரையில் நடைபெற்ற 5-வது உலகத் தமிழ்மாநாட்டையொட்டி, மதுரையில் அமைக்கப் பெற்ற தமிழ்ச்சான்றோர் சிலைகளில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க அவர்களின் சிலையும் இடம்பெற்றுள்ளது.

அன்னாரது நூற்றாண்டு துவக்க விழாவை சென்னையில் மிகச் சிறபபாக நடத்தியது தமிழக அரசு.

போது அதில் அவரும் கலந்து கொண்டார். அதன் பின்னர் நாங்கள் நடத்திய பல்வேறு கிளர்ச்சிகளுக்கெல்லாம் அவர் வாழ்த்துக் கூறியிருக்கிறார்.

இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலே எங்கள் இருவருக்கும் கருத்து ஒற்றுமை நிலவியது. ஆங்கில ஆதிக்கம் நிலைபெறாத வகையிலும், தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராத முறையிலும் இந்தித் திணிப்பு எதிர்க்கப்பட வேண்டும் என்பதிலே அவர்தான் எனக்கு வழிகாட்டி.

அவர் ஒரு துறவியைப்போல வாழ்ந்தார். என்றாலும், மார்க்சியத்தில் தமக்கிருந்த நம்பிக்கை காரணமாகத்தான், தமது வாழ்நாள் முழுவதும் பாட்டாளி வர்க்கத்துடன் தொடர்புகொண்டிருந்தார். சிறைப்படும் அளவுக்கு தொழிலாளர் இயக்கத்தில் பங்கு வகித்தார். விடுதலைப் போராட்டத்தில் கூட அவர் தீவிரம் காட்டியதில்லை. ஆனால் தொழிலாளர் போராட்டத்தில் தீவிரம் காட்டினார். அதன் விளைவாக, அவர் பால் மரியாதை கொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியே -அவரை குருவாக மதித்த ஓமந்தூரார் ஆட்சியே அந்தப் பெரியாரை வீட்டுக்காவலில் வைக்கநேர்ந்தது.

திரு வி க. அவர்கள் கொள்கை அளவில் மார்க்சிய தத்துவத்தை ஏற்றிருந்தார் என்றாலும் நடைமுறைப் புரட்சியிலே -வன்முறையை அவர் கட்டோடு வெறுத்தார். அதனால் மார்க்சிய சித்தாந்தங்களை காந்தியப் போர் முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர் ஓயாது சொல்லி வந்தார்.

திரு.வி.க. அன்பின் வடிவமாகத் திகழ்ந்தார். அவர் பொய் பேசி அறியேன். விளையாட்டுக்காகக் கூட வாய்மையிலிருந்து அவர் பிறழ்ந்ததில்லை. அவர் யாரையும் கடிந்து பேசியதை நான் கண்டதில்லை.

அவரது தமிழ் எழுத்து நடையிலும், பேச்சு நடையிலும் எனக்கு மிகுந்த கவர்ச்சி உண்டு. காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக, தமிழகத்தில் இரு பெரியாரை நான் மிகுதியாக நேசித்து வந்திருக்கிறேன். அவர்களில் ஒருவர் ராஜாஜி, மற்றொருவர் திரு.வி.க. ராஜாஜிக்கும் எனக்கும் அடிக்கடி கருத்துப் போர் நிகழ்ந்ததுண்டு; ஆனால் திரு.வி.க.வோடு எனக்குக் கருத்து வேறுபாடு ஏற்பட்டதே இல்லை.

1919ல் காந்தியடிகள் சென்னை நகருக்கு வருகை புரிந்த போது, அவரது ஆங்கிலச் சொற்பொழிவை, தமிழில் மொழி பெயர்த்தவர் திரு.வி.க. அவர்கள்தான். அதன் பின்னர் காந்தியடிகள் சென்னைக்கு வந்த போதெல்லாம் தமது உரையை திரு.வி.க. அவர்கள் தான் தமிழில் பெயர்க்க வேண்டும் என விரும்பினார்.

தமிழ்நாடு, திரு.வி.க. அவர்களைச் சரியான படி போற்றவில்லை என்ற குறை எனக்கு உண்டு. மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசு, அந்தக் குறையைப் போக்கிவிட்டது. தமிழ்த் தென்றல் திரு,வி.க. அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட முனைந்துள்ளது. சான்றோர்களின் பிறந்த நாட்களையும் நினைவு நாட்களையும் கொண்டாடும் அரும்பணியை அரசுடைமையாக்கியுள்ளது ,தமிழகஅரசு. இது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில், புகழ் பெற்ற எழுத்தாளர் ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் தொகைகொண்ட 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருதினை தமிழக அரசு வழங்கி வரும் நிகழ்ச்சி, திரு.வி.க. அவர்களைப் பெருமைப் படுத்தும் செயலாகும். இந்த நல்ல பணிக்காகத் தமிழக அரசைப் பாராட்ட வேண்டும்.

26.8.'82ல் திரு.வி.க. வின் நூற்றாண்டு தொடங்குகிறது. அது 1983ல் தான் முடிவுறுகின்றது. இடைப்பட்ட ஓராண்டுக்காலத்தில் திரு.வி.க. அவர்களின் நூல்கள் அனைத்தையும் புதிய பதிப்பாக வெளியிட அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு.வி.க. அவர்களின் முக உருவம் இடம் பெற்ற அஞ்சல் தலை வெளியிடப்படுவதற்கு நமது அரசு, மத்திய அரசைத் தூண்ட வேண்டும்.

திரு.வி.க. வாழ்ந்த இல்லத்தை வாங்கி அங்கே நினைவாலயம் நிறுவிடவேண்டும். ஏனென்றால் அந்த இல்லம், லோகமான்ய பாலகங்காதர திலகர், டாக்டர் அன்னிபெசண்ட் ,மகாகவி பாரதியார் போன்ற பெருமக்கள் பல முறை தங்கும் பேறு பெற்றதாகும்.

ராயப்பேட்டையில் புகழ் பெற்ற சாது அச்சுக்கூடம் திரு.வி.க. அவர்களின் இல்லத்தில் தான் இருந்தது. அந்தச் சாது இல்லத்திற்கு ஒரு சரித்திரத்தைப் படைத்துவிட்டவர் திரு.வி.க.

திரு.வி.க.வின் விழா, தமிழ் விழாவாக, காந்திய விழாவாக தெய்வபக்தியும் தேச பக்தியும் கலந்த விழாவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த நல்ல நேரத்தில் அந்தத் தமிழ் முனிவருக்குத் 'தமிழரசு' இதழின் மூலமாக அஞ்சலியைச் செலுத்துகிறேன்.



# என் பயணம் கல்விப் பயணமே!

([illegible] இதழ் தொடர்ச்சி)

மாண்புமிகு கல்வி அமைச்சர்

## திரு. செ. அரங்கநாயகம்

நாங்கள் புத்தமதக் கோயிலுக்குச்சென்று துறவியோடு பேசிவிட்டு வந்தோம். நர்சரிப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, ஆகியவற்றைப் பார்க்க வேண்டும் என்று சொன்னோம். அவற்றைக் காட்டினார்கள். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி இரண்டையும் சேர்த்து நடுத்தரப் பள்ளி என்று ஒரே பெயராகச் சொல்லுகிறார்கள். பார்ஸ்டல் ஸ்கூல் போய்ப் போர்த்தோம். பல்கலைக் கழகத்தைப் போய்ப் பார்த்தோம். பல்கலைக்கழகம் பெரும்பாலும் நம்முடைய பல்கலைக் கழகம் போல்தான் உள்ளது. உடற்பயிற்சி ஆசிரியர்களை உருவாக்குகின்ற இடத்தைப் பார்க்க வேண்டும் என்று சொன்னோம். அதையும் காட்டினார்கள். 'இசைக் கல்லூரியை'யும், கைத்தொழில், ஓவியம், சிற்பங்கள் உள்ள பள்ளி ஒன்றையும் பார்க்க வேண்டும் என்று சொன்னோம். அதையும் காட்டினார்கள். பீங்கான் தொழிற்சாலையையும் சென்று பார்வையிட்டோம். 2,300 ஆண்டு காலத்திற்கு முன்னால் யாங்சிங் ஆட்சியில் நீர்ப்பாசனத்திற்காக அப்போதிருந்த அதிகாரி ஒருவர் ஓர் ஆற்றை இரண்டாகப் பிரிப்பது போல் ஒரு திட்டைப் போட்டுப் பிரித்து அதைக் கொஞ்சம் கொஞ்சமாக வாய்க்கால்களாக மாற்றி அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான நிலங்களுக்கு நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அதற்குப் பிறகு அவருடைய மகன் அத்திட்டத்தை முடித்து வைத்திருக்கிறார். இரண்டு பேருக்கும் ஒரு கோயிலே அங்கு வைத்திருக்கிறார்கள். அதைச் சென்று பார்த்தோம். கரிகாலன் கட்டிய அணை நினைவிற்கு வந்தது.

2,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கலைக்கு அவர்கள் தருகிற முக்கியத்துவம்

பீகிங் பல்கலைக்கழகத் துணை வேந்தருடன் தமிழகக் கல்விக் குழுவினர்களான மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம், பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி, டாக்டர் மு. நாகநாதன் பேராசிரியர் க. அ. நடராசன், பேராசிரியர் டி. எம். சீனிவாசன், கல்வித்துறைச் செயலாளர் திரு. சி. இராமதாஸ் மற்றும் பீகிங் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்





**சீனாவின் மாமனிதர் மறைந்த திரு. மா சேதுங் அவர்களின் உடல் பாதுகாக்கப்பட்டு வரும் நினைவு இல்லம் முன்பு தமிழகக் கல்விக் குழுவினர்.**

உலகத்திலேயே வேறு எங்கும் பார்க்க முடியாதது. கம்யூனிஸ்ட் சைனா என்று சொல்லுகிறோமே தவிர அங்கு எதை எடுத்தாலும் கலைவண்ணம் காணப்படுகிறது. ஒரு ஓட்டலுக்குச் சென்றாலும் அங்கு ஒரு செயற்கைப் பூங்காவைச் செய்து அழகாக வைத்திருக்கிறார்கள். எங்களுக்கு ஒரு மீனை வைத்தார்கள். அந்த மீனிலேயே கலையழகைக் காட்டியிருந்தார்கள். அதையே ஒரு மலை போல் அல்லது கலைச்சிற்பம் போல் வைத்திருந்தார்கள். இதைச் சாப்பிடுவதா, பார்த்துக் கொண்டே இருப்பதா என்று தெரியவில்லை, இங்கு கலைக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைப்போல வேறு எங்கும் நாங்கள் பார்த்ததில்லை.

### பெண்களுக்குப் பாதுகாப்பு

சைனாவிலே நாம் ஓட்டலிலே போய்த் தங்கினால் தைரியமாகத் தங்கி, படுத்து உறங்கி ஒரு நகரத்திலிருந்து அடுத்த நகரத்திற்கு போய் வரலாம். அங்கு எந்தவிதமான தொந்தரவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜப்பானிலும் அடிப்படித்தான். ஜப்பானில் பெண்கள் தனியாக எங்கே வேண்டுமானாலும் போய் வரக்கூடிய அளவுக்குப் பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. எங்கே ஜப்பான்? எங்கே நாம்? அப்படிப் பாதுகாப்பு நம்முடைய நாட்டில் இருக்கிறதா என்று நினைத்துப் பாருங்கள். சிக்கயநாயக்கர் கல்லூரியில் மாணவர்கள் 10 பேரை கைது செய்திருக்கிறோம். தேர்தலுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமே கிடையாது. பஸ்ஸை நிறுத்தி, பஸ்ஸிற்குள் புகுந்து அங்கிருந்தவர்களிடத்தில் தேர்வு சம்பந்தமான நோட்டீசைக்கொடுத்து பெண்களைத் தொட்டு, சொல்லக்கூட முடியாத விதத்தில் அவர்களிடத்தில் நடந்துகொண்டு, இவ்வளவு பெரிய தவற்றை தைரியமாகச் செய்திருக்கிறார்கள். அவர்கள் மாணவர்களாக இருக்கட்டும், வேறு யாராகத்தான் இருக்கட்டுமே. இப்படி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இங்கே இருக்கிறது. அங்கே ஆயிரம் மடங்கு உயர்ந்த நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஒரு உயர்ந்த நிலையை அந்த நாடு கண்டிருக்கிறது. நம்நாடு அப்படி இப்படி என்று சொன்னார்கள். ஆனால் இது போன்று நடப்பதைப் பார்க்கும்பொழுது இந்த நாட்டில் பிறந்தவர் என்று சொல்லக்கூட வெட்கமாக இருந்தது. எந்த நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதோ அந்த நாடுதான் முன்னேற முடியும். அடிப்படையே அதுதான். அது இல்லை என்றால் அது நாடே இல்லை.

### அந்த நாட்டில் அச்சமில்லை—அச்சமில்லை

நான் அங்கே இருந்தபோது உத்தரப் பிரதேச முதலமைச்சர் பி. சி. சிங் ராஜினாமா செய்தார்கள். ஏன்? அவர்களால் முதலமைச்சராக இருக்க முடியவில்லை. ஏன்? போலீசை வைத்துக் கொண்டு சகல அதிகாரத்தையும் வைத்துக் கொண்டு, மத்திய போலீஸ் அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு சாதாரண கொள்ளைக்காரர்களை அடக்கி மாகாணத்தை ஆள முடியாமல் ராஜினாமா செய்திருக்கிறார்கள். உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பீஹார் ஆகிய நான்கு மாநிலங்களைக் கொள்ளைக்காரர்கள் ஆளுகின்ற அளவிற்கு விட்டுவிட்டு மற்றவர்களைப் பார்த்து வீரம் பேசுவதால் என்ன பயன்? இங்கு ஜாதிக்கலவரம், மதக் கலவரம் போன்று பல்வேறு தவறுகள் நடக்கின்றன. ஆனால், அங்கே சென்று பார்க்கிறபோது இப்படிப்பட்ட தவறுகள் கிடையாது. ஏன்? சீனா ஒரு கம்யூனிஸ்ட் நாடு என்று சொல்லிவிடுகிறார்கள். அமெரிக்கா சென்ற ஆண்டுதான் சென்று வந்தேன். அங்கே உள்ளே சென்று வெளியே வருகிறவரை ஒரே அச்சந்தான். வெளியே வந்த பிறகுதான் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவ்வளவு அச்சத்தோடு செல்ல வேண்டியிருக்கிறது. 50 டாலர்களை வைத்துக் கொண்டு அங்கே தனியே நடமாட முடியாது. தங்கச் செயினைப் போட்டுக் கொண்டு தனியாகப் போக முடியாது—உயிர் போய்விடும். ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் ஒரு இரவைத் தைரியமாகக் கழிக்க முடியாது. அமெரிக்காவில் எந்த ஊருக்குப் போனாலும் அச்சமின்றி வர முடியாது. ஆனால் அதே நிலை சைனாவில் இல்லையே. அது ஏன்?

### லுக் ஈஸ்ட்

ஜப்பானில் கல்வி அமைச்சரை சந்திக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரிடத்தில் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார்—இதுவரை இங்கே இருந்தவர்களெல்லாம் 'லுக் வெஸ்ட்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இனிமேல் இங்கே இருப்பவர்களை 'லுக் ஈஸ்ட்' என்று சொல்ல வேண்டும். நாங்கள் அப்படி இருக்கிறோம் என்று சொன்னார்கள்.

### ஷிப்பிங் நியூஸ்

ஒவ்வொரு ஊருக்குப் போனாலும் பத்திரிகை வாங்கிப் படிப்பது வழக்கம். பொதுச் செய்திகள், வியாபாரச் செய்திகள், 3ஆம் பக்கம், 4ஆம் பக்கம் அல்லது 8ஆம் பக்கம் 'ஷிப்பிங் நியூஸ்' செய்தி ஒன்றைப் போடுகிறார்கள். டோக்கியோவில் வாங்கினால் 3ஆவது, 4ஆவது பகுதி 'ஷிப்பிங் நியூஸ்' யாங்காங், தாய்லாந்தில் வாங்கினாலும் 'ஷிப்பிங் நியூஸ்' இருக்கிறது. டோக்கியோ, சிங்கப்பூரில் வாங்கினாலும் அப்படித்தான். ஆயிரம் மைல்களுக்குக் கடற்கரை உள்ள இந்த நாட்டில் பத்திரிகை வாங்கிப் பார்த்தால் அதன் கடைசிப் பக்கத்தில் மட்டும் அந்தமான் மலேசியாவிற்குப் போகிற கப்பல் என்றைக்குப் போகிறது என்பது மட்டும்தான் போட்டிருக்கும். இந்தியாவில் கப்பல்துறை வளரவில்லை. வர்த்தகம் வளரவில்லை. இங்கு கப்பல்துறை கெட்டதற்கே முக்கிய காரணம் மத்திய சர்க்கார் அதிகாரம்தான் என எழுதியிருக்கிறார்கள். இந்நாட்டில்தான் கப்பல் தொழில் வேறு நாட்டைவிடச் சிறப்பாக இருந்திருக்க வேண்டும்.

### நம் கப்பலோட்டிய பெருமை எங்கே?

உலகத்தில் இருக்கிற அத்தனை நாடுகளிலும் கரையோரம் கப்பலோட்டியபோது தமிழ்நாட்டில் ஆழ்கடலில் கப்பலோட்டியிருக்கிறோம். கப்பலிலே போய்த்தான் பல நாடுகளை வென்று வந்திருக்கிறோம். அப்படியிருந்த ஒரு நாடு இன்று கப்பல் துறையில் ஒரு தென்கொரியா அளவிற்குக்கூட வளரவில்லை. சிங்கப்பூர் அளவுக்குக்கூட வளரவில்லை. டோக்கியோவைப் போன்றுகூட வளர முடியவில்லை. நாம் எங்கே போய் எல்லோருக்கும் வேலை தருவது?

### மீன் பிடிப்பும் மீன் வளர்ப்பும்

அங்கிருந்தவர்கள் சிலரிடம் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு உண்மையைச் சொன்னார்கள். என்ன உண்மை என்றால் இன்னும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு நாம் பிடிப்பதற்கு மீனே இருக்காது. இப்பொழுது மீன் இருக்கிறது. பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்; அப்புறம் அவர்கள் என்ன செய்வார்கள்என்று தெரியாது. அவர்கள் 9 மாதம் மீன் பிடிக்கிறார்கள். மீதி 3 மாதம் என்ன செய்வீர்கள் என்று கேட்டதற்கு மீனை வளர்ப்போம் என்று சொன்னார்கள். அதாவது 'ஃபிஷ் கல்டிவேஷன்'. அவர்கள் பிடிக்கிற மீன்கள் ஒரே மாதிரியான மீன்கள். மீனை வளர விடுகிறார்கள். பிறகு மீன் முட்டையை எடுத்து அதைப்போட வேண்டிய இடத்தில் போட்டு, அதை வளர்க்கும் செயலில் ஈடுபடுகிறார்கள். ஆகவே ஒரு பக்கம் மீன் பிடிக்கிறார்கள். ஒரு பக்கம் மீன் வளர்க்கிறார்கள்.

### ஆனால் நாம் என்ன செய்கிறோம்?

நம்முடைய கடற்கரையில் கட்டுமரத்தில் போய் 4 பேர் மீன் பிடிப்பார்கள். எது கிடைத்தாலும் விட மாட்டார்கள். இவர்களை மீறிக்கொண்டு விசைப்படகிலே ஒரு 4 பேர் செல்வார்கள. அவர்களும் எது கிடைத்தாலும் விடமாட்டார்கள். அவர்களுக்கும் தெரியாமல் தாய்லாந்திலிருந்து 4 பேர் இங்கு

**மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களுடன் சீனாவிலுள்ள இந்தியத் தூதர் திரு. பாஜ்பாய் தம் துணைவியாருடன்**



வந்து மீன் பிடித்திருக்கிறார்கள். இப்படி போட்டி போட்டுக் கொண்டு மீன் பிடிப்பதால் கூடிய விரைவில் கிழக்குக் கடற்கரையில் மீனே இருக்காது. நாம் என்ன புத்திசாலித்தனமாக காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறோம்? அந்நாட்டவர்கள் எவ்வளவு ஒழுங்காகத் தொழிலை வளர்க்கிறார்கள் ?

**யார் இந்த நிலைக்குக் காரணம்?**

''இந்த நாடு நன்றாக இருந்தாலும் அதற்கு நீங்கள்தான் காரணம். மோசமாக இருந்தாலும் அதற்கு நீங்கள் தான் காரணம்'' என்று கன்பியூஷியஸ் சொன்னதை நான் ஆசிரியர்களுக்குச் சொல்ல வேண்டியுள்ளது. கல்வித்துறையிலேதான் இந்தக் குறைபாடுகளுக்கு அத்தனைக் காரணமும் இருக்கின்றது. இன்று தவறு செய்வதற்குக் காரணமாக இருக்கின்றவர்களைத் தயாரிப்பதே கல்வித்துறைதான். இனிமேலாவது தவறு செய்பவர்களைத் தயாரிக்காமல், நல்லவர்களை, வல்லவர்களை, இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படக்கூடிய வகையிலே கல்வித்துறை தயாரிக்க வேண்டும்.

**நாம் போதிப்பதும் அவர்கள் போதிப்பதும்**

நாம் பள்ளிகளிலே பூகோளம் சொல்லித் தருகிறோம். கணக்குச் சொலலித்தருகிறோம். தமிழைச் சொல்லித் தருகிறோம். ஆனால் அவர்கள் சீன மொழியைச் சொல்லித் தருகிறார்கள். நம் நாட்டில் இரண்டாவது கட்டாய மொழியாக ஆங்கிலத்தை வைத்திருக்கிறோம். ஜப்பானிலும் இரண்டாவது கட்டாய மொழியாக ஆங்கிலத்தை வைத்திருக்கிறார்கள். நாம் ஆங்கிலத்தைப் பாடமாக வைத்துக் கொண்டிருக்கிறோம்; அவர்கள் ஆங்கிலத்தினை ஒரு சக்தியாக மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு மொழியை எப்படிப் படிக்க வேண்டுமோ அப்படிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எதை, எதை எப்படி நடத்த வேண்டுமோ அப்படி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். டி. வி. யுனிவர்சிட்டி வைத்து காலையிலிருந்து மாலை வரை ஏதாவது ஒன்றைப் பற்றி படித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள பள்ளிகளைப் பார்க்கும்போது இங்குள்ள பள்ளியைப் போல்தான் உள்ளது. ஐ. டி. ஐ. நம் நாட்டிலும் நன்றாக இருக்கிறது. அதில் எந்தவிதமான குறையும் இல்லை. ஆனால் ஒரே ஒரு குறைபாடு உள்ளது. ஓவியத்திற்கும் கலைக்கும் அங்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். நாம் கொடுப்பதில்லை. ஓவிய ஆசிரியர்களுக்கு மதிப்புத் தருவதில்லை. நம் டிராயிங் மாஸ்டர்களை அரசமர பிள்ளையார் கோவில் ஆண்டி என்று சொல்லுவோமே—அதைப்போல் நினைக்கிறார்கள்.

அங்கு உடற்பயிற்சி வகுப்பு நடக்கிறது. அப்போது உடற்பயிற்சியை நன்றாகக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கு உடற்பயிற்சி வகுப்பு நேரத்தில் ஆங்கிலமோ, கணிதமோ கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லது வேறு ஏதாவது நடக்கும். உடற்பயிற்சி வகுப்புக்கும் நாம் மதிப்புத் தருவதில்லை. உடற்பயிற்சி ஆசிரியருக்கும் நாம் மதிப்புத் தருவதில்லை. ஆனால் அவர்களுக்கு அங்கே சிறந்த இடத்தைத் தந்திருக்கிறார்கள். அங்கு பள்ளிகளில் உடற்பயிற்சி நேரத்தைத் தவிர மேலும் ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. இதையெல்லாம் நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இங்கே இருப்பதைத் தான் சீனாவில் பார்க்கிறோம். ஆனால் அங்கே இவைகளுக்கெல்லாம் ஆதரவு கிடைக்கிறது. வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற பாடங்களின் மூலமாக நம்முடைய சிந்தனையை, செயலாற்றலை நன்றாக வளர்க்க முடியும். வெறும் மனப்பாடம் செய்து பெறும் அறிவைப்பற்றி நமக்குத் தெரியும். தலைமை ஆசிரியர்கள் சில பள்ளிகளிலே நல்ல தன்மைகள் வருவதற்கு ஒரு பாடத்தைச் சொல்லித்தர நடவடிக்கை எடுத்தால் அது பொதுமக்களுக்குப் புரிவதில்லை. அதுதான் நம் குறைபாடு. இதில்தான் நம்முடைய போராட்டத்திற்கான காரணம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இந்நாட்டில் இசைக்கும் ஒரு நல்ல முக்கியத்துவம் தருகிறார்கள். எல்லாவற்றையும் விட 'பொலிடிகல் எஜுகேஷன்' என்ற ஒன்றைத் தருகிறார்கள். இதற்கு மூன்று பாடவேலைகள் வைத்திருக்கிறார்கள். நம் நாட்டிலும் இப்போது 11,12, ஆம் வகுப்புகளுக்கு மாணவர்களுக்கு 'பொலிடிகல் எஜுகேஷன்' சொல்லித் தருகிறார்கள். அதில் தேசபக்தியைப் பற்றிச் சொல்லித் தருகிறார்கள். நம்முடைய குறைபாடுகள் எங்கே இருக்கின்றன?



நாம் கணிதம் சொல்லித் தருகிறோம். விஞ்ஞானம் சொல்லித் தருகிறோம். மற்ற எல்லாப் பாடங்களிலுமே நாம் வல்லவர்கள் தான். இருந்தாலும் நாம் முன்னேற முடியவில்லை. சைனாவும் மற்ற கீழை நாடுகளும் முன்னேறுகின்றன என்றால் அதற்கு என்ன காரணம்? இங்கே இருக்கிற ஒவ்வொருவரும் தான் வேலைக்குப் போய் சம்பாதித்து, தான் முன்னேற வேண்டும் என்ற உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோமே தவிர அந்நாட்டவரைப்போல் தான் படித்து, சமுதாயத்தை முன்னேற்றி அதன் மூலம் தாமும் முன்னேற வேண்டும் என்று நாம் நினைப்பதில்லை - நம்முடைய குழந்தைகளுக்கும் சொல்லித் தருவதில்லை. இன்னும் சொல்லப் போனால் தேசபக்தி என்பது என்ன என்றே நாம் சொல்லித் தருவதில்லை. வார்த்தைகளைத்தான் பயன்படுத்துகிறோமே தவிர நம்மிடம் அந்த உணர்வு இல்லை. வ. உ. சிதம்பரனார் வெள்ளைக்காரனை எதிர்த்துக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்தார். ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். ஆகவே அவர் சிறந்த தேசபக்தர். திருப்பூர் குமரன் கொடியேந்திப் போர் செய்தார். பெரிய தேசபக்தர். பகவத்சிங் வெள்ளையர்களை எதிர்த்துப்போராடினார். சிறந்த தேசபக்தர். வெள்ளைக்காரர்களை எதிர்த்துப் போராடியவர்கள்தான் தேசபக்தர்கள் என்று சொல்லிச் சொல்லி என்ன நிலைக்கு வந்திருக்கிறோம் தெரியுமா? வெள்ளைக்காரர்களை எதிர்த்துப் போராடுவதுதான் தேச பக்தி. ஆகவே போராடுவதற்குப் பயன்படுவதுதான் தேச பக்தி போராட்டத்திற்குப் பயன்பட்ட தேசபக்தியில் ஈடுபட்டவர்கள் உதவித்தொகை வாங்கியிருந்தால் பரவாயில்லை, ஓய்வு ஊதியம் வாங்கி விட்டார்கள். தேசபக்தியும் ஓய்வு எடுத்துக் கொண்டது. தேசபக்தி என்பது சமாதான காலத்திற்கும் அல்லது விடுதலை அடைந்துவிட்ட பிறகும் தேவையானது. இன்றைக்குப் பள்ளியில் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்களும் தேசபக்தர்கள் தான். வயலில் வேலை செய்து கொண்டிருக்கின்ற விவசாயிகளும் தேசபக்தர்கள்தான். மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு எதையும் செய்யவேண்டும். இப்படி இந்த எண்ணத்தை வளர்த்திருந்தால் இங்கு உள்ள தவறு ஏற்பட்டிருக்காது. கல்லூரியில் படிக்கின்ற ஒரு மாணவன் தவறாக நடக்க முடியுமா? அவன் தவறாக நடந்தாலும் மற்றவர்கள் அவர்களை நடக்க விடுவார்களா? மத்தியப் பிரதேசத்தில் 10 பேர் சேர்ந்து கொண்டு துப்பாக்கியை வைத்துக் கொண்டு ஒரு ஆட்சிக்கு எதிராக ஒரு ஆட்சியை நடத்த முடியுமா? மக்கள், ராமன் ஆண்டால் என்ன?ராவணன் ஆண்டால் என்ன என்று நினைப்பதால்தான் கொள்ளைக்காரர்கள் ஆள முடிகிறது.

நம்முடைய நாடு என்ற உணர்வு, நம்முடைய நாட்டிற்காகப் பாடுபட வேண்டும் என்ற உணர்வு நம்மிடம் இருக்குமேயானால் இன்றைக்கு நம்முடைய முன்னேற்றம் ஜப்பானையும் மிஞ்சும். ஆனால் ஒன்று. நாம் நம்முடைய 'மூளையை'ப் பயன்படுத்தாமல் இருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் நம் மூளை சக்தியில்லாத மூளை என்று சொல்வதற்கில்லை. ஒரு கதை சொல்லுவார்கள். ஜெர்மென், சைனா, அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய எல்லா நாட்டு மக்களின் மூளையையும் ஏலம் விட்டபோது எல்லாவற்றையும் விட இந்தியனுடைய மூளைதான் அதிக விலைபோயிற்றாம். அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்ததில் மற்றைய நாட்டு மக்களின் மூளைகளெல்லாம் செலவழிக்கப்பட்டிருந்தன. நம் நாட்டு மக்களின் மூளை பயன்படுத்தப்படாமல் இருந்தது என்றார்கள்.

அங்கு நாலு பேர் சேர்ந்தவுடன் அறிவாளியாகி விடுகிறார்கள். நாலு பேர் ஒன்று சேர்ந்தால் பெரும் காரியங்களையும் சாதித்து விடுகிறார்கள். இங்கே நாலு பேர் ஒன்று சேர்ந்தால் பெரும் தகராறு வந்து விடுகிறது. யார் யாரைக் கெடுப்பது, எப்படிக் கெடுப்பது என்ற பொறாமைதான் வளர்கிறது. யாரையும் நம்ப முடியாது என்ற நிலை வளர்கிறது. அங்கே இப்படி இல்லை. எப்படி என்று கேட்டதற்கு அவர்கள் சொல்லுகிறார்கள்; ''நாங்கள் யாரையும் ஏமாற்ற மாட்டோம்'' இங்கு தேசபக்தி என்று சொல்வதுபோல அங்கே 'நேஷனல் ப்ரைடு' என்று சொல்கிறார்கள். நாம் ஒருவரை ஏமாற்றினால் தங்களுடைய கௌரவம், நாட்டின் கௌரவம் கெடுகிறது என்று நினைக்கிறார்கள். இங்கே யார் அதை நினைக்கிறார்கள்?

நான் இந்தியாவில் இருந்தவரை தாய்லாந்தைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அங்குபோய்ப் பார்த்தவுடன் தான் தெரிகிறது; தாய்லாந்து ஒரு ஆண்டிற்கு 7 சதம் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் நம் நாட்டில் 4 சதம் குறிவைத்து 2.5 சதத்தைக்கூடப் பிடிக்கத் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். அங்கே மக்களுக்கு இருக்கக்கூடிய பொதுவான குணம், ''ராஜ விசுவாசம்''. ராஜா மீது ஒரு தனி விசுவாசம்' ஆகவே, அவர்கள் இன்று சிறந்ததொரு முன்னேற்றப் பாதையைக் கடந்து கொண்டிருக்கிறார்கள்.

மேலை நாடுகளுக்குச் சென்று தெரிந்து கொண்டதைவிடக் கீழைநாடுகளுக்குச் சென்று தெரிந்து கொண்டு வந்தது என்னைப் போன்றவர்களுக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளது. ஒரு மாணவரை உருவாக்கும்பொழுது இந்தச் சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய வகையில் பயிற்றுவிக்க வேண்டும். அறிவு வீணாகப் போகின்ற அளவுக்கு நம் கல்விமுறை இருக்கக் கூடாது. மாணவனைச் சமுதாயத்திற்குப் பயன்படக்கூடியவனாகத் தயாரிக்க வேண்டும் என்பதுதான் முக்கியமான அடிப்படை. தாங்கள் சமுதாயத்திற்குப் பயன்படவேண்டும் என்ற எண்ணத்தையும், பண்பாட்டையும் மாணவர்களது உள்ளத்தில் வளர்ப்பது மிக அவசியம்.

**சமுதாயக்கல்வி**

மேலைநாடுகளில் காண முடியாத வெவ்வேறு வகையான அரசியல் அமைப்புகளைக் கொண்ட கலாச்சார அடிப்படையில் நாம் பார்ப்பது, அடிப்படையாகப் பார்ப்பது மக்களின் தேசபக்தி. தேசபக்தி என்ற அடிப்படையிலே மக்களுக்கு அந்தப் பண்பாட்டை வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையிலே இங்கு கல்வி தரப்படுமானால் சீனாவைவிட, ஜப்பானைவிட, தென்கொரியாவை விட முன்னேறிய ஒரு நாடாக நம் நாடு நிச்சயம் ஆகும் என்பதில் யாருக்கும் சந்தேகம் எழத் தேவையில்லை. நல்லதும் கெட்டதும் நம் கையிலேதான் இருக்கிறது. இந்த அரசு வந்தவுடனே நாம் தந்த ஆதரவு, நாம் அதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொன்னதுபோல் இந்தியாவில் யாரும் அதைச் சொல்லியிருக்க முடியாது. இன்றைக்குக் குறைபாடுகள் இருக்குமேயானால் போதுமான அளவிற்கு நாம் அவ்வாதரவைப் பெற்றுக் கொள்ளவில்லை, உணர்ந்து செயல்படவில்லை என்றுதான் ஆகிறது. சைனாவிற்குப் போய் நாம் இதைக் கற்றுக் கொள்ளவில்லை. 'மாரல் எஜுகேஷன்' என்று மாற்றி சமுதாயக் கல்வி தர வேண்டும் என்று சொல்லி அதை 11வது 12வது வகுப்பிற்குப் பாடத்திட்டம் போட்டுத் தந்திருக்கிறோம். ஆனால் கல்வித்துறையை எந்தவகையில் பயன்படுத்துகிறார்கள். பொது மக்கள் அதை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்களுடைய உணர்வை அறிந்து கொண்டு இந்த மாற்றத்தைச் செய்திருக்கிறோம். இதன் பலன் தெரியச் சில நாட்களாகும். நம்முடைய கையிலேதான் முன்னேற்றம் இருக்கிறது. அனைத்து முயற்சிகளையும் செய்து நல்ல முன்னேற்றம் நம் நாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். நாமும் உயரவேண்டும், நம் நாடும் உயர வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்வதற்கு இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். இத்தகைய உணர்வுகளைப் பற்றிப் படிக்கின்ற நீங்கள் சிந்தித்துப் பாருங்கள், விவாதியுங்கள், கலந்து பேசுங்கள், சரியென்று தோன்றும் நல்ல காரியத்தைத் தொடர்ந்துசெய்யுங்கள் அவ்வாறுசெய்வதையே மக்களுக்கு நீங்கள் செய்யும் பணியென நினையுங்கள்.





# மக்கள் மனச்சான்றை மலரச் செய்தவர்

## கா. திரவியம்
### தலைமைச் செயலாளர்

சீரான கருத்துக்களைச் செம்மையான தமிழில் பெய்து ,பேச்சிலும் எழுத்திலும் சிறப்பானதொரு பாணி வகுத்துக் கொண்ட திரு.வி.க. அவர்கள் பாடல்களும் இயற்றியுள்ளது, அவருடைய பல்வகை ஆற்றலுக்குச் சான்றாகும். ''பாட்டென்பது சொல்லடுக்கன்று; அணிச் செறிவன்று; யாப்புக்கட்டுமன்று. இயற்கையோடு இரண்டற இயைந்த மனத்தினின்றும் விரைந்தெழும் மகிழ்ச்சியின் பொங்கல் பாட்டாகும் ''என்று அவரே பாட்டின் இலக்கணத்தைப் பகர்கிறார். அவசியத்தைக் கருதியும் அமைதியை நாடியும், அவர் அவ்வப்போது பாட்டுகள் ஆக்கியதுண்டு. அவற்றில் சில 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்' என்னும் தலைப்பில் 1931 ஆம் ஆண்டில் நூல்வடிவில் வெளியாயின.

''சாதிநில மொழிநாடு சமயவெறிச்
சண்டையெலாந் தாண்டி தாண்டி
நீதியிலே விளங்குகின்ற நின்மலமாய்
நித்தியமாய் நிறையாய் அந்தம்
ஆதிநடு வில்லாத அகண்டிதமாய்
ஆனந்த அறிவாய் நின்று
போதலொடு வரவற்ற பூரணமே
சுதந்திரமே போற்றி போற்றி''

என்ற வாழ்த்தல், சன்மார்க்க மலர் கொண்டு சுதந்திர தெய்வத்தைப் பூசிக்கின்றார்.

'பாரதநாடு' என்ற தம் பாட்டில், வாழையடி வாழையாக, கலைப் பாரம்பரியத்தையும் வரலாற்றுச் சிறப்பையும் வளப்படுத்திவந்த தோன்றல்கள் வாழ்ந்து வளர்ந்த நாடு என்ற பெருமையை வகையாகக்கூறி,

''வானவருந் தொழுதேத்தும் வளம்பெருகு நாடு
வாழ்விழந்தே இதுகாலை சாடுகின்றநாடு
ஊனமிலா உரிமைபெற ஊக்கமிகு நாடு
உத்தமரை அளிக்கின்ற ஒருபாரதநாடே'

என்று, அவல நிலையிலிருந்து மீண்டு, எழுச்சி பெறவிழையும் இந்திய நாட்டின் நிலையைப் பாடுகிறார். ''தாயின் கட்சி' என்ற பாடல், இந்தியத் தாய்தன் இழிநிலை கண்டு புலம்பும் தவிப்புப் பாடல். நலமுற்ற ஜப்பான் நாயகி, சீருடை அமெரிக்கச் செல்வி கலைவினைகள் ஆக்குஜெர்மன் மாது, கவின் பிரான்சுத் திருமகள் என்று எல்லா நாட்டுத் தேவிகளும் ஏற்றமுடன் கொலு வீற்றிருக்கின்றனர்.''என்னாட்சி கதிர்மறைதல் எப்பொழுதுமில்லை.. எங்கும் எனதாணை- உன்னலத்தின் பொருட்டாக உன்னையுமேயாளும் ஓரரசி'' என்று ஆணவ இறுமாப்புடன் கூறுகிறாள், ஆங்கிலேய அணங்கு. அந்த அவையிலே தன் அன்னையைக் காணாது, அலமருகிறான், இந்தியன். 'எங்கே என் தாய்', என்ற ஏக்கக் குரலுக்கு எதிரொலியாக அன்னையின் அழு குரல் கேட்கிறது.

''படியினிலே இல்லாத பாழான சாதி
பகுப்புடனே, தீண்டாமை,பாவையர் தம் அடிமை,
கொடிய இவை குடிகொண்டு கொடி
கொடியாய்ப் படர்ந்தே
கொல்லவுடன் பிறப்பன்னைக் குலைத்த
தென்றன் வாழ்வே''

என்று, கடையில் புகுந்த இகல் சாதிப் பூச்சி இரத்தம் குடிக்க, என்புருவாய்க் கிடக்கும் தாய் ஏங்கி அழுவதாகச் சோகச் சித்திரம் தீட்டுகின்றார் திரு. வி. க. எழிற்சபையில் அன்னை எழுந்தருளச் செய்ய, நாட்டு மக்கள் தேட்டமுடன் தொண்டாற்ற, அழைக்கின்றார் கவிஞர்.

''செம்மைவினை யாற்றுதற்குச் சேர வாரும்;
தீண்டாமை பெண்ணடிமை சிறுமைச் சாதி
வெம்மைதரு நோய்களைய விரைந்து வாரும்
விழுமியசு தேசியத்தை விதைக்க வாரும்
அம்மைசம தர்மவர சாட்சி நாடி
அன்பார்ந்த சோதரரே! அணைவீ ரின்மே!''

''சுதந்திர நாமாவளி' என்ற சுதம்பக் கண்ணியிலும்,

''சாதிப் பேயை யோட்டுவமே
சமநிலை யெங்கும் நாட்டுவமே''

என்று அழைக்கின்றார்.

''சுதந்திர வாழ்வே சுவைவாழ்வு
அல்லாத வாழ்வெல்லாம் அவவாழ்வு''

என்று அரசியல் நெறியினை அறிவுறுத்துகிறார் திரு.வி.க.

தூய்மை வழுவாதநடை; துடிப்புமிக்க பாடல், வேதனை குமுறிய போதும் வெறுப்புக்கு இடம் தராத பாங்கு; ஆத்திரம் மீறிட்ட நேரத்திலும், அமைதி கலையாத தன்மை. கருத்துக்களில் திண்மை; ஆனால், சொல்லிலே மென்மை. அழுத்தமான உணர்ச்சிகளை வெளியிடும்போதும், அடக்கமான பாணி. பகைவர்களைச் சாடும் போதும், தகைமை பிறழாத தன்மை. இலட்சிய உறுதியிலும் இனிமை குறையாத இயல்பு. வேகத்திலும் விளக்கம் பெறும் விவேகம். இனிய பண்புகள் பொருந்தி, அறம் ஆட்சி செலுத்தி, அன்பு ஆட்கொள்ளும், ஆர்வமிக்க தேசியப் பாடல்கள் மூலம் திரு.வி.க மக்களின் மனச்சான்றினை மலரச் செய்தார்.

**ஆதாரம்** : தேசியம் வளர்த்த தமிழ்





# திரு. வி. க. இயற்றிய நூல்கள்

1908 கதிரைவேற் பிள்ளை சரித்திரம்
1909 திருமந்திரம்-பார்வை இட்டது
1907 பெரிய புராணம் (குறிப்புரையும் வசனமும்)
1915 அருணாசல புராணம் (சில சேர்த்துப் பதிப்பித்தது)
1915 குசேலோபாக்கியானம்—குறிப்புரை (முதல் 2 அத்தியாயங்கட்கு மட்டும்)
1919 தேசபக்தாமிர்தம்
(திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறையும், அரும்பதவுரையும், சரித்திரக் குறிப்பும்.)
1921 மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்
1921 என் கடன் பணி செய்து கிடப்பதே
1921 சைவ சமய சாரம்
1922 நாயன்மார் திறம்
1923 பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் (விருத்தியுரை)
1923 மகாபாரதம் (வில்லிபுத்தூரார்)
1923 தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
1925 சைவத்தில் சமரசம்
1925 இன்ப வாழ்வு
1925 முருகன் அல்லது அழகு
1927 பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை.
1928 தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு.
1928 கடவுள் சாட்சியும் தாயுமானாரும்
1929 தமிழ் நூல்களில் பௌத்தம்
1929 சைவத் திறவு
1929 இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
1930 சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
1930 நினைப்பவர் மனம்
1931 இமயமலை அல்லது தியானம்
உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்
1932 முருகன் அருள்வேட்டல்
1932 காரைக்காலம்மையார் திருமுறை-குறிப்புரை
1933 சமரச சன்மார்க்க போதம்
1934 சமரச தீபம்
1934 சமரச சன்மார்க்கத் திறவு
1935 தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு-1.
1935 சித்த மார்க்கம்
1937 நாயன்மார் வரலாறு
1938 முடியா? காதலா? சீர்திருத்தமா?-5
1938 திருமால் அருள்வேட்டல்
1939 திருக்குறள் விரிவுரை—பாயிரம்
1939 திருக்குறள் விரிவுரை-இல்லறவியல்
1940 இந்தியாவும் விடுதலையும்
1942 பொதுமை வேட்டல்
1942 உள்ளொளி
1944 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்
1944 ஆலமும் அமுதமும்
1945 கிறிஸ்துவின் அருள்வேட்டல்
1945 புதுமை வேட்டல்
1947 சிவனருள் வேட்டல்
1948 கிறிஸ்து மொழிக் குறள்
1949 பரம் பொருள் அல்லது வாழ்க்கை வழி
1950 இருளில் ஒளி
1950 இருமையும் ஒருமையும்
1951 அருகன் அருகே அல்லது விடுதலை வழி
1951 பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்
1951 சித்தந்திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்
1951 முதுமை உளறல்
1953 தமிழ்க்கலை
1953 வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்

தொகுப்பு : சிறுவை நச்சினார்க்கினியன்








# தமிழ்த் தென்றல்

முத்தமிழ்க்காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் தமிழ்த் தொண்டு, தொழில் தொண்டு, சமயத் தொண்டு, அரசியல் தொண்டு, சமூகத் தொண்டு ஆகிய ஐவகைத் தொண்டும் தன்னலங்கருதாது செய்துவந்த தமிழகத்தின் தனிப் பெருந்தலைவர்.

பிற்காலத்தில் இத்தனையிலி ருந்தும் ஓய்வு எடுத்துக் கொண்டு இராயப்பேட்டையிலுள்ள அச்ச கத்தில் தன் தமையனார் உலக நாத முதலியார் அவர்களுடன் இருந்து எழுத்துப் பணி புரிந்த பொழுது நான் அடிக்கடி அவர் களைச் சந்தித்துப் பேசி மகிழ்வ துண்டு.

மாறுபட்ட கட்சியினரிடத்தும் மாறுபட்ட கொள்கையுடையவர் களிடத்தும் சிறிதும் வெறுப்படை யாமல் மனம் திறந்து பேசி மகிழ்ச் சியடையும் பெருங்குணத்தை அவரிடம் கண்டு மகிழ்ந்திருக் கிறேன்.

'தேசபக்தன்' என்று ஒரு தின சரியை நடத்தி அதன் ஆசிரியராக இருந்து அதன் தலையங்கங்களில் சிக்கலான செய்திகளைக்கூட எளிய தமிழில் முதன் முதலாக எழுதி வெளியிட்ட பெருமை அவருக்கு உண்டு.

அக்காலத்தில் அரசியல் கூட் டங்களில் பல தலைவர்கள் ஆங் கிலத்திலேயே பேசுவது வழக்கம். அத்தகையோரை மீறி நல்ல தமி ழில் அரசியல் மேடைகளில் பேசி பொதுமக்களின் உள்ளங்களைக் கவர்ந்து பெரும் பாராட்டுதலைப் பெற்றவர் திரு.வி.க. அவர்கள்.

புதுமையான கருத்துக்களைக் கொண்ட சிறந்த நூல்கள் பல வற்றை அழகிய 'தமிழ் மொழி யில் எழுதி அவர் தமிழ் மக்களுக்கு வழங்கியிருப்பது பெரிதும் பாராட் டுதலுக்குரியது. அவற்றில் மிகச் சிறந்து விளங்குவது ''பெண்ணின் பெருமையும், ''காந்தியடிகள் வரலாறும்'.

அக்காலத்தில் தமிழகத்தை அரசாண்ட ஆங்கிலேயர்கள் திரு.வி.க. அவர்கள் மீது தேசத் துரோகக் குற்றத்தைச் சாட்டி னர். அப்பொழுது நீதிக்கட்சியின் தலைவர்கள் சர். பி. தியாகராஜ செட்டியார் அவர்களும் சர்.பி. டி.ராஜன் அவர்களும் கவர்னர் அவர்களிடம் தூது சென்று வாதாடி குற்றச் சாட்டிலிருந்து நீக்கிய செய்தி இன்னும் என் நினைவில் உள்ளது

ஒருமுறை குற்றாலத்தில் நாங் கள் இருவரும் சந்தித்துக் கொண் டோம். திரு.வி.க. அவர்கள் அருகி லுள்ள வ.வே.சு.ஐயரைப் பார்க் கச் சென்ற போது என்னையும் அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தியபோது அவர் சொல்லிய சொற்களைக் கண்டு நான் பெரி தும் வியந்தேன். அச் சொற்கள்- ''இவர் திருச்சி இளைஞர், விசுவநாதம், சு.வெ.ராவின் தொண்டர். நாயக்கருக்கு செல் லுமிடமெல்லாம் இப்படிப்பட்ட நல்ல இளைஞர்கள் கிடைத்து விடுகிறார்கள். நமக்குக் கிடைப் பதில்லை. என்ன செய்வது? '' என்பதுதான்.

''பெரியாரைக் கொலை செய் யும்படி மறைமலையடிகள் தூண் டினார்'' என்று அடிகளார் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அதைக் கண்டு பெரிதும் கவலைப் பட்டு பல்லாவரத்துக்கு அழைத் துக் கொண்டு போய் மறைமலை யடிகளிடம் ஒரு கடிதத்தை வாங் கச் செய்து அதைப் பெரியாரிடம் காட்டி அவ்வழக்கைத் திரும்பப் பெறச் செய்ததற்கு முதற் கார ணமாயிருந்து என்னைத் தூண்டி யவரும் திரு.வி.க. அவர்களே யாவார்.

திரு.வி.க. அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள தன்னுடைய வர லாற்று நூலில் என்னைப் பற்றி நீண்டதொரு கட்டுரை எழுதி யிருக்கிறார்கள். அது அவர் உள் ளத்தைப் படம் பிடித்துக் காட்டு வது போல் அமைந்திருக்கிறது.

பிறகு வயது முதிர்ந்து நடை தளர்ந்து கண் பார்வை குறைந்து, செயல் இழந்து அவரது இல் லத்தில் இருக்கும்போது பல முறை சென்று அவர்களைப் பார்த்திருக்கிறேன். அத்தனை தடவையிலும் டாக்டர் மு.வ. அவர்கள் திரு.வி.க. உடனிருக்கக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

ஒரு தடவை நான் திரு.வி.க. அவர்களிடம் சென்ற பொழுது டாக்டர் மு.வ. என்னிடம் கூறி னார். ''ஐயா அவர்கள் இப்பொ ழுதும் ஒரு நூல் எழுதியிருக்கிறார் கள். அந்நூலுக்கு ''படுக்கைப் பிதற்றல்'' என்று பெயர் வைத் திருக்கிறார்கள். அது உலகை நோக்குமின், உலகை நோக்குமின் என்று தொடங்கப் பெற்றிருக் கிறது'' என்றும் கூறினார்கள்.

தமிழ்ப்புலவர்கள் தமிழகத்தி லிருந்து தமிழ் மக்களுக்கென எந்த இலக்கியங்களைச் செய் தாலும் அந்நூல்களில் முதற்பாட் டில் முதலடியில் முதற் சொல் லாக உலகத்தை வைத்துச் செய்யு யும் ஒரு மரபை திரு.வி.க அவர் களின் படுக்கைப் பிதற்றலிலும் கண்டு வியந்தேன்.

மற்றுமொருமுறை காண்:



# மொழி பெயர்ப்பாளர் திரு.வி.க

18.3.1919-ல் அரக்கோணம் இரயிலடியில் பம்பாய் மெயில் வந்து நின்றது. மகாத்மாவைச் சந்திக்கிறார் திரு.வி.க. தலைவர் விஜயராகவாச்சாரியார் அளித்த அறிமுகக் கடிதத்தை மகாத்மாவிடம் தருகிறார்.

மகா. : தேசபக்தன் எம்மொழிப் பத்திரிகை?

திரு.வி.க. : தமிழ்ப் பத்திரிகை

மகா. : நீங்கள் பட்டதாரியா?

திரு.வி.க. : யான் பட்டதாரியல்லன்; மெற்றிகுலேஷன்வரை ஆங்கிலம் பயின்றவன்: எனது ஆங்கில அறிவு மொழிபெயர்ப்பளவில் பயன்பட்டு வருகிறது. தொழிலாளர் கூட்டங்களில் பெஸண்ட் அம்மையார், வாடியா முதலியோர் பேச்சுக்கள் என்னால் மொழி பெயர்க்கப்படும்.

மகா. : என் பேச்சை மொழி பெயர்ப்பீரா?

திரு.வி.க.: தொழிலாளர் சார்பில் கூடுங் கூட்டத்தில் யானே மொழி பெயர்ப்பாளனாக இருப்பேன்.

மகா. : நீங்கள் மொழிபெயர்ப்பாளரா என்றார். பின்னர் திரு.வி.க.வைக் காணும்போதெல்லாம் மகாத்மா காந்தி அடிகள் ''மொழி பெயர்ப்பாளரே'' என்று அழைப்பது வழக்கமாயது.

**ஆதாரம்: திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்பு**



சென்ற பொழுது கூனிக்குறுகி தரையில் முடங்கிக் கிடந்தார்கள். அப்பொழுதும் டாக்டர் மு.வ. அவர்களை அங்குக் கண்டேன். 'காலமெல்லாம் தமிழுக்குத் தொண்டு செய்துள்ள இந்தத் தமிழ் உடல் தங்கியிருக்க ஒரு சொந்த வீடு இல்லை. வாடகை வீடு. அதிலும் வீட்டைக் காலி செய்யும்படி வீட்டுக்காரர் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். என்ன செய்வதென்று தெரியவில்லை. நாமெல்லாம் சேர்ந்து நிதி திரட்டி ஒரு வீடு வாங்கி வைப்பது நலமாகும்' என்று டாக்டர் மு.வ.கூறினார்.

அப்படியே செய்வோமென்று செட்டி நாட்டரசருக்கும்,மதுரை கருமுத்து தியாகராச செட்டியாருக்கும்,சர். பி. டி. ராஜனுக்கும் டபிள்யூ.பி.ஏ., சௌந்திர பாண்டிய நாடார் அவர்களுக்கும் நான்கு கடிதங்களை அங்கிருந்தே எழுதி அனுப்பி திருச்சி வந்து சேர்ந்தேன்.

சிலநாட்கள் கழித்து கருமுத்து அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. உடைத்துப் பார்த்தேன், அவர் திரு.வி.க. அவர்களுக்கு அனுப்பியிருந்த பெருந்தொகைக்குரிய காசோலை ஒன்றும் அவர் அதை ஏற்க மறுத்து திரு. செட்டியாருக்கேதிருப்பி அனுப்பிவைத்து எழுதியிருந்த கடிதத்தின் நகலும் இருந்தது. திரு.வி.க. கடிதத்தில் குறிப்பிட்டிருந்த சொற்றொடர் என்ன தெரியுமா?

''நான் வாழ்நாளெல்லாம் செய்யாத ஒரு தவறை இக் கடைசி நாளில் செய்யும்படி என்னை வற்புறுத்த மாட்டீர்களென நம்புகிறேன்'' என்பதுதான். இதை நான் டாக்டர் மு.வ.வுக்கு அறிவித்தேன். அவரும் என்னைப் போலவே இம் முயற்சியைக் கைவிட்டு விட்டார்.

கடைசியாக ஒருமுறை நான் கண்டபொழுது திரு.வி.க. அவர்கள் படுக்கையில் அசைவின்றிக் கிடந்தார். ''கி.ஆ.பெ. வந்திருக்கிறார்'' என்று டாக்டர் மு.வ. அவர்கள் காதருகில் சென்று உரக்கக் கூறினார். திரு.வி.க கையை அசைத்து உட்காரச் சொன்னார். நான் அவரருகில் சென்று அவரது கையை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு,

'ஐயா!

நாட்டுக்கு என்ன சொல்லுகிறீர்கள்? மொழிக்கு என்ன சொல்லுகிறீர்கள்? மக்களுக்கு என்ன சொல்லுகிறீர்கள்?'என்று கேட்டேன். அதையே அவர் மிகவும் ஓசை குறைந்த சொற்களால் திரும்பக் குறிப்பிட்டு,

''நாடு இருக்கிறது... மொழி இருக்கிறது... மக்கள் இருக்கிறார்கள்.. நீங்களும் இருக்கிறீர்கள்... பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள். நாங்கள் கண் கலங்கினோம்.

இப்பொழுது இவ்வாறு சொல்ல யார் இருக்கிறார்கள்' என்று எண்ணும் பொழுது உள்ளம் வேதனையையே அடைகிறது. என் செய்வது? செய்வது ஒன்றுமில்லையென்றாலும் வாய்திறந்து வாழ்த்தவாவது செய்யலாம் அல்லவா?

வாழட்டும் திரு.வி.க. புகழ்!

வளரட்டும் திரு.வி.க. மரபு!

# கவிஞர்கள் பார்வையில் திரு.வி.க



## தமிழருக்காகத் தனித் தொண்டாற்றியவர்

சீலம் நிறைந்த செம்மனக் குன்றாம்
ஒழுக்கம் உயர்ந்த உத்தம சீலர்
முதலியார் பெருமையை முற்றிலும் அறிந்தேன்
தமிழ்நாடு தந்த தலைவர்கள் தம்முள்
காந்தீ யத்தின் உட்பொருள் கண்ட
சிலருள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்
... ...
'தேச பக்த' னில் அவர் செய்த சேவையும்
'நவசக்தி' மூலமாய் நாட்டிற் குழைத்ததும்
புகழ்ந்தால் அதுபெரும் புத்தக மாகும்
தமிழிலே எண்ணித் தமிழிலே பேசித்
தமிழருக் காகவும் தனித்தொண் டாற்றுவார்'

—நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம்



## அப்பரைப் போல அருட்பணி செய்தவர்

தேசத்தை யெழுப்பத் ''தேசபக்த''னுடன்
சீரிய ''நவசக்தி'' யளித்தோன்
மாசிலாத் தமிழில், வளர்புது நடையில்,
மறுவறு மிலக்கியஞ், செய்தோன்
பேசுதற் கினியோன், பெண்மையின் வீரன்,
பிறர்துயர் தனதெனத் தீர்க்கும்
ஆசையே மிக்கோன் அப்பரைப் போல
அருட்பணி செய்தவ னிவனே''.

—யோகி சுத்தானந்தபாரதி

## தனித்தமிழின் கனிச்சுவை

திரு.வி.கலியாணசுந் தரனாரின்
செந்தமிழ்க்கட் டுரைகள் என்னும்
அருவிகளில் ஆடியநல் லறிஞர்களும்
அறிவுபெற்றார்; இளைய சிட்டுக்
குருவிகளும் தமிழ்க்காதல் தலைக்கேறிக்
குதித்தனவே; வடசொல் லின்கைக்
கருவிகளும் தனித்தமிழின் கனிச்சுவையைக்
கண்டுகளித் தனவே யன்றோ?

உணர்வெழுப்ப மெய்ப்பாடும், உடனிசையும்
ஒன்றாய்த் தோன்றிக்
மொழிச்சுரப்பும் கவிதையொளி செயுமென்பார்;
கணகணெனக் மொழி பெயர்ப்பும்
அஃதேபோல் மொழி தனிநூல்கள்,
துணைநூலும் இல்லாமே தனிநூல்கள்,
கட்டுரைகள் புணர்ப்பார் தம்மில்
மணவழகர் தமக்குநிகர் மணவழக
ரேஎன்பேன் இந்நூற் றாண்டில்!

காய்ச்சிவைத்த பசும்பாலில் கழுநீரை
கறந்ததுபோல் கன்றில் தீதைப்
பாய்ச்சிவைத்துப் பிழைப்பாரும், பாழ்பட்ட
தமிழர்களும் வாழும் நாட்டில்
பேச்சுவைத்த தோடுகனி பிழிந்துவைத்துச்
சுந்தரர்வாய் பேச வைத்து
முச்சுவைந்துத் தமிழர்களை முடுக்கியஇத்
தலைமுறையை வாழ்த்து கின்றேன்.

—பாவேந்தர் பாரதிதாசன்





# அரவணைக்கும் தாய்

ஆ. மருதவிநாயகம்

கோவை மாநகரில் உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தில் கட்டப்பட்டுள்ள அங்காடிகள் கட்டடத்தில் 'தாய்' இணையகத்தின் விற்பனைப் பிரிவு துவக்கப்பட்டுள்ளது. இதற்கு அருகில் 'தாய்' இணையகத்தில் பவர் டீலர்கள், டிராக்டர்கள் வழங்கும் விழா 30-7-82 அன்று மாலை 6.00 மணியளவில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகத் தலைவர் திரு. கா. லியாகத் அலிகான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தாய் இணையகத்தின் நிர்வாக மேலாளர் திரு. வெ. கருப்பன், இ. ஆ. ப. அவர்கள் வரவேற்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது : ரூ. 400 இலட்சம் முதலீட்டில் தமிழகத்தில் துவக்கப்பட்ட 'தாய்'' நிறுவனம் கடந்த ஆண்டு ரூ. 1,600 இலட்சம் அளவிற்கு விவசாயிகளுக்குத் தேவையான பொருட்களை விற்பனை செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

இவ்விழாவில் சட்டமன்ற கொறடா திரு. மணிமாறன் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தார்கள்.

'' தாய் '' இணையகத்தின் தலைவர் திரு. லியாகத் அலிகான் அவர்கள் உரையாற்றுகையில், தாய் இணையகம் விவசாயிகளுக்கு மகத்தான சாதனையை உருவாக்கி வருவதாகவும், உடுமலைப்பேட்டை காஞ்சிபுரம், வேலூர் ஆகிய இடங்களில் டிராக்டர் உதிரிபாக விற்பனைக் கூடம் துவக்கப்பட இருப்பதாகவும், உடுமலைப் பேட்டை,தேனீ, விழுப்புரம், சேலம் ஆகிய இடங்களில் பருத்தியிலிருந்து விதையைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை உருவாக்கப்படவிருப்பதாகவும்,. மேட்டூர், தஞ்சை ஆகிய இடங்களில் ஜெரேனியத்திலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலைகளும், தருமபுரியில் சல்வரிசிதொழிற்சாலையும், சேலத்தில் மரவள்ளிக் கிழங்குத் தொழிற்சாலையும், புதுக்கோட்டையில் உமியிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகள் விரைவில் உருவாக்கப்பட இருக்கின்றனவென்றும், சனோலா எண்ணெய் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் விற்பனை செய்யப்பட இருப்பதாகவும், தருமபுரியில் உள்ள எண்ணெய் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் பரிசீலனையிலிருப்பதாகவும் தெரிவித்தார்.

பவர் டீலர்கள், டிராக்டர்களை விவசாயிகளுக்கும், பேருராட்சிகளுக்கும் வழங்கி மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் உரையாற்றுகையில் ''தாய்'' நிறுவனம் குழந்தைகளை அரவணைக்கின்ற தாயைப்போல விவசாயப் பெருங்குடியினரை அரவணைக்கின்ற தாயாக இயங்குவதாகவும், மேல்மட்ட விவசாயிகள் பெற்று வந்த நவீன விவசாயக் கருவிகளை, இத்தாய் இணையகத்தின் மூலம் நடுத்தர, ஏழை விவசாயிகளும், பெற்று மகிழ்வதாகவும், இந்த இணையகம் வர்த்தக நோக்கத்தோடு இயங்காமல், சேவா நோக்கத்தோடு செம்மையாக இயங்குவதாகவும், இவ்விணையகத்திற்கு மத்திய அரசின் உதவி மிகுதியாகக் கிடைக்க வேண்டுமென்றும், விவசாய மறுமலர்ச்சிக்குத் தாய் நிறுவனம் வெகுவாகப் பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## நாமக்கல்லில்...

நாமக்கலில் உள்ள வசந்தபுரம் என்னும் இடத்தில் 1977 ஜூலை மாதம் பிண்ணாக்கிலிருந்து



எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1978-ம் வருடம் பணிகள் முடிவுற்று உற்பத்தி துவக்கப்பட்டது. இதன் மொத்த மூலதனம் 30 இலட்ச ரூபாயாகும்.

நவீன இயந்திர வசதிகள் மூலம் தரமான எண்ணெய்யையும் பிண்ணாக்கையும் பயன்படுத்தி ஆண்டு ஒன்றுக்கு சுமார் 3,000 டன் பிண்ணாக்கு பிழியும் திறன் உடையது. எதிர்பாராத வகையில் ஆலையில் நிறுவப்பட்ட கொதிகலன் சரிவர இயங்காமல் போனதால், அதன் பின்பு உற்பத்தி சுமார் இரண்டாண்டு காலம் இயங்காமல் இருந்தது. துரிதப்படுத்தப்பட்டு, தமிழக அரசின் விடா முயற்சியினால், பல இடர்களுக்கு இடையில் இந்த ஆலை மறுவாழ்வு பெற்று 11-6-1982 அன்று மலர்ந்தது. இந்நாள், அக்ரோ இணையக வரலாற்றில் ஒரு பொன்னாள். இதன் துவக்கத்தினால் 50 பேர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பும், 100 பேர்களுக்கு மேலாக மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கவுள்ளது.

ஐரோப்பிய, ஜப்பான் நாடுகளில் மிகுந்த வரவேற்பு இப்பிண்ணாக்கிற்கு உள்ளது. எனவே ஏற்றுமதி மூலம் குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணி ஈட்டும் நல்வாய்ப்பு உள்ளது.

இதன் மூலம் இந்திய நாட்டில் ஏற்றுமதி வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தோன்றிடும் என்று நம்பப்படுகின்றது.

## தாய் தொடரிருக்கும் பணிகள்....

உடுமலைப்பேட்டை, தேனி, விழுப்புரம், சேலம் ஆகிய இடங்களில் பருத்தியிலிருந்து விதையைப் பிரித்தெடுக்கும் காட்டன் ஜின் தொழிற்சாலை ஒவ்வொன்றிலும் 10 ஜின் வீதம் நிறுவப்படும். இதன் மூலம் 300 பேர்களுக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும். இவைகளுக்கு காட்டன் (பருத்தி) தர காட்டன் கார்ப்பரேஷன் சம்மதம் தெரிவித்துள்ளது.

### சோப்புத் தொழிற்சாலை

சோப்புத் தொழிற்சாலை மேட்டூர் தஞ்சை ஆகிய இடங்களில், இயந்திரம் உபயோகிக்காமல் கையில் செய்யப்படும் 'தாய்' சோப்புத் தொழிற்சாலை நிறுவப்படும். இதன் மூலம் 30 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
சேலத்தில் மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலை நிறுவப்படும்.

புதுக்கோட்டையிலுள்ள 90 இலட்ச ரூபாய் செலவிலான அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் புணர்க்குளம் தொழிற்சாலை செப்டம்பர் மாதம் தனது உற்பத்தியைத் துவக்கும். அதற்கான பாய்லர் அடுத்த மாதம் பொருத்தப்படும்.

தரமான பூச்சி கொல்லி மருந்துகளை எங்கள் அக்ரோ நிறுவனம் செய்து விநியோகித்து வருகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மீன்வலை உற்பத்தி அதிகரித்துள்ளது. ஏழை மீனவர்களும் பயன்பெறும் வண்ணம் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறோம்.

கடந்த ஆண்டு உறுதியளித்ததை நிறைவேற்றும் வகையில் 'கடோலா' என்ற பெயரில் கடலை எண்ணெய்யையும் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளோம். கொழுப்புச் சத்துக் குறைந்த சனோலா எங்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு நான்கு மாவட்டங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

வெளிமாநிலத்திற்கு விற்பனை செய்வதைக் குறைத்துள்ளோம். எண்ணெய்விலையைக் குறைக்கும் பொருட்டு பாலிதீன் பைகள் மூலம் (இந்தியாவிலேயே முதன் முதலாக) எண்ணெய் விற்பனை செய்கிறோம்.

சமீப காலத்தில் உர உற்பத்தி குறைந்தமையால் சற்றுப் பற்றாக்குறை இருந்தாலும் விவசாயிகளுடைய தேவை நிறைவு செய்யப்பட்டது. எதிர் காலத்தில் இத்தகைய குறை ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஆந்திர மாநிலம் கோவூரில் நிறுவப்பட



கடந்த 16.7.'82-ம் நாளன்று ஈரோட்டில் நடைபெற்ற தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் விழாவில் அதன் தலைவர் திரு கா. லியாகத் அலிகான் தலைமையில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துச்சாமி அவர்கள் விவசாயிகளுக்குரிய டிராக்டருக்கான சாவியை வழங்கினார். அருகில் தாய் இணையக மேலாண்மை இயக்குநர் வே. கருப்பன், இ.ஆ.ப., பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ. ந. தியானேஸ்வரன், இ.ஆ.ப., ஆகியோர் உளளனர்

உள்ள பூச்சி கொல்லி மருந்துகளுக்குத் தேவையான மூலப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேசன் ரூ. 26 இலட்சம் முதலீடு செய்ய உள்ளது.

சூரிய காந்தி உற்பத்தியைப் பெருக்கிட குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது.

நேரடியாகவும், மறைமுகமாகவும் நிறைந்த வேலைவாய்ப்புக்களை உருவாக்கி வருகிறோம். கடந்த காலங்களில் இதனுடைய பணிகள் ஒரு குறிப்பிட்ட மக்களை மட்டும் சென்றடைந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களது கட்டளைப்படி, தற்போது ஏழை, நடுத்தர விவசாயிகளிடமும் எங்கள் திட்டங்கள் சென்றடைந்து பயன் கொடுத்து வருகின்றன.

தர்மபுரி எண்ணெய்த்தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக வீடுகட்டும் திட்டம் தீவிர பரிசிலனையில் உள்ளது.

தொழிலாளர்களுக்கான நூல் நிலையம், மனமகிழ் மன்றம் விளையாட்டுத் திடல் ஆகியவை கடந்த மாதம் துவக்கி வைக்கப் பட்டுள்ளன. அலுவலர்கள், தொழிலாளர்கள் நலனையும் கவனித்து, அவர்களது திறமையான பணிகள் மூலம் விவசாயிகளின் தேவையையும் நிறைவு செய்திடும் இந்தத் தமிழ்நாடு அக்ரோ நிறுவனம் அடுத்த ஆண்டு 19 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் இலாபம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



# திசை மாறிய மீனவர்கள்



சென்னை, செங்கற்பட்டு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 50-க்கு மேற்பட்டவர்கள் 16-7-82 அன்று அதிகாலையில் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றவர்கள் 17-7-82 அன்று வரை கரை திரும்பவில்லை என்று 18-7-82 அன்று சென்னை காவல்துறை கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து (Control Room) மீன்துறைக்குத் தகவல்தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செய்தி தெரிவிக்கப் பட்டவுடன், சென்னையிலுள்ள கடல் வணிகத்துறைக்கும் (Mercantile Marine Department) திருவொற்றியூரிலுள்ள உதவிப் பொறியாளர் (வொயர்லஸ்) மற்றும் மாநிலத் துறைமுக அலுவலருக்கும் காணாமல் போன மீனவர்களையும் கட்டுமரங்களையும் தேடும் பொருட்டும் மீட்புப் பணிக்கும் உடனடியாக ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்ளப் பட்டது. இதைத்தவிர, மீன்துறை அலுவலர்கள் சென்னை மாவட்ட மீனவர்கள் கூட்டுறவு சம்மேளனத்தின் படகுகளையும் மீன்துறைக்கு உரிய படகுகளையும் கடலுக்கு அனுப்பி காணாமல்போன மீனவர்களையும் கட்டுமரங்களையும் தேடிக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும், கடல் பாதுகாப்புப் படையினரிடம் உள்ள அதிவேகப் படகில் மீன்துறை ஆய்வாளர் ஒருவரையும், திருவொற்றியூர் மீனவர்கள் இருவரையும் காணாமல் போன மீனவர்களைத் தேடும் பொருட்டு அனுப்பப் பட்டது.

கீழ்க்கண்ட மீனவர் குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள் சென்னைக்கு வடக்கேயுள்ள ஆழ் கடலுக்குச் சென்று 'கோலா' (Flying Fish) மீன் பிடிக்க 16-7-82 அதிகாலையில் சென்றவர்கள் ஆவார்கள்.

திருவொற்றியூர் குப்பத்திலிருந்து 30 மீனவர்கள், பலகைத் தொட்டி குப்பத்திலிருந்து 20 மீனவர்கள், காசி விசாலாட்சிக் குப்பத்திலிருந்து 4 மீனவர்கள், காசி விசுவநாதர் கோயில் குப்பத்திலிருந்து 8 மீனவர்கள் நடுவூர் குப்பத்திலிருந்து 55 மீனவர்கள், தொண்டையார் குப்பத்திலிருந்து 6 மீனவர்கள், சிங்கார வேலர் படையாச்சி சாலையிலிருந்து 3 மீனவர்கள், 33 கட்டு மரங்களில் மீன் பிடிக்கச் சென்றனர்.

17-7-82 அன்று வர வேண்டிய மேற்கண்ட மீனவர்களில் 67 மீனவர்கள் மட்டும் கரை திரும்பாததால் இந்த மீனவர்கள் ஆந்திரா கடற்கரைப்பகுதிக்கு வழி தவறிச் சென்று விட்டார்களோ என்று கருதி ஆந்திரா கடற்கரைப் பகுதியில் தேடும் பணிக்கு ஈடுபடுத்தப்பட்டது. காணாமல்போன மீனவர்களைத் தேடிக் கண்டுபிடித்து மீட்டு வருவதற்காக மீன்துறை நடவடிக்கை எடுத்ததன் பேரில் 18-7-82 மற்றும் 19-7-82 அன்று செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த விரங்கம் கடற்கரைப் பகுதியில் 35 பாகம் முதல் 100 பாகம் வரையில், (1 பாகம் என்பது 10 கிலோ மீட்டர்) ஏறத்தாழ தூரம். காணாமல் போன மீனவர்கள் சிலர் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டார்கள்.

16-7-82 அன்று அதிகாலையில் கோலா மீன்பிடிக்கச் சென்று சென்னை மாவட்ட மீனவர்கள் கூட்டுறவு சம்மேளனத்தின் படகின் உதவியால் மீட்கப்பட்டார்கள். 19-7-82 அன்று சென்னை (கிழக்கு மண்டலம்) கடல் பாதுகாப்புப்படையினரால் 14 மீனவர்கள் மீட்கப்பட்டார்கள். மற்றும் அன்றைய தினமே 19 மீனவர்கள் தானாகவே கரை திரும்பினார்கள். கடல் பாதுகாப்புப் படையினர் மீட்கப் பட்ட மீனவர்களுக்கு உணவும் நீரும் வழங்கினார்கள். 20-7-82 அன்று இரவு 7 மீனவர்கள் கரை திரும்பினார்கள். 21-7-82 அன்று எஞ்சிய 3 மீனவர்களும் கரை திரும்பி விட்டார்கள். ஆக, காணாமல்போன 67 மீனவர்களும் தேடிக் கண்டுபிடித்து நல்ல முறையில் கரை சேர்க்கப் பட்டார்கள்.

காணாமல்போன மீனவர்கள் கரை திரும்பாமல் கடலில் தவிக்கின்றார்களோ என்று இவர்களைத் தேடும் பொருட்டு தமிழக அரசுக்குச் சொந்தமான ''செட்டாக்'' ஹெலிகாப்டர் பயன்படுத்தப்பட்டது. கிருஷ்ணபட்டணம் வரை ஹெலிகாப்டர் தேடியபின் மீனவர்கள் யாரும் கடலில் தவிப்பதாகத் தெரியவில்லை என்று கருதி திரும்பியது.

இதைத் தவிர மீன்துறை அலுவலர்கள் காணாமல்போன மீனவர்கள் குப்பத்திற்கு நேரடியாகச் சென்று விசாரணை செய்து காணாமல்போனதாகக் கூறப் பட்ட அத்தனை மீனவர்களும் நல்லபடி கரை திரும்பி விட்டார்களா என்று கணக்கெடுத்து பின்னர் காணாமல்போன மீனவர்கள் எவருக்கும் உயிரிழப்பு ஏதுமில்லைஎன்று தெரிவித்தனர்.



## மறவா நாட்கள்

“கா ந்தியவர்கள் இந்திய அரசியலில் நியா
மமும் துணிச்சலும் புகுத்திய காலம் இரு
பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன். அப்போது
தென்னாட்டில் எதிர்ப்பை விட்டு விட்டுப்
பொறுப்பை எடுத்துக் கொண்ட நான்கைந்து
தலைவர்களில் ஒருவர் ஸ்ரீமான் திரு.வி.க.
அவர்கள். பகைமையும் ஆகுலமும் போய்
அமைதியும் நோன்பும் சாதனங்களான அதி
சயத்தைக் கண்ட நாட்கள்-ஆங்கிலப் பிரசங்
கங்கள் போய்த் தமிழன்றி வேறு பேச்சுத்
தெரியாத பாமரர்களிடையே வேலை துவக்
கிய புரட்சி நாட்கள் - தொழிலாளர்களைத்
திரட்டிச் சங்கம் நிறுவும் அபாய நெறி, முதல்
முதலில் தோன்றிய நாட்கள் - அப்போது சுக
மான பள்ளித் தொழிலை விட்டு அரசியல்
அலைகடலில் புகுந்தவர் ஸ்ரீமான் திரு.வி.க.
அக்காலத்தில் வேலை செய்த அரசியல்
தொண்டர்களுக்குத்தான் தெரியும். திரு.வி.க
உள்பட எங்கள் சிலருக்குள் வளர்ந்த அன்பும்
கட்டுப்பாடும் கூட்டுறவும், பிறகு எவ்வளவோ
சம்பவங்கள் நடைபெற்று விட்டன. ஆயினும்
அவருடன் கூடி நாங்கள் சிலர் அந்நாட்
களில் செய்த தொண்டில் கண்ட மகிழ்ச்சியை
என்றும் மறக்க முடியாது.

—மூதறிஞர் ராஜாஜி



ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர
முதலியார் அலங்கரித்த பத்திராசிரியர் ஸ்தா
னத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக
இருக்கிறது. அவரது சொல்வன்மையும்,
தீரமும், நேர்மையும், கலங்காமையும், பார
பக்ஷமின்மையும், அவசியம் நேர்ந்த போது
காட்டிய நிர்த்தாக்ஷிணியமும் பத்திராசிரியர்த்
தொழிலுக்கே பூஷணங்களாக விளங்கின.
அவருடைய அருங்குணங்களில் சிலவேனும்
என் வியாசங்களில் தோன்றுமாறு தமிழணங்கு
திருவருள் புரிவாளாக.

—வ. வே. சு. ஐயர்



## சக்தி வாய்ந்த பேச்சாளர்

திரு. வி. க. வின் பேச்சு மிகவும் சக்தி
வாய்ந்தது. அந்தக் காலத்தில் அவர் பேசு
கிறார் என்றால்தான் கூட்டம் வரும். நாடெங்
கும் சுற்றிச் சுற்றிப் பிரச்சாரம் செய்தார்.
அந்தக் காலத்தில் தமிழில் பேசுவதற்கு ஆளே
கிடையாது. திரு. வி. க. அவர்கள்தான்.
தமிழில் மிக அருமையாகப் பேசுவார். அவரை
முன்மாதிரியாக வைத்து அவருடைய நடை
யில் பலர் பேச வேண்டும் என்கிற அளவுக்கு
அவர் பேச்சால் மக்களுக்கு உணர்ச்சி உண்டா
யிற்று.

தந்தை பெரியார்



## புதுமுறை எழுத்து நடை கண்டவர்

தமிழ் இலக்கிய உலகில் நம் திரு.வி.க.
சிறு சிறு வாக்கியங்களால் திருந்திய கருத்துக்
களை அழுத்தம் திருத்தமாக எழுதும் புது
முறை எழுத்து நடை கண்டவர். எழுத்து
நடையில் திரு.வி.க. நடையென்ற ஒரு சிறப்பு
நடையும் நிலவுகிறது. ''மனிதவாழ்க்கையும்
காந்தியடிகளும், ''பெண்ணின் பெருமை'',
'முருகன் அல்லது அழகு' முதலிய நூல்கள்
பயிலுந்தோறும் இன்பவொளி வீசி நிற்கின்
றன.''

திரு ஔவை சு. துரைசாமி



திரு.வி.க. குறித்து தமிழ் அறிஞர்கள்



## தன்னலமற்ற தமிழ்த் தொண்டர்

திரு.வி.க. யாரோடும் இகலின்றி அன்
போடு பழகும் குணமுடையவர். தம் கல்வியின்
பயனாகத் தமிழ்நாட்டு ஏழைகளாகிய தொழி
லாளர் நலங்களைப் பாதுகாப்பதில் இடை
யறாது உழைத்து வந்தார். அதனால் தமி
ழுலகம் எய்திய பயன் மிகவாகும். இந்த
நூற்றாண்டில் பலவகையாலும் தமிழ்நாட்
டிற்கு அருந்தொண்டு ஆற்றியவர்களுள் இவர்
தலைசிறந்தவர் என்னலாம்.

—பண்டிதமணி கதிரேசனார்



## தொழிற் சங்கத் தந்தையும் தாயும் அவரே

திரு.வி.க. அவர்கள் சிறந்த தேசத்
தலைவராகவும் தெய்வ பக்தராகவும் தமிழ்ப்
பக்தராகவும் சிறந்து விளங்கியவர்.

தமிழ்நாட்டில் தொழிற்சங்க இயக்கத்
தின் தந்தையாகவும், தாயாகவும் விளங்கி
யவர். காந்தி அடிகளின் அகிம்சை, எளிமை,
சத்தியம் ஆகியவைகளை வாழ்க்கை நெறி
யாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர்..

—பெருந்தலைவர் காமராஜ்

## பொது நோக்குடைய சமய அறிஞர்.

தமிழ்ப்பெரியார் திரு.வி.க. ஏறத்தாழ
நாற்பத்தைந்து ஆண்டுகள் தமிழன் வளர்ச்சிக்
காகப் பாடுபட்ட பெரியார் ஆவர். இவர்
முதல்தர எழுத்தாளர்; இனிய - எளிய செந்
தமிழ் நடை எழுதுவதில் இணையற்றவர்; அங்
ஙனமே பேசுவதிலும் பெயர் பெற்றவர்;
தொழிலாளர் தலைவர்; எச்சமயத்தாரும்
பாராட்டத்தக்க பொதுநோக்குடைய சமய
அறிஞர்.

—டாக்டர் மா. இராசமாணிக்கம்







## தமக்கென வாழாதவர்

தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர் குலத்
துக்கும் தந்தையாக இருந்தார்; தொழிலா
ளர் குலத்துக்குத் தாயாகி விளங்குகிறார். எவ்
வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய
திறத்தினால் அந்தணர் திலகமாகத் திகழ்ந்
தார்; 'என் கடன் பணி செய்துகிடப்பதே'
என்ற திருவாக்கை வாழ்க்கையில் கடைப்
பிடித்து நடந்தார். தமக்கென வாழாப் பிறர்க்
குரியாளராக வாழ்ந்தார்: அன்பே சிவம்
என்ற உண்மையில் வாழ்க்கை யெல்லாம்
திளைத்திருந்தார்.

—கல்கி

# தமிழ்த் தென்றல் திரு.வி.க பல்வகைத் தோற்றங்கள்



1912



1914



1936





1918



1924







# இரைப்பை-குடல்-மலக்குடல் அறுவை மருத்துவம்

சென்னையில், பல்கலைக் கழகம்தோன்றுவதற்கு முன்னாலேயே தோன்றிய மூத்த பெருமை உடையது அரசு பொது மருத்துவமனை. இராணுவச் சிப்பாய்களின் சிகிச்சைக்கென்றே மிகச் சாதாரண அளவில் துவக்கப் பெற்றதுதான், இன்று ஏறத்தாழ முந்நூறாண்டுக்காலமுதிர்ச்சிபெற்றும் வளர்ச்சிபெற்றும் திகழ்கிறது.

நம் உடம்பில் எத்தனை உறுப்புகள் உண்டோ, நமக்கு எத்தனை வகையான நோய்க்கூறுகள் வருவதுண்டோ, அவ்வளவுக்குமான தனித்தனிச் சிகிச்சைப் பிரிவுகள் சென்னைஅரசுப் பொதுமருத்துவமனையில் உண்டு.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை மெய்ப்பிப்பதில் அத்தனைப் பிரிவுகளுமே போட்டிபோட்டுக்கொண்டு செயல்பட்டு வருகின்றன. நோய் நாடி நோய் முதல்-நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயும் திறமைமிக்க மருத்துவ நிபுணர்கள் ஒவ்வொரு பிரிவுக்கும் தலைமை வகிக்கிறார்கள்; அவர்களின் கீழே அங்கம் வகிக்கிறார்கள்.

ஒவ்வொரு மருத்துவப் பிரிவிலும் - நம் நாட்டிலே மட்டுமின்றி, அமெரிக்கா ரஷ்யா போன்ற வியத்தகு விஞ்ஞான நேர்த்திபெற்ற நாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட, பெரும் பொருள்விலைமதிப்புடைய நூதன மருத்துவக் கருவிகள் நோயறிவதற்காகவும், சிகிச்சையளிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில், சென்னை-அரசுப்பொது மருத்துவமனையிலே சிறப்புற்று விளங்கிடும் ஒவ்வொரு பிரிவும் பற்றித் தொடரவிருக்கும் மருத்துவக் கட்டுரை அணிவகுப்பின் முதலாவது கட்டுரை இது.

'இரைப்பை-குடல்-மலக்குடல் அறுவைச் சிகிச்சைப் பகுதி (Surgical Gastro entarology and proctology Department) இங்கே படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

டாக்டர் திரு. ந.ரங்கபாஷ்யம் தலைமையில் திறம்பட இந்தப் பிரிவு இயங்கி வருகிறது.

உதவி மருத்துவர்களாகத் திரு. து. ஞானப்பிரகாசம், திரு. நடனசபாபதி, திரு. சண்முகம், திருமதி ஸ்ரீகுமாரி, திரு. திருவதனன் ஆகியோர் அயராது இப்பிரிவில் இயங்கி வருகிறார்கள்.

இவர்கள் தவிர—

ஏழு பட்ட மேற்படிப்பு மாணவர்களும், 8 பயிற்சி மருத்துவர்களும் துவளாது துணைபுரிகிறார்கள் அவர்களுக்கு.

இரைப்பையில், குடல் பகுதியில், மலக்குடல் பகுதியில் எத்தகைய இடர்ப்பாடுகள் வந்தாலும் சரி, அவை யாவும் இந்த மருத்துவப் பிரிவிலே நிவர்த்திக்கப்படுகின்றன. ஆழ்ந்த பரிசோதனை, அவசியமானால் அறுவைச் சிகிச்சை என்ற வகையில் இந்தப் பிரிவின் இயக்கம் அமைந்துள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள உடல் பகுதிகளில் யாருக்கு என்ன குறையானாலும் சரி; நாளொன்று போவதற்குள் நான்பட்ட பாடனைத்தும் தாளம் படுமோ தறிபடுமோ என்று தவித்துப்புலம்ப வேண்டிய அவசியமே இல்லை. நேரே இந்த மருத்துவப் பிரிவுக்கு வந்து விடலாம்.

இரைப்பை - குடல் - மலக்குடல் அறுவைச் சிகிச்சைப் பகுதிக்குத் தொடர்புடைய

—பி. எல். இராசேந்திரன்

'Endoscope Room' எனப்படும் நோயறியும் நூதனக் கருவிகள் உள்ள அறைக்குச் செல்கிறோம்.

டாக்டர் து. ஞானப்பிரகாசம் அங்குள்ள அளவற்ற விலைமதிப்புடைய அயல்நாட்டுக் கருவிகள் இயக்கப்படும் விதம்பற்றி நமக்கு விளக்குகிறார். செவிலியர் திருமதி அருந்ததி அவருக்குத் துணைபுரிகிறார். 'இரைப்பை நோக்கி' எனப்படும் (Upper G I Endoscope) ஒரு நூதன மருத்துவ நோயறி கருவி பற்றி நமக்கு விளக்கப்படுகிறது. ஒரு மீட்டர் 6 சென்ட்டி மீட்டர் அளவுடையதும் எண்ணற்ற 'Glass Fiber' ஆல் ஆனதுமான நீளக்குழல் ஒன்று காட்டப்படுகிறது. அதன் நுனியில் மின்விளக்கு!

''இரைப்பையில் ஏதாவது கோளாறு என்றால், வாய்வழியாக இதை நோயாளிக்குள்ளே செலுத்தி அங்குள்ள நோய்க்கூறு பற்றி அறிய முடியும். ஈரல் இறுக்கி நோய், குடலில் இரத்தக் கசிவு ஏற்படல், குடலுக்குள் கட்டி ஏற்பட்டு அதனால் ஏற்படும் துன்பங்கள் ஆகியவற்றை அறிய இந்தக் கருவி பயன்படுத்தப்படுகிறது.'' என்று தனது விளக்கத்தை மருத்துவ மாணவர்க்கு வகுப்பு நடத்துவது போலத் தொடர்கிறார் டாக்டர்.

டாக்டர் ரங்கபாஷ்யம் அது தொடர்பான வேறு சில விவரங்களைச் சொல்லுகிறார்.

''சரியான புரதச்சத்து உணவில் இல்லாமல் தொடர்ந்து சாப்பிடும் காரணமாகவும் வேறு சிலவற்றாலும் ஈரல் கெட்டுவிடும்; இது தொடர்பானதுதான் ஈரல் இறுக்கிநோய். குடலில் இரத்தம் தேங்கி உறைந்து சிலருக்குக் குடலில் முடிச்சு உண்டாகிவிடும். இரத்த வாந்தி எடுப்பார்கள். இப்படிப்பட்ட இரைப்பை-குடல் தொடர்பான நோய்களை இதன்மூலம் அறிய முடியும். குடலில் ஏற்படும் கட்டியை இந்த அப்பர் எண்டாஸ் கோப் நுனியில் ஊசி பொறுத்தி, அதன் மூலமே மருந்தைச் செலுத்திக் கரைத்துவிட முடியும். அல்லது சிறிய வாயுடைய வேறொன்றைப் பொருத்தி அந்தக் கட்டி புற்றுநோய் தொடர்பானதா என்றறிய, பரிசோதனைக்காகக் கொஞ்சம் அந்தக் கட்டியிலிருந்து திசுவைப் பிய்த்து வெளியே எடுத்துக்கொள்ளவும் செய்யலாம்.''



'அப்பர் என்டாஸ்கோப்' மூலம் நோயாளி பரிசோதிக்கப்படுகிறார்.

டாக்டர் ந.ரங்கபாஷ்யத்தின் இந்த விளக்கத்தை, அந்தக் குழலின் நுனியில் ஊசியைப் பொருத்தியும், கவ்வும் தன்மையுள்ள சிறுவாய் ஊசி பொருத்தியும் நமக்கு காட்டுகிறார் டாக்டர் து. ஞானப்பிரகாசம்.

இவர் இந்தக் கருவிகளை இயக்குவது பற்றி சண்டிகாரிலேயே போய்ப்பயிற்சிபெற்று வந்திருக்கிறார்.

சென்னையைச் சேர்ந்த நோயாளியான சிவா என்பவரின் வாய் வழியே இந்தக் குழல் செலுத்திக் காட்டப்படுகிறது. அந்தக் குழலின் அடிப்பாகத்தில் இணைக்கப்பட்டுள்ள கண்ணாடி வழியே, அதுசெல்லும் உள்வழிகளை நம்மால் காண முடிகிறது.

உடலுக்குள், பாதிக்கப்பட்ட பகுதியைப் படம் பிடித்துக் கொள்ள பிரத்யேகக் காமிரா பொருத்திக் கொள்ளும் வசதியும் இதில் உள்ளது. விரிவான ஆராய்ச்சிக்கு இப்படிப்படம் பிடிப்பது பெரிதும் உதவும்.

இதே போல 'மலக்குடல் நோக்கி(Lower GI endoscope) ஒன்றும் இருக்கிறது. இதுவும் அதைப் போலவே ஒரு மீட்டர் 50 சென்டி மீட்டர் நீளமுள்ள மெல்லிய குழாய்தான்.

மலப்புற வழிமூலம் இதை உடலுக்குள் செலுத்தி பெருங்குடல் முழுவதையும் பார்க்க முடியும்.

குடலுக்குள் வீணான சதை வளர்ச்சி அல்லது கட்டி இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். உள்ளுக்குள்ளேயே அந்தக் கட்டியை, அளவான மின்சாரம் செலுத்தி வெட்டியெடுத்துவிடலாம். கட்டி மட்டுமல்லாமல் குடலில் நாம் சாப்பிடும் மாமிச உணவின் எலும்புத் துண்டு, மீன்முள் அல்லது தவறி விழுங்கப்பட்டுவிட்ட நாணயம் போன்றவற்றையும் உயிருக்கு ஆபத்தில்லாமல் வெட்டி யெடுத்துவிடலாம்.

இதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் 'Electro Surgical Unit' எனப் படுகின்றன. மேலே கூறிய கருவிகளின் விலை பல இலட்சம் ரூபாய்கள் என்றால் இதன் விலை 45 ஆயிரம் ரூபாய்.

குடலுக்குள் எங்காவது புண் ஏற்பட்டு அதனால் இரத்தக் கசிவு இருக்குமானால் புண்பட்ட பகுதியைத் தீய்த்து இக்கருவிமூலம் இரத்தக் கசிவை நிறுத்தி விட முடியும். பித்தநீர்க் கசிவையும் இதன் மூலம் தவிர்க்கமுடியும்.

இந்த ஒப்பற்ற கருவிகள் எல்லாமே, ஜப்பான் நாட்டு 'ஒலிம்பஸ்' தயாரிப்புகள் ஆகும்.

''சென்னை-அரசு பொதுமருத்துவமனையில் உள்ள இந்த அரிய உயிர் காக்கும் கருவிகள், தென்னிந்தியாவிலேயே இங்கே தவிர

வேறு எங்கும் இல்லை; இவை யாவும் இந்த இரண்டு மூன்று ஆண்டில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் உதவியோடு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் தருவிக்கப்பட்டவையாகும் என்கிறார் டாக்டர் ந. ரங்கபாஷ்யம்.

'இரைப்பை, குடல், மலக்குடல் இயல் அறுவைச் சிகிச்சைப் பகுதி' என்றொரு புத்தகத்தைத் தமிழிலேயே எழுதி வெளியிட்டிருக்கிறார்கள் டாக்டர் திரு. ந. ரங்கபாஷ்யமும், டாக்டர் திரு. து. ஞானப்பிரகாசமும்.

இவர்களது மருத்துவப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் வார்டுக்குச் செல்கிறோம். அங்கே, ஒரு கால் முழுவதும் அடியோடு நீக்கப்பட்டுப் படுக்கையில் இருக்கும் ஒரு சிறுவனின் மருத்துவ அறிக்கை நம் கண்ணில் படுகிறது. பாலசுப்பிரமணியம், வயது 16, ஆத்தூர், சேலம் மாவட்டம்.

''எதனால் டாக்டர் இந்தச் சிறுவனுக்கு இப்படி?''

''காலில் புற்று நோய். இடுப்பில் அது தொடர்புடைய எலும்பு வரை நீக்கியாக வேண்டும். இல்லாவிட்டால் உயிருக்கு ஆபத்தாகி விடும்.....''

''சிறுவர்களுக்குக் கூடவா புற்றுநோய் வரும்?''

''பிறக்கிற குழந்தைகளுக்கே இருக்கிறது சார்...'' என்று கூறி விட்டு டாக்டர் ரங்கபாஷ்யம் தொடர்கிறார்.

''இந்தக் கேஸ்கூட புதுவையில் கொண்டு போய்ப் பார்க்கப்பட்டு அங்கு முடியாமல் இங்கு வந்ததாகும். கடந்த இரண்டாண்டில் இப்படிப்பட்ட சிகிச்சைகள் ஒன்பதை நாங்கள் வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறோம். இதுவரை இந்தச் சிகிச்சை முறை லண்டனில்தான் செய்யப்பட்டு வந்தது.''



**சிறுநீர்க் குழாயும், மலக்குழாயும் இணைந்ததற்கு அறுவைச் சிகிச்சை**

இரைப்பை, குடல், மலக்குடல் அறுவைச் சிகிச்சைப் பகுதியில் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றன. இதன்படி, வாரத்தில் சுமார் 50 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

அறுவைச்சிகிச்சை அரங்கினுள் அதற்கான தனி உடை, குல்லாய், காலணி (Over Shoe) சகிதம் நம்மை அழைத்துச் செல்கிறார்கள்.

அங்கே ஒரு பெண்மணி மயக்க நிலையில் மல்லாந்திருக்கிறார். ஆண்-பெண் டாக்டர்கள் சிலர் அவரது பிறப்பு உறுப்பில் ஏதோ அறுவைச் சிகிச்சையில் ஆழ்ந்திருக்கின்றனர். டாக்டரிடம் விவரம் கேட்கிறோம்.

**புற்றுநோய் காரணமாக இடுப்பெலும்போடு கால் நீக்கப்பட்ட சிறுவன்**



**மூலநோய்க்கு நடக்கும் அறுவைச் சிகிச்சை**



கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த பாஞ்சாயி என்ற அந்த 30 வயதுப் பெண்மணிக்கு மலக்குடலில் ஏதோ சிரமம் ஏற்பட்டு, மலவழியும் சிறுநீர்வழியும் இணைந்து விட்டிருக்கிறது. இதனால் மாதவிலக்குக் காலங்களில் பெரும் அவதிக்கு ஆளாகியிருக்கிறார். இதைச் சரிப்படுத்துவதே சிகிச்சை (Recto Veginal Fistula) முதலில் சில காலம் அந்தப் பெண்ணின் மலக்குடல் அடிவயிற்றின் இடதுபுறத்திற்குத் திருப்பி விடப்பட்டு, வயிற்றில் துவாரம் செய்து அதன் மூலம் மலம் வெளியேற வகை செய்துள்ளனர். இதில் ஒரு துன்பம் என்னவென்றால், தன்னையறியாமலேயே மலம் வெளிப்படும். இதனால் இடதுவிலாவில் சிறிய பை ஒன்று இணைத்துள்ளனர். ஆனாலும் துர்நாற்றத்தை அவரோ மற்றவர்களோ சகித்துக்கொள்ள வேண்டுமே!

மலக்குடலின் கெட்டுப்போய்ச் சுருங்கியதைப் பகுதி நீக்கப்பட்டு, மற்ற பாதிப்புகள் சிகிச்சை மூலம் செம்மைப்படுத்தப்பட்ட பின் திரும்பவும் அதை மலப்புறவாசலில் இணைப்பாக வைத்துப் பொருத்துகிறார்கள். 'Stapler Gun' என்ற கருவி மூலம் இவ்வாறான பொருத்தும் பணிகள் நிகழ்த்தப்படுகின்றன. 'Alloy' என்கிற கலப்பு உலோகப் பொருள் இதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

''இது போன்ற சங்கடம் உடலில் எதனால் ஏற்படும்?''

'' புற்றுநோய் காரணமா, தொற்றுநோய் காரணமா (infection), டி.பி. காரணமா, பால்வினைநோய் (Sexual Transmission disease) காரணமா என்பது இனிமேல்தான் கண்டறியப்படும். அப்படிப்பட்ட தொந்தரவுகளால் மலக்குடல்சுருங்கிஇப்படிப்பட்ட துன்பங்கள் நேரும்.''

அடுத்து இன்னொரு பெண்மணிக்கு நடத்தப்படும் மூலநோய் அறுவைச் சிகிச்சையைப் பார்க்கிறோம். நாம் கேட்குமுன்பே விளக்கமளிக்கிறார் டாக்டர்.

மூலம் (Piles) என்பதே இரத்தக் குழாயின் முடிச்சுதான். இதில் முதலாவது, இரண்டாவது மூன்றாவது நான்காவது கட்டம் என நான்கு கட்டங்கள் உண்டு. முதலிரண்டு கட்டங்களில் மூலம் என்றால் 'ஸ்டேப்லர் கன்' (Stapler Gun) மூலம் 'ரப்பர்பேண்ட்' போட்டே அதை அறுந்துவிழச் செய்துவிடலாம். சிரமமில்லாமல் ஊசிபோட்டும் சிகிச்சை செய்து விடமுடியும்.

மூன்றாவது, நான்காவது கட்டத்தில், மூலம் மலப்புற வழிக்கு வெளியே நீட்டிக் கொண்டு வந்து விடும். இரத்தம் வடியும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் அறுவைச் சிகிச்சை அவசியமாகிறது.

இவ்வளவு விவரங்களையும் தெரிந்து கொண்டு, தலைமை மருத்துவர் டாக்டர் ந. ரங்கபாஷ்யத்தோடு அவரது தனி அறைக்குச் செல்கிறோம். தான் கவனிக்கும் - அல்லது கவனித்த நோய்கள் பற்றிய 'ஸ்லைடு' (Slides) களைப் போட்டுக் காட்டி அந்தந்தப் படங்கள் பற்றிய விளக்கங்களையும் தெரிவிக்கிறார் அவர்.

''இப்படிப்பட்ட நோய்களுக்குச் சிகிச்சை செய்துகொள்வதென்றால் ஏராளமாகச் செலவாகும் என்கிறார்களே, மெய்தானா?" என்கிறோம்

''அரசாங்க மருத்துவமனையில் எப்படி சார் நீங்கள் சொல்லுவது போல் செலவாகும் ?'' என்று சிரித்தவாறே நம்மைக் கேட்கிறார் '' அவர். '' எந்த நோயாளியானாலும் ஆரம்ப சிகிச்சை சரியாக இருக்க வேண்டும். அது சரியில்லாத பட்சத்தில் உபாதை முற்றிய பின்தான் பெரும்பாலான 'கேஸ்'கள் எங்களிடம் வருகின்றன. தகுந்த உபகரணங்கள் இருப்பதாலும், திறமைமிக்க உதவியாளர்கள் இருப்பதனாலும் எங்கள் சிகிச்சை வெற்றிகரமாக முடிகிறது. ஆரம்பச்சிகிச்சை சரியாக இருக்கவேண்டும் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், சில நாட்களுக்கு முன்னால் பானுமதி என்பவர் தஞ்சை மாவட்டத்திலிருந்து இங்கே எங்களிடம் சிகிச்சை பெற வந்தார். அடிக்கடி இரத்தப்போக்கு இருப்பதாகக் கூறினார்கள். இதேபோல் அவர் வேறு எங்கோ மருத்துவரி

**டாக்டர் ரங்கபாஷ்யம் தன் உதவியாளர்களுடன்**



## உங்களுக்குத் தெரியுமா ?

அந்தமான், நிக்கோபர்-மற்றும் லட்சத் தீவுகள் உட்பட இந்திய கடற்கரையின் நீளம் மொத்தம் 7,000 கிலோ மீட்டர்.

இத்தகைய நெடிய கடற்கரையில் கப்பல் களை வழிநடத்த 1947-ல் 17 கலங்கரை விளக் குகள் மட்டுமே இருந்தன.

தற்போது நமது நாட்டில் 144 கலங்கரை விளக்குகள் ஒரு கலங்கரை கப்பல், 13 பனி மட்ட சமிக்ஞை கருவிகள், 12 ரேடியோ பீகன் கருவிகள் 12 டெக்கானோலிகேட்டர் செயின் நிலையங்கள், 6 ரேகன்கள், 20 நங்கூர் விளக் குகள், 6 படகுகள் மற்றும் 2 கலங்கரை விளக்கு டெண்டர்கள் கப்பல் போக்குவரத்துக்கு உதவுகின்றன.

இந்திய கடற்கரை கல்கத்தா, ஜாம்நகர், பம்பாய், கொச்சி, சென்னை மற்றும் போர்ட் பிளேர் ஆகியவற்றைத் தலைமையகமாகக் கொண்ட ஆறு கலங்கரை விளக்க மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

கலங்கரை விளக்கு மற்றும் கலங்கரை கப்பல்கள் ஒரு தன்னார்பு அமைப்பாகும்.

இந்தியத் துறைமுகங்களிலிருந்து செல்லும் கப்பல்களுக்கு டன்னுக்கு ரூ 1.50 வீதமும், இந்திய கடற்பகுதி வழியே செல்லும் கப்பல் களுக்கு டன்னுக்கு ஆறு காசு வீதமும், வசூலிப் பதன் மூலம் இந்தத் துறை வருவாய் ஈட்டு கின்றது.

இந்தத் துறையின் ஆண்டு வருமானம் ரூ. 600 இலட்சம்.

ஆறாவது திட்டத்தில் புதிய கலங்கரை விளக்குகளுக்காக ரூ. 12 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

நடப்பு ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ. 6. 57 கோடி.





புற்றுநோய் கண்ட காலும், அது நீக்கப்பட்ட பின்பும்

டம் கூற, அந்தப் பெண் சொன்னதைக் கேட்டு அவர்கள் எழுதிய மருத்துவக் குறிப்பு என் னிடம் காட்டப்பட்டது. அதைப் பார்த்தால் புற்று நோய்த் துவக்கம்போல் எழுதப்பட் டிருந்தது. கடைசியில் இங்கே அந்தப் பெண் ணைப் பலவகையிலும் பரிசோதித்துப் பார்த் தால், எழுதப்பட்டிருந்த மருத்துவக் குறிப்புக் கும் அந்தப் பெண்ணுக்கும் சம்பந்தமே இல்லை. அந்தப் பெண்ணில் எல்லாமே சரி யாக இருந்தது. மாதவிலக்கு சிறிது தள்ளிப் போய், இரண்டொரு நாள் அதிகம் இருந் திருக்கிறது. அவ்வளவுதான். மனப்பீதிவேறு. இப்படிப்பட்ட முறையற்ற ஆரம்பப் பரிசோத னையால் எங்களுக்கும் கஷ்டம் அவர்களுக்கும் கஷ்டம் அல்லவா? இப்படி அவர்கள் செய்கிற வீண் செலவுகளுக்கும் எங்களுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லையே!''

சிறு நீரகத்தில் புற்றுநோய் கண்டால் அது தொடர்பான சதைப் பகுதிகளை அடி யோடு நீக்கிவிடும் அறுவைச் சிகிச்சை ஒன்று உண்டு. அதன் பிறகு, நம் நிதானமில்லாமல் சிறு நீர் போகும் சங்கடம் இருந்தது. அத் தகைய அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, சிறு நீர் போவதை நம் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முடியும் என்று செய்து காட்டி டாக்டர் ந.ரங்கபாஷ்யம் தயாரித்த மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரையொன்று அனைத்துலக மருத்துவ மேதைகளால் ஏற்கப்பட்டு ('Journal of the Royal College of Surgeons of Edinburgh' ஏட்டிலும் வெளியிடப்பட்டுள்ளது.

# தமிழ்ப் பெருமான் பாரதியும் தமிழ்த் தென்றல் திரு.வி.கவும்





**சிறுவை நச்சினார்க்கினியன்**

"தமிழர் மறந்தாலும், தமிழ் மறவாத இப்புலவர் பெருமான் பாக்கள் இறவாது நின்று நிலவும். இவர் மூட்டிய தேச தேச நெருப்பு அவியாது, வளர்ந்து தமிழக முழுவதும் இருள கற்றி, ஒளிரச் செய்து நிற்கும் ஜோதியாய் விட்டது'' என்கிறார் டாக்டர் எஸ்.சோம சுந்தர பாரதியார். மகாகவி பாரதியாரைப் போற்றி திங்கள்போல திசை விளக்கிக் கொண் டிருக்கும் பாரதிக்கு நூற்றாண்டு விழா எங் களும் எடுத்து அஞ்சலி செலுத்தி மகிழ்கி றோம். மக்கள் கவிஞராய், அனைத்துலகத் தமிழ்க் கவிஞராய், நாட்டுக் கவிஞராய், வர லாற்றுக் கவிஞராய், பெண்ணுரிமைக் கவிஞ ராய், புதுமைக் கவிஞராய், சமுதாயச் சீர் திருத்தக் கவிஞராய், இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பையைக் களைந்தெறியும் புரட்சிக் கவிஞராய்த் திகழ்ந்தவர் பாரதியார். இவர் பிறந்தது 11.12.82-ல் இக்கவிஞரை 26.8.83 ல் பிறந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்கள் ''தமிழ்ப் பெருமான'' என விளித்து பெருமைப்படுகிறார்.

தமிழ்ப் பெருமானும் தமிழ்த் தென்றலும் சம காலத்தவர். வயதின் வேறுபாடு சுமார் ஒன்பது மாதந்தான். இத் தமிழ்த் தென்றலுக் கும் நூற்றாண்டு விழா நடக்க இருக்கிறது. இருவரும் தேச பக்தர்கள்; இருவரும் பத்தி ரிகை ஆசிரியர்கள்; இருவரும் கவிஞர்கள்; இரு இருவரும் இறைநாட்டம் உடையவர்கள், இரு வரும் பெண்ணுரிமைக்குப் போர் புரிந்தவர் கள்; இருவரும் சிறந்த சீர்த்திருத்த வாதிகள்; திரு.வி.க. தொழிற் சங்கத்தில் அதிகக் கவனம் செலுத்தினார். மொழி வல்லுணராயும் விளங் கினார்கள். இருவரும் சாதி, சமய, சாத்திரச் சந்தடி, கோத்திரக் குப்பைகளைக் களைந் தெறியப் பாடுபட்ட சமூகநலச் சிற்பிகள்.

பாரதியார் ''சுதேசமித்திரன்'' அலுவலகத் தில் பணி செய்தபோது இராயப்பேட்டைப் பகுதியில் சில நாள் குடியிருந்தார். எனவே பாரதியும் திரு.வி.க.வும் கலந்து உரையாட பலமுறை வாய்ப்பு ஏற்பட்டது. இரு தேச பக் தர்களும் நேய உறவாயினர். அச்சமயம் அர சியல் கருத்துக்களைத் தமிழில் வடித்து மக் கள் புரிந்து கொள்ளத்தக்கவகையில் தம் ''தேசபக்தனை'' நடத்தி வந்த காலம். தேச பக்தனில் அரசின் கண்ணோட்டம் நெருங்கிய முறையில் இருந்தது. அரசு அஞ்சிய காலம் திரு.வி.க. அவர்கள் பாரதியைப் பற்றி, அவர் தம் தேசப் பற்றினைப் பற்றி தம் வாழ்க்கைக் குறிப்பில் குறிப்பிடத் தவறவில்லை. முதல் குறிப்பில்,

''1907 ஆம் ஆண்டில் திலகர் பெருமான் தலைமையில் அமிதவாதப் பிரசாரம் நாடு முழுவதும் நடைபெற்றது. பிரசாரத்திற் கென்று, தென்னாட்டிலும் ஒரு கூட்டம் திரண் டது. அக் கூட்டத்தவருள் குறிக்கத் தக்கவர் வி.ஒ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, சுப்ரமணியபாரதியார், ஸ்ரீநிவாசாச்சாரியார், சுரேந்திரநாதத் ஆர்யா, சக்கரைச்செட்டியார், எஸ். துரைசாமி ஐயர், உறரி சர்வோத்தம ராவ் முதலியோர். காலவேகம் என்னைப் பத் திரிகை படிக்கச் செய்தது. அரவிந்த கோஷால் நடத்தப் பெற்ற, ''வந்தேமாதரம்'' என்ற வீரஞ்செறிந்த பத்திரிகையை படிக்கப் படிக்க ஊக்கம் பிறக்கும்; நாட்டு விடுதலை வேட்கை எழும். அந்நாளில் தமிழில், 'இந் தியா'' என்றொரு பத்திரிகை ஸ்ரீநிவாசாச் சாரியார், சுப்ரமணிய பாரதியார் முதலியோ ரால் நடத்தப் பெற்றது. தென்னாட்டைத் தட்டி எழுப்பிய பெருமை அப்பத்திரிகைக்கு உண்டு.''

ஒரு சமயம் பாரதியார் அவர்கள் புதுவை யைப் புகலிடமாகக் கொண்டபோது,

# திரு.வி.க

திரு.வி.க.தாம் நடத்திவந்த ''தேசபக்தன்'' இதழில், பாரதிக்காகப் பரிந்து பேசுவதைக் கவனிப்போம்.

''அந்நாளில் தேசபக்தர் சிலர் புதுவையைப் புகலிடமாகக் கொண்டனர். அவருள் இங்கே குறிக்கத்தக்கவர் இருவர். ஒருவர் வ.வே.சு. ஐயர்; மற்றொருவர் சுப்பிரமணிய பாரதியார். இருவரும் பிரிட்டிஷ் எல்லையில் உலவும் உரிமையுடையவராய் இருத்தல் வேண்டும்' என்ற கிளர்ச்சியைத் 'தேசபக்தன்' தொடங்கினான். கிளர்ச்சி வெற்றியடைந்தது. புதுவையினின்றும் வ.வே.சு.ஐயரும், பாரதியாரும் (1920 பிப்ரவரியில்) வெளிவந்தனர்.

மீண்டும் பாரதிக்கு ஒரு தடை ஏற்பட்டது. அத்தடையை நீக்க திரு.வி.க. தம் 'தேசபக்தனின்' வாயிலாக கிளர்ச்சி செய்தார்.

''சுப்பிரமணிய பாரதியாருக்குச் சில தடைகள் கடலூரில் கிடத்தப்பட்டன என்று ஓர் அரசியல் கிள்ளை ''தேசபக்தனுக்கு' அறிவித்தது. தேசபக்தன், பாசுபதம் எழுந்தது. தடைகள் உருவெளியாயின. கவிஞர் சென்னை சேர்ந்தனர். யான் பாரதியாரை டிராம்வே தொழிலாளர் சங்கத்தில் கண்டேன். பாரதியார் நாவினின்றும் சக்திப்பாட்டு வீறிட்டது.

இராயப்பேட்டையில் திரு.வி.க. அவர்கள் பாலசுப்ரமணிய பக்தஜன சபையை நண்பர்களுடன் அமைத்து அங்கே சைவ சமய அறப்பபாளறிய இலக்கியச் சுவையுடன் நடத்திவந்த காலம். ஒருநாள் பாரதியார் பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை பஜனையில் கலந்து மகிழ்வதைத் திரு.வி.க. தமக்கே உரிய பூரிப்பில் திளைத்துப் பாரதியாரைத் ''தமிழ்ப்பெருமான்'' என விளித்து மகிழ்கிறார்.

''ஏப்ரல் ஆறாம் நாள் மலர்ந்தது. அடிகளின் ஆத்ம சக்தி மனங் கமழ்ந்தது. முன் ஏற்பாட்டின்படி காலையில் இராயப்பேட்டையிலுள்ள பஜனை கோஷ்டிகளும் மற்றவர்களும் தேசபக்தன் நிலையம் போந்தார்கள். அவர்களுடன் சுப்பராய காமத்தும் யானும் ஊர்வலம் வந்தோம்; பிற்பகல் ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜனசபையின் ''குகானந்த நிலையத்தை' அடைந்தோம். சுப்பிரமணிய பாரதியார் பஜனை கோஷ்டியில் எங்கேயோ கலந்து வந்தார். அவரைக் கண்டதும் செவி அவரது பாட்டை விரும்பியது. பாரதியாரைப் பாடுமாறு கேட்டேன். தமிழ்பெருமான், ''முருகா முருகா...'' என்றும் பாடத் தொடங்கினார். பாட்டு-தமிழ்ப் பாட்டு தேனினும் இனிய முருகன் பாட்டு படத்திலுள்ள ஓவிய முருகனை நகரச் செய்தது. ஓவிய உருவம் வீறுடன் வெளிவருவது போன்ற தோற்றம் உண்டாயிற்று. அன்பர் மெய்கள் அரும்பின; விதிர் விதிர்த்தன; சிலர் மயங்கினர். சிலர் விழுந்தனர்; சிலர் கண்ணீர் உகுத்துத் தம்மை மறந்தனர்; எல்லோரும் ஆனந்தப் பரவசமாயினர், பாரதியார் சித்திரப் பதுமையானார். பாட்டுக்கும் ஓவியத்துக்கும் உள்ள ஒருமைப்பாட்டை யான் கண்ணாரக் கருத்தாரக் கண்டேன்.''

ஒருசமயம் திரு.வி.க. அவர்கள் புதுவையில் ''சிலப்பதிகாரம்'' பற்றி விரிவுரை நிகழ்த்துகிறார். அச் சொற்பொழிவுக்குப் பாரதியாரும் பாரதிதாசனும் சென்றுள்ளனர். திரு.வி.க.வின் சொற்பொழிவைக் கேட்ட பாரதியார் உள்ளம் பரவசம் அடைந்து பேரின்ப வெள்ளத்தில் திளைத்திருப்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் கவிதை மூலம் சுவைப்போம்.

''புதுவையிலே கலியாண சுந்தரனார்
ஆற்றிய சொற் பொழிவில், தூய
மதுவையள்ளி மலர் தேக்கி வண்டு கட்கு
விருந்தாக்கி மயக்கு தல்போல்
பொதுவினர்க்குச் சிலப்பதிகாரச் சுவையை
நடையழகைப் புகலும் போதில்
இதுவையா பேச்சென்பேன்; பாரதியார்
கைகொட்டி எழுவார், வீழ்வார்!''

இங்ஙனம் இரு தேசபக்தர்களுக்கிடையே நீண்டதோர் உறவு தென்றல் கமழ தமிழ்ப் பெருமானை கட்டிப் பிணைத்தது.

## படித்த பள்ளிகள்

ஆரியன் பிரைமரி பாடசாலை
இராயப்பேட்டை (1891)

வெஸ்லி கல்லூரி, இராயப்பேட்டை
(1894)

## பணியாற்றிய நிலையங்கள்

ஸ்பென்சர் கம்பெனி — கணக்கர்
(1907-8)

வெஸ்லியன் மிஷன் பள்ளி — ஆசிரியர்
ஆயிரம்விளக்கு 6 ஆண்டுகள்
(1910–1916)

வெஸ்லி கல்லூரி — தமிழ்ப் பேராசிரியர் 1½ ஆண்டு
இராயப்பேட்டை
(1916 ஜூன்—1917 டிசம்பர்)

## பயன்படுத்திய நூலகங்கள்

தந்தையாரின் தகரப் பெட்டியில் இருந்த நூல்கள்

வெஸ்லி பள்ளி நூல் நிலையம்

திருக்குறள் சிதம்பர முதலியார் நூல் நிலையம்

கன்னிமாரா நூல் நிலையம்

தியாசாபிகல் நூல் நிலையம்

அன்னிபெசண்ட் அம்மையார் தந்த நூல்கள் கொண்ட தம் நூல் நிலையம்

வெங்கடராமய்யர் (தேசபக்தனில் பணியாற்றியவர்) நூல் நிலையம்

இயற்கை நூல் நிலையம்

# மனைவியால் பெற்ற மாண்பு

**மு. முத்துக்காளத்தி**

உள்ளம் விரிவடைவதற்கும், உலகம் முழுவதையும் நேசிப்பதற்கும் மனிதனை ஆயத்தமாக்கும் அடிப்படையை அமைத்துக் கொடுப்பது திருமணமாகும். தனி வாழ்க்கையில் இது ஒரு திருப்பு மையமாக அமைகிறது.

பாறையையும் பண்படுத்தும் ஆற்றல் கல்யாணத்துக்கு உண்டு. இது திரு. வி. கலியாணசுந்தரனார் வாழ்க்கையிலும் உண்மையாயிற்று.

துடுக்கும் மிடுக்கும் நிறைந்த முரட்டுச் சிறுவனாக விளங்கி, ''சொல்லுக்குச் சொல்லும் கல்லுக்குக் கல்லும் மல்லுக்கு மல்லும்'' விடும் வாலிபனாக வளர்ந்த திரு.வி.க.வின் வாழ்க்கை, அன்பும் பண்பும் நெகிழ்வும் மிக்க வாழ்க்கையாக எப்படி மாறியது? இந்த அற்புதத்தைச் சாதித்தது எது? திரு.வி.க.வே கூறுகிறார் கேளுங்கள்: ''என்னை உண்ண எழுந்த விலங்கியல்பு எப்பொழுது குலைந்தது?.... யான் பெற்ற கல்வி கேள்விகள் மட்டும் எனது விலங்கியல்பை ஒடுக்கவில்லை. அவை ஒரோ வழித்துணை நின்றிருக்கும். இல்வாழ்க்கையும் நல்லோர் கூட்டுறவும் பலதிறத் தொண்டுகளும் எனது விலங்கியல்பை ஒடுக்குதற்குப் பெருந்துணையாய் நின்றன என்று எனது அநுபவம் அறிவிக்கின்றது. விலங்கியல்பை ஒடுக்குதற்கு இல்வாழ்க்கை ஒரு பெருங் கருவி என்று வலியுறுத்துகிறேன். அவ்வாழ்க்கையை நன்முறையில் அறிவுறுத்திய திருவள்ளுவர் வாழ்க''.

துறவறத்தைப் பெரிதாகப் போற்றிவரும் நாடு நம்முடையது. துறவு பூண்டொழுகியவர்கள் இல்லறத்தைப் பழித்தும் இழித்தும் பேசியது உண்டு. இதிலிருந்து மாறுபட்டு, வள்ளுவப் பெருந்தகை இல்லறத்திற்கும் துறவறத்திற்குரிய சிறப்புக் கொடுத்து இரண்டையும் போற்றினார். ஆனால் திரு.வி.க.வோ திருவள்ளுவரையும் விட ஒருபடி மேலே போய்த் துறவறத்தைவிட இல்லறமே சிறந்தது என்பதை எந்த இடத்தும் எடுத்தியம்பத் தயங்கவில்லை. பெண்மையைப் போற்றிப் பெண்ணின் பெருமையை நிலைநாட்டினார். தாய்க்குலத்தின் தியாக வாழ்வைத் தரணியெங்கும் பரப்பினார்.

1912-ஆம் ஆண்டில் திரு.வி.க.வின் இல்லற வாழ்க்கை தொடங்கியது. அவருக்கு வாய்த்த துணைவியார் கமலாம்பிகை அம்மையார், கணவருடன் கருத்தொருமித்த காதல் வாழ்க்கை வாழ்ந்து, இல்லறத்தை நல்லறமாக்கினார். அதில், திளைத்து எல்லையற்ற மகிழ்வெய்தினார், திரு.வி.க. ஆயின், அது நெடிது நாள் நீடிக்கவில்லை. திருமணமாகதும் ஆண் குழந்தை ஒன்று பிறந்து ஒரு வாரத்தில் இறந்தது. அடுத்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஓராண்டு இருந்து பெற்றோரை மகிழ்வித்தது. பிறகு பெற்றோரைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்டது. இப்படி இடிதாக்கியதுபோல அடுத்தடுத்து இரு குழந்தைகளைப் பறிகொடுத்த கமலாம்பிகை உள்ளம் நைந்தார். கலங்கினார். உருகினார். அதனால், அவரது உடல் நலம் குன்றியது. நாளுக்குநாள் உருக்குலைந்து வந்தார். நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். 1918-ஆம் ஆண்டில் அவரது ஆவி பிரிந்தது. இவ்வாறு ஆறே ஆண்டுகளில் திரு.வி.க.வின் இல்வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது.




மனைவி மறைந்தார். ஆயின் திரு.வி.க. மனைவியை மறந்துவிடவில்லை. மனைவியின் பொன்னுடல்தானே போயிற்று? அவரது புகழுடம்பைத் தன்னுள் அடைக்கலமாக்கிக் கொண்டார் அண்ணல் திரு.வி.க. கமலாம்பிகைக்குத் தந்த உள்ளத்தை இன்னொரு பெண்ணுக்குத்தர விருப்பமின்றி, மறுமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார். மாண்புறு மனைவியை மனத்துள் வைத்துப் போற்றினார். அதற்குக் காரணம் இதுதான்:

''என் ஆருயிர் அமுதம் கமலாம்பிகை என்னுடன் வாழ்ந்து, என் மனத்தைப் பல வழியாலும் பண்படுத்திப் பெண்ணின் பெருமை முதலிய செல்வங்களை எனக்கு வழங்கி மறைந்தனள். என் வாழ்க்கைத் துணைக்குயான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்? ஏழை என்ன நன்றி செலுத்தவல்லேன்? பெண்ணின் பெருமை விளங்க - இவ்வுலகில் நன்கு விளங்கப் பாடுபட உறுதி கொண்டேன்; அதற்கென்று என் வாழ்வை அர்ப்பணம் செய்துள்ளேன்'' என்று கல்மனமும் கசிந்துருகக் கனிவுடன் கூறுகிறார் திரு.வி.க.

பொறுமையென்னும் நகையணிந்து பெருமை கொள்வது பெண்மையல்லவா! அது பூரணமாகப் பொலிந்த கமலாம்பிகை, திரு.வி.க.வை எவ்விதம் மாற்றி விட்டார்!

''கமலாம்பிகைக்குச் சகிப்புத் தன்மை அதிகம். அதை யான் பன்முறை காணும் வாய்ப்புக்களை வாழ்க்கையில் பெற்றேன். சகிப்புக்கு மூலம் பொறுமை... சின்ன வயதில் எனக்குப் பொறுமை பெரிதும் கிடையாது. திருமணத்துக்குப் பின்னர் யான் பொறுமையாளன் என்றுபலரால் போற்றப்பட்டேன். என்பால் பொறுமை பொலிவது உண்மையானால் அஃது எனது இயற்கையினின்றும் அரும்பியதாகாது. அது கமலாம்பிகையினின்றும் என்பால் இறங்கிக் கால் கொண்டதென்று யான் சொல்வேன்.''

வாழ்க்கையில் திரு.வி.க. பல நூல்களைப் படித்தவர்; பெரி

யோர் பலருடன் பழகியவர்; கல்வி கேள்விகளில் வல்லவர்; திருக்குறளைக் கரைத்துக் குடித்தவர். இப்படிப்பட்ட சிறப்பொன்றும் கமலாம்பிகை அம்மையாரிடம் கிடையாது. எனினும் அவரால் திரு.வி.க. நன்மையடைந்தார்; அனுபவம் பெற்றார். பண்பட்டார். இதைப்பற்றித் திரு.வி.க. எவ்வளவு பெருமிதம் அடைந்திருந்தால், 'அவள் திருக்குறள் படித்தவள் அல்ல. அவளே எனக்குத் திருக்குறளாக விளங்கினாள்' என்று பெருமையோடு குறிப்பிடுவார்? அன்பில் தோய்த்து நன்றிப் பெருக்கோடு திரு.வி.க. தமது இல்வாழ்க்கை பற்றி எழுதிய எழுத்து ஒவ்வொன்றும் பொன் எழுத்து; எந்த மனைவிக்கும் கிட்டாத பேறு; எந்தக் கணவனும் பின்பற்றத்தக்க முன்மாதிரி.

''யான் திருக்குறள் படித்தவன். என்பால் பிடிவாதம், வன்மம், முன்கோபம் முதலிய தீக்குணங்கள் நிறைந்திருந்தன. வெறுந் திருக்குறள் படிப்புத் தீக்குணங்களை அறவே களையவில்லை. கமலாம்பிகையின் சேர்க்கை அக்குணங்களைப் படிப்படியே ஒடுக்கியது. அவள் திருக்குறள் படித்தவள் அல்ல. எனக்கு அவளே திருக்குறளாக விளங்கினாள். மனை வாழ்க்கையில் ஈடுபடத் திருக்குறள் நுட்பம் விளங்குவதாகிறது. திருவள்ளுவர் உள்ளத்தை உணர்தற்கு மனை வாழ்க்கை இன்றியமையாதது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாயிற்று. யான் பின்னாளில் எழுதிய திருக்குறள் விரிவுரைக்கு இல்வாழ்க்கையின் அனுபவம் பெருந்துணையாய் நின்றது''

பாரதப் பெண்கள் மரபு எப்பொழுதும் கணவனைப் போற்றி அவனை இப்பிறவியில் அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எனவும், இத் தொடர்பு எல்லாப் பிறவியிலும் தொடர வேண்டும் எனவும் பிரார்த்திப்பதாகும். திரு.வி.க.வைக் கைத்தலம் பற்றிய கமலாம்பிகை அம்மையார் அவ்வாறே எண்ணியிருப்பார், மகிழ்ந்திருப்பார், இறைவனுக்கு நன்றி சொல்லியிருப்பார் என்பதில் ஐயமில்லை. அதில் திரு.வி.க.வின் பெருமை மிளிரவில்லை. மற்ற கணவர்களைப் போல் அல்லாமல், மனைவியை மாணிக்கமாகப் போற்றிய விதத்தில் திரு.வி.க. நமது உள்ளங்களில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுவிடுகிறார். அதற்குக் காரணம் அவருக்கு வாய்த்த உத்தமமான மனைவியின் உன்னதப் பண்புகளும், அவற்றின் காரணமாக அவரது உணர்வும் உள்ளமும் பண்பட்டுப் புனிதம் பெற்றதுமே யாகும்.

## பத்திரிகை ஆசிரியர் - திரு. வி. க.

1917—டிசம்பர் 7 ... ''தேசபக்தன்'' பத்திரிகாசிரியராதல்

1920—ஜூலை 22 ... ''தேசபக்தன்'' ஆசிரியர் பதவி நீத்தல்

1920—அக்டோபர் 22 ... ''நவசக்தி'' பத்திரிகை தொடங்குதல்.

1941-ல் திருமதி இராதாமணியம்மையாருக்கு ''நவசக்தி'' பத்திரிகையைத் தருதல்.




## திரு.வி.க. ஆற்றிய படத் திறப்புகள்

ஞானியார் சுவாமிகள்—1942

கோ. வடிவேல் செட்டியார்—(முக உருவம்)

நாகம்மையார் (தந்தை பெரியார் முதல் மனைவி)

திராவிட நாடு—1948.

## அறத்துப் பாலின் விளக்கம்

திரு.வி.க.வின் தனி வாழ்க்கை திருக்குறளின் அறத்துப்பாலுக்கு ஒரு விளக்கம் எனலாம். அவ்வாழ்க்கையில் பாயிரம் உண்டு; இல்லறம் உண்டு; துறவறம் உண்டு; ஊழ்வலியும் உண்டு. திரு. வி. க. இல்லறத்தின் சிறப்பை உணர்ந்தவர்; துறவறத்தின் தூய்மையைப் பெற்றவர். அன்பு அருளாய்க் கனிந்த வாழ்வு அவர்தம் வாழ்வு.

—டாக்டர் மு. வரதராசன்



# திரு.வி.க சில நினைவுகள்



தமிழ், கல்வி, சமயம், தொழில், சீர்திருத்தம் முதலிய பல துறைகளிலும் திரு. வி. க. ஆற்றிய தொண்டு வியத்தற்குரியது. அவர் ஒரு தமிழ்ப் பேரறிஞர்; சொற் பெருக்காளர்; தமிழுக்குப் புதுநடை படைத்த புலவர்; அரசியல் வல்லுநர்; சமயப் பொதுமையாளர்; தொழிலாளர் தலைவர்; சமுதாயச் சீர்திருத்தச் செம்மல்.

இப்பெருந்தகையாரை எண்ணும்போது நேரில் கண்ட சில நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன.

1926-ஆம் ஆண்டில் சென்னை ஆழ்வார்பேட்டையில் பரோபகார சங்கத்தின் ஆண்டு விழா தமிழ்ப்பேரறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் மாளிகையின் முன்னிடத்தில் நடைபெற்றது. அவ்விழாவில் பா. வே. மாணிக்க நாயக்கர் ''மக்களும் மாக்களும்'' என்ற பொருள்பற்றிச் சொற்பெருக்காற்றினார். அக்காலத்தில் ஆழ்வார்பேட்டை வயல்களும் தோட்டங்களும் சூழ்ந்து, ஒரு சிற்றூராகக் காட்சி அளித்தது. அவ்வூரில் பெரும்பாலும் விவசாயிகளும் தொழிலாளர்களுமே வாழ்ந்து வந்தனர். அவர்களில் பலர் எழுத்தறிவில்லாப் பாமரர்கள். அவர்களுக்குள் அடிக்கடி வெட்டுக் குத்துச் சண்டைகள் நடைபெறும். பா. வே. மாணிக்க நாயக்கர், அவர்களுடைய போக்கை உணர்ந்தே ''மக்களும் மாக்களும்'' என்ற பொருள் பற்றிப் பேசினார். விழாவுக்குத் திரு. வி. க. தலைமை வகித்தார். இரண்டு பேரறிஞர்களின் சொற்பொழிவைக்கேட்கச் சென்னையில் பல இடங்களிலிருந்தும் மக்கள் திரளாக வந்திருந்தனர். மக்களுக்குரிய பண்புகளையும் மாக்களின் இயல்புகளையும் திரு. வி. க. தமக்கேயுரிய நடையில் விளக்கிப் பேசினார். பா. வே. மாணிக்க நாயக்கர் தம் சொற்பொழிவில் இன்னும் விரிவாகப் பல சான்றுகளுடன் மக்கள் பற்றியும் மாக்கள் பற்றியும் பேருரை ஆற்றினார். இருபேரறிஞர்களின் உரைகளைச் செவிமாந்தியவர்களில் பலர், ''நாங்கள் இங்கு வரும்போது மாக்களாக வந்தோம்; இப்போது மக்களாகத் திரும்பிப் போகிறோம்'' என்றார்கள். மக்களுள் எல்லோரிடத்தும் ஏறத்தாழ மாக்கள் இயல்புகளே நிறைந்திருக்கின்றன என்பதை இவ்விரு அறிஞர்களின் உரை பலர் உள்ளத்திலும் ஆழப் பதிவித்தது என்பதை இது உணர்த்துகின்றது.

## டாக்டர். தா.ஏ.ஞானமூர்த்தி

நான் இராயப்பேட்டையிலுள்ள திரு. வி. க. அவர்களின் இல்லத்திற்குச் சென்று எம் கலைப்பணிப் பயிற்சிக் கழகத்தின் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்க வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டேன். அவர் சிறிதும் தயங்காமல் இசைந்தார். 'தாங்கள் வருவதற்கு வண்டி அனுப்புகிறேன்' என்றேன்.

''எனக்கு வண்டி தேவையில்லை. இரண்டுகல் தொலைவு தானே; நான் நடந்தே வந்து விடுவேன்'' என்றார். 'இவ்வளவு பெரியவர் நடந்து வருகிறேன் என்று சொல்கிறாரே' என்று என் உள்ளம் நினைந்து நெகிழ்ந்தது.

ஆண்டு விழா திரு. வி. க. தலைமையில் நடைபெற்றது. ஒன்பது மணிக்கு முடிந்தது. திரு. வி. க. புறப்பட்டார். கூட்டத்திற்குச் சிலர் மோட்டார் வண்டிகளில் வந்திருந்தனர். அவர்களில் ஒருவரை அணுகி திரு. வி. க. அவர்களைத் தம் வண்டியில் ஏற்றிச் செல்லுமாறு வேண்டிக் கொண்டேன். அவர் மிக்க ஆர்வமுடன் இசைந்தார். ஆனால் திரு. வி. க. தாம் நடந்து போக விரும்புவதாகவே கூறி, நடந்தே சென்றார். பிறரிடத்து எத்தகைய சிறு உதவியும், பெற விரும்பாத அவருடைய பேருள்ளத்தை எண்ணி வியந்தேன். உண்மையில் அவர்பால் எனக்குப் பக்தி பெருகிற்று.

### திரு.வி.க.வும் பெரியாரும் :

ஈரோட்டில் திராவிடக் கழக மாநில மாநாடு நடைபெற்றது. அம்மாநில மாநாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். இம்மாநாடு நடந்துகொண்டிருந்தபோது அங்குத் திரு.வி.க. வந்தார். மேடையிலிருந்த பெரியார் திரு. வி. க. வருவதைப் பார்த்து விட்டார். உடனே அவர் மேடையிலிருந்து கீழே இறங்கி வந்து, திரு.வி.க வை அன்புடன் வரவேற்று அழைத்துச் சென்று மேடையில் அமரும்படி செய்தார். மாநாட்டின் நிகழ்ச்சி அதுவரை தடைபட்டது. அங்கு இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்தும், பெரியார் திரு.வி.கவை அழைத்துச் சென்று மேடையில் அமர்த்தும் வரை முழு அமைதி நிலவியது. வயதில் திரு.க.வைவிடப் பெரியார் பெரியவராய் இருந்தும், தாம்மேடையிலிருந்து இறங்கி வந்து திரு. வி. க.வை அன்போடு அழைத்துச் சென்றது அவருக்குத் திரு. வி. க. விடம் இருந்த பெருமதிப்பை உணர்த்துகின்றது.

திரு.வி.க. அவர்களை நினைக்கும்போது அவர் தமிழகத்துக்கு ஆற்றிய அரும்பெருந்தொண்டுகளும் அவர்தம் அளப்பரிய இனிய பண்புகளும் உள்ளத்தில் உந்திக் கொண்டு வருகின்றன. அவர் நன்னெறிகளை அறிவுறுத்தியதோடன்றித் தம் வாழ்க்கையிலும்மேற்கொண்டொழுகினார். அந்நன்னெறிகள் வழி நின்று ஒழுகுதலே நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.



## தமிழ்த்தென்றல்

# திரு.வி.க.

### வாழ்க்கைக் குறிப்புகள்

*1883*

ஆகஸ்டு 26ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை துள்ளம் கிராமத்தில் திருவாரூர் வே.விருத்தாசலனாருக்கும் சின்னம்மாளுக்கும் 6-வது மகனாகப் பிறந்தார் திரு.வி.க.

*1890*

துள்ளம் கிராமத்திலிருந்து இராயப்பேட்டைக்குக் குடியிருப்பை மாற்றுதல்

*1891*

இராயப்பேட்டை ஆரியன் பிரைமரி பாடசாலையில் தொடக்கக் கல்வி பயிலல்

*1894*

வெஸ்லி கலாசாலையில் சேர்தல், சில மாதங்களுக்குள் மருந்தின் பத்திய முறிவால் கால் கைகள் முடங்குதல்.

*1894—1898*

படிப்புக்கு ஓய்வு

*1898*

மீண்டும் வெஸ்லி கலாசாலையில் சேர்தல். 1898-1904 வரை பயின்றார். மெற்றிக்குலேஷன் வகுப்பு (ஆறாம் படிவம்) வரை படித்தார்.

*1901*

டிசம்பரில் கதிரைவேற் பிள்ளையவர்களை முதன் முதல் சந்தித்தல்

*1901—1906*

கதிரைவேலரின் மாணாக்கராய்ப் பயிற்சி பெறுதல்

*1903*

பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை தொடங்குதல்

*1904*

கதிரைவேற் பிள்ளை வழக்கில் எழும்பூர் மன்றத்தில் சான்று கூறுதல். மெற்றிக்குலேசன் தேர்வுக்குச் செல்லத் தேர்ந்தெடுக்கப்படாமை, பள்ளிக் கூடப் படிப்பின் முடிவு.

*1905*

தந்தையார் மறைவு

*1906*

இராயப்பேட்டை 'கமர்ஷியல் ஸ்கூ'லில் சேர்ந்து "புக்கீப்பிங்" பயின்று தேர்வு பெறுதல்

*1907*

ஆசிரியர் கதிரைவேற் பிள்ளை மறைவு. கடற்கரையில் விபின் சந்திரபாலர் சொற்பொழிவுகளைக் கேட்டல்.

*1907—1908*

ஸ்பென்ஸர் கம்பெனியில் எழுத்தராய் வேலை பார்த்தல்

*1908*

கதிரைவேற்பிள்ளை வரலாறு இயற்றுதல். திருவல்லிக்கேணிச் சிவனடியார் திருக்கூட்டம் என்றொரு சைவ சபை தோன்றியது. அதன் முதல் தலைவர் திரு.வி.க.

*1908—1910*

மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரிடம் சித்தாந்த சாத்திரம் பயிலுதல்

திரு.வி.க. தமையனார் உலகநாத முதலியாரும் நண்பரும் சேர்ந்து "உமாபதி குருபிரகாசம் பிரஸ்' தொடங்கினர். பெரிய புராணம் விசேடக் குறிப்புரை சஞ்சிகையாக வெளியிடப்பெற்றது.

திருவல்லிக்கேணி சிவனடி திருக்கூட்டச் சார்பில் பெரிய புராணம் முதல் காண்டம் பிரசங்கம் செய்து முடித்தல்.

*1908*

ஜஸ்டிஸ் சர்.டி. சதாசிவ ஐயரவர்களின் நட்புப் பெறுதல்.

*1910*

தியோசாபிகல் சங்க அறிஞராகிய அன்னிபெசன்ட் அம்மையாரைச் சந்தித்தல். பின்னர் 'தேசபக்தன்' ஆசிரியராய் இருந்தபோது அம்மையார் அவர்கள் பலவகை நூல்களும் சஞ்சிகைகளும் வழங்கினார்கள். அம்மையாரின் ஆங்கிலச் சொற்பொழிவுகளில் மூழ்கிப் பரவசமடைந்தார் பலமுறை.

*1910—1916*

ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிதல்.

*1911-டிசம்பர்*

சைவ சித்தாந்த மகாசமாஜத்தில் முதன் முதல் சொற்பொழிவாற்றல்

*1912-செப்.13*

திருச்சி கிருஷ்ணசாமி முதலியாரின் புதல்வி கமலாம்பிகை அம்மையாரை மணந்தார். திருமணத்தில் கிறிஸ்துவ ஐபமும் நிகழ்ந்தது. அஷ்டாவதானம் கலியாணசுந்தர முதலியார் போன்றோர் வாழ்த்தினர்.

*1912—1918*

சிறப்பான இல்லறம் நடத்துதல்

*1912-டிசம்பர்.*

காஞ்சியில் மணம்பூண்டி குமாரசாமி பிள்ளையின் நட்புப்பெறுதல்

*1913*

பட்டினத்தார் பாடல்களுக்கு உரை எழுதுதல்

வேலூரில் நடந்த சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழாவில் தவத்திரு ஞானியார் அடிகள் தலைமையில் பேசுதல். ஞானியார் பேச்சைக் கேட்ட திரு. வி. க. தமிழ்நாட்டிலும் கிளாட்ஸன்கள், சுரேந்திரர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணினார்.

*1914*

சுப்பராய காமத் சந்திப்பு. எஸ்.சீனிவாச ஐயங்கார் நட்பு

*1915*

சென்னைப் புதுப்பாக்கத்திலே "ஸ்ரீ சிவ சுப்பிரமணிய பக்தஜன சபை" என்றொரு சபை தோற்றம். அதன் முதல் தலைவர் திரு.வி.க.

*1916 ஜூன்*

வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழ் ஆசிரியராதல்

*1917*

காஞ்சியில் பி.பி. வாடியாவின் ஆங்கிலப் பேச்சைத் தமிழில் மொழி பெயர்த்தார். இத்தொடர்பு பின்னர் தொழிலாளர் சங்கங்களில் உரம் பெற்றது.

செப்.

அரசியல்துறையில் கன்னிப் பேச்சு பின்னர் சில நாட்களுள் 'சென்னை மாகாணச் சங்கம்' என்ற அமைப்பு ஐஸ்டிஸ் கட்சியை மாய்க்கத் தோன்றியது.

நவம்பர்;

சென்னை மாகாணச் சங்கச் செயலாளர்களுள் ஒருவராதல்.

*1917 டிசம்பர் 5*

வெஸ்லி கல்லூரித் தமிழாசிரியர் பதவியிலிருந்து விலகல்

டிசம்பர் 7

"தேசபக்தன்" பத்திரிகாசிரியராதல்

டிசம்பர். 8

மூதறிஞர் ராஜாஜி அவர்களை முதன் முதலில் சேலத்தில் சந்தித்தல்.

*1918-ஏப்.27 சனிக்கிழமை*

இந்தியாவிலேயே முதல் முதல் 'சென்னைத் தொழிலாளர் சங்கம்' பிறந்தது. இச் சங்கத்தின் திறப்புக்கு சென்னை மாகாணச் சங்கம் வழிகோலியது. திரு. பி. பி. வாடியா தலைவரானார். திருவாளர்கள் திவான்பகதூர் கேசவப் பிள்ளையும் திரு. வி. க.வும் சிலரும் துணைத் தலைவர்களாயினர்.

*1918 செப்1.*

ஒருயிர் சருடலென வாழ்ந்த மனைவி கமலாம்பிகை அம்மையார் மறைவு

*1919-பிப்.28*

"தேசபக்தன்" இதழின் ஈடுகாணம் பறிமுதல் செய்யப்படுதல்

மார்.18

அண்ணல் காந்தியடிகளை முதன் முதலில் அரக்கோணம் ரயிலடியில் பம்பாய் மெயிலில் வந்து கொண்டிருந்தபோது சந்தித்தார். தலைவர் விஜயராகவாச் சாரியாரின் அறிமுகக் கடிதத்துடன் சென்றார்.

*1919 ஏப்ரல் 6*

சத்தியாகிரக நோன்பு நாள்

ஜூன் 2

லார்ட் வெலிங்டன் தேசியப் பத்திரிகை ஆசிரியர்களை வரவழைத்து எச்சரிக்கை வழங்குதல். அச் சந்திப்பில் வெலிங்டன் திரு.வி.க.வை நோக்கி, 'உங்களுடைய எழுத்தில் கொதிப்பு அதிகம்'' என்றார்.

*1919 அக்டோபர்.11*

சென்னை மாகாணச் சங்க இரண்டாம் ஆண்டு மாநாடு நடந்தபோது வரவேற்புத் தலைவராய் அமைந்த தந்தை பெரியார் அவர்களின் நட்பைப் பெறுதல்.

டிசம்பர் 17

லோகமான்ய பாலகங்காதர திலகர் அவர்களை முதன் முதலாகச் சந்தித்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பராய காமத்தும் உடன் சென்றனர்.

*1920-ஜனவரி 11*

அமிர்தசரஸில் கூடிய காங்கிரசில் கலந்து கொண்டு திரும்பிய அன்னி பெசன்ட் அம்மையாரைத் தொழிலாளர் சார்பில் வரவேற்று சென்னை சென்ட்ரல் ரயிலடியிலிருந்து லார்ட் கோவிந்ததாஸ் அரண்மனை வரை ஊர்வலமாக அழைத்துச் சென்று கேசவப் பிள்ளை தலைமையில் வரவேற்பளித்தார்.

*1920 ஜூலை-4*

மத்திய தொழிலாளர் சங்கம் பிறப்பு

• ஜூலை22

"தேசபக்தன்" ஆசிரியர் பதவியிலிருந்து விலகல்

அக்டோபர். 22

"நவசக்தி" இதழ் தொடங்குதல். முதல் இதழ் வெளிவந்தது. வாரப் பதிப்பு 'நவசக்தி' வெளிவர, தொழிலாளர்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் விதம் 5,000 ரூபாயும் சில நண்பர்கள் சுமார் 2000- ரூபாயும் அளித்தனர். இதற்கென அச்சுக் கூடம் அமைக்கப்பட்டது. அதற்குச் 'சாது அச்சுக் கூடம்' எனப் பெயரிடப்பட்டது.

நவம்பர்.11

தொழிலாளர் இயக்கத் தலைவர் மீது பக்கிங்காம் கர்நாட்டிக் ஆலைகளை நடத்திவரும் பின்னி நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது, வேலை நிறுத்தம் நிகழ்ந்ததற்காக.

*1921-ஜனவரி. 27*

பஞ்சாயத்துத் தீர்ப்பின்படி பக்கிங்காம் மில் கதவடைப்பு நீங்கி அனைவரும் வேலைக்குச் சென்றனர்.

*1921-ஜூன் 20*

ஒரு கிளையின் பொருட்டு முழு மில் தொழிலாளரையும் தண்டித்தது தவறு எனத் திரு.வி.க. முந்தியநாள் 19.6.21ல், பெருங்குரல் எழுப்பியதன் பயனாக பக்கிங்காம் மில் தொழிலாளர் மீண்டும் வேலை நிறுத்தம் செய்தனர்.

ஜூலை 5

லார்ட் வெல்லிங்டன் அழைப்பின்பேரில் திரு.வி.க. வெலிங்டனை மாலை 6 மணிக்குச் சந்தித்தார். ஏற்கெனவே அங்கு வி.சக்கரைச் செட்டியார் முதலியோர் இருந்தனர். 'பக்கிங்காம் மில் குழப்பத்திற்குக் காரணம் நீங்களே. யான் உங்களை எச்சரிக்கை செய்யவே










அழைத்தேன்'' என்றார் வெலிங்டன்.

**ஆகஸ்ட் 9.**
போலீசாரால் தொழிலாளர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.

**ஆகஸ்ட். 10**
எய்லிங் கமிட்டி விசாரணை

**ஆகஸ்ட்.29**
உணவின்றி பட்டினியால் வாட்டமுற்றுக் கிடந்த தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

டிசம்பர்: வேலை நிறுத்த முடிவு

**1925 நவ.21, 22**
காஞ்சிபுரத்தில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் மாநாட்டுத் தலைமை. வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய தீர்மானம் நிராகரிக்கப்படுதல், தந்தை பெரியார் முதலியோர் வெளியேற்றம்.

**1926-டிசம்.9**
தென் இந்திய ஜீவரட்சா பிரசார சபை தோற்றம். ஆதன் பிரசாரகர் ஜீவ பந்து ஸ்ரீபாலுடன் சில இடங்களுக்குப் பலி நிறுத்தப் பிரச்சாரத்திற்குச் செல்லல்.

**1927-பிப்ரவரி 25**
தோழர் சாபுர்ஜி சக்லத்வாலா பிரிட்டிஷ் பார்லிமெண்ட் உறுப்பினர். இந்தியர். ஆங்கில மாதை மணந்தவர். அவர் சென்னைத் தொழிலாளர் சங்கத்தில் பேசியபோது சந்திப்பு

**1928 அக்டோபர்.9**
தமையனார் உலகநாதர் மகன் பால சுப்பிரமணியன் மறைவு

**1931**
சென்னைத் தொழிலாளர் சங்கத்திற்கு ஒரு சொந்த நிலையம் கண்டு அதனைத் திவான்பகதூர் கேசவப் பிள்ளை திறந்து வைத்தார்.

**1933**
மாமண்டூரில் உழவர் வேலை நிறுத்தம்.

**1934 டிசம்பர்**
திருவதிகையில் கூடிய சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தல்.

**1939**
காங்கிரஸ் ஆட்சியில் மில் வேலை நிறுத்தம்.

**1940**
திருவொற்றியூரில் பலி நிறுத்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, வெற்றி காணல்.

**1941**
திருமதி இராதாமணி அம்மையாருக்கு 'நவசக்தி' இதழினை நடத்துமாறு அளித்தல்.

**1943-ஏப்.14**
சென்னைத் தொழிலாளர் சங்க வெள்ளி விழா

**ஆகஸ்டு 24**
திரு.வி.க. அறுபது ஆண்டு நிறைவு

**1943 டிசம்பர் 27,28,29**
மதுரையில் சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழா; திரு.வி.க தலைமை.

**டிசம்பர் 30, 31**
காரைக்குடி இந்து மதாபிமான சங்க வெள்ளி விழாத் தலைமை. சொ. முருகப்பா விருந்தினை ஏற்றல். அங்கும் மணி விழாச் சிறப்பு.

**1944 பிப்.12**
திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்பு நூல் வெளியீடு.

**1945-1946**
தமிழ்த் திருமணங்கள் நடாத்தி வைத்தல்.

**1947 மார்ச் 11**
பக்கிங்காம் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம்

**மார்ச் 29**
அந்தோணிப்பிள்ளை சிறைப்பட்டார் திரு.வி.க. மீண்டும் மில் தொழிலாளர் சங்கத் தலைமைப்பதவி ஏற்றல்.

**ஜூன் 9**
திரு.வி.க. இல்லத்தில் போலீசார் காவல்.

**டிசம்பர் 7**
திரு.வி.க. இல்லச் சிறைவாசம் நீக்கம். தமிழாசிரியர் துக்க வார இறுதிக் கூட்டம் ;மொழியாசிரியர் மாநாடு.

**1948 ஆகஸ்ட்.14**
சென்னை மாகாணத் தமிழ் ஆசிரியர் மாநாட்டில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் படத்திறப்பு.

**1949**
கண்ணில் படலம். ஒரு கண் பார்வை மறைதல். - 'பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி' நூல் எழுதுதல்.

**1953 ஆகஸ்ட்.24**
முதல் செப்டம்பர் 16 வரை சென்னை மாநிலம் முழுவதும் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடுதல்.

**1953 செப்டம்பர்.13**
இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையார் திரு. வி. க. மணி மண்டபம் நிறுவத் தீர்மானம் நிறைவேற்ற, ஒப்புதல் அளித்தல்.

**1953 செப்டம்பர்.17**
இரவு 7,45 மணி. இயற்கையில் இரண்டறக் கலத்தல்.

**1953 செப்டம்பர். 18**
காலை 12 மணி முதல் 3 மணி வரை சென்னைத் தொழிலாளர் சங்கத்தில் [சூளை] அவரது திருஉடலை பொது மக்கள் பார்வையிடல்

பிற்பகல் சூளையிலிருந்து மயிலை மயானத்திற்கு ஊர்வலமாகத் திருவுடல் வருதல். தந்தை பெரியார் ஊர்வலத்தை நடத்திச் சென்றார். சென்னை அண்ணாசாலையில் 4 மணிநேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது. மகளிர் அணி நூற்றுக் கணக்கில் திரண்டது குறிப்பிடத்தக்கது.

**1953 செப்டம்பர். 18**
இரவு 7 மணிக்கு மயிலை மாநகர் மயானத் திடலில் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. பொன்னுடல் எரியூட்டப் பெற்றது.

தொகுப்பு:
**சிறுவை நச்சினார்க்கினியன்**



# மாங்காட்டில் ஒரு மகிழ்ச்சித் திருவிழா

**பின்பக்க அட்டை சொல்லும் செய்தி**

ஆதி திராவிட மக்கள் திராவிடர் அல்லாதோர் இடையே ஒற்றுமை உணர்வை வளர்க்க ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாரதி சொன்னதை நினைவுபடுத்தும் வகையில் தமிழகம் முழுவதும் 5 ஆயிரம் கோவில்களில் கூட்டு வழிபாடும்-பொது விருந்தும் சுதந்தர தினத்தன்று நடந்தன. அதே கூட்டு வழிபாடும்-பொது விருந்தும் சென்னையை அடுத்த மாங்காட்டிலும் சிறப்பாக நடந்த .

இந்த விழாவையொட்டி மாங்காடு மாவிலை, தென்னைஓலை தோரணங்கள் - அலங்கரிக்கப்பட்டு எழுச்சிக்கோலம் பூண்டு, இருந்தது. மக்கள் முகம் மலர்ந்து மகிழ்ச்சியுடன் விழாவில் கலந்து கொண்டனர்.

சுதந்தர நன்னாளில் மாங்காட்டில் ஒரு மங்களகரமான நிகழ்ச்சியாக இது நடந்தது. சின்னஞ்சிறிய ஊரான மாங்காடு ஊரில் எங்கும் மக்கள் வெள்ளம் கரை புரண்டோடியது.

வேறு எந்த விழா நிகழ்ச்சிகளுக்கும் இல்லாத தனிச் சிறப்பு இந்த நிகழ்ச்சிக்கு இருந்தது.

மாங்காடு காமாட்சி அம்மன் ஆலயத்தில், 15.8.82 அன்று ''பொதுவிருந்து'' கோலாகலமாக நடைபெற்றது

மாங்காடு காமாட்சி அம்மன் ஆலயத்தில் நடந்த இந்தப் பொதுவிருந்தில், ஆதிதிராவிட உடன் பிறப்புகளுடன், மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்றும் பல்லாயிரக்கணக்கானவர்களும், சாதி வேறுபாடு இன்றி, சமமாக அமர்ந்து விருந்து உண்டார்கள். சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், தயிர்சாதம், வடை, பாயசம், பழம், அப்பளத்துடன் விருந்து அனைவருக்கும் பரிமாறப்பட்டது.

முன்னதாக, மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் மாங்காடு வருகை தந்ததும், மங்கள இசையுடன் கும்ப மரியாதையுடன் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எச்.ஜே. ராமச்சந்திரன் இ.ஆ.ப. அவர்கள், பரம்பரை அறங்காவல் குழுத் தலைவர் திரு மணலி ராமகிருஷ்ண முதலியார் ஆகியோர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் அவர்களது துணைவியார் திருமதி வி.என். ஜானகி அம்மையார் அவர்களும் ஒய்வு ஊதியம் பெறும் முதியோருக்கு இலவசமாக வேட்டிகளையும் சேலைகளையும் வழங்கினார்கள்.

அப்போது அந்த முதியோர்கள் ''அய்யா நீங்கள் நல்லா இருக்கோணும்!'' என்று மனம் குளிர வாழ்த்தி அகமகிழ்ந்தனர்.

பிறகு மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களும், மற்றவர்களும், மிகச் சிறந்த முறையில் அற்புதமாக அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடைக்கு வந்தனர்.

கூடியிருந்த மக்கள் வெள்ளம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அவர்களை வரவேற்றது. இறை வணக்கத்துடன் விழா சீரோடும் சிறப்போடும் துவங்கியது.

அற நிலையத்துறை ஆணையாளர் திரு. சண்முகசிகாமணி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

மாங்காடு காமாட்சி அம்மன் ஆலயப் பரம்பரை அறங்காவலர் திரு மணலி ராமகிருஷ்ண முதலியார், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறைஅமைச்

நிகழ்ச்சித் தொகுப்பு :
**ஜி. ஆனந்தன்**

சர் அவர்களுக்கும் பொன்னாடையும், பட்டாடையையும் அணிவித்து மகிழ்ந்தார்.

குழந்தைகள் சத்துணவுத் திட்டத்துக்காக தமிழகத்திலுள்ள 64 ஆலயங்கள் சார்பில் 148 உணவுக் கூடங்கள் கட்ட ரூ.59 இலட்சத்து 20 ஆயிரத்துக்கான காசோலையை வெள்ளித் தட்டில் வைத்து மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார். அதேபோல வெள்ளியினால் செய்த ஆலயம், வெள்ளியினால் செய்த உணவுக் கூடம் பொறிக்கப்பட்ட கேடயம் ஒன்றும் முதல்வரிடம் அளிக்கப்பட்டன.

இந்த இனிய விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில், ''குறுகிய காலத்தில் இத்தனைச் சிறப்பாக இந்த விழாவினை நடத்திய அனைவரையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். சாதி, மத வேறுபாடின்றி அனைவரும் ஒன்று என்ற உயரிய இலட்சியத்தின் அடிப்படையில் கடந்த ஆண்டு முதல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பொது விருந்து(சமபந்தி)திட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். இந்தச் சீரிய திட்டத்திற்கு 4,100 கோவில்களில் 8 இலட்சம் பேருக்கு ,கடந்த ஆண்டு பொது விருந்து அளித்தோம்.அதேபோல இந்த ஆண்டு 5,000 கோயில்களில் சாதி மத வேறுபாடின்றி 10 இலட்சம் பேருக்குப் பொது விருந்து அளித்திருக்கிறோம்.

இந்த ஆண்டு மட்டும் பொது விருந்து அளிப்பதன் மூலம் 12 கோடி ரூபாய் செலவாகிறது. மாங்காடு காமாட்சி அம்மன் ஆலயத்தில் நான்கு ஆண்டுகளுக்கு 1,74,942.57 வருமானம் கிடைத்து வந்தது.கடந்த ஆண்டு முடிந்த பசலிப்படி வருமானம் 21,23,401 ரூபாய். ஆனால் இந்த ஆண்டோ அது 30 இலட்சத்தையும் தாண்டும் என்று எதிர்பார்க்கிறோம். முன்பு 1.75 இலட்சமாக இருந்த வருமானம் இன்று 32,50,000 ஆக உயர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆலயத்திற்கு வருகிறவர்களும், வழிபாடுசெய்கிறவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போவதால்தான் இந்த ஆலயத்தின் வருமானம் உயர்ந்து கொண்டே போகிறது. இங்கு சத்துணவுத் திட்டத்திற்காக பழனி ஆலயத்தின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இருக்கிற ஆலயங்களில் எல்லாவற்றையும் விட, பழனி ஆலயத்தினுடைய நன்கொடை முதல் இடத்தைப் பெறுகிறது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு இரா. மோகனரங்கம் எம். பி. அவர்கள் பேசுகையில், ''இது போன்ற இனிய நிகழ்ச்சி இதற்கு முன்பு இருந்த அரசு நடத்த எதற்கும் முன்வரவில்லை. புரட்சித் தலைவரின்-சீரிய தலைவரின் சீரிய அரசு இந்தச் சமயத்தில் சமபந்தி (பொது விருந்து திட்டத்தை) இன்றைக்குக் கொண்டு வந்துசிறப்போடுநிறைவேற்றிவருகிறது. முதியோருக்குவிருந்துடன் மாதம் 35 ரூபாய் உதவிப் பணமும், வாரத்துக்கு 1 கிலோ அரிசியும், ஆண்டுக்கு இருமுறை உடைகளையும் வழங்கி அவர்களைச் சிறப்பிக்கிறது இந்த அரசு.விருப்பு வெறுப்பு இன்றி, கட்சிப்பாகுபாடு இன்றி இதுபோன்ற இனிய விழாவைத் தமிழ்நாடு அரசு அனைத்துக் கட்சியினரையும் அழைத்துச் சிறப்பாக நடத்தி வருவதை நாடு நன்கு அறியும்'', என்றார். 5

சட்டமன்ற உறுப்பினர் திருமதி டி.யசோதா, பழனி அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் திருமதி ராதா தியாகராஜன், மாங்காடு காமாட்சியம்மன் கோவில் பரம்பரை அறங்காவலர் குழுத் தலைவர் திரு மணலி இராமகிருஷ்ண முதலியார் ,குறளரசு திரு. ஜெயபாரதி ஆகியோரும் பேசினார்கள்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''நாம் எல்லோரும் ஓர் குலம் ஓர் இனம் என்று கருதி எப்படி இந்திய சுதந்தரம் பெற எந்தப் பிரச்சினையையும் கருதாமல் விடுதலை என்பதில் மட்டும் அக்கறை கொண்டு போராடினார்களோ, அதேபோல சுதந்தரத்தைக் காக்கப் பாடுபடவேண்டும்.

''சுதந்தரம் என்பது தன்மானத்தைக் காப்பது தான். வாழும் இடத்துக்கு தான் சொந்தக்காரன் என்பதை ஏற்படுத்திக் கொள்வது சுதந்தரம். மொழியை என் மொழி நான் வைத்துக் கொள்கிறேன் என்பதும் சுதந்திரம். நான் என்னுடைய உரிமையை இந்த நாட்டிலே பெற்றுத் திருவேன் என்றால் அது

**சுதந்தர நன்னாளில் மாங்காடு ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு-பொதுவிருந்தில் மாண்புமிகு முதல்வர் பங்கேற்று ஓய்வூதியம் பெறும் முதியவர்களுக்கு புத்தாடைகளை வழங்கினார்.**



சுதந்தரம். ஆகவே, எந்தமொழி பேசுகிறவர்களுக்கும் அவனுடைய மொழிக்குச் சுதந்தரம் இருக்க வேண்டும். எந்தக் கொள்கையையும் இந்த நாட்டில் சொல்வதற்கு அவனவனுக்கு, சுதந்திரம் இருந்தாக வேண்டும். இதைத்தான் மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். ஆகவே, 35 ஆண்டுகளுக்குப் பிறகு 36வது ஆண்டு பிறக்கும் இந்தச் சுதந்தர நன்னாளில் இவையெல்லாம் பேசவேண்டி இருக்கிறது.

''சுதந்தரம் கிடைத்தும் யாருக்குச் சுதந்தரம் வேண்டுமோ, எதற்குச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ, எந்தச் சமுதாயத்துக்குச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ யாருடைய மொழிக்குச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ, யாருடைய தன்மான உணர்வுக்குச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ யாருடைய பொருளாதாரச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ அது இன்னும் கிடைக்கவில்லை. கடவுளுக்காவது கிடைக்குமா என்பதற்காகத்தான் இங்கு கூடியிருக்கிறோம். அங்கே போய் இன்னார்தான் போகவேண்டும் என்று இல்லாமல் அந்தக் கடவுளை நம்புகிறவர்கள் அத்தனைப் பேரும் போய் அவரவர்கள் மொழியில் அவர்கள் வேதனையைச் சொல்ல-வேண்டிக்கொள்ள உரிமை இருக்க வேண்டும். கடவுளின் முன்னேயாவது அல்லது கடவுள் முன்பாவது தெய்வத்தின் குழந்தைகள் என்று ஒன்றுபட வேண்டும். அதை நிறைவேற்றுவதற்காகத்தான் இத்தகைய காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

''இங்கே 14 கோடி ரூபாய் செலவில் 2 இலட்சம் பேருக்குத் துணி வாங்கிக் கொடுக்கிறோம் என்றார்கள். இதில் சுதந்தரம் கிடைத்துவிட்டது என்று சொல்வதற்குப் பெருமைப்படுவது ஒன்றுமில்லை. இந்த ஏழைகள் முதியவர்கள் இன்னும் முதியவர்கள் ஏழைகள் என்று அரசிடம் ஏதோ தானம் பெறுவதைப் போல, இந்தத் தாய்மார்கள் கையில் சேலைகளைக் கொடுக்கும்போது ''நீ நன்றாக இரு'' என்று சொல்கிறார்கள். இது என்னுடைய பணமா? அது சினிமாவில் நடிக்கும்போது என் பணம். இது மக்கள் பணம். மக்கள் கொடுக்கின்ற வரிப்பணத்திலிருந்து நான் அதை வாங்கிக் கொடுக்கிறேன். ஆனால் அந்தத் தாய் உள்ளமும், பெரியவர்களும் சொல்கிறார்கள். 'நீ வாழ்க!' என்று, என்னைச் சொல்வதாக எடுத்துக் கொள்ளவில்லை. எந்த மக்களிடத்திலிருந்து பணத்தை வாங்கி அதை செய்கின்றேனோ அந்த மக்கள் வாழ்ந்தாக வேண்டும் என்று அவர்கள் சொல்கின்ற வாழ்த்தாக நான் எடுத்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இவை அனைத்தும் வாழ்விழந்திருக்கிற அந்தப் பெரும்பான்மையான மக்களுக்கு நாம் செய்கின்ற அடிப்படைத் தொண்டாகும். அந்த வகையில் தான் ஏறத்தாழ தமிழ்நாட்டில் 63 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கிறோம் என்றால் அது இன்னும் அதிகமாகப் போகிறது. நகரங்களுக்கும் விஸ்தரிக்கப் போகிறது என்றால் 125 கோடி ரூபாயாக ஒருவேளை 150 கோடி ரூபாயாக உயர்ந்தாலும் அது மக்களுடைய பணம். குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கொடுப்பதற்காகச் செலவு செய்கிறோம் என்றமன நிறைவு அடைகிறோம். நோய் வந்தபிறகு, நோய்தீர்க்கும் மருந்தைக் கொடுப்பதைவிட நோய் வராமலே பார்த்துக் கொண்டால் அந்த உடலுக்கு உள்ள தெம்பும், அதற்குள்ள வலிவும் மிக அதிகமானது.

''யாரும் கல்வி கற்பதற்கு இன்னொருவருடைய தயவிலே வாழ வேண்டிய சூழ்நிலை இந்த நாட்டிலே இருக்கக்கூடாது. யாரும் கடவுளை வணங்குவதற்கு நீ போகாதே முன்னால், நான் தான் போகவேண்டும் என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. இதேபோலதான் கலப்பு மணமானாலும் சரி, விதவைத் திருமணமானாலும் சரி, அல்லது ஏழைகள் தங்களைத் தாங்கள் காப்பாற்றிக் கொள்வதற்கு உழைக்கிறோம் என்று முன் வந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது என்று எண்ணித்தான் அடுத்த ஆண்டு முதல் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை நிச்சயப்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

''இதன் நோக்கம் என்ன? வேலையில்லாமல் இருக்கிறார்களா தமிழகத்தில்? எந்தக் குடும்பத்திலாவது வேலை செய்யாமல் இருக்கிறார்களா? ஆனால் இன்று ஒருவர் வேலைக்குப் போய் விட்டு வந்தால் நாளைக்கு என்ன வேலை என்பது உத்தரவாதமில்லை. அதை ஒரு அரசு கொடுக்க முடியுமா என்றால் கொடுக்க வேண்டும் என்பது அண்ணாவின் கொள்கை. எங்களது கொள்கை. அதைச் செய்தாக வேண்டும். வழி கண்டுபிடித்தாக வேண்டும். மனம் உண்டானால் மார்க்கமும் உண்டு. விட்டுக் கொடுக்கும் தன்மை இருந்தால் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்காது. பங்கு



**சத்துணவு திட்டத்துக்கு பழனி கோவில் சார்பில் நிதி அளிக்கிறார் பழனி கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் திருமதி ராதா தியாகராஜன்.**

போட்டுக் கொள்ள மத்தியஸ்தம் தேவையில்லை

எங்களைப் பொறுத்தவரை எந்தக் கட்சியில் யார் நல்லதைச் செய்தாலும் அவர்களைப் பாராட்டுவதில் பின் வாங்குவதில்லை. அதில் விட்டுக் கொடுப்பதில்லை.

''இங்கே அமர்ந்திருக்கும் தாய்மார்களை விட, ஏற்றத் தாழ்வை மாற்றியமைக்கிறவர்கள் யாரும் இருக்க முடியாது. மக்கள் என்ன முடிவு செய்கிறார்களோ அதுதான் இந்த நாட்டின் முடிவு. குழந்தைகளைப் படிக்க வைப்பதில் அக்கறை காட்ட வேண்டும். வதந்திகளை நம்பாதீர்கள். வதந்திகளை நம்புவீர்களானால் நிம்மதியாக இருக்க முடியாது. வதந்தியை நம்புவதற்கு முன் அது உண்மைதானா என்று தெரிந்து கொள்ள வேண்டும். எதையும் நாம் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் வதந்தியை நாம் தாங்கிக் கொள்ள முடியும். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. என்ன ஆதாரம் என்று கேட்கவேண்டும்.''

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எச்.ஜே. ராமச்சந்திரன், இ.ஆ.ப., நன்றி கூறினார்.

விழாவினையொட்டி, பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த தனிப்பந்தலில் மாண்புமிகு முதல்வர், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த முதியோருடனும் மூதாட்டி ஒருவருடனும் அமர்ந்து பொது விருந்தில் உணவு அருந்தினார்.

சாதி, மத பேதமின்றி, சமத்துவ சமுதாயம் அமைந்திடும் வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பொதுவிருந்து சிறப்பு நிகழ்ச்சி மக்களின் மனத்திலே ஆழப் பதிந்து விட்டது என்றால் அது மிகையல்ல.

# தருமபுரியில் பாரதி நூற்றாண்டு விழா!

—நிகழ்ச்சித்தொகுப்பு:
**தமிழ்ப்பித்தன்**

கடையெழு வள்ளல்களில் ஒருவராக விளங்கிய அதியமான் ஆட்சிக்கொலுவிருந்த தகடூரான இன்றைய தருமபுரி, ஆகஸ்ட் 8ஆம் நாளன்று எழுச்சியுடன் காட்சி அளித்தது. திரும்பும் திசையெல்லாம் தோரணங்கள், தோரண வாயில்கள், ஊரே[:]துக் கோலம் பூண்டிருந்தது. பாட்டுப் புலவன் பாரதியின் நூற்றாண்டு விழாதான் அந்த இனிய சூழ் நிலைக்குக் காரணம்.

ஆண்டு முழுதும் பாரதியார் பிறந்தநாள் கொண்டாடப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க மாவட்டத் தலைநகரில் நடைபெறும் விழா வரிசையில் தருமபுரி 6வது இடத்தைப் பெறுகிறது.



காலை 10 மணியளவில் மங்கல இசையான நாயன இசையுடன் விழா துவக்கம் ஆகியது. பின்னர் பள்ளி மாணவ, மாணவியரின் இசை, நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பாரதியாரின் புகைப்படங்கள்; அவர் எழுதிய நூல்கள்-நண்பர்களுக்கு அவர் எழுதிய கடிதங்கள், நண்பர்கள் அவருக்கு எழுதிய கடிதங்கள் ஆகியவை கொண்ட கண்காட்சியை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவுக்கு வந்திருந்தோரை வரவேற்ற 'மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாக் குழுத் தனி அலுவலர்' திரு. சி. என். கிருஷ்ண பாரதி தமது உரையில் குறிப்பிட்டார்:

''பாரதியார் சிறந்த தத்துவங்களை நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். அவற்றில் ஒன்று 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு' என்பதாகும். அதனை மீண்டும் மீண்டும் நினைவுறுத்துவதற்காகத்தான் அரசு இது போன்ற விழாக்களை நடத்தி வருகிறது''

அடுத்து, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தலைமையில், 'பாரதி கண்ட புதிய சமுதாயம்' என்னும் பொருளில் கவியரங்கம் நடைபெற்றது.

''நெருப்புக் காட்டின் குறிஞ்சிப்
பூஇவர்
கணுவில்லாத கவிதைக்
கரும்புகளை
உணர்வு நிலத்தில் ஊன்றிக்
களித்தவர்
அனிச்சப்பூவினால் அணுகுண்டு
செய்தவர்
பாரதி பிடித்த பேனா முனையால்
பீரங்கிக்குச் சனியன்பிடித்தது''

என்று கவியரங்கத் தலைவர், வார்த்தைத் தோரணங்களால் பாரதியை அருச்சித்தபோது அரங்கம் ஆரவாரம் செய்து ஆதரித்தது.

'சாதிக் கொடுமைகள் வேண்டாம்' என்னும் தலைப்பில், கவிஞர் பழனிபாரதி, 'பாரதநாடு பார்க்கெலாம் திலகம்' என்னும் தலைப்பில் டாக்டர் இராசன், 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்னும் தலைப்பில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கோ. சமரசம், 'ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்' என்னும் தலைப்பில் நாமக்கல் நாதன், 'காற்று வெளியிடைக் கண்ணம்மா' என்னும் தலைப்பில் புலவர் கணேசன், 'பெண்விடுதலை வேண்டும்' என்ற தலைப்பில் பேராசிரியை சிவகாமசுந்தரி, 'சாதிக் கொடுமைகள் வேண்டாம்' என்னும் தலைப்பில் தஞ்சை மணிமாறன் கவிதை பாடினர்.

அடுத்து, திரு வலம்புரி ஜான் அவர்களை நடுவராகக் கொண்டு 'பாரதி காண விரும்பிய அரசியல், சமுதாய மாறுதலுக்காக உழைக்காத மக்கள் குற்றம் உடையவர்களே' என்னும் பொருளில் வழக்காடு மன்றம் நடைபெற்றது.

நடுவர் தமது முன்னுரையில் குறிப்பிட்டதாவது:

'கவிஞன் எழுதும் கவிதை மனிதனைத் தொட்டவேண்டும், தொட்ட மனிதனை அது தூக்க வேண்டும்; அதுதான் கவிதை.

''அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ். இந்தியாவைக் கண்டுபிடித்தவன் பாரதி. சொப்பன உலகின் சுகாதார அதிகாரி அவன். மின்னலை விழுங்கி மின்சாரத்தைக் கொப்பளித்த கவிஞன் அவன். ஒரு நீல நெருப்பின் நிமிர்ந்த வரலாறுதான் பாரதி. அவன் அகல் விளக்காக இருந்து, பின்னர் நெருப்பாக மாறி, தீபமாக மலர்ந்து, வேள்வித்தீயாக உருவானான்.

''அதிகாரம் கைமாறுவதல்ல சுதந்தரம்; அது மக்களுக்கு ஏறுவதுதான் சுதந்தரம். இதைத்தான் பாரதி குறிப்பிட்டான்''

வழக்கைத் தொடுத்த பேராசிரியர் செகநாதன் குறிப்பிட்டார்:

''பாரதி, சமுதாய ரீதியாக, அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக சில மாற்றங்களை வலியுறுத்திச் சென்றிருக்கிறார். அரசியல் சுதந்தரம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். பெண்ணடிமை தீரவேண்டும் என்றெல்லாம் சொல்லிச் சென்றிருக்கிறார். அவற்றை நடைமுறைப் படுத்தாத மக்கள் குற்றவாளிகளே.

''அவரது நெறியை - வெற்றி பெறச் செய்வதற்கு - பாடுபடாத மக்கள் குற்றவாளிகள்தான்.''

எதிர்வழக்காடிய பேராசிரியர் இரா. செல்வ கணபதி குறிப்பிட்டார்:

''பல நேரங்களில் அவர்கவிதை பாடும்போது அவருக்குச் சில ஆசைகள் பிறந்தன. அவற்றை அவர் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லிய கொள்கைகளை-நெறிமுறைகளை-நடைமுறைப்படுத்த வழிவகையை அவர் காட்டவில்லை-மொழிப் பிரச்சினையில் மாற்றம் பெறுவதற்கு அவர் வழிவகுத்துத் தந்திருக்கிறார். ஆனால் சமுதாய, அரசியல் மாற்றங்களை மக்கள் பின்பற்றுவதற்கு அவர் வழிவகுத்துத் தரவில்லை''

இறுதியாக நடுவர் தீர்ப்பு வழங்கினார். அதன் விவரம் வருமாறு:

''கவிஞன் அரசாங்கம் நடத்தவில்லை; அவன் எக்ஸ்ரே தான் எடுத்துக் காண்பிக்க முடியும். அவன் மருந்து தரமுடியாது. வழிமுறைகளைச் சொல்லக் கவிஞனால் முடியாது.

''அவன் தான் சொல்லியபடி வாழ்ந்து காட்டினான். மனிதாபிமானத்துடன் வாழ்ந்து காட்டினான். ஆனால் அவன் சொல்லிச் சென்ற தத்துவங்களுக்காக உழைக்காதது மக்களின் குற்றமே என்று தீர்ப்பு வழங்குகிறேன். இந்தத் தீர்ப்பை எதிர்த்து நீங்கள் மேல்முறையீட்டுக்குச்செல்ல முடியாது. ஏனெனில் இது உச்ச நீதிமன்றம்.''

நடுவரின் தீர்ப்பை மக்கள் கர ஒலி எழுப்பி ஆதரித்தார்கள்.



பிற்பகல், 4 மணி அளவில் அலங்கார ஊர்திகள், சாரணர், பள்ளி-கல்லூரி மாணவ-மாணவியர், தேசிய மாணவர் படையினர், காவல் துறை இசைக்குழுவினர், மலைவாழ் மக்கள் ஆகியோர் பங்கு பெற்ற ஊர்வலம் பழைய தருமபுரி இராமக்காள் ஏரியிலிருந்து தொடங்கி நகரின் பல்வேறு முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று அதியமான் அரசு மேல்நிலைப்பள்ளித் திடலை அடைந்தது.

சிலம்புச் சண்டைக் குழுவினர், மிகச் சிறப்பாகத் தங்களது சண்டைப் பயிற்சியைச் செய்து காண்பித்தனர். மாணவியர் ஏராளமான அளவில் ஊர்வலத்தில் கலந்து கொண்டதும் சிறப்புமிக்க செய்தியாகும்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, மேலவைத் துணைத்தலைவர்புலவர்புலமைப் பித்தன், மாவட்ட ஆட்சியாளர் திரு எம்.எஸ். சீனிவாசன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர், ஒரு மேடையில் அமர்ந்தவாறு ஊர்வலக் காட்சியைப் பார்வையிட்டனர்.

பின்னர், திரு பெ. சு. மணி அவர்கள் தலைமையில் மாணவ, மாணவியர் பங்கேற்ற இளைய பாரதம் நிகழ்ச்சி நடைபெற்றது. திரு. பெ.சு. மணி தமது உரையில் குறிப்பிட்டார்:

''பாரதி மகாகவி என்று ஒப்புக் கொள்வதற்கு, படித்த வர்க்கம மறுத்தது. அதை உணர்ந்த பாரதிதாசன், பாடல் எழுதி ''பாரதி உலக மகாகவி'' என்பதை மெய்ப்பித்தார். பாரதியார், தமது சமூக சீர்திருத்தக் கொள்கைகளுக்கு, பாரதிதாசன் அவர்களை வாரிசாக விட்டுச் சென்றார்.''

'விடுதலை, விடுதலை, விடுதலை' என்னும் தலைப்பில் உரையாற்றிய திரு. ஸ்டாலின் சுந்தரராஜ் குறிப்பிட்டார்:

''வெள்ளையரை எதிர்த்து வெடிக்குரல் எழுப்பி, விடுதலை கேட்டவன் பாரதி. அவனது பாடல் பலரை ஈர்த்து, விடுதலைப் போருக்கு அழைத்து வந்தது.''

அடுத்து, 'காணி நிலம் வேண்டும்' என்ற தலைப்பில் பேசிய செல்வி. விசாலாட்சி குறிப்பிட்டார்:

''காணி நிலம் தனக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பராசக்தியிடம் காணிநிலம் வேண்டும் என்று கேட்டார் பாரதி.''

அடுத்து, 'ஒளிபடைத்த கண்ணினாய் வாவா' என்னும் தலைப்பில் உரையாற்றிய செல்வன்இரமேஷ் குறிப்பிட்டதாவது:

''இளைய பாரதத்திற்கு, 'ஒளிபடைத்த கண்ணினாய் வா' என்று வீர வரவேற்புக்கூறினார் பாரதி. அவர்களுக்குக் கடமையை உணர்த்தினார்''

அடுத்து, 'நல்லதோர் வீணை செய்தே' என்னும் தலைப்பில் உரையாற்றிய செல்வி கோ. மாதவி தெரிவித்ததாவது;

''அவர் காண விரும்பிய 'நல்லதோர் வீணை' மக்கள் தான்! அவர் கண்ட கனவை நனவாக மாற்ற நாம் ஒற்றுமையுடன்; வலிமையுடன் பாடுபடவேண்டும்.''

அடுத்து 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்னும் தலைப்பில் உரையாற்றிய செல்வி சரசுவதி கூறியதாவது:

''சாதிகளை ஒழிப்பதற்காக அரும்பாடு பட்டவர் பாரதி. சாதிகள் இல்லை என்று முழங்கிய அவரது கனவை நாம் நனவாக்க வேண்டும்''

பின்னர், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நிறைவுவிழா நடைபெற்றது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''எத்தனையோ புலவர்கள் எழுதுகிறார்கள். சிந்திக்கிறார்கள். எழுதியபடி செய்தார்களா? இல்லை! பாரதி எழுதியபடி செய்து காட்டினார். அதனால் தான் சிலர் அவனை தெய்வகவி என்று சொல்லுகின்றனர்.''

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எம்.எஸ். சீனிவாசன், இ.ஆ.ப., தமது முன்னிலை உரையில் குறிப்பிட்டார்:

''தருமபுரியில் எப்போதும் தமிழ் மழைபொழிந்துகொண்டேயிருக்கும். இங்கு தமிழ்த்தாய் வாழ்த்து என்று சொன்னார்கள். ஒரு மகாகவியின் விழாவை நாம் கொண்டாடுவதற்காக தமிழ்த்தாயே நம்மை வாழ்த்துகிறாள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.''

பின்னர் உரையாற்றிய தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.அரங்கநாதன் குறிப்பிட்டார்:

''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி முழங்கினானே, அந்தக் கருத்தின் எதிரொலியாகத்தான் புரட்சித் தலைவர் இன்று எல்லோருக்கும் சோறு கொடுக்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியுள்ளார்.''

அடுத்து, காவேரிப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு டாக்டர் கோ.சமரசம் தமது உரையில் தெரிவித்தார்:

''பாரதி என்னென்ன கற்பனை செய்தானோ அதை எல்லாம் நிறைவேற்ற அரும்பாடுபடுகிறார் புரட்சித் தலைவர், தமிழக முதல்வர்.''

அடுத்து உரையாற்றிய கிருட்டிணகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு கே. ஆர். சின்னராசு தெரிவித்தார்:

''இன்றைக்கு, கவிஞர்கள் எதையும் எழுதலாம், பாடலாம். ஆனால் பாரதி எழுதிய காலம், ஆங்கிலேயர் ஆண்ட காலம் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.''

அடுத்து, பாரதி விழா தொடர்பான கட்டுரைப்போட்டி, இசைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவியருக்குப் பரிசுகளை வழங்கினார் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள்.

பின்னர் மகாகவி பாரதியாரின் உருவப்படத்தை திரு. வலம்புரிஜான் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''காகிதத்தைப் பார்த்ததும் கழுதைக்குத் தின்னத் தோன்றுகிறது; கவிஞனுக்கு கவிதை எழுதத் தோன்றுகிறது. பாரதியார் கவிதைக்கும், வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாதிருந்தது. இடைவெளி இல்லாத இதிகாச எழுத்து அவன் எழுத்து. என்றைக்கும் வாழ்கின்ற எழுத்தை அவன் எழுதினான். எழுதியபடி வாழ்ந்தான். அதுதான் பாரதி. அதனால்தான் இந்த நூற்றாண்டு விழா.''

அடுத்து, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள், தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வெண்ணாம்பட்டி பள்ளிக் கட்டடத்திற்கு பாரதி பெயர் பொறிக்கப்பட்ட கல்லலை திறந்து வைத்து நிறைவுப் பேருரை ஆற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்;

'எல்லோரையும் போலத்தான் பாரதியும் தமிழைக் கருதினான் என்று நாம் எண்ணக்கூடாது. எல்லாருக்கும் தமிழ் உதவவேண்டும் என்று கருதித்தான் அவன் எழுதினான்'.

நிறைவு விழாத் தலைவர் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது தலைமை உரையில்,



''பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிடித்தமான கவிஞர்களில் பாரதியாரும் ஒருவர். பாரதியாரை நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் பிடித்துக் கொள்ளவில்லை - பயன்படுத்தவில்லை. 1946ஆம் ஆண்டிலேயே பேரறிஞர் அண்ணா அவர்கள் 'Peoples poet' என்று ஆங்கில உரையை வானொலியில் நிகழ்த்தினார்கள். 40 வருடங்களுக்கு முன்பே நாங்கள் பாரதியின் பெருமை குறித்துப் பேசியிருக்கிறோம். அந்தப் புத்தகத்தைத் தமிழக அரசு அண்மையில் அரசின் சார்பில் வெளியிட்டு விநியோகித்துள்ளது.

''அந்தப் புத்தகத்திலே, 'மக்கள் கவிஞனுக்கு ஒரு தனி உணர்வு மட்டும் இருந்து பயனில்லை; மக்களைத் திருத்தும் பொறுப்பும் அவனுக்கு உண்டு' என்று அண்ணா குறிப்பிடுகிறார். இந்தப் பணி முடியுமா, எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட முடியுமா என்று வினா எழுப்புகிறார் அண்ணா. அதற்கு விடையாகத் தான் புரட்சித்தலைவர் அவர்கள், ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்கள்'' என்றார்.

அனைவரின் கருத்து மழைகளுக்குப் பின்னர், வெண்ணிற ஆடை நிர்மலா குழுவினரின் 'பாரதி கண்ணம்மா' என்ற நாட்டிய நாடக நிகழ்ச்சி நடைபெற்றது. முழுக்க முழுக்க பாரதியின் பாடல்களைக் கொண்ட இந்நிகழ்ச்சி, பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது.

தருமபுரியில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சி, முத்திரை பதித்த நிகழ்ச்சியாகத் திகழ்ந்தது என்க் குறிப்பிடுவது சாலப்பொருந்தும்..



# புதுமை படைத்த புனிதர்

— சௌந்தரா கைலாசம்



பேருலகை வாழ்விக்கும் தியாக ராஜப்
பெருமானின் திருவாரூர்த் தலத்தில் வாழ்ந்த
சீரியதோர் குடிப்பிறந்த கார ணத்தால்
தியாகத்தின் உருவாகிப் புகழ்வி ரிக்கும்
சூரியனாய்த் திகழ்ந்திருந்த திரு.வி.க. வின்
தொண்டுமனம் கண்டுலகம் வியந்து போற்றி
சூரியநல் அறிவருளும் தமிழின் ஆற்றில்
கும்மாளம் இட்டுநிதம் குளித்து நிற்கும்!

இனிமைச் சுவையா? நடைமிடுக்கா?
எளிமைச் சிறப்பா? உறுதெளிவா?
கனிவைக் கொடுக்கும் பண்பாடா?
கருத்தின் உயர்வா? கவிமரபா?
மனிதப் பிறப்பின் பெரும்பயனா?
வழுத்தும் அனைத்தும் கலந்துதந்து
புனிதம் படைக்கும் தமிழினிலோர்
புதுமை படைத்தார் திரு.வி.க.!

வாழ்வில் இணைந்த தூய்மையெலாம்
வாக்கில் இணைத்துப் பாடியவர்!
தாழ்வு படுத்தும் கேடுகளைச்
சகியா தறப்போ ராடியவர்!
பாழில் புகுத்தும் அடிமைநிலை
பாட்டில் வெறுத்துச் சாடியவர்!
ஏழை வாழ்வில் ஒளிமலர
ஏற்ற வழியைத் தேடியவர்!









சாதி எனும்பாகு பாடு—நமைச
சார்ந்து தினம் கெடுக்கும் கேடு
நீதி நிறுத்தும்துணி வோடு—நேர்
நின்றே அதனுடன்போ ராடு
அன்புக் கனிகொடுக்கும் வித்து—நம்
அன்னைக் குலம்உயிரின் சொத்து!
தென்பை அளிக்குமொரு சத்து—எனத்
தெளிய உரைத்ததமிழ் முத்து!

பெண்ணின் பெருமையினைப் பாடி—நெறி
பிறழும் மதியினரைச் சாடி
எண்ணம் செயலில்நலம் நாடி—அவர்
ஏற்ற பணிகள் பலகோடி!
போற்றியநற் குணங்களுக்கோர் தஞ்சம்—நல்ல
புண்ணியர் திரு.வி.க வின் நெஞ்சம்
வேற்றுமையாம் தீமைகட்கோர் நஞ்சம்—அன்பு,
வீரம் இவை வீற்றிருக்கும் மஞ்சம்!

பொதுமையிலே வள்ளல்ராம லிங்கம்—நல்ல
புரட்சியிலே தேசபந்துச் சிங்கம்
புதுமையிலே பாரதியின் அங்கம்—எங்கள்
புனிதர்தமிழ்த் தென்றல் பசுந்தங்கம்!
பக்தியிலே முந்தையறம் ஆழ்வார்—நல்ல
பண்பினில்பா ருள்ளவரை வாழ்வார்!
உத்தமநல் தொண்டினிலே ஆழ்வார்—எங்கள்
உள்ளமெனும் பேரரசை ஆள்வார்!



தியோசாபிகல்
சங்க அறிஞர்
வாடியா

உழைப்பாளித் தோழர்களைக் கூட்டி—அவர்
உரிமைகள் உணரும் உணர்வூட்டி
இழைக்கும் கொடுமைகளை ஓட்டி—வழி
இதுஎன அழைக்கும்வழி காட்டி
மொழிஇன வெறுப்பெனும் ஓர் கேடு—இங்கு
முளைவிட விடாதுறுதி யோடு
வழி உணரக் கூறியபண் பாடு—கொண்ட
மணவழக னார்க்கினியார் ஈடு?



காந்தியத்தில் ஊறியதோர் உள்ளம்—அது
கருணையெனும் தூய அன்பு வெள்ளம்
சாந்திபெறப் பாயுமொரு பள்ளம்—நவ
சக்திஅவர் சொல்லினிலே துள்ளும்!
உரைநடையிலே புதுமை இருக்கும்—புவி
ஓங்கிடவே உண்மையொளி பெருக்கும்!
அருமைபெறு பாடல்களின் மிடுக்கும்—நமக்கு
அடிமைநிலை போய்விடக் கைகொடுக்கும்!

தொண்டினிலும் சிறந்ததுவே றுண்டா? வாழ்க்கை
தொண்டுக்கே உள்ளது! நல்தொண்டே செல்வம்!
கொண்டபெரும் சமயமும்அத் தொண்டே அன்றோ?
குவலயமே எதிர்த்தாலும் குலைய மாட்டேன்
தண்டமிழ்என் உயிர்மூச்சு! தமிழ்ப்பண்பாடு
தழைக்கநிதம் உழைப்பதுதான் இறைவன் ஆணை
கண்டிடுக! எனமுழங்கும் திரு.வி.க.வின்
காற்சுவட்டில் செல்வதுநம் கடமை ஆகும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






தமிழரசு
காசு
திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — ஆவணி 31





# தமிழரசு

மலர்: 13 இதழ்: 6

16—9—1982

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆவணி 31




## பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் முதல் நகர்ப்புறங்களிலும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம்

### பயனடைவோர்

| | |
|---|---|
| 2 வயது முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகள் | 6,04,400 |
| 5 வயது முதல் 10 வயது வரையிலுள்ள மாணவ மாணவியர் | 2,78,600 |
| 5903 மையங்களில் பயனடைவோர் மொத்தம் | 8,83,000 |





## தன்னிகரில்லாத் திட்டங்கள்

**தன்னிறைவுத் திட்டம்:** தமிழகத்திலுள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களில் முதல் கட்டமாக 1980-81ல் 69 வட்டாரங்களிலும், இரண்டாவது கட்டமாக 1981-82ல் 150 வட்டாரங்களிலும், மூன்றாவது கட்டமாக 1982-83ல் 159 வட்டாரங்களிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. குடிநீர் வழங்கும் பணியைத் தமிழ்நாடு குடிநீர்வடிகால்வாரியமும், ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்டித் தரும் திட்டத்தைக் கூட்டுறவு சங்கப் பதிவாளர் (வீட்டு வசதி) அலுவலகமும், நிறைவேற்றி வருகின்றன

முதல் கட்டமாக வட்டாரங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட வேலை விவரங்களும் அவற்றிற்கான செலவு விவரங்களும் வருமாறு: குடிநீர் வழங்கல் ரூ. 1807 இலட்சம் செலவில், 2,300 வேலைகள்; இணைப்புச் சாலைகள் ரூ. 1239.70 இலட்சம் செலவில் 6,590.96 கிலோ மீட்டர் சிறு பாலங்கள்; ரூ. 350.86 இலட்சம் செலவில் 3,044 ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்கு மயானச் சாலைகள் அமைத்தல்; ரூ. 79.89 இலட்சம் செலவில் 927.71 கிலோ மீட்டர் சிறு பாசன மேம்பாடுகள்; ரூ. 68.67 இலட்சம் செலவில் 1,023 வேலைகள்; ஊரக மருந்தகங்கள் ரூ. 47.43 இலட்சம் செலவில் 82; தாய்-சேய் நல நிலையங்கள் ரூ. 118.95 இலட்சம் செலவில் 237; பள்ளிக் கட்டடங்கள் ரூ. 487.45 இலட்சம் செலவில் 949; ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 302.61 இலட்சம் செலவில் 10,116 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டமாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட வட்டாரங்களில் வேலை விபரங்களும் அவற்றிற்கான செலவு விவரங்களும் வருமாறு:- குடிநீர் வழங்குதல் ரூ.1891 இலட்சம் செலவில் 1958 வேலைகள்; இணைப்புச்சாலைகள் - ரூ. 2584.72 இலட்சம் செலவில் 11,454.65 கிலோ மீட்டர்; சிறுபாலங்கள்-ரூ. 1423.98 இலட்சம் செலவில் 12 200: ஆதிதிராவிடர் குடி

யிருப்புகளுக்கு 'மயானச்சாலைகள் அமைத்தல்- ரூ.44.77 இலட்சம் செலவில் 858.60 கிலோ மீட்டர்; சிறுபாசன மேம்பாடுகள் ரூ. 51.74 இலட்சம் செலவில் 566 வேலைகள்; ஊரக மருந்தகங்கள் ரூ.108.17 இலட்சம் செலவில் 161; தாய்-சேய் நல நிலையங்கள் ரூ. 279.50 இலட்சம் செலவில் 429; பள்ளிக் கட்டடங்கள் ரூ. 992.34 இலட்சம் செலவில் 1,744; ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் ரூ. 518.19 இலட்சம் செலவில் 17,273.

1982ஆம் ஆண்டு அக்டோபருக்கு முன்னதாக முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படும் வேலைகள் பற்றி விவரங்கள் வருமாறு; இணைப்புச் சாலைகள்-461.35 கிலோ மீட்டர்; சிறு பாலங்கள் - 243 ஆதி திராவிடர் குடியிருப்புக்களுக்கு மயானச் சாலைகள் அமைத்தல் -6 கிலோ மீட்டர்; சிறுபாசன மேம்பாடு-6 வேலைகள்; ஊரக மருந்தகங்கள்-11 தாய்-சேய் நல நிலையங்கள் 54; பள்ளிக் கட்டடங்கள் 83.

மூன்றாவது கட்ட வட்டாரங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட வேலை விவரங்களும், அவற்றிற்கான செலவு மதிப்பீடுகளும் வருமாறு;

இணைப்புச் சாலைகளுக்குக் கப்பிப் போடுதல் - ரூ1964.91 இலட்சம் செலவில் 5,495.06 கிலோ மீட்டர்; சிறு பாலங்கள் ரூ. 1,748.74 இலட்சம் செலவில் 13,495; ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயான சாலைகள் அமைத்தல் ரூ. 146.90 இலட்சம் செலவில் 1,279.40 கிலோ மீட்டர்; சிறுபாசன மேம்பாடு- ரூ.158.62 இலட்சம் செலவில் 1,198 வேலைகள்; ஊரக மருந்தகங்கள் ரூ. 139.75 இலட்சம் செலவில் 215, தாய்-சேய் நல நிலையங்கள் ரூ. 280.65 இலட்சம் செலவில் 463; பள்ளிக் கட்டடங்கள் ரூ. 1,466.24 இலட்சம் செலவில் 2,339; ஆதி திராவிடருக்கு வீடுகள் ரூ.636 இலட்சம் செலவில் 15,900. இந்தப் பணிகளில் ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்கு மயானப் பாதைகள் அமைத்தலும், சிறுபாசன மேம்பாடு வேலைகளும் தொழிலாளர்களை அதிக அளவில் ஈடுபடுத்தக் கூடியவையாக இருப்பதால், இவை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன.

# ஓங்கிடும் ஊர்ப்புறங்கள்

கிராமப் புறங்களில் வறுமையின் ஆணிவேரையே கல்லி எறியத்தக்க அளவில் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டமே. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகும்.

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள் முதலிய பல்வேறு பிரிவுகளில் மிக ஏழைகளாக உள்ள மக்களை—முக்கியமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களை ஈடேற்றும் இணையற்ற திட்டம் இது. இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டுவருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். அதற்கான வேலை வாய்ப்புக்கு வழிவகை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆண்டுக்கு 600 குடும்பங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு உதவி அளிக்கப்படும்.

இவ்வாறு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் 3,000 குடும்பங்கள் பலனடையும். ஆண்டு வருமானம் ரூ. 3,000க்கு குறைவாகவுள்ள குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களாகக் கருதப்படும். உதவி பெறத் தெரிந்தெடுக்கப்படும் குடும்பங்களில் 40 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களைச் சார்ந்தவையாக இருக்க வேண்டும். அத்துடன் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு ஆண்டும் 200 பெண்களாவது இந்தத்திட்டத்தின் கீழ் உதவித்தொகைபெற தெரிந்தெடுக்கப்பட வேண்டும். மானிய உதவியைப் பொருத்த வரை சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும், மிகச் சிறு விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள், கிராம கைவினைஞர்களுக்கு33 1/3 சதவிகிதமும், ஆதிதிராவிடர்களுக்கு 50 சதவிகிதமும் மானியமாக வழங்கப்படும். இந்த மான்ய உதவி ஆதி திராவிடர் அல்லாதவர்களுக்கு வறட்சி அல்லாத பகுதிகளில் ரூ. 3,000 வரையும், வறட்சிப் பகுதிகளில் ரூ. 4000 வரையும் ஆதி திராவிடர்களைப் பொருத்த வரையில் ரூ. 5,000 வரையும் ஒரு குடும்பத்திற்கு அனுமதிக்கப்படும்.

இதற்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட உதவித் திட்டங்களின்படி குடும்பத்தில் ஒருவரே பயன்பெற்று வந்தார். ஆனால் இப்பொழுது நிறைவேற்றப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப்படி ஒரு குடும்பத்தில் இரண்டு மூன்று அங்கத்தினர்களுக்கு உதவி கிடைக்கிறது. உதாரணமாக ஒரு குடும்பத்தலைவருக்கு மாட்டு வண்டி வாங்கக் கடன் உதவி கிடைக்கிறது. அவருடைய பெண்ணுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தையல் பயிற்சியும் தையல் இயந்திரமும் கிடைக்கின்றன. அவருடைய மனைவிக்குக் கறவைமாடு வாங்கக் கடன் வசதி கிடைக்கிறது. மொத்தத்தில் அந்தக்குடும்பம் முழுவதுமாக வாழ்க்கைத் தரத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்து மேலே உயர்த்தப்படுகிறது.

இத்திட்டம் 1980 அக்டோபர் 2 முதல் தமிழ்நாட்டில் எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டது. 1981-82ல் ரூ.2,256 இலட்சம் செலவு செய்ய வேண்டுமென்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், குறியளவை மிஞ்சி 2,810.64 இலட்சம் செலவிடப்பட்டது. இதன் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 5,50,556. இவர்களில் 25 சதவிகிதம் அதாவது 1,36,638 பேர் ஆதிதிராவிடர் 21 சதவிகிதம் அதாவது 1,13,517 பேர் பெண்கள். 1981-82ல் அளிக்கப்பட்ட கடன் வசதி மொத்தம் ரூ. 4,736.44 இலட்சம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1982-83 ஆண்டில் ஒவ்வொரு வட்டாரத்திலும் ரூ. 8 இலட்சம் செலவிட மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது இதன்படி மாநிலத்தில் 376 வட்டாரங்களில் ரூ. 3,008 இலட்சம் மானியமாக வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1982 ஆகஸ்ட் வரை ரூ. 625.12 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பலனடைந்த குடும்பங்கள் 64,076. இதில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் குடும்பங்கள் 14,111. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 155.07 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 9,019 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.





# எல்லார்க்கும் வேலை வாய்ப்பு

மு.முத்துக்காளத்தி

எல்லோருக்கும் வேலை அளிக்கவும் உழைப்போர் உண்டு களித்திடவுமே "உழைப்புக்கு உணவுத் திட்டம்" 1979 ஏப்ரலில் கொண்டுவரப்பட்டது. பின்னர் இது மத்திய அரசின் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டமாக 1980 அக்டோபரில் மாற்றப்பட்டது.

கிராமப் புறங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அதிகப்படி வேலை வாய்ப்பை உருவாக்குதல், கிராம மக்களின் வருமானத்தைப் பெருக்கக்கூடிய சமூக சொத்துக்களை உருவாக்குதல் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் சத்துணவுத் தரத்தையும் மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்காகக் கொண்டுவரப்பட்டது தான் இத்திட்டம்.

தமிழ் நாட்டிலுள்ள 378 வட்டாரங்கள் அனைத்திலும் இது நிறைவேற்றப்பட்டு வருகிறது. சிறுபாசன வேலைகள், வெள்ளத் தடுப்பு-வடிகால்வேலைகள், மண் வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு ,சாலை போடுதல், ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களின் நலனுக்கான தனித்திட்டங்கள், பள்ளிகள் ஊராட்சி மன்றம், சமுதாய நிலையம், ஆசிரியைக் குடியிருப்பு, தாய்-சேய் நல நிலையம்,போரடிக்கும் களம் போன்றவற்றை ஏற்படுத்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் வேலைபார்க்கும் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நாளொன்றுக்கு ஒரு கிலோ அரிசியும் ரூ. 5•25 ரொக்கமும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் மாநிலத்தில் விவசாயத் தொழிலாளர்க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்சக் கூலியான ரூ. 7 ஒவ்வொருவருக்கும் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழகமெங்கும் 1982 ஜூன் இறுதி வரையில் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த வேலைகளின் எண்ணிக்கை 1,78,223 ஆகும். முடிக்கப்பட்ட வேலைகள் 1,15,638 .இதற்குப் பயன்படுத்தப்பட்ட உணவு தானியம் 1,42,296 மெட்ரிக் டன். கூலியாகக் கொடுக்கப்பட்ட தொகை (ரொக்கம்) ரூ. 3,853.21 இலட்சம். இதன்மூலம் செய்துமுடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு ரூ. 5,759.30 இலட்சம். உருவாக்கப்பட்ட மனித வேலைநாட்கள் 825.66 இலட்சம் நாட்கள்.

தமிழக அரசு 1980-81ல் 2000 பள்ளிக் கட்டடங்கள் கட்டும் மாபெரும் பணியை மேற்கொண்டது. இதில் 1,230 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மற்றவை முடிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு சமையல் கூடத்தோடு சேர்ந்த 2,500 சமுதாய நிலையங்களைக் கட்டி முடிக்கும் மகத்தான திட்டத்தை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பிறமலைக் கள்ளர்க்குப் பெருமை



இந்தியாவிலேயே கள்ளர் சீரமைப்புப் பிரிவு என்ற ஒன்று அரசின் மூலம் மதுரை மாவட்டம் ஒன்றில் மட்டுமே நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

பிறமலைக் கள்ளர்கள் குற்றப் பரம்பரையினர் எனக் கருதப்பட்ட காலம் மாறி, எல்லாவகையிலும் அவர்கள் உயர்வு பெற்றிடக் கள்ளர் சீரமைப்புப் பிரிவு பெரிதும் உதவிவருகிறது.

மதுரை மாவட்ட மக்கள் தொகையில் 6ல் ஒருபங்கு பிறமலைக் கள்ளர்கள் பிரிவினராவர். அதாவது, இந்த மாவட்டத்தில் மட்டும் உள்ள அவர்களது எண்ணிக்கை 1981 கணக்கெடுப்பின் படி 5,30,000 ஆகும்.

மாவட்டம் முழுவதும் பரவியுள்ள அவர்களது வளர்ச்சிப்பணிகளைச் சரிவர கவனிப்பதற்கென -மொத்தமுள்ள 13 வட்டங்களும் பெரியகுளம், உசிலம் பட்டி, உத்தமபாளையம், சோழவந்தான், திண்டுக்கல், செக்கான் ஊரணி என ஆறு ரேஞ்சுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பிறமலைக் கள்ளர். வீட்டுப் பிள்ளைகள் கல்விக்கெனக் கள்ளர் சீரமைப்புப் பிரிவில் மதுரை மாவட்டத்தில் 206 ஆரம்பப் பாடசாலைகளும், 32 நடுநிலைப் பள்ளிகளும், 8 உயர்நிலைப் பள்ளிகளும், 2 மேல்நிலைப்பள்ளிகளும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

அத்தனைப் பள்ளிகளுக்காகவும் உள்ள ஆசிரியர்ப் பெருமக்கள் 1460 பேர்கள் ஆவர்.

மாணவர்களுக்கென முன்பிருந்த 29 விடுதிகளோடு, 1982-83ல், வி. கள்ளப்பட்டி, கருநாக முத்தம்பட்டி ஆகிய இரு ஊர்களில் 2 விடுதிகள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

கள்ளர் சீரமைப்புப் பிரிவின் நிர்வாகத்தின் கீழுள்ளவற்றில் 38 பள்ளிகளில் தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய சத்துணவுத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. 5 முதல் 9 வயது வரையுள்ள 30,960 பிள்ளைகளும், 10 முதல் 14 வயது வரையானவர்கள் 2,473 பேர்களும் சத்துணவுத் திட்டத்தாலே பயன் பெற்று வருகின்றனர்.

பிறமலைக்கள்ளர் வகுப்பு மாணாக்கர்களில் சென்ற ஆண்டில் 58 சதவீத மாணவர்களும், 70 சதவீத மாணவிகளும் நல்ல முறையில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தகுதியுள்ளவர்களுக்கெல்லாம் படிப்புதவிப் பணம் உண்டு

மதுரை மாவட்டம் தேனியிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் வாழும் பருத்தி விவசாயிகளின் நீண்டநாள் கனவை நனவாக்கும் வகையில் ரூ. 7 கோடியே 6 இலட்சம் செலவில் தேனி கண்டமனூர் பிரிவில் தேனி கூட்டுறவு நூற்பாலை உருவாகி வருகிறது.

# தேனி கூட்டுறவு நூற்பாலை



தேனி பருத்திக்கு என்று ஒரு சிறப்பு உண்டு. அதனுடைய தரத்தினாலே அதற்கு இத்தகைய மதிப்பு. வேறு இடங்களில் விளையும் பருத்திகளை வாங்கிவந்து 'தேனி பருத்தி' என்று விற்பனை செய்வார்களாம்.

அந்த அளவுக்குத் தேனி பருத்தி தனிச் சிறப்புடையது.

தேனி வட்டாரத்தில் பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நீண்டநாளாக ஒரு மனக்குறை உண்டு. தரம் மிகுந்த பருத்தி உற்பத்தியாகும். இந்தப்பகுதியில் ஒரு நூற்பாலை கூட கிடையாதே, இந்தப் பருத்தியை இங்கே நூற்பாலை இருந்தால் நேரடியாகவே விற்பனை செய்யலாமே என்பதே அவர்களின் மனக்குறை.

"முன்பு இங்கு வர இருந்த கூட்டுறவு நூற்பாலை மேலூருக்குக் கொண்டு செல்லப் பட்டது. ஆனால், இப்பொழுது இங்கேயே கூட்டுறவு நூற்பாலை வந்துள்ளது எங்களது நீண்டநாள் கனவை நனவாக்குகிறது" என்று பருத்தி விவசாயிகள் சிலர் கூறினர்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் தமிழ்நாட்டில் ஐந்து புதிய நூற்பாலைகள் ஏற்படவிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் தேனி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி, திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரம், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை ஆகிய இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

தமிழ்நாடு முழுவதும் இப்பொழுது 16 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. தேனியில் அமைக்கப்படும் நூற்பாலை பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு நூற்பாலையாகும். 25,000 கதிர்கள் கொண்ட இந்த நூற்பாலையை அமைக்க மொத்தம் ரூ. 7 கோடியே 6 இலட்சம் செலவாகும்.

தேனியை அடுத்துள்ள கண்டமனூர் பிரிவில் 42 ஏக்கர் பரப்பில் இந்த நூற்பாலையை அமைக்கும் பணி விரைந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இதனால் இப்பகுதியில் 600 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

இந்தப் பகுதியில் உள்ள பருத்தி விவசாயிகளின் வாழ்வுக்கும் வளத்துக்கும் உத்தரவாதம் அளிக்கும் வகையில் இந்நூற்பாலை உருவாகி வருகிறது.

இந்த நூற்பாலையினை அமைக்க தமிழ்நாடு அரசு முதலீட்டுப் பங்குத்தொகையாக ரூ. 67.50 இலட்சம் வழங்கியுள்ளது.

இந்நூற்பாலையில் உறுப்பினர்களாகச் சேர பருத்தி விவசாயிகள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். வேறு எந்தக் கூட்டுறவு நூற்பாலையிலும் இப்படி தாங்களாகவே வந்து உறுப்பினராகும் காட்சியை இந்த அளவுக்கு கண்டிருக்க முடியாது என்கிறார், தேனி கூட்டுறவு நூற்பாலையின் நிருவாக இயக்குநர் திரு. கி. ராஜமாணிக்கம்.

நீண்டநாளைய பருத்தி விவசாயிகளின் கனவை நனவாக்கியதுடன், தேனி பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பை நல்கும் கூட்டுறவு நூற்பாலையினை உருவாக்கி வருவதை அந்தப் பகுதி மக்கள் நன்றியுடன் பாராட்டுகிறார்கள்.

—மாமூலன்

# சுருளியாறு புனல் மின் திட்டம்




தமிழ்நாடு அரசின் பதினெட்டாவது புனல்மின் நிலையமான சுருளியாறு புனல் மின்திட்டம் மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

மதுரையிலிருந்து சுமார் 150 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வண்ணாத்திப்பாறை என்னும் இடத்தில் பெரியாறு மின் நிலையத்துக்கு அருகில் சுருளியாறு புனல் மின்திட்டம் நிறுவப்பட்டிருக்கிறது.

கம்பம் பள்ளத்தாக்கிற்கும் பெரியாறு நீர்த்தேக்கத்திற்கும் இடையே அமைந்த பச்சைக்குமாச்சி மலைகளில் உற்பத்தியாகும் சுருளியாறு, மணலாறு, வென்னியாறு, எரவலங்கலாறு ஆகியவற்றின் புனல், வனப்பு மிக்கக் காடுகளும் தேயிலைத் தோட்டங்களும் சூழ்ந்த இயற்கையழகு மிக்க சூழலில் அடுத்தடுத்து கட்டப்பட்டுள்ள அணைகளில் தேக்கப்பட்டு, சுருளியாறு மின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப் படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான புனல் மின் நிலையங்கள் தென்மேற்குப் பருவ மழையினால் பயன்பெறுகின்றன. ஆனால், சுருளியாறு புனல் மின் திட்டம் வடகிழக்குப் பருவமழையினால் பயனடையும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மின் நிலையம் அணைக்கட்டுப் பகுதியைவிட 1028 மீட்டர் (Head) தாழ்வாக உள்ளது. ஆசியாவிலேயே இந்த மின் நிலையம்தான் இந்த அளவு நீரின் உயரத்தைப் பயன்படுத்துகிறது என்பது சுருளியாறு புனல் மின்திட்டத்தின் சிறப்பாகும்.

ஆண்டொன்றுக்குச் சுருளியாறு புனல் மின்திட்டம் 1140 இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும். இந்தத் திட்டத்தின் இறுதி மதிப்பீடு ரூ. 25.06 கோடிகளாகும்.

சுருளியாறு மின் திட்டத்தின் கீழ், நான்கு பெரிய அணைகளும் இரு திருப்பு அணைகளும் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றான ஹைவேவிஸ் அணையின் நடுப்பகுதி கற்களாலும், பிற்பகுதிகள் மண்ணாலும் அமைக்கப்படுகின்றன. ஏனைய அணைகளான மணலாறு, வென்



## தொழிலாளர்களே பங்குதாரர்களாகும் ஜக்கம்பட்டி விசைத்தறி மையம்

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டாரம் ஜக்கம்பட்டிக் கிராமத்தில் ரூ. 40 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுவரும் விசைத்தறி மையத்தில் (Powerloom Complex) வேலையில் சேரும் 200 தொழிலாளர்களே அதன் பங்குதாரர்களாக மாறுவார்கள். தமிழ்நாட்டில் முதன் முறையாக இப்படியொரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலைத் தெரிவித்த தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் திரு எம். இராமன், இந்த விசைத்தறி மையத்தில் 100 ஆதிதிராவிடர்களும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் 100 பிற்படுத்தப்பட்டவர்களும் பணிக்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள் என்று தெரிவித்தார்.

இவ்விசைத்தறி மையத்திற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூ. 10 இலட்சம் மான்யமாக வழங்கப்படும்.

பின்தங்கிய பகுதியில் இப்படியொரு விசைத்தறி மையம் உருவாக்கப்பட்டு வருவது அந்தப் பகுதி மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

---

ணியாறு, எரவங்கலாறு ஆகியவையும் திருப்பு அணைகளும் கற்களாலேயே கட்டப்பட்டுள்ளன. இந்த அணைகளும் அதைச் சார்ந்த நீர்த்தேக்கங்களை இணைக்க மொத்தம் 7454 மீட்டர் நீளமுள்ள ஐந்து சுரங்கவழிகள் மலைப்பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர ஹைவேவிஸ் கீழ் விழும் நீர் ஒரு திருப்பு அணை மூலம் தேக்கப்பட்டு 525 குதிரைத் திறன் கொண்ட இரு பம்ப்பு செட்டுகள் மூலம் ஹைவேவிஸ் தேக்கத்திற்கு ஏற்றப்படுகிறது. இத்தகைய அமைப்புகளின் மூலம் மலைச் சாரலில் பெய்யும் மழையின் நீர் முழுவதும் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது.

'ஆட்டோ கண்ட்ரோல்' எனப்படும் தானே இயக்குவிக்கும் மின்நுணுக்கச் சாதனம் முதன்முறையாகச் சுருளியாறு புனல் மின் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம், மின் இயந்திரத்தை ஒரு சில வினாடிகளில் மின் உற்பத்தி செய்யும் இயந்திரமாகவோ ( Generator ) அல்லது மின் சமனாக்கும் மோட்டாராகவோ (Synchsonous Condenser)

தமிழ்நாட்டில் எட்டு இலட்சங்களுக்கும் மேல் மின்சாரப் பம்பு செட்டுகள் உள்ளன. இவை பெரும்பாலும் காலை நேரத்தில் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆதலால், காலை நேரங்களில் மின்திறன் தேவை அதிகமாகவும் இரவுக் காலத்தில் மிகக்குறைவாகவும் உள்ளது.

மின் திறன் தேவையில் இத்தகைய ஏற்றத் தாழ்வுகளைச் சமாளிக்க, ஒரு சில வினாடிகள் இயக்கவும் நிறுத்தவும், இயலும் நீர்மின் நிலையங்களே மிகப் பொருத்தமானவையாகும். இவ்வகையில் சுருளியாறு புனல் மின் திட்டம் பெரிதும் மதுரைமாவட்டப் பகுதிக்குப் பயன்படுகிறது.

சுருளியாறு புனல் மின்திட்டத்திலுள்ள இயந்திரம் மின் சமனாக்கும் மோட்டாராக இயங்கும்போது மதுரை மாவட்டத்திலும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்படும் மின் தாழ்வழுத்தத்தைச் சீர்செய்யப் பயன்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் பசுமைப் புரட்சிக்கு மேலும் வலுவூட்டும் வகையில் அமைந்த சுருளியாறு புனல் மின் திட்டத்தை மாண்புமிகு -முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் நாள் தொடங்கி வைத்தார்கள்.

—மாமூலன்

---

## ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு கூடுதலாக நிதி உதவி

மதுரை மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்காக அரசு முதலில் 1981-82ஆம் ஆண்டிற்கு ரூ. 253.98 இலட்சம் நிதி ஒதுக்கியது. முதலில் ஒதுக்கிய நிதியில் பணிகள் வேகமாகவும், நல்லமுறையில் கிராமப்புற மக்களுக்குத் தேவையான அடிப்படைப் பணிகள் நிறைவேற்றப்பட்டதை அறிந்து அரசு மேலும், கூடுதலாக இத்திட்டப் பணிகளுக்கு ரூ. 1 40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது.

ஆக மொத்தம் 1981-82 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்திற்குத் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 393.98 இலட்சமாகும்.

மேலும் அத்தொகையுடன் 1520 மெட்ரிக்டன் அரிசியும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ. 26 இலட்சமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 4558 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 3464 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் (1982-83 ஆம் ஆண்டு) இவ்வாண்டு தொடர்ந்து முடிக்கப்பட்டு வருகின்றன.

---




# கொடை நீர்த் திட்டம்

இல. இராசேந்திரன்

கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 71,262. கொடைக்கானல் நகரியத்தின் மக்கள் தொகை 20,000.

கோடைக்காலத்தில் இவ்வளவு பேருக்கும் தட்டுப்பாடின்றிக் குடிநீர் கிட்ட தேவையான பணிகளை மேற்கொண்டிருக்கிறார் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர். முழுவதுமாக மழையை நம்பியிராமல் இருக்க எங்கெல்லாம் குடிநீர்க் கிணறுகள் வெட்டலாம் என அப்பகுதியில் நேரிலேயே சென்று இடங்களைக் கண்டறிந்து அதிகாரிகளுக்குத் தெரிவித்தார் அவர்..

நகரிய அலுவலகச் சொற்பொழிவுக் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பொதுமக்கள் பலரும் வந்து தங்கள் குறைகளைத் தெரிவித்தனர். அவைகளை நிறைவு செய்வதாக உறுதி கூறினார் அவர்.

தட்டுப்பாடின்றிக் குடிநீர் இடைக்கச் செய்ய எவ்வாறெல்லாம் ஏற்பாடு செய்யலாம் எனச் சிந்தித்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, நகரிய அலுவலகக் கட்டடத்தின் பின்புறம் வெட்டப்படும் கிணறு ஒன்று காட்டப்படுகிறது. நீரூற்று வசதி அம்மண்ணுக்கிருப்பது தெளிவாகிறது.

'பிரையண்ட் பூங்கா' வில்உள்ள சிறுகுளம் குடிநீர்த் தேவைக்கு ஏற்றதாக மாற்றப்படலாமா என்று பரிசோதிக்கப்படுகிறது.

கொடைக்கானலில் 'பூம் பாறை' செல்லும் வழியில் உள்ள 'வானிலை நிகழ்வு ஆராய்ச்சி நிலையத்தின் எதிரே, அரசு தோட்டக் கலைப் பண்ணையின் வழியே ஆங்குள்ள ரிசர்வாயருக்குச் செல்கிறோம். வறண்டு கிடக்கும் அந்த நீர்த்தேக்கம் செப்பனிடப்படும்பணிகள் நடப்பதாகக் கூறுகிறார்கள் அதிகாரிகள். உள்ளே இறங்கி, 5 கிலோ மீட்டர் தூரத்தில் நடக்கும் அந்த அணைக்கட்டுத் திட்டத்தைப் பார்வையிடுவதற்காக நடந்தே செல்கிறார் மாவட்ட ஆட்சித் தலைவர்; நாமும் தொடர்கிறோம்.

கடந்த ஏப்ரல் திங்களில் பணி துவக்கம் செய்யப்பட்ட குடிநீர்த் தேக்க அணைக்கட்டை உருவாக்கும் பணியில் ஆண்களும் பெண்களுமாக 200 பேர் பணியாற்றுகிறார்கள்.



கொடைக்கானல் ஏரியிலிருந்து 8 கிலோமீட்டர் தூரத்தில் அமையும் இந்த அணைக்கட்டு 1.2 மீட்டர் நீளமுள்ளதாக இருக்கும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், கடல்மட்டத்திற்கு மேலே 2,230 அடி உயரத்தில் அமையும் இந்த அணைக்கட்டு 80 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட வேலையை 1980ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்.

கொடைக்கானலில் எங்கே மழை பெய்தாலும் அந்நீர் இங்கே வந்து தங்கும் எனக்கூறும்படியான இடத்திலேதான் இந்த அணைக்கட்டு அமைகிறது. 10.6 மில்லியன் கனஅடி நீர் கொள்ளளவு கொண்டவாக அமைக்கப்படும் இந்த அணையின் பரப்பளவு 1.56 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

1982-83ல், மட்டும் இத்திட்டத்திற்காக 30 லட்சம் ரூபாய் அரசு நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

### மற்ற குடிநீர்த் திட்டங்கள்

மதுரை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், 1981-82ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கிராமப்புறக் குடிநீர்த் திட்டங்களுக்காக 9.92 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 109 பணிகள் நிறைவேற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டதில் 92 குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1982-83ல் 143 ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றுவதென 3.95 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 1.72 லட்சம் ரூபாய் செலவில் 16 திட்டங்கள் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இவ்வாண்டு செயல்படுத்தும் முக்கியத் திட்டங்கள்

**1982-83**-ஆம் ஆண்டில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் போடி, வத்தலக்குண்டு, கொடைக்கானல், தேவாரம் ஆகிய ஊர்களில் ஏறத்தாழ ரூ. 30 இலட்சம் செலவில் புதிய பணிமனைகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை, எல்லிஸ்நகர், பணிமனையில் ரூ. 1.6 இலட்சம் செலவில் தொழிலாளர்களுக்கென ஓய்வு விடுதிகள் திறக்கப்படும்.

மதுரை எல்லிஸ்நகர், புதூர் ஆகிய இடங்களில் சுமார்5 இலட்சம் ரூபாய் செலவில் தொழிலாளர்களுக்கென உணவு விடுதிகள் திறக்கப்படும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் பல்வேறு பிரிவு தொழிலாளர்கள் அவர்கள் கடமையைச் செவ்வனே செய்யும்பொருட்டு ஒரு பலதுறை பயிற்சி நிலையம் ஏறத்தாழ ரூ. 10 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.



மாவட்ட ஆட்சித்தலைவர் கொடைக்கானல் அணைக்கட்டுத் திட்டத்தைப் பார்வையிடுகிறார்

# பாசனத்துக்கு உதவ புதிய நீர்த்தேக்கங்கள்

"குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம் சுமார் ரூ. 4 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கிறது. பழனி வட்டத்தில் சுமார் 3850 ஏக்கர் புதிதாகப் பாசனம் பெறும். சுமார் 2200 ஏக்கர் பாசன உறுதி பெறும். இதனால், சுமார் 5,757 டன் உணவு உற்பத்தி அதிகரிக்கும். ஆண்டிபட்டி, வாடிப்பட்டி, சித்தரேடி, காவல்பட்டி, பாப்பம்பட்டி ஆகிய கிராமங்கள் பயனடைகின்றன.

ஒரு திட்டத்தைநிறைவேற்றுகிறபோதுலாபம் வருமா நஷ்டம் வருமா என்று பார்ப்பதற்காக லாபம் மட்டும்பயன்கருதிச் செலவு முறையைப் பின்பற்றவில்லை. இந்த வருடம் 10 கோடி ஒதுக்க முடியுமென்றால், அதை எந்தத் திட்டத்திற்கு ஒதுக்கினால் அதிக உணவு உற்பத்தி வருகிறது என்பதைப் பார்த்து. அந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அதை முதலில் எடுத்துக் கொள்வதற்கும் இம்முறையைப் பயன்படுத்துகிறோம். லாபம் குறைவாக வருகிற திட்டத்தையும் எடுத்துக் கொள்கிறோம். ஆனால், சிறிது காலதாமதமாகும். பின்தங்கிய பகுதியாக இருந்தால் லாபம் குறைவாக வந்தாலும் எடுத்துக் கொள்கிறோம்.

### புதிய அணுகு முறை—பாசனப் புன்செய்

ஒரே இடத்துக்கு, 2-வது போக விளைச்சலுக்குத் தண்ணீர் கொடுப்பதைவிட, ஒரு போகம்கூட விவசாயம் செய்ய இயலாமலிருக்கின்ற புன்செய் நிலங்களை, வசதி வாய்ப்புகளிருந்தால், பாசனம் பெறுகின்ற பாசனப் புன்செய் நிலமாக மாற்றி, அதிகமான பரப்பு நிலம் பாசனம் பெறவேண்டுமென்பதில் கவனம் செலுத்தி, அறவே விவசாயம் செய்யாமலிருப்பவர்களை ஊக்கப்படுத்துகிறோம். ஒரு போக விளைச்சலுக்குப் பிறகு, அடுத்துப் போடுகிற புன்செய்ப் பயிர்களும் நன்றாகப் பயன் தரும்.



உதாரணமாக, சாத்தனூர் - அணையில், மேலும் ரூ. 5 கோடி செலவிட்டால், 5,000 ஏக்கர் 2-வது போகம் பாசனம் பெறும் என்று சொன்னார்கள். அதை மாற்றியமைத்து, ஆண்டுக்கு ஒரு முறை என்று 'முறை கண்கள்' வைத்து, ஒரு புதிய கால்வாய்

மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர்

**திரு. க. இராசாமுகமது**



# உணவு வழங்குதலுக்குக் கல்வெட்டுச் சான்று

**கோ**யில்கள் குழந்தைகளுக்குப் (உணவும் செழுமையும்) பாலும் எண்ணெய்யும் கொடுப்பதைத் தலையாய புண்ணியமாகக் கொள்ளவேண்டும் என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது:-

சிதம்பரம் கோயிலில் சோழர் காலக் கல்வெட்டு இதைக் கூறுகிறது. குலோத்துங்க சோழன் ஆகிய இரண்டு சோழ மன்னர்களுக்குச் சேனாதிபதியாக இருந்தவன் நரலோக வீரன் என்பவன். அவன் சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கும், சிவகாமி அன்னைக்கும் ஏராளமான திருப்பணிகள் செய்துள்ளான். திருச்சுற்று மாளிகை எடுத்தான்; நூற்றுக்கால் மண்டபம் எடுத்தான்; கோபுரம் எடுத்தான்; ஆயிரம் பசுக்கள் கொடுத்தான்; ஆயிரம் பாக்கு மரங்களை நட்டான்; ஏராளமான அணிகலன்களைக் கொடுத்தான்; அவன், மேலும் இறுதியில் ஏராளமான குழந்தைகளுக்குப் பால் அளிக்கவும், குளிப்பதற்கு எண்ணெய் வழங்கவும் நிரந்தரமான தானம் அளித்தான். அதை அவனது தமிழ்க் கல்வெட்டு,

செல்வி திருத்த றங்கள் தென்னகர் இத்தில்லைக்கே
நல்ல மகப்பால் எண்ணெய் நாள் தோறும்—
செல்லத்தான்
கண்டான் அரும்பையர்கோன் கண் அகல்நீர்
ஞாலம் எல்லாம்
கொண்டான் அத்தொண்டையர் கோ

எனக் கூறுகிறது. குழந்தைகளுக்குத் தினந்தோறும் 'பால்' கொடுப்பது மிகவும் போற்றத்தக்கது. இதைக் காட்டிலும் மிகச் சிறந்த பணி வேறு எதுவும் இல்லை. இதுவே தெய்வத்துக்கு நாம் செய்யும் பெரும் பணிகளில் சிறந்தது என அவனது சமஸ்கிருதக் கல்வெட்டும் கூறுகிறது.

---

மூலம், அதே 5 கோடி செலவில், 20,000 ஏக்கர் புதிய புன்செய் நிலம் பாசனப் புன்செய் நிலமாக மாறியிருக்கிறது. அதிக விவசாயிகள் பயனடைகிறார்கள்.

இருக்கின்ற நீர் வளத்தை எல்லோரும் பெற வேண்டும்; அதிக பரப்பு நிலம் பாசனம் பெறவேண்டுமென்பது, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இந்த அரசு கையாளுகின்ற புதிய அணுகுமுறை.

**சோத்துப் பாறை நீர்த்தேக்கத் திட்டம்**

''பல ஆண்டுக் காலமாக வலியுறுத்தப்பட்டு வந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பாலாறு—பொரந்தலாறு திட்டம், குதிரையாறு திட்டம், அடுத்து, சோத்துப்பாறைத் திட்டம். இது 40 ஆண்டுக்காலமாக வலியுறுத்தப்பட்டு வந்த கோரிக்கை என்பதால், இந்தத் திட்டத்தை எடுத்திருக்கிறோம். மேற்கு முகவை மாவட்டத்தில், கோல்வார்பட்டி, ஆணைக்குட்டம் ஆகிய திட்டங்களும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

சோத்துப்பாறை திட்டம், சுமார் 7 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருக்கிறது. இதனால், சுமார் 1,000 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறும், 1825 ஏக்கர் பாசன உறுதி பெறும். சுமார் 1,629 டன் உணவு உற்பத்தி அதிகரிக்கும். அறவே, விவசாயம் செய்ய இயலாமலிருக்கிற விவசாயிகள் விவசாயம் செய்ய இயலும்.

இன்னும் 5 ஆண்டுகள் தாமதித்தால், இதே திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் செலவாகும்.

இது தவிர, மதுரை மாவட்டத்தில் பெரியகுளம், திண்டுக்கல் வட்டங்களில் மட்டும் சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களுக்கு இந்த ஆண்டு 1 கோடியே 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம்.

பாசனத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கக் கூடிய சூழ்நிலையை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி 3 ஆண்டுக் காலத்தில் 9 மில்லியன் எக்டேரில் பாசன வசதியை ஏற்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று ஒரு எல்லைக் கோடு வைத்திருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்குகின்றபோது, பொருளாதார ரீதியில், பயன் வருகிறதா என்ற விதியைத் தளர்த்துவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள்.

நீர் வளத்தைப் பொறுத்த வரையில், தமிழகம் ஒரு பற்றாக்குறை மாநிலம், கிடைக்கக்கூடிய மேற்பரப்பு நீரில் 95 சதவீதத்தைப் பயன்படுத்தி விடுகிறோம். எனவே எந்த இடத்திலும் தண்ணீர் வீணாகக் கூடாது என்ற அடிப்படையில் இத்திட்டத்தை எடுத்திருக்கிறோம்.

**பொறியாளர்களுக்கு வேண்டுகோள்**

திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை உருவாக்குகிறபோது, திட்டங்களை விரைவாகக் குறித்த காலத்தில் முடிப்பதனாலேயே திட்டத்தின் செலவில் 20 சதவீதத்தைக் காப்பாற்ற முடியும். 2 ஆண்டுக் காலத்தில் முடித்துவிட்டால், 8 கோடியிலேயே இந்த அணையைக் கட்டிவிடலாமென்றால், மேலும் 2 ஆண்டு தாமதமாகிவிட்டால் திருத்திய மதிப்பீடு வரும். இன்னும் 2 கோடி ரூபாய் அதிகச் செலவாகும். காலதாமதம் செய்யச் செய்யக் கூடுதல் நிதி தேவைப்படுகிறது. குறித்த காலத்திலேயே திட்டங்களை நிறைவேற்றி, திருத்திய மதிப்பீடு வருவதைத் தவிர்க்க வேண்டும் என்று அனைத்துப் பொறியாளர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

பொது மக்களின் நம்பிக்கைக்கு ஊனம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதுதான் புரட்சித் தலைவர் ஆட்சியின் இலட்சியம்: காலங்காலமாக மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்தத் திட்டத்தை எடுக்கவில்லை.

**புரட்சித் தலைவர் காலத்தில் மாபெரும் 18-ஆம் கால்வாய் திட்டம்**

பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் காலத்திலே பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் உருவாக்கப்பட்டது கோவை மாவட்டத்தில் இதேபோல வறண்டு கிடந்த இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்று வளம்கொழிக்கும் நிலங்களாக மாறியுள்ளன

அதேபோல, ஒரு மாபெரும் திட்டம் 18-ஆம் கால்வாய்த் திட்டம். இது, புரட்சித் தலைவர் காலத்தில் உருவாக்கப்படும்

இத்திட்டம், கம்பம் தொகுதியில் ஆரம்பித்து, போடி (மேற்கு) தொகுதி, தேனித் தொகுதி வழியாகப் பெரியகுளம் தொகுதிக்கும் வந்து சேர்ந்து பெரும்பயனைக் கொடுக்கும். இதற்கு சுமார் 16 கோடி ரூபாய் செலவாகலாம்.

மழைக்காலங்களில் வெள்ளமாக வருகின்ற வெள்ள நீரை வெள்ள வடிகால்கள் அமைத்து, சுமார் 90 கிராமங்களிலுள்ள வறண்ட பகுதிகளுக்குப் பாசனத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்தக் கூடிய திட்டம்.

10 வருடங்களுக்குப் பிறகு நம்முடைய தேவை எவ்வளவாக இருக்குமென்பதைக் கணக்கிட்டு, இன்றைக்குத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

அடுத்த 10 ஆண்டுகளுக்கு என்னென்ன செய்யலாம் என்று புரட்சித் தலைவர் அவர்கள் முடிவு செய்து வைத்திருக்கிறார்கள். எந்தெந்தக் காலத்திலே வெளிப்படுத்த வேண்டுமோ அப்போது செய்வார்கள். அவைகள்தான் இம்மாதிரி திட்டங்களாக வருகின்றன. காலம் எல்லாம் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல, சண்முகா நதித் திட்ட ஆய்வுப் பணிகள் முடிவுறும் தறுவாயிலிருக்கிறது. பண்ணைத்துக் கிராமத்திலுள்ள சந்தனப் பாறை திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் முடிந்து, அரசின் பரிசீலனையிலிருக்கின்றன.

**விவசாய உரிமை**

எந்த ஒரு அரசும் அணை கட்டுகிறபோது, அந்த நதியின் போக்கை ஆராய்ந்து, ஏற்கெனவே அந்த நதிநீரின் மூலம் பாசனம் செய்து கொண்டிருப்பவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துவிட்டு, எஞ்சியிருக்கிற தண்ணீரைத்தான மற்ற பகுதிகளுக்குக் கொடுப்பதற்கு வழிவகை [illegible] ஏற்கனவே செய்யப்படுகிற [illegible] தடை செய்ய அரசுக்கே உரிமை [illegible]. அதைத்தான் '[illegible]' (Riparian Right) என்கிறோம் இந்த அடிப்படையில்தான், நாம் காவேரி [illegible] தைகளையே நடத்திக்கொண்டிருக்கிறோம்.

**வரலாற்றுச் சாதனை**

வரலாற்றுக் [illegible] இதுவரை வறண்ட பகுதிகளாக [illegible] இந்தப் பகுதியில் புரட்சித் [illegible] காலத்தில் ஒரு மகிழ்ச்சியான ஆரம்ப விழா நடத்து கொண்டிருக்கின்றன

ஒவ்வொரு ஆட்சிக் காலத்தையும் சரித்திர ஆசிரியர்கள் ஒவ்வொரு வகையில் பெருமையாகக் கூறியிருக்கிறார்கள். மௌரியர் ஆட்சிக் காலத்திலிருந்து பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் வரையிலும், பின்னர் சுதந்திர இந்தியாவிலும் ஒவ்வொருவர் ஆட்சிக் காலத்தில் ஏதாவது ஒரு பகுதியில் சில நன்மைகள் உருவாகியிருக்கின்றன

ஒட்டு மொத்தமாக அனைத்துப் பகுதிகளிலும் சிலருடைய ஆட்சிக் காலத்தில் நன்மைகள் உருவாகியிருக்கின்றன. [illegible] புரட்சித் தலைவர் ஆட்சிக் காலமே [illegible] காலம் என்று கூறும் [illegible] நன்மைகள் [illegible] வருகிறது என்பதை [illegible].

கோல்வார் [illegible] திட்டத்தைப் பற்றி [illegible] கிறார்கள். [illegible] விளாத்திகுளம் பகுதிகளிலும் சேர்த்து, 24.40 கோடி ரூபாய் செலவில் 30089 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறக் கூடிய அளவில் பாசனத் திட்டங்கள் இந்த 4 ஆண்டு ஆட்சிக் காலத்திலே நடந்திருக்கிறது. இது வரலாற்றிலே எந்தக் காலத்திலும் நடக்காத சாதனை.

இன்று துவக்கப்படுகிற கோல்வார்ப்பட்டி திட்டம் 5 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படவிருக்கிறது. கிட்டத்திட்ட 2,000 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறும். 4,500 ஏக்கர் 2-வது போகப் பாசன வசதி பெறும். 245 ஏக்கர் பாசன உறுதி பெறும்.

---

## பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம்

**கி**ராமப்புறங்களில் இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி, தாய் சேய் நல விடுதி, பள்ளிக்கட்டடங்கள் போன்ற அடிப்படை வசதிகளைக் குறிப்பிட்ட காலவரம்பிற்குள் செய்து தரும் தமிழக அரசின் தன்னிறைவுத் திட்டம், தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தினைத் தற்போது பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்த தமிழ்நாடு அரசு எடுத்துள்ள முடிவின்படி மதுரை மாவட்டத்தில்-

1. டி. மீனாட்சிபுரம்
2. அகரம்
3. பூதிபுரம்
4. தாடிக்கொம்பு
5. தேவதானப்பட்டி
6. வடுகப்பட்டி
7. தென்கரை
8. கங்குவார்பட்டி
9. பலசமுத்திரம்

ஆகிய 9 பேரூராட்சிகளில் நடப்பு நிதியாண்டில் (1982-83) தன்னிறைவுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இந்தப் பேரூராட்சிகளில் இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி, தாய் சேய் நல விடுதி, பள்ளிக் கட்டடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

மேலும், பேரூராட்சிகளில் தன்னிறைவுத்திட்டம் மூன்று காலக் கட்டங்களில் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். மூன்று ஆண்டுகளில் அனைத்துப் பேரூராட்சிகளும் இத்திட்டத்தால் பயனடையும்.



## பள்ளியில் சேரும் மாணவ மாணவியர் எண்ணிக்கை கூடுகிறது

மதுரை மாவட்டம் முழுவதும் இவ்வாண்டு, பள்ளிகளில் புதியதாக இதுவரை சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை 23,202 ஆகும். இம்மாணவர்கள் முதல் வகுப்பில் மட்டும் சேரவில்லை. இடையில் படிப்பை நிறுத்தியிருந்த பலசிறுவர்கள் இரண்டாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை சேர்ந்திருக்கிறார்கள். வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ 5000தான் இருக்கும்.

ஆனால், இவ்வாண்டு இப்படி மாணவர்கள் கூடுதலாக பள்ளியில் சேரக் காரணம், 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்'தான்!

அருப்புக்கோட்டை, காரைக்குடி வட்டங்களில் சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காக 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பெரியாறு-வைகை பாசனத் திட்டங்களை உலக வங்கியின் உதவியோடு 44 கோடி செலவில் நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. உலக வங்கி சுமார் 21 கோடி ரூபாய் உதவி செய்யும். இதன் மூலம் சுமார் 25455 ஏக்கர் புதிதாகப்பாசன வசதி பெறும்.

சாத்தூர், விருதுநகர் வட்டங்களில் ரூ. 45 இலட்சம் செலவில் 9 புதிய குளங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. ரூ. 24 இலட்சம் மதிப்பீட்டில் விருதுநகர், திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை வட்டங்களில் புதிய குளங்கள் அமைக்கும் திட்டங்கள் ஆய்விலிருக்கின்றன.

வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்திட்டம் 4 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்கனவே துவக்கப்பட்டுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு 82-83-ல் மட்டும் ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது 8100 ஏக்கருக்குப் பயனளிக்கும்.

**குள்ளூர் சந்தை நீர்த்தேக்கத் திட்டம்**

குள்ளூர் சந்தை நீர்த்தேக்கத் திட்டம் 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்பட்டுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. 82-83-ல் மட்டும் 1 கோடியே 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சுமார் 2,900 ஏக்கர் நிலங்களுக்குப் பயனளிக்கும்.

இவ்வளவு பெரிய மகத்தான புரட்சியை இந்த வறண்ட பகுதிகளுக்குச் செய்வது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒன்று.

நில உடமையாளர்கள் மட்டுமல்ல, விவசாயத் தொழிலாளர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் பால் உற்பத்தி போன்ற சிறு சிறு தொழில்கள் செய்பவர்களுக்கும் மிகுந்த பயனை அளிகரும.

**சமூகப் புரட்சி**

கிழக்கு முகவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வெள்ளக் காலங்களில் ஏற்படக்கூடிய வெள்ள நீரைத் திருப்பிக் கொடுக்கின்ற திட்டமொன்றை 300 கோடி ரூபாய் செலவில் செய்யவிருக்கிறோம் என்பதை புரட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள்.

ஒரு மாபெரும் சமூகப் புரட்சி பின்தங்கிய மாவட்டங்களில் நடந்து கொண்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சியும் விவசாய வளர்ச்சியும் ஏக காலத்தில் நடக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் கருதியதனால் தான் பல திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன.

மேற்கு முகவை மாவட்டத்தில் சுமார் 1,000 ஏக்கரில் சிப்காட் தொழில்பகுதி அமைக்கப்படவிருக்கிறது. கடலாடி, முதுகுளத்தூர் பகுதியில் ஒரு நூற்பாலை நிறுவ முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

இங்கு இருக்கக்கூடிய பெரிய கண்மாயை ஆழப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். 500 ஏக்கருக்கு மேல் பாசனம் தரக்கூடிய சுமார் 500 கண்மாய்களை உலக வங்கியின் உதவியோடு ஆழப்படுத்தி நவீனப்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை விரைவிலே கொண்டுவர அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது.

**(குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம் சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம், கோல்வார்ப்பட்டி நீர்த்தேக்கத் திட்டம் ஆகியவற்றை முறையே பழனியிலும் (ஜூலை 19) பெரிய குளத்திலும் (ஜூலை 20) சாத்தூரிலும் (ஜூலை 21) அடிக்கல் நாட்டி ஆற்றிய உரையிலிருந்து)**

# அரிய திட்டத்திற்குப் பெரிய குளத்தில் பயிற்சி

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அந்தந்தமாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்குக் 'குழந்தைகள் நல அமைப்பாளர்' பயிற்சி அளிக்கப்படுகிறது.

அவ்வகையில் மதுரை மாவட்டத்தில் உள்ள 60மையங்களிலும் தேர்வுபெற்றோருக்கான பயிற்சி பெரியகுளம் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் அளிக்கப்பட்டது. நாம் அதைப் பார்வையிடச் சென்றபோது (28-8-82)அறுபது மகளிர் மட்டுமல்ல; புதிதாகத் துவக்கப்பட்ட 13 மையங்களுக்காகத் தேர்வுபெற்ற பதின்மூவரும், கொடைக்கானல் ஊராட்சி ஒன்றிய மையங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது பேரும்கூட அங்கே பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தனர்.

அவர்களுக்கெல்லாம்பயிற்சி யளிப்பதில் முக்கிய சேவிகா, திருமதி ஜி. அழகம்மாள் பெரிதும் அக்கறை செலுத்திக்கொண்டிருந்தார். கிராம சேவிகாக்களான டாரதிபாப்பாத்தி, வி. அமலோற்பவம் இருவரும் அவருக்குத் துணையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இப் பகுதியிலுள்ள முப்பது மகளிர்மன்றங்களைக்கண்காணித்தல், சிறுசேமிப்புத் திட்டத்தில் மகளிரை உறுப்பினராக்க முனைந்து நிற்றல், ஊனமுற்றோர் அரசு உதவி பெற ஆவன செய்தல், விதவைப் பெண்களின் மகளிர் திருமணத்திற்கு அரசுத் திட்டப்படி தங்கத்திற்குத் தாலிகிட்ட உதவுதல் போன்ற சில பணிகளில் மட்டுமே இதுவரை தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்த கிராம சேவிகாக்கள் இப்போது சத்துணவுத் திட்டத்திற்கான இவ்வாறான பணிகளில் முழுமூச்சோடு தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தது நம்மை வியப்பில் ஆழ்த்தியது.

"பயிற்சிக் காலத்தில் நீங்கள் என்னவெல்லாம் சொல்லித் தருகிறீர்கள்?" என்று முக்கிய சேவிகாவைக் கேட்கிறோம்.

"குழந்தைகளின் விருப்பமறிந்து கற்பிப்பது எப்படி, சிறுவர்களின் வயதுக்கேற்ற விளையாட்டுகள்-அவற்றால் அவர்களுக்கேற்படும் தேக நலன்கள், குழந்தைகளின் மனமறிந்து நடந்து கொள்ளுவது எப்படி, அவர்களுக்குச் சுத்தமான முறையில் சத்துணவைத் தயாரிக்கும் விதம், உணவுக்கான பாத்திரம் பண்டங்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் எப்படி-என்பது போல் பலவிதங்களில் பயிற்சி அளித்துச் சான்றிதழ் தரப்படுகிறது."

"பெண்களுக்குச் சாதாரணமாக இந்த விஷயங்கள் கூடவா தெரியாது?"

"பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்மார்களுக்கு என்றால் நீங்கள் கூறுவது சரி; இங்கே பயிற்சி பெறுபவர்களில் சில பெண்களே தாய்மைப்பேறு பெற்றவர்கள். மற்றவர்களுக்குக் குழந்தைகள் பராமரிப்பு பற்றி நாமாகக் கற்பித்தல் தானே நல்லது? ஆகையால் இது மிகவும் முக்கியமான பயிற்சியாகும்."

—இவ்வாறு நம் வினாக்களுக்கெல்லாம் மிகப் பொறுப்போடு பதிலளிக்கிறார் முக்கிய சேவிகா.

மாவட்ட செய்தி - மக்கள் தொடர்புத்துறை மூலம் பயிற்சி பெற்றோருக்கு, தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவின் 246-வது செய்திப் படம் காட்டப்படுகிறது. திருச்சி மாவட்டம் பாப்பாகுறிச்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கிய சத்துணவுத் திட்டம் குறித்த அப்படம் பயிற்சியாளர் மனத்தை மேலும் பண்படுத்துகிறது.

மதுரை/கிழக்கு :

பெரிய குளத்திலிருந்து மதுரைக்கு வருகிறோம்.

மதுரை-கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திலும் அதே போல்





# குழந்தைகள் சத்துணவுத் திட்டத் திரைப்படம்

பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில், தமிழ் நாடு அரசு செய்திப்படப் பிரிவின் (எண் : 246) திரைப்படம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தார்கள். மதுரை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகத்தார் (28-8-82).

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய சத்துணவுத் திட்டம் பற்றி அப்படத்தைப் பார்க்க ஏராளமான ஆண்களும் பெண்களும் வந்திருந்தனர். படம் முடிந்த அடியோடு, அங்கிருந்த நடுத்தர வயதுத் தம்பதிகள் இருவர், படம் காட்டியவரை அணுகி- தெனசரி இங்கே இந்தப் படத்தைக் காட்டுவியளா? என்று ஆர்வத்தோடு கேட்டார்கள். அதற்குப் பதிலளித்து விட்டு, அவர்களிடம் அவர் கேட்டார். "ஒங்க குழந்தைங்க ஏதாச்சும் ஸ்கூல்லபடிக்கிதுங்களா?"

"இப்ப படத்துல காட்டுனியளே, அப்பிடி சாப்பாடு போடறதுக்கு முன்னால வரைக்கும் நாங்க எங்க பிள்ளைங்களப் படிக்க அனுப்பிலிங்கய்யா. இப்பத்தேன் அனுப்பறம். படிப்புக்குப் படிப்பும் ஆச்சு; சாப்பாட்டுக்குச் சாப்பாடும் ஆச்சுதுங்களே! நாங்களே ஏதாச்சும் விஷேசம்னாதேன் எண்ணெ, பருப்பு, கீரையெல்லாம் உபயோகிச்சி சமையல் பண்றது. இப்ப தெனசரில்ல அதெல்லாம் போட்டு சமைச்சிப் போடுறாக!"

—முகமெல்லாம் சிரிப்பாக, அந்தக் கணவனும் மனைவியும் இதை மாற்றி மாற்றி மகிழ்ச்சி சொல்லி சத்துணவுத் திட்டத்திற்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

**ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணும் அரசு இது என்பதற்கு வேறென்ன உதாரணம் வேண்டும்?**

'குழந்தைகள் நல அமைப்பாளர்' பயிற்சி அளிக்கப்படுவதைச் சென்று பார்க்கிறோம்.

முக்கிய சேவிகா திருமதி எஸ். ஈஸ்வரி பாய், 49 மகளிருக்கு அப்பயிற்சி தருவதில் ஈடுபட்டிருந்தார். ஆகஸ்ட் 21 முதல் 29 முடிய நடந்த அந்த ஒன்பது நாள் பயிற்சியில் மிகவும் அக்கறையோடு காணப்பட்ட அந்த மகளிரில் 36 பேர் மணமானோர்; 11 பேர் மணமாகாதோர்; 2 பேர் கணவனால் கைவிடப்பட்ட கொடுமைக்கு ஆளானோர்.

''இவர்களுக்கெல்லாம் பயிற்சி அளிக்கும் முக்கிய சேவிகாக்களுக்கு எங்கே பயிற்சி தரப்பட்டது?'' என்ற நம் கேள்விக்கு, ''திருநெல்வேலியில்'' என்று பதிலளித்தார் ஒன்றிய ஆணையர் திரு. ஐ. சுப்பிரமணியம்.

மொழிக் கல்வி, பூக்கள், விலங்குகள் பற்றிய விளக்கம், தலைவர்களைப் பற்றிய தெளிவு போன்றவற்றைக் குழந்தைச் செல்வங்களுக்கு ஏற்படுத்திடும் விதம் பற்றிய பயிற்சியில் மகளிரெல்லாம் கருத்துடன் ஈடுபாடு கொண்டிருந்தது மட்டுமல்ல; சிறுவர்களுக்குப் படங்களின் மூலம் கல்வி புகட்ட அவர்கள் தயாரித்துக் கொண்டிருந்த வண்ண வண்ண ஓவிய 'ஆல்பங்'களும் நம்மைக் கவர்வதாக இருந்தன.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய சத்துணவுத் திட்டம் நல்ல முறையில் ஈடேறும் என்பதை உறுதிப்படுத்தியது தாய்மார்களின் பயிற்சிநிலை!**

# தமிழ் நாட்டில் சுற்றுலா வளர்ச்சி

"உலக நாடுகளைக் கவர்ந்த உன்னதமான பல இடங்கள் நம் தமிழகத்தில் உள்ளன. நினைப்புக்கு எட்டாத நெடுங்காலத்துக்கு முன் நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் நெஞ்சைவிட்டு அகலாக்கலைக் கோயில்கள், அழகிய ஏரிகள், ஆறுகள், நீர்வீழ்ச்சிகள், விந்தை விலங்குகள் வாழ் வனங்கள்! குன்றுகள் இப்படி நம் திருவிடத்தில் திரும்பும் திசையெல்லாம் தெவிட்டாத காட்சிகள்! அவை நம்மவரை மட்டுமல்ல மேலை நாட்டினரையும் வெகுவாகக் கவருகின்ற வகையிலே, தமிழ்நாட்டுச் சுற்றுலா வளர்ச்சிக்கழகம் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

அதன் வளர்ச்சிப் பணிகளை அடுக்கடுக்காய் எடுத்துக்கூறுகிறார், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு க. பாலசுப்ரமணியன் எம்.எல்.ஏ., அவர்கள்.



சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்

**திரு. க. பாலசுப்ரமணியன் எம்.எல்.ஏ.**

**அவர்களுடன் பேட்டி**

**சுற்றுலா கழகத்தின் நோக்கங்கள் என்ன?**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் துவக்கத்தில், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு இடவசதி அளித்திடவும் மற்றும் அவர்களுக்கென சுற்றுலாப் பேருந்துகளை நடத்தும் பணியினையும் மேற்கொண்டது.

கடந்த சில ஆண்டுகளில் இக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளது. அவை குறைந்த செலவில் பயணம் செய்ய விரும்புபவர்களுக்கு, இளைஞர் விடுதிகளும், நெடுஞ்சாலைப் பயணிகள் வசதிக்கெனப் பெருவழி ஓய்வு விடுதிகளும் தங்கும் வசதியுள்ள உணவு விடுதிகளும் மற்றும் சுற்றுலாப் பயணிகள் முகாம் போன்றவைகளாகும். பயணிகளுக்கென இக்கழகம் பொழுதுபோக்கு வசதிகளையும் அளித்து வருகிறது. அவை தொலைநோக்கு இல்லங்கள், ஒலி-ஒளிக்காட்சி, படகு குழாம்கள் முதலியனவும் சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் சுற்றுலாப் பொருட்காட்சி போன்றவையுமாகும். சுற்றுலாப் பயணிகள் தங்கள் மனத்தைக் கவர்ந்த இனிமையான சுற்றுலாக்களை நினைவில் வைத்திட பரிசுப் பொருட்களையும் தயாரித்து சுற்றுலாப் பயணிகளுக்கு இக்கழகம் வழங்கி வருகிறது. தமிழகத்தின் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்த அரசு கொண்டுள்ள நோக்கத்திற்கு ஒப்ப சுற்றுலா வரும், வெளி மாநில வெளிநாடுகளின் பயணிகள் பண்டையத் தமிழர் நாகரீகம், பண்பாடு, பண்டைய கலாச்சாரம் இவைகளைத் தெரிந்து செல்ல உறுதுணையாக இருப்பதே இதன் நோக்கமாகும்.

**தமிழ்நாட்டு சுற்றுலாத் தலங்கள் எங்கெங்கு உள்ளன? சுற்றுலாக் கழகத்திற்குச் சொந்தமான இடங்கள் எங்கெங்கு உள்ளன?**

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்களும், கண்கவர் இயற்கை எழுச்சியூட்டும் கோடை வாசஸ்தலங்களும், பாடல் பெற்ற புண்ணியத் தலங்களும், எழில்மிகு கடற்கரைப் பகுதிகளும், வனவிலங்கு மற்றும் பறவை சரணாலயங்களும் நிறைந்துள்ளன. எனவே, குறிப்பிட்டுச் சில இடங்களைச் சுற்றுலாத் தலங்கள் என்று கூற முடியாது. எனினும், சென்னை, காஞ்சிபுரம், மாமல்லபுரம், தஞ்சை, திருச்சி, சிதம்பரம், பிச்சாவரம், மதுரை, கன்னியாகுமரி, ராமேஸ்வரம், உதகை, கொடைக்கானல், முதுமலை, ஏர்க்காடு, ஒகனேக்கல் ஆகிய இடங்கள் நாட்டிலுள்ள பயணிகளை மட்டுமின்றி, வெளிநாட்டுப் பயணிகளையும் ஈர்க்கும் வகையில் சிறப்புற அமைந்துள்ள சில இடங்களாகும். அங்கெல்லாம் நமது கழகம் பயணிகளுக்கு வசதி செய்திருக்கின்றது.

**பயணிகளுக்கான தங்கும் இடங்கள் எங்கெங்கு உள்ளன? அங்குள்ள வசதிகள் வாய்ப்புகள் என்ன?**

தென்னகத்தில் மிக அதிக அளவில் சுற்றுலா விடுதிகள் நடத்தும் சிறப்பு இக்கழகத்தின் தனித்தன்மை ஆகும். தமிழகத்தில் சுற்

**பேட்டி : ஜி. ஆனந்தன்**



ஓட்டல் தமிழ்நாடு — மதுரை

றுலா சிறப்புப் பெற்ற இடங்களான சிதம்பரம், தஞ்சை, திருச்சி, மதுரை, கன்னியாகுமரி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ''ஓட்டல்கள் தமிழ்நாடு'' சுற்றுலாப் பயணிகளிடையே பெரும்பேறு பெற்றுள்ளன.

மதுரையிலும், கோவையிலும் புதுமையான முறையில் மூன்று நட்சத்திர ஓட்டல்கள் அமைக்கப்பெற்று, சுற்றுலாப் பயணிகளுக்கு மிக வசதியாக அமைந்துள்ளன. 1978ஆம் ஆண்டு முதல் நெடுஞ்சாலைப் பயணிகள் வசதிக்கென பெருவழி ஓய்வு விடுதிகளை (Motals) இக்கழகம் நிறுவி வருகின்றது.

இராணிப்பேட்டையில் 'மரகதம்' மற்றும் உளுந்தூர்ப்பேட்டையில் 'வைரம்' ஆகிய பெருவழி ஓய்வு விடுதிகள் நிறுவப் பெற்றுள்ளன. கிருஷ்ணகிரியில் 'மாணிக்கம்' என்னும் பெருவழி ஓய்வு விடுதி கட்டி முடிக்கப்பட்டு திறக்கும் தறுவாயில் உள்ளது. மற்றும் குறைந்த வருவாயுள்ள உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகட்கென குறைந்த கட்டணத்தில் வசதிமிக்க இளைஞர் விடுதிகள் நிறுவும் பணியினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மேற்கொண்டுள்ளது. இத்தகைய இளைஞர் விடுதிகள் ஏர்க்காடு, மாமல்லபுரம், உதகமண்டலம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இராமேஸ்வரம், மண்டபம், கொடைக்கானல், ஒகேனக்கல் ஆகிய இடங்களில் இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டு திறக்கப்படும் தறுவாயில் உள்ளன.

மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பயணிகளின் முகாம் ஒன்று சுற்றுலாப் பயணிகளுக்குக் குறைந்த செலவில் தங்குவதற்கெனக் கடற்கரையின் அருகாமையில் அமைக்கப்பட்ட புதுமையான திட்டமாகும். அருமையான சூழ்நிலையில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த முகாமில் குடில்கள், இளைஞர் விடுதி, கூடாரங்கள், உணவுவிடுதி ஆகியவை அடங்கும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இந்தச் சுற்றுலாப் பயணிகள் முகாம் நாட்டிலேயே முதன்மையானதாகும்.

இக்கழகத்தின் சுற்றுலா விடுதிகள் அனைத்தும் நகரின் மையப்பகுதிகளில் அமைக்கப் பெற்று சுற்றுலாப் பயணிகள் எளிதில் அணுகும் வண்ணம் உள்ளன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளின் தேவைக்கேற்ப சுவையான உணவு வகைகள் சுகாதார முறையில் தயாரிக்கப் பெற்று கனிவாகப் பணிவுடன் வழங்கப்படுகின்றன. இந்த விடுதிகளில் குளிர் சாதனம் பொருத்தப்பட்டுள்ள அறைகளும், கூட்டங்கள் நடத்த அரங்குகளும் உள்ளன.

**சில சுற்றுலாத் தலங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவரும்படியாக இல்லை எனக் கருதப்படுகிறதே? அதைப் பற்றி தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்? உதாரணம்—ஒகேனக்கல்.**

சில சுற்றுலாத் தலங்கள் பயணிகளைக் கவரும்படியாக இல்லை என்பதைவிட அந்த இடங்களில் தேவையான அளவிற்கு அடிப்படை வசதிகள் அமையவில்லை என்று கூறுவது சரியாக இருக்கலாம்.

சுற்றுலாத் தலங்களைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். வெளி நாட்டவர் கண்டு களிக்கும் இடங்கள் சில, நாட்டில் பல பாகங்களிலிருந்து வருகை தரும் பயணிகள் காணும் சுற்றுலாத் தலங்கள் சில மற்றும் உள்ளூர் மக்களை கவரும் சுற்றுலா மையங்கள் (Excursion Centre) ஆகியவை ஆகும். தேவைக்கேற்ப நிதிநிலையைப் பொருத்து இந்த சுற்றுலாத் தலங்களின் அடிப்படை வசதிகள் படிப்படியாக அமையப்பெற்று வருகின்றன.

நீங்கள் குறிப்பிட்ட ஒகேனக்கல் தர்மபுரி மாவட்டத்தில் இயற்கை எழில் சூழ்ந்த சிறப்பான இடமாகும். இது காவேரி நதி தமிழ்நாட்டில் முதன் முதலில் புகும் இடமாகும். இங்கு அமைந்துள்ள அருவிகளில் குளித்து மனம் மகிழலாம். ஒகேனக்கலின் சிறப்பானது நன்கு விளம்பரமாகாததால் மக்கள் அதனை சரியாகப் புரிந்து கொண்டு சென்று கண்டு களிக்க இயலவில்லை. அதனால் ஒகேனக்கல் சிறப்பை நன்கு உணர்ந்து, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் பலவசதிகளை அமைத்திருக்கிறது.

[தொடர்ச்சி அடுத்த இதழில்]




# மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

கு. ஆறுமுடையபிள்ளை இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மதுரை மாவட்டம்

''இந்தியா கிராமங்களில் வாழ்கிறது'' என்பது காந்தியடிகளின் சித்தாந்தம். அதற்கு அடிப்படைக் காரணம் நாட்டின் மக்கள் தொகையில் 80 சதவிகிதம் கிராமப் பகுதியைச் சார்ந்தது. எனவே இந்நாட்டிற்காகத் தீட்டப்படும் எந்தத் திட்டமும் கிராமங்களுக்குப் பயனளிக்கவில்லை என்றால் அதை ஒரு தேசியத் திட்டமாக ஏற்பதற்கில்லை என்பது முடிவான கருத்து. அதன் அடிப்படையில் நிறைவேற்றப்படுவது தான் கிராம வளர்ச்சித் திட்டங்கள்.

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், அடிப்படை வசதிகளான குடிநீர்வசதி, சாலைகள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள், மகப்பேறு நிலையங்கள், மருந்தகங்கள், அரிசனங்களுக்குத் தேவையான் அடிப்படை வசதிகள், மேம்படுத்தப்பட்ட சிறுபாசன ஆதாரங்கள், குடிசைகளுக்கு மின்னொளி ஆகியவை முழுமையாகவும் விரைவாகவும் கிடைத்து மக்கள் வளம் பெறவும் வகை செய்வதற்காகத் தமிழக அரசு தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

மாநில அளவில் வேறு எந்த மாநில அரசும் மேற்கொள்ளாத இந்தப் புதிய திட்டம் தமிழகத்தில் சிறப்புற நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினைத் தீட்டி அதை நன்கு செயல்படுத்த வேண்டும் என்று அக்கறை கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்னின்று அதை நடத்துவதால் மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைத்துத் துறைகளின் அதிகாரிகள், அலுவலர்கள் பெரிதும் அத்திட்டத்தில் ஈடுபாடுகொண்டு அல்லும்பகலும் பாடுபட்டு வருவதுடன் மிகக் குறுகிய காலத்தில் பல குறிப்பிடத் தக்க முன்னேற்றங்களையும் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

மதுரை மாவட்டத்தில் 1979-80, 1980-81ஆம் ஆண்டுகளில் முதல் கட்டமாக நிலக்கோட்டை, போடி நாயக்கனூர், பெரியகுளம், பழனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம்நிறைவேற்றப்பட்டது. 31.3.81க்குள்ளாக அனைத்து வேலைகளும் திட்டமிட்டபடி மதுரை மாவட்டத்தில் முடிக்கப்பட்டன. இத்திட்ட காலத்தில் இந்த ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில்உள்ளமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான இணைப்புச் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள் மகப்பேறு நிலையக் கட்டடங்கள், மருந்தகக் கட்டடங்கள் கட்டுதல், ஆதி திராவிடர்கள் குடியிருப்பிலிருந்து மயானங்களுக்குச் சாலைகள் அமைத்தல் போன்ற 881 வேலைகள் மொத்தம் 132.16 இலட்சம் ரூபாய் செலவில் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் செய்து முடிக்கப் பெற்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நெடுஞ்சாலை






இராமப் பணித்துறை, ஊரகக் கூட்டுறவு வீட்டு வசதிச்சங்கள் கள் மற்றும் மின்சார வாரியத் தின் மூலம் மேற்கண்ட விவரப் படி மொத்தம் 134.80 இலட்சம் ரூபாய் செலவில் வேலைகள் செய்து முடிக்கப்பெற்றன.

மேலும் குடிநீர் வழங்கும் திட் டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினராலும், கிராம மக்க ளுக்கு வீடு கட்டிக் கொடுக் கும் பணி ஊரகக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூல மும், குடிசைகளுக்கு மின்னொளி வழங்கும் பணி தமிழ்நாடு மின் சார வாரியத்தினராலும், ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் பேருந்து வழித் தடங்கள் மேம் பாடு செய்தல் நெடுஞ்சாலை மற் றும ஊரகப் பணித்துறையின ராலும், மகப்பேறு நிலையக் கட் டடங்கள் உலக வங்கி நிதி உதவி யுடன் நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறையினராலும் செயல் படுத்தப்பட்டன.

1982-83ஆம் ஆண்டில் 3-வது கட்டமாகத் தன்னிறைவுத் திட் டம், மதுரை மாவட்டத்தில், 11 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1. மேலூர், 2. நத்தம், 3. திரு மங்கலம், 4. செல்லம்பட்டி, 5. வாடிப்பட்டி, 6. ஆத்தூர், 7. வட மதுரை, 8. வேடசந்தூர், 9. தேனி, 10. உத்தமபாளையம், 11. கம்பம்.

மேற்கண்ட 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூ. 361.36 இலட்சம் மதிப்பீட்டில் 1,270 வேலைகளை எடுத்துச் செய்ய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

இதுவரை 214 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.107.11 இலட்சம் செலவு செய்யப்பட் டுள்ளது. நிலுவையில் உள்ள அனைத்து வேலைகளையும் விரைந்து முடிக்க நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்கண்ட வேலைகள் தவிர அத்தியாவசியமாகக் கருதப் பட்ட 368 வேலைகளை ரூ. 112.47 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய உத்தேசிக்கப் பட்டு, தேவையான கூடுதல் கருத்தும் அரசுக்கு அனுப்பப்பட் டுள்ளது. கூடிய விரைவில் அரசு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்:**

கிராமத்தில் வறுமையில் வாடும் மக்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கவும், அதன்மூலம் சமுதாயம் மேம்பாடடைந்து நல்வாழ்வு பெறவும் மனித சக் தியைப் பயன்படுத்தி சமுதாயச் சொத்துக்களை உருவாக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமங்கள் போக்குவரத்து வசதிபெறசாலை கள் அமைத்தல், ஊராட்சிக்கட்ட டங்கள் கட்டுதல், கூடுதல் பள் ளிக் கட்டடங்கள் கட்டுதல், ஆதி திராவிட மக்களுக்கு மயான






சாலை அமைத்தல், ஆதிதிராவிட குடியிருப்புக்கான இடத்தைச் சமப்படுத்துதல், சமூக் காடுகள் வளர்த்தல் போன்ற நிரந்தரப் பயன் அளிக்கும் வேலைகள் எடுத் துச் செய்யப்பட்டு இலட்சக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புவழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் எல்லா வட்டாரங் களிலும் நிறைவேற்றப்படுகிறது.

1981-82ஆம் ஆண்டு இத்திட் டத்தின் கீழ் 3,726 வேலைகள் முடிக்கப்பட்டு இம்மாவட்டத் திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 393.98 இலட்சம், முழுவதும் வகையுறச் செலவு செய்யப்பட் டுள்ளது என்பது பெருமைக்குரிய தாகும். வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டு 34.23இலட்சம் மனிதசக்திநாட் கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மக்களுக்குக் கூலியாகவும், வேலை களுக்குப் பொருட்களாகவும் செலவு செய்யப்பட்ட தொகை முறையே ரூ. 236.39 இலட்சமும், ரூ. 157.59 இலட்சமுமாகும். மேலும் 1,568.4 மெட்ரிக் டன் அரிசியும் மலிவான விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் சிறப்பாக ஆதிதிரா விடர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 3.6 இலட்சம் ஆதிதிராவிடர்கள் பயன் அடைந் துள்ளார்கள். இந்த வகையில் செலவு செய்யப்பட்ட தொகை மொத்தத்தில் 10.34 சதவீதம் ஆகும். 1981-82ல் எடுக்கப்பட்ட 204 பள்ளிக் கட்டடங்களில் இது வரை 177 கட்டடங்கள் முடிக்கப் பட்டுள்ளன.

[illegible] 2,336 [illegible] ரூ. 80- [illegible] எடுத்துச் [illegible] இது [illegible] 169 வேலைகள் முடிவு பெற்றன. ரூ. 68.89 இலட்சம் செலவு செய்யப்பட்டு உள்ளது. சிறப்பாக மாண்புமிகு முதலமைச் சரவர்களின் சத்துணவுத் திட்டம் நல்ல முறையில் செயல்பட சுகா தார வசதியுள்ள (சமையல்அறை பொருட்கள் வைப்பறை, உண வுக்கூடம் கொண்ட) 230 சமு தாயக் கட்டடங்கள் கட்டுவதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு கட்டட வேலைகள் அனைத்தும் முன்னேற்ற நிலையில் உள்ளன. 30.9.82க்குள் முடிக்க துரித நட வடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது.

**ஆதி திராவிடர்கள் குடியிருப்பு:**

ஆதி திராவிடர்கள் நலமுற வாழத் தேவையான உறைவிடம் நல்ல முறையில் அமைய வேண் டும் என்ற அடிப்படையில் 1981-82ஆம் ஆண்டில் இம் மாவட்டத் தில் 1,384 வீடுகள் கிராமாந்திர வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டுள் ளன.

1982-83ல், தமிழ்நாடு அரிசன வளர்ச்சிக் கழகத்தின் மூலம், வேடசந்தூரில் ஊராட்சி ஒன்றி யத்தைச் சேர்ந்த ஆதி திராவிட மக்களுக்கு என்று பிரத்தியேக மாக வீடுகட்டுதல், பால்மாடுகள் வழங்குதல் முதலிய வளர்ச்சிப் பணிகள் செய்யத் திட்டமிடப் பட்டு நடவடிக்கைகளில் உள் ளது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

இத் திட்டம் வறுமைக் கோட் டின்கீழ், அதாவது ஆண்டு வரு மானம் ரூ. 3,600-க்கும் கீழ் உள்ள குடும்பங்களின் பொரு ளாதார நிலையை மேம்பாட டையச் செய்யும் [illegible] செயலாற்றப்படுவ[illegible]ம். மாடுகள் வழங்கல், [illegible] வளர்ப்பு ஆகிய உற்பத்தி[illegible] கொண்ட முயற்சிக[illegible] தேசியமயமாக்கப்பட்ட வ[illegible] மூலம் கடன் வசதி [illegible] செய்து. அக்கடனுக்கு [illegible] ஒரு கணிசமான தொகை [illegible] மாக வழங்கி ஊக்குவிப்ப[illegible] திட்டத்தின் பிரதான[illegible] மாகும்.

1981-82-ஆம் ஆண்டில் [illegible] கிணைந்த ஊரக வளர்ச்சி[illegible] டத்தின் கீழ் பல்வேறு [illegible] களின் மூலம் பலன[illegible] 58,724 பேர் 10,424 [illegible] களும், 6,644 பின் தங்கி[illegible] பினரும் ஆவார்கள். இம்[illegible] டத்திற்கு அளிக்கப்பட்[illegible] யீடு ரூ. 204 இலட்சமாக[illegible] பினும் ரூ. 288.69 இ[illegible] செலவு செய்யப்பட்டு குறி[illegible] விஞ்சியுள்ளது குறி[illegible] தக்கது. இதில் பெரும் பகு[illegible] டார வளர்ச்சி அலுவலர்[illegible] துழைப்புடனும், ஒருபகு[illegible] பந்தப்பட்ட இதர துறை[illegible] வலர்களின் ஒத்துழைப்[illegible] நிறைவேற்றப்பட்டதுகுறி[illegible] தக்கது. இதில் பின் தங்கி[illegible] பினருக்கு அளிக்கப்பட்ட[illegible] ரூ. 32.02 இலட்சமும் [illegible] களுக்கு ரூ. 56.52 இல[illegible] ஆகும். தேசிய மயமாக்க[illegible] வங்கிகள்அனைத்தும் இத்[illegible] தில் கடனுதவி வழங்கும்[illegible] யில் ஈடுபடுத்தப்பட்டுள்ள[illegible]

**சிறப்புத் திட்டம்:**

ஆதி திராவிடர்க[illegible] சிறப்புத் திட்டத்தின் [illegible] மொத்தம் பயனடைந்த [illegible] ஆதி திராவிட மக்களில் [illegible] பேர் பெண்கள் என்பது[illegible] மாவட்டத்திற்கு நிர்ண[illegible] பட்ட மான்யக் குறியீடா[illegible] 86.44 இலட்சத்திற்கு [illegible] ரூ. 2.5 இலட்சம், [illegible] மொத்தம் ரூ. 89.01 இ[illegible] செலவு செய்யப்பட்டது [illegible] பிடத்தக்கது.

1982-83ம் ஆண்டிற்கு [illegible] மாவட்டத்திற்கு ரூ. [illegible] இலட்சம் நிதி ஒதுக்கீடு [illegible] பட்டு, இதில் ஆதி திரா[illegible] மொத்தம் 6,621 பேர்க[illegible] அடைந்துள்ளார்கள். இ[illegible] 1,141 பெண்கள். [illegible] முடிய இத்திட்டத்தில் ப[illegible] கள், ஆடுகள் மற்றும் இ[illegible] தொழிற் பயிற்சிக்கா[illegible] 59 இலட்சம் [illegible] மா[illegible] வழங்கப்பட்டுள்ள[illegible] மூலம் ஆதி தி[illegible] றும் இளைஞர்க[illegible] தார மேம்பாடு [illegible] தில் சிறிதும் ஐய[illegible]



# சமூகநலக் காடுகள்

ராமப்புற மக்களுக்குத் வப்படும் எரிபொருள்கள், பை, மண்வெட்டி, கோடரி ற கருவிகள் ஆகியவற்றுக் வேண்டிய மரங்களைப் மின்றிப் பெற்றிடும் நோக் உண்டாக்கப்படுபவை சமூக நலக்காடுகள். அரசு ஊராட்சி மன்ற நிலம், ரை, புறம்போக்குநிலங்கள், ஓரங்கள், வாய்க்கால் கள், இருப்புப்பாதை கள் போன்ற இடங்களில் சமூகநலக் காடுகள் உரு ப்படுகின்றன.

திட்டம் சுவீடன் நாட்டு உதவியோடு, பத்தாண்டு ரூ. 108 கோடி செலவில் கொள்ள உத்தேசிக்கப்பட் து. 1981-82 முதல் 1985- வரையிலான முதல் கட்ட ண்டுகளுக்கு, சமூக நலக் வளர்ப்புத் திட்டத்திற்காக காடி ரூபாய் செலவிட ஒப் ப்பட்டுள்ளது.

துரைமாவட்டத் பொறுத்த வரை இத் மானது மதுரை கிழக்கு மதுரை மேற்கு, திருப்பரங் குன்றம், கொட்டாம்பட்டி மேலூர், நத்தம், செல்லம்பட்டி, சேடப்பட்டி, உசிலம்பட்டி கள்ளிக்குடி, டி. கல்லுப்பட்டி, திருமங்கலம், ஆண்டிப்பட்டி, பெரியகுளம், தேனி, போடி நாயக்கனூர், சின்னமனூர், கம்பம், உத்தமபாளையம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல் படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தை ஊக்குவிக்கும் விதத்தில் 1981-82ல், 440குடும் பங்களுக்கு 95,500 பை நாற்றுகள் - அதாவது சிறு செடிகள் வழங்கப்பட்டுள்ளன. 1982-83ல் ஒரு இலட்சம் பை நாற்றுகள் இலவசமாக வழங்குவ தெனத் தீர்மானிக்கப்பட்டு 31-7-82 வரை 8,008 பை நாற்றுகள் விநியோகிக்கப்பட்டு யிலும் இவ்வகைக் காடுகள் உரு வாக்கப்படுகின்றன.

இவை தவிர - கிராமப்புறக் கால்நடைகளுக்குத் தீவனம் கிட்டச் செய்வதற்கான கால் நடைத் தீவனத் தோட்டங்கள் ( fodder ) உண்டாக்கப்பட விருக்கின்றன.

1981-82-ல் 31 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலையோரத் தோட்டங்கள், நிழல் தரும் பயன் கருதி உருவாக்கப்பட்டுள்ளன.

வெள்ளப் பெருக்கும் காலத் தில் கரை உடையாதிருக்கவும் மண் அரிப்பைத் தடுக்கவும் வேண்டுமல்லவா? இதைமனத்திற் கொண்டு 1981-82ல் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு - இம்மாவட்

மரவளர்ப்புத் திட்டம் ஊக்கு விக்கப்பட்டது.

1982-83-ல் 50 எக்டேர் புறம் போக்கு நிலத்தில், பல வகைப் பயன் மரங்கள் உடையதான சமூகநலக் காடுகள் உருவாக்குவ தென இலக்கு நிர்ணயிக்கப்பட் டுள்ளது. இம்மாத இறுதியில் அதற்கான நடவு வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது. புறம்போக்கு நிலத்தில் (poramboke plains ) இவ்வாறான தோட்டங்கள் உருவாக்குவதன் மூலம் மக்களின் எரிபொருள் தேவை, தொழிற்சாலைகளின் தேவைகள் நிறைவாகக் கூடும்.

புறம்போக்குக் காடுகள் (poramboke hillocks) 1981-82-ல் 250 எக்டேரில் உண்டாக்குவ தெனத் தீர்மானிக்கப்பட்டதில் 273.6 எக்டேர் பரப்பில் அவை உருவாக்கப்பட்டன. 1982-83-ல் 330 எக்டேர் இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தேவைக்காக மட்டுமல்லாமல் மண் அரிப்பைத் தடுக்கவும், காடு களால் மழை பெருகும் என்பதை மெய்யாக்கவும் இவ்வகைத் தோட்டங்கள் உண்டாக்கப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் 1981-82-ல் கண்மாய்க்கரைக் காடுகள் 1257.8 எக்டேரில் உண்டாக்கப் பட்டன. மக்களின் எரிபொருள் தேவைக்காக மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளின் தேவை யைப் பூர்த்தி செய்திடும் வகை

டத்தில் கால்வாய்க் கரைத தோட்டங்கள் ( River canal fringes ) ஏற்படுத்தப்பட்டன. 1982-83ல் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஏற்படுத்தப்பட விருக்கின்றன.

கடந்த இரண்டாண்டுகளில் இருப்புப் பாதைஓரத் தோட்டம் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளம் கவரும் வகையில் உரு வாக்கப்பட்டுள்ளது.

மக்கள் மனத்தில், வனவளத் தைப் பெருக்கும் எண்ணத்தை ஏற்படுத்திடவும், தமது விறகுத் தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொள்ள வழி காட்டவும் என மதுரை மாவட்டத்தில் பை நாற்றுகள் விற்பனைத் திட்டம் ( Tree cultivation extension programme) வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி இந்த இரண் டாண்டுகளில் மட்டும் 55125 பை நாற்றுகள் இங்கே விற்பனை செய்யப்பட்டுள்ளன.



மதுரை மாவட்டத்தில், காடு வளர்ப்புக்கென 1981-82-ல், அளிக்கப்பட்ட நிதி இலக்கு ரூ. 22,76,500 ஆகும். 1982-83-க்கு ரூ. 36,79,835 நிதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவைகள் மட்டுமல்ல; மதுரை மாவட்டத்தில், 50 சதவீதம் மத்திய அரசின் உதவியோடு கிராமப்புற எரிபொருள்காடுகள் திட்டம் என்ற ஒன்றும் வகுக் கப்பட்டு, அத்திட்டம் சென்ற ஆண்டு பிப்ரவரி முதல் பழனி கோட்டத்தில் சிறப்புறச் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

விறகு மரத்தோட்டம் உண் டாக்குதல், சாலையோரத் தோட் டங்கள் உண்டாக்குதல் போன்ற வகையிலும் விரிவு செய்யப்பட் டது.

கல்விக்கூடங்களில் மாணாக் கர்களுக்கு வனவளத்தின் நன்மை களை விளக்கும் வகையில் மரங் களை நடவும், அதன் வள யில் கவனம் செலுத்தவும் பள்ளிகளுக்கு இலவசமாகப் நாற்றுகள் தரும் ஒரு கு ழந்தைக்கு ஒரு செடி திட்டம்' tree for every child) என்ற திட்டமும் செயல்படுத்தப் வருகிறது.

சமூகநலக் காடுகள் திட் இவ்வகையிலெல்லாம் மது மாவட்டத்தில் மகத்துவம் பெ வருகிறது.



## அண்ணாவின் பேச்சாற்றல்

—புலவர் தணிகை உலகநாதன்

மானமென்றால் வானத்தைப் பார்க்கும் மக்கள்
வாழ்வினையே சிந்தித்துப் பார்க்கவே, தன்
மானத்தை வளர்த்திடவே கருத்துக் கோவை
வகைவகையாய் எடுத்துரைத்தார்; நமது நாட்
ஈனத்தை உண்டாகும் மூடக் கொள்கை
இல்லாமல் மறைந்திடவே வாழ்நா ளெல்லாம்
தேனமுதப் பேச்சாலே பிறர்உள் ளத்தைத்
திருகாமல்-உளையாமல் திருத்தும் வள்ளல்!

பகைவர்களும் பக்கத்தே வந்து நிற்கப்
பண்பான சொற்களையே பேசும் நல்ல
வகையான எடுத்துக்காட் டுகளைக் கூறி
மாற்றலரை மயக்கிவிட்ட மாயத் தேவன்
நகைச்சுவையும் மின்னலிடும் கதையும் தோன்றும்,
நவரசமும் கலந்ததுதான் அண்ணா பேச்சு,
மிகையின்றிச் சொல்கின்றேன் மேடை தோறும்
மென்காற்றாய் வீசியதாம் அவரின் மூச்சு!

# தொழில் நுணுக்கப் பயிற்சியில் தோகையர்



ன களுக்கான கல்லூரிகள், நக்கான கல்லூரிகள், இரு ம் சேர்ந்து படிக்கும் கல் ள், தொழிற் பயிற்சிக் கல் ள் என 335 கல்லூரிகள் மாவட்டத்தில் இருக்கின் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்பினதாக உள்ளன.

டங்கள் ஆள்வதும்
ங்கள் செய்வதும்
ளில் பெண்கள்
த்த வந்தோம்
டும் அறிவினில்
ஒக்குப் பெண் இங்கே
ளப்பில்லை காண்
று கும்மியடி!'

ன்று பாடினான் தூற் விழா நாயகனான மகா ரதி.

த வாக்கை மெய்ப்பிக்கும் உள்ளவர்களாக இருக் கள், மதுரை மாநகரிலுள்ள மகளிர் தொழிற்பயிற்சிக் மாணவிகள்.

ப்பரங்குன்றம் செல்லும் யில் உள்ள சிவப்புக்கட்ட ருள் சிற்றெறும்புகளாய்த் டுகின்றார்கள். அவர்கள். னைச் சுறுசுறுப்பு.

லூரி முதல்வர் திரு. எம். ப்பையா அவர்களைச் சந் மகளிர் தொழிற்பயிற்சிக் ரி பற்றிய விவரங்களைக் றோம்.

மதிப்பெண் பெற்றுப் ம் வகுப்பில் தேர்ச்சிபெற் தும் மாணவிகள் இங்கே துக் கொள்ளப்படுகிறார் குறைவான இடங்களே தால் தகுதிக்கே முத தரப்படுகிறது. ஆண்டு தோறும் 110 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படும் இக்கல்லூரிக்கான இடங்களுக்கான விண்ணப்ப மனு ஒவ்வோராண்டும் ஐயாயிரத்திற்குக் குறையாமல் விற்பனையாகின்றன. இரண்டாயிரத்திற்குக் குறையாமல் மனுச் செய்யப்படுகின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

கட்டடப் பொறியியல் (civil engineering) வணிகத் துறைப் பயிற்சி (commercial practice) எலக்ட்ரானிக் பொறியியல் (electronic engineering) அலங்கார ஆடைகள் அமைக்கும் வகை தெரிதல் தைத்தல் (costume designing and dress making) ஆகிய நான்கு வகைத் தொழில் பயிற்சிகளே இக்கல்லூரியில் மாணவிகளுக்குத் தரப்படுகின்றன.

ஒவ்வொன்றும் மூன்றாண்டுப் படிப்பு.

அலங்கார ஆடைகள் அமைக்கும் வகை தெரிதல் தைத்தல் பிரிவு 1981ல் தான் துவக்கப்பட்டது. இதற்கென 36 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

எலக்ட்ரானிக் பொறியியல், கட்டடப் பொறியியல் ஆகிய இருவகைப் பயிற்சிகளுக்காகவும் 50 மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

வணிகத்துறைக்கான பயிற்சி வகுப்பில் 48 பேர் இடம் பெறுகிறார்கள்.

மொத்த மாணவிகளில் 60 சதவீதம் பேர் இங்குள்ள விடுதியில் தங்கிப் படிக்கிறார்கள். இந்த மாணவிகள் தொழிற் பயிற்சிக் கல்லூரி மதுரையிலே இருப்பதால், மதுரை வாழ் மாணவிகளே அதிகம் சேர்க்கப்படுவார்கள் என்று கருதிட இடமில்லை. உள்ள மாணவிகளைப் பற்றிய விவரத்தைக் கணக்கிட்டால் 40 சதவிதம் மாணவிகளே மதுரையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

ஆசிரியர்களாக 35 பேர்களும் கல்லூரி அலுவலகத்தில் பத்துப் பேர்களும் உள்ள இக்கல்லூரி கட்டடத்தை விரிவாக்கவும் மாணவிகள் எண்ணிக்கையைக் கூட்டவும் திட்டமிருப்பதாகக் கல்லூரிமுதல்வர் தெரிவித்தார்.

எதிரே மதுரைக் கல்லூரி, அடுத்த கட்டடத்திலேயே ஆண்களுக்கான தொழிற் பயிற்சிக் கல்லூரி எவ்விதச் சங்கடத்திற்கும் ஆளாகாமல் இந்தக் கல்லூரி மாணவிகள் சென்னை, கோவை போன்ற நகரில் உள்ள அரசுதொழிற் பயிற்சிக் கல்லூரி மாணவிகள் மட்டும் அல்ல; தனியார் தொழிற் பயிற்





சிக் கல்லூரி மாணவிகளைச் சேர்த்துப் பார்த்தாலும் சரி; அவர்களையெல்லாம்விட ஆண்டுதோறும் அதிக அளவில் தேர்ச்சி பெற்றுச் சாதனைச் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்!

கல்லூரி துவக்கிய காலத்திலிருந்து இதுவரை ஒரே ஒருநாள் கூட 'ஸ்டிரைக்' அது இது என்ற அசம்பாவிதங்கள் ஏதும் இங்கே நடந்ததில்லை என்றால் இதுவே ஒரு மகத்தான சாதனையல்லவா!

கைப்பந்து, கூடைப்பந்து, பூப்பந்து போன்ற விளையாட்டுகளுக்கேற்ற இடம் மட்டுமே இக் கல்லூரி வளைவில் உள்ளது. ஆனாலும் என்ன, மாநில அளவில் நடைபெறும் அத்தனை விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்று மதுரை தொழிற்பயிற்சிக் கல்லூரி மாணவிகளே கடந்த மூன்றாண்டுக் காலமாகப் பெருவெற்றி (championship) பெற்று வருகிறார்கள்.

## அண்ணா கண்ட அழகு மதுரை!

'நான்மாடக் கூடலில் நிற்கின்றேன். ஞாலம் போற்றிடும் தனிச்சிறப்பினைப் பெற்ற தமிழகத்தின் அறிவுக் கோட்டமாய்த் திகழ்ந்தும் மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கும் நிலையில் நிற்கின்றேன்.

'இங்கு நின்றிடும் எவருக்கும், அன்றொரு நாள் அறிவாளர் அறன் அளிக்க அரசாண்ட பாண்டிய பெருமன்னர் தமிழ் வளர்த்து, தமிழர் தம் தனிச்சிறப்பினைக் காத்து, புகழ்க்கொடி நாட்டி, தரணிமெச்சக் கோலோச்சி வந்த வரலாற்று நினைவு எழாமலிருக்க இயலாது. நெஞ்சு நெக்குருகும் நினைவலைகள் எழத்தான் செய்யும்.

'மனக்கண்ணால் காணுகின்றேன் முதுபெரும் புலவர்கள் அவை நோக்கி, முந்நூறு கல் தொலைவினின்றும், முதறிஞர், காணீர் தமிழ் நெறியை-தாரணியோர் மெச்சி ஏற்றிடத் தக்கதோர் நன்னெறியை-ஈரடியில் யான் இயற்றியுள்ள சீரணியை என்றுரைத்த வண்ணம், திருவள்ளுவனார் வந்திடும் காட்சியினை.

'தத்தமது ஏடுகளை வித்தகர் போற்றிடத் தக்கவென விளக்கி புலவர் பெருமக்கள் பேருரையாற்றிய பெருமிதமிகு காட்சியெல்லாம் காணுகின்றேன்; காணாதார் எவருமிரார்.

'எத்தகைய அறிவாற்றல், என்னென்ன திறனாய்வு இங்கிருந்தன அன்றைய நாளில்!

'இந்தக் கவிதை எம்மான் இயற்றியது என்றியம்பிய சொற்கேட்டும், நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் குற்றமே என்றுரைத்த அரிமாப் பெரும் புலவர் நக்கீரர் தெரிகின்றார்; நந் தமிழர் கொண்டிருந்த மாண்பு தெரிகின்றது.

'பாண்டிய நாடிதற்குப் பாங்களித்த மாமதுரை, தமிழ்மரபு காத்திட்ட மன்றம் கண்ட மதுரை, தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் எழச் செய்த திருமதுரை, வீரப் பேராற்றலால் மட்டுமின்றி - அறிவுக்கணைதொடுத்த மாண்பினாலும் பெருமைதனைப் பெற்ற வெற்றிக் கோட்டம் அந்த நாளும் வந்திடாதோ! என்ற உணர்ச்சியால் எவரும் உந்தப்படும் நிலை பெறுவர் மாமதுரைப் பதியின் வரலாற்றுச் சிறப்பறியின்!'

[மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 7.9.1967ல் ஆற்றிய உரையிலிருந்து.]

ஆதாரம்: 'அண்ணாவும் அழகுத் தமிழும்'

# தந்தை பெரியாரின் புரட்சி மொழிகள்



உலக உயிர்களில் அறிவு நிரம்பப் பெற்ற உயிர்-பகுத்தறிவுள்ள உயிர் மனிதன்தான். அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த காரியங்களை எல்லாம் சாதிக்க முடியும்.

ஒரு சமூகமென்றிருந்தால் அச் சமூகத் தில் ஏழைகளில்லாமலும், மனச்சாட்சியை விற்றுப் பிழைப்பவர்கள் இல்லாமலும் செய் வதுதான் சரியான சமூகச் சீர்திருத்த வேலை யாகும்.

சீர்திருத்தங்கள்-மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்ட வும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச் சியையும், அதிகப்படுத்தவுமே அமையவேண் டும்.

சக்கி முக்கிக் கல்லால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக்காலத்து ''எடிசன்''. அப்புறம் படிப்படியாக முன்னேற்றமாகி இப் பொழுது மின்சாரத்தில் நெருப்பைக் காண் கிறோம்; எனவே, மாற்றம் இயற்கையானது. அதைத் தடுக்க யாராலும் முடியாது.

நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன் னம்பிக்கையற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை அடி மைத் தன்மையும், மனிதனின் பிறப்புரிமை யாகிய தன்மானத்திற்கு இயற்கைத் தடைகள்.

ஒரு நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானாலும் அவரவர்கள் நாகரிகம் பெற்று உயர்ந்த நல்வாழ்க்கை நடத்தவேண்டு மானாலும் அரசியல், பொருளியல், தொழி லியல் ஆகிய துறைகளில் தகுந்த ஞானம் பெற வேண்டுமானாலும் அந்நாட்டு மக்க ளுக்கு முதலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், அதிகாரி கள் எல்லோரும் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை, நாணயம் இவைகளை வளர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பள்ளிக்கூடங்கள் எழுத்து வாசனையை யும் ஏதாவது ஒரு துறையில் விளக்கத்தையும் தான் உண்டாக்க உதவும். வாசகசாலை என் பது பொது அறிவு விளக்கத்தையும் சகல துறைகளிலும் ஞானத்தையும் உண்டாக்கும்.

ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண் டப்படும் பற்றுகளுக்குள் தலையாயப்பற்று மொழிப்பற்றேயாகும். மொழிப்பற்று இராத வரிடத்து தேசப்பற்று இராதென்பது நிச்ச யம். தேசம் என்பது மொழியை அடிப்படை யாகக் கொண்டு இயங்குவது. ஆதலால் தமி ழர்களுக்குத் தாய் மொழிப்பற்று பெருக வேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

கூட்டுறவு என்கிற கொள்கை சரியான உய ரிய முறையில் நம் நாட்டில் ஏற்பட்டுவிடு மானால் மக்கள் சமூகமே சஞ்சலமற்று, நாளைக்கு என்ன செய்வதென்ற ஏக்கமின்றி, திருப்தியுடன் நிம்மதியாகக் குதூகலமாக வாழ வழி ஏற்பட்டுவிடும்.

மக்களுக்குள்ள சமுதாயக்கொடுமை தீர வேண்டியது எவ்வளவு அவசியமோ அது போலவே, மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீரவேண்டியது அவசியமாகும்.

பெண்களுக்குப் பகுத்தறிவும், கல்வியும், உலக நடப்புக் கல்வியும், தாராளமாகக் கொடுத்து, மூடநம்பிக்கை, பயம் ஆகியவற்றை ஊட்டக்கூடிய கதைகளையோ, சாத்திரங் களையோ, இலக்கியங்களையோ, காணவும் கேட்கவும் சிறிதும் இடமில்லாமல் செய்ய வேண்டும்.

மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை, முதலானவை அவற்றைஉடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திர மல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மையும் அளிக்கும்.

வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந் தால் போதாது. நன்மை தீமையை அறியும் குணமும், சாத்தியம் அசாத்தியம் அறியும் குணமும், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் தன்மை யும் இருந்தால்தான் வாலிபர்கள் பொது வில் பயன்படக்கூடியவர்கள் ஆவார்கள்.

# பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள்



மக்களை நல்லவர்களாக்க வேண்டுமா னால் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மத வெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் அழிந்தாக வேண்டும்.

பொருள் பாடுபடுபவனுக்குப் போய்ச் சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்குச் செலவிடப்பட வேண்டும். இரண்டும் நமது கொள்கை, இரு விழிகளில் ஒன்றுக்கு மற்றொன்று பாழாகக் கூடாது.

மொழிப் பற்று இருப்பது எந்த வகை யிலும் வருந்தத்தக்கதல்ல; போற்றத்தக்கது.

கலை ஓர் இன மக்களின் மனப்பண்பு. அவ்வின மக்களிடையே தோன்றும், தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிவு.

நாம் அறிவுத் துறையில் முன்னேற்ற மடைந்தால்தான் நம்மிடம் உள்ள பழைய கருத்துக்கள் அகலும்; பாசி பிடித்துப் போன கண்மூடிப் பழக்கங்களும் தொலையும். மற்ற மூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும்.

சாதிமுறை, சடங்கு என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே, சாதி முறையை ஒழிப்பதும் சமதர்மத் திட்டம் தான்.

எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்திற்குப் பொருந்துகிறதா, வாழ்க்கைக்குத் தேவையானதுதானா, அறி வுக்கு ஏற்றதா என்றுதான் நாம் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தமல்லாம லும் பின்பற்றக்கூடாது.

மனிதனின் மனம் எல்லா உலகங்களை யும் விடப் பெரியது! அந்த இதயம் பண்புக் கேற்றபடி பெரிதாகத் தக்கது, நினைப்புக் கேற்றபடி குறுகக் தக்கது. ஆகவே, அந்தமனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

சட்டம்- ஒழுங்கு பற்றிய பழையதத்துவத்தோடு புதிய காலமும் மக்களிடம் உணர்வுகளும் பொது மக்கள் தேவைகளும் இணைக்கப்படவேண்டும்.

நாட்டில் கற்றறிவாளர்கள் எந்த அளவில் இருக்கின் றனரோ, அதைக் கொண்டு தான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இய லும்.

பஞ்சாங்கம் அல்ல புத்தகசாலையில் இருக்க வேண்டியது. அட்லஸ்-உலகப்படம் இருக்கவேண்டும்.

மறுமலர்ச்சி என்பது மாண்புகளை மாய்த்திடும் நஞ்சு அல்ல மாண்புகளை மாய்க் கும் நச்சுப் பூச்சிகளை அழித்திடும் முறை.

காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டு தான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபி தத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்க வேண் டும் வாலிபர்கள்.

சமுதாயக் கொடுமைகள் ஒருபுறமும் சாதிப் பூசல்கள் ஒருபுறமும், வைதீகம் ஒரு புறமும், வீண் வாய் வேதாந்தம் வேறோர் புற மும் இருந்து கொண்டிருப்பதால் தான் இந்த நாட்டில் வீரர்கள் கோழைகளாகின்றனர். மக்கள் வாழ்வு வழுக்கு நிலமாகிறது.

ஒற்றுமை-கூட்டுறவு-ஒப்பந்தம்-கூடிவாழ் தல்-நட்பு-அன்பு என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அளவு வரை மட்டுமே செல்லக்கூடியவை. முழுத்திருப்தி தருபவை அல்ல - தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை. ஆனால் தோழமை இவ் வளவுக்கும் மேலான ஒரு ... நிலை ... நிலை அல்ல-பேதம், ... நிலை ... பட முடியாத நிலை...

85339



# செப்டம்பர் 15 முதல் மதுரை மாநகரில்

# 25000 மாணவ, மாணவிகளுக்கும் 40000 குழந்தைகளுக்கும் சத்துணவு

கே.எஸ். ஸ்ரீபதி. இ.ஆ.ப
ஆணையாளர்
மதுரை மாநகராட்சி.

கலை வளரும் தலை நகரமாகவும், தமிழ்க் கலாச்சாரத்தின் தலை நகரமாகவும் விளங்கும் மதுரை நகர் தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரமாகும். 1866ஆம் ஆண்டு, 2.56 ச.கி.மீ. பரப்பளவும், 41,600 மக்கள் தொகையையும் கொண்ட நகரமாக இருந்த மதுரை, தற்போது 51.85 ச.கி.மீ. பரப்பளவில் விரிந்திருக்கிறது.

மதுரை நகரில் தற்போது மக்கள் தொகை ஏறக்குறைய 9 இலட்சம். மதுரை நகர் வாழ் மக்கள் தவிர நாள்தோறும் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இந்நகருக்கு வந்து செல்கின்றனர். மதுரை நகருக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து தரும் பொறுப்பை மதுரை மாநகராட்சி ஏற்றுள்ளது. குறிப்பாகக் குடிநீர் வழங்குதல், கழிவுநீரை அகற்றுதல், நகரில் சுகாதாரத்தைப் பேணுதல், முறையாக நகரமைப்பு ஏற்படுத்துதல், கல்வி வசதிகளைப் பெருக்குதல், சாலைகளை அமைத்தல், பராமரித்தல் மற்றும் மின்சார விநியோகம் போன்ற பணிகளை மாநகராட்சி செவ்வனே செய்து வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றத்தின் வழி காட்டுதலி..., தமிழக அரசின் பேருதவி...டும் மதுரை மாநகரை மேம்...த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக, பல்லாயிரக்கணக்கான தெருக் குழாய்கள் நகர் முழுவதும் பதிக்கப்பட்டு அவைகளின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவை தவிர வீடுகளுக்கும் குடிநீர்க் குழாய்கள் இணைப்புகள் தரப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது 39000 இல்லங்களுக்குக் குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

1981-1982ஆம் நிதியாண்டில், 2201 வீடுகளுக்குப் புதிய குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக 413 தெருக்குழாய்கள் குடிநீர் வழங்கப் பதிக்க நடவடிக்கையிலுள்ளது. 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 132 மேல்நிலைத் தொட்டிகள் குடிநீர்வழங்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே வேறு எந்த நகரிலும் இந்த அளவுக்கு மேல்நிலைத் தொட்டிகள் இல்லையென்பது பெருமைக்குரிய ஒன்றாகும். இது தவிர, ஆங்காங்கே அடி குழாய்கள் பொருத்தப்பட்டு, ஆழ் குழாய்க் கிணறுகள் மூலம், குடிநீர் வழங்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பல்வேறு பகுதிகளில் கழிவு நீரேற்று நிலையங்களின் இணைப்புகள் மூலம் கழிவுநீர் அகற்றப்பட்டு, தலைமைக் கழிவுநீரேற்று நிலையத்திற்கு வந்தடைகிறது.

நாள் ஒன்றுக்குச் சுமார் 82 இலட்சம் காலன் கழிவு நீர் நகரிலிருந்து அகற்றப்படுகிறது. கழிவு நீர் அகற்றும் இணைப்புக் குழாய்கள் இல்லங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 46,000 இல்லங்களுக்குக் கழிவு நீர் அகற்றும் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக 137 இல்லங்களுக்கு இவ்வகை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மதுரை நகர் பாதாளச் சாக்கடைத் திட்டம் மதுரை வட பகுதியில் ரூ. 190 இலட்சம் செலவில் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மதுரை நகரின் தென் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லாத பகுதிகளுக்கும் இத்திட்டம் கொண்டுவர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முதல் கட்டமாக இஸ்மாயில்புரம் கழிவுநீர் திட்டம் ரூ. 21.61 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

கீழச்சந்தைப் பேட்டையில் ரூ.7.97 இலட்சம் செலவில் 3வது கழிவுநீர் நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. அவனியாபுரத்தில் ரூ. 44.9 இலட்சம் செலவில் ...வுநீர்த் தேக்கம் அமைக்கப் ...டிருக்கிறது.

## ...லைகள்:

...மதுரை நகரில் 453.389 ...லா மீட்டர் நீளச் சாலைகள், ...துரை மாநகராட்சியால் பரா...க்கப்படுகின்றன. உலகத் ...மிழ் மாநாட்டையொட்டி, ...துரை நகரச் சாலைகள் மிகச் ...ய முறையில் புதுப்பிக்கப்பட்...ன. சாலைகளில் சேரும் குப்...பகள் முதலானவை தனிப் பிரி...நல் அவ்வப்போது சுத்தப்படுத்...கின்றன. சாலைகளில் ஏற்...ம் பழுதுகளும் பெருமளவில் ...னுக்குடன் சரி செய்யப்படு...ன்றன.

மதுரை அருப்புக்கோட்டைச் ...லையில் ரயில்வே லைனுக்கு ...ல் மேம்பாலம் கட்ட ரூ.83.29 ...லட்சத்திற்குத் திட்டம் தயா...க்கப்பட்டு நடவடிக்கை... மேற்கொள்ளப்பட்டுள்ளன. ...ருப்பரங்குன்றம் சாலையுடன், ...ருப்புக்கோட்டைச் சாலையை ...ணைத்துப் புதிய சாலை ...மைக்கும் பணி ரூ. 6.60 இலட்சம் ...ம் செலவில் அரசு நெடுஞ்சாலை ...ற்றும் நகரப் பணித்துறை ...டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

...மதுரை நகரில் உள்ள 108 ...டிசைப் பகுதிகளை மேம்படுத்த ...துவரை ரூ. 175 இலட்சம் ...நெடுஞ்சாலைத் துறையிடம் ...ழங்கப்பட்டுள்ளது. இப் பணி ...ரைந்து செய்யப்பட்டு வரு...ன்றது. நகரின் முக்கிய நடை...தைகளில் சிமெண்டுத் தட்டுக்...கள் பரப்பி சிமெண்ட் கைப்...டி கிராதிகள் அமைக்கப்பட்...ள்ளன.

## ...ல்வி

மதுரை மாநகராட்சியில் 71 ...வக்க மற்றும் நடுநிலைப் பள்ளி...ளும், 12 உயர்நிலைப் பள்ளி...ளும், 8 மேல்நிலைப் பள்ளிகளும் ...டத்தப்பட்டு வருகின்றன.

...மதுரை நகரின் கல்வி வளர்ச்சி...ல் மாநகராட்சி பெரும் பங்கு ...கிக்கிறது. இம்மாநகராட்சியால் ...டத்தப்படும் திருவாப்புடையார் ...ண்கள் உயர்நிலைப்பள்ளி...ல் அரசுத் தேர்வில் 99 மாண...ர்கள் தேர்ச்சி பெற்றுள்ளார்...ள். மதுரை மாநகராட்சி, கீழ ...வணி மூல வீதி பெண்கள் ...யர்நிலைப் பள்ளியில் 96 மாண...கள் அரசுத் தேர்வில் தேர்ச்சி ...பெற்றுள்ளார்கள். இக்கல்வி...ண்டில் மதுரை நகர், கே.கே. ...கர்ப் பகுதியில் புதிதாக ஆரம்...ப்பள்ளி ஒன்று துவக்கப்பட்டுள்...து.

## ...ரமைப்பு

...வளர்ந்து வரும் மதுரை நகரில் ...ரமைப்பு பிரச்சினைக்குரிய ஒன்றாக இருக்கின்றது. இருப்பினும் மாநகராட்சி நிர்வாகம் இப்பிரச்சினையை ஏற்றுச் சிறந்த நகராக மதுரை நகரை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மதுரை நகர் இயல்பாகவே அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள நகராகும். மதுரை நகரை,

நான்கு திசையிலும் நந்நான்கு
தெருக்களாய்த்
தோன்றும் தாமரைபோல்
துலங்கும் நகரிது
அங்கயற் கண்ணியும்
ஆலவாய்ச் சொக்கரும்
நடுவண்ணிலிருந்து அரசோச்
சும் மதுரை.

என்று குறிப்பிடுவார்கள.

இது நமது முன்னோர்களின் நாகரீக வளர்ச்சிக்கும் நகரமைப்புத் திறனுக்கும் சான்றாகவும் விளங்கி வருகிறது.

இப்பாரம்பரியத்தைக் காக்கின்ற வகையில் பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டி மதுரை மாநகராட்சி செயல்படுகின்றது.

உள்ளூர்த் திட்டக் குழுமத்தின் மூலம் பல்வேறு திட்டங்கள் கொள்ளப்பட்டு வருகின்றன. மதுரை நகர் எல்லிஸ் நகர்ப் பகுதியில் 223.65 ஏக்கர் பரப்பளவில் ரூ. 450 இலட்சம் செலவில் குடியிருப்பு அமைக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதுரை மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் மிகப் பெரிய வணிக மையம் ஒன்று ரூ.2 கோடி செலவில் கட்ட திட்டம் வகுக்கப்பட்டு, அதன் ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டு, கடைகள் நடத்த வாடகைக்கு விடப்பட்டுள்ளன. ஆர்.எம்.எஸ். சாலையில் ரூ. 18 இலட்சம் செலவில் தரைத் தளத்தில் 26 கடைகளும், முதல் தளத்தில் அலுவலகப் பகுதிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மதுரை நகரின் மத்திய காய்கறி அங்காடியின் இட நெருக்கடி தவிர்க்க, காய்கறி அங்காடி ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் முன்புறம் மொத்த வியாபாரக் கடைகள் கட்ட ரூ. 7.9 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதுரை நகரில் அமைந்துள்ள வண்டியூர்க் கண்மாயை ஒரு மிகப் பெரிய பொழுதுபோக்கு மையமாக அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கண்மாயில் மேற்குக் கரைப் பகுதியில் முதல் கட்டமாக ரூ. 10 இலட்சம் செலவில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. மொத்த மதிப்பீடு ரூ. 303 இலட்சமாகும். பனகல் தெரு, சிலைக்கு அருகில் கடைகள் மற்றும் தங்கும் விடுதிகள் ரூ. 4 இலட்சம் செலவில் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஓர்க் ஷாப் ரோட்டில் கல்யாண மண்டபம் ஒன்றும் வணிக வளைவும் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இராசாசி விளையாட்டுத் திடலில், காய்கறிச்சந்தைக் கடைகள் மற்றும் திருமண மண்டபம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மதுரை நகரின் வடபகுதியில் இரண்டாவது பேருந்து நிலையமாக அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டு 15.10.81ந் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

மதுரை நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நகரைச் சுற்றி சுற்றுச் சாலையமைக்க வடிவமைப்பு நெடுஞ்சாலைத் துறையினரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மதுரை நகரின் விரிவாக்கப்பகுதிகளில் பல்வேறு

## சாப்பாடும் பாதுகாப்பும்

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. ஆளுடைய பிள்ளை (இ.ஆ.ப) கொடைக் கானலுக்குச் சென்றிருந்தார். அங்கு சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் பள்ளி ஒன்றுக்குத் திடீரென்று சென்று பார்வையிட்டார். எவ்விதக் குறையுமில்லாமலே எல்லாம் நடந்தன. அத்திட்டம் பற்றி, அங்கே வந்திருந்த குழந்தையொன்றின் தாயாரிடம் விசாரித்தார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

"முன்னெல்லாம் இந்தக் கொழந்தையெப் பார்த்துக்கணும் கிறதுக்காகவே நான் வீட்லயே இருந்துர்றதுங்க. சரியானபடி புள்ளைக்கிச். சாப்பாடும் தர முடியறதில்லைங்க. இப்ப, நம்ம அரசாங்கமே இதுங்களுக்கு நல்லா சோறும் போட்டு, படிக்க வெச்சிப் பார்த்துக்கிறதால, நான் குழந்தையைப்பத்திய பயமே இல்லாமெ வெளியே வேலைக்கும் போய்வர முடியுதுங்க. குழந்தைக்குச் சாப்பாடும் ஆச்சி, பாதுகாப்பும் ஆச்சி பாருங்க!" என்று பூரிப்போடு சொன்னார் ஆதிவாசிக் குடியைச் சேர்ந்த அந்தப் பெண்மணி.

புதிய நகரமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மதுரை மக்களுக்கு வரிப்பளுவை அதிகரிக்காமல் மாநகராட்சியின் வருவாயைப் பெருக்கும் வகையில் மேற்கண்ட திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**சுகாதாரம்:**

நகரின் சுகாதாரத்தைக் காக்கும் பணிகள், இம் மாநகராட்சியின் நகர் நலப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாநகராட்சியின் சார்பாக 11 ஆங்கில முறை மருந்தகங்கள், 5 இந்திய முறை மருந்தகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகள் தவிர 15 தாய்சேய் நல இல்லங்கள், ஒரு வீடி மருத்துவ நிலையம் ஆகியவைகள் மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் மூலமாக நகரின் ஏழை எளிய மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை சிறந்த முறையில் அளிக்கப்பட்டு வருகின்றன.

மாநகராட்சியால் இரண்டு, குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 10 மையங்களில் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றன. ஏழைகள் விடுதி ஒன்றும் இம்மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றது. மாநகராட்சியால் நடத்தப்படும் 8 குடும்ப நல மையங்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் வெற்றிக்குப் பயன்பட்டு வருகின்றன. நடமாடும் மருந்தகம் ஒன்று, இம்மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது. இரத்தம், சளி, மலம் போன்றவை பரிசோதிக்கும் பரிசோதனை நிலையம் ஒன்று இம்மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களுக்குக் கட்டணம் எதுவும் பெறாமல், பரிசோதனை செய்து கொள்ள இந்த நிலையம் உதவுகிறது. மிகக் குறைந்த கட்டணம் பெற்றுக் கொண்டு எக்ஸ்-ரே எடுத்துத் தரும் எக்ஸ்-ரே நிலையம் ஒன்றும் மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகள் இம்மாநகராட்சி மருத்துவர்களால் செய்யப்படுகின்றன. இத்திட்டம் சிறு குழந்தைகளுக்கு உள்ள நோய்களை முன்பே கண்டறிந்து, இவைகளை நீக்க பெரிதும் பயன்பட்டு வருகிறது.

நகரில் காலரா, அம்மை, மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் பரவாமல் மாநகராட்சியால் தடுக்கப்பட்டு வருகின்றன. தொற்று நோய்கள் குறிப்பிடத்தக்க அளவில் பரவும் நிலை ஏற்படுகின்ற காலங்களில் அதை நீக்கப் பெரிய அளவில் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மலேரியா போன்ற நோய்கள் வராது தடுக்க தனித் திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கொசு ஒழிப்புத் திட்டத்தின் கீழ், கொசு உற்பத்தியைத் தடுக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரின் பல்வேறு பகுதிகளில் பொதுக்கழிப்பறைகள் மற்றும் சிறுநீர்ப்பிறைகள் ஆகியவை ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுகாதாரச் சிற்றூழியர்களின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு முக்கிய இடங்களில் கட்டணம் கொடுத்துப் பயன்படுத்தும் கழிப்பறைகள் - சிறுநீர்ப்பிறை இம்மாநகராட்சியால் பராமரிக்கபட்டு வருகின்றன.

**மின் விநியோகம்:**

மின் விநியோகத்தை ஏற்று நடத்தும் ஐந்து உள்ளாட்சி மன்றங்களில் மதுரை மாநகராட்சியும் ஒன்று. உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டியும், அதற்குப் பின்பும் மாநகரின் முக்கிய சாலைகளில் சோடியம் வாயு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே 64426 மின் இணைப்புகள் இம்மாநகராட்சியால் வழங்கப்பட்டிருக்கின்றன.

நகரின் பெருகிவரும் தேவைக்கேற்ப 1981-1982ஆம் நிதியாண்டில் வீடுகளுக்கு 4125 மின் இணைப்புகள் மேலும் வழங்கப்பட்டுள்ளன. நகரை ஒளி மயமாக்க சோடியம் வாயு விளக்குகள் தவிர, மெர்க்குரி விளக்குகள், கட் ஆஃப் லாம்[…] அமைக்கப்பட்டு வருகின்[…] கடந்த நிதி ஆண்டில் 16 கி[…] தொலைவில் புதிதாக மின்பா[…] அமைக்கப்பட்டுள்ளது.

மின் தடை ஏற்படுவ[…] தவிர்க்கும்பொருட்டு புதிதா[…] டிரான்ஸ்பார்கள் நிர்மாணிக்[…] பட்டுள்ளது. இது தவிர [...] பழைய டிரான்ஸ்பார்கள் ம[…] றப்பட்டு அதிக சக்தி உ[…] புதிய டிரான்ஸ்பார்மர்[…] பொருத்தப்பட்டுள்ளது. பழு[…] ஏற்பட்ட 12 டிரான்ஸ்பாமர்[…] மாற்றப்பட்டு புதிய டிரான்[…] பார்மர்கள் பொருத்தப்பட்[…] ளன.

மின்சார விநியோகத்தில் ஏ[…] படும் பழுதுகள் உடனுக்குட[…] சரிப்படுத்தப்படுகின்றன. மது[…] நகரின் முறையான மின்சா[…] விநியோகம் செயல்பட்டு வ[…] கிறது. மின்சார விநியோக[…] மதுரை மாநகராட்சியில் இலா[…] கரமான துறையென்பது குறி[…] பிடத்தக்கது.

பெருகி வரும் மக்கள் தொ[…] யில் உருவாக்கப்படும் பல்வே[…] பிரச்சினைகளையும், நெருக்க[…] களையும், தேவைகளையும் மதுரை மாநகராட்சி ஒரு சவா[…] லாக ஏற்றுக் கொண்டு தன[…] தொண்டைத் தொடர்கின்றது. மதுரை நகர் வாழ் மக்களுக்[…] மதுரை நகருக்கு வந்து செல்[…] கின்றவர்களுக்கும், தேவையான எல்லா வசதிகளையும் செய்து தருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 15.9.1982ம் நாள் முதல் ஆண்டு முழுவதும், மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் ஏறத்தாழ 25,000 மாணவ, மாணவிகளுக்குச் சத்துணவு வழங்கப்படவிருக்கிறது. இது தவிர இரண்டு வயது முதல் 5 வயது வரை உள்ள ஏறத்தாழ 40000 குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கென 400 மையங்கள் அமைக்கும் பணி போர்க்கால நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தண்ணிறைவுத் திட்டப் பணிகள்

மதுரை மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக 1981-82ஆம் ஆண்டில் 18 ஊராட்சி ஒன்றியங்களில் தண்ணிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

1. மதுரை கிழக்கு, 2. மதுரை மேற்கு, 3. திருப்பரங்குன்றம், 4. கொட்டாம்பட்டி, 5. அலங்கா நல்லூர், 6. சேடப்பட்டி, 7. தே. கல்லுப்பட்டி, 8. வத்தலக்குண்டு, 9. உசிலம்பட்டி, 10. கள்ளிக்குடி, 11. சாணார்ப்பட்டி 12. ரெட்டியார்சத்திரம், 13. ஒட்டன்சத்திரம் 14. தொப்பம்பட்டி, 15. குஜிலியம்பாறை, 16. கொடைக்கானல், 17. ஆண்டிப்பட்டி 18. சின்னமனூர்.

இந்த ஒன்றியங்களில் பல்வேறு இனங்களில் 2662 வேலைகள் ரூ. 442.87 இலட்சம் ரூபாய் செலவில் ஊராட்சி ஒன்றியுங்கள் மூலம் செய்து முடிக்கப்பெற்றன.



# புதிய பீர்க்கங்காய்

பீர்க்கங்காய் எல்லாரும் விரும்[…] பயிர் செய்யும் கொடிப்பயிர். [...]ா. 1, ஹைச். 160 எனும் [...]கைகள் தமிழ்நாட்டில் பயிரிடப் [...] ஆய்வு வகைகளாகும். இவ் [...]கள் குறைவான மகசூல் [...]ாடுக்கும் தன்மை கொண் [...]வை. இவ்விரண்டு வகைகளை [...]ட நல்ல பண்புகளைக்கொண்ட [...]ரு பீர்க்கங்காய் வகையைத் [...] [...]டுக்கும் பயிர் சிறப்பிப்பு [...]ராய்ச்சி 1971-ஆம் ஆண்டு [...]கல் பெரியகுளத்திலுள்ள [...]ாட்டக்கலை ஆராய்ச்சி நிலை[...]த்தில் ஆரம்பிக்கப்பட்டது.

ஹைச் 160 எனும் பீர்க்கங் [...] வகை விதைகளைக் காமாக் [...]வீச்சுக்கு உட்படுத்தி திடீர் [...]றம் ஏற்படுத்தப்பட்டது. [...] முயற்சியில் விளைந்ததே [...]வ்வாண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் [...]விட்ட பிகேஎம் 1 பீர்க்[...] வகை.

இவ்வகை அதிக மகசூல் தரும் [...] நார் குறைவாக இருக்கும். [...] எழுச்சியில் வளரும். [...]பருவத்திலும் பின் பருவத்தி[...]ம் விதைக்கலாம். தமிழ்நாடு மு[...]ம் பயிரிடலாம்.

**[...] எம். 1 பீர்க்கங்காய் [...]க்குரிய சிறப்புப் பண்புகள்:**

[...]சூல்—25.1 டன் (ஒருஎக்டரில்)
[...]காயின் எடை : 300 கிராம்.

[...] காயின் நீளம்—47செ. மீ.

[...] காயின் நடுத்தரச் சுற்றளவு—[...] செ. மீட்டர்.
[...] நிறம்—கரும் பச்சை.

[...] முதல் செப்டம்பர்-அக்டோபர்.
டிசம்பர்—ஜனவரி முதல் மார்ச்சு—ஏப்ரல்.

வயது—160 நாட்கள்.

விதை அளவு—ஒரு எக்டருக்கு 1.5கிலோ

இடைவெளி—2.5 மீ. —2. மீ.

நார்—காய்களில் நார்குறைவாக அமையும்.

தரம்—உயர்வானது.

**தோட்டத் தயாரிப்பு:**

நிலத்தை நான்கு அல்லது ஐந்து முறை ஆழமாக உழுது பண்படுத்த வேண்டும். 45. செ. மீ. சதுரமும் ஆழமும் கொண்ட குழிகளை எடுக்கவும். பின்பு சிறிது நாட்கள் ஆறப் போட்டு ஒவ்வொரு குழியிலும் 10 கிலோ சாணி உரம் அல்லது கலவை எருவையும், மண்ணுடன் கலந்து நிரப்பவும்.

**விதைப்பு:**

ஒவ்வொரு குழியிலும் 4.5 விதைகளை 2 செ. மீ. ஆழத்தில் குழியினுள் அங்குமிங்குமாக இட்டு குடம் அல்லது பூவாளி கொண்டு தண்ணீர் விடவும். தண்ணீர் விடும்போது குழிகளைத் தண்ணீர் அரிக்காமலும், விதை வெளியில் தெரியாமலும் ஒரு ஓரத்தில் விடவும். விதைகள் முளைக்க 4—6 நாட்களாகும். விதைகள் முளைத்து 25—30 நாட்கள் சென்ற பிறகு ஒவ்வொரு குழியிலும் 3 செடிகளை வைத்து மீதிச் செடிகளைப் பிடுங்கி விடவும்.

தோறும் குடம் அல்லது பூவாளி கொண்டு தண்ணீர் விடவும். பின்னர் 3-4 நாட்களுக்கு ஒரு முறை வாய்க்கால் வழி நீர் பாய்ச்சவும். அதிகமான நீர் குழிகளில் தேங்காமல் வடித்து விடவும் செடிகள் வளர வளர நீர் தங்குமிடங்களைப் பெரிதாக்கவும். பின்னர் செடிகளுக்கு 2 மீட்டர் உயரத்தில் பந்தல் அமைக்கவும்.

**பின்செய் நேர்த்தி**

களைகளை அவ்வப்போது நீக்கவும். ஒவ்வொரு செடிக்கும் முள்ளில்லாத கொழுகொம்பைக் கொடுத்து பந்தலுடன் இணைக்கவும். இக்கொம்புகள் செங்குத்தாய் கொடிகள் படர வகை செய்யும் நிலையில் அமைய வேண்டும். விதைத்து 30 நாட்கள் சென்ற பிறகு ஒவ்வொரு குழியிலும் 100 கிராம் அமோனியம் சல்பேட்டை இட்டு கொத்திக் கொடுத்து நீர்பாய்ச்சவும். விதைத்த 55 நாட்கள் சென்ற பிறகு காய்களைப் பறிக்கலாம்.

**பயிர்ப் பாதுகாப்பு முறைகள்:**

பழ ஈக்கள், இலைப் புழுக்கள் போன்ற பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு பெற கார்பரில் 0.1 சத மருந்தை (1 கிலோ மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது ரோகார் 0.06 சதம் மருந்தை (ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மிலி மருந்தைக் கலந்து) தெளிக்க வேண்டும். இம் மருந்தைச் செடிகள் பூக்க ஆரம்பித்ததும், 15 நாட்கள் இடைவெளியில் 3—5 தடவைகள் தெளிக்கவும்.

மருந்து தெளிப்பதற்கு முன்னால் விளைந்த காய்களை அறுவடை செய்யவும். பி. எச். சி. டி. டி. டீ. எண்டிரின் மருந்துக் கலவையை எக்காரணம் கொண்டும் தெளிக்கக் கூடாது.

சாம்பல் நோயிலிருந்து பாதுகாப்பு பெற 10 லிட்டர் தண்ணீரில் 5 கிராம் மொரிஸ்டான் மருந்து வீதம் கலந்து தெளிக்கவும்.

**இப்புதிய வகையின் விதைகளைப் பெற பெரியகுளத்திலுள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.**



# கால்நடைப் பராமரிப்பில் கவனம்

"பாலைப் பொழிந்துதரும்பசு
தான்-அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா"

என்று பாடி, கால்நடைக்குத் தனி மதிப்பளித்தார் மகாகவி பாரதியார்.

கால்நடைப் பராமரிப்புப் பணிகளைச் சிறப்பாகச் செயற்படுத்துதுவதற்காக மதுரை மாவட்டத்திற்கு ஒரு கால்நடைப் பராமமரிப்பு மண்டல இணை இயக்குநர் மதுரையில் செயற்பட்டு வருகின்றார். மதுரை மாவட்டத்தில் கோழிகள் உட்பட கால்நடைச் சங்கியை க்ணக்குப்படி 33,02116 கால்நடைகள் உள்ளன.

கால்நடைகளுக்கு மருத்துவ வசதி, மேம்பாட்டுத் திட்டங்கள், கேந்திரக் கிராமத் திட்டம், வெக்கை நோய்த் தடுப்புத் திட்டம், நோய்ப் புலனாய்வுத் திட்டம், மாதிரி அளவுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கோழியின விரிவாக்கத் திட்டங்கள், செயற்கைமுறைக் கருவூட்டலுக்கான பொலிகாளை நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆட்டின வளர்ப்பு, பன்றி வளர்ப்பு மற்றும் பெருக்கம், வறட்சித் துயர் துடைப்புப் பணிகளுக்கான திட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கன்றுகள்வளர்ப்புத் திட்டம் ஆகிய இயல்பான மற்றும் சிறப்பான திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இத்துறையினால் செயற்படுத்தப் பெறுகின்றன.

மதுரை மாவட்டத்தில் உள்ள ஆறு கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர்களின் ஆளுகையை உள்ளடக்கிய முப்பத்து நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் செயற்படும் மொத்தம் 69 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. அவற்றில் (6 கால்நடை மருத்துவ மனைகள், 63 கால்நடை மருந்தகங்கள்) கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவச் சிகிச்சை செய்யப்பட்டும் தரக் குறைவான வேண்டாத காளைகள் காயடிக்கப்பட்டும், நோய் வருமுன் தடுப்பதற்குக் கால்நடைகளுக்குப் பருவங்கள் தோறும் தடுப்பு ஊசிகள் போடப்பட்டும் சிறப்பான பணிகள் ஆற்றப்பட்டும் வருகின்றன.

மதுரை, உசிலம்பட்டி மற்றும் வாடிப்பட்டி ஆகிய மூன்று இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு மூன்று கால்நடை மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. எட்டுச் செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களும் 200 செயற்கை முறைக் கருவூட்டல் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. பால் உற்பத்தியைப் பெருக்குதலும், நல்ல தரமான உயர் இனக் கால்நடைகளை உற்பத்தி செய்தலும் இத்திட்டத்தினுடைய விழுமிய நோக்கமாகும். இத் திட்டங்களின் மூலம் ஆண்டிற்கு 1.63 லட்சம் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 16,000 தரமுயர்ந்த பால் திறன் அதிகமுள்ள கிடேரிக் கன்றுகள் ஆண்டுதோறும் உருவாகின்றன.

மதுரை மாவட்டத்தில் எட்டுக் கேந்திரக் கிராம நிலையங்களும் எண்பது கேந்திரக்கிராமக் கிளை

**டாக்டர் ஆ. சு. பரிபூரணம்**
**மண்டல இணை இயக்குநர்**
**மதுரை**

நிலையங்களும் ஒவ்வொரு கேந்திரக் கிராம நிலையத்திற்கு பத்துக் கிளை நிலையங்கள்வீத சீரிய முறையில் செயற்பட்டு வ கின்றன. விழுமிய உயர்இ கால்நடைகளை உருவாக்குதலு பால் உற்பத்தியைப் பெருக்கு லுமே இத் திட்டத்தின் முக்கி குறிக்கோள்களாகும்.

இத் திட்டத்தின் வாயிலா 1,05,493 செயற்கைமுறைக் க ரூட்டல்கள் செயற்பெற் 19,405 தரமான கன்றுகள் பி துள்ளன.

கொடிய வெக்கை நோய் கா நடைகளுக்கு வராமல் தடுக்க மதுரையைத் தலைமையிடமா கொண்டு ஒரு வெக்கை நோ தடுப்பு அணியும், போட்டி இன்னொரு அணியும், [illegible] கேம்ப்பில் ஒரு சோதனைச் சா டியும் செயற்படுகின்றன. 19 82ல் 6,21,308 வெக்கைநோ தடுப்பு ஊசிகள் போடப்பட்டு ளன.

நோய்ப் புலனாய்வுத் திட்ட தின் வாயிலாக 47,473 கா நடைகள் பரிசோதனை செய் பட்டுள்ளன. ஆங்காங்கே நோ கிளர்ச்சிகள் ஏற்படுமாயின் உட தடுப்பு நடவடிக்கை மேற்கொ ளும் பணியில் இதற்கான த பிரிவு செயல்படுகிறது.





கால்நடைப் பராமரிப்புத் திட்டத்தின் செயற்பாட்டினால் தனித்த மக்கள் பயன் துய்க்கின்றனரா, முன்னேற்றம் அடைந்துள்ளனரா என்பதை அறிய தேவையான விவரங்கள் மாதிரி அளவு திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன. பழனியைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு கால்நடைப் ஆய்வாளருடன் இத் திட்டம் செயற்பட்டு வருகின்றது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக நடுத்தர, சிறு விவசாயிகளுக்கும், மிக சிறு விவசாயிகளுக்கும் மற்றும் வேளாண்மைக் கூலியாளர்களுக்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பால் மாடுகள், ஆடுகள் மற்றும் கோழிகள் பன்றிகள் வாங்குவதற்குத் தொகைகள் கடனாகவும் மானியத்துடனும் வழங்க ஏற்பாடு செய்யப் படுகிறது. பயன் பெறுவோர் பராமரிக்கும் கால்நடைகளுக்கு அந்தந்தப் பகுதிகளிலே உள்ள கால்நடை நிலையங்கள் மூலமும் மருந்தகங்கள் மூலமும் மருத்துவ வசதி செய்யப்பட்டு வருகின்றது. இதில் பயன் பெறுவோருக்கு வங்கிகள் மூலம் கடனுதவியும் மாவட்டக் கிராம வளர்ச்சிக்குழு மூலமும் மான்யமும் கிடைக்க வழி வகைசெய்யப்பட்டுள்ளது.

உயர் இனக் கோழிகளைப் பெருக்கவும், பகுதிவாழ் மக்களின் இறைச்சி முட்டை தேவைகளை ஈடு செய்யவும் இந்த மாவட்டத்தில் கோழியின விரிவாக்க திலைபக்கட்டுப்பாட்டின் கீழ் நான்கு கோழியின விரிவாக்க நிலையங்கள் முறையே வைகை அணை, கருத்தப் புளியம்பட்டி, காந்திக் கிராமம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் செயற்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு தேவைப்படும் உயிரினக் கோழிகளை வளர்ப்பதற்கு விநியோகிக்க இந் நிலையங்கள் உதவுகின்றன.

நல்ல தரமான உயர்இன மாடுகள் மற்றும் எருமைகளைப் பெருக்கும்நோக்குடன் செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களுக்கு விந்து வழங்க வேண்டி இம்மாவட்டத்தில் எட்டு பொலி காளை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

ஆடு வளர்ப்பினால் சமுதாயத்தின் அடித்தள மக்கள் நிறைவாக பயன்பெறுகின்றனர் என்பது வெள்ளிடைமலை. இச்சங்கத்தில் இணைபவர்களுக்குத் தேசியமயமாக்கப்பெற்ற வங்கிகளின்





வாயிலாக ஆடுகள் வாங்கக் கடனுதவியும், மற்றும் நோய் வராமல் தடுக்கவும் மற்றும் சிறந்த முறையில் வளர்க்கவும் தொழில் நுட்ப உதவிகள் அளிக்கப்படுகின்றன.

நல்ல தரமான பன்றிகள் வளர்ப்பும் பலவீனப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அடிப்படையாக திகழ்வதாகும். இதற்கான வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 25 பேர்கள் பயன் பெற உள்ளனர். ரூ.38000- மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி மூலம் இத்திட்டத்திற்குக் கடன் உதவி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தீவனப் பயிர் வளர்ச்சிப் பணி சிறப்பாக ஆற்றப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் வாயிலாக இவ்வாண்டில் 319.25 ஏக்கர் நிலத்தில் தீவனப் பயிர் பயிரிடப்பட்டும், 19,618 மெட்ரிக் டன் எடையளவு தீவன பயிர் விதைகள் வழங்கப்படும், 3 இலட்சம் கூபாபுல் தீவனப் பயிர் நாற்றுகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டும் உள்ளன. கால்நடைப்பசுந்தீவன உற்பத்திக்காக விவசாயிகளுக்கு மானியமும் வழங்கப்படுகிறது.

சென்ற ஆண்டு மதுரைமாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டது. மாடுகள் வைத்துப் பிழைப்பை நடத்தும் ஏழை எளிய மக்கள் வைக்கோல் இன்றித் தவித்தனர். இந்தத் துயர் நிலையைத் துடைக்க வறட்சித் துயர்துடைப்புப்பணி துறை வாயிலாக 8,83,120கிலோ வைக்கோல் மாநிலத்தில் வறட்சி பாதிக்கப்பெறாத பகுதிகளில் இருந்து வாங்கப் பெற்று ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கப்பெற்று அவர்களின் தேவை நிறைவு செய்யப்பட்டது. இதற்காக ரூ. 2,57,000- செலவிடப்பட்டது. வறட்சியினால் கால்நடைகளுக்கு கோமாரிநோய் வராமல் - பரவாமல் தடுக்க 10266 கால்நடைகளுக்குக் கால் மற்றும் வாய் நோய் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. ரூபாய் 7,65,000-க்கு மருந்துகள் வாங்கிக் கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. வறட்சிப் பகுதிகளில் 32 தண்ணீர்த்தொட்டிகள் அமைக்கப்பட்டன.



மேற்குத் தொடர்ச்சி மலை கன்றுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், சிறு விவசாயிகளுக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும் ரூ. 800ஐ மான்யமாகவும் மற்றும் ரூ.800- கடனாகவும் தீவனமாகவும் வழங்கப்படுகிறது. விவசாயக் கூலிகளுக்கு ரூ. 534 கடனாகவும் ரூ. 1056- மான்யமாகவும் தீவனக் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கன்றுகளின் 3வது மாத வயது முதல் 28வது மாத வயது முடிய மொத்தம்25 மாதங்களுக்குத் தீவனம் குறிப்பிட்ட வீதத்தில் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தில் ஒரு கன்றுக்கு 25 மாதத்திற்குத் தேவையான 16 குவிண்டால் தீவனம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 500 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இத் திட்டத்தின் மூலம் 1981-82 ஆண்டில் தீவனத்திற்கான மான்யமாக ரூ. 1,72,300- செலவிடப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்புப் பணிகள் சிறப்பாக ஆற்றப்பெறுகின்றன. திட்டங்கள் எழிலோடும் ஏற்றத்தோடும் செயற்படுத்தப் பெறுகின்றன. மக்களின் வாழ்வுக்கும் வளனுக்கும் கால்நடைப் பராமரிப்புத்துறைப் பணிகள் உறுதுணையாக இலங்குகின்றன.

# கோவையில் சத்துணவுத் திட்டம்



கோவை மாவட்டத்தில்,பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்க 1397 மையங்களும், 2 வயதிலிருந்து 4 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 826 மையங்களும் ஆக மொத்தத்தில் 2,223 மையங்கள் செயல்பட்டு, 1397 மையங்களில் 1,75,000 மாணவர்களும் 826 மையங்களில், 80,000 குழந்தைகளும் சத்துணவு பெற்று வருகிறார்கள்.

இரண்டாவதாகச் சொன்ன 826 மையங்களில் 826 படித்த பெண்மணிகள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இதில் குறிப்பாக 27 விதவைகளும், 15கணவனால் கைவிடப்பட்ட பெண்களும், 109 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களும், 7 மலைவாழ் வகுப்பைச் சார்ந்தவர்களும், குழந்தைகள் நல அமைப்பாளர்களாக வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இம்மையங்களில் மையத்திற்கு இருவர் வீதம் உதவியாளர்கள் நியமிக்கப்பட்ட வகையில் 1595 பேர் கிராமப்புறப் பெண்மணிகள் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இவ்வுதவியாளர்களில் 266 விதவைகளும், 59 கணவனால் கைவிடப்பட்ட பெண்களும், 140 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களும் 18 மலைவாழ் வகுப்பைச் சார்ந்தவர்களும் இடம்பெற்றிருக்கிறார்கள். இம்மையத்தைப் பொறுத்த அளவில் நியமிக்கப்பட்டுள்ள 826 பேரில் 750 பேர் திருமணமாகி குழந்தை பெற்றவர்கள். மக்கட் செல்வத்தின் அருமையையும், பெருமையையும் உணர்ந்த பெண்மணிகள். இதுபோலவே பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ள மையங்களில் 1397 உதவியாளர்களும் 1397 சமையல் வேலையாட்களும் ஆக மொத்தம் 5115 பெண்கள் இத் திட்டத்தால் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளார்கள்.

**பொன். சுப்பையா,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கோயம்புத்தூர்.**

கோவை மாவட்டத்தில் உள்ளது ஜி. கவுண்டம்பாளையம். அது, அழகிய ஒரு குக்கிராமம். அங்கே துவக்கப்பள்ளி ஒன்று உண்டு. இப்பள்ளியில் பயில்வோர் எண்ணிக்கை 184. இதில் புதிதாக முதலாம் வகுப்பில் சேர்ந்தவர்கள் 42 பேர். 5 வயதை எட்டிப் பள்ளிக்கு வர வேண்டிய வயதைப் பெற்றவர்களில் இருவரைத் தவிர எல்லோரும் பள்ளியில் சேர்ந்துவிட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. மலைச்சாமி அவர்கள்அங்கே தணிக்கை செய்யச் சென்றார்.

புதிய இலவச சத்துணவுத் திட்டம் குறித்து பள்ளித் தலைமை ஆசிரியரிடம் அவர் விசாரித்தார். "புதிய சத்துணவுத் திட்டத்தால் பள்ளியில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது, இவ்வூரில் இத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது; குழந்தைகள் அதிக அளவில் நாள்தோறும் பள்ளிக்கு வருவதால் எங்களுக்கு உற்சாகம் பிறந்திருக்கிறது, விடுமுறை நாட்களில் கூடப் பணியாற்றுகிறோமே என்ற தயக்கம் எங்களுக்குஏற்படவில்லை" யென்றும் பெருமையோடு சொன்னார் பள்ளியின் தலைமை ஆசிரியர்.

தனது பேத்தி, பேரன்களைத் தூக்கிக் கொண்டு வந்த அலமேலு கருப்பாயி என்ற மூதாட்டிகள் மிகுந்த சிரிப்போடும் வரவேற்போடும் "எங்க பேரன் பேத்திகளுக்குத் தினந்தோறும் இங்கே கல்யாணச் சாப்பாடுதாங்க. அவ்வளவு ருசியாகவும் சுத்தமாகவும் பக்குவமாகவும் சமைச்சுப் போடறாங்க. இந்தச் சாப்பாடு கிடைக்கிறதுக்குக் கொடுத்து வைக்கணுங்க..எங்களமாதிரி கஷ்டப்படுற தாய் தந்தையர் ஆனந்தப் படற மாதிரி இந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்த மகராசன் நல்லாயிருக்கணுங்க" என்றனர். எல்லாக் கிராமங்களில் உள்ள மையங்களிலும் மாவட்ட ஆட்சியாளர் சென்ற இடமெல்லாம் நல்ல வரவேற்பும் மக்களிடம் ஆர்வமும் காணப்பட்டன.

## அருந்ததி பார்த்து ..
## அல்லல் துடைத்து...



ஏழை எளியவர்களுக்கு, சுய வேலை வாய்ப்பில் ஈடுபட விரும்புவோருக்கு எல்லாம் தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் தந்து உதவி வருகின்றன. அந்த வகையில் சிண்டிகேட் வங்கியின் அண்ணா சாலைக் கிளையும் காலணி தைக்கும் ஏழை எளியவர்க்குக் கடன் தந்து உதவியிருக்கிறது.

ஆகஸ்டு 24-ந்தேதி நடந்த இந்த விழாவில், மாண்புமிகு கதர் கிராமத் தொழில் அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்கள், அருந்ததியர்க்குக் (காலணித் தொழிலாளர்களுக்கு) கடன்கள் வழங்கினார்.

காலணித் தொழிலாளர்கள் 36 பேர்களுக்கு ரூ. 700லிருந்து ரூ. 5000 வரை கடன்கள் வழங்கப்பட்டன.

கடன்கள் வழங்கி மாண்புமிகு கதர் கிராமத் தொழில் அமைச்சர் திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்கள் பேசுகையில்: "ஏழை எளியவர்களுக்கு — வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களுக்கு இந்த வங்கி கடன் தந்து உதவி வருவதைப் பாராட்டுகிறேன்" என்றார்.

விழாவில், வங்கியின் தமிழ் நாடு மண்டல உதவிப் பொது மேலாளர் திரு. கே. டி. குடுவா, வட்டார மேலாளர் திரு பி. வசந்தன், திரு ஏ. என். சீனிவாசராவ். அருந்ததியர் சங்கத் தலைவர் திரு அருணாசலம் ஆகியோர் பேசினர்.

திரு. எம். ருஸ்வெல்ட் அவர்கள் நன்றி கூறினார்.







# திரைப்படத் துறைக்கு ஒரு திருவிழா!

—தமிழ்ப்பித்தன்

ஆகஸ்ட் 15-ஆம் நாள் மாலை நேரம். கலைவாணர் அரங்கம் புதுக்கோலம் கொண்டிருந்தது. அதன் உள்ளும் புறமும் மக்கள் கூட்டம் அலைகடலெனத் திரண்டிருந்தது. 1980-81-ல் வெளி வந்த சிறந்த திரைப்படங்களுக்கும், பங்கு பெற்ற கலைஞர்களுக்கும் தமிழக அரசு விருது வழங்கிச் சிறப்பிக்கும் இனிய காட்சியைக் காண்பதற்கே வெள்ளம்போல் மக்கள் கூட்டம் கூடியிருந்தது.

**மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன்** அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் தெரிவித்தார்:

''பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் சிறந்த திரைப் படங்களுக்கும், சிறந்த கலைஞர்களுக்கும் விருது வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி அமல்படுத்தி வந்தார்கள். அவருக்குப் பின்னர் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் அதனைத் தொடர்வதுடன், சிறந்த கருத்துக்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லும் படத்திற்கு 1 இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.''

விழாவுக்குத் தலைமை ஏற்றிருந்த **மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள்** தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''திரைப்படங்கள் நமது தேசிய வாழ்விலும் சொந்த வாழ்விலும் சிறப்பிடம் பெறுகின்றன. அவை நமக்குக் கேளிக்கை விருந்தை வழங்குவதுடன் நமக்குப் போதனையையும் வழங்குகின்றன. நம்மை உயர்த்தவும் செய்கின்றன.''

அடுத்து, நிதி உதவிக்குரிய படங்களைத் தேர்ந்தெடுத்த தேர்வுக் குழுத் தலைவர் **மாண்புமிகு நீதிபதி திரு எஸ். சாமிக்கண்ணு** தெரிவித்தார்:

''திரைப்படங்கள் இதயத்தைத் தொட வேண்டும்; உற்சாகத்தை உருவாக்க வேண்டும்; தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். வாழ்க்கைப் போராட்டத்தைச் சந்திக்கக் கற்றுத் தர வேண்டும். அப்படி இருந்தால் தான் திரை தரும் காவியங்கள் பெருமை பெற முடியும்.''

''திரைக் காவியம் சுவையாக இருக்க வேண்டும். காண்போரை அது தன் வயப்படுத்த வேண்டும். குழந்தைச் செல்வங்களின் மனத்தை அது பக்குவப்படுத்த வேண்டும்;

சிறந்த நடிகராக திரு கமலஹாசன், சிறந்த நடிகையாக செல்வி சுஹாசினி, சிறப்புப் பரிசு நடிகராக திரு கே. பாக்யராஜ், சிறப்புப் பரிசு நடிகையாக திருமதி சுஜாதா, சிறந்த இயக்குநராக திரு கே. பாலச்சந்தர். சிறந்த கதாசிரியராக திரு எம்.ஏ. அப்பாஸ், சிறந்த உரையாடல் ஆசிரியராக திரு வலம்புரி சோமநாதன், சிறந்த இசையமைப்பாளராக திரு இளையராஜா, சிறந்த பின்னணிப் பாடகராக திரு. எஸ். பி. பாலசுப்மணியம், சிறந்த பின்னணிப் பாடகியாக திருமதி பி. சுசீலா, சிறந்த பாடலாசிரியராக திரு புலவர் புலமைப்பித்தன், சிறந்த ஒளிப்பதிவாளராக திரு அசோக்குமார், சிறந்த நகைச்சுவை நடிகராக (அமரர்) திரு சுருளிராஜன், சிறந்த நகைச்சுவை நடிகையாக திருமதி மனோரமா, சிறந்த படத் தொகுப்பாளராக திரு ஆர். விட்டல் ஆகியோர் ரூபாய் 5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப் பதக்க விருது பெற்றனர். ராஜா சாண்டோ நினைவுப் பரிசு திரு ப. நீலகண்டன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பரிசு பெற்ற தொழில் நுணுக்கக் கலைஞர்களின் சார்பில் **இயக்குநர் திரு கே. பாலச்சந்தர்** நன்றி கூறினார்.

அடுத்து உரையாற்றிய **தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் திரு எஸ். எஸ். இராஜேந்திரன் மாண்புமிகு முன்னாள் தலைமை நீதிபதி திரு டி. ராமபிரசாத ராவ், தமிழ்நாடு திரைஅரங்கு சங்கத் தலைவர் திரு டி. ராமானுஜம், தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு கே. வெஙகட்ராம், தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு வலம்புரி சோமநாதன், தென்னிந்தியத்திரைபபட வர்த்தக சங்கத்தின் துணைத் தலைவர் விட்டல்தாஸ் ஜெகநாததாஸ்.** ஆகியோர் பேசினர்.

பின்னர், சிறந்த படங்களுக்குரிய பரிசுகளையும் சிறந்த நடிகர், நடிகை, மற்றும் தொழில் நுணுக்கக் கலைஞர்கள் ஆகியோர்களுக்குரிய பரிசுகளையும், உதவித் தொகைகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். (சிறந்த படத் தொகுப்பாளருக்குரிய பரிசு இந்த ஆண்டு முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது).

'வறுமையின் நிறம் சிவப்பு' முதற்பரிசையும் (ரூபாய் 50 ஆயிரமும் தங்கப்பதக்கமும்) 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' இரண்டாம் பரிசையும் (ரூபாய் 30 ஆயிரமும் வெள்ளிப் பதக்கமும்) 'வண்டிச் சக்கரம்' மூன்றாம் பரிசையும் (ரூபாய் 20 ஆயிரமும் வெள்ளிப் பதக்கமும்) பெற்றன. 'ஒரு கை ஓசை' சிறப்புப பரிசை (ரூபாய் 25 ஆயிரமும் வெள்ளிப் பதக்கமும்) பெற்றது.

மாநில திரைப்பட நிதி உதவித் திட்டத்தின் கீழ் சூறாவளி, வடைமாலை, மீண்டும் சோகிலா, துணைவி, காலம் தப்பிய பயிர் ஆகிய படங்கள் ஒவ்வொன்றிற்கும் 1 இலட்ச ரூபாய் உதவித் தொகையை முறையே **விமாய் கோஷ், ஜெயந்தி, டி. ஆர். சீனிவாசன், வலம்புரி சோமநாதன், ஏ. எம். ராஜு** ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

விழாவில் சிறப்புரை ஆற்றிய **மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள்** தெரிவித்தார்:

''நாட்டில் இல்லாத கதா பாத்திரங்களை நாமே உருவாக்கிக் கொண்டு கதையை அமைப்பது ஒருவகை. இருக்கின்ற ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டு இல்லாத குணங்களைச் சொல்வது ஒரு வகை.

''படத்தின் மையக் கருத்துகளை வைத்துப் பாத்திரங்களை உருவாக்க வேண்டும். தயாரிப்பாளர்கள், தமிழகத்தில் உள்ள கலாச்சாரம் காப்பாற்றப்படும் வகையிலே பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் கலைஞர்கள். ஒரு எல்லைக் கோட்டைத் தாண்டிப் போகாத முறையில்-கட்டுப்பாட்டுடன் பாத்திரங்களை உருவாக்கிக் கொண்டால் கலைஞர்கள் வெற்றி பெற முடியும். திரைப்படத்திற்கு மட்டுமல்ல எல்லைக் கோடு -கட்டுப்பாடு. வாழ்க்கைக்கும் இது தேவைதான்.''

செய்தி மக்கள் தொடர்புத் **துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன், இ.ஆ.ப.** அவர்கள் நன்றி கூற, விழா இனிது முடிந்தது.





# ஐம்பெரும் விழா

அ. ம. விநாயகம்

கல்லிலே கலைவண்ணம் கண்டவர்கள் பல்லவப் பெருமன்னர்கள். அந்தப் பல்லவர்களின் பெயரால் அமைந்த பல்லவபுரம் என வழங்கப்படும் பல்லாவரத்தில் 21.7.1960 அன்று ஊர்ப் பெருமக்களின் நன்முயற்சியாலும் பேருதவியாலும் தமிழக அரசின் ஆணையாலும் 288 மாணவர்களைக் கொண்டு 12 ஆசிரியர்களுடன் மறைமலை அடிகள் அரசினர் மேல்நிலைப்பள்ளி 'செங்கை மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளி என்னும் பெயரால் தொடங்கப் பெற்றது. இப்பள்ளியில் இப்போது 1,700 மாணவர்கள் பயில்கின்றனர். இப்பள்ளியின் ஐம்பெரும்விழா 8.8.82 அன்று நடைபெற்றது.

அரசினர் நங்கைநல்லூர் உயர்நிலைப் பள்ளி மாணவியர்களின் நடன நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. பள்ளிக் கல்வி இயக்குநர் திரு.கி.வேங்கடசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சட்டமன்ற உறுப்பினர் திரு கே.எம் அப்துல் ரசாக் அவர்கள் முன்னிலை வகித்தார். பள்ளி அறிக்கையைத் தலைமை ஆசிரியர் திரு நல்லி இராமநாதன் அவர்கள் படித்தார். கல்வி அறிக்கையை முதன்மைக் கல்வி அலுவலர் திரு பி.வி. முனிரத்தினம் அவர்கள் வாசித்தார்.

மூன்று வகுப்பு அறைகளைக் கொண்ட கட்டடத்தினை மாண்புமிகு தமிழக அரசின் சிறப்புப்பிரதிநிதி திரு இரா. மோகனரங்கம் அவர்கள் திறந்து வைத்துப் பேசுகையில் தமிழகம் தான் அதிக நிதிவசதியைப் பெற்று அதிகப் பற்று இல்லாமல் இருக்கின்றது (Over draft) என்றார். அறிவியல் ஆய்வக நீரேற்றும் பொறியைக் கல்வித்துறைச் செயலாளர், திரு செ. இராமதாஸ், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச்.ஜே. இராமச்சந்திரன், இ.ஆ.ப.. அவர்கள் பாரதியார் நூற்றாண்டு விழா நூல்களை வழங்கினார்.

தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. டி. கே. சீனுவாசன் அவர்கள் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்குப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் நன்கொடைக்கான காசோலையை மாண்புமிகு முதல்வரிடம்வழங்கிப் பேசுகையில் "தாய்மொழி தமிழை தனித்தன்மையோடு எழுத முடியும் என்று நிரூபித்தவர் மறைமலை அடிகள்" என்றார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறையமைச்சர் திரு.ப.குழந்தைவேலு அவர்கள் பல்லவபுரம் நகராட்சி சார்பில் போடப்பட்டுள்ள 5 சோடியம் ஆவி விளக்குகளை ஏற்றிவைத்துப் பேசுகையில், "வருகின்ற காலம் மாணவர்கள் காலம். அதை உணர்ந்து செயல்பட வேண்டும்" என்றார். பல்லவபுரம் நகராட்சித் தனி அலுவலர் திரு அ.விக்டர் தங்கராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்களுக்கான மாலை நேர தனிவகுப்புகளைத் தொடங்கி வைத்தும், புயல் நிவாரண நிதியைக் கொண்டு கட்டவிருக்கும் கட்டடத்திற்குக் கால்கோள் நாட்டியும் பேசுகையில், நான் "நன்கு படிப்பேன், சமுதாயத்திற்கும், மக்களுக்கும், நாட்டிற்கும் பாடுபடுவேன் என்று மாணவர்கள் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்" என்றார்.

கல்வித்துறையின் சார்பாகச் சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 2,26,138 மாண்புமிகு கல்வி அமைச்சர் மாண்புமிகு முதல்வரிடம் வழங்கினார். பல்வேறு



நிறுவனங்கள் சார்பாகவும், பொதுமக்கள் சார்பாகவும், சத்துணவுத் திட்டத்திற்கு முதல்வரிடம் நிதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தும், ஒலி-ஒளிக்கூடக் கட்டடத்தைத் திறந்துவைத்தும் உரையாற்றியபோது, "மறைமலை அடிகள் ஊட்டிய உணர்ச்சி இன்று தமிழகத்தில் எழுச்சிபெற்று இருக்கின்றது" என்றார்.

மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் மறைமலை அடிகள் சிலையையும், பழைய மாணவர் சங்கத்தார் கட்டியுள்ள 'பாரதியார் நூற்றாண்டு விழா' அரங்கத்தையும் திறந்து வைத்து, பாடநூல் நிறுவன நன்கொடையால் கட்டப்படவிருக்கும் கட்டடத்திற்குக் கால்கோள் செய்தும் உரையாற்றினார்.

"தமிழ் இயக்கத்தின் தந்தை பெரியவர் மறைமலை அடிகளார் பெயரால் விளங்கும் இந்தப் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கழக விழாவில் கலந்து கொண்டு சிலையைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"மாணவ, மாணவியர்கள் இங்கு பேசியவர்களின் பேச்சை எப்படிக் கூர்ந்து கவனித்தீர்கள் என்பதை நான் கவனித்தேன். இங்கு நடனம் ஆடிய மாணவியர்கள் இசைக்கு ஏற்ப ஆடிய விதத்தையும் கவனித்தேன். இவர்கள் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

"இந்த மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து நிர்வாகிகளாக உள்ளனர். இரண்டு பேரும் சேர்ந்து செயல்படுவது மிகவும் பாராட்டுக்குரியது. மற்ற பள்ளிகளிலும் இதுபோல் செயல்பட வேண்டும். கற்றுக்கொடுக்கிறவர்கள் ஏற்றுக்கொள்கிறவர்கள் கடமையோடு செய்தால் அது நல்ல முறையில் வெற்றி பெறும். ஆண், பெண் இருவரும் சமமாகவே வாழவேண்டும். அப்போதுதான் நாட்டில் சமத்துவம் ஏற்படும்.

"மாணவர்கள் கேள்வி கேட்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். கேள்வி கேட்டால்தான் சிந்தனை வளரும். ஆசிரியர்கள் மட்டும் மாணவர்களைப் பார்த்து கேள்வி கேட்டால் போதாது, ஆசிரியர்களைப் பார்த்து மாணவர்கள் கேள்வி கேட்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

"மாணவர்கள் படித்து முடித்து வெளியே வந்தால் மட்டும் போதாது. பொது அறிவு பெற்றவர்களாக வரவேண்டும். தொழிற்கல்வி பயில வேண்டும். அப்படித் தொழிற்கல்வி பெற்றவர்கள் தாங்கள் சுயமாகத் தொழில் தொடங்கும் ஆற்றலைப் பெற்று தொழிலைத் தொடங்குகிறார்கள். தொழில் தொடங்குவதற்கு வேண்டிய உதவிகளை அரசு செய்யும்.



"மாணவர்கள் தங்களுடைய கடமையில் இருந்து சிறிதும் விலகாமல் பொறுப்பை உணர்ந்து படிக்க வேண்டும். படித்துவிட்டு வெளியே வரும் மாணவர்கள் வேலையில்லாமல் அவதிப்படும் 4 பேர்களுக்காவது வேலை கொடுக்கும் தகுதியைப் பெற வேண்டும்.

"இந்தப் பள்ளியில் ஆளத் தகுந்தவர்கள் உருவாக வேண்டும், மறைமலை அடிகள் போல, பேரறிஞர் அண்ணா போல் நீங்கள் வரவேண்டும். பல்வேறு மாநிலத்திலிருந்து இங்கு வருபவர்களும், வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்களும் இந்தச் சிலையைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும்."

விழா இறுதியில பெற்றோர் ஆசிரியர் கழக இணைச் செயலாளர் புலவர் ப.தட்சிணாமூர்த்தி அவர்கள் நன்றி கூறினார்.

23-7-82 ம் தேதி சேலம் மாவட்டத்தில் மேச்சேரி ஒன்றிய விவசாயிகளுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் நில உடைமைப் பதிவேடுகளை வழங்கினார்.



# செலவு குறைய, சிபாரிசுப்படி உரமிடுங்கள்.



மானாவாரி சோளம், கம்பு போன்ற சிறுதானியப் பயிர்களுக்கு சிபாரிசுப்படி உரமிடுவது மிகவும் லாபகரமானது.

எந்த ஒரு பயிருக்கும் சிபாரிசுப்படி உரமிட்டால் ஒரு குவின்டாலுக்கான உற்பத்தி செலவு குறையும். சோளப்பயிரைப் பொறுத்தவரை இதைக் கீழே தெளிவாகக் காணலாம்.

| | உரம் இடாவிட்டால் | சிபாரிசுப்படி உரமிட்டால் |
|---|---|---|
| சோளம் சாகுபடி செலவு ஏக்கருக்கு | ரூ. 400 | ரூ. 555 |
| விளைச்சல் ஏக்கருக்கு (குவின்டால்) | 4 | 9 |
| எனவே ஒரு குவின்டால் உற்பத்திக்கு ஆகும் செலவு | ரூ. 100 | ரூ. 62 |

பார்த்தீர்களா! சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்துவிடுகிறது. லாபமும் மிக அதிகமாகிறது. பருவ மழை குறைவான காலத்திலும்கூட உரமிட்ட பயிர் அதிக நாட்களுக்கு வறட்சியைத் தாங்கி, பலனளிக்கிறது. இதே போல் கம்பு போன்ற மற்ற சிறு தானியப் பயிர்களிலும் சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு குறைகிறது.






சமச்சீர் உரமிட

விஜய்

மானாவாரி சோளம், கம்பு போன்ற பயிர்களுக்கு ஏற்ற உரம் விஜய் 14-28-14 ஏக்கருக்கு 30 கிலோ விஜய் 14-28-14 உரத்துடன் 25 கிலோ விஜய் யூரியாவையும் சேர்த்து அடியுரமாக இடவேண்டும். உரத்தைப் பரவலாகத் தூவாமல் விதைக்கு 5 செ.மீ. ஆழத்திலும் 5 செ.மீ. பக்கத்திலும் இடவேண்டும்.

மேலும் சிறுதானியப் பயிர்களுக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

| விஜய் 14-28-14 உரத்தின் விவரக் குறிப்புகள் (சதவிகிதத்தில்) | |
|---|---|
| தழைச் சத்து | 14 |
| மணிச் சத்து | 28 |
| சாம்பல் சத்து | 14 |
| நிரப்பி (குறுமணல் அல்லது டாலமைட்) | 11.5 |

HTM-MFL-2794


# காடு அதை நாடு

வனங்களின் முக்கியத்துவத்தை இன்று அனைத்துலக அளவிலேயே உணர்ந்து அதற்கேற்பத் திட்டங்கள் தீட்டி வரும் வேளையில், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கிய மதுரை வன மண்டலத்தில் காடுகள் வளர்ப்பதற்கும், ஏற்கெனவே உள்ள காடுகளைப் பாதுகாப்பதற்கும், காடுளின் மூலம் கிடைக்கும் உப பொருட்களை மக்களுக்குப் பயன்படும் விதத்தில் விநியோகிப்பதற்கும் ஏற்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மதுரை மாவட்டத்தில் தற்போது பேணப்பட்டு வரும் காப்புக் காடுகள் மற்றும் காப்பு நிலங்களின் பரப்பு சுமார் 2,972.566 சதுர கிலோ மீட்டராகும். இது மொத்தப் பரப்பில் 23.42 சதவிதமாகும். மேலும், புதிய காடுகள் உண்டாக்க ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மதுரை நகர் மக்களின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு 1981-82ஆம் வருடத்தில் 3,577 மெட்ரிக் டன் எடையுள்ள விறகுகள் ஒரு டன் ரூ. 70 விதம் கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டும் அதே மாதிரியான விநியோகத்திற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுபோலவே வனச் சார்புள்ள தொழிலகங்களான தென்

இந்தியா விஸ்கோஸ் கம்பெனி, சேசஷாயி பேப்பர் மில்ஸ் மற்றும் டான் இந்தியா கம்பெனி போன்றவைகட்குக் கூழ்மரங்களும், அவைகளின் பட்டைகளும் கீழ்க்கண்ட அளவுகளில் 1981-82ல் விநியோகம் செய்யப்பட்டன.

அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் குறிப்பிடத்தக்கதாகும்.

இவை தவிர சில்லறை மகசூல் வனப்பொருட்களான மூங்கில், புளி, பனைப்பொருட்கள், இலவு, கடுக்காய், முந்திரி போன்றவைகளும் ஏலத்தில் விடப்பட்டு அரசுக்கு வருமானம் கிடைக்கப்பெற்றன.

காடுகளை வளர்ப்பதைப் பொறுத்தவரையில் 1981-82ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் விறகு தரும் மரங்கள், சந்தனம், கூழ்மரம், சில்லறை மகசூல் இனங்கள் சவுக்கு போன்ற பல தரப்பட்ட இனங்களில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.



இது தவிர, மரம் நடும் திட்டத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமான பள்ளிகள், கட்டடங்கள், அலுவலகங்கள் இவற்றில் மரம் நடுவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகக் குறைந்த விலையில் நாற்றுக்கள் விநியோகம் செய்யும் பணியில் 5,75,900 நாற்றுக்கள் ரூ. 1.01 இலட்சம் செலவில் எழுப்பப்பட்டன.

கூழ்மரங்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கொடைக்கானல் மலையில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 508 எக்டேரில் ரூ. 5.21 லட்சம் செலவில் குங்கிலியம், யூகலிப்டஸ், கிராண்டிஸ் போன்ற மர வகைகள் 1981-82-ல் வளர்க்கப்பட்டுள்ளன.

''மண் வளம் பெருக மழை வளம் பெருகும்'' என்னும் அடிப்படையில் வைகை ஆற்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் அரிப்பைத் தடுப்பதனை நோக்கமாகக் கொண்டு 1981-82ல் வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 2,210 எக்டேரில் ரூ. 16 லட்சம் செலவில் பல்வேறு இனத்தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இந்த நடப்பு ஆண்டிலும் (1982-83) மண் பாதுகாப்புத் திட்டம், கூழ்மரத்தோட்டங்கள், விறகு இன மரங்கள், சவுக்குத் தோட்டங்கள், புளியமரத்தோட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை, மேம்பாட்டுத் திட்டம், கூழ்மரத்தோட்டங்கள் போன்ற பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

# மதுரை மாவட்டத்தில் புதிய சிறு தொழில் பிரிவுகள்

மதுரை மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம் மூலமாகப் பல்வேறு சிறு தொழில் பிரிவுகள் உருவாகியுள்ளன. இந்த ஆண்டு மட்டும் உருவாக இருக்கும் சிறுதொழில் அமைப்புகள் 291 ஆகும். இதனால் 1966 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

புதியதாக அமையவிருக்கும் கைத்திறன் பிரிவுகளின் எண்ணிக்கை 378 ஆகும். இதனால் 1169 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

புதியதாக இவ்வாண்டில் அமையவிருக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 820 ஆகும்.

மாவட்டத் தொழில் மையம் செய்யவிருக்கும் நிதியுதவி ரூ 80 இலட்சம் ஆகும்.

# விரும்பும் படங்களை வீட்டிலேயே காண 'வீடியோ'

வீட்டிலிருந்து கொண்டே நாம் விரும்புகின்ற படங்களை- எந்த நேரத்திலும் பார்க்கலாம்!

இதற்கு வசதி செய்யும் வகையிலே-சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தில் வீடியோ மையத்தின் ( Video Centre ) துவக்கவிழா ஜூலைத் திங்கள் 28ஆம் நாள் நடந்தது.

மத்திய அரசின் சார்பில் நிறுவப்பட்டுள்ள இந்த நிலையத்தின் மதிப்பு 70 இலட்சம் ரூபாய்.

பாடல்களை டேப்ரிக்கார்டரில் பதிவு செய்வது போல, திரைப் படங்களை டேப்பில் பதிவு செய்யும் நவீன சாதனம்தான் இந்த 'வீடியோ'

மாண்புமிகு மத்திய ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்கள் மையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''நமது நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருப்பதால், அவர்களுக்குக் கல்வி அறிவு தரவும், நவீன வகை விவசாயம் போன்றவற்றைத் திரைப்படங்கள் மூலம் கற்றுத் தரவும் வீடியோக்களைப் பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும்''

மாண்புமிகு செய்தி -அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், வீடியோ மைய நிலையம் குறித்து சிறு கையேடு ஒன்றை வெளியிட்டுப் பேசினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''வீடியோக்களைத் தவறாகப் பயன்படுத்துவதை மத்திய அரசு கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ''

## இதனால் என்ன நன்மை?

இங்கு அமைக்கப்பட்டுள்ள வீடியோ கேமிரா மூலம், 4 பிரிண்டுகள் போட முடியும்.

20 பிரிண்டுகள் போட வசதியுள்ள மற்றொரு கேமிரா விரைவில் பொருத்தப்படவுள்ளது.

இந்தியாவில், தற்போது 3 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் 'வீடியோ' கருவிகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவைப்படும் படங்களை வீடியோ கேசட்டுகளில் பதிவு செய்து தரமுடியும்.

உள்நாட்டு வீடியோ கேசட் தேவைகள் முழு அளவில் பூர்த்தி செய்வதுடன், மேலை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய கேசட்டுகள் தயாரிக்கப்படும்.

ஆண்டுக்கு 600 திரைப் படங்களை வீடியோ டேப்பில் பதிவு செய்யலாம். இதனால் வெளிநாட்டு வீடியோ சந்தையின்மோகம் குறையும். — பி. வி. ஜி.

****************************************

# சின்கோனா

சின்கோனாத் துறை தமிழ்நாடு அரசினரால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஒரு துறையாகும். இத்துறையில் மலேரியா நோயினை குணப்படுத்த பயன்படுத்தப்படும் கொய்னா சல்பேட் மற்றும் இருதய நோய்களைக் குணப்படுத்தப் பயன்படும் குனிடீன் சல்பேட் ஆகிய மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் மருந்து மற்றும் மணம் தரும் தாவர வகைத் தைலங்களும் இத்துறையில் தயாராகின்றன.

சின்கோனாப் பயிரை முனைப்புடன் சாகுபடி செய்தல் :

தமிழ்நாட்டில் மீண்டும் மலேரியா தோன்றிப் பரவி வருவதால் கொய்னா பொருட்களுக்குள்ள உள்நாட்டு தேவை அதிகமாகலாம் என்பதோடு வெளிநாட்டு ஏற்றுமதியும் காலப் போக்கில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தேவைகளை நிறைவேற்றிட ஏற்கனவே சாகுபடி செய்து அறுவடையான நிலங்களிலும் புதிய நிலங்களிலும் சின்கோனா பயிரிடப்பட்டு வருகிறது. 31-3-80 வரை நீலகிரி மாவட்டத்திலுள்ள 369.61 எக்டேர் நிலத்திலும் கோவை மாவட்டத்திலுள்ள ஆனைமலைக் காடுகளில் 1437,65 எக்டேர் நிலத்திலும் ஆக மொத்தம் 1807.26 எக்டேர் பரப்பில் சின்கோனா பயிரிடப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் பிப்ரவரி '81 முடிய புதிதாக 144.50 எக்டேர் பரப்பில் சின்கோனா பயிரிடப்பட்டுள்ளது. மேலும் 23.56 எக்டேர் பரப்பில் ஏற்கனவே உள்ள சின்கோனாத் தோட்டங்களில் பதியன் மற்றும் ஒட்டுச்செடி முறைகளில் வீரியம் உள்ள சின்கோனாச் செடிகள் பயிரிடப்பட்டு வருகின்றன.

இதைத் தவிர இத்திட்டத்தின் கீழ் கொய்னா பட்டை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இந்த ஆண்டு 650 கொய்னாப் பட்டை மாதிரி பகுப்பாய்வு செய்யத் திட்டமிட்டுள்ள போதிலும் பிப்ரவரி வரையில் 689 மாதிரிகள் பகுப்பாய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளன.

நம் நாட்டில் மருந்து வகைத் தைலங்கள் வாசனைத் தைலங்கள் இவற்றிற்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருவதை ஈடுகட்டும் நோக்கத்துடன் இந்தப் பயிர்களின் சாகுபடியை பல்வேறு வகைகளில் விரிவுபடுத்தும் பணியினை இத்திட்டத்தின் கீழ் இத்துறை நடப்பு ஆண்டில் மருந்து மற்றும் வாசனைத் தைலச் செடிகள் பயிரிடப்பட்டு திட்ட இலக்கு முடிக்கப்பட்டுள்ளது.





பாசன உறுதியும் 1075 ஏக்கர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் 101.70 பாசன பற்றாக்குறை நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கப்படும்.

தேராப்பாறைத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 233 இலட்சங்களாகும். இத்திட்டம் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட திருமங்கலம் வட்டத்திலுள்ள கல்லுப்பட்டிகிராமமும் சுற்று வட்டாரக் கிராமங்களும் பயனடையும்.

**குதிரையாறு நீர்த்தேக்கத்திட்டம் :**

மதுரை மாவட்டம் பழனி வட்டத்திலுள்ள தொப்பம்பட்டி கிராமத்தருகே குதிரையாற்றின ருகே கட்டப்பட உள்ளது. இது. இதன் மூலம் 2660.80 ஏக்கர் நிலங்களுக்குப்புதிய பாசன உறுதியும் 3000 ஏக்கர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் 202.80 ஏக்கர் பாசனப் பற்றாக்குறை நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கப்படும்.

குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ரூ. 408 இலட்சம் செலவாகும். குதிரையாறு திட்டத்தால் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஆண்டிப்பட்டி, வாடிப்பட்டி, சித்தரேவு காவல்பட்டி, பாப்பம்பட்டி போன்ற கிராமங்கள் பயனடையும்.

**ஏனைய திட்டங்கள்:**

சோத்துப் பாறைநீர்த் தேக்கத் திட்டம், தேரப்பாறை நீர்த்தேக்கத்திட்டம், குதிரையாறு நீர்த்தேக்கத்திட்டம் தவிர பல நடுத்தர பழைய பாசன முறைகளைச் சீரமைக்கும் திட்டங்களும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. பல திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

கம்பம் பள்ளத்தாக்குப் பதினெட்டாவது கால்வாய் திட்டம் ரூ. 20 கோடி செலவில் நிறைவேற்றப்பட வேண்டிய பெரிய திட்டமாகும். இத்திட்டத்திற்கான திட்ட ஆய்வுப்பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன்.

## புதிய கால்நடை மருந்தகங்கள்

மதுரை மாவட்டத்தில் இவ்வாண்டில் (1982-83) புதிதாக இரண்டு கால்நடை மருந்தகக் கட்டடங்கள் ரூ. 1.25 லட்சம் செலவில் கட்டுவதற்கு அரசு அனுமதித்துள்ளது.

சின்னமனூர் ஒன்றியம் ஓடைப்பட்டி கிராமத்திலும், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்திலும் இம்மருந்தகங்கள் கட்டப்படும். மேலும் மருந்தகங்களுக்கு அடிப்படை வசதி செய்து தருவதற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்படியும் நிதி உதவி செய்யப்படும்.




மதுரை மாவட்டத்தில் விருவிருப்போடு நடக்கும் தொழில்களில் பட்டுத் தொழில் வளர்ச்சி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பட்டுத் தொழிலுக்கு மூலாதாரமாக மல்பரி பயிர் செய்தல் 1979ல் தான் இம் மாவட்டத்தில் துவக்கப்பட்டது.

ஒரு ஏக்கர் மல்பரி பயிர் செய்தால், அதன் மூலம் எட்டுப் பேருக்குக் குறையாமல் வேலை வாய்ப்பு ஏற்படும். இதனால், வண்டி வாகனங்கள் செல்ல இயலாத இடங்களில்கூட பட்டுத் தொழிலுக்கென மல்பரி பயிரிடப்பட்டுள்ளது.

விவசாயத்தில் உள்ள சிரமத்தைவிட இதில் உடலுழைப்பு குறைவாகவே செலவாகிறது; வருமானமோ அதை விட இதில் அதிகம்.

பட்டுக்கூடு விற்பனைக்கென மதுரை மாவட்டம் முழுவதுமாக 7 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன.

### தொழில் பயிற்சி

1982-83ல் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மல்பரி பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இங்கு இத்தொழிலில் ஆர்வங் காட்டுவோர் 600 பேருக்கு, தக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மூன்று மாதப் பயிற்சியில் பங்கேற்போருக்கு மாதந்தோறும் 150 ரூபாய் உதவிப்பணம் அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்து அவர்கள் செல்லும்போது, பட்டுத்தொழில் வளர்ச்சிக்கான 300 ரூபாய் பெறுமானமுள்ள கருவிகள் பாதி விலைக்கு அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

மல்பரி பயிரிட முன்வரும் விவசாயிகள் 300 பேருக்குக் குடில்கள் அமைக்கவும், 600 பேருக்குத் தளவாடச் சாமான்களுக்காகவும் வங்கிகள் மூலம் கடன் பெறச் சிபாரிசு செய்யப்படுகிறது. பட்டு நூற்பை ஊக்குவிக்கவும் மான்யம் தரப்படுகிறது.

கூட்டுப்புழு வளர்ப்பது தான் பட்டு வளர்ச்சியில் முக்கியம். ஒரு ஏக்கர் மல்பரியில் ஆயிரம் முட்டை வரை வளர்ப்பதுண்டு.

நெற்பயிருக்குக் காலவரையறைகள் உண்டு. ஆனால் மல்பரிக்கு அப்படி இல்லை. எப்போதும் பயிரிடலாம், இதன் மூலம் ஒருவருக்கு ஆண்டொன்றுக்குக் கிட்டும் நிகரவருமானம் ஆறாயிரம் ரூபாய். இது நிரந்தர வருமானமாகும்.

மதுரை மாவட்டப் பட்டு நெசவாளர்க்குத் தேவை அதிகமிருப்பதால் இன்னும் அதிகம் மல்பரி பயிரிட முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.



### மாடும் மல்பரியும்

மல்பரியைப் பால் மாடுகள் விரும்பித் தின்பதுண்டு. இதனால் மாட்டுக்கோ பாலுக்கோ எவ்விதத் தீங்கும் நேருவதில்லை. இந்த விவரங்களை யெல்லாம் நமக்குத் தெரிவித்த மதுரை மாவட்டப் பட்டு வளர்ச்சித் துறை துணை இயக்குநர் திரு எச். அரிகரசுப்பிரமணியம் அவர்கள் 'Silk and Milk will go together' என்றே கூறுகிறார்.

மதுரை மாவட்டத்தில் உற்பத்தியாகும் பட்டுக்குக் காஞ்சிபுரம் வரை நல்ல வரவேற்பிருக்கிறது.

## இராசராசன் காசு



தஞ்சைத்தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் கல்வெட்டுத் துறையினர் அண்மையில் கள ஆய்வின் பொருட்டு தஞ்சை மாவட்ட மாத்தூர் சென்றனர். மாத்தூரில் உள்ள மருந்தாண்டார் கோயிலைச் சுற்றிலும் உள்ள மேட்டை பார்வையிடும்போது தற்செயலாக, சோழ மன்னன் இராசராசனின் காசு ஒன்று கிடைத்தது.

செம்பினால் அமைந்த அக்காசுக்கு ஈழக் காசு என்று பெயர். வட்ட வடிவில் காசு அமைந்துள்ளது. ஒரு பக்கம் நின்ற நிலையில் ஒரு மனிதனும் அமர்ந்துள்ள புலியும் ஒரு புறம் சூலமும் உள்ளது. மறுபுறம் அமர்ந்த மனிதனும் "ராஜராஜன்" என்ற பெயர் நாகரி எழுத்துக்களிலும் உள்ளது. மாத்தூர்ப் பகுதியில் இராசராசன் காசுகண்டெடுக்கப்பட்டது. இந்த நாணயம் சுமார் 1,000 (ஆயிரம்) ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.



# பவனி வரும் பாண்டியனின் அரும் பணிகள்

இந்தியாவிலுள்ள பேருந்து போக்குவரத்துக் கழகங்களில்- சிறப்பாகச் செயல்படுபவைகளில் தமிழ்நாட்டிலுள்ள அரசுப் போக்குவரத்துக்கழகங்கள் குறிப்பிடத்தக்கவை.

—இப்படி அயல் மாநிலத்தவர்களே பாராட்டும் அளவுக்குப் பெருமை பெற்றவை நமது மாநில பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள்.

பட்டி தொட்டி அனைத்துக்கும் இணைப்பாக இருந்து பயணிகள் நலனே குறிக்கோளாக விளங்கும் போக்குவரத்துக் கழகங்களில் ஒன்று பாண்டியன் போக்குவரத்துக் கழகம். இப்போக்குவரத்துக் கழகம் தொடங்கப்படும்பொழுது இருந்த பேருந்துகள் 346தான். 1977-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய இப்போக்குவரத்துக் கழகத்தில் இருந்த பேருந்துகள் 649. ஆனால், இப்பொழுது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பேருந்துகள் 1188 ஆகும்.

குறைந்த கட்டணத்தில் மக்கள் பயணம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் அதிக அளவில் நகரப் பேருந்துகள் விடப்படுகின்றன. நாள்தோறும் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 11 இலட்சம் மக்கள் பயணம் செய்கின்றனர். இப்பேருந்துகள் நாள்தோறும் நான்கு இலட்சம் கிலோ மீட்டர்கள் ஓடுகின்றன.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எரிபொருளுக்காக மாதம் ரூபாய் 1 கோடியும் பேருந்துகளின் பழுதடைந்த பாகங்களைப் புதுப்பிக்கும் வகையில் மாதந்தோறும் ரூ. 80 இலட்சமும் செலவிடுகிறது.

9 ஆயிரம் தொழிலாளர்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரிகிறார்கள். இவர்களுடைய மாத சராசரி வருமானம் ரூ.825 அளவில் உள்ளது. அவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளில் சில:

தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் இலவச மருத்துவ வசதி.

குடியிருக்கும் இடத்திலிருந்து பணிசெய்யும் இடத்திற்குச் செல்ல இலவசப் பேருந்து வசதி.

ஆண்டுக்கு குடும்பத்துடன் 12 தடவை இலவசப் பயணம் செய்யலாம்.

இரண்டு குழந்தைகளுக்குக் கல்லூரி, பள்ளி சென்று வர இலவசப் பேருந்து வசதி.

குடும்பங்களுக்குத் தையல் பயிற்சி, தட்டெழுத்துப் பயிற்சி.

10 காசிற்கு டீ. 75 காசிற்கு சாப்பாடு.

மக்களுக்கு செய்யப்படும் வசதிகள்:

100க்கு மேற்பட்ட இடங்களில் ரூ. 6000 மதிப்பில் நிழற்குடைகள்.

மாணவி மாணவியர்களுக்குக் கட்டணச் சலுகைகள், பெண்களும் ஆண்களும் தொல்லையின்றிப் பேருந்தில் சென்றுவர, மதுரை நகரில் நான்கு வழிகள் உள்ள பேருந்து, சோதனை ஓட்டமாக ஓட்டப்பட்டு வருகிறது.

உடல் ஊனமுற்றோருக்கு இலவசப் பயண வசதி.

பத்திரிகையாளர்களுக்கு இலவசப் பயண வசதி.

கிராமப்புற மக்கள் தங்கள் விளைபொருள்களை நகரங்களுக்களுக்குக் கொண்டு வந்து விற்று, வாழ்க்கை நடத்தும் பொருட்டு சரக்குப் பேருந்துகள் முக்கியமான இடங்களில் குறைந்த கட்டணங்களில் விடப்பட்டுள்ளன. இவை சந்தை நாட்களில் கிராமங்களுக்கும் சந்தைகளுக்கும் ஓட்டப்பட்டு கிராமங்களுக்குப் பணி செய்கின்றன.

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, தேனியில் இக்கழகம் 9.43 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை உருவாக்க உள்ளது. அதே மாதிரி மதுரையிலும் தொழிலாளர் குடியிருப்புத் திட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கம்பி இல்லாச்செய்தித் திட்டம் பேருந்துகள் நின்று போவதை உடனடியாகத் தெரிவிப்பதற்கும், விபத்துக்களை உடனுக்குடன் கவனிப்பதற்கும், கூட்ட நேரங்களில் தேவைக்கேற்ப பேருந்துகளை விடுவதற்கு ஒரு கம்பி இல்லாத் தொலைபேசித் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

அந்நிய நாட்டுச் செலாவணியைக் குறைக்கும் நோக்கத்துடன் எந்திர எண்ணெய்யை மீண்டும் மீண்டும் சுத்தப்படுத்தி உபயோகிக்க திருமங்கலத்தில் ஓர் எந்திரம் அமைக்கும் திட்டம் உள்ளது.

மானாமதுரையில் தொழிற்பேட்டையில் பேருந்து கூடு தயாரிக்கும் திட்டம் ஒன்று உள்ளது.

போடிநாயக்கனூர், வத்தலக்குண்டு, சிவகாசி, மானாமதுரை, இராமநாதபுரம், தேவாரம் முதலான இடங்களில் பணிமனை கட்டும் திட்டம் உள்ளது.

மதுரை எல்லிஸ்நகர், விருதுநகர் போன்ற இடங்களில் தொழிலாளர்களுக்கு வசதிமிக்க ஓய்வு இல்லம் கட்டப்பட்டு வருகிறது.

தொழிலாளர் பயிற்சி நிலையம், மதுரை அருப்புக்கோட்டை சாலையில் காரியப்பட்டி சமீபம் சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிலாளர் பயிற்சி நிலையம் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்குச் சுமார் 10 இலட் ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது ஓட்டுநர்கள் நடத்துனர்களுக்கு ஒரு சிறப்புப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. அவர்களுக்குத்தொழிலின் நுட்பங்களைப்போதனை செய்து சிறந்த முறையில் பணி செய்ய வாய்ப்பு அள்ளிக்கப்படுகிறது. முக்கியமாக ஓட்டுநர்களுக்கு விபத்துக்களைத் தடுக்கும் முறைகளையும், முன்னெச்சரிக்கை முறைகளையும், கடந்தகால அனுபவங்களையும் எடுத்துக்காட்டி போதனை செய்யப்படுகிறது. அதேமாதிரி எரிபொருள் சிக்கனத்தின் கையாள வேண்டியமுறைகளையும், பேருந்துகளை நல்லமுறையில் இயக்கிட அனுசரிக்க வேண்டிய முறைகளையும் போதிக்கிறார்கள்.

இக்கழகத்தில் ஆயிரத்துக்குமேற்பட்ட பேருந்துகள் இருப்பதால் நிருவாகத் திறமையை அதிகப்படுத்த இதை இரண்டாகப் பிரிக்கும் திட்டங்கள் ஏற்கெனவே தீட்டப்பட்டு, கடந்த ஓராண்டு காலமாக சோதனை செயல்முறையில் இருக்கின்றன. இதன்படி கிழக்கு இராமநாதபுரம் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓடும் பேருந்துகளை, காரைக்குடியை மையமாகக் கொண்டு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் என்ற பெயரில் தனி நிறுவனம் தொடங்கப்பட இருக்கிறது. அதன் பிறகு பாண்டியன்போக்குவரத்துக் கழகம் மதுரை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மேற்கு மாவட்டத்தில் மட்டும் செயல்படும்.

## ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க கூடுதல் நிதி உதவி

மதுரை மாவட்டத்தில் 1981-82-ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்த அரசு ரூ. 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. இதனை முழுமையாகப் பயன்படுத்தி, மேலும் சிறிது செலவிட்டு ரூ. 16,42,200 மதிப்பில், 223.63 ஏக்கர் நிலம் 68 கிராமங்களில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தின் மொத்த மதிப்பு ரூ. 16,42,200 ஆகும். இத்திட்டத்திற்கு அரசு ஒதுக்கிய தொகைக்கு கூடுதலாக ரூ. 1,42.200 செலவு செய்யப்பட்டுள்ளது.





# கோயில் நிதியால் குவியும் பயன்கள்

**பி. எல். ராஜேந்திரன்**

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையரின் நேரடிக் கவனிப்பில் மதுரை மாவட்டத்தில் 84 கோயில்கள் இருக்கின்றன. இவைகளில் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் வரை ஆண்டொன்றுக்கு வருமானமுள்ள கோயில்கள் 39 ஆகும். 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை வருமானமுள்ள கோயில்களோ 24.

தெற்கு மாசி வீதியிலே உள்ள பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோயில், மதுரை வடக்குப் பகுதியிலே உள்ள அரசமரம் பிள்ளையார் கோயில், சின்னமனூரில் உள்ள பூலகண்டேஸ்வரர் கோயில் ஆகிய மூன்றும் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒரு லட்சம் ரூபாய்க்குள் ஆண்டு வருமானமுள்ள கோயில்களாகும்!

ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள கோயில்கள் மதுரை மாவட்டத்திலே எட்டு இருக்கின்றன. பழனி தண்டாயுதபாணி திருக்கோயில், மதுரை நகருக்குள்ளேயே இருக்கும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், அழகர்கோயிலில் உள்ள கள்ளழகர் திருக்கோயில், ரெட்டியார் சத்திரத்தில் இருக்கும் கோபிநாதசாமி திருக்கோயில், மதுரையில் உள்ள கூடலழகர் கோயில், திண்டுக்கல்லில் இருக்கும் காளகஸ்தீஸ்வரர் திருக்கோயில், அதே திண்டுக்கல்லில் உள்ள கோட்டை மாரியம்மன் கோயில், வீரபாண்டியில் இருக்கும் கோமாரியம்மன் கோயில் ஆகியவைகளே அத்தகைய வருமானமுள்ளவைகளாகும்.

கோயில்களுக்கெல்லாம் நஞ்சை புஞ்சை மானாவாரி நிலமெல்லாம் உண்டல்லவா? அரும்பாடுபட்டு அந்தக்கணக்கையும் திரட்டினோம்.

மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற 12 வட்டங்களிலும் உள்ள மொத்தக் கோயில்கள் 84க்கும் சொந்தமாக இருக்கும் நன்செய் நிலம் மட்டும் 1921. 44½ ஏக்கர்களாகும். புன்செய் நிலமோ 3121. 77½ ஏக்கர்கள். இவை தவிர மானாவாரியாக 428.33 ஏக்கர் நிலமும் இருக்கிறது.

1981-82ல் இந்த நிலங்களின் மூலம் அத்தனைக் கோயில்களுக்கும் ஆண்டுதோறும் ரொக்கமாக வந்த வருமானம் ரூ. 2,35,509.33 ஆகும். விளைநிலங்களின் மூலம் தானியங்களாகக் கிட்டியதோ 10382.59 களம்.

புன்செய் நிலத்தின் மூலம் கிடைத்த ரொக்க வருமானம் மட்டும் ரூ. 169719.97 ஆகும். தானியத்தின் வரவு 392 களம்.

மானாவாரி நிலங்கள் மூலம் ரொக்க வருமானம் ரூ. 28242.00 அவற்றின் மூலமான தானியமோ 75 களம்.

சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டுமென்றால் மதுரை மாவட்டத்திலே இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை கவனிப்பில் உள்ள அத்தனைக் கோயில்களின் மூலமும் ரொக்கமாகக் கிடைத்திடும் ஆண்டு வருமானம் ரூ. 4,33,471.30.

பல்வேறு வகைத் தானியங்களாக வருவதோ 10849.59 களம்.

கோயில்களால் வரும் இந்த வருமானமெல்லாம் கோயில்களின் பராமரிப்புச் செலவுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறதா என்றால் அதுதான் இல்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பார்த்தால் சென்னையை விடப் பெரியதாகக் கருதப்படும் மாமதுரைவாழ் ஏழை-எளிய-ஆதரவற்ற மக்களுக்காகக் கல்வியறிவளித்தல்போன்ற பல்வேறு பணிகளுக்காகவும் கூடப் பயன்படுத்தப்படுகிறது கோயில் நிதி!

இந்த வகையிலே உதாரணத்திற்குச் செலவினங்கள் இரண்டொரு கோயில்களால் ஏற்கப்பட்டு ஆற்றப்படும் புனிதப்பணிகளைப் பார்ப்போம்.

கள்ளழகர் திருக்கோயில்சார்பிலும், கௌமாரியம்மன் திருக்கோயில் சார்பிலும் மகளிருக்கான 'அன்பு இல்லங்கள் நடத்தப்படுகின்றன.

கள்ளழகர் திருக்கோயில் நிதியில் ஆரம்பப் பள்ளியொன்றும், நடுநிலைப் பள்ளியொன்றும் நடத்தப்படுகிறது.

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அரவணைப்பிலோ பள்ளி, கல்லூரி கலைக் கல்லூரி, மகளிர் தொழில் நுணுக்கக் கல்லூரி, ஆண்கள் தொழில் நுணுக்கக் கல்லூரி, நாதசுர இசைப் பயிற்சிப் பள்ளி ஆகியவைகளெல்லாம் நடாத்தப்படுகின்றன.

திருப்பரங்குன்றம் ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதி நிழலில் சித்தவைத்திய சாலை, மகளிர் முதியோர் இல்லம், பெண்கள் மேல்நிலைப் பள்ளியெல்லாம் இயங்கி வருகின்றன.

மதுரை நகரில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தான நிதி ஆதாரத்தோடு எத்தகைய முத்தனைய பணிகளெல்லாம் நிகழ்த்தப்படுகின்றன தெரியுமா?

திருவாதவூர் அன்பு இல்லம், இலவசப் பால் விநியோகத் திட்டம், காந்திநிகேதன் மீனாட்சி அனாதை இல்லம், ஆகமப் பாடசாலை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வேதப்பாடசாலை ஆகியவை மீனாட்சியம்மன் நிதியருளால் மேம்பட இயங்கி வருகின்றன.

1981-ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் உள்ள கோயில்கள் ஐம்பத்தொன்றில் சிறப்புப் பொது விருந்து (ஆகஸ்ட் 15) சுதந்திர நாள் அன்று நடத்தப்பட்டது. இந்தப் பொது விருந்தில் ஆதி திராவிட மக்கள் 31 ஆயிரத்து 90 பேர் கலந்து கொண்டனர். ஆதிதிராவிடர் அல்லாதோர் 24 ஆயிரத்து 666 பேர் கலந்து கொண்டுள்ளனர். ஆக மொத்தம் 55 ஆயிரத்து 756 பேர்.

இந்த ஆண்டு சுதந்திர நாளன்று மதுரை மாவட்டத்தில் 49 ஆயலங்களில் பொது விருந்து நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஆதிதிராவிடர்கள் 24 ஆயிரத்து 701 பேர், ஆதிதிராவிடர் அல்லாதோர் 23 ஆயிரத்து 642 பேர். ஆக மொத்தம் 50 ஆயிரத்து 587 பேர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக மதுரை மீனாட்சிஅம்மன் கோயில் சார்பாக ரூ 4 லட்சமும், கள்ளழகர் கோயிலின் சார்பில் ரூ. ஒரு லட்சத்து 25 ஆயிரமும், சோலை மண்டபம் அழகர் கோயில் மலை சார்பாக ரூ. 80 ஆயிரமும், திண்டுக்கல் நகர் கோட்டை மாரியம்மன் கோயில் சார்பாக ரூ. 80 ஆயிரமும், வீரபாண்டி கௌமாரியம்மன் கோயில் சார்பாக ரூ. 40 ஆயிரமும், திண்டுக்கல் காளகஸ்தீசுவரர்சாமி கோயில் சார்பாக ரூ. 40 ஆயிரமும் ரெட்டியார் சத்திரம் கோபிநாத சாமி கோவில் சார்பாக ரூ. 80 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளது. பழநி சுப்பிரமணியசாமி கோயில் சார்பாக ரூபாய் 10 இலட்சம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் உள்ள சுமார் 20 கோயில்களின் திருப்பணி வேலைகளுக்காக ரூபாய் 6,51,700 தமிழக அரசு அனுமதித்துள்ளது.

மதுரை மாவட்டத்தில் உள்ள கோயில் நிதிமூலம் ஆற்றப்படும் இத்தகைய மக்கள் நலத்திட்டங்களில் இவை மிகச் சில. விரிக்கிற் பெருகும் என்பதால், விடப்பட்டவையோ பல!





# ஆதிதிராவிடர் நல்வாழ்வுக்கு...



துறை மாவட்டத்தில் கடந்த ஆண்டில் 1981-82ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து இவ்வாண்டும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல கடந்த ஆண்டில் நடை பெற்ற பணிகளில் சில வருமாறு:

குடிநீர் வசதிக்காக 47 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூ. 2,63,150 செலவழிக்கப்பட்டுள்ளன. இதில் ஆதிதிராவிடர் கிறித்தவர்கட்குச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 16,000 ஆகும்.

சாலைகள் மற்றும் மயானங்கள் அமைக்கும் பணிகளுக்காக 51 வேலைகள் எடுக்கப்பட்டு ரூ. 2,40,000 செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

பள்ளிக்கட்டடங்கள் அமைக்கும் பணிகளுக்காகப் பத்து சிறிய வேலைகள் எடுக்கப்பட்டு ரூ. 55000 செலவில் முடிக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கட்டடங்கள் பராமரிப்புக்கான 9 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவைகட்கு 30,364 செலவிடப்பட்டுள்ளது.

இளமனூர் மற்றும் முருகம்பட்டி கிராமங்களில் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ. 30,000 செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைகள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பழங்குடியினர் உண்டுறை விடுதி பராமரிப்புக்காக அனு

மதிக்கப்பட்டுள்ள ரூ. 5000 செலவிடப்பட்டுள்ளது.

உபகாரச் சம்பளம்; 1981-82 நிதியாண்டில் கல்வி உபகாரச்சம்பளமாக ரூ. 53.94 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்தோர் 8605. இதில் பழங்குடியினருக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 17,650. மேலும் சுகாதாரக் குறைவான தொழில் புரிவோரின், எட்டு பள்ளிக் குழந்தைகளுக்கு (விடுதியில் தங்கிப்படிக்கும்) ரூ. 11600 வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் கல்விக் கடன் உதவித்தொகையாக 1588 நபர்களுக்கு ரூ. 10.27 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர தட்டச்சு, சுருக்கெழுத்து பயிலும் ஆதிதிராவிட மாணவ, மாணவி

யருக்குச் சம்பளம் மற்றும் இதரச் செலவுகளுக்காக 22 நபர்களுக்கு ரூ. 3700 வழங்கப்பட்டுள்ளது.

**குடியிருப்பு மனைகள்:**

இந்த நிதியாண்டில் (1981-82) 68 கிராமங்களில் வீட்டு மனைக்காக 223.67 ஏக்கர் நிலம் கையகம்செய்யப்பட்டுள்ளது. இதனால் 4492 ஆதி திராவிடர் பயனடைகின்றனர். இதற்காக ரூ. 16.42 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குடியிருப்புக்கள் முன்னேற்றத்திற்காக 148 பணிகள் மேற்கொள்ளப்பட்டு (சாலைகள் அமைத்தல், பள்ளிக்கட்டடங்கள் அமைத்தல், குடிநீர் வசதி செய்து கொடுத்தல்) ரூ. 9 லட்சம் செலவிடப்பட்டுளளது.

சிறு தொழில்கள் தொடங்குவதற்கு இந்த ஆண்டில் 94

பேருக்கு ரூ. 85100 வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

நிலவள வங்கிகள் மூலமாக புதிய பாசனக்கிணறுகள் தோண்டியதற்கு ரூ. 9840 மான்யமாக செலவிடப்பட்டுள்ளது.

உழவு மாடுகள் வாங்குவதற்கு 26 பேருக்கு ரூ. 500 வீதம் ரூ. 15,600 செலவிடப்பட்டுள்ளது. இதில் 7 பழங்குடியினருக்கான ரூ. 4200ம் அடங்கும்.

இத்துறைப்பள்ளிகளில் கல்வி பெறும் 5650 மாணவ, மாணவிகட்கு மதிய உணவிற்காக ரூ. 1.10 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவிகட்கு 9176 பேருக்குச் சீருடைகள் இரண்டு இணைகள் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 7.48 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இத்துறை பள்ளியில் பயிலும் மாணவ-மாணவிகட்கு இலவச பாடப் புத்தகங்கள் நோட்டுகள் மற்றும் சிலேட் வழங்கியமைக்காக ரூ. 58,360 செலவு செய்யப்படுள்ளது.

அரசு மான்யம் பெறும் 8 விடுதிகளில் தங்கிப் படிக்கும் 540 மாணவ மாணவிகட்கு உணவுச் செலவு ரூ. 2.39 லட்சம் செலவிடப் பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள மூன்று சமுதாய மன்றங்களின் பராமரிப்புக்காக ரூ. 48500 செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இலவச தொழிற்கருவிகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கும் முகத்தான் ரூ. 42,277 செலவு செய்யப்பட்டுள்ளது.

தீண்டாமைஒழிப்புசம்பந்தமாக சுத்தமாகப் பராமரிக்கப்பட்ட பதின்மூன்று ஆதி திராவிடர் குடியிருப்புகள் தேர்வு செய்யப்பட்டு தலா ஒரு வானொலிப்பெட்டியாகப் பரிசு வழங்கப்பட்டது. அதற்கான செலவு ரூ. 5,200.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
முகவரி:



Licence No. TN/MS(C)/PP-23 தமிழரசு பதிவு எண். M. 8676





# தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் (22-8-'82)



## புதிய ஆளுநர் பதவி ஏற்பு (3-9-1982)

தமிழ்நாட்டுக்குப் புதிய ஆளுநராகப் பதவி ஏற்கவிருக்கும் திரு எஸ். எல். குரானா அவர்கள் 2.9.'82 இரவு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்து சேர்ந்தபோது மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர் அவர்கள் மாலையணிவித்து வரவேற்றார்.

சென்னை இராசாசி மண்டபத்தில் 3.9.'82 அன்று திரு. சுந்தர்லால் குரானா அவர்கள் தமிழக ஆளுநராக, சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. கே. பி. என். சிங் அவர்களால் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப் பட்டார்.







தமிழரசு

1-10-1982

திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — புரட்டாசி 15

7 அக் 1982





... 19-9-82 ...



... முதல்வர் திரு ...
... அவர்களைச் ...
... சிமெண்ட் ...
... திரு ஒய். ...
... அவர்கள் ...
... 1 இலட்சத்து 50 ...
... தொழில் ...
... அவர்களும் ...



தமிழரசு
மலர்: 13 இதழ்: 7
1—10—1982
திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — புரட்டாசி 15



உண்மையினாலும், அன்பினாலும் நாம் உலகத்தையே வெற்றி கொள்ளமுடியும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

மீனான நேரத்தை நன்கு பயன்படுத்தும்படி கிராமமக்களைத் தூண்டும் விதே உருவான முன்னேற்ற வேலையாகும்.

பசியால் வாடி, வேலையின்றி இருக்கும் மக்களுக்கு வேலை அளிப்பது ஒன்றே ஆண்டவன் தரிசனம் அளிப்பதற்கு ஒப்பாகும்.

அண்ணல் காந்தியடிகள்

# படமும் செய்தியும்



மகாகவி பாரதியார் நினைவு நாளையொட்டி சென்னையில் உள்ள பாரதியார் சிலைக்கு மாண்புமிகு மேலவைத் தலைவரும் மாண்புமிகு அமைச்சர்களும் மாலை அணிவித்தனர்.



பஹாமாவில் நடைபெறும் காமன்வெல்த் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் 21.9.82ல் புறப்பட்டார்.



தந்தை பெரியார் பிறந்தநாளில் (17.9.82) சென்னையில் தந்தை பெரியார் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர்கள் மாலை அணிவித்தனர்.

# வளரும் வயதிலே வறுமையைப் போக்கிட...



சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மூதூரில், பாரெங்கும் போற்றும் மாபெரும் சமுதாயப் புரட்சித் திட்டமாகிய முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் நகர்ப்புறப் பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் சரித்திரம் படைக்கும் நிகழ்ச்சியாக நடைபெற்றது.

1982 ஜூலை முதல் நாளிலிருந்து கிராமப் பகுதிக் குழந்தைகளுக்குத் துவக்கப்பட்டு நடைபெற்று வரும் இத்திட்டம் 15-9-82 முதல் நகர்ப்புறக் குழந்தைகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் துவக்கவிழா மதுரை தமுக்கம் மைதானத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் நடைபெற்றது.

விழா ஆரம்பத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சீருடை அணிந்த கல்லூரி மாணவிகள் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் மலர் தூவி வரவேற்றனர்.

பின்னர், பள்ளி மாணவ மாணவியர்கள் உடல்திறன் நிகழ்ச்சி நடைபெற்றது. சத்துணவுத் திட்டக் கண்காட்சியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். கண்காட்சியினைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்குள்ள ஆசிரியர் ஒருவரிடம் 'சமையலுக்கான பாத்திரங்களை எங்கு வாங்குகிறீர்கள்?' என்று கேட்டார். 'டான்சியில் வாங்குகின்றோம்' என்று கூறினார் அவர்.



மாண்புமிகு முதல்வர் சத்துணவுக் கண்காட்சியைப் பார்வையிடுகிறார்.

மங்கையர்க்கரசி உயர்நிலைப் பள்ளியில் பயிலும் 7 வயது மாணவி லோகசுந்தரி மாணவ, மாணவியர்கள் சார்பாகச் சிறப்புற வரவேற்புரை நிகழ்த்தி, எல்லாரின் கையொலியைப் பெற்றார்.

விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. ஆளுடைய பிள்ளை, இ. ஆ. ப. அவர்கள் வரவேற்புரையாற்றுகையில் — ''மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் எல்லோரையும் வரவேற்கின்றேன். கடந்த இரண்டரை மாதங்களாகக் கிராமங்களில் நடைபெறும் சத்துணவுத் திட்டப் பாங்கினைப் பார்த்து வருகின்றேன். எனக்கு மிகவும் ஊக்கம் அளிக்கின்றது'' என்று குறிப்பிட்டார்.

**அ. மருதவிநாயகம்**

மதுரை மாநகரத் தந்தை திரு எம். பட்டுராசன் அவர்கள் தலைமையுரை ஆற்றுகையில், ''இத்திட்டத்திற்கான காரண கர்த்தா யார் என்பது நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இல்லை. இத்திட்டத்தை நிறைவேற்றும் ஆசிரியர்கள் மீது நம்பிக்கையுண்டு. அவர்கள் முழுமனதுடன் ஒத்துழைப்புத் தந்து உதவிடக் கேட்டுக் கொள்கின்றேன். தமிழக மக்கள் நன்றியோடு நினைவுகூர்ந்து வாயார வாழ்த்தும் இத்திட்டத்தினால் பல இலட்சக்கணக்கான குழந்தைகள் பலன் அடைந்து, வரலாறு படைக்க என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்' என்றார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் பேசுகையில், ''பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான இன்று இத்திட்டம் மதுரை மாநகரில் துவக்கப்படுகின்றது. இன்று குழந்தை

## நகர்ப் பகுதிகளில் சத்துணவு

**த**மிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளுக்கு 15.9.82 முதல் விரிவாக்கப்பட்ட சத்துணவுத் திட்ட விவரங்கள் பின்வருமாறு:

செங்கல்பட்டு மாவட்டத்தில் 208 மையங்கள் துவக்கப்பட்டதில் 31,271 குழந்தைகள் பயன் பெறுவர். வட ஆர்க்காடு மாவட்டத்தில் 199 மையங்கள் துவக்கப்பட்டதில் 29,812 குழந்தைகள் பயன் பெறுவர். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 156 மையங்கள் துவக்கப்பட்டதில் 23,158 குழந்தைகள் பயன் பெறுவர். கோயம்புத்தூர் மாவட்டத்தில் 135 மையங்கள் துவக்கப்பட்டதில் 17,282 குழந்தைகள் பயன் பெறுவர். சேலம் மாவட்டத்தில் 245 மையங்கள் துவக்கப்பட்டதில் 36,621 குழந்தைகள் பயன் பெறுவர். நீலகிரி மாவட்டத்தில் 43 மையங்கள் துவக்கப்பட்டதில் 6,431 குழந்தைகள் பயன் பெறுவர். தருமபுரி மாவட்டத்தில் 35 மையங்கள் துவக்கப்பட்டதில் 5,204 குழந்தைகள் பயன் பெறுவர்.

பெரியார் மாவட்டத்தில் 52 மையங்கள் துவக்கப்பட்டதில் 7,823 குழந்தைகள் பயன் பெறுவர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 85 மையங்கள் துவக்கப்பட்டதில் 12,742 குழந்தைகள் பயன் பெறுவர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 222 மையங்களில் 33,327 குழந்தைகள் பயன் பெறுவர். புதுக்கோட்டை மாவட்டத்தில் 39 மையங்களில் 5,861 குழந்தைகள் பயன் பெறுவர். திருநெல்வேலி மாவட்டத்தில் 263 மையங்களில் 39,588 குழந்தைகள் பயன் பெறுவர். இராமநாதபுரம் மாவட்டத்தில் 218 மையங்களில் 32,765 குழந்தைகள் பயன்பெறுவர்.

மதுரை மாவட்டத்தில் 133 மையங்களில் 20,184 குழந்தைகள் பயன் பெறுவர். கன்னியாகுமரி மாவட்டத்தில் 80 மையங்களில் 12,092 குழந்தைகள் பயன் பெறுவர்.

களுக்குக் குதூகலத் திருநாள் ஆகும்.

''பசியினைப் பற்றி விவேகானந்தர், வேதநாயகம்பிள்ளை, பட்டினத்தார், வடலூர் வள்ளலார், மகாத்மா காந்தி, அண்ணா போன்றோர் கூறியுள்ளார்கள். முதல்வர் நடத்தும் சத்துணவுத் திட்டத்தை ஆரம்பத்தில் கேலி பேசியவர்கள் இன்று ஆச்சரியப் படும்படி நடந்து வருகின்றது. மணிமேகலைக் காப்பியத்தில் குறிப்பிட்ட அட்சய பாத்திரம் இன்று புரட்சித்தலைவர் கையில் இருக்கின்றது. முதல்வர் அவர்கள் இத்திட்டத்தின் மூலம் மக்களிடையே மவுனப் புரட்சியை, சரித்திரப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

''பசியினால் ஏற்படும் துன்பத்தைத் தாய்தான் உணர முடியும். அந்தத் தாய் போன்று பசியைத் தீர்ப்பதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பறிந்து செயல்படுகின்றார். இது மிகப் பெரிய சமுதாயத் திட்டமாகும்'' என்று தெரிவித்தார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் உரையாற்றுகையில்- ''தான் பட்ட துன்பத்தை மற்றவர்கள் படக்கூடாது என்று முதல்வர் அவர்கள் இத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால் அறிவுள்ள சமுதாயம் வேண்டும். ஆகவே, சத்துணவுத் திட்டம் மூலம் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகின்றது. அரசு மாறினாலும், ஆட்சி மாறினாலும் இத் திட்டம் மாறாது'' என்றார்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்கள் உரையாற்றுகையில், ''சமூகப் புரட்சியை ஏற்படுத்தும் மாபெரும் திட்டமாகும் இது. ஆந்திரம், கர்நாடகம் முதலிய மாநிலங்கள் எல்லாம் பின்பற்றப் போகும் நல்ல திட்டம். முதல்வர் அவர்கள் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்த விளைவினால்தான் குழந்தைகள் சத்துணவுத்திட்டம் பிறந்தது. மக்களை எண்ணித் திட்டம் போட்டால்தான் மக்கள் நம்மை நினைப்பார்கள். ஆகவே இது மக்களுக்கான ஒரு திட்டமாகும்'' என்று குறிப்பிட்டார்.

மதுரை மாநகராட்சியின் துணை மேயர் திரு எம். முனியசாமி அவர்கள் பேசுகையில், ''ஏழை மக்களின் உள்ளத்தில் பதிந்துவிட்ட இத்திட்டத்தைத் திறம்படச்செயல்படுத்தப்பாடுபடுவேன்'' என்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கட்டுப்பாட்டுடனும், கவனத்துடனும், கண்ணியத்துடனும் நின்று எனக்கு வரவேற்புக் கொடுத்த இளஞ்சிறுமியர்களைக் கண்டு பெருமைப்படுகின்றேன்.

''உடல் வலிமையை எடுத்துக் காட்டும் வகையில் இங்கே இளம் சிறார்கள் உடற்பயிற்சி நடத்திக் காட்டினார்கள். அவர்களுக்கும் வரவேற்பு உரை நிகழ்த்திய சிறுமி லோகசுந்தரிக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.




''என்னுடைய எண்ணமெல்லாம் குழந்தைகள் அறிவற்றவர்களாக இருக்கக் கூடாது என்பது தான். எல்லோருக்கும் அறிவு சொந்தமாக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில்தான் சத்துணவுத்திட்டம் கொண்டு வரப் பட்டது.

''வேலைகளுக்கு விகிதாச்சாரம் வைக்கலாம்; அதன் அடிப்படையில் வேலை கொடுக்கலாம். ஆனால் அறிவை எப்படிக் கொடுக்க முடியும்?

''சத்துணவுத் திட்டம் மூலம் பெற்றோர்களுக்குச் சுமை குறைகிறது. குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் நெருங்கிப் பழகுகிறார்கள். வகுப்பு வேற்றுமையை இளமையிலேயே மறந்திட இத்திட்டம் பயன்படும். எல்லோரும் சமத்துவ நிலையில் இருக்க வேண்டும், இதற்கு ஏற்ப குழந்தைகளை வளர்க்க வேண்டும்,

''நாங்கள் யாருடைய பணத்தையோ கொண்டு வந்து பிச்சை போடவில்லை. ஒவ்வொருவரும் பட்டினி கிடக்காமல் இருக்க வேண்டும். நாட்டில் வறுமை இருக்கும் வரை இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

''நாங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று தேர்தல் வாக்குறுதியில் கூடச் சொல்லவில்லை. ஆனால் செயல்படுத்தி வருகிறோம்.

மதுரையில் சத்துணவுத் திட்டத் துவக்க விழாவின் போது தமிழரசு (16.9.82 இதழ்) படித்துக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதல்வர்.





''இன்று ரூ. 130 கோடி செலவில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது.

''நாங்கள் திட்டம் தீட்டிக் கொடுக்கின்றோம். அரசு பணம் ஒதுக்குகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் செயல்படுத்துகிறார்கள். தவறுகள் செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். மக்களாகிய உங்களை நம்பித்தான் இத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ளேன். என்னை நம்பி அல்ல, நீங்கள் இதைக் கண்காணிக்க வேண்டும்.

''தற்போது வயது முதிர்ந்தோர் 1.5 லட்சம் பேருக்கு உதவிப் பணம், வேட்டி, அல்லது புடவை கொடுக்கப்படுகின்றது. வருகின்ற 1983-ஆம் ஆண்டு சனவரி மாதம் பொங்கல் நாள் முதல் இலவசமாக மதிய உணவு முதியோர்க்கு அளிக்கப்படுவதற்குத் திட்டமிட்டு இருக்கின்றேன். இத்திட்டத்திற்கு நிதி நிலை அறிக்கையில் வழிவகை செய்யப்படும்.''

விழா இறுதியில் மதுரை மாநகராட்சியின் ஆணையாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி இ. ஆ. ப. அவர்கள் நன்றி கூறினார்.

விழா முடிந்ததும் குழந்தைகளுக்கு மாண்புமிகு முதல்வர் உணவு பரிமாறினார். குழந்தைகளுடன் உட்கார்ந்து, குழந்தைகளுக்குக் கொடுக்கும் அதே தட்டில் உணவு அருந்தினார். ''குழந்தைகளிடம் உணவு எப்படி இருக்கிறது'' என்று கேட்டறிந்தார். அவரது பக்கத்தில் உட்கார்ந்து உணவு சாப்பிட்ட மூன்று வயதுக் குழந்தைக்குத் தாமே தமது கையால் கைகழுவி விட்டது எல்லார் நெஞ்சையும் தொட்டது.



# சரித்திர நாயகருக்குச் சான்றோர்கள் புகழாரம்!

மக்களிடத்திலே அறிவைக் கொளுத்தியவர்—

திருக்குறளுக்கு மாபெரும் சிறப்புச் செய்தவர்—

சாதனையில் சரித்திர நாயகனாக விளங்கியவர்—

—என்றெல்லாம் போற்றிப் புகழப் பெற்ற தென்னாட்டுக் காந்தி, பேரறிஞர் அண்ணா அவர்களின் 74வது பிறந்தநாள் விழா செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடந்தது.

அன்று மாலை, திரு டி.கே.எஸ். கலைவாணன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது.

## அறிவைக் கொளுத்தியவர்

பிறகு நடந்த சிறப்புக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்று, செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன் இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில் தமிழருக்கு, தமிழகத்திற்கு, தமிழ் மக்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அருந்தொண்டினை நினைவுகூர்ந்தார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், அறிஞர் அண்ணாவின் சிறப்பியல்புகளைக் கோடிட்டுக் காட்டினார். அவர் சொன்னார்—

''அண்ணா அவர்கள், நாடகத்தின் மூலம் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பியவர். பத்திரிகையாளராக - பேச்சாளராக - எழுத்தாளராக - நாடகாசிரியராக நடிகராக விளங்கியவர். மக்களிடத்திலே அறிவைக் கொளுத்தியவர். இலக்கியத்திலே புரட்சி செய்தவர். நாடகத்துறையிலே - திரைப்படத் துறையிலே மறுமலர்ச்சியை உண்டாக்கியவர்'' என்று புகழாரம் சூட்டினார்.

## குறளுக்குச் சிறப்புச் செய்தவர்

திரு ஊரன் அடிகள் பேசுகையில், வள்ளலார் வழியில் நின்று தொண்டாற்றியவர் அறிஞர் அண்ணா என்று விளக்கி, ''முதன் முதலில் திருக்குறள் வகுப்பு நடத்தியவர் வள்ளலார். அந்தத் திருக்குறளுக்கு மாபெரும் சிறப்பு செய்தவர் அண்ணா அவர்கள்''. என்று அழகாக எடுத்துக் கூறினார்.

திருமதி சுலோசனா சம்பத் அவர்கள், அண்ணாவோடு பழகிய அக்கால நினைவுகளை அழகுற எடுத்துக் கூறினார். ''புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப் பேற்றபிறகு, பெருந் தலைவர்களுக்கெல்லாம் விழா நடத்திச் சிறப்புச் செய்து வருகிறார்கள். எழுத்து, பேச்சு, நடிப்பு ஆகிய துறைகளில் தலைசிறந்து விளங்கியவர் அண்ணா'' என்று எடுத்துச் சொன்னார்.

## சரித்திர நாயகன்

பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்து, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத்தலைவர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள், நடமாடும் திருவுருவம் இன்று படமாகத் திகழ்கின்றது என்று சொல்லி, அறிஞர் அண்ணாவுக்கும், தமக்கும் உள்ள நட்பினைச் சுவைபடக் கூறினார்.

''அறிஞர் அண்ணா அவர்கள் சாதனையில் சரித்திர நாயகனாக விளங்கினார். இந்த நாட்டை வாழ வைத்தார் - வளர வைத்தார். பேச்சாளர்களை - எழுத்தாளர்களைத் தோற்றுவித்தார். பகைவரையும் தன் வசப்படுத்தும் நாவன்மை படைத்திருந்தார்'' என்று அறிஞர் அண்ணாவின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினார் சிலம்புச்செல்வர்.

## ஊமைகளைப் பேசவைத்தவர்

திரு வலம்புரிஜான் அவர்கள் பேசுகையில், தாம் படித்த காலத்தில் அண்ணாவின் பேச்சாற்றலில் மயங்கிய மாணவப் பருவத்தை நம்மோடு பகிர்ந்துகொண்டார். அவர் குறிப்பிட்டார்— ''நாடெல்லாம், வீடெல்லாம், ஏடெல்லாம் அவர் வரலாற்றுப் பேழையாக விளங்கினார். அவர் ஊமைகளைப் பேச வைத்தவர்; குருடர்களைப் பார்க்க வைத்தவர்; செவிடர்களைக் கேட்க வைத்தவர்''.

திரு.வி.க. விருதினை, திருக்குறளார் திரு வீ. முனிசாமி அவர்களுக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வழங்கினார்.

திருக்குறளார் திரு வீ. முனிசாமி அவர்களைப் பற்றிய குறிப்பினை, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் டாக்டர் மா.நன்னன் அவர்கள் படித்தார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் விழா நிறைவுரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''அரசு வழங்கிவரும் இந்த திரு.வி.க. விருதை இந்த ஆண்டு திருக்குறள் முனிசாமிக்கு வழங்க முடிவு செய்த முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

''எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் உள்ள அண்ணாவின் கட்டுரைகளைத் திரும்பத் திரும்பப் படித்தால் எவருக்கும் புலமை வரும். அரசியல் அறிவு பெருகும்.''

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா - நமக்கெல்லாம் பேரானந்தம் தந்தது மட்டுமல்ல, அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்ற உந்துதலையும் உணர்வையும் தந்தது என்றால், அது மிகையல்ல!

—பி. வீ. கிரி



அறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்தினை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் திறந்து வைத்தார்.



## ஆலின் நிழலே! அண்ணா தமிழே!!

—ஆற்றலரசு—

மூச்சிலே தமிழே என்றால்  
முத்தமிழ்த் தென்றல் நீங்கள்!  
பேச்சிலே ஆற்றல் என்றால்  
பாய்ந்திடு நதியே நீங்கள்!

வீச்சிலே எளிமை என்றால்  
விளைச்சலில் நஞ்சை நீங்கள்!  
பாய்ச்சலில் வேங்கை என்றால்  
பண்பிலே மேகம் நீங்கள்!

எழுத்திலே புலமை என்றால்  
எழுதுகோ லரசரானீர்!  
உழுதிடும் கலப்பை என்றால்  
உரம்தரும் திறனே நீங்கள்!

அழுவதில் மழலை என்றால்  
அன்பிலே அன்னை நீங்கள்!  
விழுதிலே ஆலாய் வந்தே;  
விளைவினைத் தந்தீர் அண்ணா!

## கலைவாணர் நினைவுநாள்...

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் 25-வது நினைவுநாள் விழா 30.8.82 மாலை கலைவாணர் அரங்கில் இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்கள் வில்லிசையின் வாயிலாகக் கலைவாணர் சிறப்புகளை எடுத்துச் சொன்னார்.

விழாவுக்கு மாண்புமிகு நீதிபதி திரு பு.ரா.கோகுலகிருஷ்ணன் தலைமை ஏற்றிருந்தார்.

இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு டி.வி.நாராயணசாமி, வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''மனித குலத்தின் நல்வாழ்வை எண்ணித் தவங்கிடந்த மாமனிதர் கலைவாணர். அவர் மறைந்துவிட்டார்; ஆனால் அவரது சிந்தனைகள் நம்மைவிட்டு மறையாமல் நமது இதயத்தில் இருந்து கொண்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றன''

விழாவைத் துவக்கி வைத்த முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் குறிப்பிட்டார்:

''கலைவாணர் நகைச்சுவையை நல்கினார். நையாண்டித் தனத்தை நல்கவில்லை. நகைச்சுவை அறிவாளிகளை மகிழ்விப்பது; நையாண்டி மற்றவர்களை மகிழ்விப்பது''.

தலைமை வகித்த மாண்புமிகு நீதிபதி பு.ரா.கோகுலகிருஷ்ணன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''சிந்திக்க வைத்து, சிரிக்க வைத்துச் செம்மைப்படுத்தியவர் — யாருடைய மனத்தையும் புண்படுத்தாமல் நல்லனவற்றை நமக்கு அளித்தவர் — கலைவாணர்''

அடுத்து உரையாற்றிய நடிகர் திரு டி.என்.சிவதாணு தெரிவித்தார்:

''மக்களுக்கும் கலைக்கும் கலைஞர்களுக்கும் இடையே தொடர்பு உண்டு என்பதைக் கலைவாணர்தான் நிரூபித்தார். அவருக்கு முன்பிருந்த கலைஞர்கள் சமுதாயத்துக்கு எதுவும் செய்யவில்லை''

அடுத்து உரையாற்றிய திருமதி சி.டி. ராஜகாந்தம் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''கலைவாணரின் விழாவைக் கொண்டாட வகை செய்த புரட்சித் தலைவரின் அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும்''

பின்னர் பேசிய திரு எஸ். வி. சகஸ்ரநாமம் தெரிவித்தார்:

''இனி வருகின்ற ஆண்டுகளில், கலைவாணர் நினைவு நாளை மேடைப் பேச்சாக மட்டும் வைத்துக் கொள்ளாமல் நகைச்சுவை நாடகப் போட்டியை ஏற்படுத்தி சிறந்த நாடகத்திற்குப் பரிசு வழங்கும் முறையைக் கொண்டு வரலாம்''.

அடுத்து உரையாற்றிய திரு வெ. நாராயணன் குறிப்பிட்டார்:

''பிறரை மகிழ்விப்பது மட்டுமல்ல எல்லாப் பொருள்களையும் ரசிக்கத் தெரிந்த ரசிகராக அவர் விளங்கினார். பிச்சைக்காரனின் பாடலையும் ரசிக்கக்கூடியபெரிய மனம் பெற்றிருந்த பெரியார் அவர்.

''அவரது பெயரில் ஒரு கலைக் கல்லூரியை அரசு நிறுவவேண்டும். ஜெமினி ஸ்டுடியோ அருகிலிருந்து தொடங்கி, போரூர்வரை செல்லும் சாலை முழுவதையும் கலைவாணர் எஸ்.என். கிருஷ்ணன் சாலை என்று அறிவிக்க வேண்டும்.''

பின்னர் உரையாற்றிய மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்:

''கலைவாணர் அவர்கள், சமுதாயத்திற்கு எடுத்து வைத்த கருத்துக்களை நாம் இளைஞர்களுக்கு நினைவுறுத்த வேண்டியது அவசியம்.,

''அவர் கடுமையாக உழைத்து மறைந்தவர். பிறரது உழைப்பில் வாழ்ந்து மறைந்தவரல்ல; தனது வாழ்க்கையை மெழுகுவர்த்தியாக்கிக் கொண்டவர். அவரை ஒரு சகாப்தம் என அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தச் சகாப்தம் தந்த-



தோற்றிய பல உணர்வுகள்தான் இன்று ஆட்சி செய்து கொண்டிருக்கின்றன.

''இந்த நூற்றாண்டு கண்டெடுத்திருக்கின்ற — வாராது வந்த மாமணியாக வாய்த்த — கலைவாணர் என். எஸ். கே. சாகாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரது தத்துவங்களை உலகமுழுவதும் எடுத்துச் சொல்லிப் பெருமைப்படுத்த வேண்டும்.

''மகிழ்ச்சியாக இந்த மனித சமுதாயம் இருக்க வேண்டும் என்பதற்காக வாழ்ந்தவர் அந்த உயர்ந்த மனிதர். உயர்ந்த மனிதனாக இருக்க வேண்டுமானால் உயர்ந்த கலைஞனாக இருக்க வேண்டும்; உயர்ந்த கலைஞனாக இருக்க வேண்டுமானால் உயர்ந்த ரசிகனாக இருக்க வேண்டும்.

''கலைவாணர் தொடர் சொற்பொழிவு ஒன்றை மாதந்தோறும் ஆண்டுதோறும் இயல் இசை நாடக மன்றம் நடத்த வேண்டும். ஆண்டுதோறும் அவரது தத்துவங்களை - கலை உலக இலக்கியங்களை எடுத்துச் சொல்லும் பணியினைச் செய்ய வேண்டும்.

''கலைவாணரின் பெயரில் ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று இங்கே கேட்டுக் கொண்டார்கள். சென்னையிலுள்ள திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு கலைவாணர் பெயரைச் சூட்டலாமா என்று யோசனை செய்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இது குறித்துப் பேசி விரைவில் அறிவிக்க முயற்சி செய்கிறேன்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்:

''கலைவாணரைப் பாராட்டிப் போற்றி வணங்குவதற்குக் காரணம், கலை உலகில் தனக்கென்று தனி இடத்தை அவர் ஏற்படுத்திக் கொண்டார். யாரும் எட்டிப் பிடிக்க முடியாத இடத்தை எட்டிப் பிடித்தார். அவர் காலி செய்த இடத்தை நிரப்புவதற்கு இன்னும் ஆள் தோன்றவில்லை.

''பிறரை அழவைப்பது மிகமிக எளிது; சிரிக்க வைப்பது கடினமானது. அந்தக் கலையை மிக உன்னதமாகக் கையாண்டார் கலைவாணர்.

''உலகில் இரண்டே இரண்டு சுவைதான் சிறப்பு வாய்ந்தது. ஒன்று அவலம்; மற்றொன்று நகைச்சுவை.

''அவலம் இதயத்தைத் தொடும். அழவைக்கும், மனத்தைக் கலக்கிக் கரைக்கும், இரங்க வைக்கும்.

''நகை-மகிழ்ச்சியூட்டும், உள்ளத்தை விரிவாக்கும், பரந்த உள்ளத்தைக் கொண்டு வந்து சேர்க்கும். அனைவரையும் ஈர்க்கும்; பலரையும் ஒன்று படுத்தும்.

''மனித சமுதாயத்தை மகிழ்ச்சியினால் ஆழ்த்தக்கூடிய வகையில் அவரது தொண்டு பயன்பட்ட தென்றால், அது தனிச் சிறப்பு.

''மனித சமுதாயத்தின் நெளிவு சுளிவுகளை எல்லாம் எடுத்துக் காண்பிக்கும் திறம் அவரிடம் இருந்தது''

இறுதியில், இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு டி.வி. நாராயணசாமி நன்றி கூற விழா இனிது முடிந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு:

**—தமிழ்ப்பித்தன்**

# மாநில தலைமைக் கணக்காயர்

தமிழ்நாடு : : சென்னை–18

## அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி 1981-'82

மாநில தலைமைக் கணக்காயர், தமிழ்நாடு அவர்கள், மாநில அரசு ஊழியர்கள் அனைவருடைய பொது வருங்கால வைப்பு நிதியின் (ஜி. பி. எப்.) 1981-82-ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகள் (அக்கவுண்ட் ஸ்லிப்) அனைத்தையும் அனுப்பி விட்டார்.

இந்த அறிக்கைகள் அரசு ஊழியர்கள் 1982-ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணிபுரிந்தார்களோ, அந்தந்த அலுவலக நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆகவே, தமிழக அரசு ஊழியர் அனைவரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இந்தக் கணக்கு அறிக்கைகளில் ஏதாவது குறைகள் காணப் படுமேயானால், சம்பளப் பட்டியல் முழு விவரங்களுடன் கீழ்க்கண்ட விலாசதாரருக்கு எழுதும்படி கோரப்படுகிறார்கள்:

**திரு க. விசுவநாதன்,**
கணக்கு அலுவலர் (F.M.I. பிரிவு)
மாநில தலைமைக் கணக்காயர் அலுவலகம்,
261, அண்ணாசாலை,
சென்னை - 600 018.



# அண்ணாவின் கனவு நனவாகிறது!

அ. மருது

கரூர் - திண்டுக்கல் - மதுரை - தூத்துக்குடி ரயில்பாதைத் திட்டப்பணிகள் துவக்கவிழா தூத்துக்குடி தருவை திடலில் (30.8.82) சிறப்புற நடைபெற்றது.

தமிழக அரசு தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியின் விளைவாக நடவடிக்கை எடுக்கப்படும் இந்த இனிய விழாவில் தென்னக இரயில்வேயின் பொது மேலாளர் திரு. வர்கீஸ் அன்வர் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இவ்விழாவிற்கு - மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு, ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு மத்திய இரயில்வே அமைச்சர் திரு.பி.சி. சேத்தி அவர்கள் கட்டுமானப் பணியைத் துவக்கிவைத்து அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி. ஆர். அவர்கள் சிறப்புரையாற்றினார்.

மேலும்-மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம், மாண்புமிகு கதர்-பொதுப்பணித் துறை அமைச்சர் திரு, எஸ்.என். ராஜேந்திரன் ,மாண்புமிகு மத்திய ரயில்வே துணை அமைச்சர் திரு,சிகே.ஜாபர்ஷெரீப், மத்திய ரயில்வே போர்டுத் தலைவர் திரு எம்.எஸ்.குஜ்ரால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு,சிவப்பிரகாசம், திரு, கே.டி. கோசல்ராம் ஆகியோரும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

மாண்புமிகு மத்திய ரயில்வே அமைச்சர் திரு, பி.சி.சேத்தி அவர்கள் உரையாற்றுகையில்— ''இந்த அரிய திட்டத்திற்குத் தம் முழு ஒத்துழைப்பையும் அளித்த தமிழக முதல்வர் திரு, எம்.ஜி. ஆர். அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ''என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது:

''இந்த அகலரயில் பாதைத் துவக்க விழா, தமிழக மக்களுக்கு திருவிழாவாகும். தமிழ் நாட்டின் எதிர்காலம் இதன் மூலம் பொற்காலமாகும். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் எல்லாத் தொழிலும் ஏற்றம்பெறும் என்பது உறுதி.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். [illegible] சிறப்புரையில் குறிப்பிட்[illegible]

''இந்த விழா வி[illegible] காக நடத்தப்படும் விழா அல்ல; அரசு நிறைவேற்றும் திட்டங்களை மக்கள் அறிந்து கொள்ள நடக்கும் விழா.

''அமரர் அண்ணா அவர்களிருந்து ,இத்திட்டம் நிறைவேற எல்லாரும் பெருமுயற்சி எடுத்தார்கள். இதற்கான நில ஆர்ஜிதம் குறித்தும் கடந்த மாதமே தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

[illegible]ங்கு தொழிற்சாலைகள் [illegible]வும், தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புக் கிடைக்கவும் நல்வாய்ப்பாக இந்தக் கால்கோள் விழா அமைவது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.''

இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில், எழும்பூர் ரயில்வே தலைமைப் பொறியாளர் திரு ஸ்ரீதரன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.



## கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதை

கரூரிலிருந்து நெல்லைக்கு (திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி வழியாக) அமைக்கப்பட இருக்கும் அகல இரயில் பாதையின் மொத்த நீளம் 326 கிலோ மீட்டர். இந்தத் திட்டம் முடிவடையும்போது கரூருக்கும், நெல்லைக்கும் இடையே உள்ள மொத்த இரயில் நிலையங்கள் எண்ணிக்கை 51 ஆக இருக்கும்.

இதில் திண்டுக்கல்லுக்கும், நெல்லைக்கும் இடையே தற்போது இருக்கும் இரயில் நிலையங்கள் அப்படியே நீடிக்கும்; அவற்றில் மாறுதல்கள் இல்லை.

கரூர்-திண்டுக்கல் இடையே போடப்படும் இரயில் நிலையப் பாதையில் 7 புதிய இரயில் நிலையங்கள் அமைக்கப்படும்.

பணிகள் 2 கட்டமாகச் செயல்படும். முதல் கட்டத்தில் முதல் பகுதியாக நெல்லையிலிருந்து தாழையூத்து, மணியாச்சி வழியாக தூத்துக்குடிவரை அகல இரயில்பாதை போடப்படும், இந்த வேலை 1983-84-ஆம் ஆண்டில் முடியும்.

அதே சமயத்தில் கரூர்—திண்டுக்கல் இடையே புதிய இரயில் பாதை போடும் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். இரண்டு ஊர்களுக்கும் இடையேயான தூரம் 73 கிலோமீட்டர். இந்த வேலையும் 1983-84 ஆம் ஆண்டு முடிவடையும். அடுத்து திண்டுக்கல்-மதுரை இரயில் பாதைப் பணி நடைபெறும். இரயில் பாதை நிலங்களுக்காகத் தமிழக அரசு கையகம் செய்து கொண்டிருக்கிறது. பணியை விரைவு படுத்த தனி அதிகாரிகளையும் தமிழக அரசு நியமித்துள்ளது.

இரண்டாவது கட்ட வேலையாக மதுரை-மணியாச்சி "மீட்டர் கேஜ்" இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றி அமைக்கும் வேலை நடைபெறும்.

இந்த இறுதிக்கட்ட வேலை நடைபெறும் பொழுது, திண்டுக்கல் வழியாக மதுரைக்கும், நெல்லை வழியாகத் தூத்துக்குடிக்கும் அகல இரயில்பாதை வசதி கிடைத்துவிடும்.

இந்தப் பணி முடிந்த பிறகு ஆண்டுக்கு 60 இலட்சம் பயணிகள் பயன்பெறுவார்கள் என்றும், ஏறத்தாழ 42 இலட்சம் டன் சரக்குப் போக்குவரத்து நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்திற்கு ரூ.42 கோடியே 86 இலட்சம் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப் புதிய இரயில்பாதை திட்டத்தின் மூலம் சேலம், கோயம்புத்தூர், கரூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற முக்கிய நகரங்கள் இணைக்கப்படுகின்றன. இதனால் தமிழகத்திற்குச் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கும். தமிழகம் மேலும் செழிப்படையும்.





ஆதிதிராவிடர்க்குக் கறவைமாடு வாங்கக் கடன் உதவி வழங்குதல்

# முப்பெரும் விழா!

இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்ட கூட்டுறவுப் பால் வழங்கும் ஒன்றியம் எது?

அதுதான், சென்னை அயன்புரத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் சென்னை - செங்கை மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம். இதன் வயது 55.

இந்த ஒன்றியத்தின் சார்பில் முப்பெரும் விழா 13.8.82அன்று மிகக் கோலாகலமாக - பால் உற்பத்தியாளர்கள் திரளாகச் சூழ, ஒரு மாநாடு போலவே நடந்தது.

இந்த அமைப்பு நவீன 'அமுல்' பாணி அல்லது 'ஆனந்த்' பாணி என அழைக்கப்படும் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட அகில இந்திய அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தாயாகும். 13 சங்கங்களுடனும் ரூ.242 பங்குத் தொகை மூலதனத்துடனும் துவங்கப்பட்ட இந்த ஒன்றியம், இன்று தன்னகத்தே 300 சங்கங்களின் மூலம் சுமார் 24,860 செங்கை மாவட்ட கிராம பால் உற்பத்தியாளர்கள் குடும்பங்களுக்குப் பால் பண்ணைத் தொழிலின் மூலம் கூடுதல்பலன் பெறவழிசெய்கிறது. முன்பு 3,69,000 லிட்டர் பால் கொள்முதல் செய்த இந்த ஒன்றியம், கடந்த 1981-82ஆம் ஆண்டில் 69,00,000 லிட்டர் பால் கொள்முதல் செய்தது.

தற்போது நாளொன்றுக்குச் சராசரி 20,000 லிட்டர் கொள்முதல் செய்து, 24,800 உற்பத்தியாளர்களுக்கு, 250 சங்கங்களின் மூலம் பலனளிக்கும் இந்த ஒன்றியம், வரும் ஐந்தாறு ஆண்டுகளில் 500 சங்கங்கள் அமைத்து 89,000 லிட்டர் பால் பெற சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்றும்!

'முப்பெரும் விழா' வண்ண விளக்குகள் வரவேற்க, நம் எண்ணத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் மிகச் சிறப்பாக நடந்தது.

ஒன்றியப் பெருந்தலைவர் திரு கே. பாலாஜி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், 'இந்த ஒன்றியம் ஆசியாவிலேயே முன்னோடியானது' என்றார்.

தமிழ்நாடு பால் வளத்துறை ஆணையர் திரு.ஏ.எம்.சுவாமிநாதன் இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில், ''ஒன்றியப் பணிகள் மிகுந்த உற்சாகத்துடன் நடப்பதைப் பாராட்டுகிறேன். ஒன்றியத்தின் பால் மூலமாகத் தனிப்பட்டோருக்கு மிகுந்த பலன் கிடைக்கிறது'' என்றார்.

இந்த ஒன்றியத்தின் நிறுவனர் பழம்பெரும் கூட்டுறவாளர் திவானபகதூர் திரு.கீ.தெய்வசிகாமணி முதலியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி மாண்புமிகு திரு.இரா. மோகனரங்கம் அவர்கள் திறந்து வைத்துப் பேசினார். அவர் பேசுகையில், ''வட, தென்னார்க்காடு மாவட்டங்களிலும் இதுபோன்ற ஒன்றியங்களை அமைக்க வேண்டும். பால் வளத் துறையில் தமிழகம்தான் முன்னணி வகித்து வருகிறது'' என்றார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு. கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள், ஒன்றிய கால்நடைப் பராமரிப்பு மற்றும் பயிற்சி நிலைய அலுவலகங்களுக்கு அடிக்கல் நாட்டிப் பேசினார். அவர் பேசுகையில்.—

''மூன்று இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். நியூசிலாந்தில் 15 ஆயிரம் பேர்தான் இருக்கிறார்கள். இவர்கள் ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ''இந்த அளப்பரிய வெற்றியின் ரகசியம் என்ன?''என்று அவர்களைக் கேட்டதில், அதற்கு அவர்கள் பதில் சொன்னார்கள் அமைப்புமுறை, எடுக்கின்ற நடவடிக்கை, தரமான பொருளைத் தயாரிக்கின்ற ஆர்வம், எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் நலனைவிட நாட்டின் நலனைப் பெரிதாகக் கருதும் தன்மை என்று பதில் சொன்னார்கள்.

''முதல்வர் அவர்கள் நினைத்ததை முடிப்பவர். 10 இலட்சம் விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். இரண்டாவது பால்வளப் பெருக்கத் திட்டத்தின் கீழ் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குத் தக்க வசதி செய்து வருகிறார்கள்.

''கிருஷ்ணகிரி, தருமபுரி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் பால்பண்ணை வர உள்ளது. 1986 ஆம் ஆண்டிற்குள் 10 இலட்சம் குடும்பங்களுக்குப் பாதுகாப்புத் தரப்படும்; இதில் ஒரு இலட்சம் பேர் செங்கல்பட்டு மாவட்டத்தினராக இருப்பார்கள்.''

முப்பெரும் விழாவினை வாழ்த்திப் பழம்பெரும் கூட்டுறவாளர் திரு.கீ.தெய்வசிகாமணி முதலியார் அவர்களின் குமாரர் திரு. கீ. நச்சினார்க்கினிய சிவம், திரு கே.வி.சீனிவாசன், திரு பாக்கூர் எஸ்.சுப்பிரமணியம், திரு ஜேப்பியார், எம்.எல்.சி., திரு.ஜே.சி.டி. பிரபாகரன் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

இந்த ஒன்றியத்தில் 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றியவர்களுக்கு ஒன்றியம் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கைக்கடிகாரங்களை வழங்கினார். டிபன் கேரியர்களை திரு ஜேப்பியார், எம்.எல்.சி. அவர்கள் வழங்கினார்.

அன்றைய விழா, விரைவான வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட விழாவாக விளங்கி-து என்றால் அது மிகையல்ல!

—பி. வி. கிரி



# தமிழ்த் தென்றல் நூற்றாண்டு விழா!

நிகழ்ச்சித் தொகுப்பு: தமிழ்ப்பித்தன் • பி. வி. கிரி • ஜி. ஆனந்தன்

'தமிழ்த் தென்றல்' என்றும் தமிழ் முனிவர்' என்றும் தமிழ்ப் பெருங்குடி மக்களால் போற்றிப் புகழப்படும் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களின் நூற்றாண்டுத் தொடக்க விழா, ஆகஸ்டுத் திங்கள் 28, 29 தேதிகளில் மிகச் சிறப்பாக நடந்தது.

28-ந் தேதி காலை, சென்னை கலைவாணர் அரங்கில், விழா தொடங்கியது.

அரசு இளங்கலைஞர்கள் திருப்பாம்பரம் சகோதரர்கள் கலைமாமணி திரு ஏ. கே. பழனிவேல், கலைமாமணி திரு டி. ஏ. கலியமூர்த்தி குழுவினரின் நாயன இசையும், கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடந்தன.

செய்தி-சுற்றுலா (தமிழ்)ப்பண்பாட்டுத்துறை ஆணையர்மற்றும் செயலர் திரு ப. பா. கிருஷ்ணசாமி இ. ஆ. ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

**மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி**

மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்து, விழாத் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

**மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்**

மாண்புமிகுசெய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமை உரையில் குறிப்பிட்டார்:

''நாட்டுப் பற்றின் காரணமாகத் 'தேச பக்தன்' என்ற பெயரிலேயே ஒரு பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று, இந்திய ஒற்றுமைக்காக அவர் அரும்பாடுபட்டு வந்தவர்.

''திரு. வி. க. வைப் பற்றித் தமிழகம் மட்டும் அறிந்தால் போதாது. இந்திய ஒருமைப்பாட்டிற்காக உழைத்த அவரை மத்திய அரசு அனைத்து மாநிலங்களில் உள்ளவர்களுக்கும் அடையாளம் காட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அன்னார் இயற்றிய நூல்களை இந்தியாவெங்கும் பரவச் செய்ய வேண்டும்.''

திரு. வி. க. அவர்களின் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்து திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், ''நான் மாணவனாக இருந்த காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது எளிய வாழ்க்கை, இனிய சொல் எல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தன. அவர் தமிழ்ப் பெரியவர் மட்டுமல்ல. இந்தியப் பெரியவர் ''என்று குறிப்பிட்டார்.

முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் தவத்திரு சுந்தர சுவாமிகள் அவர்கள் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் ஆகியோர் உரையாற்றினர்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன் இ. ஆ. ப. அவர்கள் தமது நன்றியுரையில் திரு. வி. க. அவர்களின் அருமை பெருமைகளை எடுத்துக் கூற, அன்றைய காலை நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

சென்னைஇராயப்பேட்டையிலுள்ள வெஸ்லி மேல்நிலைப் பள்ளித்திடலில் மாலை நிகழ்ச்சி திருப்பாம்பரம் சகோதரர்கள் 'கலைமாமணி'திரு-டி.சே-பழனிவேல் 'கலைமாமணி' திரு. டி. ஏ. கலியமூர்த்தி குழுவினரின் நாயன இசையுடனும்சுப்புஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டுடனும் துவங்கியது.

செய்தி- மக்கள் தொடர்புத் துறைஇயக்குநர் திரு. எஸ். டி.காசிராஜன், இ.ஆ.ப. அவர்கள் ,தமது வரவேற்புரையில்'' 'தமிழ்த்தென்றல்' திரு.வி.க. அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகுக்கு ஆற்றிய சேவை மகத்தானது. அவர் தலைசிறந்த எழுத்தாளராகவும் தலைசிறந்த பேச்சாற்றல் மிக்கவராகவும் எழுத்தில் கருத்தும் வேகமும் கொண்டவராகவும் தியாகச்சுடராகவும் திகழ்ந்தார். அவர் விட்டுச் சென்ற தமிழ்ப்பணியை



நினைவு கூரும் வகையில், இந்த அரசு விழா எடுத்து அவருக்கு மேலும் நற்புகழைச் சேர்ப்பிக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

### மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், தமது தலைமையுரையில்,

"பண்பட்ட பத்திரிகையாளராகவும் ஒழுக்க சீலராகவும் மிளிர்ந்திருந்திருக்கிறார். கொள்கைக் குன்றாக விளங்கிய அவர், வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போர்க்கொடி உயர்த்தி, சென்றிருக்கிறார்.

சாதி— சமய— இன வேறுபாடு அற்ற புதிய சகாப்தத்தை உருவாக்கப் பாடுபட்டவர் திரு.வி.க. எதிர்நீச்சல் போட்டே வாழ்நாளை நடத்தியிருக்கிறார். சுதந்திரக் காற்றை நாம் இன்றைக்குச் சுகமாக சுவாசிக்கிறோம் என்றால் திரு. வி. க போன்ற தேசபக்தர்கள் சுதந்திரம் பெற பாடுபட்டதால்தான் என்பதை உணர வேண்டும்.

"அவர் ஆற்றியுள்ள தொண்டுகள் புதிய தலைமுறையினர்க்குப் போய்ச் சேர வேண்டும் என்ற உயரிய லட்சியத்துடன் விழாக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன'' என்று குறிப்பிட்டார்.

### சட்டப் பேரவைத் தலைவர் திரு இராசாராம்

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தமது துவக்க உரையில், ''அந்தக்காலத்தில் மேடைகளில் ஆங்கிலம் பேசுவதைப் பெருமையாக மதித்த நேரம். அந்த முறையை உடைத்து எறிந்து தமிழில் பேசுவதேதமது லட்சியமாகக் கொண்டு விளங்கியவர் திரு. வி. க. அவர்கள். தந்தை பெரியார், வரதராஜுலுநாயுடு, மூதறிஞர் ராஜாஜி போன்றவர்களிடத்தில் மிகவும் அன்பும் பற்றும் பாசமும் வைத்துக்கொண்டவர் திரு. வி. க. அவர்கள்.

''மதவெறி-மதமாச்சரியங்கள் சாதிவெறி இவைகளைக்களையபாடுபட்ட முற்போக்குச்சிந்தனையாளர்— அந்தக் காலத்திலே கலப்புத் திருமணத்தை ஆதரித்தவர் திரு. வி. க. பல பிரச்சனைகளில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இறுதி மூச்சு உள்ள வரை தந்தை பெரியாரின் உயிர் நண்பராகத்தான் திரு. வி. க. வாழ்ந்திருக்கிறார்.'' என்றார்.

திரு. வி. க. எழுதிய 'பெண்ணின் பெருமை' என்ற நூலை சட்டப் பேரவைத் தலைவர்



திரு.வி.க. கண்காட்சியை மேதகு ஆளுநர் திரு. சாதிக்அலி திறந்துவைத்தார்.

வெளியிட - அதனை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பேசுகையில், "திரு. வி. க. வாழ்க்கை வரலாறுகளைப்பாடப்புத்தகமாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வைக்க அரசு முன் வர வேண்டும். அவர் எழுதிய நூல்களை மலிவு விலையில் வெளியிட வேண்டும்'என்றார்.

நெல்லை தியாகி திரு. எஸ். என். சோமயாஜுலு பேசுகையில், குறிப்பிட்டார்"இதுபோன்ற தேசபக்தருக்கு அரசு விழா எடுப்பதன் மூலம் அரசின் புகழுக்கு மேலும் புகழ் மகுடம் சேர்ப்பதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதுதான் இந்த அரசுக்குப்பெரிய 'சொத்து''

பிரபலஎழுத்தாளர் திரு.அகிலன் பேசுகையில்,'' திரு. வி. க. தனது வாழ்நாள் முழுவதும் தேசத்தின் நலனிலும் மக்கள் நலனிலும் அக்கறை காட்டி வந்தார். மக்களிடத்தில் இருக்கும் மூட நம்பிக்கையை விரட்டியடிக்க-எதிர்த்து போராடத் தவறவில்லை'' என்று குறிப்பிட்டார்.

திரு.நெ. து. சுந்தரவடிவேலு பேசுலகயில், "தமிழ்த் தென்றல் திரு. வி. க. 'தமிழ்' 'தமிழ்' என்று உயிர் மூச்சு உள்ளவரை பாடுபட்டு வந்தார். அவர் நல்ல தமிழில் எழுதும் எழுத்தாளர். அவரது புகழைப்பரப்பும் தமிழக அரசைப் பாராட்டுகிறேன்'' என்றார்.

திரு வலம்புரிஜான் பேசுகையில், "திரு. வி. க.'பெண்ணின் பெருமையை' அற்புதமாக வடித்துக் காட்டியிருக்கிறார். தமிழ் முனிவராக—சாதுவான முனிவராக இருந்தாலும் அவரது பார்வை விரிந்த பார்வையாகத் தான் இருந்திருக்கிறது. சாதுவான முனிவர் என்று கூறும் அவர் சிறுமையைக் கண்டு பல நேரத்தில் பொங்கி எழுந்திருக்கிறார். தமிழகத்திற்குக்கிடைத்த தலை சிறந்த தமிழ் பொக்கிஷம் திரு. வி. க.'' என்றார்.

### டாக்டர் நாவலர்

விழாவில் மாண்புமிகு நிதிஅமைச்சர்டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், "தமிழ்மொழிக்காக அவர் செயற்கரிய செயல்களைச் செய்து தமிழ்மொழிக்குச் சிறப்பு தந்திருக்கிறார். பாரதியாருக்கு ஆண்டு முழுதும் நூற்றாண்டு நிறைவு விழா எடுப்பதுபோல திரு. வி. க. வுக்கும் ஆண்டு முழுதும் விழாவை நடத்தி வருவோம்.

"யார் யார் மனித சமுதாயத்திற்குப்பாடுபடுகிறார்களோ அவர்களைத்தான் இந்த உலகம் தனது இதயத்தில் வைத்துக் கொள்கிறது. அந்த வகையில் திரு. வி.க வும் ஒருவர். மக்களின் இதய நாடியைத்தொடும்படி திரு.வி.க. வின் கருத்துக்கள் இருப்பதனால் அவர்களுக்கு அரசு விழா எடுத்துச் சிறப்பிக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

திரைப்பட நடிகை 'கலைமாமணி' செல்வி ஸ்ரீ பிரியா — வைஜயந்திமாலா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

இரண்டாம் நாள் 29-8-82 அன்று காலை நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் கலைமாமணி திரு. வி. கோவிந்தசாமி மாஸ்டர் சுரேஷ் பாபு ஆகியோரின் வயலின் இசையுடன் ஆரம்பமானது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. எஸ். டி. காசிராஜன் இ. ஆ. ப. அவர்கள் ''மனத்திடத்துடன் பணியாற்றும் காரியம் வெற்றி பெறும் என்பதற்கு எடுத்துக்காட்டு திரு.வி.க. அவா தமிழுக்கும் சமுதாயத்திற்கும் செய்திருக்கும் மகத்தான பணிகளை நாடு நன்கறியும். இந்த நூற்றாண்டு முதற்கொண்டேனும் நமது கடமையை ஒழுங்காகச் செய்தாலே போதும். அதுவே திரு. வி. க. வின் கொள்கையை நாம் கடைப்பிடிப்பதாகஅர்த்தம். அவர் விட்டுச் சென்ற பணியை ஒவ்வொருவரும் கடைப் பிடித்து நடக்க வேண்டும்'' என்று வரவேற்புரையில் குறிப்பிட்டார்

### டாக்டர் நாவலர்

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில்,

''திரு. வி. க. அவர்கள் தன்னுடைய எண்ணத்தாலும் எழுத்தாலும், செயலாலும், சொல்லாலும் இந்த நாட்டுக்கு வெற்றி தேடித் தந்தவர். அவர் இந்த நாட்டுக்கு நல்ல வழிகாட்டியவர். வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி ஊட்டி அதற்கான வழி வகைகளைச் செய்தவர்.

''காந்தி கொள்கையையும் வள்ளுவர் அறிவுரைகளையும் எங்கெங்கு வாய்ப்பு கிடைக்குமோ அங்கெல்லாம் எடுத்துக்கூறினார். காந்தியையும், வள்ளுவரையும் மக்கள் பின்பற்ற தொடங்கினால் நாடு சிறப்படையும்.

"தந்தை பெரியார் அவர்களை மேடையில் பேச வேண்டும்என்று தூண்டியவரே திரு. வி. க. தான் என்று பெரியாரே கூறியுள்ளார். மனிதரை மனிதர் மதிக்கும் பண்பாடு திரு. வி. க. வுக்கு உண்டு'' என்று குறிப்பிட்டார்

பேராசிரியர் டாக்டர் ந சஞ்சீவி பேசுகையில், திரு. வி. க. ஒரு சுரங்கமாக, ஒரு மலையாக, தமிழ்கலைக்,களஞ்சியமாக இருந்தார் அவரது நூல்களை கலைக் களஞ்சியமாக வெளியிட்டு அனைத்து மக்களுக்கும் பயன் படும்படிச்செய்யவேண்டும்'என்று குறிப்பிட்டார்

தமிழ்ப் பழங்கலை இயக்குநர் திரு. கு. ராஜவேலு பேசுகையில், திரு. வி. க. சமய-சன்மார்க்க நெறிகளைக்கடைப்பிடித்து வந்தவர். அவர் கடைசிமூச்சு இருக்கும் வரை, தான் கொண்ட கொள்கையில் உறுதியுடன் இருந்தவர் என்று குறிப்பிட்டார்.

தவத்திரு ஊரன் அடிகள் பேசுகையில்."சாதி, சமய, இன வேறுபாடற்ற மனிதராகத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. திகழ்ந்தார்'' என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் டாக்டர் திரு. நா. பாண்டுரங்கன் பேசுகையில், 'தமிழ்த்தென்றல்' திரு. வி. க. விற்கு விழா எடுப்பதோடு நின்றுவிடாமல், நாம் அவர் விட்டுச் சென்ற பணியை முடிப்பதற்காக, நம்மை நாமேதயாராக்கிக்கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

சிறுவை திரு. மோகனசுந்தரம் பேசுகையில், 'பெண்ணின் பெருமை' என்ற நூலை அரசு மலிவுப் பதிப்பாக வெளியிட்டுத்தமிழ் உலகத்திற்கு வழங்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

திரு அன்புகணபதி பேசுகையில். "திரு. வி. க. தமிழுக்காக ஆற்றிய பணி சொல்லில் அடங்காதது. திரு. வி. க. நூலை அரசே நாட்டுடைமை ஆக்க முன் வர வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

### மாண்புமிகு காளிமுத்து

விழாவினைத் தொடங்கி வைத்த மாண்புமிகுவேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்துஅவர்கள் பேசுகையில்,

''ஒரு நாட்டின் வரலாறு என்பது அந்நாட்டுச் சான்றோர்களின் வரலாற்றுத் தொகுப்புதான் என்பார்கள. திரு. வி. க. வின் வாழ்க்கை வரலாற்றைஆராய்ந்து படித்தால் அதுதான் தமிழ்நாட்டின் சரித்திரம்—தமிழ்நாட்டின் சமுதாய சீர்திருத்த வரலாறு-தமிழ்நாட்டின் பெண்ணுரிமை இயக்க வரலாறு-தமிழ்நாட்டின் தொழிற்சங்க வரலாறு என்று கூறலாம். இப்படி பல பட்டைகள் தீட்டப்பட்ட வைரமாகத் திகழ்ந்தவர் திரு. வி. க. அவரது வார்த்தைகள் மற்றவர்களை புண்படுத்தியதில்லை. அவரது வாழ்க்கை மற்றவர்களுக்கு முள் வேலியாக இருந்ததில்லை. தமிழகத்தில் புதிய மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் திரு. வி. க.

''தியாகத்தைக் 'கொள்முதல்' ஆக்கி தன் சொந்த வாழ்க்கைக்காக அவர் பள பளப்பாக்கிக் கொண்டவரல்ல; ஒளிதந்துஅணையும் மெழுகுவர்த்தி போல, மணம் தந்து மறையும் சந்தனக் கட்டைகள் போல தனது வாழ்க்கையை ஆக்கிக் கொண்டார்.

''தமிழுக்குச் சிறப்பு தேடித் தந்தார். தமிழ் ஒதுக்கப்பட்டு இருந்த காலத்தில் தமிழுக்குப் பெருமை தேடித்தந்தவர். தமிழுக்கு ஆபத்து வந்தபோது அஞ்சாது போர்க்களத்தில் குதித்தவர். அவர் காட்டிய அந்த வழி நெறி நின்று மொழிக்காக உறுதி எடுப்போம்,'' என்றார்.

செய்தித் துறை துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் அவர்கள் நன்றி கூறினார்.

29.8.'82 மாலை திரு.வி.க. வின் பிறந்த நாள் விழா வெஸ்லி உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் ''தொழிலாளர் திருநாளாகக்' கொண்டாடப்பட்டது.

பிற்பகல் கலைமாமணி திரு வி கோவிந்தசாமி, மாஸ்டர் சுரேஷ் பாபு ஆகியோரின் வயலின் இசையுடன் விழா துவக்கம் ஆகியது.



பின்னர், திரு.வி.க. அவர்களின் பேத்தி வசந்தகுமாரி திரு. வி.க. அவர்களைக் குறித்துப் பாடல்கள் பாடினார்.

அதன்பின்னர் 'கலைமாமணி' சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''அரசியலில் நுழைந்த முதல் புலவர் பெருமான் திரு.வி.க, பேச்சுக்கும் நடைமுறைக்கும் வித்தியாசமின்றி வாழ்ந்த பெரியவர், திரு.வி.க.''

அடுத்து, உரையாற்றிய திரு அ.மு.பரமசிவானந்தம் அவர்கள் தெரிவித்தார்:

''திரு,வி.க. எந்த இடத்திற்கும் பேசச் சென்றாலும், எளிமையையே பின்பற்றுவார்.''

அடுத்து உரையாற்றிய திரு வி. பி சிந்தன் அவர்கள் தெரிவித்தார்; திரு.வி.க. குழந்தை உள்ளம் கொண்டவர். கருத்து மாறுபட்டவர்கள் அவரிடம் பேசும்போது பொறுமையோடு கேட்டுக் கொள்வார்,''

திரு எஸ். சி. சி அந்தோணிப் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்: ''உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் வகையிலே திரு. வி.க. பேசக்கூடியவர். அந்தப் பேச்சு, கேட்டவர்கள் மனதில் பதியும்''

பின்னர் உரையாற்றிய திரு எம். கலியாணசுந்தரம் ,எம்.பி. அவர்கள் குறிப்பிட்டார்:

''திரு.வி.க. தொழிலாளர் சங்கத்தை மட்டுமல்ல -தொழிலாளர்களையும், தொழிலாளர் தலைவர்களையும் உருவாக்கிய பெரியார்.''

அடுத்து உரையாற்றிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தெரிவித்தார்:

''உழைக்கும் வர்க்கத்திடம் அன்பு கொண்டவர் திரு.வி.க. கடவுளும் ஒரு தொழிலாளி என்று சொல்வார் அவர்.''

பின்னர் உரையாற்றிய முத்தமிழ்க் காவலர் திரு.கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இலக்கியம், சமூகம், அரசியல் சீர்திருத்தம், தொழில் என்னும் 5 துறையிலே அவர் சிறந்து விளங்கினார். ஒழுக்கத்தை வற்புறுத்தினார். தாமும் ஒழுக்கத்துடன் வாழ்ந்தார்.''

அடுத்து உரையாற்றிய முன்னாள் மேயர் திரு டி.செங்கல்வராயன் அவர்கள் தெரிவித்தார். எளிய வாழ்க்கை முறையின் காரணமாக, 'சாது' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். திரு.வி.க. மக்களின் நலனுக்காக மக்கள் சக்தியைத் திரட்டிய மேதை அவர்''

**மாண்புமிகு எஸ். இராகவானந்தம்**

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் குறிப்பிட்டார்:

''இந்தியாவில் முதன் முதலாகத் தொழிற்சங்கத்தைத் துவக்கியவர் திரு.வி.க.

''அவர் பல்வேறு தொழிலாளர் போராட்டங்களுக்கு ஆதரவு தந்திருக்கிறார். பி.அண்டு சி ஆலைத் தொழிலாளர் நடத்திய போராட்டம்-1928ஆம் ஆண்டு ரயில்வே தொழிலாளர் நடத்திய போராட்டம் ஆகியவற்றிற்குப் பேராதரவு தந்தார். தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டால் ஒழிய, அவர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது கிடையாது.''

**டாக்டர் ம. பொ. சி**

தலைமை ஏற்ற மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் உரையில் குறிப்பிட்டார்:

''மனிதனுக்குத் தேவையான பண்புகள் எல்லாம் மொத்தமாகக் கொண்டிருந்த தலைவர் திரு. வி.க இலக்கியத்தில் அரசியலை அரசியலில இலக்கியத்தைப் புகுத்தியவர் திரு.வி.க. எதிலும் ஒப்பு நோக்குகின்ற பண்பு அவரிடம் இருந்தது.''

**மாண்புமிகு முதல்வர்**

திரு.வி.க. நூற்றாண்டு விழாவையொட்டி இராயப்பேட்டை வெஸ்லி உயர்நிலைப் பள்ளியில் நடந்த விழாவில் திரு.வி.க.வின் சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில்,

''திரு.வி.க. எழுதி என்.வி. என். எனக்கு அளித்த, இளமை விருந்து' என்னும் நூலில் உடலை எப்படிப் பேணிப் பாதுகாப்பது இளமையைஎப்படிப்பாதுகாப்பது எப்படியெல்லாம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

''இந்த நாட்டிலே இருக்கிற மக்கள், குழந்தைகள் வலிவூட்டப்பட்ட நிலையில் உள்ளத் திறத்தோடு ஒழுக்கம் மிகுந்த நாணயத்தோடு வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் தான், எதிர் காலத்திலே எந்த நாட்டோடும் நாம் போராட முடியும்.

''போராட்டம் என்றால் துப்பாக்கி ஏந்திக்கொண்டு செல்வது அல்ல. அறிவுப் போராட்டத்தில் நாம் முன்வரிசையில் முதலாவதாக நிற்கமுடியும். அதைப் பெற்றாக வேண்டும் என்பதை நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.

''கல்வி கற்கப் போகிறவர்கள் எதிர்காலத்தில் தமிழை உயிராக மதிப்பவர்கள்தான் தமிழகத்தில் இருப்பவர்கள் என்று இருந்தாலும்கூட அது வார்த்தையிலே மட்டுமே இருக்கக்கூடாது. உள்ளத்திலே-உணர்விலே-நரம்பிலே ரத்தத்திலே அது ஊறிப்போன ஒன்றாக ஆக்கப்பட வேண்டும்.

''திரு.வி.க. பல பிரச்சினை பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார். 50-60 நூல்களை எழுதியிருக்கிறார். அவை நூலகங்களில் வைக்கும்போது மாணவர்கள் படிக்க வேண்டும். அப்படி அவர்கள் படித்தார்களானால் பெண்ணின் பெருமை மாணவியர்களுக்குத் தெரியும். ஆணின் கடமை ஆண்களுக்குத் தெரியும்.

''தமிழகத்தில் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் திரு.வி.க. போன்றவர்களின் சிலைகள் தோன்றவேண்டும். அரசு மட்டும் செய்யாமல் வசதி படைத்தவர்களும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

''தமிழைக் காத்து, வளர்த்து பெருமை சேர்த்து-மொழியால் தமிழினத்தை ஒன்றுபடுத்த முடியும் எனக் கூறும் நாள் இது. இந்த விழாவை ஏற்பாடு செய்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் இன்னொரு அறிவிப்பையும் இங்கே செய்கிறேன். சென்னை வெலிங்டன் திரையரங்கம் முதல் லஸ் முனைவரையுள்ள ஜெனரல் பேட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை நெடுஞ்சாலை என்று தற்போது அழைக்கப்படும் சாலை இனி, திரு.வி.க. நெடுஞ்சாலை என்று அழைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரிக்குத் ''திரு.வி.க. அரசினர் கலைக்கல்லூரி'' என்று பெயரிடப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

திரு.வி.க. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

விழா இறுதியில், பாரதியார் நூற்றாண்டு விழாக் குழுத் தனி அலுவலர் திரு சி.என். கிருஷ்ணபாரதி அவர்கள் நன்றி கூறினார்.

# சாத்த மங்கலம் கால்நடைக் கவனிப்பு



மதுரை மாவட்டத்தில், கால்நடைகளுக்கெனப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் சார்பில் ஒன்றும் ,கால்நடைப் பராமரிப்புத்துறை சார்பில் ஒன்றுமாக இரண்டு செயற்கைமுறைக் கருத்தரிப்பு நிலையங்கள் இருக்கின்றன.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் சார்பில் உள்ள மையம் மதுரை-சாத்தமங்கலத்தில் அமைந்துள்ளது. இங்கு விந்துசேகரிப்பு, தரம் பிரித்தல், பாதுகாத்தல் ஆகிய பணிகள் நடக்கின்றன.

1980ல் துவக்கப்பட்ட இந்த மையத்தில் உறைவிந்து தயாரித்தல் ,பாதுகாத்தல் போன்ற பணிகள் நடக்கின்றன. இங்கு முர்ரா இன மாடுகள் பத்தும் ,ஜெர்ஷி இனக் காளைகள் ஆறும் இருக்கின்றன.

அந்த மாடுகள் மூலம் 1981-82ல் மட்டும் மதுரை வட்டாரத்தில் 14,320 முர்ரா எருமைகள் பயனடைந்துள்ளன. ஜெர்ஸி மாடுகள் 8,580 பயனடைந்துள்ளன. இதனால் 1,175 எருமைக் கிடேறிக் கன்றுகளும், ஜெர்ஸியில் 1208 கிடேறிக் கன்றுகளும் 1,059 ஜெர்ஸி கடாக் கன்றுகளும் பிறந்துள்ளன.

40 கிலோ மீட்டர் சுற்றளவு வரையுள்ள கிராமக் கால்நடைகள் இந்த மையத்தால் கவனிக்கப்படுகின்றன. அவசரச் சிகிச்சைப் பிரிவு ம்இங்குள்ளது. தூரக் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு ஏதேனும் துன்பமென்றால், தொலைபேசிமூலம் இங்கு தெரிவித்தாலே நடமாடும் வண்டி ( Mobile Unit' ) அங்கு வந்து சேரும். அப்படிச்சென்று கவனிக்கும் 'கேஸ்' களுக்கான மருந்து செலவு, டாக்டர் கட்டணம் எல்லாவற்றையும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையமே ஏற்கிறது.

உறைவிந்துப் பயிற்சிக்காக கிராமநல ஊழியர்கள் பயிற்சித் திட்டம் இங்கே உண்டு. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒருவரே இப்பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார். பயிற்சி காலத்தில் ரூ.100 உதவிப்பணம் தரப்படுகிறது.

இதற்கான ஐந்து மாதக் காலப் பயிற்சியின்போது சினை ஊசி போடும் முறை, மாடுகளின் நிலை சினை மருந்தைப் பாதுகாக்கும் முறை, கருத்தரிக்கச் செய்யும் முறை ஆகியவையும், பின்னர் உறை விந்து பற்றிய ஐந்துநாள் பயிற்சியும் , அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியெல்லாம் முறைப்படி முடித்துச் செல்வோருக்கு ரூ. 3500 பெறுமானமுள்ள உறைவிந்துக் குடுவையொன்றும், உறைவிந்தும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

கால்நடைகளை உறைவிந்து மூலம் கருத்தரிக்கச் செய்யும் முறைக்கு மதுரை மாவட்டத்திலுள்ள அத்தனைக் கிராமங்களிலும் நல்ல வரவேற்பிருக்கிறது.

கால்நடைகளுக்கான முதலுதவிச் சிகிச்சைக்காக 5 நாள் பயிற்சி ரூ. 50 உதவிப் பணத்தோடு இங்கு தரப்படுகிறது. முதலுதவிக்காகச் சென்று வருவோருக்கு ரூ. 25 ரொக்கமும், இதுதவிர வழிச் செலவும் தரப்படுகிறது.

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ், கால்நடைத் தீவனத்தொழிற்சாலையொன்று 81 லட்சம் ரூபாயில் சாத்தமங்கலத்தில் அமைய அரசு அனுமதித்துள்ளது. கிராம நல ஊழியர் கட்டடம் ஒன்றும் பயிற்சி பெறுவோருக்கென விடுதி கட்டடம் ஒன்றும் அரசால் இங்கே கட்டப்படவிருக்கின்றன.





# ஊனமுற்றோர் மண்டல மறு வாழ்வு இல்லம்

—ராஜா

அனைத்து நாட்டு உடல் ஊன முற்றோர் ஆண்டாக 1981-ஆம் ஆண்டு உலகெங்கும் கொண்டாடப்பட்ட போதிலும், தமிழ் நாடு அதில் தனிச் சிறப்படைந்தது.

ஊனமுற்றோர் நலனில் பெரும் கவனம் செலுத்திய அரசு, நல்ல பல திட்டங்களை அவர்கள் தம் எதிர்கால வாழ்வு கருதித் தீட்டி வகையுறச் செயல் படுத்தியது. கடந்த ஆண்டு மட்டுமல்ல; எந்த ஆண்டும் அவர்கள் நல்ல முறையிலே கவனிக்கப்பட வேண்டுமென்ற கருத்தில் - மதுரை மாநகரில் 1981 மார்ச்சுத் திங்களில் துவக்கப் பட்டதுதான் மண்டல ஊன முற்றோர் மறுவாழ்வு மையம்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றோர் வாழ்வை வளமாக்கும் குறிக்கோளோடு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும் இது.

மதுரை திருநகர் பகுதியிலே உள்ள இந்த மையத்தில் 16 முதல் 45 வயதுக்குட்பட்ட ஊன முற்றோர் பல்வேறு வகைப்பணிகளில் பயிற்சி பெறுகிறார்கள். ஒரு மாதக் காலமே பயிற்சி. அந்த ஒரு மாதக்கால மதிப்பீடு முடிந்த பின்னர், ஒவ்வொரு ஊன முற்றவருக்கும் நூறு ரூபாய் உதவிப் பணம் அளிக்கப்படுகிறது.

மண்டல ஊனமுற்றோர் மறு வாழ்வு மையத்தில் சேர்வோரின் மனப்பாங்கு, அங்குள்ள மனோ தத்துவ உதவியாளரால் மனோ தத்துவ ரீதியில் மதிப்பீடு செய்யப் பட்டு அதற்கேற்றபடி தையல், பொறியியல் போன்ற பணிகளிலேயே அவர்களுக்குத் தக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின் அவரவர் கல்வித் தகுதிக்கேற்ப அவர்கள் வெளியே வேலைவாய்ப்புப் பெறச் செய்திடவும் இந்த அமைப்பே தக்க நடவடிக்கை மேற்கொள்ளுகிறது. ... தனியே தொழில் துவக்கும் தகுதி பெற்ற ஊனமுற்றவர்க்கு வங்கிகள் மூலம் கடன் பெற்றுத் தரவும், அரசு மூலம் அவர்களுக்கு உரிய மான்யத்தைத் தங்குதடையின்றிப் பெறவும் உதவி செய்யப் படுகிறது.

இது மட்டுமல்ல; பயிற்சியாளர்க்குச் செயற்கை உறுப்புகள், ஒலி உணர் செவிக் கருவிகள், மூன்று சக்கர வண்டிகள் ஆகியவை அரசுத்திட்டங்கள்மூலமோ அல்லது தனியார் சேவை நிறுவனங்கள் மூலமோ கிடைத்திட ஆவன செய்கிறது இந்த அமைப்பு.

இம் மையத்திலே ஒரு மாதப் பயிற்சிக்கு 20 பேர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இது வரை அப்படி இங்கு அனுமதிக்கப் பட்ட ஊனமுற்றோர் எண்ணிக்கை 194 ஆகும்.

இப்போது இத்தகைய அமைப்பு சென்னை தஞ்சை கோவை வேலூர் ஆகிய இடங்களிலேயும் அமைந்துள்ளது. ஆனால் அரசு சமூகநலத் துறையினாலே, மண்டல உடல ஊனமுற்றோர் மையம் முதன் முதலாக மதுரை மாநகரிலேதான் துவக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



# மதுரையில் தமிழ் இசைச் சங்கம்

மதுரையில் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் சீரிய முயற்சியால் ரூ. 75 லட்சம் செலவில் தமிழ் இசைச் சங்கக் கட்டடம் மிகப் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்டுள்ளது.

மதுரையில் அமையும் இந்தத் தமிழ் இசைச் சங்கக் கட்டடம் இருக்கும் இடம், 10 ஆண்டுகளுக்கு முன்பு பெரிய பள்ளமாக இருந்தது. இன்று அதே இடத்தில் ரூ. 75 லட்சம் செலவில், கிழக்கு ஆசியாவிலேயே மிக அழகிய பெரிய இசை அரங்கமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கான 2½ ஏக்கர் நிலத்தினைத் தமிழக அரசு இலவசமாகக் கொடுத்துள்ளது. இக்கட்டடத்தில் ஒரே நேரத்தில் 1500 பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். இந்த அரங்கம் முழுமையும் குளிர் சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. கட்டடம் கட்டி முடித்ததும், இசை நூலகமும், தமிழ் இசைக் கல்லூரியும் நிறுவவும் ஆட்சிக் குழுவினர் முடிவெடுத்துள்ளனர்.

# தாயகம் திரும்பியோர்க்கு...

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்ட சாஸ்திரி - சிரிமோவோ ஒப்பந்தப்படி தாயகம் திரும்பும் 5,25,000 இலங்கை வாழ் இந்தியர்களை 15 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் குடியமர்த்த வேண்டியுள்ளது. இவ்வாறு குடியமர்த்த இருக்கும் இலங்கை வாழ் இந்தியர்களில் பெரும்பாலோர் தேயிலை மற்றும் இதரத் தோட்டங்களில் வேலை செய்பவர்களாக இருப்பதால் இங்கு அவர்களை அதைப் போன்ற வேலைக்கு அமர்த்துவது மிகப் பொருத்தமானது என்று மத்திய அரசு கருதுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு நீலகிரி மாவட்டத்தில் தேயிலை வளர்ப்புப் பணியினை மேற்கொள்ள மத்திய அரசால் திட்டம் வகுக்கப்பட்டு முதன் முதலில் 1968ம் ஆண்டு சோதனை முறையில் துவக்கப்பட்டது. இதன்படி 1969ம் ஆண்டு ஓர் அடிப்படைத் திட்டம் தேயிலைவளர்ப்புக்காகத் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 1500 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிடவும் இதனால் 3750 தோட்டத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தவும் நீலகிரியில் இரண்டு கோட்டங்கள் உயர்மலைப்பகுதி நிலத்திலும் மூன்று கோட்டங்கள் இடை மலைப்பகுதியான கூடலூர் வையநாடு பகுதியிலும் ஆரம்பிக்கப் பட்டது. இத்திட்டம் முழுமையாக நிறைவேறும் போது இது இந்தியாவிலேயே மிகப் பெரிய தனி உயர் ரகத் தேயிலைத் தோட்டமாகும்.

நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்று திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு முன்னர் இயங்கிக் கொண்டிருந்த அரசுதேயிலைத் தோட்டத் திட்டமானது ஓர் அரசு நிறுவனக் கழகமாக 1956ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்திற்குட்பட்டு 22.8.75ல் இணைக்கப்பட்டது. 1.4.76 முதல் இத் தேயிலைத் தோட்டக் கழகம் இயங்கவிருக்கிறது. வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தினர், கனரா வங்கி, யுனைடெட் கமர்ஷியல் வங்கி, இந்தியன் வங்கி மூலமாக இத்திட்டத்திற்கு முதல் கட்டமாக ரூ. 302 லட்சத்து 79 ஆயிரமும் இரண்டாவது கட்டமாக ரூ. 235 லட்சத்து 76 ஆயிரமும் நிதி உதவி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர்.

முதல் கட்டமாக 1968ம் ஆண்டு முதல் 1979ம் ஆண்டு வரை தேயிலை பயிரிடப்படுவதற்காக 1517 ஹெக்டர் நிலப் பரப்பு எடுத்துக் கொள்ளப்பட்டது..

இரண்டாம் கட்டத்தின் கீழ் 600 ஹெக்டேர் நிலம் தேயிலை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதலாண்டு 1979ம்ஆண்டு 300 ஹெக்டர் நிலம் இரண்டு தோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு (தேவாலா மற்றும் கூடலூர் தேயிலை பயிரிடப் பட்டது. இந்த இரண்டாம் கட்ட நிலை 1982ஆம் ஆண்டு முழுமை பெறும். அதன் பிறகு 100 ஹெக்டேர் நிலம் மூன்றாவது கட்டமாகத் தேயிலை பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## திட்டம் நிறைவேற்றப்படுதல்

இக்கழகம் முதல் கட்டத்தின் கீழ் 1517 ஹெக்டர் நிலப் பரப்பையும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 600 ஹெக்டேர் நிலப்பரப்பையும் நீண்டகாலக் குத்தகையில் ஒரு ஹெக்டருக்கு வருடத்திற்கு ரூ. 500 வீதம் குத்தகை வரி வழங்கி தமிழ்நாடு அரசு வனத் துறையிலிருந்து நிலத்தைப் பெற்று இயங்கி வருகிறது. இவ்வாறு இதுவரை 1897.16 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

## பயிர் செய்யும் முறை

தற்போதுள்ள காடுகளை துப்புரவாக்கி பயன்படுத்தப்பட்டு 15 முதல் 18 மாதம் வயதுள்ள உயர்ரகத் தேயிலை நாற்றுக்களை ஒரு ஹெக்டருக்கு 11,000 வீதம் நடப்படுகின்றன. இந்நாற்றுக்கள் தரத்தில் சிறந்ததாய் செடிகளிலிருந்து எடுக்கப்பட்ட கழிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. செடி நட்ட நான்கு ஆண்டுகளிலேயே முறையாக 10 நாட்களுக்கு ஒருமுறை தேயிலைக் கொழுந்து பறிக்கப் பட்டு வருகிறது. இந்த முதல் நான்கு ஆண்டுகளுக்கிடையே செடிகளுக்கு நிலத்திருத்தம், களை பிடுங்குதல், பூச்சி மருந்து அடித்தல், தொற்று நோய்த்தடுப்பு மருந்தடித்தல் போன்ற பண்ணை வளர்ப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உயர்மட்ட மலைப்பகுதியில் உள்ள தேயிலை செடிகளுக்கு நான்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் கீழ்ச் சமவெளி மலைப்பகுதியில்



உள்ள ேதயிலைச் செடிகளுக்கு ஆறுமுதல் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தழை வெட்டி செடிகளைப் புதுப்பிக்கும் வேலை செய்யப்படுகிறது.

**இலங்கை அகதிகளை வேலைக்கு அமர்த்துதல்.**

இக்கழகத்தில் 2060 இலங்கை குடிபெயர்ந்தோர் குடும்பங்களுக்கு இதுவரை மறு வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. அதுவும் இல்லாமல் சேரம்பாடி கோட்டத்தில் ஆரம்பம் முதல் தற்காலிகமாக பணியாற்றிய 24 இலங்கை குடிபெயர்ந்தோர் அல்லாத குடும்பங்கள் நிரந்தரப் பணியாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

**தொழிலாளர்கள் மனை கட்டுதல்**

இக்கழகத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 2194 தொழிலாளர் குடியிருப்புகளில் இதுவரை 1882 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளை கட்டி முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

**அலுவலர்களின் குடியிருப்புகள் கட்டுதல்**

இக்கழகத்தில் நிர்வாக இயக்குநர் முதல் பலதரப்பட்ட ஊழியர்களுக்கும் இலவச குடியிருப்பு மனைகள் கட்டப் பட்டுள்ளன. அனைத்துப் பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் அளிப்பதற்கான திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்படும்.

**தொழிலாளர்களின் கடமை**

ஒரு நாளுக்கு 8 மணி நேரம் வீதம் வாரத்தில் 6 நாட்கள் தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே செய்து கொண்ட உடன்படிக்கையின்படி அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் ஊதியத்துடன் கூடிய ஒன்பது விடுமுறை நாட்கள் தவிர மற்ற எல்லா நாட்களிலும் அவர்கள் பணிபுரிகின்றனர். இந்நிறுவனத்தில் உள்ள எல்லா வேலைகளும் நிரந்தரத் தொழிலாளர்களால் செய்யப்பட்டுவருகின்றன. தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் இதர சமூக நலத்திட்டங்களும் இக்கழகத்தால் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

**சேரங்கோடு தேயிலைத் தொழிற்சாலை**

தயாரிக்கப்பட்ட பெரும் செயல்திட்டத்தில் கூடலூர்வைய நாடு பகுதியைச் சார்ந்த (சேரங்கோடு சேரம்பாடி நெல்லியாளம்) மூன்று இடை மலைப் பிரதேசத்திலுள்ள தோட்டங்களிலிருந்து பறிக்கப்படும் தேயிலைக்கென ஓர் தொழிற்சாலையும் குன்னூர் கோத்தகிரி ஆகிய தோட்டங்களுக்கென மற்றொரு தொழிற்சாலையும் கட்ட திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. முதல் கட்டமாக இடை மலைப் பிரதேசத்திலுள்ள மூன்று தோட்டங்களில் கிடைக்கும் தேயிலைக் கொழுந்திலிருந்து ஆண்டொன்றுக்கு 1.5 மில்லியன் கிலோ (15 இலட்சம்) தேயிலை தயாரிக்கும் திறனுள்ள சி.டி.சி. தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூ. 87 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. **மிகப் பெரியதும் நவீன இயந்திரங்களைக் கொண்டதுமான இத்தொழிற்சாலைதான் தமிழ்நாடு அரசு நிறுவனத்தால் கட்டப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளில் மிகப் பெரியதொன்றாகும்.**

**குன்னூரில் இரண்டாவது தொழிற்சாலை**

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பி.ஓ.பி. தேயிலை விலையை கணக்கிட்டுப் பார்த்தில் பலவகையான தாய்க் கழியில் வரும் தேயிலையானது சாதாரணமாக பி.ஓ.பி. தேயிலையைக் காட்டிலும் ஒரு ரூபாயாவது அதிகம் விலை நிச்சயமாசக் கிடைக்கும். தாய்க் கழியில் உற்பத்தியாகும் தேயிலைச் செடியிலிருந்து கிடைக்கும் கொழுந்துகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் பொருட்டு குன்னூரில் ஆண்டு ஒன்றுக்கு 0.75 மில்லியன் கிலோ உற்பத்தித் திறனுள்ள ஆர்த் தோட்டக்ஸ் தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூ. 50 இலட்சம் செலவில் கட்டப் பட்டு செயல்பட்டு வருகின்றது.

**தேயிலை பயிரிடுதல் அதிகரித்தல்**

மேலும் 1000 ஹெக்டர் ஜென்மம் நிலத்தில் தேயிலை பயிர் செய்யத் திட்டமிடப்பட்டு இதற்கான வேலை துவங்கப்பட்டுள்ளது. இதன்படி மேலும் 1250 இலங்கை வாழ் இந்திய குடும்பங்களுக்கு வேலை வழங்க வாய்ப்பு ஏற்படும்.

**நீலகிரி மாவட்ட சிறு விவசாயிகளுக்கு நாற்றுகள் வழங்குதல்**

**நீலகிரி மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு தேயிலை நாற்று ஒன்றுக்கு 75 காசு வீதம் குறைந்த விலையில் நில அபிவிருத்தி வங்கி மூலமாக வழங்கி சிறு விவசாயிகள் ஊக்குவிக்கப் படுகிறார்கள்.**



**தருமபுரி மாவட்ட கூட்டுறவு**
**சர்க்கரை ஆலை லிமிடெட்,**
**பாலக்கோடு**

தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கைக்கடிகாரம் வழங்கும் விழா 10.8.82 அன்று சர்க்கரை ஆலை அமைப்பகத்தில் நடந்தது. விழாவில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் கலந்து கொண்டு 814 தொழிலாளர்களுக்குக் கைக்கடிகாரங்களை வழங்கினார். ஒரு கைக்கடிகாரத்தின் மதிப்பு 403.96 ஆகும்.

**தென்னையில் எத்தனை வகைகள் உள்ளன?**

தென்னையில் நெட்டை ரகம், குட்டை ரகம், நெட்டை குட்டை ஒட்டு ரகம் முதலிய மூன்று ரகங்கள் உண்டு. இவைகளேயன்றி பயிரிடப்படும் மரத்தின் உயரத்தையும் காயின் பருமனையும் பொருத்து பல உள் நாட்டு, வெளிநாட்டு ரகங்கள் உள்ளது.

**மேற்குக் கடற்கரை நெட்டை ரகம் தமிழ்நாட்டில் பயிரிடச் சிறந்ததா?**

சாதாரணமாக நமது நாட்டு ரகத்தில் உயரமாக வளர்ந்து நீண்டகாலம் பலன் கொடுக்கக்கூடிய ரகத்தையே நெட்டை ரகம் எனக் கூறுகிறோம். மேற்குக் கடற்கரைப் பகுதியில் பயிரிடப்படும் நெட்டை ரகத்தை 'மேற்கு கடற்கரை நெட்டை ரகம்' என்றும், கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பயிரிடப்படுவதை



# தென்னைகள் பலவிதம்

டாக்டர் மு. ஸ்டீபன் துரைராஜ்,
திருச்சிராப்பள்ளி.

'கிழக்குக் கடற்கரை நெட்டை ரகம்' என்றும், சொல்லுகிறோம். பொதுவாகப் பார்க்கும்போது. இந்த இரண்டு நெட்டை ரகங்களுக்கும் இடையே அதிக வேறுபாடு இல்லை. எனினும் ஒரு பகுதியில் பல காலங்களாகப் பயிரிடப்படும் எந்த ரகமும் அந்தப் பகுதியின் சீதோஷ்ண நிலைக்கும், மண்ணின் தன்மைக்கும் ஏற்ப வளர்ந்து, நல்ல பலனைக் கொடுக்கும் தன்மையைப் பெறுகிறது. ஆகவே மேற்குக் கடற்கரைக்கு அருகிலுள்ள கோயம்புத்தூர் முதலிய பாகங்களில் மேற்கு கடற்கரை நெட்டை ரகம் நல்ல பலனைக் கொடுக்கும். அதுபோல செங்கல்பட்டு, வடஆர்க்காடு,

**அதிக அளவு தென்னை பயிரிட ஏற்ற ரகம் எது? அந்த ரகத்தின் சிறப்புகள் யாவை?**

அதிக அளவு தென்னை பயிரிட ஏற்ற ரகம் நெட்டை ரகம். இது நட்டு 6 ஆண்டுகளில் பலனுக்கு வரும். 80 முதல் 120 ஆண்டுகள் வரை இது பலன் தரும். சராசரியாக வருடந்தோறும் மரம் ஒன்றுக்கு 75 முதல் 80 காய்கள் காய்க்கும் காய்கள் நடுத்தரப் பருமனாகவும், அதிக அளவு பருப்புடனும் இருக்கும். இவ்வகைத் தென்னையே நமது தமிழ் நாட்டிலுள்ள தட்ப வெப்ப நிலைக்கும், மண்ணின் தன்மைக்கும் மிகவும் ஏற்றது.





தென்ஆர்க்காடு, திருச்சி, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களின் கிழக்குப் பகுதி ஆகிய இடங்களில் கிழக்கு கடற்கரை நெட்டை ரகம் நல்ல மகசூலைத் தரும்.

**ஒரு தென்னை மரம் எத்தனை ஆண்டுகளுக்குப் பலன் தரும்? ஒரு ஆண்டுக்குஎத்தனை காய் காய்க்கும்?**

நெட்டை ரக தென்னை மரம் நட்டபின் ஆறாவது ஆண்டு காய்க்கத் தொடங்கி சுமார் 100 ஆண்டுகள் வரை பலன் கொடுத்தாலும், முதல் 40 ஆண்டுகள் நல்ல மகசூலைக் கொடுக்கும். மாதந்தோறும் ஒரு பாளைத் தோன்றி குலை ஒன்றுக்கு 8 முதல் 10 காய்கள் வரை கொடுத்து, நல்ல மரம் ஒன்றுக்கு 90 முதல் 120 காய்கள் வரை கொடுக்கும்.

**குறைந்த வருடத்தில் காய் கொடுக்கும் தென்னை வகை எது? எத்தனை வருடத்தில் பலனுக்கு வரும்? வருடத்திற்கு எத்தனை காய் காய்க்கும்?**

குட்டை ரகத் தென்னையே குறைந்த வருடத்தில் பலன் கொடுக்கக்கூடியது. நட்ட 3½ ஆண்டு கழித்து காய்க்க ஆரம்பித்து, சுமார் 40 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும். மரம் ஒன்றுக்கு வருடம் தோறும் சராசரியாக 50-55 காய்கள்தான் கிடைக்கும். காய்கள் சிறியதாகவும், பருப்பு மெல்லியதாகவும் இருக்கும். எண்ணெய் ஆட்டுவதற்கோ, சமைப்பதற்கோ இதன் பருப்பு ஏற்றதல்ல. இளநீருக்கு மட்டுமே இது சிறந்தது. நட்டபின் முதல் 10, 15 ஆண்டுகள் மட்டுமே இது நல்ல பலனைக் கொடுக்கும்.

**வீட்டு வாசலில் நடவு செய்ய எந்த ரக தென்னை சிறந்தது? வீட்டின் சுவற்றிலிருந்து எத்தனை அடி தள்ளி நடவேண்டும்?**

குட்டை ரக தென்னையில் பச்சை, மஞ்சள், ஆரஞ்சு முதலிய பல அழகிய வண்ண ரகங்களையுங் காய்கள் இருப்பதால் இந்த ரகத்தை வீட்டின் முன் நடுவது வீட்டுக்கு அழகைக் கொடுக்கும். மரம் சுமார் 2 அடி உயரமிருக்கும்போதே குலைகள் இருப்பதால் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாய் இருக்கும். இளநீருக்கும் இது ஏற்றது. அவற்றிலிருந்து குறைந்தது 3 அடியாவது தள்ளி நடுவது நல்லது.

**இளநீருக்கு ஏற்ற தென்னை வகை எது?**

குட்ரை ரகத் தென்னையே இளநீருக்கு ஏற்றது.

**நெட்டை ரகம், குட்டை ரகம் இவைகளில் ஒரு தேங்காயில் கிடைக்கும் கொப்பரையின் அளவு, எண்ணெய்ச் சத்து எவ்வளவு?**

ஒரு தேங்காயில் கிடைக்கும் கொப்பரையின் அளவு நெட்டை ரகத்தில் 165 கிராம், குட்டை ரகத்தில் 100 கிராம், ஒட்டு ரகத்தில் 180 கிராம். எண்ணெய் சத்தில் அளவு நெட்டை ரகத்தில் 72 சதம், குட்டை ரகத்தில் 68 சதம், ஒட்டு ரகத்தில் 71 சதம்.

## மண் வகையும் பருவ நிலையும்

**தென்னை எந்த விதமான மண்ணில் நன்றாகச் செழித்து வளரும்?**

பலதரப்பட்ட மண் வகைகளிலும் தென்னை வளரக்கூடியது. மணற்பாங்கான கடற்கரைப் பகுதிகளிலும் செம்மண் மற்றும் கரிசல்மண்



நிலங்களிலும், வண்டல்மண் பிரதேசங்களிலும் சில கற்களும் கரடுமுரடுமாகந் தூளாகும் பாறைகளைக் கொண்ட இடங்களிலும் தென்னை வளரும். எனினும் நல்ல வடிகால் வசதி உடைய மணல் கலந்த செழிப்பான வண்டல் மண் நிலமே தென்னை சாகுபடிக்கு மிகவும் சிறந்தது. நீர்ப்பிடிப்பு இல்லாத மண்ணும், வடிகால் வசதி இல்லாத நிலமும், தென்னை பயிரிட ஏற்றவை அல்ல.

**தென்னங்கன்றுகள் கலர் நிறத்தில் வளருமா?**

பி. சி. பி. ஹெச். அளவுக்கும் மேற்பட்ட கலர்த்தன்மை உடைய நிலங்களில் தென்னை நல்ல பலனைத் தருவதில்லை.

**தென்னை மணலில் நன்றாக வளருமா?**

தென்னை மணற்பாங்கான நிலத்தில் நன்றாக வளரும்.

**ஒரு அடிக்கு கீழ் சுக்கான் வைத்த மண்ணாக இருந்தால் தென்னை நன்கு வளருமா?**

நன்றாக வளராது.

**தென்னங்கன்று நட ஏற்ற பருவம் எது?**

தென் மேற்கு அல்லது வடகிழக்குப்பருவ மழை ஆரம்பமாவதற்கு முன் தென்னம்பிள்ளை நடுவது நல்லது. தண்ணீர் வசதி உள்ள இடங்களில் பருவ மழைக்கு ஒரிரு மாதங்களுக்கு முன்பே நடலாம். பள்ளத்தாக்கான பகுதிகளிலும் தண்ணீர் தேங்கக்கூடிய இடங்களிலும் பருவ மழை முடியும் நிலையில் நடவேண்டும்.





# தாய் தெய்வம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை விழுப்புரத்திலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உடையாநத்தம் என்ற கிராமத் தில் மலை அடிவாரத்தில் 3 மீட்டர் உயரம் (10 அடி) உயரத்தில் கல் பலகையால் செதுக் கப்பட்ட ஒரு விசித்திரமான உருவத்தைக் கண்டுபிடித்துள்ளது. இந்த உருவத்தைச் சுற்றிலும் வட்டமாக கல் பலகைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. இந்தச் சின்னத்தின் அரு கில் சுமார் 30க்கு மேற்பட்ட பண்டைய கால ஈமச் சின்னங்கள் (கல் திட்டைகள்) காணப்படுகின்றன. தலை, இரண்டு கை, கால் இவை எல்லாம் முழுமையாகச்சாணட் படாமல் ஒரு உருட்டிச்சட்டி பொம்மைபோல் இது காணப்படுகிறது. இது போன்ற விசித்திர மான கல், தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட் டது இது இரண்டாவது முறையாகும். இதற்கு முன்னர் திருவண்ணாமலைக்கு மேற் கில் 25 கல் தொலைவில் 'செங்கம்' பகுதி யில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 'மோட்டூர் என்ற ஊரில் இதே போன்ற ஒரு கல் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இப்போது உடையா நத்தத்தில் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கும் இந்தக் கல் சின்னம் உருவம் நன்கு முழுமை பாகக் காணப்படுவதால் இது 2,500 ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த மக்கள் வணங்கிய தாய் தெய்வத்தின் உருவம் ஆக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இது போன்ற உரு வங்கள் மத்திய தரைக்கடலில், கிரேக்க நாட் டுக்குத் தெற்கில் 'கிரீட்டே' என்ற நாட்டில் 3,500 ஆண்டுகளுக்கு முன் இருந்த ஈமச் சின் னங்களில் இருந்து கிடைத்துள்ளது. அங்கும் இதே உருவம் ஈமச் சின்னங்களோடு தாய் தெய்வமாக வழிபடப்பட்டது குறிப்பிடத் தக்கது. இந்த உருவத்தைப் போன்று கோதா வரி நதிக்குத் தெற்கில் ஆந்திரப் பிரதேசத்தில் சென்ற நூற்றாண்டு இரண்டு கல் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை இது காறும் எதைக் குறிக்கின்றன என்று தெளிவா கத் தெரியவில்லை. இப்போது கிடைத்துள்ள உருவத்தின் அமைதியினால் இது தாய் தெய் வத்தின் சிலை என்று தெளிவாகத் தெரிகிறது.

மத்தியப்பிரதேசத்தில் 3,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல் உருவம்ஒன்று இதைப்போலவே கிடைத்துள்ளது. அதை வேதகால அத்தி என்ற பெண் தெய்வம் என்று குறித்துள்ளார் கள். அந்த உருவத்தை இப்போது இங்கி லாந்தில் லண்டனில் நடைபெறும் கண்காட்சி யில் சிறப்புக் குறியீடாகக்கொண்டு இருக்கி றார்கள். பலுசிஸ்தானத்தில் ஈமச் சின்னங் களிலும் தாய் தெய்வத்தின் உருவங்கள் இது போல் காணப்படுகின்றன. இவை பெரும்பா லும் ஈமச் சின்னங்களோடு தொடர்புடைய தாக இருப்பதால் ஈமச் சின்னங்களை எடுத்த வர்கள் வழிபட்டு நம்பிக்கைகளை அறிவதற்கு இது மிகவும் பயன்படுவதாக இருக்கிறது.

இவற்றை எடுத்தவர்கள் திராவிட மொழி பேசுகிறவர்களாக இருக்க வேண்டும் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார் கள். மத்திய தரைக்கடல் பகுதியில் காணப் படும் இது போன்ற உருவங்களும் பெரும் கல் சின்னங்களில காணப்படும் இந்தத் தாய் தெய்வ உருவங்களும் என்ன தொடர்பு உடை யது என்பது போன்ற கேள்விகளுக்குப்புதிய ஒரு திருப்பத்தை இந்தக் கல்சிலை அளிக்கிறது என்று ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். வர லாற்றுக்கு குறிப்பாக தென் இந்திய வரலாற் றுக்கு இது இன்றியமையாத புதிய கண்டு பிடிப்பு ஆகும். இந்தக் கல் சிலையைக் கண்டு பிடித்துள்ள தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இந்தப் பகுதியில் மேலும் சில வரலாற்றுச் சின்னங்களையும் கண்டுபிடித் திருக்கிறது. இதற்கு அருகில் 'புறாக்கள்' என்ற இடத்திலும், 'குளிர்சுனை'' என்ற இடத்திலும் மேலும் பழங்கால ஓவியங்களை இத்துறை கண்டுபிடித்திருக்கிறது. சுனை களுக்கு அருகில் பழங்கால மனிதன் கல் கருவி களைத் தீட்டிய இடங்களையும் இந்தத் துறை இப்போது கண்டுபிடித்திருக்கிறது. மேலும் இந்தப் பகுதியில் பழைய கருவாச்சி என்ற இடத்திலும் கருமான் மலை என்ற இடத்தி லும் 13ம் நூற்றாண்டுத் தமிழ்ச் செய்யுளில் உள்ள கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்திருக் கிறது. கஞ்சனூர் மலை என்ற மலையிலும் கருமான் மலையிலும் 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் சமணப் பெரியார்கள் வாழ்ந்த கல் படுக்கைகளையும் இந்தத் துறை இப்போது கண்டுபிடித்து இருக்கிறது. இந்த இடத்தில் மேலும் ஆராய்ச்சியைத்தொடர்ந்து இத்துறை மேற்கொண்டுள்ளது.



# உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

**1974** ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22ஆம் நாள் ரூ. 50 இலட்சம் மூலதனத்துடன் தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனம் பிப்ரவரி 22ஆம் நாள் இயங்கத் தொடங்கியது. 1981ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ 50 இலட்சத்திலிருந்து ரூ100 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு உற்பத்தி செய்வதும், உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் தயாரித்தலும் உப்பு சார்ந்த உபபொருள்கள் தயாரித்தலுமாகும்.

மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 145 இலட்சம் மூலதனத்துடன் மாரியூர்-வாலிநோக்கத்தில் ஒரு பெரிய உப்புத் தொழிற்சாலையை இந்நிறுவனம் அமைத்தது. இதன் மொத்தப் பரப்பளவு 5,617 ஏக்கராக்கள். வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதுமான இந்த இடத்தில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் எண்ணத்துடன் மாரியூர் வாலி நோக்கம் உப்புக் கூட்டுத்திட்டம் தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் இந்நிறுவனம் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக் கோட்டைத் தாலுக்கா, மரவக்காடு, வடகாடு கிராமங்களில் 4,092ஏக்கராப் பரப்பளவில் உப்பு உற்பத்திக்காக எடுத்துக் கொண்டுள்ளது.

**மாரியூர் வாலி நோக்கம் உப்புக் கூட்டுத்திட்டம்**

இத்திட்டம் வடமேற்கு இராமநாதபுரத்திலிருந்து 45 கி.மீ. தூரத்தில் உள்ளது. 1975-76 ஆம் ஆண்டு முதல் முன்னேற்றப் பணிகள் தொடங்கப்பட்டன. மேம்படுத்த வேண்டிய 4,400 ஏக்கராக்களில் இதுவரை 2,366 ஏக்கராக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 1976ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் உப்பு உற்பத்தி, விற்பனை, முதலிய விவரங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வருடம் | உற்பத்தி (டன்களில்) | விற்பனை |
|---|---|---|
| 1976 | 550 | 550 |
| 1977 | 3,400 | 799 |
| 1978 | 6,500 | 2,747 |
| 1979 | 22,660 | 2,237 |
| 1980 | 29,047 | 10,645 |
| 1981 | 2,5600 | 8,194 |

தரமான உப்பை உற்பத்தி செய்ய எடுத்த முயற்சியாலும் உற்பத்திக் காலங்களில் ஏற்பட்ட மழையினாலும் மின் சக்தி பற்றாக்குறையினாலும் 1981ஆம் வருடத்திற்கான உற்பத்தியின் அளவுகுறைவதற்கான மற்றைய காரணங்களாகும்.

1981ஆம் ஆண்டு 25.6.81ல் உயர் அழுத்த மின்சாரம் பெறப்பட்டது. நசுக்கிய பொடி செய்த உப்பு தயார் செய்வதற்காக வசதிகள் உண்டாக்கப்பட்டன. ரூ 1 இலட்சம் செலவில் தொழிலாளர்களுக்குக் குடிநீர் வசதியும் செய்து தரப்பட்டது.

1982ஆம் ஆண்டு இத்திட்டம் 50,000 டன் தரமான படிக உப்பு உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. நசுக்கிய பொடி செய்த உப்பும் தயார் செய்யப்படும். அலுவலருக்கான குடியிருப்புக்கள்; வேலைக்கூடக் கட்டடம், தொழிலாளர் கழிப்பிடக் கூடமும் இவ்வாண்டு அமைக்கப்படும்.

மொத்தம் 4,400 ஏக்கராக்களும் மேம்படுத்தப்படும் பொழுது இத்திட்டம் 2.4 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யும். உப்பு விற்பனையில் உள்ள சிரமங்களால் மேற்கொண்டு நிலத்தை மேம்படுத்தப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தூர இடங்களுக்கு உப்பை அனுப்புவதற்கு அதிக சிரமங்களை ஏற்க வேண்டியுள்ளது. அத்தியாவசியமான துறைமுக, ரயில் வசதிகளும் அருகாமையில் இல்லை. ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் இருந்தபோதிலும் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. இதனால் இந்நிறுவனம் வாலி நோக்கத்தில் ஒரு சிறிய துறைமுகம் அமைக்க அரசைக் கேட்டுள்ளது. இங்கு ஒரு சிறு துறைமுகம் அமைந்ததால் வறட்சியால் பாதிக்கப்படும் இப் பின்தங்கிய பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து இந்நிறுவனம் இலாபகரமாகச் செயல்படும்.

இந்நிறுவனம் 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதுடன் 1,000 நபர்களுக்குப் பருவ கால வேலை வாய்ப்பு அளிக்கிறது. இந்நிறுவனம் முடிவடையும் தறுவாயில் 200 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு 1,500 நபர்களுக்குப் பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கும்.

**மரவக்காடு வடகாடு உப்புத் திட்டம்**

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் மரவக்காடு வடகாடு கிராமங்களில் 5,400 ஏக்கராப் பரப்பளவில் உப்புத் திட்டம் உருவாக்கப்படுவதற்கு நவம்பர் மாதம் 1978ஆம் வருடம் தமிழக அரசு உத்தரவிட்டது. இதன் திட்ட மதிப்பீடு ரூ. 120 இலட்சம் ஆகும். 4092. 4,092.33 ஏக்கராப் பரப்பளவில் மேம்பாட்டுப் பணியை 1979ஆம் ஆண்டு துவக்கியது. 1980, 1981 ஆம் ஆண்டுகளில் ஆரம்பப் பணிகள் போன்ற சுற்றுக்கரைகள் குறுக்குக் கரைகள் அமைக்கப்பட்டன. 1982ஆம் ஆண்டு மீதி சுற்றுக் கரைகளும் சாலைக்கரைகள் போடும் வேலைகளும், கால்வாய், உப்பள வேலைகளும் நடைபெற்றன. இதுவரை 262 உப்பளங்கள் வெட்டப்பட்டு உப்பு நீர்க் கால்வாய்களும் அமைக்கப்பட்டன. 11.5.82 முதல் உற்பத்தி மாதிரி தொடங்கப்பட்டது. இத்திட்டம் இவ்வாண்டு 5,000 டன் உப்பு உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேம்பாட்டுப் பணிகளுடன் உற்பத்தியும் நடைபெற்று 1985 ஆம் ஆண்டில் வளர்ச்சிப் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. முழுவளர்ச்சி அடைந்தபின் இத்திட்டம் 1,200 டன் உப்பு உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் 100 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதுடன் 1,000 நபர்களுக்கு பருவ கால வேலைவாய்ப்பும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது 15 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் 600 நபர்களுக்குக் கரைகட்டும் பணியில் வேலை வாய்ப்பும் இத்திட்டம் அளிக்கிறது.



**இரசாயனப் பொருட்கள்**

மாரியூர் வாலி நோக்கத்தில் கிடைக்கும் களிக் கல்லிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் களிக்கல்தூள் ( Plaster of Paris ) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 12 இலட்சம். இத்திட்டம் சுமார் 30 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கும்.

1982-83ல் புதிய திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசு ரூ. 15 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான ஆரம்பப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



# கொட்டிலில் கட்டி வெள்ளாட்டினை வளர்ப்போம்

மனிதனால் முதன் முதல் வளர்க்கப்பட்ட கால்நடை வெள்ளாடே ஆகும். நமது நாட்டில் அநேகமாக எல்லா விவசாயிகளும் குறுநில விவசாயிகளே. ஆதலால் இவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கைக்குத் தீவிர நிலச் சாகுபடித் திட்டத்தைதான் மேற்கொண்டு நல்லபயனை அடைய வேண்டும். இவர்கள் வெள்ளாடு வளர்ப்பவர்களே ஆயின், கால் ஹெக்டேர் நிலத்தில், புரதச்சத்து மிகுந்த குதிரை மசாலா, பர்சீம் மற்றும் செழுமையான புற்களைக் கலந்து வளர்த்தால் குறைந்த அளவு இரண்டு வெள்ளாடுகளைக் கொட்டிலில் வளர்த்து தம் குடும்பத்திற்குப் பால் செலவினம் போக அதிகப்படிப் பாலை விற்கவும் செய்யலாம். இது இவர்களுக்கு அடர் தீவனம் அல்லது கலப்புத் தீவனம் வாங்க செலவுக்குச் சரி கட்டிவிடும். ஒருநல்ல வெள்ளாடு சராசரிபத்து ஆண்டுக் காலம் வரை பால் கொடுக்கக் கூடியது. பிறகு அதை அதனுடைய முழு இறைச்சியின் மதிப்பிற்கே விற்று விடலாம்.

இதற்கான வீடு அல்லது கொட்டில் மிக எளிதாக எளிமையான முறையில் செலவு அதிகமில்லாமல் அமைக்கலாம். நம் நாட்டில் மிகுந்த தட்ப வெட்ப நிலையினால் அவைகளை அதிக வெப்பம், மழை இவைகளில் இருந்து தடுத்துக் கொள்ள அவசியமான கொட்டிலே போதுமானதாகும். தீவன தொட்டி மிக சாதாரணமாக கள்ளிப் பெட்டியினாலோ அல்லது மூங்கில் சிம்பு தொட்டிகளாகவோ கட்டிவிடலாம்.

உயர்ந்த ரக வெள்ளாடுகளை நல்ல போஷாக்கினால் அதன் இளம் வயதிலேயே அதாவது சுமார் 10 அல்லது 12 மாதத்தில் அதன் எடை 35 கிலோ கிராமிற்கு குறைவு இல்லாமல் அடையச் செய்யலாம். இவ்வாறு நன்கு வளர்க்கப்பட்ட நிலையில் அவை குறுகிய காலத்தில் பருவத்திற்கு வந்துவிடும். அதை உடனே பயன்படுத்திக் கொண்டு விடலாம்.

வெள்ளாடுகளுக்கு குட்டிகள் ஈனும் பருவம் 150 நாட்களதான் ஆகையினால் 10 அல்லது 12 மாத வயதுடைய வெள்ளாடுகள் நல்ல போஷாக்குடன் பருவத்திற்கு வரும்போது அவைகள் 1 வருடம் 3 மாதம் அல்லது ஓராண்டு 6 மாதக் காலத்தில் குட்டிகளுக்கு இவைகள் தொடர்ந்து 10 மாதங்கள் பால்தரும். இத்தருணத்தில் 7 மாதங்கள் முடிந்ததும் பருவத்திற்கு வரும் நேரம் கவனித்து கடாவுக்கு சேர்த்து விட வேண்டும். இதனால் இந்த பத்து மாதகால பால் தரும் பருவத்திற்கு பிறகு இரண்டு மாதகாலம் பால் வறட்சி நிலையை நாம் ஏற்படுத்துவதினால் வயிற்றில் வளரும் குட்டிகள் நன்கு திடகாத்திரமாக வளர்வதுடன் குட்டிகள் பிறந்தவுடன் தொடர்ந்து 10 மாத காலம் பால்தரும் நிலைக்கு வெள்ளாடுகள் அடைகின்றன. இம்முறையினால் நம் தேவைக்கு பால் கிடைப்பதுடன், குட்டிகளும் நன்கு போஷாக்குடன் பராமரிக்கப்படுகின்றன.

வெள்ளாடுகளை வருடத்திற்கு இரண்டு போகமாகப் பயனடையலாம். ஒவ்வொரு தடவையும் குறைந்த அளவு இரண்டு குட்டிகள் போடுவது இயல்பு.

மேலும், ஒரு வெள்ளாடு, ஒரு பசுமாடு சாப்பிடும் தீவன அளவில் ஐந்தில் ஒரு பங்கையும், ஒரு எருமை சாப்பிடும் தீவன அளவில் எட்டில் ஒரு பங்கு அளவும் தான் தன் வளர்ச்சிக்குப் புசிக்கின்றன.

வெள்ளாட்டின் பால் மற்ற பிராணிகளின் பாலுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது, அதனுடைய கொழுப்பு, புரதம் இவ்விரண்டு சத்துப்பொருள்களும் தாய்ப்பாலுக்குச் சமமாக உள்ளன.

சாதாரணமாக ஒரு எருமைக் கடா அல்லது பொலி காளை தரமான நிருபிக்கப்பட்ட பொலி காளையாக விளங்க குறைந்த அளவு எட்டு ஆண்டுகள் ஆகிவிடும். பிறகு அதன் பயன்தரும் ஆண்டுகள் மிகக்குறைவு. ஆனால் ஒரு வெள்ளாட்டு கிடா தரமாக பொலிகடாவாக நிருபிக்க மூன்று ஆண்டுகளே போதுமானது. பிறகு அதனைப் பல ஆண்டுகள் பயன்படுத்தி பலன் அடையலாம்.

நம்நாட்டில் பால்வளப் பெருக்கத்திற்கு நல்ல உயர்ரக இன வெள்ளாடுகள் உள்ளன. அவைகளாவன: ஜம்னாபாரி, பாஸ்மினா, மார்வாரி, ஆண்மனாபாடி மற்றும் டெல்லிச்சேரி (மலபாரி). இவைகள் இறைச்சிக்கும், உயர் ரக தோலுக்கும் மிகவும் பயன்படுகின்றன.

'டெல்லிச்சேரி' இன வெள்ளாட்டை 'மலபாரி' என்றும் கூறுவர். இது வடகேரளத்தில் மலபார் பிரதேசத்தில் அதிகம் காணப்படுகிறது. இவைகள் பார்வைக்குக் கவர்ச்சிகரமானவை. அடக்கமான தலை, சில சமயங்களில் ரோமானிய மூக்கு மற்றும் நீண்ட அகலமான காதுகள் உடையவை. நிறம் நிரந்தரம் அல்ல. கருப்பு கலந்த வெள்ளை நிறமும் உண்டு. முடி நன்றாக வளர்ச்சி உடையவை. முன்னுக்குப் பின்னும் பரந்த அகன்று உள்ளவை. இவைகளிலேயே கொம்பு இல்லாத இனமும் உண்டு. அது மிகவும் முக்கியமானது. இவைகள் கறவைக்கு உகந்தது. இறைச்சிக்கும் மேன்மையானவை. திருச்சியிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் குமரப்பெருமாள் வேளாண் அறிவியல் நிலையத்தில் டெல்லிச்சேரி இன வெள்ளாடு பராமரிக்கப்பட்டு வருகிறது.

வழக்கமான பருவகாலங்களில் வெள்ளாடு 18 முதல் 21 நாட்களுக்கு ஒருமுறை சினைக்கு நிற்கும். செப்டம்பர் முதல் நவம்பர் வரை உள்ள பருவ காலங்களில் சினைக்கு நிற்கும் காலம் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வரை நீடித்து இருக்கும். இந்தப் பருவகாலம் மாற மாற சினைக்கு நிற்கும் காலமும் குறையும். பொதுவாக சினைக்கு கண்டு 15 ணி நேரம் கழித்து கடாவுக்குச் சர்க்கப்படும்போது சினை டிக்க வாய்ப்புகள் அதிகம் என்று ருதப்படுகின்றன. சாதாரணமாகக் குட்டிகள் ஈனும் காலம் 45 நாட்கள் முதல் 155 நாட்கள் ரை நீடிக்கும். சராசரி நாட்கள் 50.

ஆடுகள் ஈனும் தறுவாயில் ள்ளபோது அவைகளைத் தனியாக வைப்பது மிகவும் நல்லது. வைகளுக்கு உலர்ந்த சுத்தமான டவசதி தேவைப்படுகின்றன. னும்போது வெள்ளாடுகள் சிரமமில்லாமல் குட்டிகள் ஒன்றன்பின் ன்றாகப் போட்டுவிடும். ஆகையினால் ஈனும் அறிகுறிகள் கண்டபின் இரண்டு மணி அவகாசத்திற்குள் குட்டிபோட்டு விடும். அதற்கு மேல் காலதாமதம் ஆனால் உடனே அருகிலுள்ள கால்நடை மருத்துவரின் உதவி அத்தியாவசியமாகிறது. வெள்ளாடு மிகவும் தளர்ந்து விடுவதற்கு முன் மருத்துவ உதவியை நாடவேண்டும்.

## ஈனும் தறுவாயிலுள்ள வெள்ளாட்டில் காணப்படும் அறிகுறிகள்

மடி நன்றாக வளர்ச்சியடைந்து பெருத்து பிரகாசமாகக் காணப்படும். பால் கறப்பதற்கு உண்டான அறிகுறிகள் காணப்படும். ஆடு அடிக்கடி படுத்து நிற்கும். கால்களைக்கொண்டு தரையைப பிராண்டும். பிறகு சிறிது மஞ்சள் நிற கொழுப்பான திரவம் ஈத்துவாயில் வெளிப்படும். இது குட்டி பிறப்பதற்கு ஆரம்பம்.

இரண்டு அல்லது மூன்று குட்டிகள் ஒரு பிரசவத்திற்குச் சாதாரணம். முதல் குட்டிக்குப் பிறகு மற்ற ஒன்றோ அல்லது இரண்டோ 20 அல்லது 25 நிமி டங்களுக்கு பிறகு போட்டுவிடும். தொப்புள் கொடியைச் சுத்தமான நூல் கொண்டு கட்டி டின்சர் அயோடின் தடவ வேண்டும். இதனால் புண் ஏற்படுவதையும் நோய் வருவதையும் தடுக்கலாம்.

பிறந்தவுடன் தாயிடமிருந்து குட்டிகளைப் பிரிப்பது மிகவும் நலம். இதனால் வெள்ளாடு கறவைக்குச் சிரமமில்லாமல் வருவதுடன் நல்ல சுகாதார முறையும் கையாளப்படுகிறது. மேலும் தாயிடமிருந்து பாலைத் தனியே கறந்து பாட்டிலில் இட்டு குட்டிகளின் எடைகளுக்குத் தகுந்தவாறு ஊட்டுவதால் குட்டிகள் பால் குடித்ததா இல்லையா என்ற ஐயம் நீங்கும். மேலும் குட்டிகளின் எடைக்குத் தக்கவாறு பால் ஊட்டலாம். தாய் ஆட்டின் மடியில் ஏற்படக்கூடிய சில நோய்களைத் தவிர்க்கலாம். குட்டிகள் பிறந்த பிறகு சுமார் 8-ல் இருந்து 10 மணி அவகாசத்திற்குள் நச்சுக்கொடி விழுந்து விட வேண்டும். தவறினால் மருத்துவரின் உதவி உடனே அவசியமாகிறது.

வெள்ளாடு குட்டிகள் போட்டு பிறகு முதல் இரண்டு நாட்களுக்கு தீவனம் அவைகளுக்குச் சற்று குறைத்து பிறகு அதன் பால் வளத்திற்குத் தக்கப்படி உயர்த்த வேண்டும். தினம் இரண்டு தடவை கறப்பது நலம். பிறகும் மடி கனம் இருப்பதானால் 8 மணிக்கு ஒரு தடவை கறப்பது நலம்.

குட்டிகளுக்குப் பிறந்த முதல் நான்கு நாட்களுக்கு அதன் தாய்ப்பால் மிகவும் அவசியம். பிறகு பாலைச் சிறுகச் சிறுக குறைத்து அடர்த் தீவனத்தைப் பழக்க வேண்டும். குட்டிகளுக்கு இரண்டு மாதம்தான் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். பிறகு நிறுத்த வேண்டும்.

குட்டிகள் பிறந்த இரண்டு வாரத்திலேயே சற்றுதழைகளைக் கடிக்கப் பழக்கலாம். இதனால் அவைகள் தழைகள் சாப்பிட விரைவில் பழகிவிடும். மேலும் அதற்கு அடர்த் தீவனமும் சிறுக சிறுக பழக்கலாம்.

கறவை வெள்ளாடுகளுக்கு அதிகச் செலவில் கொட்டில் தேவையல்ல. அதற்கு ஒரு ஆட்டிற்கு 2.2 ச.மீ. இடவசதி என்ற அளவில் கொட்டில்கள் போடலாம். அதற்குத் தீவனப்பெட்டி, தழைகளோ, புற்களையோ கட்டு கட்டா.கட்டி அதன் உயரத்திற்கு கட்டி விட்டால் அவைகள் நின்ற இடத்திலேயே தழைகளை உட்கொள்ள மிக எளிதாகிறது. இதனால் வெளியில் மேய்ச்சலுக்கு அனுப்பப்படுவதில்லை. அப்போதைக்கப்போது தழைகள் கொண்டு வரப்பட்டு, கட்டப்படுவதனால், தழைகளும் வீணாவதில்லை.

விவசாய நண்பர்கள் சவுண்டல் அகத்தி, குதிரைமசால், ஆல் பூவரசு, முள் முருங்கை போன்ற மர இலை போன்ற தீவனப் பயிர்களைப் பயிரிட்டு அவற்றின் தழைகளைப் பரித்து தீவனமாகப் உபயோகித்து பெரிதும் பயன் பெறலாம்.

கொட்டில் அமைப்பதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள். உலர்ந்த சுத்தமான கொட்டில் அறை. அதில் கோடை காலங்களில் நல்ல காற்றோட்டம். ஆடுகளைக் கொட்டிலில் சற்று தாராளமாக நடமாடவசதியுடன் ஏற்படுத்துவது மிக அவசியம். ஒரு நல்ல கொட்டில் தற்காப்புடன் சௌகரியத்துடன், சுத்தமாக, ஆடுகளை எளிதில் கண்காணிக்க வசதியுடன் இருக்க வேண்டும். இதை நம் நாட்டு தட்பவெட்ப நிலைக்கு, அதிகச் செலவில்லாமல், எளிதில் எளிமையாக மிக வசதியுடன் செய்து விடலாம்.



குட்டிகள் நன்கு வளர இரண்டு அல்லது மூன்று மாதத்திலிருந்தே அடர்த்தீவனம் கொடுக்கலாம். தினம்ஒரு குட்டிக்கு 500 கிராம் முதல் 700 கிராம் வரை என்ற அளவில் கொடுக்கலாம். மற்றும் கறவை வெள்ளாட்டிற்கு அடர் தீவனம் தினம் ஒரு ஆட்டிற்கு 750 கிராம் முதல் 1 கிலோ கிராம் வரைபால் வளத்திற்குத் தகுந்தபடி கொடுக்கலாம். மற்றும் குதிரை மசாலா, பர்ஸீக் மற்றும் புரத சத்துக்கள் மிகுந்த தழைகளை 2 முதல் 2.5 கிலோ கிராம் வரை தினம் ஒரு ஆட்டிற்குக் கொடுக்கப்படவேண்டும்.

ஒரு வெள்ளாட்டுப் பண்ணையில் நோய்க்கு வைத்தியம் செய்தால் அது லாபகரமான பண்ணையே அல்ல. சுற்றுப்புறச் சுகாதாரம் தகுந்த காலத்தில் முன்கூட்டியே தடுப்பு முறைகளை அனுசரித்தல் திட்டமிட்ட பராமரிப்பு இவைகளை நல்ல முறையில்கையாண்ட நோயற்ற பண்ணைதான் நமக்கு வேண்டிய அளவு பால், இறைச்சி தந்து இலாபகரமாகச் செயல்படும். இதனை மனத்தில் இருத்தி, முன்கூட்டியே தடுப்பு முறைகளை அனுசரித்து, சுகாதாரமான ஆரோக்கியமுள்ள பண்ணைக்கு பாடுபடுவோமேயானால், நாமும் நல்ல பயனை அடையலாம்.

சீரிய முறையில் இந்த 'டெல்லிசேரி' இன வெள்ளாடு திருச்சியிலுள்ள குமரப் பெருமாள் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.



# விவசாயக் கருவிகள்

பருத்திக்கேற்ற

## தெளிப்புக் குழல்கள்

இந்த தெளிப்புக் குழல்கள் பருத்திச் செடியின் எல்லா நிலைகளிலும், செடியின் இலைப்பரப்பை ஒரே சமயத்தில் முழுவதுமாக தெளிக்கப் பயன்படுகிறது. இதில் மூன்று நாசில் தெளிப்புக்குழல், ஐந்து நாசில் தெளிப்புக்குழல் என இரண்டு வகைக்குழல்கள் உள்ளன.

இதில் மூன்று நாசில் தெளிப்புக் குழலை தோளில் தூக்கும் கைத்தெளிப்பான்களிலும், ஐந்து நாசில் தெளிப்புக்குழலை ராக்கர் கைத் தெளிப்பானிலும் இணைக்கவேண்டும். ஒரு மணி நேரத்தில் அரை ஏக்கர் தெளிக்கலாம்.

மூன்று நாசில் கொண்ட தெளிப்புக் குழலின் விலை ரூ. 90—00.

ஐந்து நாசில் கொண்ட தெளிப்புக் குழலின் விலை ரூ. 120—00.

*ஆய்வாளர்: தங்கவேலு*

## சோளத்திற்கு மருந்து தூவும் கருவி

தற்சமயம் உபயோகத்திலுள்ள மருந்து தூவும் கருவிகளால் 1.5 மீட்டர் உயரம் தான் தூவ முடிகின்றது. சோளம் போன்ற உயர்ந்த பயிர்களுக்கு மருந்து தூவுவதற்கு ஏற்ற ஒரு தூவானை தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக் கழகம் அறிமுகப்படுத்துகிறது.

*ஆய்வாளர்: ஏ. சண்முகம்*

## டிராக்டர் மூலம் இயங்கும் அகலப்பாத்தியில் விதைக்கும் கருவி

டிராக்டர் மூலம் இயங்கும் இக்கருவி அகலப்பாத்தி அமைக்கவும் பாத்திகளில் விதைக்கவும் பயன்படுகிறது. இது $5\frac{1}{4}$ அடி அகலமுள்ள பாத்திகளை அமைக்கிறது. பாத்திகளின் இருமருங்கிலும் ஒரு அடி அகலமுள்ள வாய்க்கால்களும் சேர்ந்து அமைக்கப்படுகின்றன. இக்கருவியை 35 குதிரைத் திறன் கொண்ட எந்த டிராக்டருடனும் இணைக்கலாம். இதன் மேல்பகுதியில் 7 விதைப்பெட்டிகளும் விதைகளைச்சரியான அளவில் எடுத்து விதைக்கும் சாதனமும் அமைந்துள்ளன. ஒரு நாளில் இக்கருவியைப்பயன்படுத்தி சுமார் 8 முதல் 10 ஏக்கரில் விதைப்பு வேலையைச் செய்து முடிக்கலாம். இதன் மூலம் விதைப்புச் செலவும், விதைக்க ஆகும் நேரமும் கணிசமாகக் குறைக்கலாம்.

நிலக்கடலை, சோளம், கொண்டைக் கடலை, உளுந்து, துவரை போன்ற பயிர் விதைகளை விதைக்கலாம். சதுர மீட்டருக்கு 44 செடிகள் வளரும். விலை ரூ. 2,000/-

*ஆய்வாளர்: ஆர். கருணாநிதி*

## வேர்க் கடலை பறிக்கும் இயந்திரம்

ஒரு குதிரைச் சக்தியுள்ள ஒருமுக மின்சார மோட்டாரால் இயங்கக் கூடியது. இது ஒரு நிமிடத்திற்கு 250 சுற்றுக்கள் சுற்றுகிறது.

இந்த இயந்திரம் மணிக்கு 150 கிலோ காய்கள் பறிக்கும். ஒரு கிலோ காய் பறிப்பதற்கு 4 காசு செலவு ஆகும். இதன் விலை ரூ. 2500/

*ஆய்வாளர்: தங்கவேலு.*

*குறிப்பு: விவசாயக் கருவிகள் பற்றிய தகவல்கள் வேண்டுவோர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.*



# இதன் பெயர் 'பலராம்'

குஜராத் மாநிலம் பவநகரில் உள்ள மத்திய அரசு நிறுவனமான "ஆல்காக் ஆஷ்டவுன் அண்ட் கம்பெனி" பைபர் கிளாஸ் மோட்டார் விசைப்படகு ஒன்றை சென்னைத் துறைமுக டிரஸ்டுக்காகத் தயாரித்து, பொது நிர்

வாகி டபிள்யு. ஓ. ராகவன் அவர்கள் 5-8-82 காலை 9 மணி அளவில் வழங்கினார். சென்னைத் துறைமுகத் தலைவர் திரு. செல்வராஜ் இதனைப் பெற்றுக் கொண்டார்.

இந்தப் படகு ஒருவகை பிளாஸ்டிக் கலவையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பைபர் கிளாஸ் படகு சென்னைத் துறைமுகத்தில் தான் பயன்படுத்தப்படுகின்றது.

சென்னை துறைமுகத்தின் வளர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்தவர் கேப்டன் பலராம். இரயில் விபத்தில் மரணம் அடைந்த அவருடைய நினைவாகப் புதிய படகுக்கு 'பலராம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இந்த 'பைபர் கிளாஸ்' பைலட் கப்பல் 22 இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. மணிக்கு 17.25 கடல் மைல்கள் வேகத்தில் செல்லக் கூடியது இது.

# மங்கையர் கொண்டாடும் மயில் வழிபாடு!



திரு கலைவாணன் காப்பாளர் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை ஆர்க்காடு

இன்றைய நாகரிகத்தின் தாக்குதலினால் நம்முடைய பண்டைய பண்பாடுகளும் சிறப்புகளும் அதிகமாக அழிந்து விடாமல், இன்றைய தினம் தமிழகத்தில் எஞ்சி உள்ள பகுதிகளில் தருமபுரி மாவட்டமும் ஒன்றாகும். அம்மாவட்ட மகளிக்களால் கொண்டாடப் பட்டு சிறுகச் சிறுக செல்வாக்கிழந்து வரும் ஓர் அரிய பண்டிகையே மயில் பண்டிகையாகும்.

இப்பண்டிகை உழவர் திருநாளை உவகையுடன் தைமாதம் கொண்டாடி முடித்த உடன் நடக்கும் ஓர் பண்டிகை ஆகும். தை மாதம் ஆறாம் தேதி இரவே இப்பண்டிகை ஆரம்பித்து விடும். அன்று இரவே பெண்கள் அனைவரும் விரதம் இருக்கத் தொடங்கி விடுவர். தை ஏழாம் தேதி காலை மகளிர் தங்கள் வீடுகளைச் சுத்தப்படுத்தி குளித்து முடித்து மயில் பண்டிகையினைத் துவக்கி விடுவர். இத்துவக்கத்தில் ஊரில் உள்ள அனைத்துப் பெண்களும் ஓர் இடத்தில் கூடி மயிலை வணங்கத் துவங்குவர். அவர்கள் எப்படி எப்படி விரதம் மேற்கொள்ள வேண்டும் என்பதை ஓர் அழகான பாடலாகப்பாடி வணங்குவர். அந்நாட்டுப்புறப்பாடல் வருமாறு:

'மொச்சு மொச்சு என மோர் குடிக்கக்கூடாது
பச்சுப் பச்சு என பைத்தங்காய் தின்னக்கூடாது
ஆலை ஏறி கரும்பு தின்னக் கூடாது.
செக்கு ஏறி புண்ணாக்கு தின்னக் கூடாது
பாக்கு நசுக்கக் கூடாது
பள்ளாங்குழி ஆடக் கூடாது
சுக்கு நசுக்கக் கூடாது
சோம பாணம் கூட்டக் கூடாது
கீழ்த்தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
மேல் தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
அன்று கட்டி அன்று அவிழ்த்து
ஆயிரம் நோன்புக்கும் தலையான நோன்பு
கும்பிடுங்கோ தோழிகளே! கும்பிடுங்கள்!'

இப்படி அவர்களுக்கு கடுமையான விரதங்கள் விதிக்கப்படுகின்றன. பின் ஒவ்வோர் வீட்டிலும் மணக்கும் சமையல் துவங்கும், ஒவ்வொரு வீட்டிலும் இருபத்தோ வகையான காய்கள் சமையல் செய்யப்படும். அன்று ஒரு நாள் மட்டும் பெண்கள் யார் தோட்டத்தில் காய்கள் இருந்தாலும் யாரையும் கேட்காமல் பறித்துக் கொள்ளலாம் என்பது இன்றளவும் வழக்கில் உள்ள ஓர் நிகழ்ச்சி ஆகும்.

சமையல் வேலை முடிந்த உடன் அனைத்துப் பெண்களும் ஓர் இடத்தில் கூடி ஓர் வெள்ளைச் சுவரில் மயில்களை வண்ணத்தில் வரைவர். சில ஊர்களில் வரைந்து வைக்கப்பட்டுள்ள வண்ணத் திரைச் சீலைகளைத் தொங்க விடவும் செய்கின்றனர். இந்நிகழ்ச்சி முடிந்த உடன் கட்டு உடைப்பு அல்லது பண்டிகையின் இறுதி நிகழ்ச்சிகள் துவங்கும். ஒவ்வொரு வீட்டிலும் சமைக்கப்பட்ட விதவிதமான காய்கறிகளுடன் சித்திரம் எழுதப்பட்ட இடத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் எனத் தனியோரப் படையல்கள் போடப்படும். படையல் போடுதல் முடிந்தஉடன் கட்டு உடைப்புப் பாடல் பாடப்படும். அப்பாடல் வருமாறு :

"ஆளோடு மயில் எழுதி
அம்மானை தான் எழுதி
தேரோடு மயில் எழுதிப்
பெரும் பானை தான் எழுதி
மொச்சி, மொச்சி என மோர் குடிக்கலாம்.
பச்சி, பச்சி என பைத்தங்காய் தின்னலாம்
ஆலை ஏறி கரும்பு தின்னலாம்.
செக்கு ஏறி புண்ணாக்குத் தின்னலாம்
பாக்கு நசுக்கலாம்,
பள்ளாங்குழி ஆடலாம்
சுக்கு நசுக்கலாம்
சோமபாணம் கூட்டலாம்
கீழ் தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
மேல் தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
ஆயிரம் நோன்பிலும் தலையான நோன்பு
கும்பிடுங்கோ தோழிகளே கும்பிடுங்கள்."

எனப் பாடிப் பாடி கட்டு உடைக்கப்படும். அதன் பின் ஒவ்வொரு வீட்டின் படையலில் இருந்தும் சிறிது சோறு எடுத்து ஒரு படையல் உருண்டை ஆக்கி மயிலுக்குப் படையல் ஒரு வீட்டின் கூரையில் வைக்கப்படுகிறது. இப்படையலை உண்பதற்காக மயில் ஏழுநாட்கள் உண்ணா நோன்பு இருக்குமாம். மயிலுக்குப் படையல் வைத்த பின் மகளிர் ஏழைகளுக்கு அன்னமிட்டபின் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் உண்டு மகிழ்வர். இப்பண்டிகையை முழுக்க முழுக்கப் பெண்களே செய்வர்.

ஒரு பெண் கட்டு போடப்படும் இடைக்காலத்தில் ஏதாவது மேற் சொன்ன பொருளில் ஒன்றைச் சாப்பிட்டாலும் மயில் பண்டிகையில் கலந்து கொள்வதில் இருந்து நீக்கப்படுவாள். ஒரு பெண்ணோ அல்லது அவள் குடும்பத்தைச் சேர்ந்த யாரோ மயிலுக்குத் துன்பம் விளைவித்ததாகவோ அல்லது மயில் மாமிசம் உண்டதாகவோ தெரிய வந்தால் அவளும் அக்குடும்பமும் அக்குடும்பத்தின் வழி வருபவர்களும் மயில் பண்டிகையில் இருந்து விலக்கப்படுவார்கள்.

ஒருவேளை மயில் பண்டிகை செய்யாத குடும்பத்தில் இருந்து மயில் பண்டிகை செய்யும் குடும்பத்திற்கு ஒரு பெண் மனைவியாக வருவாளானால் அவள் நாக்கிலும் கைகளிலும் கற்பூர தீபம் ஏற்றப்பட்டு அவளைப் புனிதப்படுத்தி மயில் பண்டிகையில் சேர்த்துக் கொள்வர். அதேபோல் மயில் பண்டிகை செய்யும் ஓர் குடும்பத்தில் பிறந்த பெண் மயில் பண்டிகை இல்லாத குடும்பத்தில் மண முடிக்கப்படுவாளானால் அவள் மயில் பண்டிகை செய்யும் தகுதியையே இழந்து விடுவாள். இவ்வாறு மயில் பண்டிகையைச் செய்வதற்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்துப் பெண்டிர் இன்றும், கொல்லாமை, நோன்பு, முதலியவற்றை எவ்வாறு கடுமையாகக் கடைப்பிடித்து வருகின்றனர் என்பதற்கு இது ஓர் சான்றாகும். அதே நேரத்தில் சிறுகச் சிறுக இப்பண்டிகை முக்கியத்துவத்தை நாளுக்கு நாள் இழந்து வருகின்றது என்பது வருந்தத் தக்க ஒன்றாகும்.



# பெற்றோரை மதித்திடு!

—பெ. சங்கரன்

பெற்றோரை மதியாமல்
பண்பற்று வாழ்ந்தாலே
பேரெல்லாம் கெட்டுவிடுமே—தம்பி
பழிஉன்னைச் சுட்டுவிடுமே!

நல்லோரை நாடாமல்
நன்றிதனை மறந்தாலே
நல்வழியும் மறையலாகுமே—தம்பி
நலிவுற்று வாழலாகுமே!

கல்விதனைக் கல்லாமல்
கண்மூடி வாழ்ந்தாலே
கல்லாக வாழநேருமே—தம்பி
காலமெல்லாம் கலங்கநேருமே!

மதியாதார் வாசல்தனை
மிதிக்க நீசென்றாலே
மரியாதை மாறிவிடுமே—தம்பி
மதிப்பெல்லாம் மங்கிவிடுமே!

வார்த்தைகள் வாயினில்
வரம்பின்றி வந்தாலே
வாழ்த்துக்கள் விலகலாகுமே—தம்பி
வருத்தத்தால் வாடலாகுமே!




மாணவர் பக்கம் :

• 1794ல் தான் முதன் முதலாக திருக்குறள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

• 1796-ல் பார்கர் என்பவர் 'சிமெண்ட் டைக்' கண்டுபிடித்தார்.

• ஆங்கிலத்தில் அதிக அளவு உபயோகிக்கப்படும் எழுத்து 'E' என்பதாகும். குறைவாக உபயோகப்படுத்தும் எழுத்து 'Z'

• பெண்களைவிட ஆண்களுக்கே காசநோய் அதிக அளவில் வருகிறது. அதுவும் நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கே அதிகம் ஏற்படுகிறது. காசநோயைக் கண்டு பிடித்தவர் ராபர்ட் கோச் (Robert Coach) என்பவராவார். 1882-ம் ஆண்டு பிறந்த இவருக்கு இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

• ஆசிய விளையாட்டுப் போட்டிகள் முதன்முறையாக 1951-ல், மார்ச் மாதத்தில், டில்லியில் நடந்தது. இதில் சுமார் 11 ஆசிய நாடுகள் கலந்து கொண்டனவாம். ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளைப் போலவே, ஆசிய விளையாட்டுக்களும் நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடக்கின்றன.

1951-ல் இருந்து 1982 வரை ஆசிய விளையாட்டுக்கள் நடந்த இடங்கள் வருமாறு :

1951—டெல்லி (இந்தியா)

1954—மணிலா (பிலிப்பைன்ஸ்)

1958—டோக்கியோ (ஜப்பான்)

1962—ஜாகர்த்தா (இந்தோனேசியா)

1966—பாங்காக் (தாய்லாந்து)

1970—பாங்காக்

1974—டெஹ்ரான் (ஈரான்)

1978—(மீண்டும்) பாங்காக்

1982—தற்போது மீண்டும் டெல்லியில்

• பட்டுக் கூடுகளில் இருவகை உள்ளன. மஞ்சள் நிறக்கூடு உள்நாட்டு இனம் என்றும் ( Local Cocoon ), வெள்ளை நிறக்கூடு வெளிநாட்டு இனம் ( Foreign Cocoon ) என்றும் அழைக்கப்படுகிறது. உள்நாட்டு இனத்திலுள்ள பெண் பட்டுப் பூச்சியுடன் வெளிநாட்டு இன ஆண் பட்டுப் பூச்சியை இனச் சேர்க்கைக்கு விடப்படுகிறது. இனச் சேர்க்கைக்கு விடப்பட்ட பெண் பூச்சி நான்கு மணி நேரத்தில் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு முட்டையிட வைக்கப்படுகிறது. பட்டுப்பூச்சி ஒரே சமயத்தில் 300 முதல் 400 வரை முட்டைகள் இடும். ஒரு முட்டை என்பது ஒரு கடுகளவே இருக்கும். 300-400 முட்டைகள் சேர்ந்தே ஒரு முட்டை என்ற கணக்கில் விற்கப்படுகிறது. பட்டுப் பூச்சியின் முட்டை ஒன்றின் விலை நாற்பது காசுகள்!

• சவுதி அரேபியாவின் மொத்த நிலப் பரப்பு 87,300 சதுர மைல்களாகும். இந்நாட்டின் மொத்த மக்கள்தொகை ஒரே ஒரு கோடிதான்!

தகவல் : கோவை வசந்தகுமார்

# கோழி முட்டைக்கு ஊசி

கோழிக் குஞ்சுகளுக்கு ஒரு வகை கட்டிநோய் வருவதுண்டு. அதனை 'மாரெக்ஸ்' என்பார்கள். இந்நோய் வராமல் பாதுகாக்க ஒரு புதுமுறையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

முட்டை கருநிலையில் இருக்கையிலேயே முட்டையோட்டில் ஒரு சிறு துளையிட்டு, அதன் வழியாக ஊசி (வாக்ஸின்) மருந்து செலுத்தி விடுகின்றனர்.

அமெரிக்க அரசில் வேலை பார்க்கும் கால்நடை மருத்துவ அதிகாரி ஜகதேவ் எம். சர்மா இப்புதிய முறையை விளக்கிக் கூறினார்:

"நாங்கள் கையாண்ட புதிய முறையினால் கிட்டிய பலன்கள் எங்களை வியப்பில் ஆழ்த்தின" என்கிறார் அவர். முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்பட்டதுமே இந்த நோயை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அதற்கு ஏற்பட்டு விடுகிறது. இப்பொழுது கோழி வளர்ப்புத் தொழிலிலே இருந்து வரும் முறையை விட இப்புதிய முறை செம்மையாக இருக்கிறது. பழைய முறையில் குஞ்சு வெளி வந்தவுடன் அதன் கழுத்தில் மருந்தினை ஊசி மூலம் செலுத்தினர். இந்த முறையில் தோல்வி ஏற்பட்டதுண்டு. நோய் எதிர்ப்பு ஆற்றலைக் குஞ்சுகள் பெறவில்லை என்பது பின்பு தெரிய வந்தது.

புதிய முறைப்படி முட்டையில் கரு முதிர்ச்சியடைந்திருக்கும் நிலையில் 18ஆம் நாள் முட்டையோட்டில் துளையிட்டு ஊசி போடுகின்றனர். பாரஃபின்மெழுகினால் துளையை அடைத்து விடுகின்றனர். அடைக்காவிடினும் கேடு ஏதுமில்லை.

புதிய முறை வேறு நோய்கள் தடுப்புக்கும் பயன்படுமா என்றும் ஆராய்ந்து வருகின்றனர்.




FIG. 1
Pre-hatch inoculation



FIG 2
Post-hatch inocula:.

# பால்

தோல் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களுக்கும் பால் ஒரு நிவாரணியாகும். ஆயுர்வேத முறைப்படி பாலை அருந்தினால், தீராத நோய்களையும் தீர்க்கும் வல்லமை பொருந்தியது. பால் ஒரு சிறந்த ஔஷதமாகும் என்று உத்தரப் பிரதேச ஆயுர்வேதக் கல்லூரியில் இயற்கை மருத்துவப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் சீனுவாச சாஸ்திரி கருத்து தெரிவித்துள்ளார்.

தீராத நோய்களினால் பீடிக்கப்பட்டிருந்த அநேக நோயாளிகளை ஆயுர்வேத முறைப்படி பாலைப் பருகச்செய்து குணப்படுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நோய்களைக் குணப்படுத்தும் சத்துக்கள் பாலில் ஒவ்வொரு விதமாக அடங்கியுள்ளன. மாடுகளின் இனம், நிறம் இவைகளைக் கொண்டு பாலில் அடங்கியுள்ள மருத்துவச் சத்துக்களைக் கண்டுபிடிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கருப்பு நிறமுள்ள பசு மாட்டின் பால் இரைப்பை மற்றும் வாயு சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்தக் கூடியது. மஞ்சள் நிறமுள்ள பசு மாட்டின் பால் உடலில் பித்த நீரை ஒரு கட்டுப்பாட்டில் கொண்டு வரும் சகதி கொண்டதாகும் என்றும், வெள்ளை மற்றும் புள்ளிகள் கொண்ட பசு மாட்டின் பால் இரத்தத்தில் உள்ள ஜீவ அணுக்களை அதிகரிக்கும் சக்தி கொண்டது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆட்டுப்பால் ஓர் அரிய மருந்து

இரத்த நாளம் வெடித்து வாயிலும் மற்றும் மலத் துவாரம் வழியாகவும் இரத்தம் கசிவதைத் தடுத்து நிறுத்த ஆட்டுப்பால் ஓர் அரிய மருந்தாகும் என்றும், ஆயுர்வேத முறையில் ஆட்டுப்பாலை பலருக்குக் கொடுத்து, பல தீராத நோய்களைப் போக்கியிருப்பதாகவும், தவிர பாலைப் பருகியவுடன் தொடர்ந்து பல மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளையும் சாப்பிட வேண்டும் என்றும் அந்தப் பேராசிரியர் கூறினார்.

## எழுதுங்கள் !

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். இந்தப் பகுதிக்கு நீங்கள் குட்டிகதை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். அவை சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். பள்ளியில் சிறந்து விளங்கும் மாணவன் / மாணவி பற்றிய குறிப்பும், [illegible] பட்டதாரி-ஆசிரியரின் [illegible] நுடன் அனுப்பி வைக்கலாம். [illegible] மாணவர்க்குப் பயனுள்ளவை இப்பகுதியில் வெளியிடப்படும். எழுதும்போது தங்கள் பள்ளி முகவரியைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

# தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி

சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்
திரு. க. பாலசுப்ரமணியம், எம்.எல்.ஏ. அவர்களுடன் பேட்டி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஓகேனக்கல்லில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் 74 படுக்கைகள் உள்ளன. மேலும் 42 படுக்கைகள் கொண்ட இளைஞர் விடுதி ஒன்று ரூ.5.42 இலட்சம் செலவில் கட்டப்பட்டு திறக்கப்படவிருக்கிறது. காவேரி ஆற்றைக் கடந்து அருவிகளைக் கண்டு களிக்க பாலம் ஒன்று அமைக்கும் திட்டம் செயல்படத் தொடங்கி இருக்கிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.7.50 இலட்சம் ஆகும். இன்னும் 6 மாதங்களில் இந்தத் திட்டத்தை முடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

'மோட்டல்கள்' எங்கெங்கு உள்ளன? வேறு எங்கெங்கு அமைக்கப்பட இருக்கின்றன?

"மோட்டல்கள்" (Motels) என அழைக்கப்படும் பெருவழி ஓய்வு விடுதிகள் ஏற்கெனவே இராணிப்பேட்டையிலும், உளுந்தூர்ப்பேட்டையிலும் அமைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரியில் மற்றும் ஒரு பெருவழி ஓய்வு விடுதி ரூ 11 இலட்சம் செலவில் அமைக்கப்பெற்று திறக்கப்பட இருக்கிறது. இவை தவிர செங்கல்பட்டு மாவட்டத்தில் திருத்தணியிலும்

பேட்டி :
ஜி. ஆனந்தன்

தமிழ்நாடு ஓட்டல்கள்






மதுரை மாவட்டத்தில் தேனியிலும் இத்தகைய பெருவழி ஒய்வு விடுதிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

**சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளும் பயணத் திட்டங்கள் என்னென்ன என்பதை விளக்கமாகக் கூற முடியுமா?**

இக்கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள், சுற்றுலாப் பயணிகளின் கருத்துகளை அறிந்து அதற்கேற்ப விரிவாக்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மட்டுமின்றி அண்டை மாநிலங்களில் உள்ள சுற்றுலா சிறப்புப் பெற்ற இடங்களையும் கண்டு களிக்கும் வண்ணம் இந்தச் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் வருமாறு: 1. தமிழ்நாடு சுற்றுலா 2. தென்னிந்திய சுற்றுலா 3. காஞ்சிபுரம்-திருக்கழுக்குன்றம்-மாமல்லபுரம் சுற்றுலா. 4. சென்னை நகரச் சுற்றுலா 5. திருப்பதி சுற்றுலா.

**1) தமிழ்நாடு சுற்றுலா (7 நாட்கள்)**

இந்தச் சுற்றுலாவில் பயணிகள் திருச்சி, கொடைக்கானல், மதுரை, கன்னியாகுமரி, சுசீந்திரம், திருச்செந்தூர், இராமேஸ்வரம், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 6.30 மணிக்குப் புறப்படும் சுற்றுலாப் பேருந்து அடுத்த வெள்ளிக்கிழமை மாலை சென்னைக்குத் திரும்புகின்றது.

**கட்டண விவரம்:**

ரூபாய் 680 — (இருவர் தங்கும் அறை)

ரூபாய் 750 — (ஒருவர் தங்கும் அறை)

5 வயது முதல் 12 வயது முடிய உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் ரூ.580 ஆகும். 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டணம் ஏதும் இல்லை.

**2) தென்னிந்திய சுற்றுலா (7 நாட்கள்)**

இந்தச் சுற்றுலாவில் பயணிகள் பெங்களூர், மைசூர், சோம்நாத்பூர், சீரங்கப்பட்டினம், பிருந்தாவனம், முதுமலை, உதகை, கோவை, கொச்சி, ஒகேனக்கல், திருவண்ணாமலை, ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 6.30 மணிக்குப் புறப்பட்டு அடுத்த வெள்ளிக்கிழமை மாலை சென்னைக்குத் திரும்புகின்றது.

**கட்டண விவரம்**

ரூபாய் 680 — (இருவர் தங்கும் அறை)

ரூபாய் 750 — (ஒருவர் தங்கும் அறை)

5 வயது முதல் 12 வயது முடிய உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் ரூ 580 ஆகும். 5வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டணம் ஏதும் இல்லை.

மேற்கூறிய இரண்டு 7 நாள் சுற்றுலாப் பயணத்திற்கான கட்டணத்தில் தங்கும் வசதிக்கான கட்டணமும், பார்க்கும் இடங்களில் நுழைவுக் கட்டணமும் உள்ளடங்கும்.

**3) காஞ்சிபுரம் – திருக்கழுக்குன்றம் – மாமல்லபுரம் சுற்றுலா (எல்லா நாட்களிலும்)**

காலை 6.45 மணிக்குப் புறப்பட்டு மாலை 5.30 மணிக்குத் திரும்புகின்றது. இந்தச் சுற்றுலாவில் கலந்து கொள்ளும் பயணிகள் காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

**கட்டண விவரம்**

நபர் ஒன்றுக்கு 40 ரூபாய்.



மாமல்லபுரத்தில் இளைஞர் விடுதி



குளிர்சாதனப் பேருந்தில் 55 ரூபாய்.

**4) சென்னை நகர சுற்றுலா (எல்லா நாட்களிலும்)**

மாலை 2.00 மணிக்குப் புறப்பட்டு மாலை 6.00 மணிக்குத் திரும்புகின்றது. சென்னை நகரின் முக்கியமான சுற்றுலா மையங்களுக்குப் பயணிகள் இந்தச் சுற்றுலாவின் மூலம் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

**கட்டண விவரம்**

நபர் ஒன்றுக்கு 25 ரூபாய்

**5) திருப்பதி சுற்றுலா (எல்லா நாட்களிலும்)**

காலை 6.00 மணிக்குப் புறப்பட்டு இரவு 9.00 மணிக்குத் திரும்புகின்றது. இந்தப் பயணத்தில் பங்கு கொள்ளும் பயணிகள் சொகுசுப் பேருந்து அல்லது குளிர் சாதன வசதி கொண்ட பேருந்தின் மூலம திருப்பதி திருமலை, திருச்சானூர் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



கொடைக்கானல் ஏரி

ஏர்க்காடு படகு குழாம்

**கட்டண விவரம்**

நபர் ஒன்றுக்கு குளிர் சாதனப் பேருந்தில் திருப்பதி 130 ரூபாய் (இந்தக் கட்டணத்தில் திருப்பதி கோவில் சிறப்பு தரிசனத்திற்காகக் கட்டணம் ரூபாய் 25ம் அடங்கும்). குளிர்சாதனம் பொருத்தப்படாத சுற்றுலாப் பேருந்து மூலம் சென்று வர பயணக் கட்டணம் ரூபாய் 105 ஆகும்.

மாமல்லபுரம், திருப்பதி சுற்றுலாக்கள்-சொகுசுப் பேருந்துகளிலும், குளிர்சாதனப் பேருந்துகளிலும் நடத்தப்படுகின்றன.

**தனியார் சுற்றுலாவுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?**

ஒரு சுற்றுலாவின் சிறப்பு அது தனியார் நடத்துவதா அல்லது அரசு நடத்துவதா என் பதைப் பொறுத்ததல்ல-சுற்றுலா நடத்துவதற் கான தகுதியையும் மற்றஅடிப்படை வசதிகள் அளிக்கும் திறனையும் பொறுத்தது. அரசின் நிறுவனம் நடத்தும் சுற்றுலாவில் தகுந்த பாதுகாப்பு அளிப்பது மட்டுமின்றி, சொந்த விடுதிகளில் பயணிகள் தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ப சுவையான உணவு வசதியும் அளிக்கிறது. பல வசதிகளுடன் சிக்கனமாகப் பல இடங்களைக் கண்டு களிக்க ஏற்பாடு செய்கிறது. நமது கழகம் நடத்தும் சுற்றுலாக்கள் வியாபார நோக்கத்தில் நடத்தப்படுபவை அல்ல. மக்களின் உணர்வுகளின் அடிப்படையில் நடத்தப்படு பவை.

**மொத்தத்தில் புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அதன் திட்டங்களோடு தமிழ்நாடு அரசு சுற் றுலாத்துறை திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. சென்னையில் மத்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொடர்புடன் மூன்று நட்சத்திர விடுதி ஒன்றினை நிறுவ உத்தேசிக் கப்பட்டுள்ளது. மேலும் சென்னை நகரத்தில் சுற்றுலா முகாம் என்ற புதுமையான திட்டத் தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ.12.50 இலட்சம் செலவில் உருவாக்கப் பெற இருக்கும் இந்த முகாமில் சென்னை நகருக்குப் பேருந்துகள் மூலம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும் பேருந்து கள் நிறுத்தி வைப்பதற்கும் பேருந்துகளின் பயணிகளை அனுப்பி வைப்பதற்கும், வசதி யாக அமைக்கப்படும். மாமல்லபுரம் சுற்றுலா முகாம் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5. இலட்சம் செலவில் மேலும் 6 குடில்கள் கட்டப்படவிருக்கின்றன. மாமல்லபுரம் கடற் கரை வளாகத்தில் ரூ48.50 இலட்சம் செலவில் 28 குடில்கள், நீச்சல்குளம் மற்றும் உணவு விடுதி அமைக்கப்பெற்று முடியும் தறுவாயில் உள்ளன.

பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழப் பட்ட பிச்சாவரம் மேம்பாட்டிற்காக இதுவரை

ரூ 12.50 இலட்சம் செலவில் இளைஞர் விடுதி, குடில்கள், உணவுவிடுதி; படகு குழாம் ஆகியவை முடியும் தறுவாயில் உள்ளன. மேலும் 4 குடில்கள் கட்டவும் உல்லாசப் படகுகள் வாங்கவும் ரூ 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சியில் ரூ.15 இலட்சம் செலவில் இளைஞர் விடுதி ஒன்றினை இவ்வாண்டு கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இராமேசுவரத்தில் ரூ 8 இலட்சம் செலவில் புதிய உணவு விடுதி ஒன்றும் ரூ.12 இலட்சம் செலவில் 12 குடில்களும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இளைஞர் விடுதி ரூ.10 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. மண்டபத்தில் ரூ 3 இலட்சம் செலவில் உணவு விடுதி ஒன்று கட்டும் பணிகளும் துவங்கப்பட உள்ளன.

கன்னியாகுமரியில் கலை அரங்கு ஒன்றினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இளைஞர் விடுதி ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உதகையில் குழந்தைகளின் பொழுதுபோக்கு வசதிகளை உருவாக்க ரூ20.50 இலட்சம் செலவில் ஒரு பெருந் திட்டம் அமலாக்கப்பட்டு வருகிறது. இதில் குழந்தைகளுக்கான குட்டி ரயில், குழந்தைகள் பூங்கா, மற்றும் படகு குழாம் ஆகியவை அடங்கும்.

இதைத்தவிர உதகை ஏரி உல்லாசப் படகுகளுக்கு அதிகப் படகுகள் வாங்க ரூ 1.92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதுமலையில் உணவு விடுதியும், இளைஞர் விடுதியும், ரூ.7 இலட்சம் செலவில் நிறுவ வேலைகள் துவக்கப் பெற்றுள்ளன.

கொடைக்கானலில் ரூ.11.95 இலட்சம் செலவில் உணவு விடுதியும், இளைஞர் விடுதியும் கட்டப்பட்டு முடியும் தறுவாயில்உள்ளன.

காஞ்சிபுரத்தில் ரூ.44.50 இலட்சம் செலவில் 20 அறைகள் கொண்ட நவீன பயணிகள் விடுதி ஒன்றினைக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டையில் சுற்றுலா விடுதி ஒன்றினைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

உதகை தொட்டபெட்டாவில் ரூ.2 இலட்சம் செலவில் தொலைநோக்கி இல்லம் ஒன்றினை அமைப்பதற்கான வேலைகள் துவங்கப் பெற்றுள்ளன.



உதகமண்டலம் படகு குழாம்

மேலும் தஞ்சை மாவட்டம் பூம்புகார் கலைக்கூடத்தின் மேம்பாட்டிற்காக குடிதண்ணீர் வசதி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சாலைகள் அமைத்தல் ஆகியவை ரூ.7.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மதுரையில் செயல்படுவது போல், ஒலி-ஒளிக் காட்சித் திட்டங்கள் எங்கெல்லாம் அமைக்க முடிவு செய்திருக்கிறீர்கள்? அது பற்றி விவரங்கள் கூறமுடியுமா?**

மாமல்லபுரத்தில் ஒலி-ஒளிக் காட்சி ஒன்றினை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ.47 இலட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தத் திட்டமானது மாமல்லபுரத்தில் புராதன சின்னங்களைப் பயன்படுத்தி இந்த



கன்னியாகுமரியில் விவேகானந்த பாறை



நிகழ்ச்சியை நடத்தயிருப்பதால், மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரின் ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஒப்புதலை விரைவில் எதிர்பார்க்கின்றோம்.

**அரசு ஊழியர்கள் அல்லது சாதாரண மக்கள் குறைந்த வாடகையில் தங்குவதற்கு ஏற்ப வசதிகள் உள்ளனவா?**

இளைஞர்கள் மற்றும் குறைந்த வருவாய் உள்ள உள்நாட்டு-வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டு இக்கழகம் இளைஞர் விடுதிகளையும் சுற்றுலா முகாம்களையும் நிறுவியுள்ளது. இங்கு தங்கு பவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் அளிக்கப்பட்டு மிகக் குறைந்த வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த வாடகை நாள் ஒன்றுக்கு ரூ.5 அல்லது ரூ.7.50 மட்டும்தான்.

**சாதாரண மக்கள். சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா பயணத்திட்டத்தில் பங்கு கொள்ள முடியுமா?**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாக்கள் சாதாரண மக்கள் பங்கேற்கும் வகையில்தான் அமைக்கப்பட்டுள்ளன. இக்கழகம் வசூலிக்கும் கட்டணத்தில் போக்குவரத்துக் கட்டணம், தங்கும் இடங்களுக்கு வாடகை மற்றும் சுற்றுலா இடங்களைக் காண்பதற்கான நுழைவுக் கட்டணம் வழிகாட்டிக்கான ஊதியம் ஆகிய அனைத்தும் அடங்கும்.

**உதகை, கொடைக்கானல், ஏர்க்காடு, கொல்லி மலை, முதுமலை ஆகிய மலைப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சிறு பேருந் துகள் விடும் திட்டம் உண்டா?**

இத்தகைய திட்டம் தற்போது இல்லை. நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் தற்பொழுது உதகை, கொடைக் கானல், ஏர்க்காடு, கொல்லிமலை, முதுமலை ஆகிய மலைப் பகுதிகளில் சுற்றுலாப் பருவ காலங்களில்தேவைக்கு ஏற்ப அதிகப் பேருந்துகள் பயன்படுத்துவதால் அத்தகைய தேவை குறித்து இன்னும் ஆலோசிக்கப்படவில்லை.

**சுற்றுலாத் தலங்களின்சிறப்புகளைத் தொகுத்து வண்ணத்தில் செய்தி விளம்பரப்படங்கள் எடுத்து தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டை உலகம் எல்லாம் பரப்பும் வகையில் செய்யத் திட்டம் உள்ளதா?**

தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை தமிழ் நாட்டில் உள்ள சுற்றுலாச் சிறப்புப் பெற்ற இடங்களை விளம்பரப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. இத்துறை ஏற்கெனவே சுற்றுலாத் தலங்களைப் பற்றிய இரண்டு வண்ணப்படங்களைத் தயாரித்து மூன்றாவதாக மற்றொரு படத்தைத் தயாரித்துக் கொண்டு இருக்கிறது. இப்படங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பயணிகளுக்கு அளித்திடும் வசதிகளையும் எடுத்துக் காட்டுகிறது. தேவையெனில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வண்ணப்படம் ஒன்றைத் தயாரிக்கவும் முயலும்.

**சென்னை நகரில் இருப்பது போல மற்ற தலை நகரங்களிலும் (மதுரை, திருச்சி, தஞ்சை) சுற்றுலாப் பேருந்துகள் அமைக்கலாமே?**

மதுரை, திருச்சி, தஞ்சை போன்ற இடங்களில் உள்ள செயல்படும் போக்குவரத்துக் கழகங்கள் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. ஆகவே, அவை தற்போது தேவையில்லை.

**வரும் "சுற்றுலா பொருட்காட்சியையாவது மாற்றி அமைக்கும் (அனைத்துத்தரப்பட்ட ஏகோபித்த ஆதரவைப் பெறும் வகையில்) திட்டம் உண்டா? நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கும் யோசனை எந்த அளவில் இருக்கிறது?**

கடந்த பொருட்காட்சியில் பங்கேற்றவர்களிடமிருந்து இனி நடைபெறும் பொருட் காட்சிகளை மேலும் நல்ல முறையில் மாற்றி அமைக்க யோசனைகள் கோரி பெறப்பட்டுள்ளன. இந்த யோசனைகள் பங்கேற்றவர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் மேலும் வசதிகள் செய்து தருதல், அரங்குகளை மாற்றி நல்ல முறையில் அமைத்தல், பொருட்காட்சி நேரங்களில் மாற்றம் செய்தல், பொருட்காட்சி காண வருபவர்களுக்கு அதிக அளவில் போக்குவரத்து வசதிகள் அளித்தல் ஆகியவையாகும். அடுத்த பொருட்காட்சியினை அமைக்கும் பொழுது இந்த யோசனைகளை அமல்படுத்தத்தவறாமல் முயற்சி செய்வோம்.

நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கும் யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது. எந்த முறையில் அமைத்தால் நன்கு அமையும் என்பதனை அறிய நாட்டிலுள்ள பல வல்லுநர்களை ஆலோசனை கூறுமாறு பத்திரிகைகள் மூலம் அழைப்புகள் விடுத்து அவர்களது யோசனைகளும் பெற்றுள்ளோம். சிறந்த வடிவமைப்புகளை அனுப்பி வைத்துள்ளவர்களுக்கும், பரிசுத் தொகைகளை வழங்கி அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் நிரந்தரப் பொருட்காட்சியை உருவாக்க இருக்கின்றோம்.

—சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவரிடமிருந்து விடை பெறுகிறோம். தமிழகச் சுற்றுலாத் தலங்கள் சீரும் சிறப்பும் பெற்று வருவதற்குத் தேவையான திட்டங்கள், வடிவமைப்புகள், செயற்குறிப்புகள் எல்லாம் நமக்கு மகிழ்ச்சியையும், மன நிறைவையும் அளிக்கக் கூடியவையாக இருக்கின்றன அல்லவா?

# வடஆர்க்காடு மாவட்டம் தொழில் வளர்ச்சி

**பி. எல். ராஜேந்திரன்**

வட ஆர்க்காடு மாவட்டம் தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிய மாவட்டம் எனக் கூறப்பட்டதாகும். ஆனால், அண்மைக் காலத்தில் அம்மாவட்டம் பெற்று வருகிற - பெற்றுள்ள தொழில் வளர்ச்சி நம்மை வியக்கவைப்பதாக உள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில், குறிப்பாக இராணிப்பேட்டையில் காணப்படும் தொழில் முன்னேற்றம் அருமை பெருமை மிக்கதாகும். இப் பகுதியில் பல்வேறு சிறு தொழில் நிறுவனங்கள் அடங்கிய தொழில்பேட்டையொன்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி திட்டக் கழகத்தின் (State Industries Promotion Corporation of Tamil Nadu Ltd.) கீழ் உருவாகி இயங்கி வருகிறது.



சுமார் 869 ஏக்கர் நிலப்பரப்பிலே உருவாக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற்பேட்டைக்கு 1971ல் வித்தூன்றப்பட்டது.

இங்குள்ள தொழிற்சாலைகளிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 132 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன; இன்னும் பல வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

12 இடங்கள் கடை வைப்பதற்கெனவும், தனியார் மருத்துவமனைக்கென இரண்டு இடங்களும் இங்கே ஒதுக்கப்பட்டுள்ளன.

விரைவில் இப்பகுதியில் பணியாற்றும் தொழிலாளர் இல்லப் பிள்ளைகள் கல்விக்கென 'மெட்ரிகுலேஷன்' பள்ளியொன்று உருவாக இருக்கிறது. இப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட ஒதுக்கப்பட்ட 68 இலட்சம் ருபாயில், அதற்கான பணிகள் துவக்கப்பட்டு இது வரை 60 இலட்சம் ருபாய் செலவிடப்பட்டு அத்திட்டம் முற்றுப்பெறும் நிலையில் உள்ளது.

தொழிலாளர் வசதிக்கென ஒரு கிலோ மீட்டர் நீளப் புதிய சாலையொன்றும் அமைந்துள்ளது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழக நிர்வாக அலுவலர் திரு தியாகராசன் மேற்கண்ட விவரங்களோடு இராணிப்பேட்டை பற்றிய இன்னும் பல விவரங்களையும் நமக்குச் சொல்கிறார்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக்கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் இங்கே 20 இரசாயனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. தமிழ்நாடு சிறுதொழில் திட்டக் கழகப் பகுதியில் 3 தோல் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

தொழில் துறையிலே வட ஆர்க்காடு பின்தங்கிய மாவட்டம் என்பதாலே-இங்கே ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு மத்திய அரசும் மாநில அரசும் அவ்வத் தொழிலின் முதலீட்டில் 15 சத வீதத்தை மான்யமாக அளிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படித் துவக்கப்படும் சிறு தொழில்களுக்குத் தேவைப்படுகின்ற கருவிகள், எந்திரங்கள், மூலப்பொருட்கள் போன்றவற்றைச் செய்துதரவும் கடன் வசதிக்கு வகை செய்திடவும் வேலூரில் உள்ள 'மாவட்டத் தொழில் மையம்' பெரிதும் உதவி புரிகிறது.

1979ல் அமைக்கப்பட்ட இந்த மையம் ஒரு பொது மேலாளரையும், மூன்று நிர்வாக மேலாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

'வட ஆர்க்காடு மாவட்டத் தொழில் மையம்' ஏற்படுவதற்கு முன்னாலே அரசு பதிவு பெற்றதாயிருந்த 1,374 சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை இம் மையம் உருவானதற்குப்பின் 2,524 என்ற அளவில் அதிகரித்தது. இதனால் புதிதாக வேலை வாய்ப்புப் பெற்றோர் எண்ணிக்கை 20,178.

கடந்த ஜூன் மாதம் வரையிலே 3,377 கைவினைப் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகள் இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன. 4,255 பேர் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

1979-82ல் பதிவு பெற்ற குடிசைத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 1,122. இவற்றின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றோர் 5,971 பேர்.

வடஆர்க்காடு மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு இப்புள்ளி விவரங்களே போதுமானவைகளாகும்.

மிகவும் சாதாரண அளவிலே சிறுதொழில்களை நடத்துபவர்களுக்குக் காட்பாடியில் 10 தொழிற்கூடக் கட்டடங்களையும் மாதவனூரில் 6 தொழிற்கூடக் கட்டடங்களையும் மாவட்டத் தொழில் மையமே அமைத்துக் கொடுத்திருக்கிறது.

சிறுதொழில்களுக்குத் தேவையான சிறுதொழிற் கூடங்கள் இந்த ஆண்டும் காவனூர், வாலாஜாபாத், தெள்ளாறு, ஆதமங்கலம், நாட்றாம்பள்ளி, சேத்துப்பட்டு ஆகிய ஊர்களிலே கட்டுவதெனத் திட்டம் தீட்டப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1980-81ல் ஒரு லட்சத்து 89 ஆயிரம் ருபாய் ஒதுக்கப்பட்டு 259 பேர்களுக்குப் பல தொழில்களிலும் பயிற்சியளிக்கப்பட்டது.

தொழில் வளர்ச்சியிலே மிகவும் பின்தங்கிய பகுதிகளான போளூர், செங்கம், வந்தவாசி, செய்யாறு வட்டங்களுக்கு மாநில அரசு மான்யம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, திருப்பத்தூர் வாணியம்பாடி, வேலூர் ஆகிய பகுதிகளிலே சிறுதொழில் நிறுவனங்களை நிறுவுவதற்கு முதலீட்டு மான்யத் திட்டத்தின் அடிப்படையிலும், மான்யத் திட்டத்தின் அடிப்படையிலும் மத்திய அரசே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில், 1978ல் நிறுவப்பட்டு, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் இயந்திரக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இது, பெங்களூர் கனரக எந்திரத் தொழிற்சாலையான 'எச்.எம்.டி.'யுடன் தொடர்புடையதாகும். சுமார் ஒரு கோடியே 52 இலட்சம் ருபாய் மூலதனத்தில் தொடங்கப்பட்ட இத் தொழிற்சாலையில் உருவாகும் எந்திரக் கருவிகள் ஜாம்பியா, இந்தோனேஷியா, இலங்கை, நைஜீரியா போன்ற நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பெங்களூரில் உள்ள எச்.எம்.டி நிறுவனத்திற்கு மட்டும் இந்தத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 35 எந்திரக் கருவிகளை அனுப்பி வருகிறது. கடந்த இரண்டாண்டுக் காலத்தில் மட்டும் 26 எந்திர பாகங்களை அல்ஜீரியா, டான்சானியா, ஈராக், வங்கதேசம் உட்பட 11 நாடுகளுக்கு இத் தொழிற்சாலை ஏற்றுமதி செய்துள்ளது.

'விரோலெக்ஸ் கேபிள்ஸ்' (Virolex Cables) என்ற தொழிற்சாலையில் ஒயர்கள் தயாராகின்றன. இங்கே தயாரிக்கப்படும் ஒயர்களில் 80 சதவீதத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கிக் கொள்கிறது. மீதம், கோவா, போன்ற பிற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்குச் சொந்தமான 'டான்சி மெஷின் டூல்ஸ் (Tansi Machine Tools) அமைப்பில் மாதமொன்றுக்கு 15 இயந்திர பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவைகளில் பெரும் பாலானவை இந்தோனேஷியா, நைஜீரியா, ஸ்ரீலங்கா போன்ற ஜாம்பியா, நாடுகளால் விரும்பி வாங்கப்படுகின்றன. 1978ல் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை இது.

1979ல் தொடங்கப்பட்ட 'கார்த்திகேயா இன்டஸ்ட்ரீஸ்' என்றுள்ள தொழிற்சாலையில், வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் மூலப்பொருட்களைக் கொண்டு பாலிதீன் இழையில் பைகள் தயாரிக்கப்படுகின்றன. ஜீனி, உரம், காஸ்டிக் சோடா, அம்மோனியம் குளைரடு போன்றவைகளுக்கு இந்தப் பைகள் உதவுகின்றன.



இந்தத் தொழிற்சாலையில் ஆண்களே ஏராளமாகப் பணியாற்றுகின்றனர். அற்புதம் என்ற ஒரே ஒரு பெண்மணி மட்டுமே நாம் சென்றபோது பணியில் இருந்தார்.

"இது சாதாரணத் தொழில் போல இருக்கிறதே, ஏன் பெண்களையும் அதிக அளவில் சேர்த்துக்கொள்ளக் கூடாது?" என்று அதன் உரிமையாளர் திரு. ஏ. முருகேசன், நிர்வாகி திரு. சுவாமிநாதன் ஆகியோரைக் கேட்டோம். "இரண்டு ஷிப்டு இருப்பதால் பெண்கள் பணியாற்றுவது கஷ்டம்" என்றார்கள் அவர்கள்.

தோல் ஆடைகள், தோல் பைகள், தோலால் ஆன ஆண் பெண் காலணிகள் உருவாக்கும் தோல் தொழிற்சாலைகள் 16 இந்தத் தொழிற்பேட்டையில் உள்ளன. இவற்றில் நாள் ஒன்றுக்கு 35 ஆயிரம் ஆட்டுத் தோல்கள் பதனிடப்பட்டு தோல் ஆடைகளாகவும் மற்றவைகளாகவும் உருவாகின்றன. பதனிடப்பட்ட ஒரு ஆட்டுத்தோல் மட்டும் 70 ருபாய் அடக்கமாகிறது.

இத் தொழிலுக்குத் தேவையான ஆட்டுத் தோல் பெரியமேடு, திண்டுக்கல் ஆகிய இடங்களிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

இந்த விவரங்களை யெல்லாம் நமக்குத் தெரிவித்த 'புரோகரசிவ் தோல் தொழிற்சாலை' (Progressive Leather Industries) நிர்வாகப் பங்குதாரர் திரு எஸ். ஆர். சீனிவாசன் "இங்கு தயாராகும் தோல் ஆடைகள் குளிர் நாடுகளான இத்தாலி, மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம் போன்ற நாடுகளுக்குப் பெரிதும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன" என்றும் குறிப்பிட்டார்.



வாணியம்பாடி தோல் தொழிற்சாலை (Vaniyambadi Leather Finishing and Servicing Industrial Co-operative Sceiety) உதவி இயக்குநர் திரு. எம். கணேசனையும் சந்தித்து, அப்பகுதியில் தோல் தொழிலுக்கு ஏற்பட்டு வரும் வளர்ச்சியை நாம் அறிகிறோம். 1974ல் ஆரம்பிக்கப்பட்ட வாணியம்பாடி தொழிற்சாலை 1978க்குள் மட்டும் 6 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களைத் தயாரித்த பெருமையுடையதாகும்.

எஸ்.ஆர்.பி. (S.R.P. Tools Ltd.) தொழிற்சாலையில் மோட்டார் வண்டி போன்ற வாகனங்களுக்கான நேர்த்தியானகருவிகள்தயாராகின்றன. 1970ல் ஜப்பானியத் தொழில் கழக உதவியோடு தொடங்கப்பட்ட இத்தொழிற்சாலை இப்போது தனிப்படவே இயங்கிவருகிறது.

வாணியம்பாடியில் உள்ள அரசு பட்டுக்கூடு அங்காடிக்குச் சென்று பார்வையிடுகிறோம். பட்டு வளர்ச்சித் துணை உதவி இயக்குநர் திரு. மகமது அலி அப்பகுதியில் பட்டுத் தொழில் வளர்ச்சி நிலை பற்றி நமக்கு விளக்குகிறார்.

1973ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கண்ணமங்கலம், ஜமுனாமரத்தூர் ஆகியஇடங்களில்பட்டுத்தொழில் வளர்ச்சிக்கான முன்னோடி சேவை நிலையங்கள் திறக்கப்பட்டு அதன் வாயிலாகப் பட்டுத் தொழில் துவங்கப்பட்டுள்ளது.

1979ல் பட்டுத் தொழிலுக்குத் தனி இயக்குநரகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இத் தொழிலில் வேகமான வளர்ச்சி ஏற்பட்டது.

துவக்கத்தில் 50 ஏக்கர் நிலப் பரப்பில்ஆரம்பிக்கப்பட்டபட்டுத் தொழில் இம் மாவட்டத்தில் இப்போது 3784.58 ஏக்கர் நிலப் பரப்பு அளவில் பெருவளர்ச்சி பெற்றுள்ளது. சுமார் 4,326 விவசாயிகள் இப்பகுதியில் பட்டுப் பூச்சிக்குத் தேவையான மல்பரி பயிரிட்டு,பட்டுத்தொழில் வளர்ந்தோங்க உதவுகின்றனர்.

விவசாயிகள் உற்பத்தி செய்திடும் பட்டுக் கூடுகளை வாங்க வாணியம்பாடியிலும், செங்கத்திலும் பட்டுக்கூடு அங்காடிகள் இயங்கிவருகின்றன.

இவை தவிர-தொழில் கூட்டுறவு நூற்பு நிலையங்கள் நான்கும், தொழில் கூட்டுறவு பட்டு நூல் முறுக்கேற்றும் நிலையம் ஒன்றும் இம்மாவட்டத்தில் உள்ளன. இது தவிர 270 நூற்பு எந்திரங்களுடன் கூடிய 54 தனியார் பட்டு நூற்பு நிலையங்களும் இயங்கி வருகின்றன.

பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வெப்பதட்ப நிலை வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது.

இம் மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலையில், 350க்கும் மேலான மலைவாழ் மக்கள் இத் தொழிலில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றனர். 14. லட்சம் ரூபாய் நிதிஒதுக்கீட்டில் 10ஏக்கர் நிலப்பரப்பில் இங்கே ஒரு பட்டுப் பண்ணை அமைத்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வாணியம்பாடியில் உள்ள அரசு பட்டுக்கூடு அங்காடியில் சென்ற ஆண்டு 20 இலட்சத்து 51 ஆயிரம் மதிப்புள்ள பட்டுக் கூடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 40 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பட்டுக் கூடுகள்விற்கப்பட்டுள்ளன. செங்கம் அரசு பட்டுக்கூடு அங்காடியில் இந்தஆண்டு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பட்டுக்கூடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



வட ஆர்க்காடு மாவட்டத்தில் சிறுதொழில் வளர்ச்சி எந்த அளவுக்குச் சிறப்புற்றிருக்கின்றது என்பதை நேரில் கண்டறிந்து இவ்வாறான விவரங்களைத் திரட்ட நம்மோடு உடன்வந்து துணைபுரிந்தார்கள் மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி திரு. அ.பன்னீர்செல்வமும், உதவி மக்கள் தொடர்பு அதிகாரி திரு. பிச்சையாவும். ●

# மரம் வைத்தவன்

## -சிவசங்கரி

எதிரில் நிழலாடியது.

பேனாவைக் கீழே வைத்து விட்டு நிமிர்ந்தேன்.

முத்தாத்தா....

ஒட்டின முகம். பெரிசாய் குங்குமப் பொட்டு. ஏகத்துக்கு எண்ணெய் தடவி இழுத்து முடியப்பட்ட முடி, மஞ்சளும் பிசுக்குமாய் தாலிக்கயிறு, கையிலும், காலிலும் வெள்ளிக் காப்பு, மெட்டி, வாய் நிறையப் புகையிலையோடு கலந்த வெற்றிலைச் சாறு, நிறை மாச கர்ப்பத்தை உணர்த்தும் வகையில் கூட்டிக் குமிந்து இறங்கிவிட்ட வயிறு.

''ஸ்ஸ்..யப்பாடி..'' தன் கனம் தனக்கே தாங்காத தினுசில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள்.

இந்த முத்தாத்தாளைப் பத்து வருஷங்களுக்கும் மேலாக நான் அறிவேன்.

இந்த ஊருக்கு நாங்கள் வந்த புதிதில் என் வீட்டு வேலைகளை இவள் செய்ய வந்ததிலிருந்து பழக்கம்.

கிட்டத்தட்ட முத்தாத்தாளுக்கும் எனக்கும் ஒரே வயசாக இருக்கும் என்பது என் அபிப்ராயம்.

''உன் வயசென்ன முத்து?'' என்று கேட்டால், ''ஆருக்குத் தெரியும்? அது ஆச்சு நாலு கழுதைக்கு ஆவுறது'' என்று வேடிக்கையாகப் பதில் சொல்வாள்.

திருமணமாகி நான் இங்கு இருபது வயசில் வந்தபோது,முத்தாத்தாளுக்கு ஏற்கெனவே நாலு, இரண்டு வயசில் இரண்டு பிள்ளைகள் இருந்தன.

புருஷன் வேலாயுதத்துக்குப்பக்கத்து உரத் தொழிற்சாலையில் வேலை. நானூறு சொச்சம் சம்பளம்-போனஸ், எதற்கும் குறைவில்லை.

முத்தாத்தாவைப் பற்றி இங்கே தனியாய் கொஞ்சம் சொல்ல வேண்டும். கண்டால் கை செய்யும் ரகம் என்பார்களே, இவள் அந்த ஜாதிதான். பெருக்குவதும், மெழுகுவதும், பத்துத் தேய்ப்பதும், துணி துவைப்பதும் படு நெறுவிசு. தரையில், ஜன்னலில், தூசி, துரும்பு; பாத்திரத்தில் பிசுக்கு ம்ஹூம்... கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு பார்த்தாலும் அகப்படாது. முறுக்கு சுற்ற மாவு இடிக்க வேண்டுமா? ரெடி; பெஷினுக்குச் சென்றுவர வேண்டுமா? தயார். இப்படி எந்த வேலையை எப்போது சொன்னாலும் நிமிஷத்தில் பாங்குறச் செய்தவள், மூன்றாவதை உண்டாகி, அது பிறப்பதற்குச் சில மணி நேரங்கள் வரையிலும் அத்தனை வேலைகளையும் சுறுசுறுப்பாகப்பார்த்தவள்; குழந்தை பிறந்த பிறகு ''நா இனிமே வேலைக்கு வரலைம்மா'' என்றாள் எட்டாம் நாள்.

''பச்சை உடம்புக்காரி, பசங்களைக்கவனிச்சு, ஆக்கிப்போட்டுக் கிட்டு வீட்டோட கிட, எதுக்காவ லோல் படறேனு புருஷன் சொல்றாரும்மா...''

பேசியவள் கண்களில், கணவன் தன்னை பூ மாதிரி தாங்குகிறான் என்ற சந்தோஷ ஜொலிப்பு.

அதற்குப் பிறகு அவ்வப்போது மதிய நேரங்களில் கைக் குழந்தை ஜோதியுடன் வீட்டுக்குப் பின்பக்கமாய் வந்து தாவாரத்தில் காலை நீட்டி உட்கார்ந்து கொள்வாள்.

போனசில் வேலாயுதம் குழந்தைக்குக்கொலுசபண்ணிப்போட்டிருப்பதை, தனக்குக் கால் சவரனில் மூக்குத்தி செய்து கொடுத்திருப்பதை, பெருமையாய்க் கூறுவாள்.

ஜோதிக்கு எட்டாம் மாசம் நடக்கையில் முத்தாத்தாவின் உடம்பு மறுபடி பூசின மாதிரி ஆக, சந்தேகத்துடன் கேட்டேன்.

''என்ன முத்தூ..குளிச்சிகிட்டுதானே இருக்குறே?''—

அவள் வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

''என்ன முத்தூ?''—

--இப்ப எனக்கு மூணு மாசம்மா...''

கைப் பிள்ளைக்கு எட்டுமாசம். வயிற்றில் மூன்று மாசம்!

என்ன கஷ்ட காலம் இது!

மூத்தது சவலையாய்ப் போய் விடாதோ?

சின்னதாக எழுந்த எரிச்சலுடன் நான் பேசினேன்.

''லட்சணமா இரண்டு பிள்ளைங்க, ஒரு பெண்ணுனு ஆயாச்சு..அதுங்களைப் படிக்க வைச்சி முன்னுக்குக் கொண்டுவர்றதைப் பத்தி கவலைப்படாம என்ன அசட்டுக் காரியம் இது முத்தூ? பிள்ளைங்களை நினைச்சிகிட்டு கொஞ்சம் கவனமா இருந்துக்கக் கூடாதா?''

''இது பொறக்கறதால, மூத்ததுங்களுக்குச் சோறு போடாம இருந்திடப்போறமா? இல்லை, துணிமணி வாங்கித் தராம ஒதுக்கிடுவமா? என்னம்மாசொல்றீங்க நீங்க?''—

''சோறுபோட்டு, துணிவாங்கிக் கொடுத்தா ஆச்சா? முன்னுக்கு வர படிப்பு வேணாமா?...மூத்தவன் மலையனுக்கு இப்ப என்ன வயசாச்சி? ஆறா? பள்ளிக்கோடத்துக்கு அனுப்பறதா உத்தேசம் இருக்கா, இல்லையா? படிச்சாதானே நாளைக்கு நல்லா சம்பாதிக்கலாம்?''—

**முத்தாத்தா கையைக் கொட்டிக் கொண்டு சிரித்தாள்.**

**-'என் வூட்டுக்காரர் என்னத்** தம்மா பெரிசா படிச்சிருக்கிறார்; **அவுரு கை நிறைய சம்பாதிக்க** லையா? எம் புள்ளைங்களும் **அப்** பனாட்டம் ராசாவா வளர்ந்திடும். **வூடு** நிறைய புள்ளைங்க இருக்க கொடுத்து வைச்சிருக்க வேணாமா? என்னம்மா நீங்க?''

அன்றைக்குப் பேச்சு அதோடு முடிந்தது.

கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாய்-எதையும் கேட்க, ஏற்றுக் கொள்ள மறுப்பவளிடம் என்னவென்று பேசுவது?

அந்தப் பிள்ளை பிறந்த ஆறாம் மாசம் ஒன்று குறைப் பிரசவமாய்ப் போனது. அடுத்த வருஷமே இன்னொன்றை முத்தாத்தா வயிற்றில் சுமந்தபோது, சோகை பிடித்துப் போன அவள் உடம்பின் பலவீனத்தைக் காணச் சகியாமல் கோபித்தாலும்கோபிக்கட்டும் என்று கேட்டு விட்டேன்.

''மறுபடி உண்டாயிருக்கியா முத்து? உடம்பு சுத்தமா நல்லா இல்லேனு மூக்கால அழுதுகிட்டு, வருஷத்துக்கு ஒண்ணைப் பெத்துகிட்டே போனா எப்படி? அப்புறம், எப்பத்தான் தேறி வர்றதும்?....நான் ஒண்ணு சொல்லுவேன், கேப்பியா? டவுன் ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டரம்மாவைப் பாரு...உடனடியா இதுக்கு வழி சொல்வாங்க..இன்னும் ஐம்பது நாள் தாண்டலை... சுலபமா முடிச்சிடலாம்..''

முத்தாத்தா கண்களை அகல விரித்தாள்.

'' என்னம்மா சொல்றீங்க, நீங்க''

''**சொல்றேன் சோத்துக்கு உப்பில்லேனு;** அட, என்ன **முத்து, இது கூடவா** புரியலை? **இது உனக்கு அஞ்சாவது** குழந்த. நடுவுலே, குறையாப் போனது வேற... டாக்டரம்மாவைப் பார்த்து, கருவக் கலைச்சிட்டு குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்துக்குறது **உனக்கும் நல்லது;** உன் குடும்பத்துக்கும்....''

என்னை முடிக்க விடாமல் முத்தம்மா 'வவவ' என்று உள்ளங்கையால் வாயில் தட்டினாள். காதைப் பொத்தினாள். கேட்கக் கூடாத எதையோ கேட்டு விட்ட மாதிரி துடித்தாள்.

''இந்த வார்த்தையைச் சொல்ல உங்களுக்கு எப்படிம்மா மனம் வருது? நீங்களும் பிள்ளை குட்டிங்களைப் பெத்தவங்க தானே? மனசறிஞ்சுதான் பேச றீங்களா? குழந்தைங்க, சாமியா பாத்து கொடுக்கிற வரம்...அதப் போயி வேணாம்னு தடுக்க நாம யாரு?''

''அதான் ஏற்கனவே நாலு வரத்தைக் கொடுத்திட்டாரே, முத்து...அஞ்சாவதா எதுக்குனு தான் கேட்கிறேன்...''

''ஆ? அப்படி சொன்னா சரியா? அதது தானா வர்றப்ப, நாம தடுக்கறது பாவம்''

''என்ன பாவம்! இரண்டு குழந்தைங்க போதும்னு நாங்க தடுத்திடலியா? பெத்து, வளர்க்க சிரமப்படறத்துக்குப் பதிலா, பெறாம இருக்கிறது நல்லது இல்லியா?''

''**வூடு நிறைய** புள்ளைங்க **இருக்குறது** தான் நாளைக்கு நமக்குச் **சொத்து.** தலைவலி, கால் **வலின்னா நமக்கு ஆதரவு ஆரு? அத** மறந்திட்டு பேசக் கூடாதும்மா, ஆமா, சிரமம், சிரமம்னு சொல்றீங்களே, இன்னாம்மா சிரமம்? **அதுங்களா** பொறக்குது, **அதும்பாட்டுக்கு** வளருதுங்க, **இதுலே** நமக்கு இன்னா?''

**அவளுடைய அஞ்ஞானப் பேச்சு எனக்குச் சிரிப்பை வர வழைத்தது.**

''அதுங்களா பொறந்து, வளருதா? என்ன முத்து அசட்டாட்டம் பேசறே? பெத்து, வளர்த்து, ஆளாக்குற பொறுப்பு பெத்தவங்களுக்கு இல்லியா? காலம் இருக்குற நிலைலே, விலைவாசி எல்லாம் தாறுமாறா ஏறிகிட்ட இந்த நாளில, இரண்டைப் பெத்து, நல்லவிதமா ஆளாக்கறத்துக்குள்ளே அவனவனுக்கு விழி பிதுங்கிப் போவுது..நீ என்னடான்னா...'

''வேணாம். இந்தப் பேச்சை இதோட விடுங்கம்மா. மரம் வைச்சவன் தண்ணி ஊத்தாம லியா இருந்திடுவான்? பட்டணத்துக்காரங்க மாதிரி மனசைக் கல்லாக்கிக்கிட எங்களால முடியாது; நடக்குறது நடக்கட்டும்..''

அதன் பிறகு வந்த வருஷங்களில் முத்தாத்தா முழுசாக இரண்டே பெற்றாள். அரை குறையாக மூன்றை வாரிக் கொடுத்தாள்.

இதனடுவில் கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டு வேலாயுதம் குடிக்கத் துவங்க, வீட்டுக்கு வரும் பணம் பத்தாமல் தோட்டையும், காப்பையும்அடகு






வைத்து, மேற்கொண்டு கடன் வாங்கி இரண்டு பசு மாடுகளை வாங்கிக் கட்டி, பால் வியாபாரம் பண்ண முற்பட்டாள் முத்தாத்தா.

அவளுடைய · பிரதான வாடிக்கை, நான்தான்.

காலையில் இரண்டு, மாலையில் இரண்டு என்று நாளுக்கு நாலு விட்டர்.

பாலை ஊற்றிவிட்டு, வைக்கோல் வாங்க காசில்லை என்று பாதி நாட்களுக்கு குமுறுவாள், பொட்டுக் கூடையுடன் வந்து தோட்டத்தில் முளைத்திருக்கும் புல்லை அறுத்துக் கொண்டு போவாள்.

அதிசயமாய் இரண்டு வருஷ இடைவெளிக்குப் பின், வயிற்றில் இப்போது ஏழாவது....

எதிரில் உட்கார்ந்திருந்தவளை ஊன்றிப் பார்க்கையில், நமநம வென்று உள்ளுக்குள் கோபம் கனன்றது.

திடகாத்திரமாய் இருந்தவள், இன்று எப்படி ஆகிவிட்டாள்?

பதினைந்து வயசில் கல்யாணம் முப்பது ஆவதற்குள் முழுசாய் ஆறு, போனது மூன்று, வயிற்றில் ஒன்று. போதுமான நகையும், நட்டுமாய் தலை நிமிர்ந்து நடமாடியவள், இன்று கிழவிபோல் தளர்ந்து, ஒட்டிப் போய் விட்டாளே!

''என்ன முத்து, வேளைகெட்ட வேளைல வந்திருக்கே? முகம் சுணுங்கி இருக்கே? இடுப்ப நோவுதா? சூடா காபித் தரட்டுமா?''

அவள் பதில் பேசாமல் இருக்க உள்ளே சென்று காபி நிறைந்த டம்ளருடன் வந்தேன்.

''இந்தா....குடி....''

மெதுவாகக் குடித்துவிட்டு, லோட்டாவைக் கழுவிக் கொண்டு வந்தவள், முந்தானையால் முகத்தைத் துடைத்தாள்.

''மாடுங்க பட்டினியா கிடக்குது...பொட்டு வாங்கி வச்சாதாவலை.. பத்து ரூபா பணம் தர்றிங்களா?''

''ஏன் மேய்ச்சலுக்கு அனுப்பலியா?''

''மலையன் ஊர்ல இல்லம்மா. மாமாவூட்டுக்குப் போயிருக்கான். ஏழுமலைக்குக் காய்ச்சலா இருக்குது. வெயில்ல போகமாட்டேனுட்டான்...''

''ஏழுமலைக்குக் காய்ச்சலா? நேத்துக்கூட அவனை சினிமா கொட்டகைல பார்த்தேனே''

முத்தாத்தா பதில் கூறாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

முத்தாத்தாவின் மூத்த பையன் மலையனுக்குப் ,பதினாலும், இளையவன்ஏழுமலைக்குப்பன்னிரண்டும் ஆகிறதே ஒழிய, ஒரு வேலைக்கும் துப்புக்கெட்டதுகளாக இரண்டும் வளர்ந்து விட்டன.

படிப்பு ஏறவில்லை; கைக்காரியம் எதுவும் வகை இல்லை. பீடி குடிக்கும்; சினிமா பாட்டு ஒன்று விடாமல் பாடும்-இஷ்டம் இருந்தால் மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்று வரும். அவ்வளவு தான்.

''சொல்றேன்னு தப்பா எடுக்காதே முத்து. உம் பசங்க போக்கு கொஞ்சம் கூட நல்லா இல்லே, ஐயா கூட இரண்டு நாள் முந்தி வருத்தப்பட்டுக்கிட்டார். கண்டிக்கக் கூடாதா?''....

முத்தாத்தா பெருமூச்சுடன் எழுந்து நின்றாள்.

''விளையாட்டுப்பசங்க. அதுங்களுக்கா ஒண்ணும் புரியலை... கேப்பார் பேச்சைக் கேட்டுகிடுதுங்க..ம்ம்..வயசு வந்தா தானே தெளிஞ்சிடும்மா.. இதுக்காக வீணா ஏன் லோல் படணும்''?

சமாளிப்பு பேச்சாக எதையோ கூறிவிட்டு, முத்தாத்தா பணத்துடன் போய்ச் சேர்ந்தாள்.

அடுத்த வாரம் அவளுக்கு ஏழாவது குழந்தை பிறந்தது. ரொம்ப நேரத்துக்கு நஞ்சு விழாமல் வலியும், உதிரப் போக்கும் அதிகமாய் இருந்ததில் அந்தப் பத்து நாட்களும், மலையனும் ஏழுமலையும் பாலைக் கறந்து மாற்றி மாற்றி எடுத்து வந்தார்கள்.

பால் ஒரே ஜலம்.

ஏன் இப்படி? - என்ன சமாசாரம், என்று தோட்டக்காரனை அனுப்பி விசாரிக்க, அவன் போய் விட்டு வந்து, பாதிப்பாலை அம்மாவுக்குத் தெரியாமல் டீ கடைக்கு விற்று விட்டு தண்ணீர் கலந்து எடுத்து வருவதையும், வயசு பதினைந்து ஆகவில்லை, அதற்குள் மாமா பெண்ணை மணப்பேன் என்று மலையன் பிடிவாதம் பிடிப்பதையும், அடுத்தவன் தீபாவளிக்குத் தமிழ் சினிமா கதாநாயகன் ஒருவன் அணியும் டீ சர்ட் போலவே நூற்றிப் பத்து ரூபாய் கொடுத்து வாங்கினால் தான் சரி என்று அடமாக இருப்பதையும், ஜோதி பேதி கண்டு எழுந்திருக்காமல் படுத்திருப்பதையும் வரவர தலைகால் புரியாமல் வேலாயுதம் குடித்துவிட்டு வந்து ரகளை பண்ணுவதையும், முத்தாத்தா கண்ணால் ஜலம்விட்டு அழுவதையும்நீளமாய் கூறினான். கேட்க, கேட்க என் மனசு கனத்துப் போனது.

நன்றாய் வாழ வேண்டிய குடும்பம் அறியாமையால் சீரழிந்து போகிறதே என்ற வேதனையால் விடாமல் நாலு நாட்களாய் நான் அவஸ்தைப்பட்டதற்குச் சிகரம் வைத்தாற்போல் அன்று காலை தூங்கி எழுந்ததும் அந்தச் சேதி காதில் விழுந்தது.

வெறும் வயிற்றில் சாராயத்தையதிகமாய்க் குடித்துவிட்டு, பிதற்றலும், தள்ளாட்டலுமுமாய் வீட்டுக்குப் புறப்பட்ட வேலாயுதம் கண்மண் தெரியாமல் வந்த லாரியின் அகோரப் பசிக்கு இரையாக, இருட்டை சாதகமாக்கிக் கொண்டு லாரிக்காரன் நிற்காமல் ஓட, அப்புறம் என்ன? வேலாயுதத்தின் கதை இப்படித் தான் யாரும் எதிர்பார்க்காத வகையில்



சென்னை டி.யு.சி.எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த காமதேனு கூட்டுறவு சிறப் பங்காடியின் புதிய கட்டடத்திற்கு மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் 7.9.82ல் அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் உடன் உள்ளார்.

முதல்நாள் இரவே முடிந்திருந்தது.

தொழிற்சாலை நண்பர்களும் இதர குடிசை வாசிகளுமாய்ச் சேர்ந்து, எக்கச்சக்கமாய் வேட்டுவாணம் வெடித்து, மோளம் கொட்டி, பூப்பல்லக்கில் வேலாயுதத்தைத்தூக்கிச் சென்றுபுதைத்தார்கள்; அதன்பின், சுத்தமாய் அவனை மறந்து போனார்கள்.

அடுத்து வந்த மாசங்களில் மளமளவென்று முத்தாத்தாளின் குடும்பம் சந்திக்கு வந்து நாற்றமாய் நாறத் தொடங்கியது.

பிரசவம் ஆனதிலிருந்து விடாமல் உதிரம் பட்டுக் கொண்டிருந்ததோடு, கணவன் இறந்த அதிர்ச்சியும் சேர்ந்து கொள்ள நடமாடும் சக்தி கூட இல்லாமல் முத்தாத்தா ஒடுங்கிப் போக, மூத்தவன் பொறுப்பில்லாமல் மாமா வீட்டோடு உட்கார்ந்துகொள்ள, சினிமா சான்ஸ் வாங்கித் தருகிறேன் என்று யாரோ ஆசை காட்டியதில் பதிமூன்று வயசு ஏழுமலை கறவை மாடு ஒன்றை ராவோடு ராவாக கால் விலையில் விற்று, பணத்துடன் ஓடிப்போக, இரண்டாங் கெட்டான் ஜோதி என்னைத் தேடிக் கொண்டுவந்து ஒருநாள் அத்தனையும் சொல்லி விட்டு பிழியப் பிழிய அழுதது.

''காரியம் பண்ணறேன், அது செய்யறேன்னு வந்து உட்கார்ந்திட்டு உறவுக்காரங்க நெல்லு, கேவரகு, அத்தனையும் சுத்தமா காலி செய்திட்டு போயிட்டாங்க. வைச்சி சாப்பிட சாமான் எதுவுமில்லே... கம்பெனி பணமும் வரலை. அம்மாவுக்குக் காய்ச்சல். மாடு கறக்க எனக்குத் தெரியலை தம்பிங்க ஒண்ணும் புரியாம அழுவுதுங்க... நா என்னாங்க பண்ணுவேன்......'' என்று வெடித்துக் கதறியது.

என் கணவரிடம் கலந்துபேசிவிட்டு நூறு ரூபாய் பணத்தையும், காய்ச்சலுக்கான மாத்திரையையும் ஜோதியிடம் கொடுத்தேன்.

''போய் பத்து நாளைக்குத் தேவையான மளிகைச் சாமானை வாங்கிட்டு வந்து, முதல்ல வயிறார சாப்பிடுங்க..இந்த மாத்திரைகளை அம்மா கிட்ட கொடுத்து டீ வைச்சி சாப்பிடச் சொல்லு, ரொட்டி வேணா வாங்கிக் கொடு. கொஞ்சம் உடம்பு முடிஞ்சா என்னை வந்து பார்க்கச் சொல்லு....''

ஜோதி மூக்கையும், கண்ணையும் துடைத்துக் கொண்டு புறப்பட கூடத்துக்கு வந்து நாற்காலியில் அமர்ந்தேன்.

முத்தாத்தாவையும், அவள் குடும்பத்தையும் நினைக்கையில் பெருங்குடல் முடிச்சுப் போட்டுக் கொண்டது.

முத்தாத்தா மாதிரி இந்த நாட்டில் இன்னும் எத்தனை ஆயிரம், லட்சம் பேர்கள் தம் தலையில் தாங்களே மண்ணை வாறிப் போட்டுக் கொள்கிறார்கள்?

குடும்பத்தைக் கட்டுப்படுத்துவது முக்கியம், பிறந்ததை நன்றாகப் பேணி வளர்ப்பது கடமை என்பதை என்றைக்கு இந்த நாட்டு மக்கள் உணரப் போகிறார்கள்?

மரம் வைப்பவன் தண்ணீர் ஊற்றாமல் விடுவானா? என்று பழமொழி பேசிப் பொறுப்பை உதறுவது தவறு! தேர்ந்த விதைகளை விதைத்து, தண்ணீர் ஊற்றி அக்கறையுடன் விவசாயி பராமரிக்க, கடவுள் கிருபையால் நல்ல மகசூல் கிடைப்பது போல, குழந்தைகளைப் பெறுவதும், வளர்ப்பதும் பெற்றவர் பொறுப்புதான், அவன் நல்ல குணவானாக, புத்திமானாக வாழ வேண்டுமானால் கடவுளின் துணையை வேண்டலாம் என்பதை எல்லாரும் என்று ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்? நாட்டின் பல பிரச்சினைகளுக்கு இந்த ஜனத்தொகைப் பெருக்கம் அடிப்படைக் காரணமாக இருப்பதையும், தனி மனிதன் கட்டுப்பாட்டால் குடும்ப நலனுண்டாகும் என்பதையும் குடும்ப நலத்தால் சமுதாயம் வளம் பெறும். சமுதாய வளத்தால் நாடே மேன்மையுறும் என்பதையும் என்று இந்நாட்டு மக்கள் உணர்ந்து செயலாற்றப் போகிறார்கள் ?

என்னென்னமோ கேள்விகள் மனசைப் பிராண்டிய வேகத்தில் கண்ணோரங்களில் நீர் திரண்டு விட, அதை மறைக்கும் பாவனையுடன் நான் தலை குனிந்து கண்களை மூடிக் கொள்கிறேன்.

# தமிழ்நாடு வனவிலங்கு உய்விடங்கள்!



அட்டை சொல்லும் செய்தி!

தமிழ்நாடு மாநிலம் 1,30,069 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு உடையது. அதில் 20,910 சதுர கிலோ மீட்டர் மட்டுமே-அதாவது மொத்த நிலப்பகுதியில் 16 சதவீதம்-வனப்பகுதியாக உள்ளது. தமிழ்நாட்டின் இயற்கையமைப்பு வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலை பிரம்மாண்டமானதொரு மலைத் தொடராகும். அந்த மலைத் தொடரில்தான் 2,633 மீட்டர் உயரமுள்ள தொட்டபெட்டா சிகரம் உள்ளது. அதே சமயத்தில் இராமநாதபுரம் மாவட்டம் ஏறக்குறைய பாலைவன சீதோஷ்ண நிலையைக் கொண்டுள்ளது. அதன் கரைநெடுகிலும் சதுப்பு நிலக்காடுகள் மண்டியுள்ளன. அங்கு விசேஷ வகைத் தாவரங்கள் தென்படுகின்றன. இவ்வாறாக மாநிலத்தில் எண்ணற்ற வகைக் காடுகள் காணப்படுகின்றன.

புலி, சிறுத்தைப்புலி, காட்டெருது, கடமான் வகை, ஸ்லாத் பேர் (Sloth Bear) சிறுத்தை, பிளாக் பக் (Black Buck), நான்கு கொம்புகளையுடைய மறிமான், நீலகிரிக் குரங்கு, நீலகிரி காட்டாடு, சிங்கவால் குரங்கு முதலியவை உட்பட பல்வகை விலங்குகளும், எண்ணிறந்த பறவைகளும் ஊர்வனவும் வாழுமிடமாக இந்த வனங்கள் உள்ளன.

1972ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்புச்) சட்டம் செயல்படுத்தியதன் விளைவாக, வன விலங்குக் காப்பாளர்களை நியமித்ததன் மூலமும், தனி வன விலங்குப் பிரிவு ஒன்றை அமைத்ததன் மூலமும், தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. தங்களுடைய அதிகார வரம்பின் கீழுள்ள அனைத்து வன விலங்குகளுக்கும் முழுப்பாதுகாப்பு அளிப்பதே வன விலங்குக் காப்பாளர்களின் முக்கிய பணியாகும். புது உய்விடங்களும் ஏற்படுத்தப்பட்டன.

வளர்ச்சி என்கிற பெயரால் பாதிக்கப்படுகின்ற இயற்கைக்கூறு என்னவென்றால், வனங்களும் வன விலங்குகளுமே என்று ஐயமறக் கூறலாம். இந்த இனங்கள் ஒரு முறை அழிந்துவிட்டால், அழிந்ததுதான் என்பதை உணர்ந்து தமிழ்நாடு அரசு வன விலங்கு உய்விடங்களாக சில பெரும்பகுதிகளை ஒதுக்கியுள்ளது.

உய்விடங்கள் எட்டும், நீர் வாழ் பறவைகள் வாழுமிடம் 17ம் உள்ளன. இந்த உய்விடங்களின் பரப்பு மொத்த வனப்பரப்பில் 10 சதவீதத்திற்குச் சற்று அதிகமாகும். இது இந்தியாவில் பிற மாநிலங்களைக் காட்டிலும் மிக அதிகமான பரப்பளவாகும்.



## முதுமலை வன விலங்கு உய்விடம்

**இடம்**

நீலகிரி மாவட்டம். உதகமண்டலம்-மைசூர் சாலையில் உதகமண்டலத்திலிருந்து 65 கி.மீ. தொலைவில் உள்ளது.

**பரப்பளவு**

321 ச.கி. மீட்டர்.

**வனவகை**

முதலில் ஈரக்கசிவுள்ள இலையுதிர் காடுகளாக இருந்து, பானிபூரை நெருங்க நெருங்க வறண்ட இலையுதிர் காடுகளாக உள்ளது. மூங்கில்களுடன் முக்கியமாகத் தேக்கு மரக் காடுகள் பல்வகை இன மரங்களும் உள்ளன.

**காணக்கிடைக்கக்கூடிய விலங்குகள்**

புலி, சிறுத்தைப்புலி, யானை, காட்டெருது, கடமான் வகை, புள்ளிமான் வகை, கடால் (Dhole), பார்க்கிங் டீயர் (Barking Deer), கொம்புகளையுடைய வனமான் வகை, ஸ்லாத் பேர் (Sloth bear), மலைப்பாம்பு, நீர் நாய், முதலைகள் ( Mugger ), பல வகைப் பறவைகளும், ஊர்வனவும்.

**மழை அளவு.**

900 மி.மீ.-1800 மி.மீ.





**அருகிலுள்ள விமான நிலையம்**

கோயம்புத்தூர்-160 கி.மீ.

**அருகிலுள்ள ரயில்நிலையம்**

உதகமண்டலம் -64 கி.மீ.
மைசூர் -95 கி.மீ.

**சிறந்த பருவம்**

பிப்ரவரிக்கும் ஜூனுக்கும் இடையிலுள்ள காலம்

**இட வசதிகள்**

அபயாரண்யம், கார்குடி, மசினகுடி, சில்வன் லாட்ஜ், ஆகிய இடங்களில் ஓய்வுமாளிகைகளும், தெப்பக்காட்டில் மர வீடுகளும் உள்ளன. வாடகைக்குக் கூடாரங்களும் கிடைக்கும். உணவு வசதிகள் உள்ளன.

**ஏனைய வசதிகள்**

வாடகைக்கு மோட்டார் வண்டிகளும் யானைகளும் கிடைக்கும்.

## கோடிக்கரை வன விலங்கு உய்விடம்

**இடம்**

தஞ்சாவூர் மாவட்டம்.

**பரப்பளவு**

17.26 ச.கி.மீ.

**வனவகை**

சதுப்பு நிலக்காடுகளும், வறண்ட பசுமைக்காடுகளும் உள்ளன.



**காணக்கிடைக்கக்கூடிய விலங்குகள்**

உய்விடம், கோனை மூக்கு நாரைகளுக்கும், பிளாக் பக் (Black Buck)கும் புகழ் வாய்ந்தது. சிறவிகள், கடல் குருவிகள், கடல் ஆலா, நண்டு தின்னும் கோட்டான், உள்ளான்கள் முதலியவைகள் போன்ற நீர் வாழ் பறவைகளின் கூட்டத்தை குளிர் காலத்திலும் பார்க்கலாம். புள்ளிமான் வகை, காட்டுப்பன்றிகள் முதலியவை உட்பட ஏனைய பாலூட்டிகள்.

**மழை அளவு.**

1300 மி.மீ. முதல் 1500 மி.மீ.வரை

**அருகிலுள்ள விமான நிலையம்**

திருச்சிராப்பள்ளி-230 கி.மீ.

**அருகிலுள்ள இரயில் நிலையம்**

கோடிக்கரை-0.5 கி.மீ.

**சிறந்த பருவம்**

நீர்வாழ் பறவைகளுக்கு நவம்பர் முதல் பிப்ரவரி வரை. பிளாக் பக் (Black Buck) புள்ளிமான் ஆகியவைகளுக்கு ஆண்டு முழுவதும்.

**இடவசதி**

கோடிக்கரையிலுள்ள வன ஓய்வு மாளிகை. உணவு வசதிகள் உள்ளன.



## வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம்

**இடம்**

செங்கல்பட்டு மாவட்டம் -சென்னையிலிருந்து 86 கி.மீ.

**பரப்பளவு**
**வனவகை**

0.3 ச.கி.மீட்டர்
பேரிங்டோனியா ( Barringtonia ) மரங்கள் நிறைந்த ஏரி

**காணக்கிடைக்கக்கூடிய விலங்குகள்**

இந்த உய்விடம் பறவைகள் கூடி முட்டையிட்டு குஞ்சு பொறிக்கக் கூடிய வசதிகள் நிறைந்த கார்மோரன்ஸ், ( Cormorants ) சக்ரெட்ஸ் (Egrets), சாம்பல் நிறக்கொக்குகள் ஹெரான்ஸ் (Herons) அகலவாய் கொக்குகள் (Open Billed Storks) டார்ட்டர் (Darter) ஸ்பூன்பில் (Spoon Bills) வெள்ளை இப்பீஸ் (White Ibis) நைட் ஹெரான், (Night Heron) கிரிபி (Crebe) கிரே (Grey) பெலிகன் (Pelican) முதலியன. இது தவிர கார்கானிகிரஷகள் (Garganey) சோவெலர்ஸ் (Shovellers) துடுப்பு வாழ் பறவைகள் (Pintails) வாத்துக்கள், உள்ளான்கள் (Stilts) சேண்டு பைப்பர்ஸ் (SandPipers) முதலிய இடம் மாறும் பறவைகளும் உண்டு. இது தவிர, இங்கேயே இருக்கக் கூடிய கூட்ஸ் (Coots) கடல் ஆலா (Terns) நீர்க்கோழி (Moor Hens) ஆகிய பறவைகளையும் காணலாம்.



**மழையளவு**

1200 மி.மீ. ஒரு ஆண்டுக்கு

**அருகிலுள்ள விமான நிலையம்**

சென்னை-70 கி.மீட்டர்.

**அருகிலுள்ள புகைவண்டி நிலையம்**

கருங்குழி-10 கி.மீட்டர்.

**சிறந்த பருவம்**

நவம்பர் முதல் பிப்ரவரி வரை.



## ஆனைமலை வன விலங்கு உய்விடம்

**இடம்**

கோயம்புத்தூர் மாவட்டம்
கோயம்புத்தூரிலிருந்து 60 கி.மீ.

**பரப்பளவு**

958 ச.கி.மீட்டர்

**வனவகை**

இலையுதிர் காடுகளிலிருந்து ஓரளவு

ஆண்டு முழுவதும் பசுமையாக இருக்கும் காடுகள் வரை பல்வேறு காடுகள் உள்ளன. ஆண்டு முழுவதும் பசுமையாக இருக்கும் காடுகளில் தேக்கும் பல்வகை இன மரங்களும் உள்ளன.

**காணக்கிடைக்கக் கூடிய விலங்குகள்**

யானை, காட்டெருது, புலி, சிறுத்தைப்புலி, ஸ்லாத் பேர் (Sloth Bear) காட்டுப் பன்றி, காட்டு நாய், நீலகிரி குரங்கு, சிங்கவால் குரங்கு, கடமான் வகை, நான்கு கொம்புகளுடைய மறிமான், புள்ளிமான் முதலியனவும், பறவைகளின் கூட்டமும் உள்ளது.

**மழை அளவு.**

500 மி.மீ. முதல் 5000 மி.மீ.வரை கிழக்குச்சரிவுகளில் குறைவான மழை மேற்குச் சரிவுகளில் பலத்த மழை.

**அருகிலுள்ள ரயில் நிலையம்**

பொள்ளாச்சி-35 கி.மீ.

**சிறந்த பருவம்**

ஏப்ரல் முதல் ஜூன் வரை

## முண்டன்துறை வன விலங்கு உய்விடம்

**இடம்**

திருநெல்வேலி மாவட்டம்

**பரப்பளவு**

567 ச.கி.மீட்டர்

**வனவகை**

வறண்ட இலையுதிர் காடுகள்

**காணக்கிடைக்கக் கூடிய விலங்குகள்**

புலி, குரங்குகள், குரங்குகள் (Langurs) ஸ்லென்டர் லோரிஸ் (Slender loris) ஸ்லாத் பேர், கடமான் வகை, புள்ளிமான் வகை காட்டு நாய் முதலியவைகள். பறவைகளைப் பார்ப்பதற்குச் சிறந்த பகுதி.

**அருகிலுள்ள இரயில்நிலையம்**

அம்பாசமுத்திரம்-45 கி.மீ.

**சிறந்த பருவம்**

அக்டோபர் முதல் சனவரி வரை

## களக்காடு வன விலங்கு உய்விடம்

**இடம்**

திருநெல்வேலி மாவட்டம்.

**பரப்பளவு**

223 ச.கி.மீ.



**வனவகை**

குன்றுகளின் அடிவாரத்திலிருந்து முட்காடுகள் வரையில் பசுமையாக இருந்த காடுகள் வறண்ட இலையுதிர் காடுகவாக மாறியுள்ளன.

**காணக்கிடைக்கக்கூடிய விலங்குகள்**

சிங்கவால் குரங்குகளுக்கு புகழ் வாய்ந்த இடம். ஓரிடத்தில் நான்கு வகைக் குரங்குகளையும் (சாதாரணக் குரங்கு, நீலகிரிக்குரங்கு, பானெட் மெகாக் (Bonnet Macaque), சிங்கவால் குரங்கு) ஒரு சேரக் காணலாம். நீலகிரி காட்டாடு, கடமான் வகை, ஸ்லாத் பேர் (Sloth Bear), காட்டெருது, யானை, புலி, பறக்கும் அணில், சிறுத்தைப் புலி, காட்டு நாய், பான்கோலின் (Pangolin) உட்பட ஏனைய விலங்குகள் பல்வகைப் பறவைகளும், ஊர்வனவும்.

**அருகிலுள்ள இரயில் நிலையம்**

சேரன்மகாதேவி-20 கி.மீ.

**சிறந்த பருவம்**

செப்டம்பர் முதல் மார்ச் வரை

## வேட்டங்குடி நீர்ப் பறவைகள் உய்விடம்

**இடம்..** இராமநாதபுரம் மாவட்டம்-மதுரையிலிருந்து 55 கி.மீ. சிறிய ஏரி

**வனவகை** பாபுல் ( Babul ) மரங்கள் நிறைந்துள்ளன.

**காணக்கிடைக்கக் கூடிய விலங்குகள் . . .** கார்மிராண்ட்ஸ் ( Cormorants ) கெரான்ஸ் ( Herons ) சக்கிரட்ஸ் (Egrets) ஸ்பூன் பில்ஸ் (Spoon Bills) முதலியன.

**அருகிலுள்ள புகைவண்டி நிலையம்** காரைக்குடி-26 கி.மீ.

## கிண்டி தேசீய பூங்கா

**இடம்.**

சென்னை நகரம்

**பரப்பளவு**

2.82 ச.கி.மீட்டர்

**வனவகை**

முட்புதர்கள் நிறைந்த வனம்

**காணக்கிடைக்கக்கூடிய விலங்குகள்**

பிளாக் பக் (Black Buck), புள்ளி மான், குள்ள நரிகள், பாங்கோலின் ( Pongolin ) மற்றும் பலவகை பறவைகள்.

**சிறந்த பருவம்**

ஆண்டு முழுவதும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





முகவரி : தமிழரசு அலுவலகம், ...





அண்ணல் காந்தியடிகளின் 114-வது பிறந்த நாளான 2.10.'82 காலையில் சென்னைக் கடற்கரையிலுள்ள காந்தியடிகள் சிலைக்கு மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக தமிழ் நாடு மின் வாரிய அலுவலர்கள் சார்பில் மின்வாரியத் தலைவர் திரு பி. முராரி, இ.ஆ.ப. அவர்கள் ரூ 1,02,000-க்கான காசோலையையும், மின்வாரியப் பொறியாளர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு எ. பி. கந்தப்பன் ரூ 1,00,001-க்கான காசோலையையும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 1.10.'82 அன்று வழங்கினார்கள். மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு எஸ்.ராமச்சந்திரன் அவர்களும் உடனிருந்தார்.

# குழந்தைகளைக் காக்கும் அரசு



கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மாதவலாயம் சத்துணவு மையத்தில் 13-9-82ல் மேதகு ஆளுநர் அவர்கள், குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குகிறார்.

மனித சமுதாயத்தின் எதிர்காலம் குழந்தைகளின் சிறப்பான வளர்ச்சியில் தான் இருக்கிறது. அதற்காகத்தான் உலகம் முழுவதும் குழந்தைகள் ஆண்டு கொண்டாடப்பட்டது. குழந்தைகளுக்கான நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

தமிழகத்தைப் பொறுத்தவரை குழந்தைகளுக்காகச் சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

மகப்பேறு மருத்துவ மனைகளும் குழந்தைகள் மருத்துவ மனைகளும் அதிகமாகி இருக்கின்றன. தடுப்பூசிகளும், சொட்டு மருந்துகளும் பொது நிறுவனங்கள் மூலம் குழந்தைகளுக்குப் போடப்படுகின்றன.

எல்லாவற்றையும் விடச் சிறப்பாக சத்துணவுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இத்தகைய நடவடிக்கைகளால் குழந்தைகளைப் பாதுகாக்கத் தமிழக அரசு நல்ல பணிகளைச் செய்து வருகிறது.

[மேதகு ஆளுநர் திரு. எஸ். எல். குரானா அவர்கள் குழந்தைகள் அறக்கட்டளை சார்பில் கட்டப்படும் மருத்துவமனையின் அடிக்கல் நாட்டு விழாவில் (4.10.'82) ஆற்றிய உரையிலிருந்து].


தமிழரசு

மலர் : 13 இதழ் : 8

16-10-1982

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — புரட்டாசி 30


## அட்டைப்படத்தில்

வனவிலங்கு வார விழாவில்

மேதகு ஆளுநர் அவர்களும்

மாண்புமிகு முதல்வர் அவர்களும்



# குன்றாப் புகழ்க் குற்றால முனிவர்

பத்தொன்பதா்ம நூற்றாண்டு தமிழகத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கிய நூற்றாண்டாகும். அதிலும், தாம் 'நூற்றாண்டின் இறுதிப் பகுதி, இருப பகுதியாகும்' நூற்றாண்டிற்குப் பெருமை சேர்த்த பகுதியாகும்.

ஆம்; அந்தக் காலக்கட்டத்திலேதான் இந்த நூற்றாண்டின் இந்தியத் துணைக்கண்ட மக்களுக்கு—குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெருமையைச் சேர்த்த பேரறிஞர்கள், விடுதலை வீரர்கள், தமிழ்ச் சான்றோர்கள் தோன்றி நமது வாழ்நாளிலே வாழ்ந்து நமக்கெல்லாம் வழிகாட்டிவிட்டு மறைந்திருக்கிறார்கள்.

அத்தகைய மாபெரும் தமிழ்ப் பெரியார்களில் ஒருவராக வாழ்ந்து மறைந்த மாமனிதர் தான் ரசிகமணி திரு டி.கே.சி. அவர்கள்.

''டி.கே.சி.'' என்றும், ''ரசிகமணி'' என்றும், ''குற்றால முனிவர்'' என்றும் அன்போடு அழைக்கப்பெற்ற இந்தப் பெருமகனார் தமிழறிஞர்களிலே ஒரு வள்ளலாகவும், தமிழ் வள்ளல்களிலே ஒரு புலவராகவும் விளங்கிய பெருமைக்குரியவராவார்.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் நாட்டின் நுண்கலைகள் ஆகிய அனைத்திற்கும் ஒரு சின்னமாக விளங்கியவர் டி.கே.சி. தமது வாழ்வு முழுவதையும் முத்தமிழ் பரப்பும் தொண்டுக்காகவே செலவிட்டு, வாழ்நாள் முழுவதும் ''தமிழ் ''தமிழ்'' ''தமிழ்'' என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்து மறைந்த தமிழ்ப் பெருமகன் ரசிகமணி டி.கே.சி.

அந்தக் காலத்தில், படித்த மக்களிடையே ஆங்கில மோகம் தலை தூக்கி நின்றது. தமிழிலே எழுதுவதும், பேசுவதும் கவுரவக் குறைவு என்ற அடிமை மனப்பான்மை படித்த மக்களிடையே காணப்பட்ட காலம். இந்தச் சூழ்நிலையில், வழக்கறிஞர் பட்டம் பெற்றவரும், ஆங்கில இலக்கியங்களை ஆழ்ந்து கற்றவருமான டி.கே.சி. ஊக்கத்தோடு தமிழ் மறுமலர்ச்சிப் பணியினைச் செய்யத் தொடங்கினார்.

தனது வீட்டின் பெரிய முற்றத்தில் உள்ள வட்டமான தொட்டியிலே அமர்ந்து இலக்கிய ஆய்வுகளை நடத்தும் முறையை அறிமுகப் படுத்தினார். அதனால், 'வட்டத் தொட்டி' என்ற பெயரும் உருவாயிற்று. அவருடைய வட்டத் தொட்டியிலே, வழக்கறிஞர்கள், ஆங்கிலப் பேராசிரியர்கள், நீதிபதிகள், அரசியல் தலைவர்கள், சமுதாய நிலையிலே பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள் போன்ற பலதரத்தினரும் வந்து கலந்துகொண்டார்கள். இதனால் டி.கே.சியின் 'வட்டத்தொட்டிக்கு' மக்களிடையே ஓர் மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டது.

தமிழைப் புறக்கணித்து ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருந்தவர்கள் எல்லாம் மதிப்பும் ஆர்வமும் கொண்டு டி.கே.சி.யின் தமிழ் மறுமலர்ச்சிப் பணிக்கு ஆதரவு தந்தார்கள். இதனால், மூதறிஞர் ராஜாஜி, ஒரு முறை வட்டத் தொட்டியைத் 'தமிழுக்குக் கிடைத்த வீரசேனை' என்றே அழைத்தார்.

'வட்டத் தொட்டியின் மூலம் டி.கே.சி. செய்து வந்த தமிழ்த் தொண்டோடு கூடவே திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பெரிய செல்வந்தர் என்ற முறையிலே அவர் அரசியலிலும் ஈடுபட்டார்.

அந்தக் காலத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில், நீதிக் கட்சியானது மிகவும் செல்வாக்குப் பெற்று பரவி இருந்தது. எனவே 1927 முதல் 1930 வரையில் டி.கே.சி. நீதிக் கட்சியின் சார்பில் சட்டமன்ற மேலவையில் உறுப்பினராகப் பணியாற்றினார். அப்போது டி.கே.சியின் தமிழ்ப்பணி சென்னையிலும் பரவியது.

1930 முதல் 1935 வரை, டி.கே.சி. சென்னையில் அறநிலைய ஆணையாளராகவும் பணிபுரிந்தார். கோவில்களை ஒட்டி வளர்ந்த அருங்கலைகளான பரத நாட்டியத்திலும், திருமுறை தமிழிசையிலும் டி.கே.சி. ஒரு மறு மலர்ச்சியை உண்டாக்கினார். கோவில்களையே சார்ந்து வளர்ந்த இந்தக் கலைகளை, இசை அரங்குகளிலும், சபைகளிலும் வளர்ப்பதற்குரிய முறையில் பல வழிவகைகளை டி.கே.சி. உருவாக்கினார். செட்டி நாட்டரசர் அண்ணாமலையார் அவர்களின் துணையோடு தமிழ்நாட்டின் தமிழ் இசையின் மறு விழிப்பிற்கு வழி வகுத்த பெருமை டி.கே.சி. அவர்களையே சாரும்.

அவருடைய முயற்சியினால், தமிழிசை இயக்கமும், பரதநாட்டிய மறுமலர்ச்சியும் வேகமாகச் செயல்பட்டதோடு, பல அரசியல் தலைவர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், செல்வந்தர்களும், இந்த இயக்கத்தில் முழு மனத்தோடு கலந்துகொள்ளும் நிலையும் ஏற்பட்டது.

அவரது 'வட்டத் தொட்டி'யிலே, இலக்கியம், கலைகள் ஆகியவற்றைத் தவிர வேறு எவ்விதமான கட்சி அரசியலுக்கும் டி.கே.சி. இடம் கொடுக்க மாட்டார். இதனால், அவருடைய 'வட்டத் தொட்டி'யிலே தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், திரு ஆர். கே. சண்முகம் செட்டியார், திரு.பி.டி. இராஜன் போன்ற



பெரும் தலைவர்களெல்லாம் 'முத்தமிழ்' என்ற ஒரே பிணைப்பில் கட்டுண்டு கட்சி வேறுபாடு, சாதி சமய வேறுபாடு இன்றிச் சரிநிகர் சமமாகக் கலந்து உரையாடுகிற நிலை உருவாகியது.

தம்முடைய இளமைக் காலத்தில் டி.கே.சி. பல தமிழ்ப்பாடல்களைத் தாமே இயற்றினார். பிற்காலத்தில், தாமே பாடல்களைப் புனைவதைவிட, தமிழ் மொழியில் உள்ள பழம் பாடல்களை மக்கள் சுவைக்கும்படி விளக்குவதே சிறந்த தொண்டு என்று கருதி அதையே தமது வாழ்வுப் பணியாகக் கொண்டார். தம் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கம்பராமாயண ஆராய்ச்சியிலே செலவிட்டு, புதிய பதிப்புகளை வெளியிட்டார். கம்பருடைய பாடல்களை இதயம் தோய்ந்து அனுபவித்த காரணத்தால் கம்பருடைய தனிப் படிவத்தை அவர் இனங்கண்டு கொண்டார். வழக்கத்தில் உள்ள கம்பராமாயணப் பதிப்புகளில் இடைச்செருகல் ஏராளமாக இருப்பதை அவரால் கண்டுகொள்ள முடிந்தது. வேறு யாருக்கும் ஏற்படாத துணிவோடு இந்த இடைச்செருகுக் கவிதைகளை எல்லாம் தயக்கம் இன்றிக்களைந்து விட்டு மிச்சம் உள்ள பாடல்களை மட்டுமே கொண்ட புதிய பதிப்பை அவர் வெளியிட்டார்.

டி.கே.சி. செய்து வந்த இலக்கியத் தொண்டில் ஒரு பெரிய சிறப்பு என்னவென்றால், அவருடைய தமிழ், படித்தவருக்கும், பாமரருக்கும் புரிகிற எளிய தமிழாக இருந்தது. பேச்சுத் தமிழை இலக்கிய விளக்கத்திற்குப் பயன்படுத்தி வெற்றி பெறலாம் என்பதை மெய்ப்பித்த டி.கே.சி., அதோடு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை என்றுபாடல்களுக்கு விளக்கம் சொல்கிற முறையை மாற்றி இலக்கியத்தை மக்கள் ரசிக்கும்படியாக இலக்கிய ஆனந்தத்தோடு வழங்குகிற ஒரு புதிய முறையை டி.கே.சி. கையாண்டார். இதனால் அவருடைய சொற்பொழிவுகளும், கட்டுரைகளும், விறுவிறுப்பும், உயிர்த்துடிப்பும் ஒரு தனித்தன்மையும் கொண்டு விளங்கின.

தமிழ் மொழியில் இலக்கியங்களை அனுபவித்து வருவதோடு மட்டும் அல்லாமல், எல்லா அறிவியல் கலைகளையும், தமிழிலேயே கற்பிக்க முடியும் என்று உறுதியாக நம்பியவர் டி.கே.சி.

தாய்மொழி மூலம் அறிவியல் கலைகளைக் கற்பிக்க வேண்டுமென ஓர் இயக்கம் தொடங்கியபோது அந்த முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தேடித் தந்தவர் டி.கே.சி. பல ஆண்டுகளுக்கு முன்பு தாய்மொழிக் கல்வி பற்றி சென்னைப்பல்கலைக் கழகத்தில் ஆங்கில அறிஞர்கள் அடங்கிய உட்குழுவிற்கு டி.கே.சி. அளித்த சான்றுரையானது சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றிலேயே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சான்று மொழியாக விளங்குகிறது.

---


மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்

## இராம. வீரப்பன்


---

இன்று நம்மிடையே பண்பாடு என்ற சொல் நன்றாக வழங்கி வருகிறது. 45 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தச் சொல்லை முதன்முதலில் ஆக்கித் தந்தவர் டி.கே.சி. அவர்கள்தான். அதுவரை 'கல்ச்சர்' என்ற ஆங்கிலச் சொல்லுக்குக் கலாச்சாரம் என்றும், கலாசாரம் என்றும் கூறிவந்தார்கள். அந்தச் சொல்களுக்குப் பதிலாகப் 'பண்பாடு' என்ற சொல்லை முதன்முதலாக வழங்கிய டி.கே.சி. அந்தப் பண்பாட்டைத் தமது வாழ்விலும் கடைப்பிடித்து வந்தார்.

அவருடைய வீடு அடையா நெடுங்கதவும் அன்பான வரவேற்பும், இரவும் பகலும் விருந்துமாகவே திகழ்ந்தது. அங்கே, இலக்கிய விருந்தோடு கூட அறுசுவை உண்டியும் வலம் வந்த வண்ணமாகவே இருக்கும்.

இயல், இசை, நாடகத் துறையில் அவருடைய ஆதரவில் முன்னேறியவர்கள் ஏராளம். பழந்தமிழ் இலக்கியம் தவிர, நாட்டுப் பாடல்கள், வில்லுப்பாட்டு போன்ற நாட்டுப் புறக் கலைகள், கிராம நாடகங்கள் ஆகிய பல்துறையிலும் அவருடைய ஆதரவினால் பல கலைஞர்கள் வளர்ந்து வந்துள்ளதை நாடு நன்கு அறியும். ஆங்கிலத்திற்கு அடிமையாக இருந்த பலரை, தமிழ்த் தொண்டர்களாக மாற்றிய பெருமையும் டி.கே.சிக்கு உண்டு.

ஒரு சமயம் மூதறிஞர் ராஜாஜி அவர்கள், ''என்னைப் போன்ற ஒருவனையும் கூட தமிழார்வம் கொள்ளச் செய்தவர் டி.கே.சி. தான்; இதைப் பலர் அறியச் சொல்கிறேன். உபசாரம் அல்ல உண்மை'' என்று ஒரு கட்டுரையிலே எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

''டி.கே.சி. என்று ஒருவன் இருந்தான்- தமிழ், உலகத்திலேயே சிறந்த பாஷை... தமிழ்க்கவியைப் போல உயர்ந்த கவி உலகிலே இல்லை என்று சொல்லிக் கொண்டே இருந்தான்' என்பதை நீங்கள் எடுத்துச் சொல்லிவர வேண்டும். அப்படிச் செய்து வந்தீர்களானால் 500 ஆண்டுகளுக்குப் பிறகு உலகம் இதை ஒப்புக் கொள்ளும்''-என்று, தான் மறையும் முன்பு சமீபத்தில் நம்மை விட்டுப் பிரிந்த நீதிபதி மகராஜன் அவர்களிடம் கடைசி வேண்டுகோளாக ரசிகமணி டி.கே.சி. அவர்க்ள் விடுத்தார்கள் என்ற செய்தியைக் கேட்கும்போது தமிழுக்காகவே வாழ்ந்த தனிப்பெரும் தலைவர்களில் ஒருவராக டி.கே.சி. அவர்கள் விளங்கியதை நாம் உணரமுடியும்.

மகாகவி பாரதியும் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம். யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் ...பூமிதனில்' யாங்கணுமே பிறந்ததில்லை ''என்றுதான் முழக்கமிட்டான்.

ஒரே காலத்தில் வாழ்ந்த மகாகவி பாரதியின் குரலையே கவிமணி டி.கே.சி.யும் ஒலிக்கிறார் என்பதை அறியும்போது, தமிழைக் காக்கும் போராட்டம் நூறாண்டுக்காலமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் உணருகிறோம்.

ஆம்! ஆங்கிலேயர்கள் ஆட்சியில் ஆங்கிலம் மரியாதைக்குரிய மொழியாக, ஆட்சி மொழியாக, ஆதிக்க மொழியாக விளங்கிய போது ரசிகமணி டி.கே.சி. போன்றவர்கள் ''தமிழ்'' ''தமிழ்'' என்று முழங்கி நமக்கு வழிகாட்டி விட்டுச் சென்றுள்ளார்கள். அதனால்தான்:

என்னருமை நண்பா, 'இனியகலை ரசிகா
தென்னர் தமிழ் வளர்க்கும் தேசிகா,
நன்னயச்
சீலயம் சிறந்த சிதம்பரநாத வள்ளால்
சால நீ வாழ்க, தழைத்து'....என்று

கவிமணி தேசிக விநாயகனார் ரசிகமணியை வாழ்த்துகின்றார்.

நம்முடைய வாழ்நாளில் யாரும் ரசிகமணி என்று அழைக்கப்பட்டதில்லை. உயர்ந்த சிந்தனையாளன், நிறைந்த அறிஞன். தேர்ந்த விஞ்ஞானி, சிறந்த கலைஞன், பெரும்புலவன் யாராக இருந்தாலும் அவன் ஒரு ரசிகனாக இருந்தாக வேண்டும். ரசிக்கத் தெரிந்தவன் தான் சிறந்த மனிதனாக மதிக்கப்படுவான். ரசனை இல்லாதவன் மரமாகவே எண்ணப்படுவானே தவிர, மனிதனாகக் கருதப்படமாட்டான். 'என்ன, கல்லைப்போல இருக்கிறானே' என்று சாதாரணமாக நடைமுறை வழக்கில் சிலரைச் சுட்டிக்காட்டுவதே அந்த அடிப்படையில்தான்.....

அதனால்தான் மனிதனுக்கு ரசிக்கத் தெரியவேண்டும்! அதை ஒரு அற்புதக் கலையாக வளர்த்தவர் ரசிகமணி டி.கே.சி. அந்த ஆற்றல்தான், ஆற்றலாளர்கள், அறிஞர்கள், கலைவாணர்கள் பலரையும் அன்புக்குஅடிமைப் படுத்தியது.

இப்படிப்பட்ட மாமனிதரின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசின் சார்பில் கொண்டாடுகிறோம். அவருடைய நூற்றாண்டு விழா நாளில், அவர்கண்ட கனவை நனவாக்குவோம். தமிழைப் போற்றுவோம். தமிழ் உணர்வை வளர்ப்போம். தமிழ்ப் பண்பாட்டைக் காப்போம்.

ரசிகமணி டி.கே.சி.யின் புகழ் வளர்க வாழ்க என்று வணங்குவோம்.!

**மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் ரசிகமணி டி.கே.சி. அவர்கள் பற்றி, சென்னை தொலைக்காட்சியில் 29.9.82 அன்று ஆற்றிய சிறப்புரை**

## அறிவு பெறுவதற்குப் பொருட்காட்சி தேவை

''அரிச்சந்திரன் நாடகத்தை எத்தனையோ பேர் படித்திருக்கிறார்கள். எத்தனையோ பேர் பார்த்திருக்கிறார்கள். அதைச் சாதாரண சிறுவனாக இருந்த மோகனதாஸ் கரம் சந்த் காந்தி பார்த்தார். அவர் மனத்தில் அந்தக் கதை பசுமரத்தாணி போல் பதிந்தது. அதனால் அவர் மகாத்மா ஆனார்.

''பார்த்தால் தான் பயன் உண்டு என்பதைஉலகம் உணர்ந்து வருகிறது. உலகம் முழுவதும் 2 ஆயிரத்துக்குமேற்பட்ட பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. டிரேட் பேர் அத்தாரிட்டி ( trade fair authority ) என்று ஒருவாரியம் டெல்லியில் இருக்கிறது. அயல் நாட்டவருடன் எப்படி வியாபாரம் செய்வது என்பதை எல்லாம் அது கற்றுத் தருகிறது. ஆண்டு முழுவதும் பணி செய்கிறது. அதுபோன்று சில மாநிலங்களும் ஆண்டு முழுவதும் பணிசெய்து வருகின்றன. தமிழ் நாடும் அப்படித்தான் பணியாற்றி வருகிறது.

''பொருட்காட்சி லாபத்திற்காக மட்டுமல்ல- நேரத்தை வீணாக்காமல் நல்வழியில் பொழுது போக்குவதற்கும் பயன்படும்; அங்கு படிக்கலாம்-அங்கு சென்றால் நிம்மதியாக இருக்கலாம்-அறிவாளியாகலாம் என்ற காரணங்களுக்காகவும் பொருட்காட்சிகள் தேவை''

**சேலத்தில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சி நிறைவு விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப.**




## தமிழகக் கோயிலுக்கு அமெரிக்க வண்ணம்!

தமிழ்நாட்டிலுள்ள ஒரு கோயிலுக்கு அமெரிக்க நாட்டிலிருந்து வண்ணக் கலவைகள் வருகின்றன.

அது எந்தக் கோயில்?

அதுதான் சிதம்பரம் நடராஜர் திருக்கோயில்!

ஹவாய் தீவில் சைவ சித்தாந்த திருச்சங்கத்தை நிறுவிய சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலின் மேற்கு கோபுரம் முழுவதற்கும் வண்ணம் பூசுவதற்காக அனுப்பிய 100 சதவிகிதம் ஆக்ரிலிக் கலந்த 1134 கிலோ எடையுள்ள வண்ணக் கலவைகளை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இது தொடர்பாக, சென்னை துறைமுகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில், சைவ சித்தாந்த திருச்சபையின் தென்னிந்தியப் பிரதிநிதி திரு என்.கே. மூர்த்தி, இந்த 18 வகையான வண்ணங்கள் கொண்ட கலவைகளை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த சிவாய சுப்பிரமணியம் சுவாமிகள் இலங்கை வந்திருந்தபோது, சைவ சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டு 1957ஆம் ஆண்டு சைவ சித்தாந்த திருச்சங்கத்தை அமெரிக்க ஐக்கிய நாட்டு ஹவாய் தீவில் கபா என்ற இடத்தில் நிறுவினார்.

1981ஆம் ஆண்டு சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு, சுப்பிரமணிய சுவாமிகள் வருகை தந்த போது ஆலயப் பு[illegible]மைப்புப் பணிகளைக் கண்டார். ஆலய கோபுரச் சிற்பங்களுக்குப் பயன்படுத்தப்படும் வண்ணங்கள் நீண்ட காலம் நீடித்திருக்கும் தன்மையற்றதாகவும், பருவ நிலைகட்கு ஈடுகொடுக்க இயலாததாகவும், சுண்ணாம்பு சுதை வேலைகள் கொண்ட பதுமைகளை அழகிய வண்ணங்களுடன் அதிக காலத்திற்குப் பாதுகாக்கும் திறனற்றவையாகவும் இருப்பதை அறிந்தார்.



சுப்பிரமணியசுவாமி அமெரிக்கா திரும்பிச் சென்று கலிபோர்னியா ஒக்லேண்டில் உள்ள பிராஸ்ஸ்டபிள்யூ .டூன் கம்பெனியாரிடம் சிதம்பரம் கோவில் சுதை வேலை கொண்ட மாதிரியைக் காண்பித்தார். இதையடுத்து சீரிய ஆராய்ச்சிக்குப் பின் 100 சதவிகிதம் ஆக்ரிலிக் கலந்துள்ள சீதோஷ்ணம் மற்றும் இரசாயன மாற்றங்களினால் ஏற்படும் மாற்றங்களிலிருந்து பாதுகாக்கக் கூடிய வண்ணத்தை அந்தக் கம்பெனி தயாரித்தது.

சைவ சித்தாந்த திருச்சங்கத்திற்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:—

''நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடிய வகையிலே அவர்கள் பல்வேறு வண்ணங்களை நமக்கு அனுப்பி இருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த அக்கறையுடன் வண்ணக் கலவைகளைத் தயாரித்து அனுப்பி வைக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு இந்தியா மீது— தமிழ்நாட்டின் மீது— சைவ சித்தாந்தத்தின் மீது எவ்வளவு பற்று இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.''

**இந்த விழா, நம் நெஞ்சங்களை வெகுவாகக் கவர்ந்தது என்றால் அது மிகையல்ல!**

**— பி.வி.ஜி.**

# படமும் செய்தியும்



அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழாவை (2.10.82) யொட்டி கிண்டி காந்தி மண்டபத்தில் நடைபெற்ற பொருட்காட்சியை மேதகு ஆளுநர் திரு எஸ். எல் குரானா அவர்கள் திறந்து வைத்து, ஏழை எளியவர்களுக்கு தையல் இயந்திரங் களையும் தொழிற் கருவிகளையும் வழங்கினார். மாண்புமிகு கதர், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். என் இராஜேந்திரன் அவர்கள் உடன் உள்ளார்.



டெல்லியில் உள்ள மாநில பண்ணைக் கழகத்தின் தலைவர் திரு ராமச்சந்திர விக்கேல் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர் களை, அவரது இல்லத்தில் 6.10.82ல் சந்தித்தார்.



மாண்புமிகு மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை அவரது இல்லத்தில் 6.10.82ல் சந்தித்தார்.




மதுரையில் பெரியார் நூற்றாண்டு நினைவுத்தூணை 2-10-82ல் மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் டாக்டர்திரு கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.



சேலத்தில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சியில் பங்குபெற்ற வியாபாரிகள், முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்குக் கட்டடம் கட்டுவதற்காக, 40 ஆயிரம் ரூபாய் தருவதாக வாக் களித்து-முதல் தவணையாக வழங்கிய ரூ. 26,415ஐ மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களிடம் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப. அவர்கள் அளிக்கிறார்கள். செய்தி சுற்றுலா (தமிழ்) பண்பாட்டுத்துறையின் செயலர் மற்றும் ஆணையர் திரு ப.பா. கிருஷ்ணசாமி, இ.ஆ.ப. அவர்கள் உடன் உள்ளார்.



சென்னை கே.கே. நகரில் உள்ள அரசினர் மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் 8-10-82ல் திறந்து வைத்தார்.




# விரைந்து செயலாற்றும் வீட்டுவசதி வாரியம்!



## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. வேலூர் நாராயணன் அவர்களின் பேட்டி

**ம**னிதனின் மிக இன்றியமையாத தேவை களுள் உணவுக்கு அடுத்தபடியாக இருப்பது உறையுளாகும். ஆம். வீட்டுப் பிரச்சனை இன்றைய சூழ்நிலையில் பெரும் பிரச்சனையாக உள்ளது. அதனைத் தீர்த்து வைக்கும் வகை யிலே, தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டிச் செவ்வனே பணியாற்றி வருகின்றது. குடிசைகள் கோபுரங்களாகின்றன; தரிசு நிலங் கள் திருத்தப்பட்டுக் குடியிருப்புகளாக — அழகிய வீடுகளாக விளங்குகின்றன. குறிப்பாக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இப்பிரச்சனைக் குத் தீர்வு காணும் வகையிலே, சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது. அதன் பணிகளை விளக்கிக் கூறுகிறார், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. வேலூர் நாராயணன் அவர்கள்.

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நோக்கங்கள் என்னென்ன?**

**உ**ணவு, உடைக்குப் பிறகு வீட்டுவசதி, மக்களின் முக்கிய அடிப்படைத் தேவையாக உள்ளது. இக்கருத்தினை மேற்கொண்டு வீடற்ற பலதரப்பட்ட வகுப்பினருக்குக் குறைந்த விலையில் (அடிப்படை வசதிகளுடன் கூடிய) டியிருப்புகளைக் கட்டிக் கொடுப் பதே ழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் முக்கி நோக்கமாகும்.

**தமிழ்நாட்டில் இதுவரை எத்தனை வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இது வரை 76,335 வீடுகளைக் கட்டித் தந்துள்ளது. இவற்றில் வருவாயில் பின்தங்கியோருக்கு 30,664 வீடுகளும், தொழிலாளர்களுக்கு 2,854 வீடுகளும், குறைந்த வருமானம் உள்ள வர்களுக்கு 17,726 வீடுகளும், நடுத்தர மற் றும் உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கு 10,257 வீடுகளும், தமிழ்நாடு அரசு அலுவ லர்களுக்கு 12,600 வாடகை வீடுகளும், மற் றும் காவல் துறையினருக்கு 2,214 வீடுகளும் கட்டித் தரப்பட்டுள்ளன.

பேட்டி : ஆனந்தன்

**வீடுகள் எந்த அடிப்படையில் தரப்படுகின்றன?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் பலதரப்பட்ட அடுக்கு வீடு



தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை அருகிலுள்ள 'பாடி' ஏரியிலும், செங்கல்பட்டு மாவட்டம் கூடலூரிலும் ''வட்ட வடிவு வீடுகள்'' கட்டியுள்ளது. ஒவ்வொரு வட்டத்திலும் 16 வீடுகள் இருக்கும்.

களுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, குலுக்கல் முறை மூலம் தவணை முறைத் திட்டத்தின் கீழ், வருமான அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அவை:

பொருளாதாரத்தில் பின் தங்கியோருக்கு ரூ. 4,200-க்கு மேற்படாமல்; குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 4,200 முதல் ரூ. 7,200 வரையிலும்; நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 7,200 முதல் ரூ. 18,000 வரையிலும், உயர்வருமானம் உள்ளவர்களுக்கு அதாவது ரூ. 18,000-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு வீடுகள் தரப்படுகின்றன.

**தமிழ்நாட்டில் சொந்தக் குடியிருப்புகள் (Flats) எத்தனை? வாடகைக் குடியிருப்புகள் (Rental) எத்தனை உள்ளன?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இதுவரை 76,335 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. அவற்றில் 43,119 சொந்தக் குடியிருப்புகளும், 33,216 வாடகைக் குடியிருப்புக்ளுமாகும்.

**சென்னை நகரில் காலி வீட்டு மனைகள் (Plot) உள்ளனவா? அவை எந்த அடிப்படையில் தரப்படுகின்றன?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை நகரில் பல புறநகர்த் திட்டங்களை அமைத்து, அவற்றில் மேம்படுத்தப்பட்ட மனைகளைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்த பின்பு ஒதுக்கீடு செய்கின்றது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளில் சில ஒதுக்கீடுதாரர்களால் முன்பணம் செலுத்த இயலாமையால் வாரியத்தினிடமே திருப்பி ஒப்படைக்கப்படுகின்றன. இந்த மனைகளின் பட்டியல் அரசிற்கு அனுப்பப்பட்டு அரசு அவற்றை மறு ஒதுக்கீடு செய்கின்றது.

மேலும், சில ஒதுக்கீடுதாரர்கள் மாதாந்திரத் தவணையினைச் சரிவர செலுத்தாமையினால், ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டு இம்மனைகள் மீண்டும் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டு, குலுக்கல் முறையிலோ அல்லது அதிகத் தொகை செலுத்துபவருக்கோ ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

**புதிதாக ஏதேனும் நகர், சென்னை அல்லது பிற மாவட்டங்களில் தமிழ்நாட்டில் எங்கேயாவது உருவாக்கப்படுகின்றனவா?**

சென்னைப் பெருநகர் பகுதியில் சுமார் 7,800 ஏக்கர் நிலப்பரப்பில் திருவான்மியூர், ராமாபுரம், நெற்குன்றம், அம்பத்தூர் மற்றும் தாம்பரம் ஆகிய இடங்களில் புறநகர்த் திட்டங்களைச் செயல்படுத்தும் திட்டம் வாரியத்தினிடம் உள்ளது. மேலும், திருச்சியில் நாவல்பட்டு என்ற இடத்திலும், தஞ்சை மாவட்டத்தில் தஞ்சைப் புறநகரும், மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் புறநகர்த் திட்டமும், மதுரையில் எல்லிஸ் நகர் திட்டமும், கோவையில் சௌரிபாளையம், உப்பிளிப்பாளையம் மற்றும் குறிச்சித் திட்டமும் வாரியத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும் கோவை, சேலம், நீலகிரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் புதிய புறநகர்ப் பகுதிகளை அமைக்க வாரியம் நிலம் கையகப்படுத்தும் வேலைகளை மேற்கொண்டுள்ளது.

**வீட்டுப் பிரச்சினைகள் தீர வேறு என்னென்ன திட்டங்கள் உள்ளன?**

வீட்டுப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண வாரியம் சென்னை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் சுமார் 17,000 ஏக்கர் நிலப்பரப்பினைக் கையகம் செய்து, பலதரப்பட்ட வகுப்பினருக்குப் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை, உலக வங்கி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், மற்றும் தமிழக அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. குறிப்பாக, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு வாரியம் செயல்படுத்தும் திட்டங்களில் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. இன்றைய நிதி நிலையில் வாரியம் ஆண்டு ஒன்றிற்குச் சுமார் 15,000 குடியிருப்புகளைத் தான் அமைத்துக் கொடுக்க முடிகின்றது. மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போவதனால் வீட்டுப் பற்றாக்குறைக்கு உடனடியாகத் தீர்வு காண இயலவில்லை.

**வாரியம் கட்டும் வீடுகள் அவ்வளவு தரம் இல்லை என்று கூறப்படுகிறதே? தங்கள் விளக்கம் என்ன?**

தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத்தால் கட்டித் தரப்படும் வீடுகள் தரம் குறைந்தவை என்று கூறப்பட்டால், அது உண்மைக்குப் புறம்பானது. ஏனெனில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அதன் கைதேர்ந்த பொறியாளர்களைக் கொண்டும், தரமான கட்டடப் பொருட்களை உபயோகித்தும், மண் தரத்திற்கேற்ப அடிக்கல் அமைத்தும், நல்ல முறையில் மேற்பார்வை செய்தும் தரமான வீடுகளைக் கட்டி வருகின்றது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு வீடு ஒன்றிற்குச் சுமார் 50 முதல் 100 விண்ணப்பங்கள் வருகின்றன. இதன் மூலம் வாரியத்தினால் கட்டப்படும் வீடுகளின் தரமும் மக்களின் தேவையும் வெளிப்படையாகத் தெரிகின்றன.

**அடுக்கு மாடி வீடுகள் (Flats) எங்ஙனம் விண்ணப்பதாரருக்கு ஒதுக்கப்படுகின்றன?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் அடுக்குமாடி வீடுகள் அனைத்தும் குலுக்கல் முறையிலேயே விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன; இம்முறையில் ஒதுக்கீடு கிடைத்த விண்ணப்பதாரருக்கு அப்பொழுதே குலுக்கல் முறையிலேயே அடுக்குமாடி வீட்டின் எண்ணும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் புதிய 20 அம்சத் திட்டத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கியோர்க்காகவும், குடிசைவாழ் மக்களுக்காகவும், சுமார் 3395 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி இனத்தவர்களுக்காகச் சுமார் 1524 வீடுகள் ஒதுக்கப்பட்டன. 82-83-ல் நடப்பு ஆண்டான சுமார் 5,000 வீடுகள் கட்டவும், சுமார் 3,000 வீட்டுமனைகளை மேம்படுத்தத் திட்டமிட்டு, திட்டம் செயல்பட்டு வருகிறது. இதில் பொருளாதாரத்தில் பின்தங்கியோர்க்காக 2,065 வீடுகளும் குடிசைவாழ் மக்களுக்காக 2,935 வீடுகளும், சென்னையில் மனை மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3000 மனைகள் உள்ளன. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை சாதியினர்களுக்காக 500 வீடுகளும், 600 மனைகளும் ஒதுக்கப்படும்.

**பத்திரிகையாளருக்குச் சொந்தமாகும் வகையில் தனி வீடுகள் அல்லது அடுக்கு மாடி வீடுகள் சலுகை விலையில் ஒதுக்கப்படுமா?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் தனி வீடுகள் மற்றும் அடுக்குமாடி வீடுகளில் 3 சதவீதம் பத்திரிகையாளருக்கு ஒதுக்கப்படுகின்றன. இந்த வீடுகள் பத்திரிகையாளர்களுக்குப் பொதுமக்களுக்கு ஒதுக்கப்படும் விலைக்கே ஒதுக்கப்படுகின்றன.

**வாரியக் குடியிருப்புகளில் என்னென்ன வசதிகள் உள்ளன?**

வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகளில் வரவேற்பு அறை, படுக்கை அறை, சமையல் அறை, குளியலறை மற்றும் கழிவு அறை வசதிகள் உள்ளன. மேலும், குடியிருப்புகள் அமைந்த பகுதிகளில் சாலை வசதி, தெரு விளக்கு வசதிகள், குடிநீர் மற்றும் வடிகால் வசதிகள், கழிவு நீர் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்வது மட்டுமல்லாமல், சாலை இரு ஓரங்களிலும் மரங்கள் நடுதல், குப்பைத் தொட்டிகள் ஆங்காங்கே அமைத்தல் போன்ற வசதிகளும்

சென்னை வில்விவாக்கத்தில் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீட்டுவசதி வாரியம் கட்டியுள்ள வீடுகள்.





பெரியார் மாவட்டத்தில் வீட்டுவசதி வாரியம் கட்டியுள்ள அடுக்கு மாடி வீடுகள்.

செய்து கொடுக்கப்படுகின்றன. மேலும், புறநகர்ப்பகுதியில் சமூக நலக்கூடம், விளையாட்டுத் திடல், பூங்கா வசதிகள், கடைகள் மற்றும் அங்காடிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. இதைத் தவிர பெட்ரோல் பங்கு, திரையரங்கம், தீயணைப்பு நிலையம், தபால் நிலையம், பள்ளிக்கூடம், மருத்துவ மனைகள் போன்றவற்றிற்கு மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

**சில குடியிருப்புகளில் தண்ணீர் வசதி, சாலை வசதி சரிவர இல்லையென்று கூறப்படுகிறதே? வீட்டு வசதி வாரியமும், மாநகராட்சியும், குடிநீர் வடிகால் வாரியமும் ஆக மூன்றும் இணைந்து செயல்படாததால் இந்தச் சிரமங்கள் என்று கூறப்படுகிறதே இது உண்மையா?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் ஏற்படுத்தப்படும் புறநகரங்களில் குடிநீர் வசதி, வடிகால் வசதி, சாலை வசதி, மின் வசதி போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. புறநகர்ப்பகுதி வளர்ச்சி அடைந்த பின் இந்த அடிப்படை வசதிகளை மேற்கொண்டு பராமரிப்பதற்காக, மேற்கண்ட துறையினரிடம் ஒப்படைக்கப்படுகிறது. புறநகர்ப்பகுதிகள் மேற்கண்ட துறையினரிடம் ஒப்படைக்கப்படும் வரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமே பராமரித்து வருகிறது.

**தமிழக வீட்டு வசதி வாரியம் போல், பிற மாநிலங்களிலும் செயல்படுகின்றனவா?**

தமிழக வீட்டு வசதி வாரியம் போல் மற்ற மாநிலங்களிலும் வீட்டு வசதி வாரியங்கள் இயங்கி வருகின்றன. உதாரணமாக, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, குஜராத், ஹரியானா, இராஜஸ்தான், மகாராஷ்டிரா முதலிய மாநிலங்களில் வாரியங்கள் இயங்கி வருகின்றன. மற்ற மாநிலங்களில் உள்ள வாரியங்களை ஒப்பிடும்பொழுது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் எல்லோராலும் போற்றப்படும் அளவிற்கு வசதியான, தரமான, குறைந்த விலையில் அதிக வீடுகளைக் கட்டித் தந்துள்ளது. வீட்டு வசதி வாரியங்களுக்குப் பெருவாரியான நிதி உதவி அளிக்கும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (HUDCO) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தொடர்ந்து அதிக நிதி உதவி பெறுவதில் இந்தியாவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

**ஒரே வீட்டில் பல குடும்பங்கள் குடியிருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வாடகைக் குடியிருப்பில் முறையாக ஒதுக்கீடு செய்யப்பட்டவர், அவ்வீட்டின் ஒரு பகுதியைத் தானும் உபயோகித்து, மற்றொரு பகுதியை அன்னியருக்கு வாடகைக்கு விடுவது வாரிய விதிகளுக்குப் புறம்பானது. இத்தகைய முறைகேடுகள் வாரியத்தின் கவனத்திற்கு வந்தால் வாரியம் உடனடியாக அந்த ஒதுக்கீட்டினை ரத்து செய்யும். மேற்கண்ட ஒழுங்கீனம் ஏற்படாமல் இருப்பதற்காக வாரியத்தின் உதவி வருவாய் அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள்.

**புதிய திட்டங்களைப் பற்றி ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தமிழ்நாடு முழுவதிலும் சுமார் 16,000 ஏக்கர் நிலப்பரப்பினைக் கையகம் செய்து திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது இதைத் தவிர மாநிலம் முழுவதற்கும் ஒரு ஆண்டுத் திட்டமும் மற்றும் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குத் தனியாக ஒரு 5 ஆண்டுத் திட்டமும் தீட்டப்பட்டு வாரியத்தின் பரிசிலனையில் உள்ளன.

**புறநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளை மாநகராட்சியிடம் ஒப்படைக்கத் தாமதம் ஏற்படுவதால் பொது மக்களுக்குத் துன்பம் ஏற்படுவதாகக் கூறப்படுவது உண்மையா?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகள் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படுவதில்லை. ஆனால் வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகள் அடங்கிய பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள குடிநீர் வசதி, வடிகால் வசதி, சாலை வசதி, மின் வசதி போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகளை மேற்கொண்டு பராமரிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட துறையினரிடம் அவை ஒப்படைக்கப்படுகின்றன.

**குடும்பத்துக்கு ஒரு வீடாவது கிடைக்க வழி ஏற்படுமா?**

குடும்பத்துக்கு ஒரு வீடு கட்டிக் கொடுப்பதுதான் இந்த அரசின் இலட்சியம். அந்த இலட்சியத்தை நிறைவேற்றி வைப்பதுதான் வீட்டுவசதி வாரியத்தின் கடமை.

இந்தக் கடமையை இன்றைய நிதி நிலைக்கு ஏற்ப எவ்வளவு வேகமாகச் செயலாக்க முடியுமோ அந்த அளவுக்குச் செயல்படுத்தி வருகிறோம்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் கீழ்க்கண்ட சதவீதத்தில் ஒதுக்கீடு செயயப்படுகின்றன:

| | |
|---|---|
| 1. தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினருக்கு | 10·/. |
| 2. மாநில அரசு ஊழியர்களுக்கு | 18½·/. |
| 3. மத்திய அரசு ஊழியர்களுக்கு | 11·/. |
| 4. ராணுவ சிப்பந்திகளுக்கு | 7½·/. |
| 5. சலவையாளர் மற்றும் (சவரத் தொழிலாளர்களுக்கு) | 5·/. |
| 6. பொதுமக்களுக்கு | 45·/. |
| 7. பத்திரிகையாளர்களுக்கு | 3·/. |
| மொத்தம் | 100·/. |



# பொம்மையோ பொம்மை!

பொம்மை என்றால் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் பிடிக்கும்.

அழகிய வண்ண பொம்மைகளை அவ்வப்போது வாங்கி வந்து, வீட்டை அலங்கரிக்கிறோம் அல்லவா?

அதற்கு ஒரு நல்ல வாய்ப்பு அண்மையில் கிட்டியது. சென்னை, அண்ணாசாலையிலுள்ள, காதி கிராமோத்யோக் பவனில் பொம்மைக் கொலு நடந்தது.

செப்டம்பர் திங்கள் 3-ஆம் தேதி நடந்த இந்தப் பொம்மைக் கொலுவை, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு கைவண்ணப் பொருள் வளர்ச்சிக் கழக இயக்குநர் புலவர் இந்திரகுமாரி அவர்கள் துவக்கி வைத்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்தக் கொலுவில், கண்ணைக் கவரும் வண்ண பொம்மைகள் கருத்துக்கும் விருந்தூட்டுவனவாக அமைந்திருந்தன. 10 காசிலிருந்து ரு. 700 வரை விலையுள்ள பொம்மைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாண்டு, சிறப்பு வகையாகக் கீழ்க்காணும் பொம்மை வகைகள் கொலுவில் இடம் பெற்றிருந்தன:

1. வைஷ்ணவி, 2. கரடி வித்தை, 3. மீனாட்சிக் கல்யாணம், 4. வள்ளித் திருமணம், 5. பிட்டுக்கு மண் சுமந்தது.

பொதுவாக மண், காகிதப் பொம்மைகள் தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சிபுரம், பண்ருட்டி, வேலூர், கடலூர் ஆகிய இடங்களிலிருந்து தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 12 ஆண்டுகளாக நடத்தப்பட்டுவரும் இந்தப் பொம்மைக் கொலுவிலுள்ள பொம்மைகள்-மேலை நாட்டினரை வெகுவாகக் கவர்வது மட்டுமல்லாமல், அவர்கள் விரும்பி வாங்கும் வகையிலும் கைவண்ணம் பொருந்தியதாகும்.

இந்தப் பொம்மைகள் தயாரிப்பு மூலம், தமிழகத்தில் 600 கைவினைக் கலைஞர்கள் பயன் பெறுகிறார்கள். கடந்த ஆண்டு ரு. 1.35 இலட்சத்திற்குப் பொம்மைகள் விற்பனையாகின.

பொம்மைக் கொலுவின் போது மட்டுமல்ல, ஆண்டு முழுவதும் இந்தப் பவனில் பவனி வந்து, பொம்மைகளைப் பார்க்கலாம்; வாங்கவும் செய்யலாம்.

—பி. வி. ஜி.



# ஜீவானந்தத்தின் இலக்கியப் பணி

பி. இ. பாலகிருஷ்ணன்

ஆங்கில ஏகாதிபத்தியம் நமது நாட்டை அடிமைப்படுத்தியபோது அதை எதிர்த்து, வீரமிக்க சுதந்தரப் போராட்டத்தில் பங்கேற்ற பெரும் தலைவர்களில் ஒருவர் ப. ஜீவானந்தம். தமிழ்நாட்டின் பெருமையைக் காத்த பெருமகனார்களில் இவரும் ஒருவர்.

'ஜீவா' என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவர் ஜீவானந்தம்.

ஜீவா, குமரி மாவட்டத்தில் பூதப் பாண்டியில் 1907-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ஆம் நாளில் பட்டன் பிள்ளைக்கும் திருமதி உமையம்மைக்கும் பிறந்தவர். இவருக்கு முன்பு மூன்று குழந்தைகள் பிறந்து இறந்து விட்டதனால், நான்காவது குழந்தையான ஜீவாவுக்குத் தம் பெற்றோர்கள் இட்ட பெயர் மூக்காண்டி. மூக்குக்குத்தி, மூக்காண்டி எனப் பெயர் வைத்தனர் பெற்றோர்கள்.

இவ்வாறு பிறந்த மூக்காண்டி தம் குடும்பத்தாரின் பூர்வீகத் தெய்வமான சொரிமுத்தையன் என்ற தெய்வத்தின் பெயரையும் தாங்கியதுண்டு; ஜீவா சிறிது காலம் சொரிமுத்து என்று அழைக்கப்பட்டார். பின்னர், ஜீவா, சிராவயலில் காந்தி ஆசிரமத்தை அமைத்து நடத்தி வந்தபோது ஜீவானந்தமாகப் பெயர் மருவியது. பின்னர், மறைமலையடிகள் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம் ஜீவாவையும் ஈர்த்தது. ஆனால் ஜீவானந்தம் என்ற பெயரை ஜீவா என்றால் உயிர்; ஆனந்தம் என்றால் இன்பம் என்று தனித் தமிழாக்கம் செய்து உயிர் இன்பன் என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார்.

இவ்வாறு முழுமூச்சாகத் தனித்தமிழ் வெறியோடிருந்த ஜீவா, அக்காலத்தில் பிரபல எழுத்தாளராக இருந்த வ. ரா. அவர்களின் நட்பினாலும் அவருடன் செய்த கலந்துரையாடல்களினாலும் கருத்துமாற்றமடைந்து தனித்தமிழ் ஆர்வத்தை விட்டு, நடைமுறைத் தமிழில் பேசவும், எழுதவும் முனைந்தார்.

பின்னர், தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்ட ஜீவா, சங்கத் தமிழ் நூல்களிலிருந்து பாரதி படைப்புகள் வரை ஆராய்ந்து புதிய பார்வையில் தம் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். பாரதி வழியில் தாமே பாடல்களை இயற்றத் தொடங்கினார்.



பின்னர், ஜீவாவுக்கு ஏற்பட்ட ஈ.வெ.ரா பெரியாரின் தொடர்பு, சுயமரியாதை இயக்கத்தின் மீதும், ம. சிங்காரவேலு செட்டியாரின் தொடர்பு பொதுவுடமைக் கொள்கையின் மீதும் ஈர்க்கப்பட்டது.

தொழிற்சங்கத் தந்தையான வி. சக்கரைச் செட்டியார், தமிழ்த் தென்றல் திரு. வி. க. ஆகியோரின் தொடர்பு ஜீவாவுக்கு மிகுந்த பயனளித்தது.

விஞ்ஞான சோஷலிசத்தின் முதல் நூல் 'பொதுவுடைமை அறிக்கை' என்கிற கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் ஏஞ்செல்ஸ் ஆகியோரால் எழுதப்பெற்ற புகழ்பெற்ற நூலாகும். இந்நூலின் இறுதியில் காணப்படும் இரண்டு மூன்று வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு பின் வரும் கவிதையை ஜீவா இயற்றுகிறார்.

'புலமைசெறி ஆதிக்க வகுப்பா ரெல்லாம்
பொதுவுடைமைப் புரட்சியினால் நடுங்கி
வீழ்வார்

அலக்கழியத் தொழிலாளரைப் பிணைத்த
அடிமையெனும் சங்கிலிகள் அறுந்து
போகும்

பலவிதமாய் நலம்தருமோர் புதிய லோகம்
பாட்டாளி மக்களவர் பாங்காய்ச் சேரும்
உலகத்தில் எத்தேசத் தும்வாழ் கின்ற
உழைப்பாளித்தோழர்களே ஒன்றுசேர்வீர்'

ஜீவானந்தம் ஓர் அரசியல் தலைவர் என்றும், தமிழறிஞர் என்றும், பாரதியின் புகழ் பரப்பிய பித்தன் என்றும் தேசபக்தன் என்றும் தான் பலர் அறிந்திருக்கிறார்கள். அவர் ஒரு கவிஞர் என்பதைச் சிலர் மட்டுமே அறிவார்கள்.

அறிஞர் வெ. சாமிநாத சர்மா அவரைப் பற்றிக் கூறுகிறார்.

''நமது நாட்டில் விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, திரு ஜீவானந்தம் அவர்கள் உள்ளத்தில் பொங்கியெழுந்த உணர்ச்சிகள், கவிதைகளாக உருக்கொண்டு பல மேடைகளில் ஒலி செய்தன. பலருடைய உள்ளத்தை அசைத்துக் கொடுத்தன. இவரது பாடல்களைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் எந்த உள்ளத்திலிருந்து இவை எழுந்தனவோ, அந்த உள்ளத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அந்த உள்ளம், தியாகத் தீயில் புடமிடப் பெற்றுத் தூய்மையடைந்தது. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது, பலர் நலத்தில் தன்னலம் காணும் தன்மையது. இத்தகைய உள்ளப் பாங்குகள் நாட்டிலே வளர வேண்டும்.''

இவ்வாறு வெ. சாமிநாத சர்மா ஜீவாவின் தியாக உள்ளத்தையும் கவித் திறனையும் பாராட்டினார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட மக்களும் சமதர்ம உணர்வு பெற்ற உழைப்பாளர்களும் விழிப்புப் பெற்று வந்த காலம். பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் போன்ற வீரர்கள் தூக்கிலிடப்பட்டு, நாடு கொந்தளித்துக் கொண்டிருந்த காலம். பல வீரர்கள் சாவுக்குத் துணிந்து சுதந்தரப் போரில் பங்கேற்று வந்த காலம், அக்காலத்தில் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தேசபக்தர்களுக்குக் கொள்கையில் எத்துணை உறுதியிருக்க வேண்டும் என்பதனை ஜீவா சிந்திக்கிறார். அவ்வீரர்களுக்கு மேலும் வீர உரம் ஊட்டுகிறார் ஜீவா இப்பாடலில்!



''காதற் சுனிரசமே—எந்தன்
கண்மணியே பூங்குயிலே
சாதலும் கற்கண்டடி—சம
தர்மயுத்த வீரன்என்றே (காதற்)

அச்சம் அவநம்பிக்கை—பழி
யார்ந்தசுய நன்மையெல்லாம்
துச்சமாய்த் தள்வோமடி—வீரம்
சூழ்துணிவு கொள்வோமடி (காதற்)

....................................

தூங்கிடோம் பசிபொறுப்போம்-சிறை
துன்பமெதையும் சகிப்போம்
ஏங்கா துழைப்போமடி—பூவில்
இன்பசம தர்மத்திற்கே (காதற்)

''தூக்குமேடை ஏறத்தயார்—சுடும்
துப்பாக்கிமுன் நிற்கத்தயார்—எங்கள்
நோக்கம்நிறை வேறுதற்கே—எந்த
நோன்பு கொண்டி டவும்தயார்
(காதற்)

இவ்வாறு சுதந்தரப் போராட்ட வீரர்களுக்கு உணர்ச்சியை ஊட்டுகிறார் ஜீவா.

ஜீவா பள்ளிப் பருவத்திலேயே பாடல் இயற்றும் ஆற்றல் பெற்றார். ஏழை எளியோர் மீது மிகவும் பாசங்கொண்ட ஜீவா மகாத்மா காந்தி வாசகசாலை அமைத்துக் கிராம சேவைகளிலும் நிவாரண வேலைகளிலும் ஈடுபட்டார்.

நமது நாடு அந்நிய ஆதிக்கத்தின் கீழ், கட்டுண்டு இருந்த காலம். மக்கள் அடிமை வாழ்வை அனுபவித்து வந்த காலம். ஜீவா அடிமை வாழ்வு ஏன் பிறந்தது என்பதனைச் சிந்திக்கிறார். 1935-ல் இப்பாடலை இயற்றுகிறார்.

''நல்லாரை உழைப்போரைப் பறையர்
என்றார்
நயவஞ்ச முடையோர்மேற் சாதியென்றார்
பொல்லாத கொடியவரை மன்னர் என்றார்
பொய்உரைத்த கயவர்தம்மைக் குருக்கள்
என்றார்
சொல்லாரும் தாயினத்தை அடிமை என்றார்
சூதுமிகும் ஆசாரம் சமயம் என்றார்

இல்லாத பொய்வழியில் சென்ற தாலே
இந்நாட்டார் அடிமை வாழ் வெய்தினாரே!''

படிப்பைப் பாதியிலேயே நிறுத்திக் கொண்டார் ஜீவா. வ. வே. சு. ஐயர் சேரன் மாதேவியில் நடத்தி வந்த பரத்வாஜ் ஆசிரமத்தில், அங்கு பிராமண மாணவர்களுக்கு மட்டும் த்னி இடத்தில் உணவு பரிமாறப் படும் வழக்கத்தை எதிர்த்து ஈ. வெ. ரா. பெரியார் நடத்திய போராட்டத்தில் ஜீவாவும் கலந்து கொண்டார்.

ஜாதி வெறிக்கு இரையான பரத்வாஜ் ஆசிரமம் மூடப்பட்டது. இந்த ஆசிரமம் மூடு விழாக் கண்ட பிறகு புதிய சமத்துவ ஆசிரமம் ஒன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். உடனே செட்டி நாட்டுக்குச் சென்று, காரைக்குடி அருகில் உள்ள சிராவயல் என்ற கிராமத்தில் காந்தி ஆசிரமம் என்ற பெயரில் புதிய ஆசிரமத்தைத் தோற்றுவித்தார்.

''எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்தியா மக்கள்''

என்று பாரதி கூறியபடி ''உயர்ந்த ஜாதியினரும் தாழ்ந்த ஜாதியினரும்'' சமத்துவமாக இந்த ஆசிரமத்தில் நடத்தப்பட்டனர். ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாகப் பாவிக்கப் பட்டனர்.

தேசீயக் கல்வி போதனைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. சேரிகளில் இரவுப்பள்ளிகளும், நூல் நூற்கும் நிலையங்களும் நிறுவப் பெற்று ஆசிரமவாசிகளால் நடத்தப்பட்டன.

சிறந்த முறையில் ஜீவாவால் நடத்தப்பட்ட இந்த ஆசிரமத்திற்குக் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. வருகை தந்து வாழ்த்திச் சென்றார். அச்சமயம் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் வ. உ. சி. பேசுகையில்,

''அஞ்சுபவர்களும் கெஞ்சுபவர்களும் சுதந்தரத்தைப் பெற முடியாது. ஜீவானந்தம் போன்ற சிலர் இருந்தாலே போதும்'' என்று பாராட்டினார்.

இதேபோல் பிறிதொரு சமயம், 1927-ஆம் ஆண்டில் காந்தி அடிகள் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது காரைக்குடி அருகில் தன் பெயராலேயே ஜீவாவின் தலைமையில் மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சிராவயல் ஆகிரமத்திற்கு வருகை தந்தார்.

அப்போது காந்திக்கும் ஜீவாவுக்கும் இப்படி ஒரு உரையாடல் நிகழ்ந்த செய்தி வரலாற்றில் இடம் பெற்று விட்டது.

''உங்களுக்கு என்ன சொத்து இருக்கிறது?'' என்று ஜீவாவைப் பார்த்துக் காந்திஜி கேட்கிறார்.

அதற்கு ஜீவா பதில் சொல்கிறார்.

''இந்தியா தான் என் சொத்து''

இதைக் கேட்டதும் காந்திஜி உடனே கூறுகிறார். ''இல்லை...இல்லை.....நீங்கள் தான் இந்தியாவின் சொத்து''

இவ்வாறு நமது தேசத் தந்தையின் பாராட்டைப் பெற்ற ஜீவா, பாரதியைத் தன் கவிதைப் படைப்புகளுக்கு ஆசானாக ஏற்றுக் கொண்ட ஜீவா, பெண் விடுதலை பற்றி அற்புதமான பாடல்களை இயற்றினார்.

ஜனநாயக வாழ்வின் செழிப்புக்கு அடித்தளமாக அமைவது மாதர் விடுதலை இயக்கம் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தி. நாடு சோஷலிச இன்ப வாழ்வு பேண வேண்டுமானால் பெண் விடுதலை பெற்றாக வேண்டும். இந்த உணர்வினைத் தூண்டும் வகையில் 1936-ல் இப்பாடலை இயற்றினார் ஜீவா.

''உடனடிமை யொழிய வேண்டும்-பெண்கள்
உரிமை யடைய வேண்டும்—
வேறென்ன வேண்டும் (உடனடிமை)

தட்டு முட்டுச் சாமான்போல்
தையலரைப் பாவிக்கும்
முட்டாள்தன மகல வேண்டும்—
வேறென்ன வேண்டும் (உடனடிமை)
சின்னத்தன மாய்ப் பெண்ணை
சித்தரிக்கும் நூற்களை
இன்னே நெருப்பிலிட வேண்டும்—
வேறென்ன வேண்டும் (உடனடிமை)

பேணும் சம சந்தர்ப்பம்
பெருகும் சுதந்தரத்தால்
ஆணும் பெண்ணும் இன்புற வேண்டும்—
வேறென்ன வேண்டும் (உடனடிமை)

இவ்வாறு மாதர் விடுதலைக்காகப் பாடும் ஜீவா தொழிலாளர்களின் அவல நிலையைக் கண்டு மனம் கலங்குகிறார். தொழிலாளர்கள் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்த காலம். 1935-ம் ஆண்டில் இப்பாடலை ஜீவா இயற்றினார்.

''காலுக்குச் செருப்பு மில்லை
கால்வயிற்றுக் கூழுமில்லை
பாழுக் குழைத்தோ மடா-என் தோழனே
பசையற்றுப் போனோமடா. (காலுக்கு)

குண்டிக்கொரு துண்டுமில்லை
கொல்வறுமை தாளவில்லை
ஒண்டக் குடிசை யில்லை-என் தோழனே
உழைத்திளைத்துப் போனோ மடா.
(காலுக்கு)
பாலின்றிப் பிள்ளை அழும்
பட்டினியால் தாயழுவாள் .
வேலையின்றி நாமழுவோம்-என் தோழனே
(காலுக்கு)

கோணல் மாணல் திட்டங்களால்
கோடி கோடி யாய்க்குவித்தே
வீணர்சிலர் கொழுக்கக் கண்டால்—என்
வெஞ்சினம் பொங்கு தடா. [தோழனே
(காலுக்கு)
வீடு முச்சூடும் அழும்
மாடமாளி கைய வர்க்கு
மன்னர்மகு டம வர்க்கு
வாட வறுமை நமக்கு—என் தோழனே
வந்திடல் வாழ்வெ தற்கு!'' (காலுக்கு)

இவ்வாறு துன்ப, துயரில் சிக்கித் தவித்த மக்களைப் பற்றியே பாடி, அம்மக்களின் முன்னேற்றத்திற்காக தமது மூச்சுள்ளவரை பாடுபட்டு மறைந்தபொதுவுடைமை இயக்கத்தின் செயல் வீரர் ஜீவா என்றால் அது மிகையாகாது.

**நன்றி: சென்னை வானொலி**

# ஏழைகளுக்குக் கடன் நிவாரணம்

**1982**-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு கடன் நிவாரண அவசரச்சட்டம் மாநில அரசு அறிவித்துள்ளது. இந்த ஆண்டு ஆகஸ்டு 24-ஆம் தேதியிலிருந்து இந்த அவசரச் சட்டம் அமலுக்கு வந்துள்ளது.

இந்த அவசரச் சட்டம் 31.12.1981 அன்று முடிவடைந்த ஆண்டில் ஆண்டுக் குடும்ப மொத்த வருமானம் ரூ.4800 - க்கு மேற்படாமல் உள்ள கிராம மற்றும் நகர்ப்புறத்தில் வசிக்கின்ற அனைவரும் 24.8.82 நாளுக்கு முன்பு வாங்கியுள்ள கடன்களை முழுவதுமாக ரத்து செய்ய வகை செய்கிறது. ஆனால், கடன் கொடுத்தவர் ஒரு விதவை அல்லது பெற்றோர்களை இழந்த உரிய வயது வராத சிறுமி அல்லது சிறுவன் அல்லது மணவிலக்கு அளிக்கப்பட்டுள்ள பெண் ஆக இருந்து அவர்களது சொத்து மதிப்பு இக்கடன் உட்பட ரூ.25,000-க்கு மேல் போகாமலிருப்பின் இச்சட்டம் பொருந்தாது. அரசு, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்கு இச்சட்டத்தின் கீழ் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.

ஒரு சில வரிவிதிப்புகளுக்கு உட்பட்டுள்ள நபர்கள் இச்சட்டத்தினால் பயன் பெற மாட்டார்கள்.

இந்த அவசரச்சட்டம் வருவாய்த்துறையைச் சேர்ந்த தாசில்தார்களால் அமல் நடத்தப்படும். இந்த அவசரச் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற விரும்பும் கடனாளிகள், தங்களுடைய ஆண்டு வருமானச் சான்றிதழ் மற்றும் தாசில்தார் அல்லது துணை தாசில்தார் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர் அல்லது கூட்டுறவு சார் பதிவாளர் எவரேனும் ஒருவர் முன்பு செய்யப்பட்ட உறுதிப் பிரமாணம் இவற்றை இணைத்து நிவாரணம் கோரி சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு அவசரச்சட்டம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள் மனு செய்ய வேண்டும். நியாயமான காரணங்களிருந்தால் மனு செய்வதற்கு மேலும் ஒரு மாத காலம் அவகாசம் கொடுப்பதற்குத் தாசில்தாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட படிவங்களை அந்தந்த தாலூக்கா அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.



## சிறப்புத் திருமணம்



வட ஆர்க்காடு மாவட்டம் ரத்னகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களால் 70 ஜோடிகளுக்கு இலவசத் திருமணங்கள் 2.9.82 அன்று காலை நடத்தி வைக்கப்பட்டன.

விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றும் பொழுது, "நாம் அனைவரும் ஆண்டவனுடைய பிள்ளைகள். கடவுளின் படைப்பில் ஏற்றத் தாழ்வுகள் கிடையாது. ஆகவே, இங்கு நடைபெறுகின்ற இத்திருமணத்தை இலவசத் திருமணம் என்று குறிப்பிட வேண்டும். அத்துடன் இத்திருமணங்களைத் தங்களுடைய கிராமங்களில் நடத்தி இருந்தால் மிகக் குறைவான நபர்களே வாழ்த்தி இருப்பார்கள். ஆனால் இங்கு நடைபெறுகின்ற காரணத்தினால் இத்திருமணங்கள் மதுரையில் மீனாட்சியம்மனுக்கு நடைபெற்றதாகப் புராணங்கள் கூறும் திருமணத்துடன் ஒப்பிடத்தக்க வகையில் ஆயிரக்கணக்கானவர் வாழ்த்தச் சிறப்பாக நடைபெற்றன."

# அனைத்துலக எழுத்தறிவு நாள் விழா!



கல்வி அறிவு பெறுவது, மனித உரிமைகளைப் பெறுவதற்கு அடிப்படை என்பதை வலியுறுத்தவே, ஐக்கிய நாடுகள் கல்வி மற்றும் சமூகப் பண்பாட்டு நிறுவனம், 1961-ஆம் ஆண்டிலிருந்து, செப்டம்பர் எட்டாம் தேதியினை அகில உலக எழுத்தறிவு நாளாகக் கொண்டாடி வருகிறது.

இந்தியாவில், பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டத்தில் ஒன்றாக வயது வந்தோர் கல்வி சேர்க்கப்பட்ட பின், அதன் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. 15-35 வயதுக்குட்பட்டோரிடையே காணப்படும் கல்வி அறிவின்மையை 1990-க்குள் ஒழித்துவிடப் புதிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதே சமயத்தில் அனைவருக்கும் தொடக்கக் கல்வியளிக்கும் திட்டம் துரிதப்படுத்தப்படுகிறது. இதற்காகவே பள்ளியில் கற்க வரும் குழந்தைகளுக்கு ஊக்கமளிக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவச சத்துணவுத் திட்டத்தினை மாநிலம் முழுவதும் கொண்டு வந்திருக்கிறார். இது, பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறது. படிப்பைப் பாதியிலேயே விட்டு விடாமல் தடுக்கவும் செய்கிறது.

அனைத்துலக எழுத்தறிவு நாள், சென்னை லேடி வில்லிங்டன் கல்வியியல் கல்லூரியில், செப்டம்பர் 7ந் தேதி மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் மற்றும் திரு. நெ. து. சுந்தர வடிவேலு, கல்வி அறிவியல் தொழில் நுட்பத்துறை செயலர் மற்றும் ஆணையர் திரு செ. இராமதாஸ், இ.ஆ.ப. அரிமா வசந்தலால் சி. மேத்தா ஆகியோர் கலந்து கொண்டு, நம் நாட்டில் பரவலாக நிலவுகின்ற கல்வி அறியாமையை ஒழிக்க வேண்டுவதன் அவசியத்தையும் அவசரத்தையும் எடுத்துக் காட்டினர்.

இந்த விழா, மற்றொரு முறையிலும் முக்கியத்துவம் பெறுகிறது. இந்நன்னாளில்தான், உழைப்போர் பல் நோக்குக் கல்வி நிறுவனமும் (ஷிரமிக் வித்யாபீட்) தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் மைய அரசின் முழு உதவியுடன், பள்ளிசாராக் கல்வி மற்றும் வயது வந்தோர் கல்வி நிறுவனத்தின் ஒரு பிரிவாக இயங்கும்.

அதன் நோக்கங்கள் என்னென்ன?

தொழில்கள் நிறைந்த பகுதிகளில் வாழும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் வகையில் கல்வி நிகழ்ச்சியையும், பிற நிகழ்ச்சியையும் திட்டமிட்டு, நடத்துதல்.

உழைக்கும் மக்கள் பல்வகையினர்; அவர்கள் கல்வித் தேவைகளும் பல்வேறுபட்டவை. அவற்றைச் சுற்றாய்வின் மூலம் கண்டறிதலையும் உறுதிப்படுத்தலையும் மேற்கொள்ளுதல்.

பலவகைப்பட்ட தொழிலாளர்களுக்காகச் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தும் கல்வி நிறுவனங்களுடன் ஒத்துழைத்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

## முதியோர் கல்வி இயக்ககம்: தமிழகத்திற்கு விருது



முதியோர் கல்வியைப் பரப்புவதில் தமிழ்நாடு முறைசாரா மற்றும் முதியோர் கல்வி இயக்ககம் புரிந்துள்ள சிறந்த தொண்டினைப் பாராட்டி யுனெஸ்கோ விருது அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விருதுடன் ரூ6868.60க்கான அமெரிக்கா டாலர்களும், பதக்கமும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முறைசாராக் கல்வி மற்றும் முதியோர் கல்வி இயக்குநர் திரு ஜே. ஏ. ரயான் அவர்கள் தமிழக அரசின் சார்பில் இவ்விருதினைப் பெற்றுக் கொண்டார்.

யுனெஸ்கோ நிறுவனத்தின் இப் பரிசுக்கு 33 அமைப்புகளின் தொண்டு பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. பிறகு, தமிழ்நாடு முறைசாராக் கல்வி மற்றும் முதியோர் கல்வி இயக்ககத்திற்கு விருது வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

இந்த இயக்ககம், எழுத்தறிவிக்கும் பணியைப் பரந்த அளவில் செய்து, 10 இலட்சம் பேருக்கு எழுத்தறிவைப் புகட்டி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

# விளையாட்டுத் துறையில் வியத்தகு ஊக்கம்



தமிழகத்தில், விளையாட்டுத் துறை மூலம் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 1977-ஆம் ஆண்டு விளையாட்டுத் துறை இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது இதன்பணிகள் மாவட்டங்களில் எல்லாம் சிறப்புற வேண்டும் என்ற நோக்குடன் 1981-ஆம் ஆண்டு மாவட்டங்கள் தோறும் விளையாட்டு அலுவலர்கள் தமிழக அரசால் நியமிக்கப்பட்டார்கள்.

மதுரை மாவட்டத்தில், கிராமப் பகுதிகளில் விளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு 47 ஊரக விளையாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிக்கன விளையாட்டு அரங்கங்கள் மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர், ஆண்டிப்பட்டி, டி. கல்லுப்பட்டி ஏ. வெள்ளாளப்பட்டி ஆகிய நான்கு இடங்களில் கட்டப்பட உள்ளன. இதற்காக அரசு 1980 ஆம் ஆண்டு அனுமதி அளித்துள்ளது. சிக்கன விளையாட்டு அரங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு ரூ. 35 ஆயிரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகரில் உள்ளது போல் திண்டுக்கல்லில் பெரிய விளையாட்டு அரங்கம் ஒன்று கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த விளையாட்டு அரங்கத்திற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு சுற்றிலும் வேலி அமைப்பதற்கும் நிலத்தைச்சமப் படுத்துவதற்கும் என ரூ. 55 ஆயிரம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

## கிர்வகிப்போர்

மதுரை மாவட்ட விளையாட்டுக் குழுவிற்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. ஆளுடையபிள்ளை (இ.ஆ.ப.) அவர்கள் தலைவராகவும் துணைத் தலைவராக மதுரை தெற்கு மாவட்ட காவல்துறை அதிகாரி, பொருளாளராக மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களும் உள்ளனர்.

அரசுத்துறை அலுவலர்கள் அல்லாத அங்கத்தினர்களாக முன்னாள் மதுரை மாநகராட்சித் துணை மேயர் திரு நவநீதகிருஷ்ணன் அவர்களும், கம்பம்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர். டி. கோபால் அவர்களும், திரு பஷீர் அகமது அவர்களும் உள்ளனர். மதுரை மாவட்டத்தில் விளையாட்டுத் துறையின் நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சீரிய ஆலோசனையின் பேரில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு மதுரையில் விழைபணி மன்றம் (Hobby Centre) அமைக்கத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், மதுரையில் இளமையில் தெரிந்தெடுத்தல் (16 வயதுக்கு உள்பட்டோர் - Catch them Young ) இளம் சிறார்களுக்குப் பயிற்சியளித்தல் (Catch them very young - 5 வயதுக்குக் கீழானோர்) ஆகியோர்களை எந்த விளையாட்டில் விருப்பம் உள்ளவர்கள் என அறிந்து அவ்வத்துறையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

மதுரையில் விளையாட்டு விடுதி ( Sports Hostel ) ஒன்று உள்ளது. இங்கு அறுபத்து ஒன்று மாணவர்களுக்குப் பல்வேறு விளையாட்டுக்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் சத்துள்ள உணவுகள் இவ்விடுதி மூலம் வழங்கப்படுகின்றன. விளையாட்டில் திறமையும் ஊக்கமும் உள்ள ஒரு மாணவனுக்கு மாதம் ஒன்றுக்குத் தமிழக அரசு ரூ. 250 வீதம் செலவழிக்கிறது. உதை பந்து (Foot Ball) கூடைப்பந்து ( Basket Ball ) தடகளம் ( Athelitics ) ஆகிய விளையாட்டுகளில் தீவிரமாகப் பயிற்சியளிக்கப்படுகிறது மதுரையில்.

இங்கு நடந்த மாநில அளவிலான 'வைகை அதெலிடிக் விளையாட்டுப் போட்டி'களில் இங்குள்ள மாணவர் டி. சௌந்திர பாண்டியன் என்பவர் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், உயரத்தாண்டுதல், நீளத்தாண்டுதல், சாட்புட் ஆகியவைகளில் மாநில அளவில் சாம்பியன் பட்டம் வாங்கியுள்ளார். மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஐந்து விளையாட்டுப் பயிற்சியாளர்கள் உள்ளனர். இந்த ஸ்டேடியத்தில் ஆண்களும் பெண்களுமாக எல்லா வயதினரும் சுமார் 200க்குமேல் ஒவ்வொரு நாளும் பயிற்சி பெறுகிறார்கள்.

## 'டில்லி சலோ'

இங்குள்ள மாணவர்களுக்குத் தனிப்பட்ட விடுதி வசதிகள் இல்லாதிருப்பதன் காரணமாகப் புதியதாக ஒரு விடுதி கட்ட தமிழக அரசு ஒரு லட்சம் ரூபாய் அனுமதி அளித்துள்ளது. கட்டட வேலை விரைவில் துவங்கப்பட உள்ளது. நவம்பரில் டெல்லியில் நடைபெறும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நடுவர்களாகப் பங்கேற்பதற்காக மதுரை மாவட்டத்திலிருந்து திரு எஸ். சுந்தரராஜன், திரு எஸ். வெங்கடாசலபதி ஆகிய இரு பயிற்சியாளர்கள் கூடைப்பந்து, தடகளம் ( Athelitics ) ஆகியவற்றிற்கென்றே டெல்லி செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மதுரை மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு எப். இஸேக்கியல், இத்துறை மேம்பாட்டில் ஊக்கத்தோடு செயல்பட்டு வருகிறார்.

# மதுரை மாவட்டத்தில் மீன் வளம்

மதுரை மாவட்டத்தில் 55,000 எக்டேர் தேக்கி வைக்கப்படும் நீர் நிலைகளும் 35,000 எக்டேர், ஆறு வாய்க்கால் போன்ற நீர் நிலைகளும் உள்ளன. இந்நீர் நிலைகளில் கட்லா, ரோகு, மிருகால், சாதாக் கெண்டை, மீன்குஞ்சுகளை இருப்பு செய்து கலப்பின மீன் வளர்ப்பினைச் செயல்படுத்த ஏராளமான வாய்ப்பு உள்ளது.

தற்சமயம் மீன் துறைவைகை, சாத்தியாறு, மஞ்சளாறு, மருதாநதி, வரதமாநதி மற்றும் பாலாறு, பொறந்தலாறு ஆகிய இடங்களில் உள்ள நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்பினைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றது. இந் நீர்த்தேக்கங்களில் ஆண்டு தோறும் இருபது இலட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்படுகின்றன. மேலும், நிலக்கோட்டைத் தாலுகாவில் உள்ள வடகரை, தென்கரை மற்றும் தேனூர் ஆகிய பெரும் பாசனக் குளங்களில் தீவிர மீன் வளர்ப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**ஊராட்சிக்குளங்களில்**

1981-82-ஆம் ஆண்டு முதல், இத்துறையின் தொழில்நுட்ப உதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை (கள்ளிக்குடி, வாடிப்பட்டி, திருமங்கலம், டி. கல்லுப்பட்டி, மேலூர் ஆகிய ஐந்து) ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள 86 குளங்களில் 100 எக்டேர் நீர்ப்பரப்பில் கலப்பின மீன்வளர்ப்பினை மேற்கொண்டு வருகின்றது. இக்குளங்களில் இவ்வாண்டு 5 லட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படவுள்ளன. இவ்வாண்டு மேலும் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் மேலும் 100 எக்டேர் நீர்ப்பரப்பில்இத்திட்டத்தினைச் செயல்படுத்தி விரிவுபடுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்கெனத் தமிழ்நாடு அரசு ஆண்டுக்கு ரூ. 2.9 இலட்சம் வழங்கி வருகின்றது. இதில் அரசு மானியம் 75 சதவீதம். இதன் மூலம் கிராம மக்களுக்கு உயரினக் கெண்டை மீன்கள் குறைந்த விலையில் கிடைத்திட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 1981-82ல் ரூ. 2 லட்சம், 1982-83ல் ரூ. 29 லட்சம் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**பாசனக் குளங்களில் மீன் வளர்ப்பு:**

நடப்பாண்டில் சுமார் 1,300 எக்டேர் நீர்ப்பரப்புடைய 16 பெரும் பாசனக் குளங்களினை மீன்துறையே மேற்கொண்டு கலப்பின மீன் வளர்ப்பினைத் தீவிரமாகச் செயல்படுத்திட அரசு ஒப்புதல் தந்துள்ளது. இவைகளில் 12 இலட்சம் உயர் கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும். இதன் மூலம் திருப்பரங்குன்றம், மதுரை, உத்தமபாளையம் சின்னமனூர், போடிநாயக்கனூர், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் குறைந்த விலையில் புரதச்சத்து நிறைந்த மீன்களைப் பெற்றிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை:**

மீன்துறை சுமார் 7,000 எக்டேர் நீர்ப்பரப்பினில் விஞ்ஞானமுறை மீன் வளர்ப்பினை மேற்கொண்டுள்ளது. ஆயினும், துறை மட்டுமே இம்முறையைக் கையாளாமல் கிராம மக்களுக்கும் இம்முறையைப் பயன்படுத்தி அதிக இலாபம் ஈட்டி பொருளாதார மேம்பாடு அடையவும், மீன் உற்பத்தி பெருகிடவும் வேண்டும் என்பதன் அடிப்படையில் 1978-ஆம் ஆண்டு முதல் மதுரை மாவட்டத்தில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் செயல்பட்டு வருகின்றது 1981-8?-ல் மதுரை மாவட்டத்தில் உள்ள 300 மீன் வளர்ப்போர் முகமையின் மூலம் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. மேலும், இம் மீன் வளர்ப்போர் முகமையின் மூலம் கனரா வங்கியிடமிருந்து கடனுதவி பெற்று சுமார் 250 எக்டேர் நீர்ப்பரப்பில் 8 இலட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு தீவிர மீன்வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இத்திட்டத்தின் மூலம், மீன் வளர்ப்போர்க்கு அரசு மானியமும் வழங்கப்பட்டு வருகின்றது. தீவிர மீன் வளர்ப்பில் அதிக அளவில் மீன் வளர்ப்போர் இலாபம் பெற்று வருவதால், கிராம மக்களுக்கு மீன் வளர்ப்பில் ஆர்வம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**மீன் வளர்ச்சிக் கழகப் பணிகள்**

மீனவருக்குத் தாங்கள் பிடித்து வரும் மீன்களுக்கு நியாயவிலை பெறவும், பொதுமக்களுக்குத் தரமான மீன்கள் விற்பனை செய்யப்படவும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மதுரையில் பன்னிரண்டு மீன் அங்காடிகளை நடத்தி வருகின்றது. இவ்வாண்டு மேலும் ஐந்து மீன் அங்காடிகள் திறக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தூண்டுதல் முறையில் மீன்பெருக்கத் திட்டம்:**

உயரினக் கெண்டைகளை வளர்த்திடத் தேவையான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். உயரினக்கெண்டைகள், தேக்கப்பட்ட நீர்நிலைகளில் முட்டைகளிடா ! எனவே உயரினக் கெண்டைகள் வளர்க்கப்படப்போதுமான அளவில் நீர் நிலைகளில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட வேண்டும். மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கென மதுரை மாவட்டத்தில், வைகை அணை, மஞ்சளாறு அணை, சாத்தியாறு அணை, பாலாறு - பொறந்தலாறு ஆகிய நான்கு மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில் மீன்குஞ்சுத் தேவை அதிகரித்து வருவதால், தேவையைப் பூர்த்தி செய்திட மஞ்சளாறு மீன் பண்ணை ரூ. 9 இலட்சம் செலவில் விரிவாக்கப்பட்டு வருகின்றது. மேலும் பாலாறு பொறந்தலாறு அணையில் உள்ள மீன் பண்ணை ரூ. 12 இலட்சம் செலவில் விரிவாக்கப்பட அரசுஆணை வழங்கியுள்ளது. இத்திட்டம் இவ்வாண்டுசெயல்படுத்தப்படும். இப்பண்ணைகள் மூலம் ஒரு கோடிக்கும் அதிகமான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ஆண்டுதோறும் அரசுக்கு ரூ. 15 இலட்சம் ஈட்டித்தரும். மேலும், மதுரை மாவட்டத்தில் மீன் உற்பத்தி ஆண்டுக்கு 1,500 டன் அளவில் இருந்து வருகின்றது. கலப்பின மீன்வளர்ப்பு முறையினால், இன்னமும் ஓரிரு ஆண்டுகளில் மீன்உற்பத்தி மதுரை மாவட்டத்தில் பத்து மடங்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்:**

மீன்வளர்ப்பு மூலம் கிராம மக்கள் வளம் பெற வேண்டும் என்ற நோக்கிற்காக மதுரை மாவட்டத்தில் 12 மீன்பிடிப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இக் கூட்டுறவுச் சங்கங்கள் மீன் பிடிப்போரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் பெரும் பங்கு வகித்து வருகின்றன.

**புதிதாக அலுவலகம்**

மதுரை மாவட்டத்தில் மீன் வளத்தினைப் பெருக்கிட நல்ல வாய்ப்புள்ளதை முன்னிட்டு இவ்வாண்டு மதுரையில், புதிதாக ஓர் மீன்துறை துணை இயக்குநர் அலுவலகத்தினை உருவாக்கியுள்ளது. மேலும் மீன்வளர்ப்பு இலாபகரமான தொழில் என்பதைக் கிராம மக்களுக்கு எடுத்துரைக்கவும், தமிழ்நாடு அரசு மீன்வளர்ப்புக்கும் மீன்வளர்ப்போருக்கும் செய்துவரும் பணிகள் குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கவும் ஓர் மீன்துறை விரிவாக்கப் பிரிவு மதுரையில் ஏற்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கலப்பின மீன்வளர்ப்பு முறையினைக் கையாண்டால் மீன் வளர்ப்பினை உப தொழிலாக அன்றி முதன்மைத் தொழிலாகச் செயல்படுத்த இயலும் என்பது தெளிவு.

**மலைப்பகுதி நீர் நிலைகளில் மீன் வளம்:**

மலைப் பிரதேசங்களில் உள்ள குளிர் நீர் நிலைகளில் தூண்டில் மீன் பிடித்தல், வெளிநாட்டவர்க்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்காகும். மதுரை மாவட்டத்தில் உள்ள குறிஞ்சி நகரமான கொடைக்கானலில் மீன்துறை வெளிநாட்டுப் பயணிகள் மனங்கவரஇப்பொழுது கைக்கொள்ள வசதியாகத் தூண்டில் மீன்பிடிப்புக்கு வழிவகுத்துள்ளது. மேலும் இதுபோன்று சுருளியாறு நீர்த்தேக்கங்களிலும் மீன்பிடிப்பினை நடைமுறைப் படுத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகின்றது.







# சமுதாயப் புரட்சிக்கு வித்திடும் சத்துணவுத் திட்டம்



"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்றும் ''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்'' இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம் பயிற்றுப்பல கல்வி தந்து பாரை உயர்த்திட வேண்டும்'' என்றும் பாடிய மகாகவி பாரதியாரின் கனவை நனவாக்கும் வகையில் சென்னை மாநகரில் மாநகராட்சி, பள்ளிக் கல்வி-சமூகநலத்துறை ஆகிய மூன்று பெரிய இயக்ககங்களும் ஒன்றாக இணைந்து ''முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைப் பொறுப்பேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.'82 அன்று துவக்கி வைத்தன.

சென்னை கான்ரான்ஸ்மித் சாலையிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற இந்த இனிய விழாவுக்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை வகித்தார்.

விழாவை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். சத்துணவுத் திட்ட உயர் மட்டக்குழு உறுப்பினர் செல்வி ஜெயலலிதா அவர்கள், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் டாக்டர் இ.வேங்கட சுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர் விழாவில் பங்கேற்று உரையாற்றினார்கள். பிறகு அனைவரும் குழந்தைகளுடன் அமர்ந்து சத்துணவு அருந்தினார்கள்.

இத்திட்டத்தினால் சென்னை மாநகரில் இரண்டு வயது முதல் ஒன்பது வயதுவரை உள்ள 2 லட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் பயனுறுகிறார்கள். அதில் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள 1 லட்சத்து 255 குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியின் அதிகாரிகள், அலுவலர்கள், சிப்பந்திகள் சார்பில் ரூ. 1 லட்சத்து 50 ஆயிரமும், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் சார்பில் ரூ. 79 ஆயிரத்து 395ம் சத்துணவுத் திட்டத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி தனி அலுவலர்திரு டி.டி. சுந்தர்ராஜ், இ.ஆ.ப அவர்கள் வரவேற்றார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு : ஜி. ஆனந்தன்**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சென்னை நகர்ப்பகுதிக்கான சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில்,

''பேரறிஞர் அண்ணா வாழ்நாள் முழுவதும் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற தத்துவத்தை இலக்கணமாக ஆட்சி அமைத்து நடத்திக் காட்டினார்கள். அந்த அரசவைக்கு வடிவம் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அண்ணா எந்த ஏழைகளுக்காகப் பாடுபட்டு அவர்களின் முன்னேற்றத்திற்காகத் திட்டம் தீட்டினாரோ அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து தொய்வு இல்லாமல் இன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் செய்து வருகிறார்.

கிராமப்புற ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டம் வழங்கப்படுகிறது. 2-வது கட்டமாக நகர்ப்புறங்களிலும் இந்தத் திட்டம் அண்ணா பிறந்த இந்த நன்னாளில் தொடங்கப்படுகிறது. இந்தச் சத்துணவுத் திட்டத்தை எல்லாரும் பாராட்டுகிறார்கள். பத்திரிகைகளும் பாராட்டுகின்றன. மற்றமாநிலத்தவரும் பாராட்டி வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையை மறுப்போர் யாரும் இல்லை.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு எத்தனையோ திட்டங்கள் நாட்டு மக்களின் நலனுக்காக கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் திட்டத்திற்குக் கிடைத்த ஆதரவைப் போல எந்தத் திட்டத்திற்கும் ஆதரவு கிடைக்க வில்லை''என்று குறிப்பிட்டார்.

சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர் செல்வி. ஜெயலலிதா அவர்கள் பேசுகையில்,

''தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தாயுள்ளத்தோடு ஏழைக் குழந்தைகளுக்கான இலவசச் சத்துணவுத் திட்டத்தைக்கொண்டு வந்துள்ளார்கள். சாதி-மத-பேதமின்றி சமத்துவ சமூகம் நிலவவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் புரட்சித் தலைவர் கொண்டு வந்த திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட அனைவரும் அரசுடன் ஒத்துழைக்கவும் தங்களால் இயன்ற அளவில் உதவி புரியவும்முன்வர வேண்டும்'' என்றும் குறிப்பிட்டார்.

சமூகநலத்துறை இயக்குநர் திருமதி யாஸ்மீன் அகமது இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.கா. திரவியம் இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் திரு நடராசன் ,இ.ஆ.ப., அவர்கள் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப., அவர்கள் உள்பட ஏராளமான அதிகாரிகளும் ஆசிரியர் மாணவ மாணவியர் பொதுமக்களும் பங்கேற்றனர்.

சத்துணவுத் திட்டம், ஒரு சமுதாயப் புரட்சிக்கு எடுத்துக்காட்டான திட்டம் என்று கூறினால் அது மிகையாகாது.



# தொழுநோயாளிகள் மறுவாழ்வு மையங்கள்!

காந்தியடிகள் பிறந்த தினத்தைக் குறிக்குமுகமாக, அக்டோபரில் தொழுநோய்த் தடுப்பு வாரம் அனுசரிக்கப்படுகிறது.

இருபது அம்சத் திட்டத்தின் 14வது அம்சத்தின் கீழுள்ள தொழுநோய்த் தடுப்புத் திட்டம் தமிழ்நாட்டில் தேசிய தொழுநோய்த் தடுப்புத் திட்டம் போன்று செயல்படுத்தப்படுகின்றது.

தொழுநோய்க்குழு அனைத்துத் தொழுநோயாளிகளுக்கு வசதியாகக் கிராமங்களுக்கு அருகிலுள்ள சாலைகளில் தேவைப்படும் மருந்துகளுடன் இருக்கும். மூன்று மைல் சுற்றளவிலுள்ள தொழுநோயாளிகள் இக்குழுவிடம் வந்து நோயின் தன்மையைக் காட்டி மருந்து பெற்றுச் செல்கிறார்கள். இம்முறையினால் தொழுநோயாளிகள் தங்களது கிராமங்களில் தங்களது குடும்பத்தாருடன் தொடர்ந்து வசிக்கலாம். அவர்களுக்கு ஒரு மாதத்திற்கான மருந்து அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பலவேறு மாவட்டங்களில் தொழுநோயாளிகளுக்கான மறுவாழ்வு மையங்கள் 10 இருக்கின்றன. ஏழை தொழுநோயாளிகளை இம்மையங்களில் சேர்த்து சிகிச்சை அளிப்பதுடன், பல்வேறுதொழில்களுக்கான பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

தேசிய தொழுநோய்த் தடுப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 441 இலட்சம் பேர்கள் பயன் பெற்றுள்ளார்கள். தொழுநோயாளிகள் 7.8 இலட்சம் பேர்கள் இருக்கக்கூடுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு ஜூன் மாதம் 30ம் தேதிவரை 7,39,893 தொழுநோயாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் 5,87,975 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 1,11,855 தொழுநோயாளிகள் தொழுநோயிலிருந்து குணமடைந்துள்ளார்கள்.

இவ்வாண்டு ஜூன் மாதம் வரை 29,19,651 பள்ளிக் குழந்தைகள் சோதிக்கப்பட்டனர். 5,013 குழந்தைகளுக்குத் தொழுநோய் அறிகுறி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொழுநோயைக் கண்டுபிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உடனடியாகக் குணமடைய குறிப்பிட்ட காலத்திற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.



அரசு பொது மருத்துவமனை

# சென்னை மருத்துவக்கல்லூரி - தலைமை மருத்துவமனை

தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை மாநகரில் பாமரருக்கும், பாவலருக்கும் மருத்துவத் தொண்டு செய்வதே பணியாகக் கொண்டு விளங்குவது சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் தலைமை மருத்துவமனையாகும். இக்கல்லூரி 1855ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாள் மாண்புமிகு சர் பிரடரிக் ஆடம் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. தற்போதுள்ள தலைமை மருத்துவமனை 1753-ல் நிர்மாணிக்கப்பட்டது. மருத்துவ நிபுணர்கள் தங்கள் பணியில் சிறந்து விளங்க வேண்டுமாயின் வரன்முறைபடுத்தப்பட்ட படிப்பும், பயிற்சியும் அவசியம் என்பதனை உணர்த்தவே இக்கல்லூரி தோன்றியது.

கல்லூரியின் முதலாண்டு வகுப்புகள் 10 பயிற்சியாளர்களையும், 11 இந்திய மருத்துவ மாணவர்களையும் கொண்டு ஆரம்பமானது. 1836-ல் கல்லூரிக்கான கட்டடம் கட்டி முடிக்கப் பெற்றது. முதலில் இரண்டு ஆண்டு காலச் சான்றிதழ்ப் பயிற்சி ( Certificate Course ) அளிக்கப்பட்டது. 1852 முதல் இப்பயிற்சி 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டு, வெற்றி பெறும் மாணவர்களுக்கு "சென்னை மருத்துவக்கல்லூரியின் பட்டம்" வழங்கப்பட்டது.

1850-ல் இந்நிலையம் பள்ளி நிலையிலிருந்து கல்லூரி நிலைக்கு உயர்த்தப்பட்டு, டாக்டர் ஜேம்ஸ் ஷா என்பவர் முதல்வராக நியமிக்கப்பட்டார். அவர் மகப்பேறு மருத்துவத்தில் ஆர்வமுடையவராதலால், கருவுற்ற மகளிருக்கான மற்றும் பேறுகால மருத்துவத் துறையில் ஐரோப்பியர் பெற்றிருந்த அறிவையும், அனுபவத்தையும், ஆற்றலையும் இந்திய கிராமிய மருத்துவத் தாதியர்களும் அறிந்து கொள்ளும் வண்ணம் திட்ட நடைமுறைகளைக் கொண்டுவந்தார்.

1923-ல் பனகல் அரசர் சென்னை மாநிலத்தின் முதல்வராயிருந்தபொழுது கிராமப்புற

டாக்டர் லலிதாகாமேஸ்வரன்
தலைவர்,
சென்னை மருத்துவக் கல்லூரி,
சென்னை.


சேய் நல மருத்துவமனை

மருத்துவ நிவாரணத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டது.

மேல்நாடுகளில் பெண்களை மருத்துவக் கல்வி பெற அனுமதிக்கலாமா என்பதே சர்ச்சைக்குரியதாக இருந்த காலத்தில், இந்தியாவிலும் வேறு எந்த மருத்துவப் பயிற்சி நிலையமும் பெண்களைச் சேர்த்துக் கொள்வதில் தயக்கம் காட்டி வந்த ஒரு காலகட்டத்தில் சென்னை மருத்துவக் கல்லூரி பெண்களை முதன் முதலாக 1875-ல் மாணவிகளாகச் சேர்த்துக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.


குழந்தைகள் நல மருந்தகம்

இந்தக்காலத்தில்தான் (1875) தேர்வு பெற்ற மாணவர்களுக்கு 'Licentiate in Medicine and Surgery' என்ற பட்டம் அளிக்கப்பட்டது. ஆனால் இதற்கும் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே எம். டி., மற்றும் எம்.எஸ் போன்ற மேல் நிலை பட்ட வகுப்புகளும் இருந்து வந்தமைக்குச் சான்றுகளுள்ளன. 1912-ல் தற்போதைய எம். பி. பி. எஸ். பட்டம் முதன்முதலாக வழங்கப்பட்டது. எம். டி., எம். எஸ்., போன்ற பட்டங்களும் எழுத்து முறை மற்றும் செய்முறைத் தேர்வுகளின் அடிப்படையில் அளிக்கப்படலாம் என்ற மாற்றம் கொண்டுவரப்பட்டது.

அதற்கு முன் ஆராய்ச்சிக் கட்டுரைகள் (Thesis) எழுதியே இத்தகு பட்டங்கள் வழங்கப்பட்டு வந்தன. 1934-ஆம் ஆண்டிலேயே எப். ஆர். சி. எஸ். போன்ற சிறப்புடைய தேர்வுகளை இக்கல்லூரி நடத்தும் சிறப்பும், தகுதியும் பெற்றிருந்தது.

1975-ல் இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாடப் பெற்றது. இதன் பிறகு உலக அரங்கில் ஏற்பட்ட விரைவான அறிவியல் வளர்ச்சிக்கும், நாகரிக மேம்பாட்டிற்கும் ஏற்ப இக்கல்லூரியும் தனது பங்கினை ஆற்றத் தவறவில்லை. சென்னை மருத்துவக் கல்லூரியோடு இணைந்து இயங்கிவரும் சென்னை தலைமை மருத்துவமனை தமிழ்நாட்டின் மிகப் பெரியதும், நம் இந்திய நாட்டின் குறிப்பிடத்தக்க மருத்துவமனைகளில் ஒன்றுமாகும்.

பதினேழாம் நூற்றாண்டிலேயே கிழக்கிந்தியக் கம்பெனியாரால் துவக்கி வைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தலைமை மருத்துவமனை 1753-இல் தற்போதுள்ள இடத்தில் நிர்மாணிக்கப்பட்டது. இன்று இம்மருத்துவமனையில் 50-க்கும் மேற்பட்ட பிரிவுகளும் (Wards) 1800 படுக்கைகளும் உள்ளன.

ஆண்டொன்றிற்குச் சராசரியாக 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் புறநோயாளிகள் பிரிவில் மருத்துவ ஆலோசனை பெறுகின்றனர். சற்றேறக்குறைய 62,000 பொதுமக்கள் உள் நோயாளிகளாகச் சேர்ப்பிக்கப்பட்டு சிறப்பான மருத்துவக் கவனத்தின் கீழ் நிவாரணம் பெறுகின்றனர். 1200-க்கும் மேற்பட்ட மருத்துவ அதிகாரிகளும், செவிலியர்களும், இதர ஊழியர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

நாற்பதுக்கும் மேற்பட்ட சிறப்புத்துறைகள் சென்னை தலைமை மருத்துவ மனையில் இயங்கி வருகின்றன. கௌரவ மருத்துவ வல்லுநர்கள் இத்துறைகளின் தலைமைப் பொறுப்பேற்று நவீன கருவிகளையும், சாதனங்களையும், செவ்வனே பயன்படுத்தி பொதுமக்களுக்கு நிகரற்ற தொண்டாற்றி வருகின்றனர்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால்-நோய்க்கூறு இயல், ஊடுகதிர் நிழற்பட இயல், பால்வினை நோயியல், உடலியங்கியல் மருத்துவம், மரபியல், மருந்தியல், நுண்ணுயிரியல், சட்டம் சார்ந்த மருத்துவத் துறை, எலும்பு முறிவு சிகிச்சை, இருதய நோய்ப்பிரிவு, நரம்பியல் நோய்ப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, பேச்சுக் குறை மற்றும் காது கேளாதோருக்கு மறுவாழ்வு அளிக்கும் துறை, ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை, சிறுநீரகத் துறை, நாளமில்லா சுரப்பிகள் துறை, இரத்த நாள அறுவை சிகிச்சை, முதியோர் மருத்துவம், நீரிழிவு நோய்ப் பிரிவு, புற்று நோய்ப் பிரிவு, மனநோய்ப்பிரிவு எலும்புருக்கி அல்லது காசநோய்ப் பிரிவு, மருந்தியல் வேதியியல், உயிர் வேதியியல் போன்ற பல துறைகள் உள்ளன.

சென்னை மருத்துவக் கல்லூரியோடு இணைந்து செயலாற்றும்





காசநோய் ஆராய்ச்சி நிலையம்

சிறப்புடைய மற்ற நிலையங்களும் சென்னை மாநகரில் பல உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

**மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவ மனை**

சென்னை எழும்பூரில் உள்ள மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவ மனையில்தான் உலகிலேயே மிக அதிகமான மகப்பேறுகள் பார்க்கப்படுகின்றன. இஃது ஆசியாக் கண்டத்தின் தொன்மையான மருத்துவமனைகளில் ஒன்றாகும். இங்கு தனிச் சிறப்புமிக்க மேல்நிலை பட்டவகுப்புகளுக்குத் தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டு உயர்வான கல்வித்தரம் காக்கப் படுகிறது.

**குழந்தைகள் நல நிலையம் மற்றும் மருத்துவ மனை**

சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல நிலையமே தமிழ் நாட்டில் குழந்தைகளுக்கென்றே இயங்கி வரும் தனி மருத்துவமனையாகும். குழந்தைகள் நலப்பராமரிப்பு, நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை முதலிய துறைகளில் இந்நிலையம் ஒரு புதிய திருப்பத்தையே ஏற்படுத்தி வருகிறது. இம்மருத்துவமனையிலும் எலும்பு முறிவுப் பிரிவு, ரணசிகிச்சைப் பிரிவு, இரத்த நோய்ப் பிரிவு முதலிய சிறப்புத் துறைகளும் உள்ளன.

**கண் மருத்துவ மனை**

உலகில் தொன்மைமிக்க மருத்துவ மனைகளில் இரண்டாவது இடம் வகிக்கிறது சென்னையிலுள்ள கண் மருத்துவமனை. தோற்றம் 1918. 1884-ல் தற்போதுள்ள இடத்தில் நிறுவப் பட்டது. ஆண்டொன்றிற்கு சுமார் 1,00,000-க்கும் மேற்பட்ட நோயாளிகள் இங்கே சிகிச்சை பெறுகின்றனர். 1948-லிருந்தே கண் வங்கி ஒன்று இத்துடன் இணைந்து இயங்கி வருகிறது. இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் இம்மருத்துவமனை அதிகாரிகளால் போற்றத்தக்க வகையில் நடத்தப்பட்டு வருகின்றன.

**கஸ்தூரிபா காந்தி பெண்கள் மருத்துவ மனை**

மக்கள் நெருக்கடி நிறைந்த பகுதியில் தாய்க்குலத்தினருக்கு சீரிய சேவை செய்வதன் பொருட்டு நிறுவப்பட்டதாகும் சென்னை- திருவல்லிக்கேணியிலுள்ள இம்மருத்துவமனை. இங்கும் முதுநிலை பட்டவகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**காசநோய் ஆராய்ச்சி நிலையம்**

காசநோய்ச் சிகிச்சை முறையில் புதுமையான அணுகுமுறைகளைப் புகுத்தியுள்ளது சேத்துப் பட்டிலுள்ள காசநோய் ஆய்வு நிலையம். மற்றைய மாநில மருத்துவ அதிகாரிகளும் பயிற்சி பெறும் மையமாக அமைந்துள்ளது இது.

**காசநோய் மறுவாழ்வு இல்லம்**

தாம்பரத்தில் உள்ள காசநோய் மறுவாழ்வு நிலையத்தில் காசநோயால் பீடிக்கப்பட்டவர்கள் தங்கி சிகிச்சையும், நிவாரணமும் பெற வசதியும், வாய்ப்பும் உள்ளன. நிவாரணத்திற்குப் பின் மறுவாழ்வுக்கான திட்டங்களும் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**மனநோய் மருத்துவ நிலையம்:**

தமிழ்நாட்டில், கீழ்ப்பாக்கத்திலுள்ள மனநோய் மருத்துவமனையே தனிச்சிறப்புடைய மருத்துவமனையாகும். இங்கு பல்லாயிரக்கணக்கான மனநோயாளிகள், சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனை அதிகாரிகள் சென்னை தலைமை மருத்துவமனை நரம்பியல் துறை வல்லுநர்களோடு இணைந்து மூளை அறுவை சிகிச்சை மூலம் புதிய சிகிச்சை முறைகளைக் கையாண்டு வருகின்றனர்.

**செயற்கை உறுப்புகள் நிலையம் —உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்லம்:**

கை, கால் போன்ற உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புகள் பொருத்தப்பட்டு அவர்தம் குறையை உணராவண்ணம் புதுவாழ்வு வாழ வகை செய்யப்படுகின்றது கருணாநிதி நகரிலுள்ள இம்மருத்துவமனை மூலம். சமீபத்தில் உருவான இந்நிலையம் நல்ல வளர்ச்சி பெற்று வருகிறது. கடந்த உடல் ஊனமுற்றோர் ஆண்டில் (1981) பிரமிக்கத்தக்க பெரும் தொண்டு ஆற்றிச் சிறப்பு பெற்றுள்ளது.





கண் மருத்துவமனை

மேற்கூறிய மருத்துவமனைகளோடல்லாமல் சென்னை செவிலியர் கல்லூரியும், பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனையும், மருந்தாளுநர்பயிற்சித் துறையும் சமீபகாலம் வரை சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்திருந்து இப்போது வளர்ச்சி பெற்ற நிலையில் இயங்கிவருகின்றன.

நரம்பியல் துறையில் தலையின் உட்புறத்தை அணு அணுவாகப் படம் பிடித்துக் காட்டும் 'Head seam' என்னும் சீரிய சாதனத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் சென்ற ஆண்டில் துவக்கி வைத்தார்கள். இருதய நோய்ப் பிரிவில் நுணுக்கம் வாய்ந்த இருதய எதிரொலி கருவியின் துணைகொண்டு சிக்கலான இருதய நோயின் தன்மையை அறிய இது உதவுகிறது. மாரடைப்பு நோயுற்றோருக்கு அவசர தீவிர சிகிச்சை இங்கே அளிக்கப் படுகிறது. புற்று நோய்க்குக் கோபால்ட் கதிரியக்கச் சிகிச்சை பெருமளவில் அளிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 2.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஊடு கதிர் நிழற் படங்கள் எடுக்கப்படுகின்றன. இங்குள்ள அணு கதிரியக்க மருத்துவத்துறை ( Nuclear Medicine ) நோயின் தன்மையை அறிவதற்கும், சிகிச்சை தருவதற்கும் உதவியாயுள்ளது.

சிறு நீரியல் துறையில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் செயற்கையாகக்கழிவுப் பொருட்களை அகற்றும் முறையும் ( Dialysis ) செயல்படுகிறது.

நாளமில்லாச் சுரப்பிகள் துறை 1975-ல் ஆரம்பிக்கப்பட்டது. இத்துறையில் நவீன முறை சோதனைகளைக் கொண்டு பற்பல அரிய நோய்க் காரணங்களைக் கண்டறிய முடிகிறது. இரத்த நாள அறுவை சிகிச்சை தனிப் பிரிவொன்று 1981-ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத் துறையில் உடல் ஊனங்களை மறைப்பதற்கும், உறுப்புகளின் இயக்கத்தை ஊக்குவிப்பதற்கும் வேண்டிய சிகிச்சைகள் தரப்படுகின்றன. உடலுறுப்புகளின் வெளிப்புறத் தோற்றத்தில் ஏற்படும் எதிர்பாரா இழப்புகளை உடலின் மற்ற இடத்திலிருந்து தசையினை எடுத்து, ஒட்டி, இழந்த தோற்றத்தினை மீட்டுத் தருகின்றனர்.

நீரிழிவு வியாதிப் பிரிவொன்றும் இம்மருத்துவமனையில் சிறப்பாக இயங்கி வருகிறது. நோய் நாடி, நோயின் முதல் நாடி தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், இளமை நீரிழிவு நோய்க்கு ( Juvenile diabeties) புதுமையான சிகிச்சை முறைகளைக் கண்டுபிடிக்க ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

குடல், இரைப்பை, சார்ந்த நோய்ப் பிரிவு (Gastro entrology): இப்பிரிவில் தீவிர சிகிச்சைமுறை பயன்படுத்தப்படுகிறது. இங்கு உடலின் உள் உறுப்புகளை நோக்கும் கருவியின் (endoscopy ) மூலம் இரைப்பைப்புண், புற்றுநோய், குடற்புண் முதலிய வியாதிகளைத் தெளிவாகக் கண்டறிய முடிகிறது. இப்பகுதியில் இச்சிகிச்சை தொடர்பான பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தீவிர சிகிச்சைப் பிரிவொன்று தனிப்பகுதியில் இயங்கி வருகிறது. இங்கு மிகவும் இக்கட்டான நிலையில் உள்ள நோயாளிகளுக்கும் உணர்வற்ற நிலை நோயாளிகளுக்கும் அவசரச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கும் சோதனைக்கூடமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. உயிர் வேதியியல் துறையில் ஒரு மணிக்கு 40 நோயாளிகளுக்கு இரத்தப் பரிசோதனை செய்யும் தானியங்கிச் சோதனைக் கருவி ( Auto-Analysis ) இரண்டாண்டுகளுக்கு முன் இங்கு நிறுவப்பட்டது. நுண்ணுயிரியல் பயிற்சி நிலையத்தில் ஆண்டுக்கு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்படுகின்றன. சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வேண்டிய பரிசோதனைகளை நடத்தி காவல் துறையினருக்கு உதவி செய்கின்றனர்.

உடலியங்கியியல் மருத்துவமேல் நிலைக் கூடத்தில் உடற்கூறு சம்பந்தப்பட்ட ஆய்வுகள் நடத்தப் படுகின்றன. இத்துறையில் மரபியல் ஆய்வுக்கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. சுவாச இயங்கியல் பிரிவில், நுரையீரல் இயக்கம் குறித்த சோதனைகள் நடத்தப்படுகின்றன. மருந்தியல் நிலையத்தில் தாவர மூலிகைகளிலிருந்து மருந்து வகைகள் தயாரிப்பதற்கான பரிசோதனைகள் நடத்தப் படுகின்றன. மருந்துப் பொருட்கள் எவ்வகை மூலப் பொருட்களை எந்தெந்த அளவில் கலந்து தயாரிக்கப்பட்டால் உடல் நலம் மேம்பாடு அடையும் எனவும் ஆய்வு நடத்துகின்றனர். மத்திய நுண்ணாய்வுக் கூடத்தில் சில பிரத்யேக உயிர் வேதியியல் சோதனைகள் செய்யப்படுகின்றன. மேல்நிலை மருத்துவப் பட்டதாரிகளுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆராய்ச்சிக்கட்டுரை ( Thesis ) தயாரிப்பதில் துணை நிற்கின்றனர்.

மேற்குறிப்பிட்டது போல், இத்தலைமை மருத்துவ மனையின் எல்லாச் சிறப்புத் துறைகளிலிருந்தும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்தியாவிலும், மற்றும் பன்னாட்டிலும், பல மருத்துவப் பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் வெளிவந்துள்ளன. மருத்துவ உலகில் மங்கா ஒளிவிளக்குகளாய்த் திகழ்ந்த டாக்டர் ரங்காச்சாரி, டாக்டர் குருசாமி முதலியார், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் போன்றவர்களும், இத்தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்தவர்களே. மருத்துவக் கல்வி வல்லுநர்களுக்கான டாக்டர் பி. சி. ராய் பதக்கம் இக்கல்லூரியில் பணிபுரிந்த பல பேராசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ஓய்வுபெற்ற பேராசிரியர் தம்பையா, பேராசிரியர் காமேஸ்வரன், தற்போதைய மருத்துவப் பேராசிரியர். பத்மஸ்ரீ டாக்டர் கே. வி. திருவேங்கடம், அறுவை சிகிச்சை பேராசிரியர் டாக்டர் ஆர். சரத் சந்திரர், டாக்டர் சுப்பிரமணியம் ஆகியோர் இப்பதக்கம் பெற்றுள்ளனர்.

இதைப்போலவே அகிலஇந்திய மருத்துவக் கழகத்தினரின் அடிப்படை மருத்துவ ஆராய்ச்சிக்கான 'ஹரி ஓம் ஆஸ்ரம் அலெம்பிக்' பதக்கங்கள் மருந்தியல் துறை இயக்குநர் டாக்டர் லலிதா காமேஸ்வரனுக்கும் ஓய்வு பெற்ற உடலியங்கியல் பேராசிரியர் டாக்டர் சாரதா சுப்பிரமணியம் அவர்களுக்கும் வழங்கப் பெற்றிருக்கிறது.

மருத்துவத் துறை அறிவியல் வளர்ச்சிக்கோ அளவில்லை. சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் தலைமை மருத்துவ மனையின் சேவைக்கோ எல்லையில்லை. இத்தகு மாபெரும் நிறுவனம் பொதுமக்களுக்கு மேலும் மேலும் சேவை செய்யக் காத்து நிற்கின்றது. இவ்வகையில் தமிழக அரசின் மற்றும் பொதுமக்களின் நல்லாதரவும் ஒத்துழைப்பும் வேண்டப் படுகின்றன.



நல்லாசிரியர் விருதினை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் வழங்குகிறார்.

# ஆசிரியர் தின விழா

'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பது ஆன்றோர் வாக்கு.

நாளைத் தலைமுறைகளை உருவாக்கும் ஆசிரியப் பெருமக்களைப் பெருமைப்படுத்தும் வகையிலே, மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த நாளையொட்டி, ஆண்டுதோறும் செப்டம்பர் திங்கள் 5ஆம் நாளை 'ஆசிரியர் தின'மாகக் கொண்டாடி வருகிறோம்.

அந்த வகையில் இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் 5,6 தேதிகளில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நல்லாசிரியர் விருது வழங்கு விழாவும், சென்னை மாவட்ட ஆசிரியர் தின நிறைவு விழாவும் மிகச் சிறப்பாக நடந்தன.

தமிழ்நாட்டில் சிறப்பாகத் தொண்டாற்றியதற்காக 207 ஆசிரியர்களுக்குத் தமிழக அரசு 'நல்லாசிரியர்' விருதினை வழங்கியது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு டி.கே. சீனிவாசன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் நல்லாசிரியர் விருதுகளை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழக அரசின் சத்துணவுத் திட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது என்றால், அதற்குக் காரணமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள். இந்தச் சமுதாயத்தில் கல்வி அறிவு ஒன்றால்தான் ஏற்றத் தாழ்வைப் போக்க முடியும். பெற்றோரின் அந்த எண்ணத்தை நிறைவேற்றிப் பிள்ளைகளிடம் அறிவையும், பண்பையும் வளர்க்கப் பாடுபடுபவர்கள் ஆசிரியர்கள்''

விழாவில் கடந்த ஆண்டு பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் கூடுதல் மதிப்பெண்கள் பெற்ற எட்டு மாணவ, மாணவிகளுக்குத் தங்கப் பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும் கல்வி அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் 19 பேர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

விழாவில், தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியம், கல்வித் துறைச் செயலாளர் திரு செ. இராமதாஸ், சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு சுந்தரராஜ், முதன்மைக் கல்வி அலுவலர் திரு கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசினர்.

இரண்டாம் நாள் நடந்த நிகழ்ச்சிக்கு, தமிழக அரசின் இரண்டாம் செயலாளர் திரு. கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''ஆசிரியர்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும். ஆசிரியர்கள் பணியிலே சளைத்தவர்களல்ல. இத்துறை அவர்களுக்கு மேலும் உற்சாகமாகப் படுத்த வேண்டும் என்றுதான், அகில இந்திய ரீதியில் இந்த விழா கொண்டாடப்படுகிறது'' என்றார்.

கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்த குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் பேசுகையில், ''புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் பெரும் பொறுப்பு ஆசிரியர்க்கு உண்டு. ஆசிரியர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்கள்'' என்றார்.

கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்கும், ஆசிரியர்களுக்கும் திருமதி பத்மா சொக்கலிங்கம் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி.கே. கரியாலி இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

இறுதியில், மாணவ மணிகளின் கலை நிகழ்ச்சிகள் கண்ணுக்கு மட்டுமல்ல; கருத்துக்கும் விருந்தூட்டுவனவாக இருந்தன **பி.வி.ஜி.**

## ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு தொலைக்காட்சி பெட்டிகளை வழங்க அரசு ஆணை

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு 50 தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தினை மத்திய அரசு ஏற்று அத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்குத் தேவையான தொகையை வழங்க ஒப்பளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 50 தொலைக்காட்சிப் பெட்டிகள் பெறுவதற்கு முன்பாக, தமிழக அரசு சென்னை நகரிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 5 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக்காட்சி வைப்பதற்காக ரூ. 25,000 ஒதுக்கியுள்ளது.



# பாண்டிய நாட்டில் பால் வளம்

மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 13.4.1979 அன்று தொடங்கப்பட்டது. முன்பு அங்கு இயங்கி வந்த மதுரை பால் பண்ணைத் திட்டம், 1.2.1981 முதல் தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் நிருவாகத்தில் இயங்கி வருகிறது.

மதுரை பால் பண்ணைத் திட்டத்தில் 1974ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்குச் சராசரி பால் உற்பத்தி 23,000 லிட்டராக இருந்தது. இப்பொழுது நாள் ஒன்றுக்குச் சராசரி பால் உற்பத்தி 1,23,000 லிட்டராக உள்ளது. இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் பால் உற்பத்தி உச்சகட்டமாக இருந்தது. அப்பொழுது நாள் ஒன்றுக்குப் பால் உற்பத்தி 1 இலட்சத்து 38 ஆயிரம் லிட்டராக இருந்தது.

இப்பொழுது மதுரை பால் பண்ணைக்கு 964 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 147 பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள் பால் வழங்கி வருகின்றன. இச் சங்கங்களில் 2,71,285 விவசாயிகளும், 11,000 பெண்களும், 15,892 ஆதிதிராவிடர்களும் உறுப்பினராக உள்ளனர்.

கடந்த ஆண்டில் 74 கூட்டுறவுச் சங்கங்கள் ஈரோடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கும், கோவை ஒன்றியத்திற்கும் மாற்றப்பட்டன.

மதுரை பால் பண்ணைக்கு 39 பாதைகளின் மூலம் பால் சேகரிக்கப்படுகிறது. இந்தப் பால் பழனி, திண்டுக்கல், தேனி, திருப்பத்தூர், பரமக்குடி, விருதுநகர், திருவில்லிபுத்தூர், சங்கரன் கோயில், திருநெல்வேலி ஆகிய ஒன்பது இடங்களில் உள்ள பால் குளிரூட்டும் இடங்களில் சேகரித்து வைத்து விநியோகிக்கப்படுகிறது.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தால் இப்பகுதி விவசாயிகள் பெரும் பயனடைந்து வருகின்றனர்.

இரண்டாவது கட்டமாக, இப்பொழுது பால் பெருக்கத்திட்டத்தில் செய்யவிருக்கும் பணிகள் வருமாறு:

பால் பெருக்குத் திட்டம் 2ன் கீழ் மதுரை மாவட்டத்தின் 400 புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து நாளொன்றுக்கு 1 இலட்சத்து24 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படும். இதனால் 1 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைவர். அதில் 80% க்கு மேல் சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பர்.

இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து கூடுதலாக நாளொன்றுக்குச் சுமார் 50 ஆயிரம் லிட்டர் பால் மதுரை மத்தியப் பண்ணைக்கு எடுப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

பால் பெருக்குத் திட்டம் 2ன் கீழ் அதிகமாகச் சேகரிக்கப்படும் பாலினைக் கொள்முதல் செய்து பக்குவப்படுத்த மதுரை பால் பண்ணையினை ரூ. 402 லட்சம் செலவில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மத்திய பால் பண்ணை நாள் ஒன்றுக்கு 1½ லட்சம் லிட்டர் கொள்முதல் திறனிலிருந்து 2½ லட்சம் லிட்டர் கொள்முதல் திறனுள்ளதாக ரூ. 298 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்யப்படும்.

திண்டுக்கல் பால் குளிரூட்டும் நிலையத்தினை நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டரிலிருந்து 30,000 லிட்டருக்கும் தேனி பால் குளிரூட்டும் நிலையத்தினை நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 20,000 லிட்டருக்குக் குளிரூட்டவும் ரூ. 23 இலட்சம் செலவில் விரிவாக்கப்படும்.

மதுரையில் நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் திறன் கொண்ட கால்நடை தீவன தொழிற்சாலை ரூ. 81 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு உற்பத்தியினைப் பெருக்கிட வேண்டி தீவனப்பயிர் வளர்ப்பு, செயற்கை இனவிருத்தி மற்றும் கால்நடை நோய்த்தடுப்பு சிகிச்சை போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். மதுரை மாவட்டத்தில் தற்சமயமுள்ள 4 கால்நடை மருத்துவ வழித்தடங்கள் 17 கால்நடை மருத்துவவழித் தடங்களாகவும் 3 அவசரச் சிகிச்சைக் கால்நடை மருத்துவப்பிரிவு 9 அவசர கால்நடை மருத்துவப் பிரிவுகளாகவும் திட்டம் 2ன் கீழ் விரிவாக்கம் செய்யப்படும்.

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களில் கறவையினக் கால்நடைகளின் தரத்தினை உயர்த்தி பால் உற்பத்தியைப் பெருக்கிட உயரினப் பொலி காளைகளின் உறைவிந்து மூலம் செயற்கை இனவிருத்திப் பணி மேற்கொள்ளப்படும்.

**—மாமூலன்**

# அறிவுச் சுடர்



*காலையில் சூரியன் சிவப்பாகத் தோன்றுகிறது. மாலையில் சூரியன் மறையும்போதும் சிவப்பாகத் தோன்றுகிறதே. அது ஏன்?

காலையிலும் மாலையிலும் சூரியனின் கிரணங்கள் ' பூமியில் அடிவானத்தில் அடர்த்தியான காற்று மண்டலத்தில் நெடுந்தூரம் நுழைந்து நம்மை வந்தடைகின்றன. இதனால் சூரிய வெளிச்சத்திலுள்ள ஏழு நிறங்களில் ஊதா, நீலம், பச்சை முதலியவற்றை இந்த நெடுந்தூரக் காற்று மண்டலம் கிரகித்து விடுவதால் சூரியன் செந்நிறமாகத் தெரிகிறது. சந்திரனும் இப்படித்தான் தெரியும். சூரியன் மிக உயரத்தில் இருக்கும்போது காற்று மண்டல உயரம் மிகக் குறைவு. அதனால் நிறமாற்றம் ஏற்படுவதில்லை.

*பூமியைப் போல் மற்ற கிரகங்களிலும் இரவு பகல் தோன்றுமா?

பூமியைப்போல மற்ற கிரகங்களிலும் இரவு பகல் உள்ளன. இந்தக் கிரகங்கள் அதனதன் அச்சில் வெவ்வேறு வேகத்தில் சுழன்று கொண்டிருப்பதால் அதற்கேற்ப இரவு பகல் நேரங்கள் மாறுபடுகின்றன. உதாரணமாக, மிகப் பெரிய வியாழன் கிரகம் 9 மணி 55 நிமிடங்களில் ஒரு சுற்று சுற்றுகிறது. சனிக்கிரகம் 10 மணி 14 நிமிடங்களில் சுற்றுகிறது. இதனால் அங்கே இரவு பகல் குறுகிய நேரங்களில் மாறி மாறி ஏற்படுகின்றன. செவ்வாய் கிரகத்தில், சுமாராக பூமியைப் போல் 24 மணி 37 நிமிடங்களில் இரவு பகல் ஏற்படுகிறது.

*வைட்டமின் 'டி' மாலை வெய்யிலில் மட்டும்தான் உண்டா? காலை வெய்யிலில் இல்லையா?

வைட்டமின் 'டி' வெய்யிலில் இல்லை. நமது உடலில் Sterol என்ற உயிர்வேதியல் பொருள்கள் நமது உடலில் திசுக்களில் உள்ளன. சூரிய வெளிச்சம் இந்த Sterol மூலக்கூறில் படும்போது இவை மாற்றமடைந்து வைட்டமின் 'டி' யாக மாறுபடுகிறது. சூரிய வெளிச்சத்திலுள்ள Ultra-Violet என்ற கதிர் இம் மாற்றத்திற்குத் தேவையானது. அது மாலை வெய்யிலில் அதிகமாக இருக்கிறது.

*மருதாணி இலையைஅரைத்து நகங்களுக்குத் தடவினால் நகங்கள் சிவப்பாக மாறுவது ஏன்?

மருதாணி இலையில் ஒரு Pigments (வண்ணப் பொருள்) இருக்கிறது. இந்தச்சாயப் பொரஸ் (Dye) நீரில் கரைந்திருக்கும். இது புரதங்களோடு சேர்ந்து சிவப்பு நிறமாக மாறுகிறது. மருதாணி இலையை அரைத்து, நகங்களிலோ, உள்ளங் கைகளிலோ வைத்தால், அவ்வுறுப்புக்களிலுள்ள புரதங்களுடன் இந்த Dye சாயப் பொருள் இணைந்து புரதத்தைச் சிவப்பாகச் செய்கிறது. நகத்திலுள்ள Keratin என்ற புரதத்துடன் இணைந்த இந்தச் சாயப்பொருள் நீரில் கரையும் தன்மையை இழக்கிறது. அதனால் இந்த நிறம் கைகழுவினாலும்போகாமல் நிலைக்கிறது.

*வைரஸ் என்பது என்ன? அதற்கு உயிர் உள்ளதா? இதனால் ஏற்படக்கூடிய நோய்கள் என்னென்ன?

வைரஸ் என்பது ஒரு சிறப்பான உயிரினம். மிகமிகச் சிறிய இவை, தானாக உயிர்வாழ இனத்தைப் பெருக்க சக்தியில்லாதவை. ஆனால் உயிரினங்களில் செல்களில் ஊடுருவிச் சென்று, அவைகளின் சக்தியில் தன்னினத்தை, நொடிப் பொழுதில் பல்லாயிரக் கணக்காகப் பெருக்கக்கூடிய வல்லமை படைத்தது. வைரஸ்கள் எல்லாமே 'பாரஸைட்டுகள்' மற்றொரு உயிரினத்தைத் துன்பப்படுத்தி தன்னினத்தைப் பெருக்கிக் கொள்பவை. வைரஸ்களுக்கு உயிர் இருக்கிறது. ஆனால் வளர்வதற்கு மற்றொரு உயிரினம் தேவை.

வைரஸ்கள் பல்வேறு நோய்களை உருவாக்குகின்றன. உதாரணமாக அம்மை, இன்புளுயன்ஸா, மஞ்சள்காமாலை முதலியன.

*நாம் உண்ணும் உணவில் உள்ள கற்கள், நாம் உணவு உண்டபின், சிறுநீர்க் குழாயில் வந்து அடைத்துக் கொள்வதாகக் கூறுகிறார்களே, இது ஏன்?

நாம் உண்ணும் உணவில் உள்ள கற்கள் வயிறு, சிறுகுடல் பெருங்குடலைக் கடந்து மலத்தின் மூலம் வெளியேற்றப்படுகின்றன. சிறுநீர்க்குழாயில் கற்கள் வேறு காரணங்களால் உண்டாகிறது. அவை உடலிலேயே உருவாகும் கற்களாகும். பலவிதமான உப்புச் சத்துக்கள் கரையாமல் உறைந்துவிடுவதால், இந்தக் கற்கள் உருவாகின்றன.

—நன்றி : 'வானொலி'

மாணவர் பக்கம்

## தொலைக் காட்சியில் கடிகாரம்

உலகிலேயே முதல் முறையாக ஜப்பானிய நிறுவனம் ஒன்று தொலைக்காட்சி (television) யுடன் கூடிய கைக்கடிகாரத்தைத் தயாரித்துள்ளது !

இந்தத் தொலைக்காட்சியின் திரை விட்டம் 3 செ. மீ. இதில் நேரத்தையும் பார்த்துக் கொள்ளலாம்; அல்லது நிகழ்ச்சிகளையும் பார்த்துக் கொள்ளலாம். இது வண்ணத் (colour) தொலைக்காட்சி அல்ல. கறுப்பு வெள்ளைதான்.

கடிகாரத்தில் தொலைக்காட்சி இயங்க தனி மின்கலம் தரப்படும். இது ஒரு சிறிய 'பர்ஸ்' அளவுதான் இருக்கும். இதில் இருந்து ''ஹெட்-போர்ன்'' மூலமாக நிகழ்ச்சிகளைக் கேட்க முடியும்.

இந்தக் கடிகாரத்தில் சாதாரண பெரிய தொலைக்காட்சிகளில் உள்ளதுபோல் ''காதோட்ரேட்யூப்'' அல்லது ''தொலைக் காட்சிட்யூப்'' இருக்காது.

அதற்குப் பதிலாக ''லிக்விட் கிரிஸ்டல் டிஸ்பிளே'' அல்லது ''எல். சி. டி.'' என்று அழைக்கப்படும் அமைப்புத்தான் இருக்கும்.

அடுத்த ஆண்டில் இந்தத் தொலைக்காட்சி விற்பனைக்கு வரும். விலை 400 டாலர்தான் (அதாவது ரூ. 3800) என இந்தத் தொலைக் காட்சி தயாரிக்க இருக்கும் ஜப்பான் கடிகார நிறுவனம் தெரிவித்துள்ளது.



## விளையும் பயிர்

பள்ளிப் பருவத்திலேயே பல மாணவர்கள், படிப்பில் மட்டுமல்லாது, பல கலைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

அந்த வகையில், பூண்டி புஷ்பம் கல்லூரியில், முதலாம் ஆண்டு வரலாறு படிக்கும் மாணவர் த. குணசேகரன் கவிதைகள் படைப்பதில் சிறந்து விளங்குகிறார்.

இதுவரை சுமார் 250 கவிதைகள் எழுதியுள்ள இம் மாணவர், கவியரங்குகளிலும் பங்கு பெற்றுள்ளார். இவையன்றிக் கதை, கட்டுரைப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுப் பரிசுகள் பெற்றுள்ளார். இவர் கையெழுத்துப் பத்திரிகை ஒன்றையும் நடத்தி வருகின்றார்.

# ஒலிம்பிக்கின் கதை

சியசு (Ezus) என்னும் கிரேக்கத் தலைமைத் தெய்வத்திற்காக ஒலிம்பிய சமவெளியில் இவ் விளையாட்டு கி. மு. 776-ல் நிகழ்ந்தது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நான்குநாள் விழாவாக இக்கொண்டாட்டம் நடைபெற்றது. முதல் நாளன்று தேவதைக்குப் பலியிட்டு வழிபாடு நடத்துவர். அடுத்த மூன்று நாட்களும் மற்போர், குத்துச் சண்டை, தேரோட்டம், ஆளோட்டம் எனப் பல்வேறு போட்டிகள் நிகழும். வெற்றி பெறும் வீரருக்கு ''ஆலிவ்'' பூங்கொத்தினைத் தலையில் சூட்டி வாழ்த்துப் பாடிப் போற்றுவது பண்டைய மரபு. மூன்று போட்டிகளில் ஒரு சேர வெற்றி பெற்றோர்களுடைய திரு உருவங்கள் சிலை வடிக்கப்படும். இவ்விழாவினை உரோமப் பேரரசர் டியோட்போ என்பவர் கி. பி. 394-ல் நிறுத்தி விட்டார்.

**தற்கால ஒலிம்பிக்:**

ஏறத்தாழ 1,500 ஆண்டுகளுக்குப் பின் கி. பி. 1894-ல் பிரெஞ்சுப் பெருமகன் பாரன் பியர் தே-கூப்பர்தின் (Parren Piere De-Coopertin ) என்பவரின் பெருமுயற்சியால் ஒரு விளையாட்டுக் குழு அமைக்கப்பட்டது.

தற்கால ஒலிம்பிக் 1896-ல் ''ஏதன்ஸ்'' மாநகரில் முதன் முதலாக நடத்தப்பட்டது.

**சின்னங்கள் :**

1920 ஆம் ஆண்டு, வார்ப்பில் நடந்த விழாவில் 'விழாச்சின்னம்' உருவாயிற்று. 'ஐந்து கண்டங்களையும் குறிக்கும் வகையில் வெண்ணிறக் கோட்டின் நடுவே கறுப்பு, சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை எனும் ஐந்து வளையங்கள் சங்கிலித் தொடர்போல் அமைந்துள்ளன.

''விரைவு, உயர்வு, வலிமை இம் மூன்று சொற்களும் ஒலிம்பிக்கின் விருதுச் சொற்கள்.

—என்.எம்.கே. முகம்மது பிலால்,
மேல் நிலை முதலாண்டு,
முஸ்லீம் மேல் நிலைப்பள்ளி
அபிராமம்.

# காலங்கள்

கண்ணன் வந்தான்
கடைக்குப் போனான்
பொன்னா இதுதான்
இறந்த காலம்.

பாமா வருகிறான்
பரதம் ஆடுகிறாள்
பொன்னி இதுதான்
நிகழும் காலம்.

நாளை நாமும்
நாட்டை உயர்த்துவோம்!
பொன்னா, பொன்னி
புரியுதா எதிர்காலம்!

— நாகை மனோகரன்,



# ஆசிரியர் சொன்ன கதை

அன்று நீதி போதனை வகுப்பு. மாணவர்கள் ஆர்வத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தனர். ஆசிரியர் கதை சொல்லத் தொடங்கினார்.

ஒரு மரத்தில் காக்கை உட்கார்ந்திருந்தது. அதன் பக்கத்தில் இன்னொரு காக்கை வந்து அமர்ந்தது. முதல் காக்கை ஒன்றும் பேசவில்லை. இரண்டாவது காக்கை சிறிது பொறுத்துப் பார்த்தது. ஒன்றும் பயனில்லை. பிறகு தானே பேசத் தொடங்கியது.

''நண்பா, ஏன் இப்படி வாட்டமாக இருக்கிறாய்? ஒன்றும் பேசாமல் இருக்கிறாயே? ஏதாவது கோபமா?'' என்று கேட்டது. அப்போதும் முதல் காக்கை பேசாமல் இருந்தது.

''இப்படி இருந்தால் எப்படி? உன் மனத்தில் என்னதான் இருக்கிறது?'' என்று விடாமல் கேட்டது இரண்டாம் காக்கை.

முதல் காக்கை சொல்லியது. ''காக்கையாகப் பிறந்து ஏதாவது பெருமை கண்டோமா? புகழ் கண்டோமா? இல்லை, மகிழ்ச்சிதான் கண்டோமா?''

''ஏன் இப்படிச் சொல்லுகிறாய்?'' என்று புரிபடாமல் கேட்டது இரண்டாம் காக்கை.

''அந்த மாந்தோப்பில் இருக்கிற குயிலைப் பார்! அதன் குரல் எவ்வளவு இனிமையாக இருக்கிறது! அதோ அந்தப் பச்சைக் கிளியைப் பார்! எத்தனை அழகாக இருக்கிறது! நாமும் இருக்கிறோமே கொஞ்சமாவது அழகு உண்டா? இனிமை உண்டா?''

''வருந்தாதே நண்பா, இந்த ஊருக்குக் கோடியில் ஒரு மலை இருக்கிறது. அங்கே ஒரு முனிவர் இருக்கிறார். அவர் கேட்பதை எல்லாம் கொடுக்கும் ஆற்றல் உடையவராம். ஊர் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். நீ அவரிடம் சென்று கேட்டுப் பாரேன்!''

''நல்ல யோசனை சொன்னாய். நான் இப்போதே போய்க் கேட்கிறேன்!'' என்று பறந்து போனது முதல் காக்கை. என்னதான் நடக்கிறது பார்க்கலாமே என்று பின்னாலேயே பறந்து சென்றது இரண்டாம் காக்கை.

முதல் காக்கை பறந்து சென்று முனிவரின் காலடியில் விழுந்தது. முனிவர் அதை அன்புடன் எடுத்தார். ''உனக்கு என்ன குறை?'' என்று கேட்டார். காக்கை தன் குறையைச் சொல்லியது. சொல்லும் போதே கண்ணீர் விட்டது.

முனிவர் அதைப் பார்த்து மிகவும் இரக்கப்பட்டார். அதன் கண்ணீரைத் துடைத்தார். ''உனக்குக் குயிலைப் போன்ற குரல் வேண்டும்; கிளியைப் போன்ற அழகு வேண்டும்; அவ்வளவுதானே?'' என்று கேட்டார்.

'ஆமாம்' என்று தலையசைத்தது காக்கை. ''முதலில் உனக்குக் குயிலைப் போன்ற குரல் கொடுக்கிறேன்! உன் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கிறதா என்று பார்! அதன் பிறகு என்னிடம் வா! தேவையானால் கிளியைப்போன்ற அழகைத் தருகிறேன்'' என்றார்.

உடனே காக்கை முனிவரின் காலில் விழுந்து வணங்கியது. முனிவர் அருள் புரிந்தார். காக்கைக்குக் குயில் போன்ற குரல் வந்தது. காக்கை குயிலைப் போலக் கூவிக் கூவி மகிழ்ந்தது. முனிவர் அதை வாழ்த்தி அனுப்பினார்.

நடந்ததை எல்லாம் இரண்டாம் காக்கை ஒளிந்திருந்து பார்த்தது. பறந்துபோய் எல்லாக் காக்கைகளுக்கும் சொல்லிவிட்டது. எல்லாக் காக்கைகளும் திரண்டு வந்துவிட்டன. குயில் குரல் பெற்ற காக்கையை வியப்புடன் பார்த்தன.

''உன் குயில் குரலில் ஒரு பாட்டுப் பாடு'' என்று எல்லாக் காக்கைகளும் கேட்டன. ''உங்கள் முன்னால் நான் எதற்காகப் பாட வேண்டும்?'' என்று ஆணவத்துடன் கேட்டது குயில் குரல் பெற்ற காக்கை.

''எங்கள் மகிழ்ச்சிக்காக ஒரு முறை பாடு'' என்று கேட்டன.

''பாட முடியாது போங்கள்!'' என்று சொல்லி விட்டு வேகமாகத் தன் பொந்துக்குள் போய் புகுந்து கொண்டது. காக்கைகள் காத்துக் காத்துப் பார்த்துவிட்டு வருத்தமாகத் திரும்பின.

குயில்குரல்பெற்றகாக்கைஅன்று முதல் தன் இனத்தோடு சேருவதில்லை. தனியே இருந்து வந்தது அதன் மனத்திலே ஒரு பூரிப்பு. தன் இனத்திலேயே தான்தான் உயர்வு என்று எண்ணத் தொடங்கியது.

அடிக்கடி குயில்கள் இருக்கும் மாந்தோப்புப் பக்கம் சென்றது. குயிலின் பக்கத்தில் போய் அமர்ந்தது. எந்தக் குயிலும் அதைத் திரும்பிப் பார்க்கவில்லை.

ஒரு நாள் மீண்டும் முனிவரைத் தேடிச் சென்றது. தனக்குக் கிளியைப் போன்ற அழகு வேண்டும் என்று கேட்டது. ''குயில் குரலால் நீ மகிழ்ச்சி கண்டாயா?' என்று கேட்டார் முனிவர். ''ஆமாம்'' என்றது காக்கை.

''அப்படியானால் கிளியைப் போன்ற அழகையும் உனக்குக் கொடுத்தேன்!'' என்றார். காக்கையின் கருமை நிறம் மாறியது. அழகிய பச்சை நிறம் வந்தது. முனிவருக்கு நன்றி சொல்லிவிட்டு மகிழ்ச்சியுடன் பறந்தது.

அதைப் பார்த்த பிற காக்கைகள் மிகவும் வியந்தன. எல்லாக் காக்கைகளுக்கும் சென்று கூறின. காக்கை இனம் முழுவதும் திரண்டு வந்தது. அழகு பெற்ற காக்கை ஓடிப் போய் பொந்துக்குள் புகுந்து கொண்டது.

''வெளியே வா! உன் அழகை எங்களுக்குக் காட்டு'' என்று காக்கைகள் கத்தின.

''என் அழகை உங்களுக்குக் காட்டினால் என் மதிப்புக் குறைந்துவிடும்! முடியாது போங்கள்!' என்று சொல்லிவிட்டது. எல்லாக் காக்கைகளும் வருந்தியபடியே திரும்பின.

அழகு பெற்ற காக்கை அன்று முதல் வெளியே வருவதில்லை. தன் அழகை எவரும் பார்க்கக் கூடாது என்று கருதியது. இரை தேடவும் வருவதில்லை. எத்தனை நாள் இப்படி இருக்க முடியும்? ஒரு நாள் பசியால் மயங்கி விழுந்தது. அதன் உயிரும் பிரிந்தது.

நல்ல அறிவில்லாத ஒருவனுக்குச் செல்வங்கள் வந்தாலும் அவனால் நன்மை பெற முடியாது. மற்றவர்களுக்கும் மகிழ்ச்சி தர முடியாது. ஆணவம் அவனைக் கெடுத்துவிடும்.!

அவன் அறியாமையே அவனை அழித்துவிடும். அறிவில்லாதவனைப் பிறர் அழிக்க வேண்டியதில்லை. அவனை அவனே அழித்துக் கொள்வான் என்று கதையை முடித்தார் ஆசிரியர்.

**—ஆலந்தூர்**
**கோ. மோகனரங்கன்**




# திருவேற்காட்டில் புதிய குடில்கள்

சென்னை அருகிலுள்ள திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோவிலில் ரூ. 8 இலட்சம் செலவில், பக்தர்கள் தங்குவதற்காகக்கட்டப்பட்டுள்ள 36 விடுதிகளையும் ரூ. 1.5 இலட்சம் செலவில் மூன்றாம்பிரகாரம் திருமதிலையும் ரூ. 9.60 இலட்சம் செலவில் ஆலயப் பணியாளர் குடியிருப்புக்குக் கால்கோள்விழாவும் சீரோடும் சிறப்போடும் 9.9.82 அன்று நடைபெற்றன.

விழாவையொட்டி திருவேற்காடு விழாக்கோலம் பூண்டு இருந்தது. அலங்கரிக்கப்பட்ட கோயில் யானை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களுக்கு மாலை அணிவித்தது. அறங்காவலர் குழுத் தலைவர் திரு இரா. சர்வேசுவரராவ், கோவில் உதவி ஆணையர் திரு.சு.பால சுப்பிரமணியன் ஆகியோரும் அமைச்சருக்கு மாலைகள் அணிவித்தனர்.

மாண்புமிகுமேலவைத்தலைவர் டாக்டர். ம.பொ.சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார் அவர்தமது உரையில்:—

''தமிழகத்தின் இந்து அறநிலையத் துறையை மிகத் திறமையாக நிர்வகித்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது.

''தமிழகத்தின் கோவில்களில் உள்ள அறங்காவலர்களின் நடவடிக்கையினால்தான் அரசுக்கு நல்ல பெயர் கிடைக்க முடியும். அதனை ஒவ்வொரு அறங்காவலர்களும் கடைப்பிடிக்க வேண்டும். பக்தர்களுக்கு இல்லம் கட்டுவதன் மூலம், கோவிலுக்கு வரும் பக்தர்கள் மன நிறைவோடு தங்கும் அளவுக்குப்பண்புடனும்அடக்கத்துடனும் கோவில் நிர்வாகிகளும், பணியாளர்களும், ஊழியர்களும் நடந்து கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு புதுடெல்லியிலுள்ள தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு இரா. மோகனரங்கம் அவர்கள் அறநிலையத்துறை ஆணையர் திரு ஆர்.சண்முக சிகாமணி அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு ஜே.சி.டி. பிரபாகரன் அவர்கள், அறங்காவலர் குழுத்தலைவர் திரு. இரா. சர்வேசுவரராவ் அவர்கள், மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு வி.என்.சிதம்பரம் அவர்கள், திரு வித்வான் லட்சுமணன் அவர்கள் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் தமது உரையில்:—

''மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. முடிவு பெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்று முதல்வர் ஆணையிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையில் பாதியில் நின்ற திட்டங்கள் கூட இந்த ஆட்சியில் எடுத்து நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு ஆலயத்தில் நிதிப் பற்றாக்குறை என்றால் வருமானம் கூடுதலாக உள்ள ஆலயத்தில் இருந்து உதவி செய்து வருகிறோம்''.

''மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு கோவில்களின் வருமானம் உயர்ந்து கொண்டு வருகிறது. இது பக்தர்கள் கோவிலுக்கு அதிகமான அளவில் வருவதையே காட்டுகிறது. இந்த கருமாரியம்மன் கோவிலை எடுத்துக்கொண்டால் கூட 10 ஆண்டுகளுக்கு முன் ரூ. 4 இலட்சத்து 25 ஆயிரத்து 128. இந்தக்கோவிலில்மட்டும் 93 இலட்சத்தைச் சேமித்து வைத்திருக்கிறோம்.

''புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழகக் கோவில்களில் மொத்தம் சேமிப்பு ரூ. 4 கோடியாக இருந்ததைக் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.18 கோடியாக உயர்த்தி இருக்கிறோம். இது தமிழக அறநிலையத் துறை வரலாற்றில் ஒரு மகத்தான மாறுதலையே காட்டுகிறது.

''நடமாடும் தெய்வமாக நம்மிடையே உலா வந்துகொண்டிருக்கிறார் பெரியவர் ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள். 87 வயதிலும் நடந்தே எல்லா இடத்திற்கும் செல்லுகிறார். காஞ்சி பெரியவர் ஒரு துறவிக்குரிய இலக்கணத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். மற்றவர்கள் செய்ய முன்வராத காரியத்தைத் தமது இலட்சியமாகக் கொண்டு பெரியவர் செய்து வருகிறார். அவரிடம் ஆண்டவனுக்குச் சமமான உணர்வை நம்மால் பார்க்க முடிகிறது. காஞ்சிப் பெரியவரைத் தவிர வேறு யாரையும் காணவில்லை.

''சமுதாயத்திற்காக-நாட்டிற்காக - வழிகாட்டும் தலைவர்களுக்காக நன்றியுடன் காரியத்தை ஆற்றவேண்டும். புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலம் பொற்காலம். வள்ளுவரின் இலக்கணத்திற்கும் இலக்கியமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் நமது புரட்சித் தலைவர்" என்று குறிப்பிட்டார்.

அறங்காவலர் குழு உறுப்பினர் புலவர் வேதா நன்றிநவில விழா இனிதே முடிந்தது!

—நிகழ்ச்சிதொகுப்பு:
**—ஆனந்தன்**

# சென்னை மக்களுக்கு தமிழ்நாடு அரசு மற்றும் குடிநீர் வாரியத்தின்

வாய்மையே வெல்லும்

கடந்த இரண்டாண்டு சேர்ந்தாற்போல் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் குறைந்துள்ளது. எனவே தமிழ்நாடு அரசும், குடிநீர் வாரியமும் சென்னை தினசரி வழங்க கீழ்க்கண்ட

- சென்னை நகர் குடிநீர் விநியோகத்திற்காக சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளில் உள்ள நீரைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- தாமரைப்பாக்கம், பஞ்சட்டி பகுதியிலுள்ள நிலத்தடி நீரை சென்னைக்குக் கொண்டுவர மேலும் பல ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

---

குழாய் நீரை குடிப்பதற்கும் சமையலுக்கும் மட்டுமே
மற்ற தேவைகளுக்கு கிணற்று நீரை
அரசு மற்றும் குடிநீர் வாரியத்திற்கு

---



பொதுமக்களின் குடிநீர் தேவைக்கான ஆழ்கிணறு கைப்பம்புகள்



சோழவரம் ஏரிநீரை பம்புசெட் மூலம் சென்னைக்கு கொண்டுவருதல்

# குடிநீர் கிடைக்க சென்னைப் பெருநகர் திறன்மிகு ஆக்கப் பணிகள்!

MADRAS METROPOLITAN WATER SUPPLY AND SEWERAGE BOARD
METRO WATER

சென்னை நகருக்கு நீர்வழங்கும் நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு நகருக்கு தற்போது வழங்கப்படும் குடிநீர் அளவையே தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

சென்னை நகரில் 5300க்கும் மேற்பட்ட குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.

நாள்தோறும் 470 நீர்த்தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

435 திறந்த பொதுக் கிணறுகள் தூர் வாரப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

குடிநீர் தேவையான அளவு கிடைப்பதற்காக மேலும் குழாய்க் கிணறுகள் நிறுவுதலும் நீர்த்தொட்டிகள் அமைத்தலும் தொடர்கின்றன.

---

பயன்படுத்துங்கள்
உபயோகியுங்கள்.
ஒத்துழைப்பு தாருங்கள்.

---



நீர்த்தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் நீர் நிரப்புதல்



நிலத்தடி நீரை வெளியே கொண்டுவர ஆழ்துளைக் கிணறுகள்

# செந்தமிழ் பெற்ற சீனம்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி
தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.



உலகத்துப் பழந்தமிழ் நாகரிகங்களுள் சிறப்பிடம் பெறும் இரு பெரு நாகரிகங்கள் சீனமும் செந்தமிழும். இவ்விரு நாகரிகங்களின் இயல்புகளையும் ஒப்பிட்டு ஆராய்தல் பெரும் பயன் தரும். இவ்வாறே சப்பானிய நாகரிகத்தையும் செந்தமிழ் நாகரிகத்தையும் ஒப்பிட்டு ஆராய்தல் தரும்—சிறப்பாக வடக்கிருத்தல்—ஹரிகரி—போன்ற மரபுகள் பற்றி.

இச்சிறு குறிப்பில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில் பெரிதும் இடம் பெற்றுள்ள சீனத் தொடர்பான சொற்களைப் பார்ப்போம்.



| | | |
|---|---|---|
| 1. | சீனக் கண்ணாடி — | 1. சீன தேசத்து முகம் பார்க்கும் கண்ணாடி. 2. மூக்குக் கண்ணாடி. |
| 1. அ. | சீனக் களிமண் — | முதன் முதல் பீங்கான் செய்யஉதவிய சீனமண். |
| 2. | சீனக் கர்ப்பூரம் — | சீனச் சூடம்/ன் |
| 3. | சீனக் காக்கை — | காக்கை வகை |
| 4. | சீனக் காரம் — | படி காரம் (Alum) |
| 5. | சீனக் கிழங்கு — | ஓர் இமாலயச் செடிவகை |
| 6. | சீனக் கிளி — | பெருங்கிளி (Cockatoo) |
| 7. | சீனக் குடை — | கடுதாசிக் குடை |
| 8. | சீனக் கொழுஞ்சி — | கத்தூரி எலுமிச்சை (எலுமிச்சை வகை—Limeberry ) |
| 9. | சீனகர் — | சீன தேசத்தார். |
| 10. | சீனச்சட்டி — | ஒருவகை உருக்கு இரும்பு |
| 11. | சீனச் சரப்பள்ளி — | அணிவகை |
| 12. | சீனச்சூடன் — | கருப்பூர வகை சீனச் சூடனென்று பெயர்........... கூறப்பட்ட (சிலப். 14,109, உரை) |
| 13. | சீனாட்டம் — | குருவி வகை (Goat sucker) |
| 14. | சீனட்டி — | நெல்வகை |
| 15. | சீனத்து முத்து — | சீன தேசத்து ஒரு வகைப் போலி முத்து |
| 16. | சீனத்துப் பட்டு — | சீனதேசத்துப் பட்டு |
| 17. | சீனத்து வித்தை — | அருமைப்பாடான வேலை. |
| 18. | சீனநெல் — | நெல்வகை |
| 19. | சீனப்பட்டை — | பறங்கிப் பட்டை (China root) அல்லது பறங்கிச் சக்கை ஒருவகைக் கொடி/மரம் |
| 20. | சீனப் புரணி — | பெரிய சாடி வகை |
| 21. | சீனப் பலா — | சீனப்பட்டை/பறங்கிப்பட்டை |
| 22. | சீனப் பா — | பறங்கிப்பட்டை[பெருங்கிழங்கு] பெருமருந்து (கொடி வகை) |
| 23. | சீனப்பாகு — | மருந்துவகை |
| 23. அ | சீனப்பீங்கான் — | சீனக்களிமண்ணில் செய்த பாத்திரம், பொம்மை. |
| 24. | சீனப் பூ — | மர வகை |
| 25. | சீனப்பூண்டு — | மருந்துப் பூண்டு வகை |
| 25அ. | சீனப் பொம்மை — | சீனக் களிமண்ணில் செய்த உரு |
| 26. | சீனம் — | 1. ஒரு நாடு (நன்னூல் 273, உரை) 2. சீனமொழி, 3. சீனத்துச் சரக்கு (இப்பட்டுச் சீனம் (நன், 290, விருத்) 4. படி காரம் (Alum) (சும்பதைலம். 91). |
| 27. | சீன மல்லிகை — | மல்லிகை வகை |
| 28. | சீன மிளகு — | வால்மிளகு—(கொடி வகை) |
| 29. | சீனமுத்து — | சீனத்து முத்து |
| 30. | சீனமுட்செல்வநிதி — | முட்செவ்வந்தி வகை |
| 31. | சீனர் — | சீனகர் (யவனர் சீனர் சோனகர் (கம்பராமாயணம் மிதிலை 99) |
| 32. | சீனன் — | பௌத்தன் |
| 33. | சீனவங்கம் — | ஈயம் |
| 34. | சீன வெடி — | பட்டாசு |
| 35. | சீன வரி வண்டு — | நச்சுத்தன்மை உள்ள ஒரு வண்டு வகை |
| 36. | சீனன் — | சீன தேசத்தான் |
| 37. | சீனா — | சீன நாடு |
| 38. | சீனக் கற்கண்டு — | கற்கண்டு வகை |
| 39. | சீனக் காகிதம் — | காகித வகை |
| 40. | சீனக் கோழி — | கோழிவகை |
| 41. | சீனாச் சுருள் — | சீனாப் பட்டு |
| 42. | சீனாத் தொப்பி — | தொப்பி வகை (புதுவை வழக்கு) |
| 43. | சீனாப் பிரேதம் — | மிகமெலிந்தவன் |
| 44. | சீனாப் பெட்டி — | பெட்டி வடிவான வாணம் (பட்டாசு வகை) |
| 44.அ | சீனாப் பொம்மை— | சீனாவிலிருந்து வரும் பொம்மை. அழகான பெண்/குழந்தை |
| 45. | சீனி — | 1. சீனிச் சர்க்கரை, 2. சீனிக்காரம், சீனத்துப்பொருள் 3. மரவகை, 4. சாத்துக்குடி. |
| 46. | சீனிக்கயிறு — | மரநங்கூரக் கயிறு |
| 47. | சீனிக் கற்கண்டு — | சீனக் கற்கண்டு |
| 48. | சீனிக்காரம் — | சீனக்காரம் |
| 49. | சீனிக் கிழங்கு — | சர்க்கரை வள்ளிக்கிழங்கு |
| 50. | சீனிச் சக்கர் — | சீனிச்சக்கரைச் சுவையுள்ள மாம்பழ வகை |
| 51. | சீனிச்சட்டி — | வறுத்தற்குரிய இருப்புச்சட்டி |
| 52. | சீனிச் சர்க்கரை — | வெண்மையான சர்க்கரை வகை |
| 53. | சீனிப் பாய் — | பாய் வகை |
| 54. | சீனிப் பலா — | மரவகை |
| 55. | சீனி மிட்டாய் — | மிட்டாய் வகை |
| 56. | சீனி மிளகாய் — | மிளகாய் வகை |
| 57. | சீனி யதிரசம் — | ஒருவகைப் பண்ணிகாரம் |
| 58. | சீனியவரை — | கொத்தவரை (செடி வகை) |
| 59. | சீனி வெடி — | சீனவெடி |
| 60. | சைனக் கோழி — | அடை காக்காமல் முட்டை பொரிக்கும் சீனக் கோழி. |

அரை நூற்றுக்கும் மேற்பட்ட மேற்கண்ட சொற்கள் செந்தமிழ் மக்கள் நெஞ்சில் சீனா பெற்றிருந்த இடத்தை விளக்கும். இந்த அளவுக்கு வேறெந்த நாட்டின் பெயரிலும் தொடர்புடைய தமிழ்ச் சொற்கள் இல்லை என்பதும் இங்கு எண்ணத்தக்கது. 'சீனம்' சிறப்பாகச் சர்க்கரைக்கும், பட்டுக்கும், பட்டாசுக்கும் பேர் பெற்றிருந்தது. ஆனால் தமிழக மரவகை (Flora) மாவகை (Fauna) உலகத்திலும் சீனம் பெற்றுள்ள செல்வாக்கு வியத்தற்குரியது. சீனம் பற்றிய கருத்தும் கற்பனையும் தமிழகத்தில் 12ஆம் நூற்றாண்டளவிலேயே வேரூன்றி விட்டது.

# ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு —புதிய முறைகள்



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் உள்ள இரசாயனக் கூடத்தில் ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்கும் வழி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. இதன்படி இதுகாறும் ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பதை விட எளிமையாகவும் குறைந்த விலையிலும் செய்யும் முறையாக இது அமைகிறது.

இதுகாறும் ஓலைச்சுவடிகளைப் பிரஷ் கொண்டு துடைத்து, அதன் மீது லெமன் கிராஸ் எண்ணெய் பூசப்பட்டு பூச்சிகள் அரிக்காமல் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், இப்போது கண்டுபிடித்துள்ள முறையில் மேல் எழுந்த வாரியாக எண்ணெய் பூசப்படுவதோடு, தெளிக்கப்பட்டு வளைந்து கொடுக்கும் வகையில் மாற்றப்பட்டு கையினால் எடுத்துப் படிப்பதற்கும், பல ஆண்டுகள் வைத்துப் பாதுகாப்பதற்கும் இந்தப் புதிய முறை பயன்படும்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முறையின் படிஒன்றோடொன்று ஒட்டியுள்ள சுவடிக் கட்டுகளைத் தூய்மையான தண்ணீரில் அம்மோனியாவுடன் கலந்து சுமார் 30 நிமிடம் ஊற வைத்துப் பிறகு ஓலைகளை ஒவ்வொன்றாகப் பிரித்து எடுக்க வேண்டும். பிறகு ஓலைகளைச் சுத்தமாக துடைத்து விட்டு அதனுடைய பழுப்புகள் போக்குவதற்கும், அழுக்குகளை அகற்றுவதற்கும் முதலில் கிளிசரால் நீர்க் கலவை (1:1) பின்பு சோப்புஎண்ணெயுடன் கலந்து நீரில் போதிய நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு இந்த ஓலைகளை தேவையான உஷ்ண அளவில் மிகவும் கவனத்துடன் உலர்த்த வேண்டும். அதன் பிறகு 'பாலி எதிலின் கிளைகால்'வுடன் பூச்சிக் கொல்லி கலந்து நீரில் போதிய நேரம் நனைத்து வைத்திருக்கவேண்டும். அதன் பிறகு ஓலைகளை எடுத்துப் பயன்படுத்தலாம். இதனால் ஓலைகள் வளைவதற்கும், ஓலைகளின் திண்மை கெடாமலும், படிப்பதற்கு, எளிமையாகவும், பூச்சி அரிக்காமல் இருப்பதற்கும் மிகவும் எளிதாக அமைகிறது. இதன் பயனாய் இப்போது செலவிடும் தொகையைவிட, குறைவான தொகையில், எளிய முறையில் பாதுகாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையில் பண்டைக் கலைப் பொருட்களையும், ஓலைச் சுவடிகளையும், ஓவியங்களையும் பிற பொருட்களையும் பாதுகாப்பதற்காக அமைத்துள்ள இரசாயனக் கூடத்தில் இந்த முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தென்னாட்டில் பெரும்பாலான இலக்கியங்கள், மருத்துவச் சுவடிகள், பிற சமய நூல்கள் அனைத்தும் ஓலைச்சுவடியிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பாதுகாப்பது மிகவும் கடினமாக உள்ளது. இதனால் இந்தப் புதிய முறை பின்னர் வரும் நூலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் மிகவும் பயனுடையதாய் இருக்கும்.




செவிக்கினிய இசை விருந்து. கால் வைக்கவும், சாய்ந்து கொள்ளவும் வசதிகள். சொகுசு மெத்தையோடு கூடிய தனி இருக்கைகள். அத்தனையும் கொண்ட விரைவுப் பேருந்துகள்

மற்றும் குளு குளு. சிறப்புப் பேருந்துகளில் பதிவு செய்யப்பட்ட தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், இசை விருந்து, வசதியான இருக்கைகள்.

உடைமைகளைப் பாதுகாக்கும் அறை ஓய்வு அறை, மற்றும் பல்வேறு வசதி களுடன் 24 மணி நேர சேவை.

முன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளுங்கள் அல்லது நேரில் அணுகுங்கள்.

திருவள்ளுவர்
போக்குவரத்துக் கழகம்



மக்கள் தொடர்பு அதிகாரி
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
திருவள்ளுவர் இல்லம், சென்னை-600 002
போன்: 846351, எக்ஸ்டென்ஷன் 28

DIPR/Sobhagya


# தலைவலி தீர செலவில்லாத வழி



மு. முத்துக்காளத்தி

கற்காலம், இரும்புக்காலம் என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அதுபோல தற்காலத்துக்கு என்ன பெயர் தெரியுமா? இது 'ஆஸ்பிரின் காலம்''. (ASPIRIN) இந்த நூற்றாண்டு ''தலைவலி நூற்றாண்டு'' (HEADACHE CENTURY) தலை இருக்கிறவர்கள் எல்லாருமே தலைவலியால் துடிக்கிறார்கள்.

குப்பனுக்கும் சுப்பனுக்கும் தலைவலி வருவதில்லை. குமாருக்கும் சுந்தருக்கும் வருகிறது. கிராமப்புறங்களில் கிடையாது. நகரங்களில் ஏராளம். ஏழைகளுக்கு வருவதில்லை. பணக்காரர்களுக்கும் பெரிய அதிகாரிகளுக்கும் வருகிறது. வேலைப்பளு, மன உளைச்சல்தான் இதற்குக் காரணம். ஒரு ரகசியம் பல பேருக்குத் தெரியாது. தலைவலி என்பது ஒரு நோயே அல்ல. கடுமையான காயம், நோய் காரணமாக நூற்றில் ஐந்து பேருக்கு வரலாம். மீதி 95 பேருக்கு எதனால் வருகிறது தெரியுமா? மனோவியாகூலந்தான்! உடம்பைவிட உள்ளம்தான் காரணம் தலைவலிக்கு.

அப்போதைக்கு ஏதாவது மாத்திரையை வாங்கிப்போட்டு மனிதன் திருப்தி அடைந்து விடுகிறான். தற்காலிக விடுதலையில் ( Relief ) நிம்மதி தேடப் பார்க்கிறான். ஆனால் தலைவலி தொடர் கதையாகிறது.

எப்பொழுதும்விறைப்போடு ( Tension ) வேலை செய்கிறவர்களுக்கு தலை, கழுத்து தசைகள் சுருங்கி, தலைவலி வரும். இந்தத் தசைகள் இரத்த நாளங்களை அழுத்துவதால் உடம்பில் வலி ஏற்படும். வெளியில் பிடுங்கல், வீட்டில் மனைவி, மக்கள் நச்சரிப்பு உள்ளவர்கள் தலைவலிக்குத் தப்ப முடியாது.

ஒரு சமயம் பேரறிஞர் அண்ணா நகைச்சுவையாகக் குறிப்பிட்டார், ''வீட்டில் அடைந்து கிடப்பது தலைவலியையுண்டாக்குகிறது. வெளியே அப்படியே காற்றாடப் போய் விட்டு வருகிறேன்'' என்று மனைவியிடம் கணவன் சொல்லிவிட்டுப் புறப்பட்டால் என்ன பொருள்? 'உன் உபத்திரவத்தால் வந்த நோய் இது. உன்னை விட்டு அப்பாலே போனால்தான் போகும் என்று பொருள்!

வீட்டிலும் வெளியிலும் பணிகளை ஒழுங்குபடுத்திக் கொள்கிறவர்களுக்குத் தலைவலி வராது. சக்திக்கு மீறி வேலை செய்வதும் கூடாது. அப்படிச் செய்யும் பொழுது அவர்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காகவே தலைவலிக்கும். அதனை ஆரம்பத்திலேயே உணர்ந்து மனத்தை வேறு துறையில், பொழுதுபோக்கில் செலுத்த வேண்டும். சண்டைக்கெல்லாம் கடுமையாக விவாதங்களில் இறங்குவதை விட்டுவிட வேண்டும்.

சாதாரண தலைவலி ஓய்வெடுத்தால் போய்விடும். நல்ல காற்றோட்டத்தில் ரம்மியமான சூழ்நிலையில் மனம் செலுத்தினால் போய்விடும். அப்படிப் போகாமல் தலைவலி கடுமையாக இருந்தால், உடனே நாமாகவே ஆஸ்பிரின் மாத்திரைகளை வாங்கி விழுங்கக் கூடாது. டாக்டரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும். மூளையில் கட்டி, மூச்சுக்குழல் வியாதி, அதிக இரத்த அழுத்தம் போன்றவை இருந்தால்கூட இப்படித் தலைவலி வரலாம். அதனால் கண், காது, மூக்கு, தொண்டை இவற்றைப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

மனிதர்கள் பொதுவாக எதையும் சாப்பிடத் தயாராக இருக்கிறார்களே தவிர, விடத் தயாராக இல்லை. தலைவலி வந்தால் மருந்து சாப்பிடுகிறார்கள். இதனால் பணச் செலவு ஆகிறது. செலவே இல்லாமல் தலைவலி வராமலே பார்த்துக் கொள்ள வழியிருக்கிறது. அதற்கு மனிதர்கள் சிலவற்றை விட வேண்டும். கோபம், எரிச்சல், வெறுப்பு விரோத பாவம், பயம் இவற்றை விட்டுவிட வேண்டும். அப்படி விட்டவர்களுக்குத் தலைவலி ஒருநாளும் வராது. விடாதவர்களை, தலைவலியும் விடாது.

விறகைக் காயப் போடலாம். வயிற்றைக்காயப்போடக்கூடாது. உடம்பைக் குறைக்கிறேன் என்று நீண்ட நேரம் பசியோடு இருக்கக் கூடாது.

வாழ்க்கையில் எப்பொழுதும் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்க வேண்டும். மது, பீடி, சிகரெட், புகையிலை, காபி இவைகளை விட்டுவிட வேண்டும். முற்றிலும் விட முடியாவிட்டாலும் மிகவும் குறைத்துக்கொள்ள வேண்டும். அதைவிட முக்கியம் ,கூட்டமான இடங்களை விட்டு விலகியிருப்பது பதும். இப்படி எச்சரிக்கையுடன் நடப்பவர்கள் பக்கம் எட்டிக்கூட பார்க்காது தலைவலி!

# வரிசையில் வாருங்கள் விரைவாக பயணம் புரிய அது உதவும்

பேருந்து "ஸ்டாப்பு"களில்
வரிசையாக நின்று
வண்டியில் ஏறுங்கள்.
வரிசை வழி நல்லவழி
அது, நீங்கள் உட்பட,
அனைவருக்கும்
உதவியாக அமையும்.



**பல்லவன்**
**போக்குவரத்துக் கழகம்**
**(பெருநகர்)**
**(ஒரு தமிழ்நாடுஅரசு நிறுவனம்)**
**சென்னை-600 002**




# நூல் நயம்

## நெஞ்சம் கவர் நேருஜி

ஆசிரியர்: சுகி சுப்பிரமணியம்,
பதிப்பாளர்: அமிழ்தம் பதிப்பகம்,
நார்த்தாம்பூண்டி,
திருவண்ணாமலை
வட்டம்,
வ. ஆ. மாவட்டம்,
விலை. ரு 4.50.

எளிய தமிழில், இனிய நடையில் பண்டித நேரு பற்றிய கேள்வி-பதில், பொன் மொழிகள் அவரது வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவங்கள் ஆகியவை இந்த நூலில் நிறைந்துள்ளன.

'வரலாறு கண்ட வம்சம்' முதலாக 'நேருஜி சிந்தனைகள்' ஈறாக 29 தலைப்புகளின் கீழ் அருமையான கட்டுரைகள் அரும்புச் சிறுவர்களுக்கு ஏற்ற விதத்தில் எழுதப்பட்டுள்ளன.

மனிதருள் மாணிக்கம் எனப்படும் நேருவின் வாழ்க்கையை முன்நிறுத்தி அவர் தம் வரலாற்றினை நினைக்க வைத்துள்ளார் நூலாசிரியர். இளம் பருவத்தினர் படித்துப் பயன்பெற வேண்டிய நல்ல நூல் இது.

## காய்கறிகளின் மருத்துவக்குணங்கள்

ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராஜன்,
பதிப்பாளர்: தமிழ்ச் செல்வி நிலையம்,
43, சித்திரைக்குளம் வடக்குத் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.
விலை ரூ. 3.25.

அவரைக்காய் முதல் பச்சை மிளகாய் வரையான 32 காய்கறிகளை நமக்குத் தெரியும் என்றாலும், அவற்றில் என்னென்ன சத்துப் பொருள்கள் அடங்கியுள்ளன, அவைகளை உண்பதால் உடலில் எவ்வாறான மாறுபாடுகளெல்லாம் உண்டாகின்றன என்பது தெரியாதல்லவா?

இந்தக் குறையை நிவர்த்திக்கும் நூலே இது.

முக்கியமாக எந்தெந்தக் காய்கறிகளில் என்னென்ன சத்துப் பொருட்கள் எவ்வளவு விகிதம் உள்ளது என்பதுபற்றியும், அந்தந்தக் காய்கறிகளுக்குள்ள மருத்துவக் குணங்கள் பற்றியும் இந்நூலில் விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

காய்கறிகளையே நம்பியுள்ள தாய்மார்கள் கட்டாயம் படித்துப் பாதுகாக்க வேண்டிய நூல் இது.

## பாரதிக் குழந்தை

[ஆசிரியர்: பாலநடராஜன்,
பதிப்பித்தோர்: செல்வி பதிப்பகம்,
காரைக்குடி.
விலை ரூ. 2.60.]

கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களின் அணிந்துரையோடு வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் சிறுவர் சிறுமியர்க்கென்றே எழுதப்பட்டுள்ளது.

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் வாழ்க்கை வரலாற்றை இளம் வயதினர்க்கு எளிதில் விளங்கும் விதத்தில் எழுதி இந்நூலை உருவாக்கியுள்ளார் ஆசிரியர். கட்டுரைகள் மழலைச் சிறுவர்களின் மனப்போக்கையுணர்ந்து சிறிது சிறிதாகத் தொடுக்கப்பட்டுள்ளன.

சிறிய நூலானாலும், பாரதியார் வாழ்க்கையின் முக்கியச் சம்பவங்கள் யாவும் இதில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## முப்பாலில் முச்சீர் முத்துக்கள்

ஆசிரியர்: டாக்டர் கு. மோகனராசு,
பதிப்பித்தோர்: வள்ளுவர் கழகம்,
9, வேங்கடரங்கம் தெரு,
சென்னை-600 005
விலை ரூ. 2.50.

எக்காலத்திற்கும் பொருந்தும் தனிச் சிறப்புற்ற திருமறையான திருக்குறளைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எட்டின் தொகுப்பாக விளங்குகிறது இந்நூல்.

குறளுக்குள் சுருக்க வடிவங்களைக் காணும் முயற்சிகள் அவ்வப்போது அறிஞர் பலரால் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில், குறளில் காணப்படும் முச்சீர் முத்துக்களை-அதாவது மூன்று சீர்களில் கருத்து முழுமை பெறும் தொடர்கள் 209 இந்நூலில் தொகுத்து ஆராயப்பட்டுள்ளன.

133 மொத்த அதிகாரங்களில் 85 அதிகாரங்களில் அடங்கியுள்ள மூவகைச் சீர்களைத் தொகுத்து ஆராய்ந்துள்ள நூலாசிரியர் 'எளிய மக்களுக்கும் எளிதில் புரிய வைக்க வேண்டியே வள்ளுவர் முச்சீர் வரும்படிக் குறளை ஆக்கினார்' என்கிறார்.

தமிழறிஞர்கள் படித்துப் பயன் பெறத் தக்க நூலாகும் இது.

## பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகளில் பெண்கள்

ஆசிரியர்: திருமதி அரசு மணிமேகலை,
வெளியிட்டோர்: தமிழ்க் கடல் பதிப்பகம்,
19, டர்ன் புல்சு சாலை, நந்தனம்,
சென்னை-600 035,
விலை ரூ. 7.50.

நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறி, திமிர்ந்த ஞானச் செருக்கு- இவையெல்லாம் கொண்டவர்களாகத் தாய்க்குலத்தார் விளங்கிடவேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டவர் தந்தை பெரியார்.

பெண்மக்கள் விடுதலையானது வெறும் பேச்சளவில் இல்லாமல் நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என அவர் எண்ணிய எண்ணங்கள், எடுத்துக் கொண்ட முயற்சிகள், மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை நுண்ணிதின் ஆராய்ந்து அழகுறச் சொல்லப்பட்டிருக்கின்றன, இந்த நூலில்.

நூலாசிரியர் தமிழ்ப் பேராசிரியை ஆனதால் தெளிந்த தமிழ் நடை இவருக்குக் கை வந்திருப்பதை நூல் முழுவதும் நம்மால் காண முடிகிறது.

பெண்ணடிமை தீர்க்கப் பெரு முயற்சி மேற்கொள்வோரெல்லாம் படித்துப் பயன்பெறவேண்டிய நூல் இது.

—இல. இராசேந்திரன்

# பத்திரிகைகளின் பார்வையில்

## 'பிஸினஸ் ஸ்டேண்டர்ட்' கல்கத்தா—30-9-'82

**தமிழ்நாடு தேர்தல்' என்ற தலைப்பின் கீழ்:**

திரையில் மட்டுமின்றி, உண்மை வாழ்க்கையிலும், தான் ஏழைகளின் நண்பன் என்பதைச் சாதாரண வாக்காளர்களுக்கு எம்.ஜி.ஆர். மெய்ப்பித்துக் காட்டியுள்ளார் என்று தெரிகிறது.



## 'டெக்கான் ஹெரால்டு' பெங்களூர்—29-9-'82

**'தேசியக் கட்சிகளுக்குப் பெரியகுளம் புகட்டும் பாடம்' என்ற தலைப்பின் கீழ்:**

பெரியகுளம் தேர்தல் முடிந்துவிட்டது. திருப்பம் நிகழ்ந்துள்ளது. தமிழ்நாட்டு அரசியலில், தான் வலிமைபொருந்திய சக்தி என்பதை எம்.ஜி.ஆர். மெய்ப்பித்துள்ளார்.

## 'இந்துஸ்தான் டைம்ஸ்'—1-10-'82

**'பெரியகுளம் தேர்தல்' என்ற தலைப்பில்:**

மகாராஷ்டிராவிலிருந்தோ பிற வட மாநிலங்களிலிருந்தோ தமிழ்நாட்டிற்கு வருவோர், ஏழைகளுக்கு வீட்டு வசதி வழங்குவதிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்பதிலும், ஏராளமான கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதிலும் இந்த அரசு எய்திய மிகச்சீரிய முன்னேற்றத்தைக் கவனிக்காமல் இருக்க இயலாது. மத்திய அரசுடன் மோதல் ஏற்படுவதைத் தமிழ்நாடு அரசு தவிர்த்து வருகிறது. பிரதம அமைச்சருடன் கொண்டுள்ள நல்ல உறவு நிலையை எம்.ஜி.ஆர். தெளிவுபடுத்தியுள்ளார்.

மகாராஷ்டிரா அல்லது பீஹாருடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு 1980 தேர்தலுக்கும் பின்னர் மிகச் சிறந்த காலகட்டத்தைப் பெற்றுள்ளது. பம்பாயிலுள்ளதைப் போன்று இல்லாமல் தொழிலாளர் தகராறு குறைந்துள்ளது. பிற மாநகரங்களில் உள்ளதைப் போன்று இல்லாமல் சென்னையில் அரசுப் பணிகள் சீராக இயங்குகின்றன. சட்டமும் ஒழுங்கும் பிற மாநிலங்களில் உள்ளதுபோலன்றி சீராகச் செயல்படுகின்றன. முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மதிநுட்பம் மிக்க அரசியல்வாதி. மத்திய அரசுடன் எவ்வித மோதலையும் தவிர்த்து வருகிறார்.

## 'இண்டஸ்ட்ரியல் எகனாமிஸ்ட்' சென்னை—30-9-82

பெருமை தரும் வெற்றியைப் பெற்று தமிழ்நாடு முதலமைச்சர் மீண்டும் தனக்குக் கிராம மக்களிடையே நிலவும் செல்வாக்கை மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். திரு எம்.ஜி. ராமச்சந்திரனுக்குள்ள செல்வாக்குப் பற்றி எவ்வித ஐயப்பாடும் இல்லை. பெரியகுளம் தேர்தல் முடிவு, அவருக்குத் தனிப்பட்ட முறையில் கிடைத்த வெற்றியாகும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் ஆண்டு முழுவதும் மதிய சத்துணவு அளிக்கும் அவரது திட்டத்திற்கு ஆதரவாகக் கிடைத்த வெற்றியென்றும் கொள்ளலாம். இந்த அரசு நிறைவேற்றும் பல திட்டங்களுடன் இத்திட்டமும் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

## 'லிங்க்' 10-10-'82

**''பெரியகுளம் முடிவு எதை வெளிப்படுத்த முடியவில்லை'' என்ற தலைப்பில்:**

தமிழ்நாட்டிலுள்ள பெரியகுளம்நாடாளுமன்றத் தொகுதியில் அ.இ.அ.தி.மு.க. பெற்ற வெற்றி, தமிழ்நாட்டு அரசியலில் தேசிய அரசியல் கட்சிகளின் தகுதிப்பாடு குறித்த வினைவை மீண்டும் எழுப்பியுள்ளது.

## 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 29-9-'82

**''பெரியகுளம் தரும் செய்தி'' என்ற தலைப்பில்**

பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் அ.இ.அ.தி.மு.க. இத்தகைய மகத்தான வெற்றி பெற்றது வியப்பை அளிக்கவில்லை.

மதிய உணவுத் திட்டம், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டம், இலவசப் பல்பொடி வழங்கும் திட்டம் ஆகியவை வாக்காளர்களின் நாட்டத்தைக் கவர்ந்துள்ளன. வெற்றி பெற்றபின் மிகுந்த தன்னம்பிக்கை கொண்ட எம்.ஜி.ஆர். இம் மாநிலத்தின் செயல்பாடுகளை மேலும் ஆர்வத்துடனும் உறுதியுடனும் கவனிக்க முடியும்.

# பெரியகுளம் இடைத்தேர்தல்

## 'இந்து' 29-9-'82

**''பெரியகுளம் வழங்கிய தீர்ப்பின் பொருள்'' என்ற தலைப்பில்:**

அண்மையில் நடந்து முடிந்த பெரியகுளம் உபதேர்தல், போட்டியிட்ட முக்கியக் கட்சிகளின் தனிப்பட்ட அரசியல் வலிவை அளவிடுவதற்கான வாய்ப்பாக அமைந்து விட்டது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகத்தான வெற்றி எதிர்பார்த்த ஒன்றுதான். இந்த அரசு நிறைவேற்றும் சமுதாய நலத் திட்டங்கள், அ.இ.அ.தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான திரு எம்.ஜி.ராமச்சந்திரனின் தனிப்பட்ட செல்வாக்கையும் அரசியல் செல்வாக்கையும் உயர்த்தியுள்ளன.

உபதேர்தல் ஒன்றில் உள்ளூர் விவகாரங்களும் தனிப்பட்ட செல்வாக்கும் ஓங்கிநிற்கும் எனினும் இம்மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கும் சமுதாய நலத் திட்டங்களுக்கும் அளிக்கப்பட்ட ஊக்கமாகவே எடுத்துக் கொள்ளப்படவேண்டும். குறிப்பாக, இலவச மதிய சத்துணவுத் திட்டம் 65 லட்சம் பள்ளிக் குழந்தைகளுக்குப் பயன்படும் வகையில்செயலாக்கப் பட்டபின்னர் நடந்த இத் தேர்தல், மிகவும் சிறப்பு வாய்ந்த இச் சமுதாய நலத் திட்டத்திற்கு மக்கள் வழங்கிய நல்ல தீர்ப்பாகக் கருதப்பட வேண்டும். பெருவாரியாக ஏழ்மை தவழும் நமது சமுதாயத்தில், ஆதரவற்ற முதியோருக்கு இலவச உணவு அளிப்பதாகவும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்கு வேலை அளிப்பதாகவும் முதலமைச்சர் அறிவித்தது உண்மையில் மக்கள் நாட்டத்தைக் கவர்ந்துள்ளது.

## 'ஹிதவாடா'-நாகபுரி 30-9-'82

பெரியகுளம் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. பெற்ற மகத்தான வெற்றி, அக்கட்சியை எதிர்த்த மூன்று கட்சிகளுக்குப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

**26-9-1982ஆம் நாளன்று நடைபெற்ற பெரியகுளம் தொகுதி நாடாளுமன்ற இடைத்தேர்தல் முடிவுகள்:**

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ... | 7,75,656 |
| பதிவான மொத்த வாக்குகள் .. | 5,13,815 |
| பதிவான வாக்குகளின் சதவீதம் | 66.24 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 5,07,681 |
| தள்ளுபடியான வாக்குகள் ... | 6,134 |
| தள்ளுபடியான வாக்குகளின் சதவீதம் ... | 1.19 |
| வைப்புத்தொகையை இழந்த வேட்பாளர்களின் எண்ணிக்கை | 23 |
| வெற்றி பெற்ற வேட்பாளர் பெயரும் அவரது கட்சியும் | திரு.எஸ்.டி.கே. ஜக்கையன், அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. |
| வெற்றி பெற்ற வேட்பாளர் பெற்ற வாக்குகள் | 2,52,377 |

ஓட்டுப் போட காத்திருந்த பெண்கள் 'கியூ' வரிசை.







# காட்டு வளமே நாட்டு நலம்!

தமிழ்நாடு ஆளுநர் மாளிகை அமைந்துள்ள அந்தப் பகுதியில்-

மறைந்த தலைமையமைச்சர் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது 'குழந்தைகள் பூங்கா'.

காந்தி மண்டபம், மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோருக்கு அமைந்த நினைவகங்கள் போன்றவைகளால் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அப்பகுதியில் 'குழந்தைகள் பூங்கா' அமைக்கப்பட்டது. அது தேசியப் பூங்காவாக வளர்ந்துள்ளது.

வன விலங்கு உய்விடமாகத் திகழும் கிண்டி தேசியப் பூங்கா, முட்புதர்கள் நிறைந்த வனமாகும். இங்கே பிளாக் பக் (Black Buck) புள்ளிமான், குள்ளநரிகள், பாங்கோலின் (Pongolin) மற்றும் பலவகைப் பறவைகளும் உள்ளன. இந்த வன விலங்கு உய்விடத்தை ஆண்டு முழுவதும் பார்க்கலாம்.

**அட்டை சொல்லும் செய்தி**

**இந்தியாவிலுள்ள மாநிலத் தலைநகரங்களிலேயே இயற்கைச் சூழ்நிலையில் வனவிலங்கு உய்விடமாகத் தேசியப்பூங்கா அமைந்துள்ள நகரம் சென்னை மாநகரம்தான். தமிழ்நாட்டு வனத்துறைதான் இந்தியாவில் தொடங்கப்பட்ட தொன்மையான வனத்துறை ஆகும்.**





அனைத்து இந்திய வன விலங்குக் கண்காட்சி துவக்க நாளான 1-10-82 அன்று சென்னை தேசியப் பூங்காவில் விழா நினைவாக மேதகு ஆளுநரும் மாண்புமிகு முதல்வரும் மரக்கன்றுகளை நட்டார்கள்.



சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியே வனவிலங்கு உய்விடமாகத் திகழ்வது - இயற்கைச் சூழலில் அமைந்திருப்பது - சிறப்பான ஒன்றாகும்.

இப்பகுதியில் தான் அக்டோபர் திங்கள் முதல்நாள் அனைத்து இந்திய வனவிலங்குப் பொருட்காட்சியை மேதகு ஆளுநர் திரு. எஸ்.எல். குரானா தொடங்கி வைத்தார்.

இவ்விழாவின் நினைவாக மேதகு ஆளுநரும் மாண்புமிகு முதல்வரும் சிவப்புச் சந்தன மரக்கன்றுகளை நட்டார்கள். மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் 'டேலோனிக்ஸ்' எனப்படும் மரக்கன்றை நட்டார்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வனத் துறைத் தலைவர் திரு அச்சையா வரவேற்றார்.






வனவிலங்கு வார விழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு அஞ்சல் தலையை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 1.10.82 அன்று சென்னை அண்ணாசாலை அஞ்சலகத்தில் வெளியிட்டார்கள்.

அவர் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது

''தமிழ்நாட்டின் வனத்துறை மிகப் பழமையானது. 1882ஆம் ஆண்டில் வனத்துறைக்கான சட்டம் இயற்றப்பட்டது. 1912ஆம் ஆண்டில் வனஇயல் கல்லூரி தொடங்கப்பட்டது.

''மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்டதால் பழைய சென்னை மாநிலத்திலிருந்த கொள்ளேகாலம், மலபார் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டதால் வனச் செல்வம் குறைந்தது. எனினும் 1960 முதல் 1980ஆம் ஆண்டு வரை வன வளம் பல்வேறு திட்டங்களால் பெருக்கப்பட்டு, நாட்டில் சிறந்த வனத்துறைகளில் ஒன்றாகத் தமிழ்நாடு வனத்துறை விளங்கி வருகிறது.''

வனத்துறைத் தலைவர் உரையாற்றிய பின்னர் வனவிலங்குகள் போன்று வேடமிட்டவர்கள் மாலை அணிவித்தனர். ''எங்களையும் வாழவிடுங்கள்'' என்று வனவிலங்கு வாரவிழா வில் முழங்கும்விலங்குகளே நேரில் வந்து மாலையிடுவது போல் இருந்தது.

விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

''இந்திய வனத்துறை வரலாற்றில் தமிழகவனத்துறைக்குச் சிறப்பான இடம் உண்டு. மத்திய அரசு தமிழ்நாட்டில் முதன் முதலாக அனைத்து இந்திய வன விலங்குக் கண்காட்சியை நடத்திட உதவியுள்ளது. 1882ஆம் ஆண்டு உருவாகிய வனத்துறையின் பணி எல்லாரும் பாராட்டும் வகையில் சிறப்பாக இயங்கி வருகிறது.

''சென்னை மாநகரத்திலேயே இப்படி ஓர் அழகிய காடு அமைந்துள்ளது. இதுபோன்ற அழகிய காடு வேறு எந்த மாநிலத் தலைநகரிலும் இல்லை.

''இயற்கைச் சூழலைக் காப்பாற்றினால்தான் மனிதனுக்கு எதிர்காலம் உண்டு. வனவிலங்குகளை வேட்டையாடும் கொடிய பழக்கத்தை அடியோடு மனிதர்கள் விடவேண்டும்.

''ஆண்டுதோறும் 2000 டன் சந்தன மரங்களைப் பெற்றிடும் அளவுக்குத் தமிழக வனத்துறை உள்ளது. ஆனால் தமிழ்நாட்டைவிட அதிக அளவு வனவளம் உள்ள மாநிலங்கள்கூட இவ்வளவு சந்தன மரங்களைப் பெற முடியவில்லை. அந்த அளவுக்கு நமது வனத்துறை சிறப்புடன் செயலாற்றி வருகிறது.

''வனத்துறையின் காவல்பணிகளுக்கு நமது காவல்துறையும் உதவி வருகிறது''

கண்காட்சியைத் தொடங்கி வைத்த மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

''ஒரு நாடு வளம் பெறுவதற்கும் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பதற்கும் வனவிலங்குகளையும் இயற்கைச் சூழ்நிலைகளையும் பாதுகாக்கவேண்டும்.

நம்நாடு உலகிலேயே ஏழாவது பெரியநாடு. கடந்த ஐம்பது ஆண்டுகளில் பலவகை விலங்கினங்களும் பறவைகளும் மறைந்துவிட்டன. சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் மாற்றங்களால் இந்தநிலை உருவாகிவிட்டது.

''வனத்துறை நம் நாட்டுக்குப் பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டும். இயற்கைச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாத்தலே வளமான வாழ்வைத் தரும். இந் நோக்குடன் தமிழ்நாடு வனத்துறை அரும்பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்கு உரியது, பாராட்டுக்குரியது''

அடுத்து, காவல்துறை இயக்குநர் திரு. கி. இராதாகிருஷ்ணன் அவர்கள், வனத்துறையின் பாதுகாப்புப் பணிகளுக்கும் காவல்துறை ஆற்றிவரும் உதவிகளை விளக்கினார். வனவிலங்குகளைப் பாதுகாக்கும் நமது தொன்றுதொட்ட பணிகளையும் எடுத்துரைத்தார்.

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு முதல்வர் தமது உரையில், புதிதாகப் பதவியேற்ற ஆளுநர் அவர்களுடன் தாம் பங்கேற்கும் முதல் பொது நிகழ்ச்சி இது என்பதை நினைவூட்டினார். மேலும் அவர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:



''நாம் வாழ்வதற்கு உயிரினங்கள் எந்த அளவுக்குத் துணை புரிகின்றன என்பதை நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அப்படி இருந்தாலும் அதில் நாம் அக்கறை காட்டுவதில்லை.

''தேள் கொட்டி விடுகிறது என்று அடித்துக்கொல்லுகிறோம். ஆனால் விஷப் பூச்சியைக் கொல்லுவதற்குத் தேள் தேவைப்படுகிறது. இப்படி ஒவ்வொரு உயிரினமும் ஒவ்வொரு வகையில் உதவி புரிகின்றது. இப்படிச் சொல்லுவதால் ஏதோ பெரிய ஆராய்ச்சியில் இறங்குகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

''ஒரு தடவை மைசூரில் படப்பிடிப்புக்காகச் சென்றபோது, கொக்குகளைத் துப்பாக்கியால் 15 அல்லது 20 முறை எளிதாகச் சுட்டும் அது குறி தவறிப்போய் விட்டது. படப்பிடிப்பும் முடியும் கட்டம் வந்தது. அப்போதும்கூட மிக அருகில் இருந்து ஒரு கொக்கைக் குறிபார்த்துச் சுட்டேன். அது கீழே விழவில்லை. ஏன் என்றால் குண்டு வெடித்தால்தானே? அன்று முதல் இந்தப் பழக்கத்தை அடியோடு விட்டு விட்டேன்.

''அப்படி வன விலங்குகளை வேட்டையாடுவது தேவைதானா என்று சிந்தித்துப் பார்த்தால் எப்படிப்பட்ட இழி செயலைச் செய்தோம் என்று நாமே வெட்கப்படுவோம்.

''அதனால்தான் என்னையே நான் உதாரணமாக்கிக் கொண்டேன். ஒரு தடவை பழக்கமாகி விட்டால் அது வழக்கமாகிவிடுகிறது. இப்படி வன விலங்குகளை வேட்டையாடுவதால் நாட்டின் வளம் பாழாகிறது.

''சென்னையில் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். இதற்குக் காரணம் நன்றாக இருந்த மரங்கள் எல்லாம் வெட்டி வீழ்த்தியதால் என்பது புலப்படுகிறது. இதே தவறை நாமும் செய்து, வருகின்ற தலைமுறையினருக்குக் கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத் தான் காடுகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

''சத்துணவுத் திட்டத்தால் பயன்பெறும் 9 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடுத்த கட்டமாகத் தோட்டக் கலையும் சொல்லிக் கொடுக்கப்படும். இப்படிச் சொல்லிக் கொடுத்து அவரவர்களுக்கு இவ்வளவு என்று பிரித்துப் பராமரிக்க விட்டுவிட்டால் போட்டி மனப்பான்மை ஏற்பட்டு, காய்கறி உற்பத்தி பெருகும்.

''அவரவர்கள் வீட்டுத் தோட்டத்தில் காய்கறி போட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பகுதி என்று பிரித்துப் பராமரித்தால் காய்கறி உற்பத்தி அதிகரிக்கும்; வீட்டுத் தேவையும் பூர்த்தியாகும்.

''தமிழ்நாட்டில் 1 கோடி டன் விறகு தேவைப்படுகிறது. 1 லட்சம் டன் விறகுதான் கிடைக்கிறது. அதனால் விலை ஏறுகிறது. இதை எப்படி அதிகரிப்பது? மரங்கள் வளர்ச்சி பெற்றால்தானே? மரங்களை அடியோடு வெட்டிக் கொண்டே போனால் என்ன ஆகும்? இதை யாரும்புரிந்து கொள்வது இல்லை.

''வனத்தைப் பாதுகாப்பது நாட்டின் வளத்தைப் பாதுகாப்பது என்பதை அனைவரும் உணர வேண்டும். மிருகங்களைப் பாதுகாப்பது வரலாற்றைப் பாதுகாப்பது போன்றதாகும்.''

முதல்வரின் உரை முற்றிலும் உண்மை என்பதை அங்குக் கூடியிருந்த மக்களின் மலர்ந்த முகங்களே காட்டின. விழா அமைப்பும் நிகழ்ச்சிகளும் உரைகளும் மீண்டும் மீண்டும் நமக்கு நினைவூட்டின.

வனப் பாதுகாப்பே-நாட்டின் வளப் பாதுகாப்பு!

—மாமுலன்

உங்களுக்குப் பிடித்தமாய் இருக்கும் எந்த மனை வேண்டுமாயினும் வாங்குங்கள். ஆனால் வாங்குமுன் அந்த மனை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதல் பெற்றுள்ளதா என்பதையும், அபிவிருத்திக் கட்டுப்பாடு விதிகளுக்குட்பட்டு உங்களின் திட்டம் பூர்த்தியாகுமா என்பதையும் கவனித்து செயல்படவும்.

குறிப்பாக :

- நீங்கள் திட்டமிட்டுள்ள அபிவிருத்திகளை அந்த மனையில் செயய, விதிகளின்படி முடியுமா ?
- மனை உபயோகம் — தளப்பரப்பு பின்புற வெளியிடங்கள் இவைகள் விதிகளின்படி அமைந்துள்ளதா ?
- மனைப் பிரிவின் பரப்பளவு விதிகளின்படி இருக்கிறதா ?
- பொதுச் சாலையிலிருந்து நேரடி அணுகு வழி உண்டா ?
- நீங்கள் திட்டமிட்ட அபிவிருத்திக்கு ஏற்ப அடிப்படைத் தேவைகள் அம்மனையில் உண்டா ?

அபிவிருத்திக் கட்டுப்பாடு விதிகள் உங்களுக்காகவே. இவற்றை மீறாதிருத்தல் உங்களுக்கு நன்மையினைத் தரும்.

இதன் தொடர்பாக மேலும் தகவல் மற்றும் ஆலோசனை ஏதும் பெற விரும்பினால் உதவி புரிய MMDA.

மேன்மையானதொரு சென்னைப் பெருநகரை உங்களுக்கெனவே உருவாக்கிடும் . . .

MMDA

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

52, E.V.K. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-60

தொலைபேசி எண்





85339


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.







85339